# இந்தியப் பண்பாடு

## மேல் நிலை—இரண்டாம் ஆண்டு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

# இந்தியப் பண்பாடு

மேல் நிலை — இரண்டாம் ஆண்டு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு
முதல் பதிப்பு— 1981

பதிப்பாசிரியர் குழுத் தலைவர் :

டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம்,
இயக்குநர்,
டாக்டர் இராதாகிருஷ்ணன்
மெய்ப்பொருளியல் மேல்நிலைக்
கல்வி நிறுவனம்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை.

ஆசிரியர் :

பேரா. டி. எஸ். ஆர். இராமதாஸ்,
முதல்வர்,
அருள்மிகு பழநியாண்டவர்
இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி,
பழநி.

விலை : ரூ. 6-00

மேலாய்வாளர் :

டாக்டர் டி. என். கணபதி,
மெய்ப்பொருளியல் துறைப் பேராசிரியர்,
விவேகானந்தர் கல்லூரி,
சென்னை.

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :

மணி பிரிண்டர்ஸ், சென்னை-600 010

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. 1. | பண்பாடு என்பது யாது ? | ... | 1 |
| 1. 2. | பண்பாட்டின் இயல்பு | ... | 3 |
| 1. 3. | இந்தியப் பண்பாட்டின் சிறப்புக் கூறுகள் | ... | 4 |
| 1. 4. | பண்பாட்டுக் கல்வியால் பெறும் பயன்கள் | ... | 7 |
| 1. 5. | நாகரிகம் என்பது யாது ? | ... | 8 |
| 1. 6. | நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்குமுள்ள... | ... | 9 |
| 1. 7. | நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்குமுள்ள தொடர்பு | ... | 10 |
| 1. 8. | வரலாறு என்பது என்ன ? | ... | 11 |
| 1. 9. | வரலாறு எவ்வாறு தோன்றியது ? | ... | 12 |
| 1.10. | வரலாற்றுக் கல்வியால் பெறும் பயன்கள் | ... | 13 |
| 1.11. | வரலாறு—அறிவியலா ? கலையா ? | ... | 15 |
| 1.12. | வரலாற்றில் பகுப்பு முறை | ... | 15 |
| 1.13. | வரலாற்றிற்கும் பண்பாட்டிற்குமுள்ள தொடர்பு | ... | 16 |
| 2. 1. | இந்தியாவின் நிலவியலமைப்பு | ... | 18 |
| 2. 2. | இந்தியப் பண்பாட்டின் நிலவியற் பின்னணி | ... | 22 |
| 3. 1 | வேற்றுமையில் ஒற்றுமை | ... | 28 |
| 3. 2. | பண்பாட்டொற்றுமையைப் பேணி... | ... | 33 |
| 4. 1. | முந்திய வேதகால அல்லது இருக்கு... | ... | 36 |
| 4. 2. | பிந்திய வேதகாலப் பண்பாடு | ... | 42 |
| 4. 3. | காப்பியக் காலப் பண்பாடு | ... | 50 |
| 4. 4. | புராண காலப் பண்பாடு | ... | 58 |
| 5. 1. | முத்தமிழ் | ... | 66 |
| 5. 2. | தொல்காப்பியக் கால வாழ்க்கை நெறி | ... | 76 |
| 5. 3. | அகத்தின் மையக் கோட்பாடு | ... | 84 |
| 5. 4. | புறத்தின் மையக் கோட்பாடு | ... | 88 |
| 5. 5. | சங்க இலக்கியச் சமயக் கோட்பாடு | ... | 91 |
| 5. 6. | குறள் கூறும் அறம் | ... | 95 |
| 5. 7. | இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழகத்தின் பங்கு | ... | 103 |
| 6. 1. | இந்து சமயம் | ... | 111 |
| 6. 2. | இந்தியப் பண்பாட்டிற்கு இந்து... | ... | 118 |
| 6. 3. | பௌத்த சமயம் | ... | 120 |
| 6. 4. | இந்தியப் பண்பாட்டிற்குப் பௌத்த... | ... | 125 |

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 6.5. | சமணம் | ... | 130 |
| 6.6. | இந்தியப் பண்பாட்டிற்குச் சமணத்தின் பங்கு | ... | 137 |
| 7.1. | மௌரிய காலப் பண்பாடு | ... | 140 |
| 7.2. | குப்தர் காலப் பண்பாடு | ... | 150 |
| 7.3. | பல்லவர் காலப் பண்பாடு | ... | 160 |
| 7.4. | பாண்டியர் காலப் பண்பாடு | ... | 169 |
| 7.5. | சோழர் காலப் பண்பாடு | ... | 176 |
| 8.1. | இந்தியப் பண்பாட்டில் இஸ்லாத்தின் தாக்கம் | ... | 187 |
| 8 2. | இந்தியப் பண்பாட்டில் கிறித்தவ சமயத் தாக்கம் | .. | 204 |
| 8.3. | பிரிட்டானியர்களின் ஆட்சிக் காலத்தில்... | ... | 206 |
| 8.4. | இந்தியப் பண்பாட்டிற்குச் சிறப்பாகக்... | ... | 213 |
| 9 1. | பக்தி நெறி | ... | 217 |
| 9.2. | இடைக்கால பக்தி இயக்கம் | ... | 220 |
| 9.3. | ஆழ்வார்கள் | ... | 231 |
| 9.4. | நாயன்மார்கள் | ... | 245 |
| 10.1. | இந்திய மறுமலர்ச்சி | ... | 254 |
| 10.2. | பிரம சமாஜம் | ... | 259 |
| 10.3. | ஆரிய சமாஜம் | ... | 263 |
| 10.4. | இராமகிருஷ்ண இயக்கம் | ... | 266 |
| 10.5. | பிரமஞான சபை | ... | 270 |
| 10.6. | மகாத்மா காந்தி | ... | 273 |
| 11.1. | இந்நாட்டு இசை | ... | 280 |
| 11.2 | இந்திய இசையில், சிறப்பாகத்... | ... | 286 |
| 11.3. | இந்திய நாட்டியக் கலை | ... | 291 |
| 11.4. | இந்திய நாட்டியக் கலையில்—சிறப்பாக... | ... | 297 |
| 12.1. | உலகப் பண்பாட்டிற்கு இந்தியாவின் பங்கு | ... | 301 |

## இயல் 1

# 1.1. பண்பாடு என்பது யாது?

உலகில் தோன்றியுள்ள மக்கள் அனைவரும் இயல்பாகவே அமைதியும் ஆனந்தமும் நிறைந்த வாழ்வினை அடைய விழைகின்றனர். இவ்வுலகம் செம்மையாக இயங்காவிடின் மக்கள் விரும்பும் இக்குறிக்கோளினை அடைய முடியாது. பண்புடையார் துணையாலேயே உலகியல் நடைபெற்று வருகிறது. இல்லையேல் உலகியல் நடைபெறாது. இதுபற்றியே வள்ளுவர்

''பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்'' எனக் குறிப்பிடுகிறார்.

ஆகவே செம்மையான வாழ்விற்கு அடிப்படையாய் அமைவது பண்பாடு. இச் சொல் தமிழுக்குப் புதியது. இச் சொல்லைச் சுமார் 43 ஆண்டுகளுக்கு முன்னர் திரு. டி. கே. சி. அவர்கள் தமிழுக்கு உருவாக்கிக் கொடுத்துள்ளார்.

'பண்படு' என்பது 'பண்பா'டாயிற்று என்பர். பண்படுத்தல் என்பது சீர்படுத்தல் எனப் பொருள்படும். தமிழர் உள்ளத்தையும் நிலத்தையும் புலம், புலன் என்பர். திருந்திய நிலத்தில் நல்ல விளைபொருள்கள் தோன்றுதல் போன்று நல்ல உள்ளத்தில் சமூக வாழ்வுக்கு ஏற்ற நல்ல எண்ணங்கள் உருவாகின்றன.

இந்தியப் பண்பாடு என்பதற்கு இந்திய மக்களுக்கே தனித்துரிய திருந்திய மனப்பான்மை என்பது பொருளாகும். அதற்கு முன்னர் இச் சொல் கலாசாரம் என்றும், பற்றிய பண்பு என்றும் வழங்கப்பட்டிருந்தது. 'பண்பாடு' என்பதற்கு நம்மைப் பண்படுத்திக்கொள்ளுதல், தகுதியாக்கிக் கொள்ளுதல் என்றும் பொருள் கண்டார்கள். திருந்திய வாழ்வே பண்பாட்டின் நோக்கம். ஆங்கிலச் சொல்லும் இதே பொருளைப் பிரதிபலிக்கும்.

உண்மையான பண்பாட்டின் உயிரோட்டமும், உயிர்த் துடிப்பும் உயர்ந்த மக்களின் உள்ளத்தின் அடித்தட்டில் அமைந்துள்ளன. நாட்டிலே மக்களிடை உலவாத பண்பாடு

ஏட்டிலும் பாட்டிலும் மட்டும் குலவினால் அது உயிரற்ற புகைப் படமே ஆகும்.

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'. சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம்.

உலக வரலாற்றிலேயே மிகத் தொன்மையான பண் பாட்டினைப் பெற்றுள்ளது நமது நாடு. உலகத்தில் பல்வேறு நாடுகளின் பண்பாட்டுக் கூறுகள் அவைகளின் சுவடுகள் தெரியாமல் அழிந்துபோன பின்னரும், நமது பண்பாடு இன்றும் சிறப்புற்று விளங்குகிறது.

பண்பாடு என்பதனை ஒரு வகுப்பு மக்களுடன் தொடர்பு படுத்திப் பார்க்கும் பொழுது அது வாழும் முறை எனப் பொருள் படும். பண்பாடு என்பது வாழ்வின் முழுமையையும் தன்னுள்ளே அடக்கியுள்ளது. அது அரசு, சமுதாயம், சமயம், தொழில், தத்துவம், அழகுக்கலைகள், இலக்கியம் போன்ற இன்ன பிற வற்றையும் பற்றிக் கூறுகிறது. இது, தனி மனிதனின் சாதனை அன்று, சமுதாயத்தில் மரபுரிமையாகப் பெறப் பெற்றது. 'மனிதன் சமுதாயத்தின் உறுப்பினன் என்ற நிலையில் அடைந்துள்ள அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கக் கோட்பாடுகள், சட்டம், வழக்கம், ஏனைய ஆற்றல்கள், பழக்கங்கள் ஆகியவற்றைத் தன் னுள் அடக்கியுள்ள சிக்கலான முழுமை பண்பாடு' என்பது இ. பி. டைலரின் (E. B. Tylor) கூற்று. டாக்டர் ஸர். சி. பி. இராமசாமி ஐயர் தம்முடைய வானொலிப் பேச்சு ஒன்றில் 'வாழ்விற்குரிய வழக்கமான பணிகளைத் திறமையாகச் செய்வதை உபநிட தங்கள் வற்புறுத்துகின்றன. இதுவே பண்பாட்டின் இன்றி யமையாத கூறாகும்' எனக் கூறுகிறார். 'அன்றாட வேலைகளை நேர்மையான உள நிலையுடனும், நோக்குடனும், மகிழ்ச்சியுடனும் செய்வதில்தான் பண்பாடு அமையப்பெற்றுள்ளது' என வால்டேர் கூறுவது உபநிடதக் கருத்தினையே பிரதிபலிக்கிறது. 'பண்பாடு என்பது சீரிய வாழ்வு முறை; இவ்வாழ்வுமுறை மக்கள் நம்பிக்கை வைத்துள்ள அடிப்படை மதிப்பீடுகளால் ஊக்குவிக்கப்படுகிறது' என்று கே. எம். முன்ஷி கூறுகிறார்.

தமிழ் மொழியில் 'பண்பாடு' என்பது சான்றாண்மை ஆகிய ஒழுக்கம் அல்லது உயர்ந்த வழிச் செல்லுதல் என்ற பொருள் விரிவைத் தன்னகத்தே கொண்டு விளங்கும்.

'பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்' எனக் கலித் தொகை கூறுவதன் பொருள் பிறரது தன்மையை அறிந்து அதற்கேற்ப வாழ்தலாம். 'நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு' என்னும் குறட்பாவின் வாயிலாகப் பண்பின் தெளிந்த பொருளை அறியலாம்.

ஒரு மனிதனை ஆராய்ந்தால் அவனிடம் காணப்படுகின்ற கூறுகள் முறையே உடல், உள்ளம், உயிர் (ஆன்மா) என மூவகைப்படும். இவற்றுள் உடல் அழிந்துவிடக் கூடியது; உள்ளம் உயிரின் பிரதிபலிப்பு ஆகும். ஆகவே உயிர் ஒன்றே நிலையானது ஆகும். உடலையும் உள்ளத்தையும் செம்மைப்படுத்தி உயிரின் வளர்ச்சியை (அக வளர்ச்சியை) மையமாகக் கொண்டு இயங்குவது இந்தியப் பண்பாடு. ஆன்ம வேட்கையை அடித் தளமாகக் கொண்டு இலங்குவது நமது பண்பாடு.

## 1.2. பண்பாட்டின் இயல்பு

1. பண்பாடென்பது பண்புகளின் கூட்டுத் தொகுதி. இவை மரபு வழியாகப் பெற்றவை அல்ல, சமுதாயத்திலிருந்து கற்றுக் கொள்ளப்பட்டவை. எந்த மனிதனும் பண்புடையவனாகப் பிறப்பதில்லை, சமுதாயம் அவ்வாறு உருவாக்குகிறது.

2. பண்பாடு நிலையான, இயங்கா நிலையில் உள்ள ஒன்று அன்று. அது இயக்காற்றல் பெற்று நெகிழுந்தன்மையுடையது. தனி மனிதன் அழிந்தாலும் பண்பாடு அழிந்துவிடுவதில்லை. மனிதன் தனது பண்பாட்டினை அடுத்துவரும் தலைமுறைக்கு விட்டுச் செல்லுகின்றான்.

3. பண்பாட்டு வளர்ச்சியில் ஒவ்வொரு மனிதனும் தன் பங்கினை அளித்தாலும் அது தனி மனிதச் சொத்தன்று, அது சமுதாயச் சாதனை. அது உருவாவதும் வளர்ச்சி பெறுவதும் ஒரு சமுதாயத்தில்தான் என்பதை மறந்துவிடக்கூடாது.

4. ஒரு சமுதாயம் எந்த உயர்ந்த குறிக்கோள்களை அடிப் படையாகக் கொண்டு முன்னேறுகிறதோ, அவற்றினைப் பண்பாடு தன்னுள் பெற்று மிளிருகிறது. ஆகவே அது குறிக்கோளினை யுடையது.

5. பண்பாடு அற, சமுதாயத் தேவைகளை நிறைவு செய்வதால், அது அன்றாட நடைமுறை வாழ்விற்குப் பயன்படும்

சிறப்பினைப் பெற்றுள்ளது. சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படாத பண்பாட்டுக்கூறு நாளடைவில் அழிந்துபோகிறது.

6. பண்பாட்டின் அமைப்பு தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது. அது தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளும் நிலையினைப் பெற்றிருப்பதால் அதன் வளர்ச்சி என்றும் நின்று விடுவதில்லை.

7. ஒவ்வொரு நாட்டின் பண்பாடும் பிற நாட்டின் அல்லது பிற இனத்தின் பண்பாட்டின் தாக்கத்திற்கு உள்ளாக வேண்டிய நிலை உள்ளது. ஆகவே, ஒவ்வொரு நாட்டின் பண்பாடும் பிற நாட்டுப் பண்பாட்டுக் கூறுகளை இணைத்துத் தன்னை முழுமை யாக்க முயலுகின்றது.

8. பண்பாட்டுடன் செயல்படுவது ஒரு மனிதனுக்கு மட்டுமோ அல்லது ஒரு சமுதாயத்திற்கு மட்டுமோ உரிய அனு பவம் அன்று. அது உலக முழுமையிலும் வாழும் மனித இனம் அனைத்துக்கும் உரிமையான ஒரு பொது அனுபவம்.

9. உலகிலே எந்த இரு நாடுகளின் பண்பாடும் ஒன்றாக இருப்பதில்லை. ஒவ்வொன்றும் மற்றொன்றிலிருந்து மாறுபட்டு விளங்குகிறது. ஒவ்வொரு பண்பாடும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பட்டறிவினால் வந்த விளைவு.

## 1.3. இந்தியப் பண்பாட்டின் சிறப்புக் கூறுகள்

1. ஒரு காலத்தில் எகிப்திய, கிரேக்க, உரோமானிய, பாபிலோனியப் பண்பாடுகள் மிக உச்சநிலையில் இருந்தன. காலவெள்ளத்தில் அவை அழிந்துபோயின. ஆனால் இந்தியப் பண்பாடு அழியாத அமைப்போடு இன்றும் நிலைபெற்று உறுதி யாகத் திகழ்ந்து வருவது அதன் ஒரு சிறப்புக் கூறு.

2. இந்தியப் பண்பாட்டின் மிகச் சிறந்த பண்பு அதன் சகிப்புத் தன்மை. அது தன்னை நாடிவந்த யூதர்களின், முஸ்லிம் மக்களின், கிறித்தவர்களின் பண்பாட்டுக் கூறுகளை வெறுக்காமல், அவற்றைச் சகித்துக் கொண்டு, அவற்றை அணைத்தே செல்லுகின்றது.

3. சகிப்புத் தன்மையால் இந்தியப் பண்பாட்டுக்கு விளைந்த நலம் பல்வேறு பண்பாடுகளின் கூட்டிணைப்பாக்கம் ஆகும். வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்து இன்றுவரை ஆரிய,

திராவிட, பாரசிக, கிரேக்க, அரேபிய, ஐரோப்பிய, இஸ்லாமிய, கிறித்தவப் பண்பாடுகளின் சீரிய கூறுகளின் கூட்டிணைப்பாக இன்றும் சிறந்து விளங்குவது இந்தியப் பண்பாடு.

4. இந்தியப் பண்பாட்டில் வேற்றுமைக் கூறுகள் இருப் பினும் அவை மன நிறைவையே அளிக்கின்றன. வேற்றுமைகளைப் பல்வேறு துறைகளில் காணமுடிகின்றது. இச்சிறு துணைக் கண் டத்தில் பல்வேறு இனங்கள், மொழிகள், எண்ணங்கள், சமயங்கள், தத்துவங்கள், சடங்குகள், பழக்க வழக்கங்கள் நிலவியுள்ளன. இவை இமயம் முதல் கன்னியாகுமரி வரை பரந்துகிடப்பதைக் காணலாம். வேற்றுமை பிரதிபலித்தாலும் அதன் ஊடே ஒரு ஒற்றுமை சிறப்புற விளங்குவது வெள்ளிடைமலை.

5. இறையுணர்வு, ஆன்மிக வேட்கை இவை இரண்டினைப் பெரும் அடித்தளங்களாகக்கொண்டு இயங்குவது இந்தியப் பண்பாடு. இப்பண்பாட்டின் குறிக்கோள் அழியாத ஆன்மாவின் வேட்கையாகிய வீடுபேற்றினை அடைய இறையுணர்வு இன்றி யமையாதது என்பதே. ஆன்மிக மேம்பாட்டினையே இறுதிக் குறிக்கோளாகக் கொண்டிருப்பது இந்தியப் பண்பாட்டின் தனிப் பெருஞ்சிறப்பு.

6. சாதி, சமயம், காலம், இனம், பால் வேற்றுமைகளைக் கடந்து உலக மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பண் பாடாகவும் அனைவருடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் இந்தியப் பண்பாடு விளங்குகிறது.

7. பல நூற்றாண்டுகளாக இப்பண்பாட்டினைப் பேணிக் காக்க அரசு ஆதரவு இல்லாதிருந்தது. மேலும் பல்வேறு அந்நியப் படையெடுப்புகள் நிகழ்ந்தன. இந்தியப் பண்பாட்டினை வேருடன் களையும் முயற்சிகள் தோல்வியடைந்தன. அவற்றினைத் தாங்கிக்கொண்டு நமது பண்பாடு இம்மண்ணில் சிறிதும் அழியாது வளர்ந்து ஆலமரமெனத் திகழ்கின்றது.

8. இந்தியாவிலே பிறந்து, வளர்ச்சியுற்ற இப்பண்பாடு உலகெங்கும் விரிந்து பரந்து கிடப்பதை வரலாற்று ஆசிரியர்களும், மொழியியல் வல்லாரும், தொல்பொருளாய்வாளரும் எடுத்தியம்பு வதைக் காணலாம்.

9. இப்பண்பாட்டின் தோற்றத்திற்கு வரலாறு கிட்டாமை யால் இதை அநாதியானது அல்லது நிலைபேறுடையது அல்லது தொடக்கமில்லாதது எனக் கூறலாம்.

10. சமயம் இந்தியப் பண்பாட்டின் சீரிய கூறாகும். சமயத்தைப் புறக்கணித்தால் இப்பண்பாடு பொருளற்றதாகி விடும். தருமம் என்ற உயரிய கோட்பாட்டினைத் தன்னுள் பெற்றுள்ளது நமது பண்பாடு. சமயம் உணர்த்தும் கருமநெறி, மறுபிறவிக் கோட்பாடு, அவதாரக் கொள்கை அனைத்தும் இவற்றுள் அடங்கியுள்ளன.

11. இன்னாசெய்யாமை, உண்மையே உரைத்தல், உடல் உள்ளக் கட்டுப்பாடு எனப் பேசப்படும் உயரிய அறக்கோட் பாடுகள் வேதகாலந்தொட்டு பௌத்தர்கள், சமணர்கள் காலம் வரை வலியுறுத்தப்படுகின்றன. நடைமுறை வாழ்விலும் பின் பற்றப்பட்டு வருகின்றன. இவ்வுயர்ந்த கோட்பாடுகள் இந்தியப் பண்பாட்டின் இணையிலாச் சிகரங்களாக விளங்குகின்றன.

12. இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படும் இனிய கருத்து களின் பெட்டகம் இந்தியப் பண்பாடு. உலகியலோடு ஒட்டிய மருத்துவ அறிவியல், கலைகள், சமுதாய இயல் அறிவு, போர் முறை, பொருளியல் கோட்பாடுகள் போன்ற பலவற்றினைக் கொண்டு நடைமுறை வாழ்விற்குத் துணைபுரிகிறது நமது பண்பாடு.

13. உயர்ந்த தத்துவ நோக்கோடு விளங்குகிறது இந்தியப் பண்பாடு. எப்பொருள் எத்தன்மையுடையதாயினும், அப் பொருளில் மெய்ப் பொருளைக் காணவிழைகின்றது.

14. சமுதாயத்தினின்று உருவாக்கப்பட்ட இப்பண்பாடு, (சமுதாயத்தை வெறுக்காமல்) அதே நேரத்தில் தனி மனித சிந்தனைக்கும் ஆளுமைக்கும் (Personality) நன்மதிப்பு நல்கு கின்றது.

15. அறிவியலுக்கு எதிரியன்று இந்தியப் பண்பாடு. பல்வேறு அறிவியல்களின் ஆக்கபூர்வமான கருத்துகளை அது ஏற்றுக் கொள்கின்றது.

16. இயற்கையோடு இயைந்த வாழ்வினைப் போற்றிப் புகழ்வது இந்தியப் பண்பாடு. அது காடு, மலை, ஆறு, கடல், விலங்குகள் போன்றவற்றினைச் சிறப்பாக எடுத்தியம்புகிறது.

இவ்வாறு பல்வேறு சீரிய நற்பண்புகளையுடைய இந்தியப் பண்பாட்டிற்கு இணையாக உலகில் எப்பண்பாடும் இல்லை என உறுதியாகக் கூறமுடியும்.

## 1.4. பண்பாட்டுக் கல்வியால் பெறும் பயன்கள்

1. மனிதன் தன்னை இயற்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ளவும் அதனுடன் இணைந்து வாழவும் பண்பாடு துணை புரிகிறது.

2. அடுத்து, சமுதாயத்தில் ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கு மிடையே உள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டு வதுடன் தனி மனிதனுடனும் சமுதாயத்துடனும் நன்முறையில் வாழ்வதற்குரிய நற்பண்புகளை அளிக்கிறது.

3. இவ்வுலகிலுள்ள மனிதனை மறுமைக்குத் தொடர்புபடுத்தி அவன் அழியாத பேரின்ப வாழ்வைப் பெறுவதற்குரிய வழிமுறை களைக் காட்டுகிறது.

4. நம் மூதாதையர்கள் போற்றிக் காத்த மதிப்பீடுகளை உணர்ந்து நாமும் நம் வாழ்வில் அவற்றினை அடையத் தூண்டு கிறது நமது பண்பாடு.

5. இன்றைய பிரச்சினைகள் எவ்வளவு சிக்கலானவை களாக இருப்பினும் அவைகட்குத் தீர்வுகாணத் துணைபுரிகிறது இந்தியப் பண்பாடு.

6. நமது தொன்மையான சிறந்த பண்பாட்டுப் பாரம் பரியத்தை அறிய இக்கல்வி பயன்படும். பழமையின் அடிப் படையில் புதிய வாழ்வு சிறக்கச் சில மாற்றங்கள் செய்து கொள்ள லாம்.

7. இதைக் கற்பதன் வாயிலாக எவற்றைப் புறக்கணிப்பது, எவற்றைப் பின்பற்றுவது என அறிகிறோம்.

8. நல்ல பழக்க வழக்கங்களையும், அரசியல், சமுதாய, பொருளாதாரப் பிரச்சினைகளில் தீர்வுகாணும் வழிகளையும், நல்ல மனப்பாங்கினையும் பெற இந்தியப் பண்பாடு துணை புரிகிறது.

9. பல்வேறு கலைகளை, இலக்கியங்களை, தத்துவங்களை, சமயக் கோட்பாடுகளை அறிந்து, சுவைத்து வாழ்வை வளப் படுத்தும் ஆற்றலை இந்தியப் பண்பாடு நல்கும்.

10. அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள் களின் சிறப்பினை அறியப் பயன்படுகிறது பண்பாட்டுக் கல்வி.

11. பலன் கருதாது பணிபுரியும் கடமையுணர்வை, சகிப்புத் தன்மையை, இன்னா செய்யாமையை, உண்மை உரைப்பதை வாழ்வின் இன்றியமையாக் கோட்பாடுகளாகக் கொள்ளச் செய்கின்றது இந்தியப் பண்பாடு.

12. இறுதியாகக் குறிக்கோளுடைய, பொருள் பொதிந்த, ஆக்கபூர்வமான வாழ்வு வாழ வழி வகைகள் செய்கின்றது இந்தியப் பண்பாடு.

## 1.5. நாகரிகம் என்பது யாது?

நாகரிகம் என்பது ஒரு நாட்டின் உடல் என்றால் அந்நாட்டின் உயிர் அதன் பண்பாடேயாகும். ஒரு நாடு ஏற்றம் கொண்டதா, பெருமை வாய்ந்ததா, புகழ்மிக்கதா என்பதைக் கண்டறிய இரண்டு தன்மைகளை அளவுகோல்களாகக் கொண்டு அறிஞர்கள் சொல்கின்றனர். அவை 'பண்பாடு', 'நாகரிகம்' என்பன. நாகரிகம் என்பது மனிதனின் புறத்தோற்றப் பொலிவை, புறவளர்ச்சியைப் புலப்படுத்தி நிற்கும் தன்மையாகும்.

மனிதனின் புறமாக விளங்கும் உடலைச் சார்ந்து, பின்பு அவ்வுடல் இயங்கும் உலகைச் சார்ந்து உருப்பெற்றெழுந்து, காட்சிப் பொருள்களாகி, புறத்திலே பொருந்தி நிற்பன நாகரிகத்தின் கூறுபாடுகள் ஆகும்.

மனிதனின் புறவாழ்விற்குப் பயன்படும் ஆடை அணிகலன்கள், ஒப்பனைப் பொருள்கள், உணவு வகைகள், தட்டுமுட்டுச் சாமான்கள், அவன் கட்டிய மாட மாளிகைகள் கூட கோபுரங்கள், அழகிய சாலைகள், உருவாக்கிய ஊர்திகள், தொழிற்சாலைகள், வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி போன்ற இன்னபிற நாகரிகத்தின் விளைவால் தோன்றியவை.

வரலாற்றிற்கு முந்திய காலத்தில், மனிதன் விலங்கு போன்று வாழ்ந்து வந்தான். அந்நிலையில் அவன் பல்வேறு தொல்லைகளைக் களைந்து வாழவேண்டிய நிலையில் இருந்தான். அவனுக்கு அப்போது மனவளர்ச்சியோ அறிவு வளர்ச்சியோ இல்லை. அவன் படிப்படியாக முன்னேறத் தலைப்பட்டான். கல்லுக்குப் பதில் உலோகத்தைப் பயன்படுத்திக் கருவிகள் செய்யத் தொடங்கினான். ஒரு நிலை வந்தவுடன் வேளாண்மை செய்ய, வீடுகட்ட, துணிநெய்ய, ஆடுமாடு வளர்க்கக்கூடிய ஆற்றலைப் பெற்றுப் படிப்படியாகப் பொருளாதாரத் துறையில் வியக்கத்தக்க வளர்ச்சியைப் பெற்றுவிட்டான். இவைகளை எண்ணிப்பார்த்து

இன்றைய மனிதன் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மனிதனைப் போன்று அநாகரிகமாக இல்லாது உயர்ந்த நாகரிகத்தைப் பெற்றிருப்பதாகக் கூறுகிறோம். அன்றாட தேவைகளையும், பொருளாதார வளர்ச்சியையும் நிறைவு செய்து கொள்வதற்கென மனித இனம் செய்யும் செயல்களையும் பணிகளையும் நாகரிகம் என்ற சொல் குறிக்கின்றது.

நாகரிகம் என்ற சொல் நகர் என்னும் சொல்லடியாகப் பிறப்பது. நகர் + அகம் → நகரகம் → நகரிகம் → நாகரிகம். சிற்றூர் மக்களினும் நகர மக்கள் புறவாழ்விற்குரிய வசதிகள் அனைத்தும் பெற்று விளங்குபவர்கள். மேலும் நாகரிகம் நகரும் தன்மையுடையது: புறவளர்ச்சிக்குரிய கருவிகளிலும், கட்டட அமைப்புகளிலும், பிற முறைகளிலும் நாளுக்கு நாள் மாறும் தன்மையைக் காண முடிகிறது. ஆகவே நாகரிகம் மாறும் தன்மையது.

## 1.6. நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்குமுள்ள வேறுபாடுகள்

பண்பாடு என்பது நாகரிகம் அன்று. இதை விளக்க கே. எம். முன்ஷி ஓர் உதாரணம் தருகிறார். அக்காலத்தில் காட்டில் வாழ்ந்த இராமனும் சீதையும் படகிலேறி ஆற்றைக் கடந்தும், கல்லிலும் முள்ளிலும் நடந்தும் சென்றனர்; மரவுரி தரித்தனர். ஆனால் இன்று நாம் நைலான் ஆடைகளை அணி கின்றோம்; வானவூர்தியில் பயணம் செய்கின்றோம். நம்முடைய அன்றாட வாழ்விற்கு வேண்டிய கருவிகளை, ஏனைய அமைப்பு முறைகளை அறிவியல், தொழில்நுட்பத் திறன்கொண்டு ஆதிகால மக்களைக்காட்டிலும் மிகச் சிறப்பாக அமைத்துக்கொண்டுள் ளோம். ஆனால் நாம் பழங்காலத்தில் வாழ்ந்த இராமனையும் சீதையையும்விட மிகுந்த பண்புடையவர்கள் என்று கூறிக் கொள்ள முடியுமா? முடியவே முடியாது. ஆகவே புறவாழ்விற்கு வேண்டிய சாதனங்களின் வளர்ச்சி நாகரிக வளர்ச்சி. நம்முடைய அக அல்லது ஆன்மிக அல்லது உயிர் வளர்ச்சிக்கு எது உற்ற துணையாக அமைகிறதோ அதுவே பண்பாடு.

### பிற வேறுபாடுகள்

1. நாகரிக வளர்ச்சியினை எளிதில் அளவிட்டுத் திட்டவட்ட மாகக் கூற இயலும். ஏனெனில் அது புறவளர்ச்சியைக் குறிப்பது. பண்பாடு, காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மாறுபடுவது. அது அக மாற்றமாகும். அதை அளவிட்டுக் கூறுவது முடியாது.

2. நாகரிகம் வேகமாக முன்னேறும் தன்மையுடையது. ஆனால் பண்பாடு அவ்வாறானதன்று. நாகரிகம் வேகமாக வளர்வதைத் தெள்ளத் தெளிவாகக் காணலாம். ஆனால் பண்பாட்டு வளர்ச்சியைக் காண்பது அவ்வளவு எளிதன்று. ஏனெனில் நாகரிக வளர்ச்சி புறவளர்ச்சி; பண்பாட்டு வளர்ச்சி அகவளர்ச்சி.

3. மிகுந்த முயற்சியின்றி நாகரிகத்தின் வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. ஓர் இனத்தையோ நாட்டையோ சேர்ந்த மக்கள் மற்றோர் இனத்தையோ நாட்டையோ சேர்ந்த மக்களின் நாகரிகத்தை மிக எளிதில் கற்றுக் கொள்கின்றனர். ஆனால் பண்பாட்டுத் துறையில் இது இயலாத ஒன்று. பண்பாட்டை ஒத்த மனம் உடையவருக்கே கற்பிக்க முடியும். ஆனால் நாகரிகத்தைத் தேவைப்படுபவர்கள் அனைவருக்கும் புகட்டலாம்.

4. நாகரிகத்தை ஒரு நாட்டினின்று எவ்வித இழப்பும் மாற்றமும் இன்றிப் பெறமுடியும். ஆனால் பண்பாட்டை அவ்வாறு பெற முடியாது. வானொலி, தொலைக்காட்சி, வானவூர்தி இவைகளின் பயனை இழப்பின்றிப் பெறலாம். ஆனால் வேற்றுநாட்டுச் சமயக் கோட்பாடுகள், கலைகள், இலக்கியங்கள் இவற்றினைப் பெறும்பொழுது கொள்வனவற்றைக் கொண்டு தள்ளுவனவற்றைத் தள்ள வேண்டியுள்ளது.

இவையே நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்குமுள்ள இன்றியமையாத வேறுபாடுகள்.

## 1.7. நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்குமுள்ள தொடர்பு

நாகரிகமும் பண்பாடும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. நல்ல நாகரிகக் கூறுகள் அமைந்துள்ள நாட்டில்தான் சீரிய பண்பாட்டு வளர்ச்சியைக் காணமுடியும். மனிதனின் புறவாழ்வுச் சாதனங்களும் அமைப்பு முறைகளும் அவனது அகவாழ்வினை மேம்பாடடையச் செய்ய வேண்டும். சிறந்த புறவாழ்வுச் சூழல் அமையின் சிறந்த பண்பாடு மிளிரும். இல்லையேல் மன அமைதியின்மை, அச்சம், குழப்பம், பொறாமை, பூசல், உடலிலும் உள்ளத்திலும் பிஞ்சிலே பழுத்தநிலை போன்றவற்றைக் காண நேரிடலாம். இறைப நிலையும் இதுவே. உலகில் வாழும் மக்களின் ஆன்ம வேட்கையினை நிறைவு செய்யும்வண்ணம் நாகரிகக் கூறுகளில் நல்லனவற்றைக் கொண்டு அல்லனவற்றை அப்புறப் படுத்தி வாழ்ந்தால் உலகு உய்யும்.

## 1.8. வரலாறு என்பது என்ன?

மனித வாழ்வையும் உலகிலுள்ள பல்வேறு நிறுவனங்களையும் நன்முறையில் அறிந்து வாழ்விலே காணுகின்ற பிரச்சினைகட்குத் தீர்வுகாண வரலாற்றுக் கல்வி இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

வரலாற்றைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் ஹிஸ்டரி கிரேக்கச் சொல்லாகிய ஹிஸ்டோரியா என்பதினின்று பெறப்பெற்றது. 'ஹிஸ்டரி' என்பதன் பொருள் அறிவை நாடுதல். கிரேக்க மூலத்தின்படி வரலாறு என்பது விசாரணை அல்லது தொடர் நிகழ்ச்சிகளின் தொகுப்பு எனப் பொருள்படும். ஹிஸ்டார் என்பதன் பொருள் அறிஞன் என்பதாகும். அறிவை நாடி அலைகின்ற பணியில் சேகரித்த செய்திகளின் தொகுப்பைச் சுட்டிக்காட்ட வரலாறு என்ற சொல்லைப் பயன்படுத்தினர் ஹெரடோட்டஸும் அரிஸ்டாட்டிலும். காலப்போக்கில் இச் சொல் பொது அல்லது அரசியல் நிகழ்ச்சிகளின் குறிப்பு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. அச்சொல்லை விரிந்தபொருளில் நோக்கினால் மாறுகின்ற அனைத்தையும், மாறுவதுபோன்று தோன்றுகின்ற அனைத்தையும் பற்றிய குறிப்புகளின் தொகுப்பு எனவும் கொள்ளலாம். ஆகவே ஃபிரிமேன் என்பவர் வரலாறு என்பது 'கடந்தகால அரசியல்' என்று கூறினார். ஆனால் இது ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கம் அன்று. ஏனெனில் நாம் வரலாற்றில் அரசியல் நிகழ்ச்சிகளை மட்டும் அறிந்து கொள்வதுடன் நின்று விடுவதில்லை. மேலும் அதில் சமூகத்தில் நிகழ்கின்ற, நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளையும்பற்றி அறிய வாய்ப்புள்ளது. வரலாறு, மனித வாழ்வின் பல்வேறு கூறுகளான அரசியல், பொருளாதாரம், சமயம், தத்துவம், இலக்கியம், அழகுக்கலைகள் போன்ற பலவற்றினுள் புகுந்து தனது ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது. ஒரு நாட்டின் வரலாற்றில் அந்நாட்டில் நிகழ்ந்த போர்கள், அரசர்களின் சாதனைகள் முக்கிய இடம் பெறுகின்றன. ஆனால் அவையே வரலாறு ஆகிவிட முடியாது.

தமிழில் வரலாற்றை, வரல் + ஆறு எனப் பிரிக்கலாம். ஆற்றில் நீர் தொடர்ச்சியாக வருதல் போன்று நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக முறையாக வருவதைக் கூறுவது 'வரலாறு' என்றும் கொள்ளலாம்.

1. 'வரலாறு காலத்தின் சான்று, உண்மையின் ஒளி' என சிசிரோ கூறுகின்றார்.

2. 'சமுதாயத்தை முழுமையாக எடுத்துக்கொண்டு அதன் எல்லாக் கூறுகளையும், மாற்றங்களையும், வளர்ச்சியினையும் கூறுவதே வரலாறு' என்பது குரெச்சே என்பவரின் கூற்று.

'பல்வேறுபட்ட இயற்கைச் சூழல்களிலும் மனிதச் சூழல் களிலும் வாழ்ந்த கடந்த கால மக்கள், உலகில் தங்கள் தேவைகளை நிறைவுசெய்துகொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகளின் தொகுப்பே வரலாறு' என பி. எஸ். ஜோஷி என்ற ஆசிரியர் கூறுகின்றார். இதற்கு விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது. உலகில் தோன்றிய மனிதன் ஏதேனும் ஒருவகைப் புவியியல் அமைப்பின்கீழ் (இயற்கைச் சூழலின்கீழ்) வாழ நேரிடுகிறது, அதற்கேற்ப அவனது பண்புகளும், உடல் கூறுகளும் அமை கின்றன. இயற்கைச் சூழலை மாற்றியமைத்துக் கொள்ள முடியாது. அடுத்து மனிதன் மனித இனம் அமைத்துள்ள ஒருவகைக் குடும்ப, சமுதாய, அரசியல் அமைப்புகளின்கீழ், ஒரு குறிப்பிட்ட சமய விதிகட்குட்பட்டு வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதுவே மனிதச் சூழல் எனப்படும்.

இறுதியாக இவ்விருவகைச் சூழல்களுக்கும் இடையே வாழ் கின்ற மனிதனுக்கு உடலின் வேட்கைகள், ஆன்ம(உயிர்) வேட் கைகள் எனப் பல தேவைகள் உள. அவைகளையும் அவன் நிறைவு செய்து கொள்ள வேண்டும். இம்மூன்று கூறுகளை ஆராய்வதே வரலாற்றின் முக்கிய நோக்கமும் குறிக்கோளு மாகும்.

## 1.9. வரலாறு எவ்வாறு தோன்றியது?

விலங்கொடு விலங்காக வாழ்ந்த மனிதன் விழிப்புணர்வைப் பெற்றவுடன் பகுத்தறிவின் துணைகொண்டு, விலங்கிடமிருந்து விலகித் தனித்து வாழத் தலைப்பட்டான்; தொடக்க நிலையில் தனது எண்ணங்களைப், பிறருக்கு உடல் அசைவுகள் மூலமும் குரல் ஒலி மூலமும் தெரியப்படுத்தினான்.

ஒலிக்கு உருவம் தந்து சொற்களை உருவாக்கிய பின்னர் கருத்துகளைப் பேச்சின் மூலம் வெளிப்படுத்தினான். பின்பு தான் வாழ்ந்த சமுதாய நிகழ்ச்சிகளைக் கல்லிலும், மரத்திலும், ஏட்டுச் சுவடிகளிலும் பொறித்து வைத்தான். அறிவியல் வளர்ச்சியும் தொழில்நுட்ப அறிவும் வேகமாக முன்னேறத் தொடங்கியவுடன், கடந்த கால வரலாறு பல்லாயிரக்கணக்கான நூல்களாக வெளி வந்து கொண்டிருப்பதை இன்று காண்கிறோம்.

## 1.10. வரலாற்றுக் கல்வியால் பெறும் பயன்கள்

1. வரலாற்றைப் பயிலுவதால் நினைவாற்றலும், உள ஒருமைப்பாட்டு ஆற்றலும் பெறமுடியும்.

2. வரலாற்றுப் பாணியில் சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள இயலும். நிகழ்காலம் கடந்த காலத்தின் விளைவு என் பதை உணர வரலாறு துணைபுரிகிறது.

3. தனி மனித நலன்களைச் சமுதாய நலனுக்காகத் தியாகம் செய்து சமுதாய உணர்வினைப் பெறச் செய்கின்றது.

4. பல்வேறு இனங்களை, நாடுகளைச் சார்ந்த மக்களுடன் சேர்ந்து வாழும் சகிப்புத் தன்மையைப் பெற வழிவகுக்கும்.

5. தனது நாட்டின் கடந்தகாலச் சிறப்புமிக்க வரலாற்றை அறிந்து தாய்நாட்டை நேசித்து நாட்டுப்பற்றைப் பெறத் துணை புரிகின்றது.

6. உண்மையைப் பேசி உயர்ந்த அறவாழ்வு வாழ்ந்து வாழ்வில் வெற்றி கண்டோரின் வரலாற்றினைக் கற்பதன் மூலம் சீரிய அறக்கோட்பாடுகளை அறிந்து பின்பற்றும் வாய்ப்புக் கிட்டு கின்றது.

7. கடந்தகால மக்கள் வாழ்வின் பல்வேறு துறைகட்கும் வழங்கியுள்ள கொடையினை அறிந்து பாராட்ட முடிகின்றது.

8. வரலாற்றைக் கற்போர் எதையும் கூர்ந்து நோக்கும் ஆற்றல், பகுத்தறியும் ஆற்றல், அதன் விளைவாக நல்ல அநு மானத்திற்கு வரும் ஆற்றல் இவைகளைப் பெற்று அறிவியல் முறையில் எதையும் அணுகும் உளப்பாங்கினைப் பெறுகின்றனர்.

9. காட்டுமிராண்டியாக இருந்த மானிட இனம் எத்தனை மாற்றங்கட்கு உட்பட்டு இன்றைய நாகரிக நிலையை அடைந் துள்ளது என்பதை அறியும்பொழுது, சமுதாய வளர்ச்சிப் பாங்கினை அறிய முடிகின்றது.

10. வரலாற்றை நன்முறையில் கற்றால் மனிதன் அறிஞனாகி விடுவான். ஏனெனில் அனைத்துத் துறைகளைப் பற்றிய அறி வினை வரலாறு மூலம் பெறமுடியும்.

11. அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காக மட்டும் பயிலாமல் அது அன்றாட வாழ்விற்குப் பயன்படும் என்ற முறையிலும் வரலாற்றினைக் கற்றால் வையத்து வாழ்வாங்கு வாழலாம்.

12. கடந்த வரலாறுகள் அனைத்தும் நமக்கு வாழ்வு முறைகளை நல்ல எடுத்துக்காட்டுகளுடன் உணர்த்துகின்றன. இவ்வறிவு நம்முடைய வேட்கைகளையும் செயல்களையும் நன்னெறிப்படுத்த உதவுகின்றது.

13. இதைக் கற்பதால் மனப்பயிற்சியும் கற்பனை வளமும் பெருகுகின்றன.

14. வரலாறு ஒரு விந்தையான அறிவுக் கருவூலம். இது மனிதப் பிரச்சினைகட்குத் தீர்வு காண உதவுகின்றது.

15. உலக வரலாற்றைக் கற்பதன் மூலம் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த உள்ளத்தைப் பெற்றுத் தன்னை உலகக் குடிமகன் என்று கூறிக் கொள்ளும் இயல்பைப் பெற முடிகின்றது.

16. வரலாற்றைக் கற்பதால் 'தோல்வியே வெற்றியின் திறவுகோல்' எனத் தெரிந்துகொள்ள முடிகின்றது. பல்வேறு தொல்லைகளையும் தோல்விகளையும் பொருட்படுத்தாமல் இடைவிடா முயற்சியால் வாழ்வில் வெற்றிகண்டவர்களின் வரலாறு இதை உணர்த்தும்.

17. நம்முடைய வாழ்வினை நாம் அறிந்துகொள்ளவே வரலாற்றறிவு துணைபுரிகின்றது. நிகழ்காலத்தின் வேர்கள் கடந்தகால மண்ணில் ஆழ்ந்துகிடக்கின்றன.

18. வரலாறு மனித இயல்பினைப் படம் பிடித்துக் காட்டுவதில் உளவியலை ஒத்துள்ளது. உளவியல் ஆய்வு மனப்பான்மை பெற வரலாற்றுக் கல்வி துணைபுரிகிறது.

19. சமுதாய நல் வாழ்வினையும் ஆரோக்கியத்தையும் சிந்திக்கின்ற நற்பண்பினை வரலாற்றுக் கல்வி நல்குகிறது.

மிகுந்த பயனுள்ள வரலாற்றுக் கல்வியைக் கற்றுப் பயனடைய வேண்டியது நமது தலையாய கடமை.

## 1.11. வரலாறு – அறிவியலா? கலையா?

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த மக்களைக் கவர்ந்த வினா 'வரலாறு - அறிவியலா? கலையா?' என்பதாகும். அறிவியல் ஆய்வுமுறைக் கீழ்வரும் எதனையும் அறிவியல் எனக் கூறும் இயல்பு அக் காலத்தில் நிலவிவந்தது. வரலாற்று உண்மைகளைக் கண்டறிய அறிவியல் முறைகளையும், அறிவியல் நெறி முறைகளையும் பயன்படுத்துவதால் மட்டுமே வரலாறு அறிவியலாகிவிட முடியாது. அறிவியல் ஏற்றம் பெற்றுள்ள இக்காலத்தில் வரலாற்றைக் கற்பதால், அது அறிவியலாகி விடாது.

எந்த ஒரு நிகழ்ச்சியையும் விருப்பு வெறுப்பின்றி, கூர்ந்து நோக்கித் தன்னைச் சாராத ஒன்றெனக் கருதி, பகுத்தறிந்து, காய்தல் உவத்தல் இன்றிச் சரியான அநுமானத்திற்கு வந்து உண்மைகளைத் தர அறிவியல் உதவுகிறது. அறிவியல் முறைகளைக் கையாளுவதால் வரலாற்றின் மதிப்பை உயர்த்த இயலுமே தவிர அதை அறிவியலாக்கிவிட முடியாது.

வரலாற்றை, இயற்பியல் அறிவியலென்றோ (Physical Science) அல்லது இயற்கை அறிவியலென்றோ கருதினால், வரலாற்றினின்று பெறும் உயர்ந்த உணர்வினையும் ஊக்கத்தையும் பெறத் தவறி விடுவோம். மனித இனத்தைப் பற்றிக் கற்பதே வரலாறு. இவ்வுலகில் மாண்ட இனத்தின் நடப்பை எடுத்தியம்புவதே வரலாறு. ஆளுமைப் பண்பும், அறிவுத்திறனும், விடுதலையுணர்வும், மனச் சான்றும், ஆன்மிக உணர்வும் நிரம்பிய மனித இனத்தைப் பற்றிக் கூறுவது வரலாறு. வரலாற்று மனிதர்கள் சிக்கலான வர்கள், மிகவும் மாற்றம் நிறைந்தவர்கள், வேற்றுமையுடைய வர்கள். ஆக, அறிவியல் முறையில் அவர்களை ஆராய இயலாது.

அறிவியலில், கொடுக்கப்பட்ட சூழலில் ஓர் அணுவைப் பற்றிச் சொல்வது எல்லா அணுக்களுக்கும் பொருந்தும். ஆனால் மனித இனத்திற்கு இத்தகைய பொதுமை பொருந்தாது. ஆகவே வரலாற்றினை அறிவியலாகக் கொள்ள முடியாது.

## 1.12. வரலாற்றில் பகுப்பு முறை

வாய்ப்பு நலன் கருதி வரலாற்றைக் கால அடிப்படையில் கிடைக் கோட்டு நிலையிலும், பொருள் அடிப்படையில் செங் கோட்டு நிலையிலும் பிரிக்கலாம். கிடைக்கோட்டு நிலையில் பிரித்தால் நான்கு பிரிவுகள் உள. அவை:

1. வரலாற்றிற்கு முந்திய காலம்
2. பழங்காலம்
3. இடைக்காலம்
4. தற்காலம்

செங்கோட்டு நிலையில் நான்கு பிரிவுகள் உள. அவை :

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| அரசியல் வரலாறு | சமுதாய வரலாறு | பொருளியல் வரலாறு | பண்பாட்டு வரலாறு |

ஆனால் இன்று இப்பிரிவின்கீழ் பல்வேறு சிறு சிறு பிரிவுகள் தோன்றியுள்ளன. சமய வரலாறு, தத்துவ வரலாறு, கலை வரலாறு, அறிவியல் வரலாறு போன்ற பல மேலே கண்ட பிரிவின்கீழ் வர வாய்ப்பிருக்கின்றது.

'புதிய வரலாறு' என்ற புதிய துறையும் வந்துள்ளது, இது மனிதப் பண்பாட்டு வளர்ச்சியையும் நாகரிக முன்னேற்றத்தையும் கூறுவதில் மிகுந்த நாட்டம் செலுத்துகிறது.

## 1.13. வரலாற்றிற்கும் பண்பாட்டிற்குமுள்ள தொடர்பு

1. ஒரு நாட்டின் வரலாற்றை ஆராய்ந்தால்தான் அந்த நாட்டின் பண்பாட்டை அறிந்துகொள்ள முடியும். ஒரு நாட்டின் பண்பாட்டினை வெளிக்கொணராத எந்த ஒன்றும் வரலாறு ஆகிவிட முடியாது. ஆகவே வரலாறும் பண்பாடும் ஒன்றினை ஒன்று சார்ந்துள்ளது.

2. ஒரு நாட்டின் வரலாற்றையோ பண்பாட்டினையோ பயிலுவதன் மூலம் வாழ்வை வளப்படுத்தி வாழ்வின் குறிக்கோளை அடையமுடியும்.

3. வரலாற்றையோ பண்பாட்டையோ அறிந்து கொள்வதன் மூலம் பல்வேறு துறைகளைப் பற்றிய அறிவினைப் பெற்று மனிதன் பேரறிவு நிரம்பப் பெற்றவனாகத் திகழ முடியும்.

4. இரண்டும் நற்பண்புகளை, அறக்கோட்பாடுகளை, சீரிய சமய, தத்துவக் கருத்துகளை மக்களுக்குப் புகட்டுகின்றன. இதன் வாயிலாக மனிதன் நன்னெறியில் வீறு நடைபோடும் வாய்ப்பு உண்டாகும்.

5. தேசிய ஒருமைப்பாட்டு உணர்வினையும், வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பினையும் வரலாறும் பண்பாடும் புகட்டுகின்றன.

6. பல்வேறு வரலாறுகளையும் பண்பாடுகளையும் கற்பதன் மூலம் உலகக் குடிமகன் என்று எண்ணும் உயர்ந்த பண்பு தோன்ற வாய்ப்புள்ளது; சகிப்புத் தன்மையும் தோன்றும். எல்லோரும் ஒரு விலை, ஒரு நிறை, எல்லோரும் இவ்வுலக மக்கள் என எண்ணும் மனப்பாங்கு தோன்றும்.

7. இரண்டையும் கற்பதால் கடந்தகாலப் பெரியோர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நம் நல்வாழ்வை வகுத்துக் கொள்ள முடியும்.

ஆகவே, வரலாற்றிற்கும் பண்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்பதை மேலே கண்ட கருத்துகள் வாயிலாக அறிய முடிகின்றது.

## இயல் 2

# 2.1. இந்தியாவின் நிலவியலமைப்பு

### நாட்டிற்குப் பல்வேறு பெயர்கள்

"பாரதநாடு பழம் பெரும் நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே"

எனப்பாடி வைத்துள்ளார் அமரகவி பாரதி. புராண மரபுகளில் சிறந்த அரசனாக விளங்கிய பரதனின் பூமி, 'பரத்வருஷ' என அனைவராலும் அழைக்கப்பட்டு வருகிறது. இது ஜம்புத் தீவு என்ற பெருந் தொகுதியின் சிறு பகுதியாக இந்தியா அன்று இருந்தபோதிலும், இன்றும் இதை 'ஜம்புத் தீவு' என்றே கூறுகின்றனர்.

தொடக்க காலப் பாரசீக, கிரேக்கப் படையெடுப்புகளின் விளைவால் இந் நாட்டிற்கு, இந்தியா ஹிந்துஸ்தானம் என்ற பெயர்கள் உருவாயின. அவர்களுடைய படையெடுப்புகள் அனைத்தும் சிந்து நதியுடன் நின்றுவிட்டன. சிந்து என்பதை ஹிந்து என்றே அவர்கள் உச்சரித்தமையால் இடைக்காலத்தில் வந்த முஸ்லிம்கள் இதை ஹிந்துஸ்தானம் என அழைத்தனர்.

### இந்தியாவின் மிகச் சிறந்த தனிநிலை

வடக்கேயுள்ள இமாலய மலைத்தொடர் தனது இருபக்கச் சிறு தொடர்களோடு திபெத்து, சீனா ஆசியாவின் (Asia) எஞ்சிய பகுதிகளினின்று இந்தியாவைப் பிரிக்கின்றது. இந்தியா முறையே கிழக்கே வங்காள விரிகுடாவாலும், மேற்கே அரபிக் கடலாலும், தெற்கே இந்துமாக் கடலாலும் சூழப்பட்டுள்ளது. இவ்வாறாக இந்தியா ஒரு பக்கம் ஆப்பிரிக்காவினின்றும், மற்றொரு பக்கம் மலேயா, இந்தோனேஸ்ய தீவுக்கூட்டங்களினின்றும் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு அதன் வளர்ச்சியை, வாழ்வினை, முன்னேற்றத்தைப் பெரிய அளவிற்குத் தனித் தன்மையுடையதாக்கியுள்ளது. இந்தியாவின் நாகரிகமும் பண்பாடும் பெருமளவிற்கு மற்ற நாடுகளினின்று மாறுபட்டுள்ளன.

இந்தியாவில் நிலவிவரும் பழக்கவழக்கங்கள், ஆடை அணி கலன்கள், சமயம், சட்டங்கள், கலைகள், கல்விமுறைகள், தத்துவங்கள் அவர்களுக்குப் பொருந்தக்கூடியனவாக அவர்களாலேயே உருவாக்கப்பட்டவை. இந்தியக் கல்வி முறையிலும் கலைகளிலும் பண்டைய, இடைக்கால கிரேக்கர்களின், அராபியர்களின், தற்கால ஐரோப்பியர்களின் தாக்கத்தைக் காணலாம்.

இந்தியா தனித்து விலகி இருந்தபோதிலும், அதன் பரந்த நிலப்பரப்பு, பல்வேறு வகைப்பட்ட இனக்கூறுகள், மாறுபட்ட தட்பவெப்ப நிலைகள், நில அமைப்புகள், அதைத் தேங்கிய குட்டையாக ஆக்காமல், அதற்கு ஒரு கண்டத்தின் பண்பினைக் கொடுத்துள்ளன. இந்த அமைப்பு, வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது.

**இந்தியாவின் சிறப்பான நிலவியல் பாகுபாடுகள்**

**இட அமைவும் பரப்பும்:** ஆசியாக் கண்டத்தின் மத்திய தென்பகுதியில் இந்தியா அமைந்துள்ளது. இது மொத்தம் 18 இலட்சம் சதுர மைல்களுக்கு மேற்பட்ட நிலப் பரப்பை உடையது. இது கிழக்கு மேற்காக 2500 மைல்களும், வடக்கு தெற்காக 2000 மைல்களும் நீண்டுள்ளது. இது 6000 மைல்கள் நில எல்லையும், 5000 மைல்கள் கடல் எல்லையும் உடையதாய் இருக்கிறது.

**1. வடக்கே குன்றுநிறைந்த நாடுகள் :** வடக்கே உலகிலேயே பரந்தகன்ற இமாலய மலைத்தொடர் உள்ளது. இது 1500 மைல்கட்குச் சுவராக அமைந்துள்ளது. இப்பகுதி காஷ்மீர், கங்கரா, தெஹிரி, குமான், நேபாளம், சிக்கிம், பூடான் என்ற உயர்ந்த நிலப்பகுதிகளைத் தன்னகத்தே பெற்றுள்ளது. இவ் வடக்குச் சுவரில் சிற்சில திறப்புகள் இருப்பினும், மலைத்தொடர் மிக உயர்ந்திருப்பதாலும், பனி படர்ந்திருப்பதாலும் குடியேறுபவர்கட்கும் படையெடுக்க முனைவோருக்கும் இமாலயம் அசைக்க முடியா வலிமையுடைய கோட்டையென விளங்குகிறது. இதுபோன்றே படக்கியிலிருந்து நாகா குன்றுகள் வரையுள்ள வடகிழக்கு மலைத்தொடர் விளங்குகிறது. இவ்வாறாக இமாலயப் பாதுகாப்புச் சுவர் பண்டைய காலம் முதல் இன்றுவரை இந் நாட்டின் பண்பாடும் சமுதாய அமைப்பும் தொடர்ந்து ஒரே சீராக இருப்பதற்குப் பொறுப்பாயுள்ளது. இதனால்தான் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த சமுதாயத்தினின்று இன்று நிலவிவரும் சமுதாயம் பெரிதும் மாறாநிலை பெற்றுள்ளது.

ஆனால், வடமேற்குப் பகுதி சற்றுத் தாழ்ந்திருப்பதாலும், காடுகள் இல்லாமையாலும் சில திறப்புகள் உள்ளன. அதன் வழியாகப் பன்னெடுங்காலமாகப் படையெடுப்போர் இந் நாட்டிற்குள் புகுந்தனர். இங்கேயுள்ள கணவாய்களே இதற்குக் காரணம். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை கைபர், கோமல், போலன், குரம், டாச்சி என்பனவாகும். இவைகளின் வழியாக ஆரியர்கள், பாரசிகர்கள், பண்டைய சித்தியக்குடியினர், துருக்கர்கள், தார்த்தாரி இனத்தவர், மங்கோலியர்கள் போன்ற பல வெளிநாட்டவர்கள் பெரும் எண்ணிக்கையில் இந்நாட்டிற்குள் புகுந்தனர். ஆகவே, இயற்கை எல்லைகள் இந்தியாவிற்குப் பாதுகாப்பு அளித்தனவே தவிர, படையெடுப்பைத் தவிர்க்க முடியவில்லை.

2. பரந்த வடக்குச் சமவெளி : சிந்துநதியும் அதன் கிளையாறுகளும் அடங்கிய பள்ளத்தாக்குகளும், சிந்து, இராஜபுதனத்தின் மணற் பாலைவனங்களும், அதே போன்று கங்கை, யமுனை, பிரம்மபுத்திரா நீரால் வளம் பெற்ற பகுதிகளும் அடங்கியது பரந்த வடக்குச் சமவெளி. வடஇந்திய நதிகளான சிந்துவும் அதன் கிளையாறுகளும், கங்கையும் அதன் துணையாறுகளும், பிரம்மபுத்திராவும் அதற்கு நீரூட்டும் துணையாறுகளும் இப்பரந்த சமவெளிப் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கின்றன. இந்தியப் பண்பாடு, தன் வளர்ச்சி காரணமாக, இந்நதிகட்குக் கடப்பாடுடையதாக உள்ளது.

இந்தியாவின் தொடக்க காலப் பண்பாடு சிறந்து செழிப்புற்று வளர்ச்சி பெற்றது சிந்து சமவெளிப் பள்ளத்தாக்கில்தான். மேலும் ஆரிய நாகரிகம் பெரிதும் பஞ்சாபில் ஓடும் நதிகள், கங்கை இவற்றின் தாக்கத்திற்குள்ளானது. இந்நதிகளின் விளைவாக இப்பகுதியில் செழிப்பும், மக்கள் தொகைப் பெருக்கமும், பெரிய நகரங்களும், தொழில் மையங்களும் தோன்றலாயின. செழிப்பான இப்பகுதியின் மேல் அந்நியப் படையெடுப்பாளர்களின் கண்பட்டது. பழங்காலத்தில் ஆரியவர்த்தம் என அழைக்கப்பட்ட இப்பகுதி இந்திய நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் பீடமாக அமைந்தது. சமணம், பௌத்த சமயம் என்னும் இரு பெரிய சமய இயக்கங்களும் இங்குதான் தோன்றின. அன்றாட உணவிற்குப் பெரும் அல்லல்படும் நிலையில்லை. அதிக உழைப்பின்றிப் போதிய உணவு கிட்டியது. ஆகவே, இங்கு வாழ்ந்த மக்கள் தங்கள் காலத்தையும் ஆற்றலையும் சீரிய சிந்தனை, பண்பாட்டு வளர்ச்சிகட்குச் செலவிட்டனர்.

**3. தக்காணப் பீடபூமி:** இப்பீடபூமி, கங்கைச் சமவெளிக்குத் தெற்கே அமைந்துள்ளது. இது விந்திய மலைத்தொடர்களாலும், ஸாத்பூரா மலைத்தொடர்களாலும் பிரிக்கப்படுகின்றது. இப்பகுதி இமாலயத்தைவிடப் பழமையானது. தக்காணத்தில் நர்மதா, தபதி ஆறுகளைத் தவிர, எல்லா முக்கிய ஆறுகளும் கிழக்கு முக மாகச் சென்று வங்காள விரிகுடாவில் விழுகின்றன. வடக்கே யுள்ள ஆறுகள் போக்குவரத்துக்கு மிகவும் பயன்படுகின்றன. ஆனால், தெற்கேயுள்ள ஆறுகள் அந்த அளவிற்குப் போக்குவரத் துக்குப் பயன்படுவதில்லை. தென்கோடியின் வரலாறு தனிச் சிறப்பு வாய்ந்தது. அது தனக்கென ஒரு பண்பாட்டு மரபினைப் பெற்றிருந்தது. இந்து அல்லது முஸ்லிம் அரசர்கள் நீண்டகாலத் திற்கு இப்பகுதியைத் தங்கள் ஆட்சியின்கீழ் வைத்திருக்க முடிய வில்லை என்பது ஒரு குறிப்பிடத்தக்க செய்தியாகும். விந்திய, ஸாத்பூரா மலைத்தொடர்களைத் தாண்டி ஆரியர்கள் இப்பகுதிக்கு வர மிகச் சிரமப்பட்டனர்.

**4. கிழக்கு, மேற்கு மலைத் தொடர்கள் :** கிழக்கு, மேற்கு மலைத் தொடர்கள் நீண்டு குறுகிய கடல்சார்ந்த தென் சம வெளியையொட்டி அமைந்துள்ளன. இச்சமவெளி கிழக்குக் கடற் கரையிலிருந்து மேற்குக் கடற்கரை வரையுள்ளது. இங்குச் செழிப்பு வாய்ந்த கோதாவரி, கிருஷ்ணா, காவேரி இவைகளின் கழிமுகங் கள் இருக்கின்றன. தக்காண சமதளபூமிக்கு மேற்கே, அரபிக் கடற்கரைக்கு இணையாக உயர்ந்த மலைத்தொடர்கள் தொடர்ச்சி யாக 700 மைல் நீளத்திற்கு உள்ளன. அவையே மேற்கு மலைத் தொடர்கள் எனப்படுபவை. இதுபோன்றே தக்காண சமதள பூமிக்குக் கிழக்கே தாழ்ந்த கிழக்கு மலைத்தொடர்கள் உள. மேற்கு மலைத்தொடர்கள் கடல் மட்டத்திற்குமேல் 3,000-லிருந்து 8,0௦0 அடி வரை உயரமானவை. அவை செங்குத்தானவை. அம்மலைகளின் மேல் மிக உயர்ந்த சிகரங்கள் இருக்கின்றன. இவை அசைக்க முடியா கோட்டைகளாக விளங்குகின்றன.

கிழக்குச் சமவெளிக்குக் கீழேயுள்ள கடலோர நிலப்பகுதி மிகவும் அகன்றது. மேற்குக் கடற்கரையைக் காட்டிலும், கிழக் குப்பகுதி தாழ்வானதாக இருப்பதால், இப்பகுதியில் போக்கு வரவு எளிதாகச் செயல்படுகிறது. கிழக்குப் பகுதித் துறை முகங்கள் பன்னெடுங்காலமாக சாவகம், சுமத்ரா, பர்மா, சயாம், இந்தோ-சீனா போன்ற அந்நிய நாடுகளுடன் வாணிபத் தொடர்புகள் கொண்டிருந்தன.

**தட்பவெப்ப நிலை**

இந்தியா தென்-மேற்குப் பருவக்காற்றாலும், வடமேற்குப் பருவக்காற்றாலும் மழையைப் பெறுகின்றது. பல்வேறு பகுதிகளில் மழை மாறுபட்டுப் பெய்கின்றது. அஸ்ஸாம் மாநிலத்தில் 450 அங்குலமும் சிந்து பாலைவனங்களில் 3 அங்குலமும் மழை பெய்கிறது.

இந்தியா வெப்பமண்டலப் பகுதியைச் சேர்ந்த நாடு. இதனால் இந்நாடு பொதுவாக மிக வெப்பமாக உள்ளது. உயர்ந்த மலைப்பகுதிகள் குளிர்ச்சியாகவும், கடலோரப் பகுதிகள் மிதமான நிலையாகவும் உள்ளன. தட்பவெப்ப நிலையிலும் பல்வேறு மாற்றங்கள் உள. கோடையில் சில இடங்களில் 130 டிகிரியும் குளிர் காலத்தில் உறைநிலைக்குக் கீழும் தட்பவெப்ப நிலை உள்ளது.

**மண்வளமும் பயிர்களும்**

இங்குப் பல்வேறுபட்ட மண்வளங்கள் இருக்கின்றன. அஸ்ஸாம், வங்காளம், உத்தரப்பிரதேசம், சிந்து, குஜராத், கிழக்கு மேற்கு மலைத்தொடர்ப் பகுதிகளில் எல்லாம் செழிப்பான மண்வளத்தைக் காணலாம். இப்பகுதிகளில் பருத்தி, சணல், கோதுமை, நெல், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், தென்னை, கரும்பு மற்றும் பல்வகைத் தானியங்கள் பயிரிடப்படுகின்றன.

**கனிவளம்**

இந்தியாவில் வங்காளத்திலும் பீஹாரிலும் நிலக்கரி பெருமளவில் புதைந்து கிடக்கின்றது. செம்பும் இரும்பும், பீஹாரிலும் ஒரிஸ்ஸாவிலும் கிடைக்கின்றன. சென்னைப் பகுதியில் அப்பிரகமும், மைசூர்ப் பகுதியில் தங்கமும் கிடைக்கின்றன. மத்திய இந்தியாவிலும் மைசூரிலும் மங்கனீசு கிடைக்கின்றது.

இந்நாட்டின் நிலவியல் அமைப்புகளே இந்நாட்டின் பண்பாட்டையும் நாகரிக வளர்ச்சியினையும் நிர்ணயிக்கின்றன.

## 2.2. இந்தியப் பண்பாட்டின் நிலவியற் பின்னணி

இந்நாட்டின் நிலவியல் அமைப்பின் செல்வாக்கினால் இந்தியப் பண்பாட்டின் போக்கும், உலகிலுள்ள ஏனைய நாடுகளைப் போன்று பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்

பாக இங்கே சில முக்கியக் கருத்துகளைச் சிந்திப்பது சிறந்த தாகும்.

**மக்களின் வாழ்வு**

நிலவியல் அமைப்பு, ஒரு நாட்டு மக்களுக்கு இயற்கை தந்த பரிசு. இவ்வமைப்பு இயற்கையின் ஆற்றலால் விளைந்த ஒன்று. மனிதன் இதைக் கட்டுப்படுத்தவும், முற்றிலும் மாற்றவும் இயலாது. மலையையோ கடலையோ இடமாற்றம் செய்ய முடியாது.

இதுபோன்றே ஒரு நாட்டின் தட்பவெப்ப நிலைகளை மனித னால் மாற்றமுடியாது. ஆகவே, கொடுக்கப்பட்ட நிலவியல் அமைப் பின்கீழ் மக்கள் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வருகிறார்கள். இன்ப மாக வாழ மக்கள் நிலவியல் அமைப்பிற்கு ஏற்பத் தங்கள் வாழ்வு முறைகளை அமைத்துக்கொள்ள வேண்டும். இதன் விளைவாகப் பல்வேறு கருத்துகள், பழக்க வழக்கங்கள், பண்புகள், சமுதாய நிறுவனங்கள் அவ்வச் சூழல்களுக்கு ஏற்ப அமைந்துள்ளதைக் காணுகின்றோம்.

**1. மலைச்சூழலின் விளைவு**

மலையில் வாழ்வோர், வேளாண்மைக்குத் தகுதியில்லா நிலப்பரப்பில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்கள் உணவிற்காக விலங்குகளை வேட்டையாடுகின்றனர். வேட்டையாடும்பொழுது காட்டு விலங்குகளை அடக்கியாளும் ஆற்றலும் அஞ்சா நெஞ்சமும் பெறுகின்றனர். அவர்களுடைய வாழ்வு ஆபத்துகள் அடங்கியதாக உள்ளது. அவர்களுடைய வாழ்க்கை முறை அவர்களுக்கு உடலிலும் உள்ளத்திலும் திண்மையை ஏற்படுத்துகின்றது. இயல்பாகவே அவர்கள் தைரியமும் உற்சாகமும் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

இவை மேடுபள்ளங்கள் உள்ள பகுதிகளாகவும், அடர்ந்த காடுகள் உள்ள பகுதிகளாகவும் இருப்பதால், ஒரு பகுதியில் இருக்கும் மக்கள் மறு பகுதி மக்களோடு தொடர்பு கொள்வது எளிதன்று. அவர்களுடைய எண்ணங்களும் பழக்கவழக்கங் களும் தனித்தே வளர்ந்து அவைகளில் அவர்கள் தீவிரப் பற்று கொள்ளும் சூழலை உருவாக்குகின்றன. அவர்கள் எவர்க்கும் கட்டுப்படாமல் சுதந்திரமாக வாழ்கின்றார்கள்.

இங்கு வாழ்பவர்கள் எளிய வாழ்வு வாழ்வதால், அவர் களுடைய இனிய வாழ்விற்குரிய தேவைகள் மிகச் சிலவே. இதன் விளைவாக அவர்கள் வாழ்வில் மிகுந்த வசதிகள் உடையவர்

களைக் கண்டு பொறாமைகொண்டு பேராசையால் உந்தப்பட்டு அவர்களோடு போரிடத் தொடங்குகின்றார்கள். இது போன்ற மக்களை இந்தியாவின் மலைகளிலும், குன்றுகளிலும் காடுகளிலும் காணலாம்.

இவையெல்லாம் பண்டைய இந்தியப் பண்பாட்டின் இருப்பிடங்களாக இன்றும் நிலவி வருகின்றன. அங்குப் புதுமை அதிகம் புகுந்து விடுவதில்லை. பில்லர்கள், கோலர்கள், சாந்தலர்கள், கோண்டர்கள் என்ற பழங்குடி மக்கள் இன்னும் தங்களுடைய ஆதிகாலத்துப் பண்பியல்புகளைப் பெற்று மலைப்பகுதிகளில் தனித்தே வாழ்கின்றனர். இங்கு வாழ்வோருக்கு உணவுப் பொருள்கள் கிடைக்காமையால் அருகில் உள்ள சமவெளிப் பகுதிகளில் வாழ்ந்தோர்மீது படையெடுப்பு நடத்தினர். இதன் விளைவாகவே வடகிழக்குக் குன்று மாவட்டங்களிலும், மஹாராஷ்டிரத்திலும், ராஜஸ்தானப் பாலைவனங்களிலும் இந்தியாவிலேயே போரிடும் இனத்தவர் பெரிதும் தோன்றினர்.

## 2. ஆற்றுச் சூழல்

ஆறுகளின் அருகே வாழும் மக்களுக்கு வேளாண்மைக்கு வேண்டிய நீரும் வண்டல் மண்ணும் நிறைய கிடைப்பதால், மிகுந்த உழைப்பில்லாமல் உணவுப் பயிர்களை உற்பத்தி செய்து தங்கள் தேவைகளை நிறைவு செய்துகொள்ளுகிறார்கள். இவர்கட்கு உடல் உழைப்பு அதிகமின்மையால், இவர்கள் மலைவாழ் மக்களைப்போல் நல்ல ஆரோக்கியம் படைத்தவர்களாக இருப்பதில்லை.

ஆற்றுவழியாகப் போக்குவரத்து வைத்துக்கொள்ளும் வாய்ப்பு இருப்பதால், இங்கு வாழ்வோர் தங்கள் எண்ணங்களையும், பழக்கவழக்கங்களையும், நாகரிகக் கோட்பாடுகளையும் பிறருடன் தொடர்பு கொண்டு பகிர்ந்துகொள்ள முடிகிறது. இவர்கள் தங்களுக்கெனப் பொதுவான, சமுதாய, பொருளாதார, சமய, அரசியல் நிறுவனங்களை நிறுவிக் கொள்ளவும் முடிகின்றது. பிறருடன் பழகும் வாய்ப்பு அதிகம் இருப்பதால் மற்றவர்களுடன் ஒத்துப் போகின்ற இயல்பும் இவர்களிடம் காணப்படுகின்றது. பிறருடன் சேர்ந்து வாழ விரும்புவதால், இவர்களிடம் அமைதியை நாடும் இயல்பு இருப்பதில் வியப்பொன்றுமில்லை. இயற்கை துணைபுரிந்தால் பருவகாலத்தில் மழைபெய்யும். அதன் விளைவாக வேளாண்மை பெருகும். கால்நடைகள் நன்கு பெருகும். இயற்கை துணை புரியாவிடின் ஆற்றுப் பகுதி மக்கள் அவதியுற நேரிடும். இதன் விளைவாக இவர்கள் இயற்கையில் காண இயலாச் சக்திகளின்மீதும் எண்ணற்ற கடவுள்களின் மீதும் நம்பிக்கை

வைக்கத் தலைப்பட்டனர். நல்வாழ்விற்குக் கடவுளின் துணையை நாடினர். தங்கள்மேல் நம்பிக்கையில்லா நிலை ஏற்பட்டுக் கடவுளின்மேல் நம்பிக்கை வைக்கும் நிலை அதிகமாயிற்று. விதியில் நம்பிக்கை அதிகம் வைக்கவும் தலைப்பட்டனர். இவர்களுக்கு ஓய்வு அதிகம் இருந்தமையால், அழகுக் கலைகளிலும் தத்துவச் சிந்தனைகளிலும் இலக்கியப் படைப்புகளிலும் சமயக் கோட்பாடுகளிலும் நாட்டம் அதிகம் இருந்தது. உலகிலேயே ஆற்றங்கரையோரங்களில்தான் சிறந்த நாகரிகமும் பண்பாடும் தோன்றியுள்ளதைக் காணுகின்றோம். சிறந்த சிந்தனையாளர்களும், பெரிய கலைஞர்களும், உயர்ந்த இலக்கியக் கர்த்தாக்களும், தத்துவமேதைகளும், சமயச் சான்றோர்களும் இப்பகுதியில்தான் அதிகம். இசை விற்பன்னர்களும் தோன்றியுள்ளார்கள்.

### 3. கடற்சூழல்

கடலோரப் பகுதியில் உப்புநீரின் விளைவால் செழிப்பான நிலவளமில்லை. ஆகவே, இங்கு வாழும் மக்கள் கொதித்தெழும் கடலுக்குள்ளே சென்று அன்றாட உணவிற்கு மீன்களைப் பிடித்து வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது இவர்களை நல்ல மாலுமிகளாகவும் இயல்பாகவே அஞ்சா நெஞ்சம் உடையவர்களாகவும் ஆக்குகின்றது. வாழ்விற்கு வேண்டிய பொருள்களை விற்கவும் வாங்கவும் அவர்கள் அந்நிய நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொள்ளவேண்டியுள்ளது. இதன் விளைவாகப் பிறநாட்டு மக்களின் நாகரிகத்துடனும், பண்பாட்டுடனும், வாழ்க்கை முறையுடனும் தொடர்பு கொள்ளும் வாய்ப்புக் கிட்டுகின்றது. பிறநாட்டுத் தொடர்பால் தங்கள் வாழ்வு முறையைச் செம்மைப்படுத்திக் கொள்ளும் திறனை இவர்கள் பெறுகிறார்கள். பரந்த மனப்பான்மையும் செழிப்பான பொருளாதார நிலையும் இவர்களுக்கு அமைகின்றன. இம்மக்கள் பெரும்பாலும் இந்தியாவின் கடற்கரையோரமாக வாழ்கின்றார்கள். இவர்கள் கடல் கடந்து சென்று நமது நாட்டுப் பண்பாட்டையும் நாகரிகத்தையும், கலைகளையும் பரப்பும் வாய்ப்புப் பெற்றிருந்தமையால், அவற்றின் அடிச் சுவடுகளை உலகின் பல்வேறு நாடுகளில் இன்றும் காணமுடிகின்றது.

இந்தியாவைச் சூழ்ந்து 3,000 மைல் கடற்கரை இருந்த போழ்திலும், இஃது ஒரு போர் மரபுடைய நாடாகத் திகழவில்லை. ஆகவே, அவர்கள் பலம் வாய்ந்த கடற்படையையும் பெற்றிருக்கவில்லை. இதற்கு முக்கியக் காரணம் இந்திய அரசர்கட்கு இந்தியாவுக்குள்ளேயே தங்களுடைய இராணுவத் திறனையும் ஏகாதிபத்திய உணர்வையும் வெளிப்படுத்திக்கொள்ள வாய்ப்பிருந்ததே

ஆகும். அவர்கள் என்றும் கடல்கடந்து அரசுகளை நிலை நிறுத்தவோ கைப்பற்றவோ கனவு காணவில்லை.

## 4. கனிவளச் சூழல்

வேளாண்மைக்கு எளிதாக இல்லாமல் கனிவளம் நிறைந்த பகுதிகளில் அவற்றையும் உலோகங்களையும் பயன்படுத்தி மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டனர். அவர்கள் நல்ல பொருள்களை உற்பத்திசெய்யாவிடின் அதைப் பண்டமாற்றாகக்கொடுத்து உணவுப் பொருள்களை வாங்கி நல்வாழ்வு வாழமுடியாது. ஆகவே, அவர்கள் மிகச் சிறந்த பொருள்களைத் தயாரிக்கும் சிறந்த முறைகளைத் தெரிந்திருந்தனர். அவர்கள் சுறுசுறுப்பாகவும் புத்தி கூர்மையுடனும் செயல்பட்டுச் செழிப்புடன் வாழ்ந்தனர். பல்வேறு தொழில்களை நிர்வகிக்கும் திறனையும் பெற்றிருந்தனர். அவர்களுக்குத் தங்களின் ஆக்கத்திறனிலும் ஆற்றலிலும் பெரும் நம்பிக்கை இருந்தது. அவர்கள் விதியில் நம்பிக்கை கொள்ளாமல் உழைப்பில் நம்பிக்கை வைத்திருந்தனர். இந்தியாவில் கனி வளம் கிடைக்குமிடங்களில் அவர்களைக் காணலாம்.

## 5. தட்பவெப்பம்

1. குளிர்ந்த பகுதிகளில் வாழ்ந்த மக்கள் சுறுசுறுப்பாக இயங்கினர். இவர்கள் கடின உழைப்பில் ஈடுபடும் உடல்வலிமை பெற்றிருந்தனர். மலைப்பகுதிகளில் வாழ்ந்த இவர்கள் நோய்களினின்று விடுபட்டு நல்ல ஆரோக்கியம் நிறைந்தவர்களாக இருந்தனர்.

2. மித தட்பவெப்ப நிலையில் வாழ்ந்த மக்கள் சுறுசுறுப்பாக இயங்கியதுடன் நூல்நூற்றல், நெய்தல் போன்ற இவ்வெப்ப நிலைக்கு ஏற்ற தொழில்களில் ஈடுபட்டு அவற்றைச் செம்மையாகச் செய்துவந்தனர்.

3. மிகுந்த வெப்பநிலையில் உள்ள பகுதிகளில் வாழ்ந்த இந்தியரால், வெளிநாட்டுக் குளிர்ந்த மலைப்பகுதிகளில் இருந்து வந்த அந்நிய படையெடுப்பாளர்களின் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. மிகுந்த வெப்ப நிலையில் வேதனைப்படும் மக்களுக்கு ஆற்றல் குறைந்திருப்பதுடன் பல்வகை நோய்களும் தோன்றுகின்றன. அவர்களுடைய வாழ்வுக் காலம் குறுகியது.

## 6. பாலைவனச் சூழல்

சிந்து சமவெளிக்கும் கங்கைச் சமவெளிக்கும் இடையே அமைந்துள்ள தார்ப் பாலைவனம் இந்திய வரலாற்றைப் பெரிய

அளவிற்குப் பாதித்துள்ளது. இப்பாலைவனம் இப்பகுதிகளை இரண்டு வேறுபட்ட தொகுதிகளாகப் பிரிப்பதால் இந்தியர்களுடைய பாதுகாப்புத்திறன் பலவீனப்பட்டது. இது இந்தியாவின் பெரும் சமவெளிப் பகுதிகளைப் பிரித்ததால் தார்ப் பாலைவனத்திற்கு வடபகுதியில் அமைந்த குறுகிய சமவெளி படையெடுப்பாளர்கள் இந்தியாவிற்குள் புக வாய்ப்பளித்தது. இங்குதான் முக்கியமான போர்கள் நிகழ்ந்தன. வெற்றிக்குப்பின் டில்லியை அவர்கள் கைக்கொள்ள முடிந்தது.

## 7. தனித்தன்மை

இன மொழிப் பாகுபாடுகள் பல்வேறு பகுதிகளில் உருவாகி, தனித்தன்மையை உணர்த்தின. பெரிய ஆறுகள், கிளையாறுகள். மலைத்தொடர்கள், கங்கைச் சமவெளியையும், தக்காண பீடபூமியையும் வடக்கும் தெற்குமாகப் பிரித்தன. இதன் விளைவாகப் பல்வேறு மாநிலங்களும் சிறு பகுதிகளும் தோன்றின. இந்நாடு தனது நிலவியல் அமைப்பினால் பிறநாடுகளினின்று பிரிந்து நின்றமையாலும் பிறநாட்டு மக்கள் எளிதில் இதனுள் புகமுடியாமையாலும் இதற்கெனத் தனிச்சிறப்பான நாகரிகமும் பண்பாடும் தோன்றலாயின. பல்வேறு நாடுகளின் பண்பாடுகள் அழிந்து போனபோதிலும் இதனுடைய நாகரிகமும் பண்பாடும் இன்றும் உலகமே போற்றும் வண்ணம் நிலைபெற்றிருப்பதற்குக் காரணம், இஃது அனைத்து நாடுகளினின்றும் தனித்து நின்று தனக்கென ஒரு பண்பாட்டுமுறையை நிறுவிக்கொண்டதாகும். ஆற்றங்கரையோரமாக வாழ்ந்த மக்களுக்கு நிறைய ஓய்வு இருந்தமையால், அவர்கள் உயர்ந்த கலைகளையும், பண்பாட்டினையும், நாகரிகத்தையும், இலக்கியத்தையும் படைக்கத் தங்கள் சிந்தனையையும் நேரத்தையும் செலவிட்டனர். இதன் விளைவாக உலகமே வியக்கும் படைப்புகள் இத்துறையில் இங்கே தோன்றியுள்ளன. உலகப் பண்பாட்டிற்கு இந்தியா பல்வேறு துறைகளில் பல கொடைகள் வழங்கியுள்ளது.

## இயல் 3

# 3.1. வேற்றுமையில் ஒற்றுமை

இந்நாடு வேற்றுமைகளின் உறைவிடம் என்பது அனைவரும் அறிந்ததே. உலகில் காணும் பல்வேறு நாகரிகப் பண்பாடுகளின் கூட்டுக் கலவையை இங்கே காணலாம்.

### நிலவியல் வேற்றுமைகள்

இஃது ஒரு பரந்த நாடு. இதுபோன்ற நாட்டிலே ஒரே சீரான இயற்கை அமைப்பு முறையைக் காணமுடியாது. பல்வேறு வகைப்பட்ட தட்பவெப்ப நிலைகளைக் காண்கின்றோம். இங்கே செழிப்பான கங்கைச் சமவெளியையும் அதே நேரத்தில் ராஜ புதன, சிந்து பாலைவனங்களையும் காணுகின்றோம். அஸ்ஸாம் குன்றுகளில் அளவுகடந்த மழை பெய்கின்றது. சிந்துவின் உயர்ந்த பகுதியில் ஆண்டிற்கு மூன்று அங்குல மழை பெய்கிறது. கடும் குளிரும் கொடிய கோடையும் இங்கே நிலவி வருகின்றன. இவை நிலவியல் அமைப்பில் உள்ள வேறுபாடுகள்.

### இன வேறுபாடு

பல்வேறு இனங்களைச் சார்ந்த மக்கள் இங்கே வாழுகின்றார்கள். இதனால் டாக்டர் ஸ்மித் இந்தியாவை 'இன அரும் பொருட் காட்சி அகம்' என்று குறிப்பிடுகின்றார். தொடக்க கால முதல் இந்தியாவில் மக்கள்தொகை அதிகமாகவே இருந்தது. கி மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே 'அனைத்து நாடுகளிலேயும் இந்தியாவில்தான் மக்கள்தொகை மிகவும் பெருகி இருந்ததை நாம் அறிகின்றோம்' என ஹெரடோட்டஸ் கூறுகிறார். இந்தியாவில் கிரேக்க, சாக்கிய, ஹூண, குஷான, அராபிய, துருக்கிய, ஆப்கானிய இனங்களைப் பார்க்கின்றோம். இன்றைய இந்தியாவில் பழங்குடி மக்களும் நகர நாகரிகத்தில் திளைத்தோரும் வாழ்கின்றனர். உடல் அழகிலும், நிறத்திலும், மக்கள் மாநிலங்களுக்

கேற்ப மாறுபட்டிருப்பதைக் காண்கின்றோம். காஷ்மீர மக்கள் நல்ல நிறமும் அழகும் பெற்றவர்களாக இருக்கின்றனர். அஸ்ஸா மியர்கள் இக்கூறுகள் தேவைப்படுபவர்களாக இருக்கின்றனர்.

### மொழி வேறுபாடுகள்

இந்தியா, இங்கிலாந்தைப் போன்ற பிரான்ஸைப் போன்ற ஒரு மொழியுடைய நாடு அன்று. இங்கு நானூறு மொழிகள் நிலவி வருகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை சமஸ்கிருதம், ஹிந்தி, வங்காளி, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி, தெலுங்கு, கன்னடம், தமிழ், மலையாளம் போன்றவைகளாகும்.

மொழிகளைப் போன்று பல்வகைப்பட்ட எழுத்து வடிவங்களும் உள்ளன. ஒரே சீராக எழுதும் முறை இந்தியாவில் இல்லை. பண்டைய காலப் பாலி, கரோஸ்டி, தேவநாகரி எழுத்துமுறை இன்றைய மொழிகளின் எழுத்து முறைகளினின்று முற்றிலும் மாறுபட்டவை.

### இலக்கிய வேறுபாடுகள்

ஒவ்வொரு மொழிக்கும் ஒருவகையான இலக்கிய அமைப்பு உள்ளது. எடுத்துக்காட்டாக, தமிழ் இலக்கியம் வங்காள இலக்கியத்தினின்று மாறுபட்டிருக்கிறது.

### சமய வேறுபாடுகள்

இங்கு அனைவரும் ஒரே சமயத்தைப் பின்பற்றவில்லை. உலகத்தின் தலைசிறந்த சமயங்களான பௌத்த சமயம், சமணம், இஸ்லாம், கிறித்துவம், இந்து சமயம் இங்கே நிலவியுள்ளன இந்து, பௌத்த, சமண, சமயங்களில் பல உள்பிரிவுகளும் உள.

### சமுதாய அமைப்பில் வேறுபாடுகள்

இந்தியாவில் பொது பழக்கவழக்கங்களிலேயும் வேறுபாடுகள் உள. வாழுமுறை, அணியும் அணிகலன்கள், அவற்றை அணியும்முறை, உண்ணும்முறை இவைகளில் வேறுபாடுகளைக் காண முடிகிறது. பல்வேறு பகுதிகளில் பலவகைப்பட்ட மரபுகளும் சமுதாய நிறுவனங்களும் உள. இந்திய சமுதாய அமைப்பில் நாகரிக, அநாகரிகக் கூறுகளும் ஒருங்கிணைந்து இருப்பதைப் பார்க்க முடிகிறது.

### பொருளாதார வேறுபாடு

ஒரே சீரான பொருளாதார அமைப்பினையும் இங்குக் காண முடிவதில்லை. 'கூழுக்கு உப்பில்லை என்பாரும், பாலுக்குச் சீனி

இல்லை என்பாரும்' வாழும் விந்தையான இடம் இந்தியா. மாட மாளிகைகளில் வாழ்வோர் ஒருபுறம், ஓலைக் குடிசையிலும் ஒண்ட முடியாமல் நலிந்து கிடக்கும் தரித்திர நாராயணர்கள் மறுபுறம் உள்ள காட்சிகளை இங்கே காணலாம்.

**வேற்றுமையில் ஒற்றுமை**

ஒற்றுமைப் பண்பு பன்னெடுங்காலமாக இந்தியாவில் இருந்து வந்துள்ளது. பல்வேறு வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை நிலவியிருக்கவில்லை என்பது தவறான கூற்றாகும். நிலவியல் அமைப்புகளும், இன வேறுபாடுகளும் சமய மொழிப் பிரிவுகளும் இருந்தபோதிலும் இவற்றின் அடித்தளத்தில் ஒற்றுமையைக் காணமுடிகிறது. மேலெழுந்தவாரியாகக் காண்போருக்கு இங்கு நிலவியுள்ள ஒற்றுமை தெரியாது. எத்தனை வேறுபாடுகள் இருந்தபோதிலும் இமாலயம் முதல் குமரிவரை நிலவிவரும் ஒற்றுமையை யாரும் மறுக்க முடியாது.

**1. நிலவியல் அமைப்பில் ஒற்றுமை**

இந்த நாடு முழுமைக்கும் உள்ள ஒரே பெயர் பாரத வருஷம் அல்லது பாரத பூமி என்பதாகும். இதைப் பரத கண்டம் என்றும் அழைப்பர். ஆகவே இந்நாடு முழுமையும் ஒரு வரலாற்றுச் சிறப்புடையது. வீர காவியங்களும் புராணங்களும் இந்த ஒரே பெயரைக் குறிப்பிடுகின்றன. இந்த ஒரே பெயர் ஒற்றுமை உணர்வைக் கூறுகின்றது. இன்று இக்கருத்து இந்தியாவைப் பாரத மாதா என்ற பொதுத் தாயகமாகக் கருதி அழைக்கின்ற நிலையை உருவாக்கியுள்ளது. தாகூரின் வந்தே மாதரம் என்ற பாடலும் இதே உணர்வை உணர்த்துகின்றது.

**2. அரசியல் ஒற்றுமை**

அரசியலும் இந்த நாடு முழுமைக்கும் ஒற்றுமையை ஏற்படுத்தத் தனது பங்கினை வழங்கியுள்ளது. சக்கரவர்த்தி என்ற சொல் மிகத் தெளிவாக இந்தியா முழுமையையும் பல்வேறு காலங்களில் ஒரே அரசர் ஆண்ட நிலையை உணர்த்துகின்றது. அதிராஜன், ராஜாதி ராஜன், சாம்ராஜ், ஏக்ராஜ், விராட், சார்வபவ்ம என்ற தொடர்கள் சமஸ்கிருத இலக்கியங்களில் அடிக்கடி வருகின்றன. இவை இந்தியா முழுமையையும் வெற்றி கொண்டதையும் அடக்கி ஆண்டதையும் தெளிவுபடுத்துகின்றன. ராஜசூயம், வாஜபேயம், புரை விஷேகம் போன்ற சடங்குகளைத் திரும்பத் திரும்பச் செய்தது பண்டைய காலத்திலேயே அரசியலில் ஒற்றுமை நிலவி இருந்ததைக் காட்டுகிறது.

இடைக்காலத்தில் அலாவுதீனும் ஔரங்கசீபும் இந்தியா முழுமைக்கும் ஒரே அரசை நிறுவினர். முகலாயர்கள் இந்தியா முழுமைக்கும் ஒரே மத்திய நிர்வாக அமைப்பையும் ஒரே சீரான சட்டங்கள், வழக்கங்கள், பொது நாணயங்கள், அலுவலக மொழி (பாரசிகம்), பரந்த சாலைகள் இவைகளை உருவாக்கி அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டினர். தற்காலத்தில் ஆங்கிலேயர்கள், இப்பணியைச் சிறப்புறச் செய்தனர். சுதந்திரம் அடைந்த பின்னர், சிற்றரசர்களிடமிருந்த மாநிலங்களையும் ஒன்றாக்கி இந்தியக் குடியரசு என்ற அமைப்பு முறையை ஏற்படுத்தியுள்ளோம்.

### 3. சமய ஒற்றுமை

இந்தியாவிலுள்ள பல்வேறு சமயங்களுக்கிடையே ஓர் உள்நோக்கு உள்ளது. விஷ்ணு, சிவன் என்ற இரு தெய்வங்களும் இந்துக்களால் வடக்கேயும் தெற்கேயும் வழிபடப்படுகின்றன. இந்தியா முழுமைக்கும் இராமாயணமும் மகாபாரதமும் இரு வீர காவியங்களாகக் கருதப்பட்டு, அவை கவிதை வடிவில் பக்திப் பெருக்கோடு பாடப்படுகின்றன. பசு, வேதங்கள், கீதை, புராணங்கள் மற்றும் சமய இலக்கியங்கள் ஒரேவிதப் புனிதத் தன்மையோடு வடக்கேயும் தெற்கேயும் கருதப்படுகின்றன. இந்தியாவிலுள்ள சமயங்களில் பெரும்பாலானவை ஒரே கடவுட்கோட்பாடு, ஆன்மாவின் அழியாநிலை, அவதாரக் கோட்பாடு, கரும வினைக் கோட்பாடு, வீடுபேறு என்ற கருத்துகளில் ஒத்திருப்பவைகளாக இருக்கின்றன. சமய சடங்குகளிலும், பழக்க வழக்கங்களிலும் ஒரே சீரான தன்மையைக் காண முடிகின்றது. வடக்கே வாழ்வோர், தெற்கே இராமேஸ்வரம் வரை வந்துபோவதையும், தெற்கே வாழ்வோர் வடக்கே காசி வரை சென்று திரும்புவதையும் இன்றும் காண்கின்றோம். வீடுபேறு அடைவதே அனைத்துச் சமயங்களின் மையக் கோட்பாடு. இதை அடைவதற்குரிய ஆன்மிக நெறிகளும் அறக் கோட்பாடுகளும் பெரும்பாலான இந்தியச் சமயங்களுக்கு ஏற்புடையனவாக இருக்கின்றன.

### 4. பண்பாட்டு ஒற்றுமை

உலகப் பண்பாட்டுப் பாணிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நாகரிகத்தையும் பண்பாட்டையும், பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் இந்தியப் பண்பாடென இங்கே உருவாக்கி இருப்பதை நாம் காண்கிறோம். இங்கே பல்வேறு மொழிகள், வழக்கங்கள், அரசியல் அமைப்பில் ஒற்றுமையின்மை இருந்த

போதிலும், இந்த நாட்டு இலக்கியத்தின்மீதும் பல்வேறு சிந்தனை நெறிகள்மீதும் ஒரே சீரான பண்பாட்டு முத்திரை இடப் பட்டுள்ளது. ஒரே சீரான இலக்கியக் கருத்துகளும், தத்துவ நெறிகளும், மரபுகளும், வாழ்வை நோக்கும் முறைகளும் இந்நாடு முழுவதும் இருப்பதைக் காணமுடிகிறது. இந்த நாடு முழுமைக் கும் உள்ள சமுதாயப் பண்பாட்டு வாழ்வின் அடித்தளம் ஒன்றே ஒன்று. மற்றும் ஒரே பாணியில் அமைந்தது. இதைச் சமயச் சடங்குகளிலும், சமுதாயச் சடங்குகளிலும், விழாக்களிலும், வாழும் முறைகளிலும், வடக்கேயும் தெற்கேயும் காணலாம். குடும்பத்தின் தூய தன்மை, சாதி விதிகள், சமயத்தடைகள் எல்லாப் பிரிவினருக்கும் ஒரே சீராக உள்ளன. தீபாவளி, தசரா, பொங்கல், கிருஷ்ண ஜெயந்தி, சரஸ்வதி பூஜை, விநாயகர் சதுர்த்தி போன்ற விழாக்கள் பண்பாட்டொற்றுமையை விளக்கு கின்றன.

## 5. மொழி ஒற்றுமை

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே பிராகிருத மொழி இந்தியாவில் இருந்தது. இது மக்களின் பொது மொழியாக இருந்து வந்தது. அசோகருடைய சமயக் குழுக்கள் எளிய மக்களுக்குத் தங்கள் செய்தியை இம்மொழியில் பரப்பின. பின்னர் பாலி மொழியும் சமஸ்கிருத மொழியும் அந்த இடத்தைக் கைப்பற்றிக் கொண்டன. சமஸ்கிருதம் மக்களின் இன, சமய, தகுதி வேறுபாடுகளைக் கடந்து அனைவராலும் தெய்வீக மொழியென ஏற்றுக்கொள்ளப் பட்டது. ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, வங்காளி மொழிகள் தோன்றுவதற்கு மூலமொழியாக சமஸ்கிருதம் இருந்தது. தக்காணத்தில் அன்றிருந்த தமிழும் தெலுங்கும் சமஸ்கிருதத் தின் செல்வாக்கிற்கு உள்பட்டிருந்தன. கடந்த காலத்தில் சமஸ் கிருதம் செய்த பணியை, ஆங்கில மொழி இந்தியாவில் செய்யத் தலைப்பட்டது. இவ்வாறாக இந்தியாவில் மொழி வழியாக ஒற்றுமையைக் காண்கிறோம்.

## 6. உடலமைப்பால் ஒற்றுமை

ஆரியர்கள், சாக்கியர்கள், பழைய சித்தியக் குடியினர், ஹூணர்கள் போன்ற பல்வேறு இனத்தவர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தனர். நாளடைவில் இந்து இனத்தவருடன், முழுமை யாகக் கலந்து தங்கள் தனித்தன்மையை இழந்துவிட்டனர். இந்தியாவில் உள்ள முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோர்களின் பெரும்பகுதியினர் இந்து சமுதாயவழி வந்து, பின்பு இஸ்லாமிய, கிறஸ்தவ சமயங்களுக்கு மதமாற்றம் செய்யப்பட்டனர். பல

வகைப்பட்ட இவ்வினத்தினர் சிலகால இடைவெளிக்குப் பின்னர், ஒரே சீரான உடலமைப்பினைப் பெற்றனர். இந்நாட்டிலே வாழ்ந்து இங்குள்ள உணவுப் பொருள்களை உண்டு ஒரே நீரைப் பருகி ஒரே நிலையான தட்பவெப்ப நிலைகளில் அன்றாட வாழ்வை நடத்தியதன் விளைவாக வெளிநாட்டினத்தவரும் இந்திய வாழ்வு முறையினையும் இந்தியரின் உடலமைப்பினையும் பெற்றனர். ஏன், வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்குள் புகுந்து இந்திய முஸ்லிம்களாக மாறியவர்கள்கூடக் காலப் போக்கில் இந்த நாட்டு முத்திரையைப் பெற்றுள்ளனர். அவர்கள் ஆசிய, அரேபிய, பாரசிக நாடுகளில் வாழும் தங்கள் உடன் பிறந்தாரைவிடப் பெரிதும் மாறுபட்டவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, இங்கு வாழும் மக்கள் அனைவருக்கும் இந்தியப் பண்பு என்ற ஒன்றும் இந்திய ஆளுமை அமைப்பு என்ற ஒன்றும் படிப் படியாக உருவாயின.

இவ்வாறாக, இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமையைக் காணுகின்றோம். எண்ணத் தொலையாத குருதி, மொழி, ஆடை, பழக்கவழக்க, இன வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமையைக் காண்கின்றோம்.

## 3.2. பண்பாட்டொற்றுமையைப் பேணி வளர்க்கத் துணைபுரிந்த காரணிகள்

கீழ்க்கண்ட காரணிகள் இந்நாட்டில் பண்பாட்டொற்றுமை யைப் பேணி வளர்க்கத் துணைபுரிந்தன.

1. சாதுக்களும், அருள்தொண்டர்களும், சமயகுழுவின் புனிதப் பயணிகளும், பண்டைய காலத்தில் பல ரிஷிகளும், சாதுக் களும் தங்களுடைய துறவிமடங்களில் நாட்டின் பல்வேறு இடங் களில் வாழ்ந்து வந்தனர். இம்மடங்கள் உயர்கல்வி மையங்களா கவும், எளிய மக்களிடம் பண்பாட்டைப் பரப்பும் கருவூலங்களாக வும் திகழ்ந்தன. பின்னர், புனித நகரங்களும் பொருள்வளம் சார்ந்த சிறு நகரங்களும் இப்பணிகளைச் செய்ய முயன்றன. அவற்றுள் காசி, தட்சசீலம், மதுரா, காஞ்சி, நாலந்தா, மதுரை, பூரி, சிருங்கேரி, அவந்திகா போன்றவை குறிப்பிடத்தக்கவை. மக்கள் இவற்றிற்கு ஆழ்ந்த மதிப்பு அளித்ததுடன் அவ்விடங் களைக் காணவேண்டுமென்ற வேட்கையுடையவராயும் இருந் தனர். அந்த இடங்களுக்குப் புனிதப்பயணம் செய்தோரும் அங்கு

வாழ்ந்த மாணவரும் சில ஆண்டுகள் கழித்துத் திரும்பிய பின்னர், இந்தியப் பண்பாட்டையும் அதில் பொதிந்துள்ள அடிப்படை ஒற்றுமையையும் பரப்பப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார்கள். மேலும் சமஸ்கிருத அறிஞர்களும், சாதுக்களும், சமய குழுவினரும் நாடு முழுவதும் பயணம் செய்து இப்பணியினைச் செய்து வந்தனர்.

2. பேரரசர்களும் போர் வீரர்களும் : சந்திரகுப்தன், சமுத்திர குப்தன், அலாவுதீன், அக்பர், ஔரங்கசீப் போன்ற பேராசை பிடித்த பேரரசர்கள் இந்தியாவில் பெரும் பகுதியை வெற்றிகொண்டு மாநிலங்களை ஒற்றுமைப்படுத்தி ஒரு குடையின் கீழ் ஆள முற்பட்டனர். இராணுவ வீரதீரச் செயல்களில் நாட்டமுள்ள போர் வீரர்கள், குறிப்பாக இராஜபுத்திர இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மிகவும் பின்தங்கிய ஒதுங்கிக் கிடந்த மாநிலங்களுக்குள் ஊடுருவித் தங்களுடைய எதிர்கால வாழ்வை அமைத்துக் கொண்டனர்; இதன் விளைவாக இந்தியப் பண்பாட்டையும் ஒற்றுமையையும் பரப்புவதற்குரிய ஆற்றல் நிறைந்த பொறியாக இயங்கினர்.

3. ஒரே சீரான நிர்வாகம் : குப்தர்கள், முகலாயர்கள், பிரிட்டானியர்கள் ஆட்சிக் காலத்தில் எல்லா மாநிலங்களையும் ஒன்றாக இணைத்து ஒரே சீரான ஆட்சி அமைப்பு இயங்கி வந்தது.

4. மொழியும் சமயமும் : பண்டைய காலத்தில் சமஸ்கிருதமும், பிராகிருதமும், தற்காலத்தில் ஆங்கிலமும், இந்தியப் பண்பாட்டொற்றுமையை ஊக்குவிக்கத் தங்கள் பணியைச் செய்தன. இதேபோன்று பல்வேறு இனங்கட்கும் சமயப் பிரிவுகட்கும் ஊற்றுப் பெருக்காயமைந்த இந்து சமயம், ஆன்மிக வாழ்விலும் அகச் சிந்தனையிலும் ஒற்றுமையைப் பேணி வளர்த்தது.

5. தற்காலப் போக்குவரத்தும் செய்தித் தொடர்பும் : இருப்புப் பாதைகள், தொலைபேசி, தந்தி, வானொலி, வான ஊர்தி, பேருந்துகள், சாலைகள் போன்ற இன்னபிற பயண நேரத்தையும் தூரத்தையும் பெருமளவிற்குக் குறைத்துச் செய்தித் தொடர்பை எளிதாக்கி அதன் விளைவாக ஒற்றுமை உணர்வைப் பலப்படுத்தின.

6. பொது வரலாறும் நாட்டுப் பற்றும் : பொது வரலாற்று மரபுகளும், அதன் பின்னர் தோன்றிய நாடு தழுவிய நாட்டுப் பற்றும் மக்களைச் சிறப்பாக ஒன்றாக இணைத்தன.

இவ்வாறாக இந்தியப் பண்பாடும் அடிப்படை ஒற்றுமை புணர்வும் மக்களின் உள்ளத்தில் விதைக்கப்பட்டன. சமய, தத்துவ, பழக்க வழக்க, மரபு இலக்கியக் கருத்துகள், பண் பாட்டு வாழ்க்கை, இவற்றை அடிப்படை ஒற்றுமையாகக் கொண்டு இந்த நாட்டின் ஒற்றுமை உணர்வு தொடக்ககாலம் முதல் இன்றுவரை தொடர்ந்து பேணிக்காத்து வளர்க்கப்பட்டு வந்துள்ளது.

## இயல் 4

# 4.1. முந்திய வேதகால அல்லது இருக்கு வேதகாலப் பண்பாடு

### ஆரியர்கள்

ஆரியர்கள் யார் என்று திட்டவட்டமாகச் சொல்லமுடியாது. ஆகவே பல வரலாற்று ஆசிரியர்கள் இந்தச் சிக்கலுக்குள் புகவில்லை. அநேக வரலாற்று ஆசிரியர்கள், ஆரியர்கள் வெளி நாட்டவர்களென்றும் அவர்கள் வடமேற்குப் பகுதி வழியாக இந்தியாவிற்குள் நுழைந்தனர் என்றும் கூறுகிறார்கள்.

திராவிடர்கள் நீண்டகாலமாக வட இந்தியாவை ஆண்டு வந்தார்கள் என்று அநேக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இங்கே வந்த ஆரியர்கள் திராவிடர்களைத் தோற்கடித்துத் தென்னிந்தியப் பகுதிக்குத் தள்ளிவிட்டனர் என்று கூறுகிறார்கள். இந்தப் புதிய இனத்தவர்கள் தங்களை ஆரியர்கள் என்றும், தங்கள் எதிரிகளை தஸ்யூக்கள் என்றும் அழைத்தனர்.

### ஆரியர்களின் தொடக்க காலக் குடியிருப்பு

இவர்கள் தொடக்க காலத்தில் வாழ்ந்த இடத்தைப்பற்றிப் பெரிய சர்ச்சை எழுந்துள்ளது. இது தொடர்பாகப் பல்வேறு கொள்கைகள் வரலாற்று ஆசிரியர்களால் கொடுக்கப்படுகின்றன.

பேராசிரியர் மாக்ஸ்முல்லர் இவர்கள் மத்திய ஆசியாவில் இருந்தனர் என்றும், லோகமான்ய திலகர் ஆர்க்டிக் பகுதியில் இருந்தனர் என்றும், சர். ஏ. சி. தாஸ் சப்த சிந்துவில் இருந்தனர் என்றும், சுவாமி தயானந்தர் திபெத்தில் இருந்தனரென்றும், பேராசிரியர் மாக்டோனால்டு டான்யூப் நதிச் சமவெளியில் இருந்தனரென்றும் கூறுகிறார்கள்.

### இந்தியாவில் இவர்கள் வாழ்ந்த இடம்

இருக்கு வேதகால ஆரியர்கள் காபூல் பள்ளத்தாக்கிலும், பஞ்சாபிலும், சட்லஜ், யமுனை நதிகளுக்கு இடையேயுள்ள

கிழக்குப் பகுதியிலும் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. சிந்துவின் ஐந்து நதிகளைப்பற்றிய விளக்கம் பஞ்சாபைச் சுட்டிக் காட்டு கின்றது. நர்மதை நதியைப்பற்றியோ விந்திய மலைகளைப் பற்றியோ, நெல், புலி, மற்றும் வங்காளத்தில் உற்பத்தியாகும் பொருள்களைப் பற்றியோ இருக்கு வேதத்தில் சொல்லப்பட வில்லை. ஆகவே ஆரியர்கள் இக்காலத்தில் கங்கைச் சமவெளி யிலும் விந்திய மலைப்பகுதிகளிலும் வாழ்ந்ததாகக் கொள்ள முடியாது.

## வேதங்கள்

சமஸ்கிருதத்தில் வேதம் என்பது அறிவு எனப் பொருள் படும். வேதங்கள் இந்திய ஆரியரைச் சார்ந்த பழமையான இலக்கியம். மேலும் இந்திய ஐரோப்பிய மொழிகள் அனைத் திற்கும் பழமையான இலக்கிய நூல்கள். வேதங்கள் நான்கு ஆகும். அவை முறையே; 1. இருக்கு 2. சாமம் 3. யஜுர் 4. அதர்வம் எனப்படும். இவை ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுதப்படவில்லை. இவை பல்வேறு ரிஷிகளால் பல்வேறு காலங்களில் எழுதப் பட்டவை. சில அறிஞர்கள் இவை கி. மு. 1000-த்தில் தொகுக்கப் பட்டவையென்றும், வேறு சிலர் கி.மு. 2500-க்கும் 3000-த்திற்கும் இடைப்பட்ட காலத்தில் தொகுக்கப்பட்டவை என்றும் கூறுகிறார் கள். முதலில் தோன்றியது இருக்கு வேதமெனவும், கடைசியில் தோன்றியது யஜுர் வேதமெனவும் கூறுகிறார்கள்.

வேதங்களைச் சுருதி அல்லது வெளிப்பாடு என்று கூறுவர். வேதங்களோடு இணைந்துள்ள துணைநூல்கள் வேத அங்கங்கள் என்றும், அவை 'ஸ்மிருதி' என்றும் அழைக்கப்படுகின்றன.

## அரசியல் அமைப்பு

இருக்கு வேதகாலத்தில் ஆரியர்கள், குலமரபு குழுக்களாக வாழ்ந்தனர். அவர்களை ஜனங்கள் என்றழைத்தனர். ஒவ்வொரு ஜனத்திற்கும் ஓர் அரசன் உண்டு. அவனைப் பொதுவாக இராஜன் என்றழைத்தனர். அரசுரிமை பெரும்பாலும் பாரம்பரிய வழியாக வந்துகொண்டிருந்தது. தேவை ஏற்படும் பொழுது மக்கள் ஒரு சிறந்த அரசனை, அரசு அல்லது பிரபுக்கள் குடும்பத்திலிருந்து பொறுக்கியெடுத்தனர். அரசின் ஆட்சி அமைப்பு மக்களால் உருவாக்கப்பட்ட ஒன்று. அது சில கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டிருந்தது.

குடும்பம் அல்லது குலம் என்பது ஓர் அரசின் சிறு தொகுதி. அதன் தலைவன் குலவன் என்றழைக்கப்பட்டான். பல குடும்

பங்கள் சேர்ந்தது ஒரு கிராமம். அதன் தலைவன் கிராமணி என அழைக்கப்பட்டான். பல கிராமங்கள் சேர்ந்தது ஒரு 'விஷ' என்றும் பல விஷக்கள் சேர்ந்தது ஒரு ஜனம் என்றும் அழைக்கப் பட்டன. ஜனத்தின் தலைவன் பாதுகாவலன் என அழைக்கப் பட்டான். இருக்கு வேத காலத்தில் ஐந்து முக்கிய ஜனங்கள் 'பஞ்சஜனம்' என அழைக்கப்பட்டனர்.

அரசர்கள் சரியாக இயங்காவிடின் அவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு வேறு சிலரைப் பொறுக்கியெடுக்கும் வாய்ப்பு மக்களுக்கிருந்தமையால் அரசனுடைய சக்திகள் வீணடிக்கப் பட்டால் அவைகளைத் தடைப்படுத்தும் ஆற்றல் மக்கட்கு இருந்தது.

புரோகிதன் அரசவையில் முக்கிய இடத்தைப் பெற்றுப் பெரும் சக்தி படைத்தவனாகவும், அரசனுக்கு முக்கிய ஆலோசக னாகவும், ஆன்மிகக் குருவாகவும் விளங்கினான். அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அரசனுக்குப் பல்வேறு துறை களில் அறிவுரை கூறிவந்தனர்.

அரசன் முழு அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. அதிகா ரங்கள் சபா, சமிதி என்பவைகளிடம் படிந்திருந்தன.

சபா அல்லது ஆட்சிமுறைப் பேரவை : சபாவின் கூட்டங்கள் சட்டமன்ற அறையில் கூட்டப்பட்டன. அது அரசியல், அரசியலல்லாத செயல்களை நடைமுறைப்படுத்தி வந்தன. அவை முதியோர்கள் அல்லது பிரபுக்களின் அவையாக விளங்கின.

சமிதி சட்டமன்றம் : பொதுவாக, மக்களின் பெரிய மன்றத்தினை சமிதி என்றழைத்தனர். அதில் கலந்து கொள்வது அரசனின் கடமை. 'அரசனைப் பொறுக்கியெடுப்பது அதன் முக்கியப் பணிகளில் ஒன்று' எனப் பேராசிரியர் ஜெய்ஸ்வால் கூறுகிறார்.

சமயத் தடைகள் : அரசன், சமய முறைப்படி நடக்கக் கட்டுப் பட்டிருந்தான். இந்நிலை அவனது ஆட்சியுரிமையைக் கட்டுப் படுத்தியது. இவ்வாறாக அரசன் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தான். இருப்பினும் அவன் அனைத்துரிமைகளையும் பெற்றவனாக இல்லை. இதன் விளைவாக அவன் மக்களின் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் உழைக்கும் நிலைக்குக் கட்டாயப்படுத்தப்பட்டான்.

**நீதி :** நீதி வழங்குவதைப் பொறுத்தமட்டில் அரசனே உயர்ந்தோனாகக் கருதப்பட்டான். புலனாய்வுத் துறை சிறப்பாகச் செயல்பட்டமையால், குற்றங்கள் சிலவே இருந்தன. மரண தண்டனை கடுங்குற்றங்கட்கு விதிக்கப்பட்டது. சிறு குற்றங் கட்குச் சிறைத் தண்டனையும், தண்டவரியும் (அபராதம்) விதிக்கப்பட்டன.

**சமூக வாழ்க்கை**

இருக்கு வேதகாலச் சமூக வாழ்வின் அடித்தளமே குடும்பம். குடும்பத்தின் மூத்தோனே தலைவனாக விளங்கினான். அவனை 'கிருஹ்யபதி' என்றழைத்தனர். அவனுக்குக் குடும்பத்திலுள்ள அனைவரின் மேலும் முழுக் கட்டுப்பாடு உண்டு. தவறு செய்யும் பொழுது தண்டிக்கவும் உரிமையுண்டு. இருப்பினும் குடும்பத்தி லுள்ளோர் உறவு முறை இனிமையாக இருந்தது. எல்லாச் சமய சடங்குகளையும் குடும்பத் தலைவனே செய்ய வேண்டியது கடமை யாக அமைந்தது. மனைவிக்குச் சிறப்பான இடமுண்டு. அவளில் லாமல் எந்தச் சமய சடங்கும் செய்ய முடியாது. எல்லோரும் ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழ்ந்துவந்தனர். விருந்தோம்பும் பண்பு அவர்களிடம் இருந்தது. குடும்ப வாழ்வில் எளிமையும் மகிழ்ச்சியும் நிறைந்திருந்தன. பொதுவாக ஒரு துணைமணம் நிலவி வந்தது. ஆனால் அரச குடும்பத்தைச் சார்ந்தோர் ஒரு மனைவிக்கு மேல் மணமுடித்துக் கொண்டனர்.

பர்தா முறை இல்லை. மகளிர்க்கு உயர் கல்வி அளிக்கப் பட்டது. திருமணம் தூய்மையானதாகவும் பிரிக்க முடியாத ஒன்றெனவும் கருதப்பட்டது. குழந்தையில்லா விதவைகள் மறு மணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். குழந்தைப் பருவ மணம் இருந்ததாகத் தெரியவில்லை. மகளிர் சமுதாயத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர். திருமண வயதை அடைந்த பின்னரே இருபாலாருக்கும் திருமணம் நடந்தது. சதி அல்லது உடன்கட்டை ஏறும் மரபு அன்றில்லை. திருமணம் செய்துகொள்வது இன்றியமையாததாகக் கருதப்பட்டது. மகளின் மணத்தை அவளது இசைவினைப் பெற்றுத் தந்தை முடித்து வைத்தார். அக் கால மகளிர் அறிவும் பண்பாடுமுடையோராக விளங்கினர்.

**கல்வி :** மாணவர்களின் உடல், உயிர் இவற்றின் வளர்ச்சிக் காக ஆசிரமங்களில் கல்வி புகட்டப்பட்டது. கல்வி வாய்மொழி யாக அமைந்தது. கல்வியின் குறிக்கோள் பேரறிவு அல்லது வீடு பேற்றை அடைவதாக இருந்தது.

**உணவும் உடையும் :** ஆரியர்களின் நிலையான உணவு பால், கோதுமை, பார்லி, பழங்கள், காய்கறிகள் ஆகும். அவர்கள் எருது, ஆடு, செம்மறியாடு இவைகளின் இறைச்சியையும் உண்டனர். சோம, சூர என்ற சாறுகளையும் அருந்தினர். யக்ஞங்களில் சோமச் சாற்றைப் பயன்படுத்தினர். இவ்விரு சுவை நீரும் போதை தருபவை.

ஆரியர்கள் உடையினை வஸ அல்லது வாசனா அல்லது வஸ்திரம் என அழைத்தனர். அதில் மூன்று பகுதிகள் இருந்தன. கீழாடையை 'நிவி' என்றும் மேலாடையை 'ஆதிவாஸ' என்றும் குறிப்பிட்டனர். பொதுவாகத் தலைப்பாகை அணிந்தனர். சில சமயங்களில் அழகிய பூ வேலைப்பாடும் தங்க வேலைப்பாடும் அமைந்த ஆடைகளை அணிந்தனர். இரு பாலாரும் அணிகலன் களில் நாட்டமுடையோராயிருந்தனர். எண்ணெயிட்டுத் தலை வாரிக்கொள்ளல் இயல்பாக இருந்துவந்தது.

**விளையாட்டும் பொழுதுபோக்கும் :** அக்கால ஆரியர்கட்கு மகிழ்வுடனிருக்க ஓய்வு கிட்டியது. அவர்கள் களியாட்டங்களில் வேட்கையுடையோராய் இருந்தனர். அவர்களுக்குக் குதிரைச் சவாரி, நடனம், இசை, இரத ஓட்டம், சூதாட்டம் இவற்றில் நாட்டமிருந்தது.

**சாதிமுறை :** பெரும்பாலான அறிஞர்கள் இருக்கு வேத காலத்தில் சாதிமுறை நிலவவில்லையென்க் கூறுகின்றனர். இதையே டாக்டர் வி. எ. ஸ்மித்தும் ஏற்றுக் கொள்ளுகிறார். ஆனால் இருக்கு வேதத்திலுள்ள புருஷ ஸூக்தம் நான்கு சாதி களைக் குறிப்பிடுகின்றது. இதைக் குறிப்பிடும் மந்திரம், 'பிரம் மாவின் தலையினின்று பிராமணர்களும், தோள்களினின்று க்ஷத்திரியர்களும், தொடைகளினின்று வைசியர்களும், பாதங் களினின்று சூத்திரர்களும் தோன்றினர்' எனக் கூறுகிறது. ஆனால் இம்மந்திரம் சாதி பாரம்பரியமாக வருவதில்லை; தொழிற்பிரிவின் அடிப்படையில் அமைந்ததெனச் சொல்லுகிறது. பெரும்பாலும் கலப்பு மணத்திற்கோ, தொழிலை மாற்றிக் கொள் வதற்கோ தடையில்லை. இத் தொடர்பில் 'நான் கவிஞன், என் தந்தை மருத்துவர், என் தாய் தானியம் அரைப்பவள்' என்ற கூற்றினை இங்குக் குறிப்பிடுவது சிறப்புடையது.

**பொருளாதார நிலை**

**வேளாண்மை :** ஆரியர்களில் பெரும் பகுதியினர் கிராமங் களிலேயே வாழ்ந்தனர், அவர்களின் முக்கியத் தொழில்

வேளாண்மை. பயிரிடுவதற்குரிய நிலங்களை உர்வரம் அல்லது க்ஷேத்திரம் என அழைத்தனர். பார்லி, கோதுமை, நெல், பருத்தி, எண்ணெய் வித்துகள் போன்றவற்றைப் பயிரிட்டனர். நீர்ப்பாசனத்திற்குரிய நீர் கிணறுகள், கால்வாய்கள், ஏரிகள் இவற்றினின்று பெறப்பெற்றது. ஆனால் மக்கள் பெரும்பாலும் மழையையே நம்பியிருந்தனர். இரு எருதுகளை நுகத்தடியில் இணைத்து நிலத்தை உழுது பயிரிட்டனர்.

விலங்குகளை வீட்டிற்குரியனவாக்குதல்: பசுவைப் புனிதமான தாக ஆரியர்கள் கருதினர். விலங்குகளை வீட்டிற்குரியனவாகப் பயிற்றுவது அவர்களது மற்றொரு முக்கியத் தொழில். மிக்க மதிப்புடன் கருதப்பட்ட ஆவினத்தை நிறையப் பெற்றிருப்பதைப் பொறுத்து, அவர்களின் செல்வமும் செழிப்பும் கணக்கிடப்பட்டன. எருதுகள், குதிரைகள், ஆடுகள், செம்மறியாடுகள், கழுதைகள், நாய்கள் முதலியன வீட்டு விலங்குகள் ஆகும்.

தொழிலும் வாணிபமும் : வேளாண்மையைத் தவிர, ஆரியர் கள் பிற தொழில்களிலும் வாணிபத்திலும் ஈடுபட்டிருந்தனர். பண்டமாற்று முறை இருந்தது. இது பசுவினை அளவுகோலாக வைத்துச் செயல்பட்டது. பொதுவாகப் பொருள்களின் மதிப்பு, பசுவை வைத்தே அளவிடப்பட்டது. சில அறிஞர்கள் கூற்றுப்படி அந்நாளில் நிஷ்கா என்ற நாணயம் புழக்கத்தில் இருந்தது. பெரும்பாலும் வாணிபம் நிலத்தின் வழியே நடந்தது. ஆனால் அவர்கள் கடல் வாணிபம் அறியாமலில்லை. அவர்கள் கப்பல் களையும் படகுகளையும் போக்குவரத்திற்குப் பயன்படுத்தினர். அக்காலத்தில் பொற்கொல்லர், தச்சர், கருமார், நெசவாளர் ஆகியோர் இருந்தனர்.

**சமயம்**

அவர்களது சமயம் எளிமையானது. இயற்கை வழிபாட்டை யொட்டியே சமயம் அமைந்திருந்தது. வானம், சூரியன், இந்திரன், வாயு, வருணன், பிருதிவி போன்ற எண்ணற்ற தெய்வங்களை வழிபட்டனர். அக்கால ஆரியர்கள் தெய் வங்களை 1. விண்ணுலகத் தெய்வங்கள், 2. வளிமண்டலத் தெய் வங்கள், 3. நிலவுலகத் தெய்வங்கள் என மூவகையாகப் பிரித்தனர். பல்வேறு தெய்வங்களும் பரம்பொருளின் பல்வேறு பண்புகளை எடுத்துக்காட்டுபவைகளாகக் கருதப்பட்டன. 'இருக்கு வேத காலத்திய சமயத்தின் அடிப்படைக் கொள்கை ஒரு கடவுட் கோட்பாடே' என டாக்டர் ஆர். கே. முகர்ஜி குறிப்பிடுகிறார்.

ஆரியர்கள் தெய்வங்களை மகிழ்விக்க வேள்விகள் செய்தனர். எளிய மக்கள் பால், நெய், தானியங்கள் போன்றவற்றை வேள்விக்குப் பயன்படுத்தினர். அரசர்கள் அஸ்வமேதம் போன்ற பெரிய வேள்விகளைச் செய்தனர். மனிதப்போக்கினைத் தெய்வங்களில் கண்டு, அவற்றை மனித வடிவில் வணங்கினர். ஆனால் அவைகட்காக ஆலயங்களைக் கட்டியதாகவோ, படிமங்களை அமைத்ததாகவோ தெரியவில்லை. அவர்கள் உருவ வழிபட்டை வெறுத்ததாக அறிகிறோம். அவர்கள் வாழ்வில் நம்பிக்கை உடையோராய் இருந்தமையால், துன்பியல் பகுதிகள் அவர்களின் சமயத்தில் வற்புறுத்தப்படவில்லை. திறந்த வெளியில் குடும்பத்தினர் அனைவரும் கலந்து துதிப்பாடல்கள் பாடினர்.

## 4.2. பிந்திய வேதகாலப் பண்பாடு

**தொடக்கம்**

எக்காலத்தில் சாம, யஜுர், அதர்வ வேதங்களும், பிராஹ்மணங்களும், ஆரண்யகங்களும், உபநிடதங்களும் உருவாக்கப் பட்டனவோ, அக்காலத்தையே பிந்திய காலமெனக் கூறுகிறோம். இக்காலத்தில் வடநாட்டிலும், இந்தியாவின் நடுப்பகுதியிலும் மற்றும் தென்னிந்தியாவின் சில பகுதிகளிலும் ஆரியர்களின் அரசாதிக்கம் பரவியிருந்தது.

**பிந்திய வேதகால இலக்கியம்**

இக்காலமே இலக்கியத்தின் பொற்காலமெனக் கருதப் படுகின்றது. இருக்கு, யஜுர், சாம, அதர்வ என்னும் நான்கு வேதங்களில் நான்கு பகுதிகள் அடங்கியுள்ளன. அவை முறையே சம்ஹிதைகள், பிராஹ்மணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள் எனப் பிரிக்கப்பட்டன.

**சம்ஹிதைகள்:** யஜுர், சாம, அதர்வ வேத சம்ஹிதைகள் இக்காலத்தைச் சேர்ந்தவை. இவைகள் அறிவுக் கருவூலமாக விளங்கின. இவற்றின் துணைகொண்டு இக்கால மக்களின் பொருளாதார, அரசியல், சமூக, சமய வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ள முடிகின்றது. சம்ஹிதைகள் என்பன துதிப் பாடல்கள், வழிபாட்டு முறைகள், வேள்விச் சூத்திரங்கள் அடங்கி யுள்ள தொகுப்புகளாகும். அவைகள் வேள்விகள் செய்யும் பொழுது பயன்படுத்தப்பட்டன. ஆனால் அதர்வ வேத சம்ஹிதை மட்டும் பில்லி, சூன்யம், பிசாசு, மந்திரக் காட்சி இவைபற்றிக் கூறுகின்றது.

**பிராஹ்மணங்கள் :** இவைகள் வேதங்களிலுள்ள துதிப்பாடல்களுக்குரிய உரைநடை நூல்கள். இவைகளில் சமயச் சடங்குகள், வேள்விகள் பற்றிய விளக்கங்களும் அவைகளைச் செய்யும் முறைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஆரண்யகங்கள்:** இவை பிராஹ்மணங்கட்குப் பின்வருபவை. இவைகளை அமைதியாகக் காட்டிலே சென்று கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டியிருப்பதால் ஆரண்யகங்கள் என்றனர். வேள்விகளைச் செய்ய இயலாத வயது முதிர்ந்தோரும், துறவிகளும் ஓய்வுபெற்றுக் காடுகளுக்குச் சென்ற பின்னர், கற்பதற்காக உருவாக்கப்பட்டவை. இங்கு யக்ஞம் அதாவது, வேள்வியைவிட தியானம் மிக வலியுறுத்தப்படுகின்றது. இவை அநுபூதிநெறி, தத்துவக் கருத்துகள் அடங்கிய பேழை. இவை ஆரியர்கள் ஆன்மிகத் துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகின்றன.

**உபநிடதங்கள் :** சில பொறுக்கியெடுக்கப்பட்ட அறிவாற்றல் மிக்க மாணவர்களை அருகில் அமரவைத்து மறைவாகக் கற்பிக்கப்படவேண்டிய கருத்துகளை உபநிடதங்கள் எனக் கூறுகிறோம். ஆரியர்களின் சமய, ஆன்மச் சிந்தனைகளின் தொகுப்பு. வேதங்களின் சாரம் உபநிடதங்கள். இறைவன், ஆன்மா, கர்மவினைக் கோட்பாடு, வீடுபேறு போன்ற கோட்பாடுகளைப்பற்றி இவை ஆராய்கின்றன. வரலாற்று அடிப்படையிலும் இவை சிறப்பு வாய்ந்தவை. ஏனெனில், அக்காலச் சமுதாய, சமய, ஆன்மிக வாழ்வினைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. உலகக் கட்டுகளினின்று விடுபட்டு வீடுபேறு அடைய உயர்ந்த ஞானம் தேவை என்பதை எடுத்தியம்புகின்றன. ஒன்று பரம்பொருள்; அஃது ஒன்றே உண்மையெனப் பகருகின்றன.

**வேத அங்கங்கள் :** இவை ஆறு. முறையே: (1) சிக்ஷை அல்லது ஒலியியல் (2) கல்பம் அல்லது சடங்கியல் (சமய ஒழுக்கம்) (3) வியாகரணம் அல்லது இலக்கணம் (4) நிருக்தம் அல்லது சொல்லாக்க விளக்கம் (5) ஜோதிஷம் அல்லது வான நூல் (6) சந்தம் (சந்தஸ்) அல்லது சீர் என்பன. வேதங்களோடு இணைந்துள்ள துணை நூல்கள் வேத அங்கங்கள் என்றும் ஸ்மிருதிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**ஸ்மிருதிகள் :** இவை உயர்ந்த உள்ளங்களின் சிந்தனைத் தொகுப்புகள். சூத்திரங்கள், தருமசாத்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்பவை ஸ்மிருதிகளாகும்.

**சுருதிகள்:** நினைவாற்றல் வழியாக வரும் அறிவுக் கருவூலம் சூத்திரங்கள். சூத்திரம் என்பதற்கு நூல் என்று பொருள். சிறு சொற்றொடர்களால் நூலைப்போல் செல்லும் இலக்கியத்தைச் சுருதி என்ற சொல் சுட்டிக்காட்டும். இவை வேதங்களின் ஒரு பகுதியல்ல. ஆனால் அவற்றோடு நெருங்கிய உறவுடையவை. இவற்றுள் அடக்கம் பாணினியின் இலக்கணம், ஸிரௌத்த சூத்திரங்கள், கிருஹ்ய சூத்திரங்கள், தரும சூத்திரங்கள், சில்ப சூத்திரங்கள் போன்றவையாகும்.

**தரும சாத்திரங்கள்:** இவை சட்டம், சமுதாய நடைமுறைகளைப்பற்றிக் கூறுகின்றன. சாதிக் கடமைகளையும், பல்வேறு நிறுவனங்களையும் விளக்குகின்றன. அவை குற்றங்கட்குரிய தண்டனை, மகவேற்பு, மரபுரிமையாகச் சொத்தைப் பெறும் சட்டம் இவைபற்றியும் கூறுகின்றன.

### அரசியல் நிலை

முடியாட்சியே வேதகால இறுதியில் நிலையான ஆட்சி முறையாக அமைந்தது. அரசுரிமை பரம்பரையான ஒன்றாயிற்று. முடியரசே பெரும்பாலும் இருந்துவந்தபோதிலும், சில இடங்களில் குடியரசுகளையும் காணமுடிந்தது. அரசர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையும் இருந்ததாகச் சில அறிஞர்கள் கூறுகிறார்கள். அரசர்களின் அதிகாரம் அதிகரித்தபோதிலும், அவர்கள் முழு ஆற்றல் பெற்றவர்களாகத் திகழமுடியவில்லை. அவர்களுக்குச் சில தடைகள் இருந்தன.

**ஆரியர்கள் நாட்டின் நடுப்பகுதியில் குடியேற்றம் (கி. மு. 800).** ஐந்து ஆற்று நிலப்பகுதியை விட்டுச் சில ஆரியர்கள் வங்காளம் வரையுள்ள சமவெளிப் பகுதியில் குடியேறினர். குருக்ஷேத்திரம் அவர்களின் செயல்படு நகர மையமாக விளங்கிற்று. இந்த நடுப்பகுதி பஞ்சாபைக் காட்டிலும் முக்கியம் வாய்ந்ததாக மாறியது. இதை ஆரியவர்த்தம் அல்லது புனித பூமி என்றழைத்தனர்.

**பேரரசு ஆட்சிமுறை:** இக்காலத்தில் பேரரசுகள், சிற்றரசுகளின் செயற்பாடுகளைக் குறைத்துவிட்டன. ஏக்ராட், சாம்ராட், சக்ரவர்த்தி, விராட், ஆதிராஜன், இராஜாதி ராஜன், சார்வ பௌமன், என்ற சொற்கள் பேரரசு ஆட்சிமுறை இக்காலத்தில் நிலவியதைச் சுட்டிக்காட்டுகின்றன. வாஜபேயம், இராஜசூயம், அஸ்வ மேதம் போன்ற சமய—அரசியல் வேள்விகள் இவ்வாட்சி முறையை உறுதிப்படுத்துகின்றன.

**சபாவும் சமிதியும்:** சபாவும் சமிதியும் பிரஜாபதியின் இரு புதல்விகள் என அதர்வவேதம் விளக்குகிறது. இருக்கு வேத காலத்துடன் இவைகளின் இயல்பினை ஒப்பிடும்பொழுது இவற்றின் சிறப்புக் குறைந்து வந்தது. சபாவின் கூட்டங்கள் அரசியல் விவாதங்களைக் காட்டிலும் நீதித் துறைப் பணிகளை நடத்திவந்தன. உபநிடத காலத்தில்தான் சமிதிபற்றிய குறிப்புகள் வருகின்றன. சமிதியில் நடைபெற்ற விவாதங்கட்கு அரசன் தலைமை தாங்கியதாகக் குறிப்புகள் உள.

**அமைச்சர்களும் அலுவலர்களும்:** இக்காலத்தில் அமைச்சர்கள், அலுவலர்களின் எண்ணிக்கை பெருகிற்று. அவர்கள் முறையே (1) **பிராமணர்** (புரோகிதர்) (2) **சம்ஹிரஹிட்டிரி** (கருவூலத்தார்) (Treasurer) (3) **பஹதுஹன்** (வரி வசூலிப்போன்) (4) **சுதன்** (தேரோட்டி அல்லது கவிஞன் அல்லது அரச கட்டியர்) (5) **க்ஷத்திரி** (அரண்மனை அக வினைஞர்) (6) **சேனாணி** (படைத் தலைவன்) (7) **கிராமணி** (கிராமத் தலைவன்) (8) **சடபதி** (நூறு கிராமங்களை ஆள்வோன்) (9) **சச்சிவன்** (அமைச்சர்) என்போர் சிலர்.

**நீதி முறை:** இதில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அரசர்கள் நீதி நிருவாகத்தில் மிகுந்த பங்கெடுத்துக் கொண்டனர். ஒரு பிராமணரைக் கொலை செய்வது கடுமையான குற்றமாகக் கருதப்பட்டது. அரசத் துரோகம் மிகக் கடுமையான குற்றமெனக் கருதப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. சில சிறப்பு வழக்குகளைச் சபாவின் துணைகொண்டு அரசன் முடிவு செய்தான். நீதி நிருவாகத்தில் பிராமணர்கட்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டது.

**அரசின் வருமானம் :** இருக்கு வேத காலத்தில் மக்களிடம் வரி வசூலிப்பது ஒழுங்காக நடைபெறவில்லை. இப்பொழுது அது முறைப்படுத்தப்பட்டது. வரிவசூலிப்பதற்காக பஹதுஹன் என்ற அலுவலர் நியமிக்கப்பட்டார். அதர்வ வேதப்படி வருமானத்தில் ஆறில் ஒரு பங்கு விலங்குகளாகவோ தானியமாகவோ வசூலிக்கப்பட்டது.

## சமுதாய நிலை

**சாதி முறை:** இக்காலத்தில் சாதிப் பாகுபாட்டு முறை கட்டுறுதியானது. நான்கு சாதிக் கோட்பாடு நடைமுறையில் வந்தது. பிராமணர்கள் கற்பது, சமயச் சடங்குகளைச் செய்வது,

வெகுமதிகளைப் பெற்றுக் கொள்வது, சமுதாயத்திற்கு வழி காட்டுவது போன்ற பணிகளைச் செய்து வந்தனர். க்ஷத்திரியர்கள் வீரர்களாக, ஆள்வோராக, நாட்டைக் காப்போராக விளங்கினர். வைசியர்கள் வாணிபத்திலும், பொருளியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். சூத்திரர்கள் எல்லோருக்கும் கீழோராகக் கருதப்பட்டனர். முதல் மூன்று உயர்ந்த இனத்தவர்கட்குப் பணிபுரிதல், நிலத்தை உழுது பயிரிடுதல் இவர்களுடைய பணிகள். சூத்திரர்கள் நிலை வருந்தத்தக்கதாக இருந்தது.

ஆசிரம முறை: வாழ்வை நான்கு நிலைகளாக அல்லது ஆசிரமங்களாகப்பிரித்தனர். அவை (1) பிரம்மசரியம், தன்னடக்க நிலை அல்லது மாணவ நிலை எனக் கூறப்பட்டது. (2) கிரஹஸ்தம் அல்லது இல்லறநிலை எனப்படுவது. (3) வனப்பிரஸ்தம் இந்நிலையில் குடும்ப வாழ்வினின்று ஓய்வு பெற்றுக் காட்டிற்குச் சென்று தியானத்திலும் அகநோக்கிலும் காலத்தைச் செலவிட்டனர். (4) சந்நியாசத்தில் (கடைசி நிலை) துறவு நிலையை மேற்கொண்டு ஆன்மிக வாழ்வில் நாட்டம் செலுத்தினர். இச்சீரிய மரபினை ஒவ்வோர் இல்லறத்தானும் பின்பற்றும் நிலையை இக்காலம் உருவாக்கியது.

குடும்ப வாழ்வும் திருமணமும் : குடும்ப வாழ்வில் அங்குமிங்கும் சில கசப்புகள் தோன்றிய போதிலும் பொதுவாகக் குடும்ப வாழ்வு இனிய உறவில் எழுந்த ஒன்றாகவே திகழ்ந்தது. கலப்பு மணங்கள் நிகழ்ந்ததற்குச் சான்றுகள் உள. ஆனால் இவை வரவேற்கப்படவில்லை. பன்மனை மணமுறை இருந்தது. வரதட்சணை முறையும் தொடங்கலாயிற்று. பங்காளிக்குள்ளும் ஒரே இனத்தவருள்ளும் மணவினை தடைப்படுத்தப்பட்டது. இக்காலத்தில் குழந்தை மணமும் சதியும் இருந்ததாகக் குறிப்புகள் உள.

மகளிர் நிலை : மகளிர் உயர்கல்வி பெற்றுச் சீரிய அறிவுடன் திகழ்ந்தனர். கார்கி, மைத்ரேயி போன்ற பெண்பால் தத்துவ ஞானிகளை இக்காலத்தில் காணமுடிகின்றது.

இருப்பினும் மகளிர் நிலை சிறப்பாக இல்லை. கணவன் அல்லது தந்தையின் உடைமைகளைப் பெற அவளுக்கு உரிமையில்லை. பெண் மகவின் பிறப்பு பெரும் வேதனை நிறைந்ததாகவும் ஆண் மகவின் பிறப்பு அளவில்லா மகிழ்ச்சியளிப்ப

தாகவும் கருதப்பட்டன. சபாவில் கலந்து கொள்ளவோ, அரசியலில் பங்கு கொள்ளவோ பெண்கள் அனுமதிக்கப்பட வில்லை. சமய சடங்குகளில் மகளிர் கலந்து கொண்டனர். கற்பு நிலை சிறப்பாகவே இருந்தது.

**உடை, உண்டி, கேளிக்கைகள்:** இக்காலத்தில் உடையிலும் உண்டியிலும் பெரும் மாற்றங்கள் நிகழவில்லை. வீடு கட்டும் முறையில் சில மாற்றங்களைக் காண்கின்றோம். இறைச்சி உண்பது போற்றப்படவில்லை. உண்டி வகைகள் பெருகின. சோமச்சாறு சிறந்த சுவை நீராகக் கருதப்பட்டது. விலங்குகளின் தோலால் ஆன ஆடைகளை அணிந்தனர். தலைப்பாகை அணிவதை விடவில்லை.

குதிரைப் பந்தயம், தேரோட்டும் பந்தயம் இருந்துவந்தன. வாய்ப் பாட்டு, கருவி இசை, நடனம், சூதாட்டம் போன்றவை முக்கியக் கேளிக்கைகள் ஆகும்.

## பொருளாதார நிலை

**வேளாண்மை :** இது மக்களின் முக்கியத் தொழிலாகத் தொடர்ந்து இருந்துவந்தது. வேளாண்மைக்குரிய கருவிகளில் சீரமைப்பு ஏற்பட்டு ஒரு நுகத்தடியில் இருபத்து நான்கு எருது களைப் பூட்டினர். நிலத்தின் பெரும்பகுதி வேளாண்மைக் குரியதாக மாற்றப்பட்டது. செழிப்பான சமவெளிப் பகுதிகளில் இருமுறை பயிரிட்டனர். நிலத்தை உழுதல், வித்திடல், தானிய அறுவடை போன்ற வேலைகளை ஆரியர்களும் அறிந்திருந்தனர். அவர்கள் கோதுமை, பார்லி, நெல் போன்றவற்றை முக்கிய மாகப் பயிரிட்டு வந்தனர். அளவற்ற நிலங்களைப் பெற்றிருந்த நிலப் பிரபுக்களைப் பற்றிய நிலையை இங்குக் காண்கின்றோம்.

**கால்நடை வளர்ப்பு:** பசு, மதிப்பீட்டின் அலகாக இருந் தமையால் மக்கள் இதனை அதிகம் பெற விழைந்தனர். அரசன் பசு, காளைகள், குதிரைகள் அதிகம் பெற இறைவனைத் துதி பாடி, வேண்டியதாக அதர்வவேதம் கூறுகிறது. யானையையும் வீட்டு விலங்காக்க முயற்சித்ததையும் அதர்வவேதம் சுட்டு கின்றது.

**வாணிபமும் தொழிலும் :** தொழில் துறையில் சொல்ல வொண்ணா முன்னேற்றம் ஏற்பட்டது. இக்காலத்தில் தச்சர், மீன் பிடிப்போர், உழவர், வீட்டு வேலையாள்கள், கழனியில்

பணிபுரிவோர், சமையல்காரர், கூடைமுடைவோர், கயிறு செய்வோர், தேர் செய்வோர், பதனிடுவோர், ஆடை செய்வோர், சலவைத் தொழிலாளிகள், நெசவாளிகள், வாணிபம் செய்வோர், சாயமிடுவோர், பொற்கொல்லர், கருமார் போன்ற பல்வேறு தொழில்கள் செய்வோரைக் காணுகின்றோம். பருத்தித் தொழில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. அழகிய பூ வேலைப் பாடமைந்த ஆடைகளை மக்கள் அணிந்தனர். வெள்ளியினால் பல்வகை அணிகலன்களைச் செய்து மக்கள் அணிந்து அதன் பயனைப் பெருக்கினர். பல்வகை உலோகங்களையும் பயன்படுத்தி அணிகலன்களைச் செய்தனர். தங்கம், செம்பு, இரும்பு, தகரம் போன்ற உலோகங்களின் பயனை அவர்கள் அறிந்திருந்தனர்.

வாணிபத்தில் ஈடுபட்டோர் இடம் விட்டு இடம் சென்று தொழில் செய்து வந்தனர். பண்டமாற்று முறையில் வாணிபம் நடைபெற்றது. நிஷ்கா என்ற நாணயமும் புழக்கத்தில் இருந்ததை அறிகிறோம்.

**கல்வி முறை :**

கல்வியின் குறிக்கோள் ஆன்மா, இறைவன் போன்றவற்றைப் பற்றிய சீரிய அறிவைப் பெறுவதே எனக் கருதப்பட்டது. பிரம்மன் அல்லது பரம்பொருள் பற்றிய அறிவைப் பெறுதலே கல்வியின் நோக்கமாகும். இதைப் பெற வேட்கைகளை விட்டு உலகைத் துறக்க வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

அதர்வ வேதத்தின் மூலம் கல்வி, உபநயனம் என்ற சடங்கிற்குப் பின் தொடங்குவதாக அறிகிறோம். இது குழந்தையின் வாழ்வையே மாற்றி அமைக்கின்றது. இதன் பின்பு பிரம்மசரிய முறையை மேற்கொண்டு ஆசிரியரைத் தெய்வத் திற்குச் சமமெனக் கருதி மாணவர்கள் குருகுலத்திற்கு அல்லது ஆசிரியர் இல்லத்திற்குச் சென்று பன்னிரண்டு ஆண்டு கல்வி பயின்றனர். ஆசிரியரோடு மாணவர்கள் உறைந்து வந்தனர். பல்வேறு இல்லங்கள் சென்று உணவையும் பொருள்களையும் இரந்து வந்து ஆசிரியர்கட்கு அளித்தனர். ஆசிரியர்களின் கால்நடைகளைப் பராமரித்தனர். அவருடைய வேள்விகள் நடை பெற உதவினர்.

இக்காலத்தில் கல்வியில் பெரும் முன்னேற்றத்தைக் காண் கின்றோம். பேச்சுப் போட்டிகளும், ஒரு பொருளை ஒட்டி-வெட்டிப் பேசும் முறைகளும் இருந்தன. வெற்றி பெற்றோருக்கு அரசன் பரிசுகள் வழங்கினான்.

யக்ஞம் என்ற வேள்விமுறை பெரும் மாற்றத்திற்குள்ளாகியது. இது பெரிய அளவில் செய்யப்பட்டதுடன் சிக்கலானதாகவும் அமைந்தது. தொடக்க காலத்தில் தெய்வங்களை மகிழ்விக்க இவைகள் செய்யப்பட்டன. ஆனால் இக்காலத்தில் வேள்விகள் தன் வேட்கைகளைப் பெறச் செய்யப்பட்டன. இராஜசூயம், அஸ்வமேதம் என்ற வேள்விகள் செய்யும் காலம் நீடிக்கப்பட்டது. வேள்விகள் மிகுந்த செலவினை உள்ளடக்கியனவாக இருந்தன.

தெய்வ நிலை : தெய்வங்களின் நிலைமையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இருக்கு வேதகால உருத்திரனை சிவனாக, பசுபதியாக, மகாதேவனாக வழிபட்டார்கள். பிரஜாபதியுடன் விஷ்ணுவையும் தொழுதனர். பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்தி வழிபாடு பக்தி இயக்கம் தோன்ற வழிகோலியது. பல கடவுட் கோட்பாடு ஒரு கடவுட் கோட்பாடாகி இறுதியில் ஒரு பொருள் கோட்பாடாக மாறிவரத் தலைப்பட்டது.

தவம் : தவம் செய்வது சிறப்பாகக் கருதப்பட்டது. இது மனத்தையும் ஆன்மாவையும் தூய்மைப்படுத்தப் பின்பற்றப் பட்டது. தவத்தினால் பேரறிவையும் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட நிலையையும் அடைய இயலுமெனக் கருதப் பட்டது.

தத்துவம் : சடங்கியலுடன் தத்துவக் கல்வியும் பெருகிற்று. ஆன்மா, இறைவன், நரகம், மறுபிறவி, கர்மவினை, சொர்க்கம், உலகம், வீடுபேறு இவைபற்றிய விளக்கங்கள் தத்துவத்தில் தரப்பட்டன. இக்காலத்தில் அரசர்களும் ஆட்சியாளர்களும் தத்துவத்தின்பால் சிறப்பான நாட்டத்தைச் செலுத்தினர். அவை முன்னேற அவர்கள் தம் பங்கை வழங்கினர்.

ஆன்மாவும் பிரம்மமும் : அழியாத ஆன்மாவை உயிரின் அடிப்படைக்கூறாக உபநிடதம் கண்டது. இது தெள்ளத் தெளிவாக ஆராயப்பட்டது. ஆகவே உபநிடதங்கள் சடங்கியலை, யக்ஞங்களை அறவே வெறுத்தன. வாழ்வின் முக்கியக் குறிக்கோளே பிரம்மத்தை அறிவது. உபநிடத மகாவாக்கியமான தத்வமஸி, 'நீ தான் அது' என்ற கருத்தினை வெளிப்படுத்துகிறது. மற்றொரு மகாவாக்கியம் அகம் பிரம்மாஸ்மி என்பது. 'நான் பிரம்மம்' என்பது இதன் கருத்து. இதை உணரும்

நிலைக்குத் தடையாக இருப்பவை உலக வேட்கைகளும் ஆணவமும் எனக் கருதப்பட்டன.

**வினை, வீடுபேறு, மறுபிறவி :** வினைக்கேற்ப வாழ்வு அமையும் என்னும் கருத்து இங்கே வலியுறுத்தப்படுகிறது. பலன் கருதாது பணிபுரிதல் சிறந்த ஒன்றாகக் கருதப்பட்டது. நல்வினை, தீவினை என்ற இருவகை வினைகளினின்று ஆன்மா விடுபடும்பொழுது அது வீடுபேறு அடைவதாகக் கூறப்பட்டுள்ளது. அந்நிலை அடையாதவரையில் மறுபிறவி உண்டெனக் கொள்ளப்படுகின்றது.

இவ்வாறாக இக்காலத்தில் தத்துவ சமயச் சிந்தனைத் துறைகளில் பெரும் புரட்சியினைக் காண்கின்றோம். இங்கே உருவான சமய தத்துவக் கோட்பாடுகள் பின்னால் வருகின்ற காலங்களில் உருவாகும் கோட்பாடுகளுக்கு அடிப்படையாய் அமைகின்றன.

## 4.3. காப்பியக் காலப் பண்பாடு

### தொடக்கம்

ஆரியர்களின் மிகச் சிறந்த இரு காப்பியங்கள் இராமாயணமும் மகாபாரதமும் ஆகும். இவை சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட காப்பியங்கள். இராமாயணத்தை வால்மீகியும், மகாபாரதத்தை வேத வியாசரும் எழுதினர். இந்த இரு காவியங்கள் உருவாக்கப்பட்ட காலத்தைக் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள. சமய மரபுப்படி இரு காப்பியங்களும் கி. மு. 3000-ஐயொட்டித் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். கி. மு. 500-க்கும் 200-க்கும் இடைப்பட்ட காலத்தில் இவ்விரு வீரகாவியங்களும் தோன்றியிருக்கக்கூடும் என்பது மேக்டனால்டு என்பவரின் கருத்து. இராமாயணம் தென்னிந்தியாவில் ஆரியர் ஊடுருவிய வரலாற்றைக் கூறுகிறது. மகாபாரதம் ஆரியர்கட்கிடையே நிலவிய பூசல்களை விளக்குகின்றது. இரு காப்பியங்களும் தம் காலத்திற்கு முன்பு இந்தியாவில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார, சமய நிலைகளைப்பற்றிய குறிப்புகளைக் கொடுக்கின்றன.

### இராமாயணக் கதை

இக்கதை ஆரிய இனத்தைச் சேர்ந்த இராமனுக்கும் அவ்வினத்தைச் சேராத இராவணனுக்கும் இடையே நிகழ்ந்த

போராட்டத்தை மையக் கருத்தாகக் கொண்டுள்ளது. இது சமஸ்கிருத மொழியில் 24000 ஈரடிச் செய்யுள்களால் இயற்றப் பட்டுள்ளது.

அயோத்தி என்ற நாட்டைத் தசரதன் ஆண்டுவந்தான். அவனுக்குக் கௌசலை, சுமித்திரை, கைகேயி என்ற மூன்று மனைவியர் இருந்தனர். இவர்கள் மூலமாக அவனுக்கு நான்கு மைந்தர்கள் உண்டு. இராமன் என்ற மூத்த மைந்தன் கௌசலைக்கும், இலக்குவன், சத்துருக்கனன் சுமித்திரைக்கும், பரதன் கைகேயிக்கும் தோன்றினர். இராமன் மிதிலைக்குச் சென்று வில்லையொடித்துச் சீதையை மணம்புரிந்தான். தசரதன் முதுமை அடைந்தவுடன், தன் மூத்தமைந்தன் இராமனை இளவரசனாக நியமிக்க எண்ணினான். இதை விரும்பாத இராமனின் சிற்றன்னை கைகேயி, தசரதனிடம் தன் மைந்தன் பரதன் நாட்டை ஆளவேண்டுமெனவும், இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வாழவேண்டுமெனவும் வரம் வேண்டினாள். பெற்றோர் சொல்லைத் தட்டாத இராமன் அரியணையைத் துறந்து காட்டிற்குச் சென்றான். பரதன், இராமனை ஆட்சியில் அமருமாறு வேண்டினான். ஆனால் இராமன் வேண்டுகோளை ஏற்கவில்லை. இராமனின் பிரதிநிதியாகப் பரதன் ஆட்சி புரிந்து வந்தான்.

இராமனுடன் சீதையும் தம்பி இலக்குவனும் காட்டிற்குச் சென்றனர். காட்டில் சீதை தனித்திருந்தபொழுது இலங்கை வேந்தன் இராவணன் வந்து அவளைக் கடத்திச் சென்று விட்டான். சீதையை மீட்பதற்காக இராமனுக்கும் இராவண னுக்கும் போர் நிகழ்ந்தது. இறுதியில் இராவணன் தோற் கடிக்கப்பட்டுக் கொலையுண்டான். பதினான்கு ஆண்டு காட்டு வாழ்க்கையை முடித்துக்கொண்டு இராமன் நாடு திரும்பி ஆட்சியைத் தொடங்கினான்.

**மகாபாரதக் கதை**

இம்மாகாவியம் ஓர் இலட்சம் ஈரடிச் செய்யுள்களால் யாக்கப் பட்டு 18 பிரிவுகளாகவுள்ளது.

கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலுள்ள நிலப்பரப்பான அஸ்தினாபுரத்தைச் சந்தனு என்ற அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு பீஷ்மன், விசித்திர வீரியன் என இரு மைந்தர்கள் உண்டு. பீஷ்மன் வாழ்வு முழுமையும் பிரம்மசாரியாக இருந்தான். இதனால் விசித்திர வீரியன் அரசனானான். அவனுக்குப்

பாண்டு, திருதராஷ்டிரன் என்ற இரு மைந்தர்கள் தோன்றினர். திருதராஷ்டிரன் பிறவிக் குருடனாக இருந்தமையால், பாண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். பாண்டுவுக்குத் தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற ஐந்து மைந்தர்கள் உண்டு. அவர்களைப் பஞ்சபாண்டவர் என அழைத்தனர். இவர்கள் சிறுவர்களாக இருக்கும்பொழுதே பாண்டு இயற்கை எய்தினான். திருதராஷ்டிரனுக்கு நூறு மைந்தர்கள் உண்டு. அவர்கள் கௌரவர்கள் என அழைக்கப் பட்டனர். இவர்களில் மூத்த இருவர் துரியோதனனும் துச்சாதனனும் ஆவர்.

பாண்டு இறந்துவிடவே, திருதராஷ்டிரன் மன்னனானான்; நலம்விளையும் நல்லாட்சி நடத்தி வந்தான். கௌரவர்களில் மூத்தவனான துரியோதனன், பாண்டவரின் புகழைக் கண்டு பொறாமையுற்றான். அவர்கட்கு எதிராகச் சூழ்ச்சிசெய்து, பாண்டவர்களை நாட்டிலிருந்து துரத்திவிட்டான். சூதாட்டத்தில் பாண்டவர்கள் தோல்வியுற்றமையால் அவர்கள் பதின்மூன்று ஆண்டுகள் காடு செல்ல நேரிட்டது. தருமன், ஆட்டத்தில் தங்கள் மனைவி திரௌபதியை வைத்து ஆடித் தோற்றான். அரசவையில் அவள் ஆடை உரியப்பட்டுக் கேவலப்படுத்தப் பட்டாள். இதையும் பாண்டவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. பாண்டவர்கள், பேரரசில் தங்களுக்குரிய பங்கினைக் கொடுத்திட கௌரவர்களை வேண்டினர். அவர்கள் அதற்கு இசையவில்லை. இதன் விளைவாக இரு சாராருக்கும் குருக்ஷேத்திரம் என்ற இடத்தில் மகாபாரதப் போர் நிகழ்ந்தது. தன் சுற்றத்தாருடன் அருச்சுனன் போரிட மறுத்தபொழுது கிருஷ்ணன் வாழ்க்கையின் தத்துவத்தை எடுத்துரைத்தான். இத்தத்துவ சிந்தனைப் பாடல்களின் தொகுப்பே பகவத் கீதை என்ற சிறந்த நூலாகும். அதன் பின்னர் 18 நாள்கள் போர் நிகழ்ந்தது. கௌரவர்கள் கூண்டோடு அழிந்தனர். பாண்டவரில் மூத்தவனான தருமன் பின்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றான்.

### அரசியலமைப்பு முறைகள்

இக்கால அரசியலமைப்பு வேதகால அமைப்பினின்று மாறு பட்டிருந்தது. பாஞ்சாலம், கோசலம், விதேகம், மகதம், காசி போன்ற பெரிய முடியரசுகள் இருந்தன. இருவகையான குடியரசுகள் இருந்தன. கணம் எனப்படும் தனிக் குடியரசும் சம்கத கணம் எனப்படும் நேசக்குழுக் குடியரசுமே அவை.

அரசன் : பெரும்பாலும் பாரம்பரிய வழியில் முடியாட்சிகள் அமைந்தன. இருப்பினும் சில குடியரசுகளும் நிலவிவந்தன. குடியரசுகளை நிருவகிக்கும் பொறுப்புக்கூட அரசு குடும்பத்தைச் சேர்ந்தோரின் கைகளில் கிடந்தது. அரசன் தன்னிச்சையாகச் செயல்படவில்லை. அவன் நீதிக்கோட்பாடுகட்கும் ஒழுக்க வியலுக்கும் கட்டுப்பட்டு நாட்டை ஆட்சி புரியவேண்டும். நிலவி வரும் சமய வழக்கங்கட்கேற்பச் செயல்படவேண்டியது அரசனின் கடமை. தருமம் வழுவாது ஆட்சி புரியவேண்டியது அரசனின் இன்றியமையாத ஒன்றாக அமைந்தது. அரசனுடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு அமைச்சரவைக்கும் சபாவிற்கும் இருந்தது. தொடர்புள்ள நட்பு நாடுகளைக் கலந்து போர், அமைதி குறித்து முடிவெடுக்கும் உரிமை அரசனுக்கு இருந்தது.

அந்நிய நாட்டை ஆக்கிரமித்துப் பேரரசை நிறுவுவது மன்னர்களின் நோக்கமாயிருந்தது. சிற்றரசர்களைப் பணிய வைத்து சாம்ராட் என்னும் விருதைப்பெற்றார். மன்னரது மேலாண்மை, அதிகாரம், பெருமை இவைகளை வெளிப்படுத்த திக்விஜயங்களும், அஸ்வமேத வேள்விகளும் மேற்கொள்ளப் பட்டன. அடங்கிக் கிடந்த சிற்றரசர்கள் பேரரசர்கட்குப் போர்க் காலங்களில் படைகளை அளித்து உதவினர். மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு நாட்டை நன் முறையில் ஆள வேண்டியது மன்னனின் பொறுப்பு. அவன் பண்பால் உயர்ந்தவனாகவும் தூய்மையான வாழ்வு நடத்துவோனாகவும் இருக்க வேண்டும். இராமன் ஓர் இலட்சிய மன்னனாக விளங்கினான். சீதையை மக்கள் தவறாக எண்ணியபோது, தான் அவளைக் குற்றமற்றவள் என அறிந்தும் தன் அன்புத் துணைவியை நாடு கடத்தவும் தயாரானான்.

தருமனும் இராமனும் சாம்ராட், சக்கரவர்த்தி, சார்வபௌமன் என்போரைவிடத் தகுதியில் உயர்ந்தோரெனக் கூறிக் கொண்டனர். மன்னர்களின் நோக்கம் எதிரிகளைக் கொன்று குவிப்பதன்று. தருமன் சிற்றரசுகளை அழிக்க விழையவில்லை. ஆனால், தனது வல்லமை சார்ந்த முடியாட்சியை அவைகள் ஏற்றுக்கொள்ளக் கட்டாயப்படுத்தினான். அதேபோன்று இராமன் வாலியைக் கொன்றபின் சுக்ரீவனை அரசனாக நியமித்தான். இராவணனைக் கொன்றபின் விபீடணனை இலங்கையின் மன்னனாக்கினான்.

மரபுப்படி மூத்த மைந்தன் முடிசூட்டப் பெறுதல் வேண்டும். முதுமை அடைந்த மன்னன் மூத்த மைந்தனை அரசனாக்கி

விடுவதும் உண்டு. சபாவும் சமிதியும் செயலற்றுவிட்டன. மாடமாளிகைகளில் மன்னர்கள் ஆடம்பரத்துடன் வாழ்ந்து வந்தார்கள். அரண்மனையைச் சுற்றிலும் பெருஞ் சுவர்களும் அகழிகளும் அமைக்கப்பட்டிருந்தன.

அரசன், மந்திரி பரிஷத் என்ற அமைச்சர் குழுவைக் கலந்து நாட்டை ஆண்டு வந்தான். அவன், பிரபுக்களையும் தன்னடியில் பணிபுரிந்த அலுவலர்களையும் கலந்து ஆட்சி புரிந்து வந்தான். பல்வேறு துறைத் தலைவர்கள் இருந்து வந்தனர்.

நால்வகைச் சாதியைச் சார்ந்தவர்கட்கும் அமைச்சரவையில் உறுப்பினர் பதவி அளிக்கப்பட்டிருந்தது. புரோகிதர் மிகவும் கற்றறிந்தவராக இருந்தனர். அவர்கள் மன்னருக்கு அறிவுரை பகருபவர் என்ற முறையில் சமுதாயத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர்.

நிருவாகத்தில் மிகச் சிறிய பிரிவான கிராமம் தன்னாட்சி பெற்றிருந்தது. அதன் தலைவர் கிராமணி. கிராமங்கள் பத்து, இருபது, நூறு, ஆயிரம் என இணைக்கப்பட்டு அவைகளுக்கும் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். வரி வசூலிப்பது, குற்றவாளி களைக் கண்டுபிடிப்பது போன்றவை அவர்கள் பணிகளாகும்.

**இராணுவம்:** இதில் காலாட்படை, தேர்ப்படை, குதிரைப் படை, யானைப்படை எனப்படும் நால்வகைப் படைகளும் அடங்கியிருந்தன. வில், நச்சு தடவிய அம்பு, வாள், கோடரி, கவண் முதலியவை அவர்களுடைய ஆயுதங்களாகும். க்ஷத்திரி யர்கள் இராணுவத்தில் முதல் இடம் பெற்றனர். போர்க்களம் சென்று போரிட்டு வீரமரணம் எய்துவது பெருமையாகக் கருதப் பட்டது. போரில் பிடிபட்டோர் அடிமையாக்கப்பட்டனர். போர்க்களத்தில் புல்லைத் தின்பது பகைவர்கட்குப் பணிந் தமைக்கு அடையாளமாகக் கொள்ளப்பட்டது.

### சமுதாய நிலை

**சாதிப் பாகுபாடு:** காப்பிய காலத்தில் சாதிப் பாகுபாடு கட்டுறுதி மிக்கதாக அமைந்தது. முந்தைய நிலை போன்று நான்கு சாதிகள் நிலவியதோடு, பிராமணர்களை அனைவரும் ஒரு மனத்துடன் மிக உயர்ந்தோராகக் கருதி மரியாதை அளித்தனர். அவரவர் சாதிக்குரிய கடமைகளினின்று நழுவக் கூடாதென்ற நடைமுறை வந்தது. ஆனால் சில விதிவிலக்குகளும் இருந்தன.

துரோணர் என்ற பிராமணர், க்ஷத்திரியரின் பணிகளையும் விஸ்வாமித்திரர் என்ற க்ஷத்திரியர் பிராமணரின் கடமைகளையும் செய்ததை இவ்விரு காப்பியங்களும் காட்டுகின்றன.

**ஆசிரம நிலை :** வாழ்வை நான்கு கூறுகளாக்கினர். முதல் 25 ஆண்டுகளை பிரம்மசரிய நிலையென்றும், 25-லிருந்து 50 வரை உள்ள நிலையை இல்லற நிலையென்றும், 50-லிருந்து 75 வரையுள்ள நிலையைத் துறவு நிலைக்குத் தன்னை ஆயத்த மாக்கிக் கொள்ளும் காலமென்றும், இறுதியாகவுள்ள 25 ஆண்டுகள் துறவறம் பூண்டு ஆன்ம மேம்பாட்டில் ஈடுபட வேண்டிய காலமென்றும் பிரித்தனர்.

**மகளிர் நிலையும் திருமணமும் :** பெண்களின் நிலையில் சரிவு ஏற்பட்டது. பன்மனை மணம், பல கணவருடைமை இரண்டும் நடைமுறையில் இருந்தன. உயர் சாதியைச் சார்ந் தோர் கீழ்ச்சாதியில் மணம் செய்துகொள்ள அனுமதி உண்டு. ஆனால் கீழ்ச்சாதியைச் சார்ந்தோர் உயர் சாதியில் திருமணம் செய்யத் தடை விதிக்கப்பட்டது. அரச குடும்பங்களில் பெண்கள் தகுதி வாய்ந்த கணவனைத் தேர்ந்தெடுக்க சுயம்வரம் நடை பெற்றது. சுயம்வரம் என்பது பெண், தனக்குரிய வரனைத் (மணமகனை) தானே தேர்ந்தெடுப்பதெனப் பொருள்படும். (இதற்கு எடுத்துக்காட்டாக இருப்பவை சீதை இராமனையும், திரௌபதி அருச்சுனனையும் சுயம்வரத்தில் தேர்ந்தெடுத்துக் கணவர்களாகக் கொண்ட நிகழ்ச்சிகளாகும்.) எட்டு வகையான திருமணங்கள் நிலவி வந்தன. சதி வழக்கில் இருந்தது. பரத்தையரும் இருந்து வந்தனர். விதவைகள் மறுமணம் செய்து கொண்டமைக்குச் சான்றுகள் இல்லை. உயர்குடிப் பெண்கள் கல்வி கற்க, இசை, நடனம் ஆகிய கலைகளில் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டனர். மனைவியர் தங்கள் கணவர்களுடன் சமுதாயச் சடங்குகளில் கலந்து கொண்டனர்.

**கல்விமுறை :** இக்காலத்தில் மிகச் சிறந்த கல்விமுறை நிலவி வந்தது. கல்வி இலவசமாக அளிக்கப்பட்டது. ஆசிரியர்கள் ஒழுங்காக ஊதியம் பெறவில்லை. ஆனால் நன்கொடைகள் பெற்று வந்தனர். மாணவனின் உடல் வளர்ச்சியோடு அவனது மன வளர்ச்சியிலும் குண நலத்திலும் அக்கறை செலுத்தப்பட்டது. சமஸ்கிருத மொழியை மக்கள் பேசி வந்தனர். பிராகிருத மொழியும் நிலவி வந்தது. இளவரசர்களும் க்ஷத்திரியர்களும் போர்க்கலையில் பயிற்சி பெற்றனர். தத்துவம், வானநூல், கணிதம், இலக்கணம், அளவையியல் முதலிய பாடங்கள்

கற்பிக்கப்பட்டன. இசையும் நடனமும் இளம்பெண்களுக்குக் கற்பிக்கப்பட்டன. கிராமங்களிலும் நகரங்களிலும் பள்ளிகள் இருந்ததோடு, தொலைவிலுள்ள காடுகளில் மூன்று நான்கு ஆசிரியர்கள் சேர்ந்து சமயம், தத்துவம் போன்றவற்றைப் புகட்டினர்.

**கிராம வாழ்க்கை :** மக்கள் பெரும்பாலும் கிராமங்களில் வாழ்ந்தனர். அவற்றைச் சுற்றிக் கோட்டைகள் கட்டப் பட்டிருந்தன. போர்க் காலங்களில் மக்கள் கோட்டைக்குள் சென்று தங்கினர். கிராம மக்களுக்கு அரசன் நீதி வழங்கினான். கிராமங்கள் அரசனுக்கு வரிகளை ஒழுங்காகச் செலுத்தும் வரை சுதந்திரமாக இருந்தன.

**உண்டியும் கேளிக்கைகளும் :** காலப்போக்கில் மக்கள் சைவ உணவாளர்களாக மாறினர். இறைச்சியை மக்கள் உண்ட போதிலும் அதை வெறுக்கும் இயல்பு மக்களிடம் தோன்றியது. சுரா எனும் போதை தரும் பானம் நிலவிவந்தது. அதை அருந்துவது கண்டிக்கப்பட்டது; நல்லதன்று எனவும் கருதப் பட்டது. மக்கள் விருந்துகளிலும் விழாக்களிலும் மகிழ்வெய்தினர். சமுதாயத் தீயொழுக்கமான சூதாட்டம் உயர்குடி மக்களிடையே நிலவி வந்தது. நடனம், இசை, விலங்கு வேட்டை, மற்போர் போன்றவை அவர்களுடைய பிற பொழுதுபோக்குகளாகும்.

## பொருளாதார நிலை

**வேளாண்மை :** இக்காலத்திலும் தொடர்ந்து வேளாண்மை முக்கியத் தொழிலாக இருந்து வந்தது. மகாபாரதம், கோசலம், வத்ஸம், மத்ஸாய போன்ற நாடுகள் செழிப்பாக இருந்தன. நீர் பாய்ச்சி உரமிட்டு நிலங்களை மிக வளமுள்ளனவாக்கினர். உழவர்கள் விளைச்சலில் $\frac{1}{10}$-லிருந்து $\frac{1}{6}$ வரையுள்ள பகுதியை வரியாக அரசனுக்குச் செலுத்தினர்.

**கால்நடைப் பெருக்கம்:** கால்நடையைப் பேணி வளர்ப்பதும் வேளாண்மைக்கு அடுத்த சிறப்புத் தொழிலாக இருந்தது. குதிரைகளும் யானைகளும் படைக்கு மிகவும் தேவைப்பட்டன. பசு அனைவரும் விரும்பிய வீட்டு விலங்கு.

**வாணிபமும் தொழிலும் :** வாணிபமும் தொழிலும் காப்பிய காலத்தில் வளம் பெற்றிருந்தன. வணிகர் தங்களுக்குள் ஒரு கழகத்தை அமைத்துக் கொண்டனர். தச்சர், குயவர், தேரோட்டு பவர், பொற்கொல்லர், கூடை முடைவோர், உழவர், வில் அம்பு

செய்வோர் போன்ற பல தொழில்களில் ஈடுபட்டோர் இருந்தனர். உயர் ரகப் பருத்தி, கம்பளி, பட்டு ஆடைகள் உற்பத்தி செய்யப் பட்டன. உலோக வேலைகள் பெருகிச் சிறப்புற்றன. பெரும் பாலும் வணிகர் நகரிலே வாழ்ந்தனர். தொலைவிலிருந்து வணிகர் வாணிபத்தில் ஈடுபட வந்து சென்றனர். ஒட்டுமொத்தமாக நோக்கினால் மக்கள் மகிழ்ச்சியாகவும் வளமாகவும் வாழ்ந்தனர். இலச்சினை பொறிக்கப்பட்ட நாணயங்கள் பயன்படுத்தப் பட்டாலும், பண்டமாற்று முறையும் நடைமுறையில் இருந்தது.

அறிவியல் தத்துவத் துறைகளில் முன்னேற்றம் : இக் காலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அறிவியல், தத்துவத் துறைகளில் காணப்பட்டது. மருத்துவம் மிகவும் வளர்ச்சி யுற்றிருந்தது. விலங்குகளின் நோய்களை நீக்க மருந்துகள் தயாரிக்கப்பட்டன. நிலவியலும் சோதிடமும் வளர்ந்தன. கர்ம வினை, அவதாரக் கோட்பாடுகள், பக்திநெறி போன்றவைகளைத் திறனாய்வு செய்தனர்.

### சமய நிலை

இயற்கை வழிபாடு அகன்று பிரம்மன், விஷ்ணு, சிவன், விநாயகர், இலக்குமி, பார்வதி, சூரியன் போன்ற தெய்வங்களும் வணங்கப்பட்டன. விஷ்ணு அநீதியை ஒழித்து நேர்மையை நிலைநாட்டுவதற்காக அவதாரம் செய்துள்ளார் என்ற கருத்து மக்களிடையே பரவியது. முன்வினைப் பயன், மறுபிறவி போன்ற கொள்கைகளில் அவர்களுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. இவ்வுலக வாழ்வைத் துறந்து, வீடுபேறு அடைவதற்காகக் கடுந்தவம் புரிந்தோர் பலரும் உண்டு.

யக்ஞங்களை அதிக அளவில் செய்தனர். விலங்குகளை யக்ஞங்களில் இடவில்லை. தன்னடக்கம், தூய்மை, கற்பு போன்ற பண்புகள் வலியுறுத்தப்பட்டன.

### இராமாயணத்தின் மூலக்கருத்துகள்

இராமன் என்னும் காவியத் தலைவன் விஷ்ணுவின் ஓர் அவதாரமாகக் கருதப்பட்டான். எண்ணற்ற பக்தர்கள் அவனை மனிதருள் மாணிக்கமென்றும், மனித குலத்தைக் காக்கும் கடவுள் என்றும் எண்ணலாயினர். அவன் துணைவி சீதையைப் பெண்மைக்கோர் இலக்கணமாகக் கருதினர். தமிழ் மொழியில் கம்பர் இராமகாதையை அற்புதக் காவியமாகத் தீட்டினார். துளசிதாசர் இராம-சரிதமானசம் என்ற நூலை இந்தி மொழியில்

இயற்றினார். இதில் அடங்கியுள்ள நல்லுரைகள் இந்நூலை வழிபாட்டிற்குரிய நூலாகக் கருத இடமளிக்கின்றன. நற்பண்புகள், நற்செய்கைகள், நன்னெறிகள் இவற்றின் உறைவிடமாக இந்நூல் திகழ்கின்றது.

இந்நாட்டு மக்களின் பண்பாட்டு வாழ்வில் சிறப்பான இடத்தை இராமாயணம் பெறுகிறது. இதில் பங்குபெறும் முக்கிய மாந்தர்கள் ஆரியப் பண்பாட்டின் சின்னங்களாக விளங்குகின்றனர். இராமன் கீழ்ப்படிதலுள்ள நன்றியுள்ள மகனாக, சிறந்த போர் வீரனாக, அன்புக் கணவனாக, மனச்சான்றினின்று பிறழாத அரசனாகத் திகழ்ந்தான். பரதனும் இலக்குவனும் உடன்பிறந்த பாசத்தை எடுத்தியம்பும் உத்தமர்கள். இராமன், இராவணனை வெற்றிகொண்டது அநீதியின் அழிவாகவும் நீதியின் ஏற்றமாகவும் கருதப்படுகின்றது. மனித மனத்தைச் செம்மைப்படுத்த இக்காவியம் அருமருந்தாகக் கருதப்படுகின்றது.

**மகாபாரதத்தின் சிறப்பு**

இது ஒரு காப்பியம் மட்டுமன்று; சமய, ஒழுக்க, தத்துவக் கோட்பாடுகளின் உறைவிடம். உலகியல் அறிவை மக்களுக்கு வாரி வழங்கும் வள்ளற்றன்மை படைத்தது. வீரம் செறிந்த ஆடவர் பெண்டிரைச் சார்ந்த காவியம் மட்டுமன்று; தெய்விகந் தோய்ந்த மாந்தரையும் காட்டும் உயர்ந்த நூல். குடும்பத்திலே நிகழும் பல்வேறு நிகழ்ச்சிகளையும், அதில் ஏற்படும் சிக்கல்களை நீக்கும் முறைகளையும் விளக்கும் வீரகாவியம். அதிலே வரும் பகவத் கீதை மனித உள்ளங்களை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டும் உளநூலாக மட்டுமன்றி, மனித வாழ்வைச் செம்மைப்படுத்தும் உயர்ந்த அற இயல் கோட்பாடுகளையும் தத்துவங்களையும் உள்ளடக்கிய உயரிய கருவூலம்.

## 4.4. புராண காலப் பண்பாடு

**புராணகாலம்**

குப்தர்களின் காலத்திற்கு முன்பே, இந்து சமய மறுமலர்ச்சியைக் காண்கின்றோம். இம்மறுமலர்ச்சி குப்தர்களின் காலத்தில் தொடர்ச்சியாக வருவதுடன், ஏற்றமும் பெற்றிருந்தது. காப்பியங்கள், இந்து தருமத்தைப் பாமரர்கட்கு உரியதாக்கின. அப்பணியைப் புராணங்கள் இன்னும் சிறப்பாகச் செய்தன. 'புராண காலம் கி. பி. 300-லிருந்து கி. பி. 1000-க்கு உட்பட்டதென' யு. எஸ். சர்மா குறிப்பிடுகிறார். சில அறிஞர்கள், அவை உபநிட

தங்களைப் போன்று பழமையானவை எனக் குறிப்பிடுகின்றார்கள். இப்புராணங்கள், இன்று பெற்றிருக்கும் அமைப்பு நிலையை (structure), கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கும், கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பெற்றிருக்க வேண்டுமென்பது மற்றொரு கருத்தாகும். இப்புராணங்கள் எவ்வெப்போது தோன்றியவையெனத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. இவை மிகப் பழமையானவை. ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு காலவரையறையில் எழுந்ததாகவும் தெரியவருகிறது. இவற்றுள் மிகப் பழமை வாய்ந்தது எனக் கருதப்படும் 'வாயு புராணம்', கி. பி. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பெற்றிருக்கவேண்டுமெனவும் கருதுகின்றனர். வேதங்களில் புராணங்களைப்பற்றிய குறிப்புகள் உள என்பர் ஒருசாரார்.

### புராணம்—விளக்கம்

புராணம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்குப் 'பழமை' என்பது பொருள். ஆகவே இவைகளில் வரும் செய்திகள், பழங்காலத்தைச் சேர்ந்தவை எனக் கருதப்படுகின்றன. புராணம் என்ற சொல் மேலும் தொன்றுதொட்டு வழங்கிவந்த தெய்வக் கதையையும் குறிக்கின்றது. புராணம் எனின் பழைய கதை என்றும் பொருள்படும். புராணங்கள் எனப்படுபவை பண்டைய வரலாற்றுச் செய்திப் பட்டியல்கள், மரபுரைக் கோவைகள் அடங்கியவை. மேலும் சமயம், தத்துவம், யோகம், அனுபூதிநிலைகள், ஆன்மிக உய்த்துணரல் போன்ற தொடர்புடைய பொருள்களைப் பற்றிய நெடிய அல்லது குறுகிய உரையாடல்கள் நிரம்பிய அறிவுக் கருவூலம் என்றும் கூறப்படுகின்றது. இவை இதிகாச வகுப்பைச் சேர்ந்தவை.

### புராணத்திற்குரிய ஐந்து பண்புகள்

அவைகட்கு ஐந்து பண்புகள் (பஞ்ச லட்சணங்கள்) உண்டு. 1. வரலாறு, 2. அண்டப் படைப்பு இயல், 3. அடுத்துக் கீழுள்ள படைப்பு, 4. அரச குடிவழிப் பட்டியல், மற்றும் 5. மன்வந்திரர்களைப்பற்றிய செய்திகள்.

### புராணங்களின் எண்ணிக்கையும் எழுதியவரும்

இப்புராணங்களைத் தொகுத்தவர் வேதவியாசர் என ஒரு கருத்தும், எழுதியவரும் இவரே என மற்றொரு கருத்தும் நிலவி வருகின்றன. இவற்றை உலகிற்குக் கொடுத்து உதவியவர் சூத புராணிகர் எனவும் கூறுகின்றனர்.

வேதங்களில், பரம்பொருள் பல பெயர்களால் குறிக்கப் பெறுகின்றது. பிரமன், விஷ்ணு, சிவன் என மும்மூர்த்தியாக இறைவனைக் குறிப்பிடும் வழக்கம் வேதகாலத்தில் காணப் படுகின்றது. இம்மும்மூர்த்தி சிந்தனையே புராணங்களில் தொடருகிறது. புராணங்களில், அக்கினிக்கும் (agni) சூரிய னுக்கும் முதன்மை தருதலும் உண்டு. பொதுவாக வழிபடு தெய்வங்களின் முதன்மையினை மிகுத்துக்கூறும் சிந்தனைகள் புராணங்களில் மிகுதியாக உண்டு. மூர்த்தி அடிப்படையிலே புராணங்கள் பாகுபடுத்தப்படுகின்றன. பதினெட்டுப் புராணங் களில் 1. சைவம் அல்லது சிவ 2. பவிஷ்யம் 3. மார்க்கண்டேயம் 4. இலிங்கம் 5. வராகம் 6 ஸ்காந்தம் 7. மச்சம் 8. கூர்மம் 9. வாமனம் 10. பிரம்மாண்டம் என்னும் பத்தும் சிவபிரானின் பெருமையைக் கூறுவன என்றும், அவற்றை ஒட்டுமொத்தமாகச் 'சிவபுராணங்கள்' என்றும் அழைப்பர். 11. வைணவம் 12. பாக வதம் 13. நாரதீயம் 14. காருடம் என்னும் நான்கும் திருமாலின் பெருமையை விளக்குவன என்பர்; அவற்றை ஒட்டுமொத்தமாக 'விஷ்ணு புராணங்கள்' என்றும் கூறுவர். 15. பிரம்மம் 16. பதுமம் அல்லது பத்மம் என்னும் இரண்டும் பிரமனின் பெருமையை விளக்குவன என்றும் அல்லது 'பிரம புராணங்கள்' எனவும் கூறுவர். 17. ஆக்கினேயம், அக்கினியின் பெருமையை விளக் குவது என்றும் 18. பிரமை வர்த்தம் சூரியனின் பெருமையை விளக்குவது என்றும் கூறுவர்.

### தமிழ்ப் புராணங்கள்

'சிவபெருமானே, நான்கு குமாரர்களுக்கு அறிவுபுகட்ட தட்சிணாமூர்த்தி உருவில் வந்தார். அவர் சம்பந்தர், மாணிக்கவாசகர், பட்டினத்தார் இவர்களுக்கு தீக்கை (தீக்ஷை) அளிக்க மனித உருவில் தோன்றினார். அதன்மூலம் தன் அடியார்கட்கு உதவவும் துயர் துடைக்கவும் செய்தார். சிவபுராணம், பெரியபுராணம், சிவபராக்கிரமம், திருவிளை யாடற்புராணம் என்ற தமிழ்ப் புராணங்களில் சிவனின் தெய்விகத் திருவிளையாடல்கள் குறிக்கப்பட்டுள்ளன' என்று சுவாமி சிவானந்தர் கூறுகிறார்.

### உப புராணங்கள்

இவையும் பதினெட்டு. அவையாவன: 1. சனத்குமாரம் 2. நரசிம்மம் 3. பிருகந்நாரதீயம் 4. சிவரகசியம் 5. துர்வாசம் 6. கபிலம் 7. வாமனம் 8. பார்கவம் 9. வருணம் 10. கலிக்கம் 11. சம்பு 12. நந்தி 13. சூரியன் 14. பராசரம் 15. வசிஷ்டம் 16. தேவி பாகவதம் 17. கணேசம் 18. ஹம்சம்.

### இந்து புராண இலக்கியத்தின் நோக்கம்

ஒவ்வொரு சமயத்தின் ஒரு பகுதி புராண இலக்கியம். புராணம் என்பது பருப்பொருளாலான தத்துவம் (Philosophy). புராணம் என்பது ஓர் அறிவியல்; அது, உலகில் தொடக்க காலத்தில் வாழ்ந்த மக்களின் நிகழ்ச்சிகளின் அடிப்படையில் உருவான பழங்கதைகளை, புனைகதைகளை, புராணக் கதைகளை ஆராய்கின்றது. அது சீரிய கொள்கைகள் மூலமும், பாராட்டுதற்குரிய எடுத்துக்காட்டுகள் மூலமும் கற்போரைவாழ்வின் செம்பொருளை அடையத் தூண்டுகிறது. புரியாத, கடினமான கருத்துகளும், போதனைகளும், மிகச் சுவையான, உள்ளத்தை ஈர்க்கும் கதைகளின், நீதிக்கதைகளின், உபமானங்களின், நிகழ்ச்சிகளின், புனைந்துரைகளின் துணைகொண்டு புராணத்தில் விளக்கப்படுகின்றன. இதன்மூலம் ஆழ்ந்த, நுண்ணிய இந்து சமயக் கருத்துகள் சுவையான கதைகள்மூலம் மக்களின் இதயங்கட்கு இலகுவாக நேராக எடுத்துச் சொல்லப்படுகின்றன.

வேதம், 'ஸத்யம் வத; தர்மம் சர' என்று கூறுகிறது. இதன் பொருள் 'உண்மை பேசு; தருமத்தைச் செய்' என்பதாகும். இத்தகைய வேதக் கட்டளைகளைப் புராணங்கள் கற்றோரும், மற்றோரும் நன்கு அறிந்து கடைப்பிடித்து உய்யுமாறு சுவையான நீதிக்கதைகளால் விளக்குகின்றன.

புராணங்கள், சமய வாழ்விற்கு வேண்டிய பல அடிப்படையான செய்திகளைத் தருகின்றன. எல்லாப் புராணங்களிலும் சிருஷ்டி மனுவந்தரம் (மனுவின் காலம்), அரச மரபு, தலம், தீர்த்தம், விரதம், மந்திரம், யோகம், பக்தி, ஞானம், கருமம், துதி, அருச்சனைக்குரிய அஷ்டோத்திர சகஸ்ரநாமம், தருமம், சிவன், விஷ்ணு முதலியோர் அவதாரம் என்ற பல கருத்துகளைக் காணலாம். லீலை போன்ற செய்திகளும் அடங்கியுள்ளன. பொதுவாக இப்புராணங்கள், சமய ஞானமும் ஈசுவரபக்தியும் கலந்த ஒரு தெய்விக உணர்வினைப் படிப்பவர்களுக்குத் தரவல்லன. வைதிக உண்மைகளை உருவகநிலையில் மக்கள் உளம் கொள்ளுமாறு கூறுவன. சிவன், ஒரு தாய் வயிற்றில் பிறந்ததாகச் சைவர்கள் சொல்வதில்லை என்பதையும் நினைவில் கொள்ளுதல் இன்றியமையாதது.

### புராணங்களைப் பயிலுதல்

புராணங்களைப் பயிலும்போது ஒரு வரலாறு படிப்பது போன்ற உணர்ச்சியோடு படிப்பதில்லை. நிலையான உண்மை

களைக் காலம், இடம் கடந்த உண்மைகளை, கதைகள் வாயிலாகக் கற்கிறோம். சிறந்த முனிவர் ஒருவர், பிற முனிவர்கள் தன்னைச் சூழ்ந்திருக்க, அவர்களுக்குக் கூறுவதாகவே புராணங்களின் தொடக்கம் அமைந்திருக்கின்றது. இத்தொடக்கமே, புராணங்கள் பேசுவன 'நிலையான உண்மைகள்' என்பதை நன்கு உணர்த்துகின்றன.

## பெரிய புராணம்

பெரிய புராணம், உபமன்யு முனிவர் ஏனைய முனிவர்களுக்குக் கூறுவதாகத் தொடங்கப்பெறினும், அது அடியவர்கள் வரலாறே. புராணங்கள் போன்று புனிதமானது, தெய்விக நூலாகக் கொள்ளத்தக்கது என்பதை அறிவுறுத்தவே அவ்வாறு தொடங்கி இருக்கவேண்டும்.

## புராணங்களும் வேதங்களும்

மக்கள் மத்தியில் வேதச் சமயக் கருத்துகளைக் கொணரப் புராணங்கள் எழுதப்பட்டன. அவை வேதங்களின் பிழிவு. புராணங்களின் நோக்கம், மக்கள் மனத்தில் வேத போதனைகளைப் பதியச் செய்வதாகும். புராணங்கள் அறிஞர்களுக்காக எழுதப்பட்டவை அல்ல. உயர்ந்த தத்துவத்தையும் வேதத்தையும் பயில இயலாதவர்களுக்காக இயற்றப்பட்டவை.

இப்புராணக் கதைகளை இன்றும் குழந்தைகள் விரும்பிக் கேட்கின்றன. பண்டிதரும், புரோகிதரும், கோயில்களிலும் பொது இடங்களிலும் இன்றும் புராணப் பிரசங்கம் செய்கின்றனர். உழவர்களும், உழைப்பாளிகளும், படித்தோரும், பாமரரும் இவற்றை விரும்பிக் கேட்கின்றனர்.

## ஸ்ரீமத் பாகவத புராணமும் பத்து அவதாரங்களும்

விஷ்ணுவின் பத்து அவதாரங்களும், ஸ்ரீமத் பாகவத புராணத்தில் கூறப்படுகின்றன. கொடியவர்களை அழித்து, நல்லோரைக் காப்பாற்றவும், உலகத்தை அழிவினின்று தடுக்கவுமே, விஷ்ணு அவதாரம் எடுப்பதின் நோக்கமெனக் கூறப்படுகிறது. மத்ஸ்யம் (மீன்), கூர்மம் (ஆமை), வராகம் (பன்றி), நரசிம்மன் (மனித-சிங்க), வாமனம்(குள்ளன்), பரசுராமன் (இராமன் கோடரியுடன் க்ஷத்திரிய இனத்தை அழிக்க), இராமசந்திரன் அல்லது இராமன் (இராமாயண நாயகன்), ஸ்ரீ கிருஷ்ணன் (கீதா போதகர்), புத்தர் (பௌத்த சமயத்தை

திருவியவர்), கல்கி (வெள்ளைக் குதிரையில் சவாரி செய்யும் வீரன், கலியுகமுடிவில் தோன்ற இருப்பவன்) இவை விஷ்ணுவின் பத்து அவதாரங்கள்.

### ஏழு பகுதிகள் அல்லது தலங்கள்

உலகைப் புராணங்கள் ஏழுவகைப் பகுதிகளாக அல்லது தலங்களாக (planes) பிரிக்கின்றன. அவையாவன: (1) பூலோகம் (2) புவர்லோகம் (3) சுவர்லோகம் (4) மகரலோகம் (5) ஜனலோகம் (6) தபலோகம் (7) சத்தியலோகம். இவை (1) உயிரில்லாச் சடம் (matter), தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் அடங்கிய உலகம் (2) பிதிருக்களும், அதே இனத்தைச் சார்ந்தோரும் உள்ள உலகம் (3) தேவர்கள், கந்தருவர்கள், அப்சரசுகள் அடங்கிய உலகம். அதற்கு பிரகஸ்பதி ஆசிரியர், இந்திரன் ஆட்சிபுரிபவர். (4) சித்தர்களும் இருடிகளும் (rishis) தியானத்தில் இருக்கும் உலகம். இந்த நான்கு உலகங்களும் முந்தைய ஏழு உலகங்களுடன் ஒருசேர எண்ணத் தக்கவை.

### புராணங்களும் படைப்புக் கோட்பாடும்

புராணங்கள், தெய்விகம் குறைந்த தேவர்கள், கந்தருவர்கள், அப்சரசுகள், பிதுருக்கள், யக்ஷர்கள், சித்தர்கள், சாரணர்கள், வித்தியாதரர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள் இன்னும் கீழ் நிலையிலுள்ள நாகர்கள், இராட்சதர்கள், பூதங்கள், பிரேதங்கள், பிசாசுகளின் படைப்பைப்பற்றிய நுணுக்கமான செய்திகளைக் கூறுகின்றன. பாகவத புராணப்படி தாவரங்கள், விலங்குகள், மனிதர்களின் படைப்பும் தரம் குறைந்த உயிர்வாழ்வனவோடு ஒன்றாக நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது.

### புராணங்கள் உணர்த்தும் முக்கியக் கருத்துகள்

புராணங்களின் பெரும்பகுதி விஷ்ணு, சிவன், தேவி, கணேசன், ஸ்கந்தன் (கந்தன்) நிகழ்த்திய அருஞ் செயல்களைப் புகழ்ந்து கூறுகின்றன. இத்தெய்வங்கள், தங்களது இயல்பான வடிவங்களோடு அல்லது அவதாரங்கள்மூலம் அல்லது உருவத் திருமேனிகளோடு நிகழ்த்திய செயல்களைக் கூறுவன. அடுத்தபடியாக பிரமா, சூரியன், வாயு போன்ற தெய்வங்களுக்குச் சிறப்பான இடம் அளிக்கப்படுகின்றது.

மேலும் மருத்துவம், கலை, பேச்சுக்கலை, அரசியல், சடங்குகள், சாதிக்குரிய சமூகச் சட்டங்கள், வாழ்வின் பல்வேறு படிகள் (ஆசிரமங்கள்), புனிதப் பயணம், சமய நோன்புறுதி, (religious vows), சமயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள், அறக்கொடைகளின் இயல்பும் மதிப்பும், சாங்கிய, யோக, வேதாந்த தத்துவ நெறிகள் (மாறுபட்ட தன்மையில்) போன்றன வற்றைப்பற்றிப் புராணங்கள் நெடிய விளக்கங்கள் தரு கின்றன.

அறிவாலும், ஆற்றலாலும், ஒழுக்கத்தாலும் சிறந்து விளங்கிய சான்றோர்கள் பற்றிய வரலாற்றினையும் புராணங்கள் அளிக்கின்றன. இச்சான்றோர்களின் பக்தி இயல்பு, தியாக உணர்வு, நமக்கு நல்ல பாடத்தைப் புகட்டுகின்றன. மனிதப் பண்பினைப் பிரித்துக் காட்டுவதுடன், கடமைகளைப் பற்றியும் தெளிந்த கருத்துகளை வெளியிடுகின்றன. நான்கு புருஷார்த் தங்கள் (அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் உறுதிப் பொருள்கள்) அல்லது வாழ்வின் குறிக்கோள்களைப் பண்டைக் காலத்தில் சிறப்பாகக் கொண்டிருந்ததை எடுத்துக்காட்டு கின்றன.

புராணங்களில் விளக்கப்படும் தெய்வங்கள், அரசர்கள், ஞானிகள், அறவாணர்கள், மனித உள்ளங்கட்கு உயரிய நீதி களைப் புகட்டும் நிலையைப் பெற்றுள்ளனர். அவதாரக் கோட் பாடு, பல்வகை பக்தி நெறிகள் தோன்றப் பின்னர் வழி வகுத்தது. உபநிடதங்களுக்கும் வேதங்களுக்கும் பரிந்து பேசுவன புராணங்களாகும்.

பிரபஞ்சப் படைப்பினைப் பல்வேறு நிலைகளில் விரிவாகக் கூறுகின்றன. படைப்போனிடமிருந்து தோன்றிய பல்வேறு மரபுகள் பற்றிய வரலாறும் புராணங்கள் மூலம் கிடைக் கின்றன.

அநுபூதிநெறி பற்றிய குறிப்புகளும் கிடைக்கின்றன. விஷ்ணு புராணப்படி 'பரமாத்மனுக்கு' அப்பால் எதுவுமில்லை என்பதாகும்.

புராணங்களிலுள்ள உண்மைகளைப் புறக்கணித்து விட முடியாது. புராணக் கல்வியால் பல்வேறு நாடுகளைப் பற்றி அறிய முடிகிறது. நம் இயல்பை நன்முறையில் நெறிப்படுத்தி உயர்ந்த குறிக்கோளை அடைய இவை துணைபுரிகின்றன.

தீர்வு காண முடியாத நம் பிரச்சினைகட்குப் புராணங்கள் தீர்வளிக்கும்.

கரும வினையால் வரும் தொல்லைகளைத் துடைத்து அமைதி பெறுவதற்குரிய அறக் கோட்பாடுகளைப் புராணங்கள் கூறுகின்றன.

அக்கால மக்களின் பழக்கவழக்கங்கள், போர்முறைகள், பொருளாதார நிலை, மக்களின் இயல்பு, மகளிர் நிலை, முடிசூட்டு விழா போன்றவைகளையும் பற்றிப் புராணங்கள் மூலம் அறிகின்றோம். அன்றைய அரசுகள் பற்றிய செய்திகளும் நில இயல் கருத்துகளும் புராணங்கள் மூலம் அறிய வருகின்றன.

ஆகவே இவற்றினைப் புறக்கணிக்காமல், பண்பாட்டுக் கருவூலமாகக் கருதிப் படித்துப் பயன்பெறுவது நமது கடமை.

## இயல் 5

# 5.1. முத்தமிழ்

**தொடக்கம்**

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி' என்பது, பாறைகளே இருந்து அவை மண்ணாக உலகின் அமைப்பை உருவாக்கு முன்பே தமிழர் இனம் வாளொடு தோன்றியிருந்தது எனப் பொருள் படும். மனிதனின் தோற்றம் எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு பழமையானது தமிழர் பண்பாடு. உலகமே வியக்கத்தக்க உயரிய பண்பாட்டைப் பெற்றுள்ள தமிழினம் செம்மையான மொழி வளத்தைப் பெற்றிருப்பதில் வியப்பில்லை. ஆனால் தமிழ்ப் பண்பாட்டின் உச்ச நிலையைச் சங்க காலத்தில் காண்கிறோம். இதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றாக அமைகின்றன.

உலகிற்கே மொழியை முதன்முதலில் மூவகையாகப் பாகு படுத்தி, அதை ஒரே சொல்லால் முத்தமிழ் எனக் குறிப்பிட்டவன் தமிழன். இந்நிலை மிகப் பழமையானது.

**முத்தமிழ் — விளக்கம்**

சிவனுடைய திரிசூலம் போன்று தமிழ் என்னும் மொழியின் முழுமைப் பகுதியில் அடங்கிய மூன்று கூறுகளாக இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் விளங்குகின்றன. எவ்வாறு மூன்று கவைமுட்களும் ஒரு கருவியில் அமைந்து அதற்கு மிகுந்த ஆற்றலை அளிக்கின்றனவோ, அவ்வாறே மூன்று தமிழும் தமிழுக்குப் பேராற்றலையும் பெருஞ்சிறப்பையும் கொடுக்கின்றன. சங்க நூல்களில் ஒன்றாகிய பரிபாடலில் முத்தமிழைப் பற்றிய குறிப்பு வருகின்றது.

அகத்தியர் தீட்டிய தமிழ் இலக்கண நூலே மிகத் தொன்மை வாய்ந்ததெனக் கருதப்படுகின்றது. தமிழின் மூன்று கூறுகளான இயல், இசை, நாடகம் அடங்கப்பெற்ற முழுமையான நூலாகிய சிலப்பதிகாரம் எனும் காப்பியம் முத்தமிழின் உறைவிடம்

என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ஔவையாரும் விநாயகரை நோக்கி ஓரிடத்தில் 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என வேண்டு கிறார். இவை தவிர எண்ணற்ற கல்வெட்டுகளில் முத்தமிழ்க் கோட்பாடு இருந்தமைக்குச் சான்றுகள் உள.

பேசுவதற்கும் படிப்பதற்கும் இயல், கேட்பதற்கு இசை, பார்ப்பதற்கு நாடகம் என அமைத்த முறையை நினைக்கும் போதெல்லாம் நமது உள்ளம் பூரிக்கின்றது. மக்கள் படித்தும், கேட்டும், பார்த்தும் பண்புடையவர்களாக வாழவேண்டும் என்றே தமிழ்ச் சான்றோர்கள் இவ்வாறு வகுத்தனர்.

'முத்தமிழைக் கூர்ந்துநோக்கினால், அதை 1. உளவியல், 2. கல்வி, 3. மொழியியல் போன்ற கோணங்களிலிருந்து ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கலாம். உளவியல் கூற்றுப்படி மனித மனத்தில் (1) அறியும் ஆற்றலுடைய அதாவது, சிந்திக்கும் (2) உணர்ச்சி யைத் தூண்டும் அதாவது, உணர்கின்ற (3) செயல் துணிவாற்ற லுள்ள அதாவது, விருப்பாற்றலுடைய மூன்று பகுதிகள் உள. இவை மூன்றும் இயல், இசை, நாடகத் தமிழ் அடங்கியுள்ள நம் தமிழ்மொழியில் எதிரொலிக்கின்றன' எனப் பேராசிரியர் சரவண ஆறுமுக முதலியார் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

கல்வி என்ற கோணத்தினின்று பார்க்கும்பொழுது இவை மூன்றும் நம்முடைய உடலை, உள்ளத்தினை, உயிரை (ஆன்மா) வளர்த்து ஆளுமையை நன்முறையில் உருவாக்க உதவுகின்றன.

மொழியியல் விளக்கப்படி இயற்றமிழ் அகச்சிந்தனைகளையும், இசைத் தமிழ் ஆன்மாவின் இயல்பினையும், நாடகத் தமிழ் உடலின் இயல்பான அசைவுகளையும் குறிப்பிட நிற்கின்றன.

இன்றைய புரட்சிக் கவிஞன் பாரதிதாசனும் முத்தமிழின் சிறப்பைத் தன் கவிதையில் கூறுகிறான்.

## இயற்றமிழ்

மூன்று தமிழிலும் முதலில் நிற்பது இயற்றமிழ். இது ஏனைய இரண்டிற்கும், மொழிக்கும் அடிப்படையாய் அமைவது. தமிழ் மொழியின் சொற்களும் சொற்றொகுதியும் அடங்கியது. இச்சொற்கள் பல ஒலி அமைப்பால் உருவானவை.

சொற்கள் பொருளை உணர்த்துகின்றன. உள்ளத்திலும் அறிவாற்றலிலும் கிளர்ந்தெழும் சிந்தனைகளைப் பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வெளிப்படுத்தச் சொற்கள்

பயன்படுகின்றன. நமது அனைத்துச் சிந்தனைகளும் எழுத்து வடிவை எடுக்கின்றன என்பது சிவஞான முனிவர் கருத்து. தொல்காப்பியர் எல்லாச் சொற்களும் சில பொருள்களை வெளிப் படுத்துகின்றன எனக் கூறுகிறார். எழுத்து என்பது ஒலி அமைப் பில் ஒலி அணுத்திரண்மத்தின் தொகுதியாகும். பல எழுத்துகள் முறையாக அமையும்பொழுது சொற்கள் உருவாகின்றன. சொற்கள் முறையாக அமைக்கப்பட்டால் ஒரு சொற்றொடர் அமைகின்றது. அது ஒரு கருத்தினை வெளியிடுகின்றது. ஒரே பொருளுள்ள சொல்லோ, பல சொற்களோ ஒரு கருத்தினை வெளியிடமுடியும். கட்டுரைகள், சிறுகதைகள், புதினங்கள், சில நிகழ்ச்சிகள், கவிதைகள், பாடல்கள், செய்யுள்கள், நாடக இலக்கியங்கள் அனைத்தும் இதனுள் அடக்கம். எல்லாக் கலைகளும், அறிவியல் களும், தொழில்நுட்பப் பாடங்களும் தாய்மொழியில் வருதல் வேண்டும். தாய்மொழியில் பன்னெடுங் காலத்திற்கு முன்பே இந்நிலையைக் காண்கின்றோம். ஆனால் இன்றைய நிலை வேறு. பிற மொழியில் கல்வி கற்பதைப் பெருமை எனக் கருதுவதால் கடந்த 500 ஆண்டுகளில் உலகில் கலை, அறிவியல், தொழில் நுட்பத் துறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினைக் கூறத் தமிழ் மொழியில் நூல்கள் வரவில்லை. இதுபற்றியே பாரதி 'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் இறவாத தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டு'மெனக் கூறினான். உரைநடையிலும் கவிதை நடை யிலும் இவைகுறித்து எழுதப்படும் அனைத்து நூல்களும் இயற் றமிழின்கீழ் வருபவை. இயற்றமிழ் மனிதனுக்குரிய கல்வியைப் புகட்டப் பயன்படுகின்றது. மனிதனின் சிந்தனையைத் தூண்டி அறிவைப் பெருக்க இயற்றமிழ் பயன்படுகின்றது.

## இசைத் தமிழ்

மனிதன் தன் இயல்பான உணர்ச்சியுரைகளை வெளிப் படுத்த இசையை நாடுகிறான். அவன் தனது உணர்ச்சிகளை உணர்த்துவதற்குரிய பாடல்களை அமைத்து, அதற்கோர் ஒலி அமைப்பைக் கொடுத்துப் பாடுவது இசைத் தமிழ் செவிகட்கும் உள்ளத்திற்கும் இனிமையாக இசைவாக அமையக்கூடிய முறையில் ஒலியமைப்பை அமைத்து நாடோடிப் பாடல்முதல் இன்றைய புதுக் கவிதைவரை பாடினால் அது இசைத் தமிழாக அமையும். பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தக் கும்மி, தெம்மாங்கு, வரிப்பாட்டு, சிந்து, ஆனந்தக் களிப்பு போன்ற மெட்டுகளில் நாட்டுப் பாடல்களும் பல்வகைப் பாடல்களும் அமைந்தன. இவையனைத்தும் இசைத் தமிழில் அமைந்தன. இசைத் தமிழ்த் தொடர்கள் நிலைத்து நிற்க ஓர் இசை அமைப் பிலும் சந்தத்திலும் உருவாக்கப்படுகின்றன. இசைத் தமிழ் இது

பற்றியே இயற்றமிழுக்கு அடுத்தபடியாக வருகிறது. தமிழ் இசை பற்றிய தரமான பண்டைய நூல்கள் அழிந்துபோயின. இசை குறித்துச் சில சிறந்த நூல்களின் பெயர்களை மட்டுமே காண முடிகின்றது.

அடியார்க்கு நல்லார் தம்முடைய விளக்கவுரையில் இசைத் தமிழின் சீரிய மரபினைப் பேணிப் பாதுகாத்து வைத்துள்ளார். சிலப்பதிகார வரிப்பாடல், பரிபாடல், தேவாரம், திருவிசைப்பா, திருவாசகம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், திருக்குறள், திருவருட்பா, தாயுமானவர் பாடல்கள், கந்த புராணம், பெரிய புராணம், கீர்த்தனைகள், நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள், இராமலிங்க அடிகளார் கீர்த்தனைகள் போன்ற இன்னபிற இசைத் தமிழின் கீழ்வருபவை.

தமிழ் என்று தோன்றியதோ அன்றே இசையும் தோன்றியது எனலாம். 'முத்தமிழ்' என்னும் சொல்லே இதற்குச் சான்று. பண்டுதொட்டுப் பாட்டும் இசையும் கலந்ததே தமிழர் வாழ்வு. பிறந்த குழந்தையைத் தூங்க வைப்பதற்குப் பாட்டு, விளையாடு வதற்குப் பாட்டு, உழவுத் தொழிலுக்குப் பாட்டு, கப்பல் ஓட்டப் பாட்டு, போருக்குச் செல்லப் பாட்டு, காவடி எடுக்கப் பாட்டு, இறைவழிபாட்டிற்குப் பாட்டு, திருமணத்தில் பாட்டு, இறுதியாக மரணத்திலும் பாட்டு. இவ்வாறு இசையுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்தவன் தமிழன்.

சங்க காலத்தில் பாணர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள், இசை பாடுவதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருந்தனர். பிற்காலத்தில் தேவதாசிகள் என்று கூறப்பட்டவர்கள், இசை பாடுவதைத் தொழிலாகக் கொண்டு, கோவில் விழாக்களிலும் திருமண வீடுகளிலும் தமிழிலேயே பாடிவந்தனர்.

'உலக வரலாற்றிலே பல பெருமைகள் உண்டு தமிழருக்கு. தமிழிசைத் துறையிலும் அந்தப் பெருமை நமக்கு உண்டு. அங்கு யாரேனும் சென்றால் கல்வெட்டுகளைப் பற்றிக் கொஞ்சம் கேட்டுப் பார்க்கலாம். அதிலே ஒரு கல்வெட்டு, நீளமான கல்வெட்டு. அந்தக் கல்வெட்டு முழுவதும் இசை மயமாக இருக் கின்றது. இசைக்குச் சுரம் கொடுக்கப்பட்டிருக்கிறது பதினான்கு பகுதிகளாக. அத்தகைய ஒரு கல்வெட்டைப் பார்த்த அறிஞர்கள் வியப்படைகிறார்கள். அந்தக் கல்வெட்டு பல்லவர் காலத்துக் கல்வெட்டு. ஏழாம் நூற்றாண்டுக் கல்வெட்டு. உலக வரலாற்றி லேயே இதுபோன்ற ஓர் இசைச் செல்வம் எங்கும் இல்லை' என

டாக்டர் மு. வரதராசன் அவர்கள் கூறுகிறார். அதற்கு முன்னர் உள்ள இசைக் குறிப்பு, பரதன் எழுதிய நாட்டிய சாத்திரத்திலே யுள்ள இசைக் குறிப்புகள்தாம்.

சிலப்பதிகாரத்தில் வரும் குரவைக் கூத்து, உலகப் புகழ் பெற வேண்டிய பகுதி. இக்கூத்தில் ஏழு வகையான ராகங்கள் (இசை) இருக்கின்றன. அந்தக் காலத்திலேயே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழு தமிழ்ச் சுரங்கள் சொல்வார்கள்.

'எண் முறை நிறுத்த... பண்ணினும் இனியன்' என்னும் அகநானூற்று 398ஆவது பாடலின் தொடர், தமிழ் இசையின் தொன்மையை விளக்குகின்றது.

'ஒவ்வொரு திணைக்கும் தனித்தனி யாழ்க்கருவி அமைத்த முறை, பழந்தமிழர்களின் நுண்ணிய இசைப் புலமையினை விளக்குவதாகும். ஒழுக்கத்திற்கேற்ப இசை வகுத்தமுறை, பண்டைத் தமிழ்நாடு ஒன்றில்தான் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த சிறந்த முறையாகும்' என டாக்டர் மெ. சுந்தரம் கூறுகிறார்.

பழந்தமிழ் இசை நூல்களாக இன்று அறியப்பெறுபவை— பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், இசை நுணுக்கம், பஞ்சமரபு, தாள சமுத்திரம், சச்சபுட வெண்பா, இந்திரகாளியம், பதினாறு படலம், தாளவகையோத்து, இசைத் தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவை முதலாகப் பலவாம். இவற்றில் சிலவற்றின் நூற்பாக்கள், நூற்பெயருடன் கிடைக்கின்றனவேயன்றி, நூல்கள் கிடைக்காமற்போனது, தமிழர் தவக் குறைவேயாகும்.

'இன்பத் தமிழிசை எமது—அது
இன்பந் தரும்படி வாய்த்த நல் அமுது'

பாவேந்தர் பாரதிதாசன் கூற்று.

நாயன்மார்களுள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் இறைவழிபாட்டிற்கு உறுதுணையாக இசையைப் போற்றி வளர்த்தனர்.

'சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'

எனத் திருநாவுக்கரசர் பாடுவது கவனிக்கத்தக்கது.

'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று திருஞான சம்பந்தர் போற்றப்படுகிறார்.

'ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாய்' என்று சுந்தரர், இறைவனே ஏழிசையாக உள்ளான் என உணர்த்தினார்.

தமிழிசையை வளர்க்கக் காலஞ்சென்ற இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஆற்றிய அருந்தொண்டு அளவிடற்கரியது. தமிழிசைச் சங்கம், தமிழிசைக் கல்லூரி இவை களை நிறுவியும் தமிழிசைப் போட்டி, தமிழிசை ஆராய்ச்சி போன்றவற்றை நடத்தியும் அவர் தமிழிசை சிறக்க அனைத்து வழிகளிலும் முயன்றார். சுருக்கமாகச் சொன்னால் உணர்வுகளைச் செம்மைப்படுத்தவும், பக்திநெறியில் திளைத்து இறைவன் திருவடிகளை அடையவும் பெரிதும் துணைபுரிவது அவரவர் மொழியிசை. நமக்குத் தமிழிசை.

பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இசையைப் பற்றிப் பல குறிப்புகளைத் தருகின்றன. அகநானூற்று 108ஆம் செய்யுள் குறிஞ்சி நிலத்தில் குறத்தியொருத்தி குறிஞ்சிப் பண்ணைப்பாட அவ்விசையில் மயங்கிய யானை, தினையையும் உண்ணாது, அடிபெயர்ந்தும் செல்லாது நின்றது எனக் கூறுகிறது.

மருதம், செவ்வழி, பாலை, குறிஞ்சி என்பவை அடிப் படையான நிலப்பண்கள். இவற்றுள் மருதம் காலை நேரத்தில் பாடுவது. செவ்வழி முல்லை, நெய்தல் நிலங்கட்குரிய பண் ஆகும். இது மாலை நேரத்தில் பாடப்படுவதாம். நண்பகலுக்குரியது பாலைப் பண்ணாகும். நடுயாமத்திற் பாடப் படுவது குறிஞ்சிப் பண்ணாகும். இவை தவிர கைவளம் சீகா மரம் என்ற பண்களும் இருந்ததாக அறிகிறோம்.

சங்க காலத்தில் யாழ், குழல் இரண்டும் சிறப்பாக வழங்கிய இசைக் கருவிகள். இவை தவிர ஆகுளி, பதலை, பாண்டில், தடாரி, தண்ணுமை, கரடிகை முதலான பல கருவிகள் வழக்கி லிருந்தன. பொருநராற்றுப் படையும், பெரும்பாணாற்றுப் படையும் யாழின் அமைப்பினைக் கூறுகின்றன. பெரும் பாணாற்றுப் படையில் புல்லாங்குழல் செய்யும் முறை கூறப் பட்டுள்ளது. அடியார்க்கு நல்லார் புல்லாங்குழல் செய்யும் முறையையும் வாசிக்கும் முறையையும் தெளிவாக விளக்கி யுள்ளார்.

பாணர்கள் சீறியாழையும் பேரியாழையும் வாசித்தனர்.

பல்லவர் காலத்தில் இசைவெள்ளம் பெருக்கெடுத்தோடியது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் இன்னிசைக் கருவிகளுடன், அடியார்கள் புடை சூழ உள்ளமுருகும் பாடல்களைப் பாடிக் கொண்டு தலங்கள்தோறும் சென்றனர். நாயன்மார்களது பதிகங் களில் சாதாரி, குறிஞ்சி, நட்டபாடை, இந்தளம், வியாழக் குறிஞ்சி, சீகாமரம், பியந்தைக் காந்தாரம், செவ்வழி, கொல்லி முதலிய பண்கள் பயின்றுள்ளன. யாழ், குழல், வீணை, தமருகம், சச்சரி, சொக்கரி, மொந்தை, முழவம், தக்கை, துந்துபி, குடமுழா, தத்தலம், உடுக்கை, இடி முதலிய இசைக் கருவிகள் பேசப்படுகின்றன.

சோழர்காலத்து நூல்களாம் பெரியபுராணம், கம்பராமாயணம், பெருங்கதை முதலியவற்றில் இசைபற்றிய பல செய்திகள் கூறப்படுகின்றன. கோயில்களில் ஓதுவார்கள் இருந்து பக்திப் பாடல்களைப் பாடினர்.

பழமையான இசைக்கருவி குழல். இதுபற்றியே வள்ளுவர், 'குழலினிது யாழினிது என்ப' என இதனைப் பாராட்டுவார். சங்க காலத்தில் பல தோற்கருவிகள் இருந்தன. பல்வேறு முரசுகள் இருந்தன. பறை, துடி என்னும் கருவிகளைக் கொண்டோர் பறையர், துடியர் எனப்பட்டனர்.

பிற்காலத்தில் நாதசுரம், தவில், பஞ்சமுக வாத்தியம், டமாரம், உடுக்கை, பம்பை, ஜாலரா, கடம், முகர்சிங், ஜலதரங்கம், கிளாரினட், மிருதங்கம், வீணை, வயலின், கஞ்சிரா, டோலக் போன்ற இசைக் கருவிகள் தோன்றியுள்ளன.

'உணர்ச்சியை வெளிப்படுத்துகின்ற திறமையில்லையானால் இசையில்லை' என ஹட்சன் கூறுகிறார். அத்தகைய நல்ல உணர்வையெல்லாம் வளர்த்துப் பண்படுத்தக்கூடிய ஆற்றல் தமிழருக்குத் தமிழிலே உண்டு. ஆகவே தமிழிலே இசைபாடித் தமிழிசையை வளர்ப்பது நமது கடமையாகும்.

**நாடகத் தமிழ்**

முத்தமிழின் மூன்றாம் பகுதி நாடகத் தமிழ். மனிதனின் அக, புற இயல்பினை வெளிப்படுத்தத் துணைபுரிவது நாடகம். நாட்டு மக்களின் அகத்தினைப் படம்பிடித்துக் காட்டுவது நாடகம். நாட்டு மக்களின் பாராட்டிற்குரிய ஒன்று நாடகம். மக்கள் மிகவும் காணவிழைகின்ற ஒன்றும்கூட. மக்களின் அக, புற இயல்புகளை நடிப்பின் மூலம் மேடையில் வெளிப்படுத்துவது நாடகம்.

வாழ்வின நல்ல, தீய கூறுகளை எடுத்துக்காட்டி, அதனால விளையும் பலன்களையும் சித்தரிப்பது நாடகம். இது காண் போரின் உள்ளங்களில் வாழ்வின் நிலையான மதிப்பீடுகளின் இயல்பினைப் படியச் செய்கின்றது. நற்பண்புகளைக் கடைப் பிடித்து ஒழுகுவதன் சிறப்பை விளக்குவது நாடகம். வாழ்க்கைக்கு நற்கல்வி புகட்டும் உயரிய சாதனம் நாடகம்.

தமிழ் இசையைப்போல், தொன்மையான தமிழ் நாடக நூல் களும் நாடகக்கலை நுணுக்க நூல்களும் அழிந்துபோயின.

செவிக்கும், கண்ணுக்கும், கருத்துக்கும் ஒரே நேரத்தில் விருந்தளிப்பது நாடகம். 'நாடகம் கலைக்கு அரசு; நாட்டின் நாகரிகக் கண்ணாடி; பாமரர்களின் பல்கலைக்கழகம்; உணர்ச்சி யைத் தூண்டிவிட்டு, உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பை யும், அறிவையும், தூய்மையையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை' என நாடகக் கலைஞர் அவ்வை சண்முகம் கூறுவது சாலப் பொருந்தும்.

தொல்காப்பியம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டினதாகக் கருதப் படுகின்றது. இது நாடக வழக்கினையும் உலகியல் வழக்கினையும் குறிப்பிட்டுள்ளது. நச்சினார்க்கினியர் நாடகத்தைப் புனைந்துரை வகை என்பார். 'நாடக வழக்காவது, சுவைபட வருவன வெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல்' என்பார் இளம்பூரணர்.

தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் நாடகக் கலைஞர்கள் வெளிப் படுத்த வேண்டிய நகை, அழுகை, இளிவரல் (இழிவு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம், வெகுளி (சினம்), உவகை என்னும் எட்டு மெய்ப்பாடுகளையும், அவை தோன்றுதற்கு வேண்டும் நிலைக்களன்களையும் குறிப்பிட்டுள்ளது. பழங்காலத்தில் வேடந் தாங்கி நடிப்போரைப் 'பொருநர்' என்றனர்.

முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், செயன்முறை, மதிவாணனார் நாடகத்தமிழ் என்னும் நூல்களை அடியார்க்கு நல்லார், யாப்பருங்கல உரையாசிரியர், இறையனார் களவியலுரை காரர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். இந்நாடக இலக்கணங்கள் தோன்றுதற்குத் துணைபுரிந்த நாடகங்கள் இருந்திருக்க வேண்டுமன்றோ! அன்று நாடகங்கள் நடிப்பதற்கென்றே எழுதப் பட்டிருக்க வேண்டும்; படிப்பதற்கு அன்று. இக்கலையை வாழ்க்கைக் கருவியாகக்கொண்ட ஒரு பிரிவினர் இருந்தனர். நாடக நூல்கள் அவர்களிடமே இருந்தன.

அயலவர் ஆட்சியில் இக்கலையும் கலைஞர்களும் புறக்கணிக்கப்பட்டனர். நாடக இலக்கண நூல்களில் சிற்சில பகுதிகளை உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். இவற்றின் வழியே அக்கால நாடகத்தின் இயல்புகளை ஒருவாறு உணரலாம்.

நாடகம் 5 பகுதிகளைக் கொண்டது. விதை முளைப்பது போல் கதையின் போக்கினைப் புலப்படுத்துவது முதற்படியெனும் 'முகம்'. இலைவிட்டு வளர்வதுபோன்று கதை வளர்வது இரண்டாவது படியாகிய 'பயிர்முகம்'. வளர்ந்த பயிர் சூல்கொள்வதுபோலக் கதையின் கருத்து விளங்குவது மூன்றும் படியாகிய 'கருப்பம்'. விதை முற்றுவதுபோல் கதையின் கருத்து முழுமையாகத் தோன்றுவது நான்காம் படியாகிய 'விளைவு'. இறுதிநிலை அதன் பயனை நுகர்வது; இப்பகுதியினைத் 'துய்த்தல்' என்பர்.

அடியார்க்கு நல்லார் நடிகர்கள் காட்ட வேண்டிய 24 வகையான மெய்ப்பாடுகளைப்பற்றி மேற்கோள்களுடன் காட்டுகிறார். நாடகத்திற்குரிய வரிக்கூத்துகளையும் சுட்டிக் காட்டுகிறார்.

பழங்காலத்தில் நாடகம் என்னும் சொல் நாட்டியம் என்னும் பொருளிலேயே ஆளப்பட்டது என்பதனைப் பல சான்றுகளால் அறியலாம். ஆடல் மகள் நாடக மகள் என்று கூறப்பட்டாள். நாடகம் கூத்தெனவும் வழங்கப்பட்டது. கதை தழுவிய கூத்தே நாடகமெனப்பட்டது போலும்.

'ஆடற்கூத்தினோடு அவிநயந் தெரிவோர்
நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்'

என்பதில் ஆடற் கூத்தும், நாடகமும் வெவ்வேறாகக் கூறப்பட்டுள்ளன.

கூத்தும் நாடகமும், நடக்கும் களம் ஆடும்களம் எனப்பட்டது. ஆடுகளத்தின் அமைப்பும், அதில் கையாளப்பட்ட திரைவகைகளும் சிலம்பில் விளக்கப்பட்டுள்ளன.

கி. பி. 10ஆம் நூற்றாண்டில் நடிக்கப்பட்ட நாடகங்களின் பெயர்களை அறிகிறோம். தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் ஆண்டுதோறும் இராசராசவிஜயம் என்னும் நாடகமும், திருப்பாதிரிப் புலியூரிலுள்ள சிவன் கோயிலில் பூம்புலியூர் நாடகமும் நடிக்கப்பட்டுவந்தன. முதற்குலோத்துங்கன் பற்றிய குலோத்துங்க சோழ சரிதை என்னும் நாடகமிருந்ததையும் கல்வெட்டால் அறிகிறோம்.

முகமதியர் ஆட்சியில் நாடு அமைதியிழந்தது. ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பிறகே நாட்டில் அமைதியைக் காண்கிறோம். பின்பு பலவகை நாடகங்கள் தோன்றலாயின. நாயக்கர் காலத்திலேயே இசையோடு கலந்த நொண்டி நாடகம், குறவஞ்சி நாடகம், பள்ளு நாடகம் ஆகியவை தோன்றின. 18ஆம் நூற்றாண்டில் அருணாசலக் கவிராயர் இராமசரிதத்தை நாடக மாக்கினார். கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையும் குறிப்பிடத்தக்கத்து. கி. பி. 19ஆம் நூற்றாண்டில் நாடகம் நன்கு வளரத் தொடங்கியது. இவ்வளர்ச்சிக்குக் காரணம் மேல்நாட்டு நாடகங்களைக் கற்றதேயாகும். கலாவதி, ரூபாவதி, மானவிசயம் என்னும் நாடகங்களையும் நாடகவியல், என்னும் இலக்கணத்தையும் பரிதிமாற்கலைஞர் எழுதினார். மனோன்மணீயத்தைச் சுந்தரம்பிள்ளை எழுதினார். அல்லிபாதுஷா, அப்பாசு நாடகம், ஞானத்தச்சன் என்பவை பல சமயத்தவர் எழுதிய நாடகங்கள்.

19ஆம் நூற்றாண்டின் இறுதில் வாழ்ந்த 'நாடகத்தின் தந்தை' எனச் சிறப்பிக்கப்படும் பம்மல் சம்பந்த முதலியார் 90-க்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். இவருடைய நாடகங்கள் பல நாடகக் குழுவினரால் நடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில மனோகரா, லீலாவதி, வேதாள உலகம், சபாபதி என்பனவாகும். நாடக மேடை நினைவுகள், நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி ? என்னும் நூல்களையும் எழுதியுள்ளார்.

நாடக உலகின் இமயமெனப் பாராட்டப்படுபவர் தவத்திரு சங்கரதாசு சுவாமிகளாவார். நாற்பது நாடகங்கட்குமேல் எழுதிய பெருமை இவருக்குண்டு. பவளக்கொடி, சதிஅநுசூயா, வள்ளித் திருமணம், சத்தியவான் சாவித்திரி என்னும் புராண நாடகங்கள் அவர் எழுதியவற்றுள் சிறப்பு வாய்ந்தவை. ஆங்கில, வடமொழி நாடகங்களையும் மொழிபெயர்த்தார். இவரது நாடகங் களில் சங்க இலக்கிய மணம் கமழும்; பல்வகையான பாடல்கள் இடம் பெற்றிருக்கும். இவர் 1910-ல் சமரச சன்மார்க்க நாடக சபையை நிறுவினார். மாரியப்ப சுவாமி, கிட்டப்பா ஆகியோர் இதில் இருந்தனர்.

நாளடைவில் பல்வேறு நாடக சபைகள் தோன்றின. நவாபு இராச மாணிக்கம்பிள்ளை நாடக உலகில் என்றும் மறக்க முடியாதவர் ஆனார்.

முதலில் புராண நாடகங்களே தோன்றின. பின்பு சமூக நாடகங்கள், வரலாற்று நாடகங்கள் தோன்றலாயின. எம். கந்த சாமி முதலியார் 'நாடக மறுமலர்ச்சியின் தந்தையென' இன்றும்

அழைக்கப்படுபவர். அற்புதமாகக் காட்சிகளை மேடையில் அமைத்து வெற்றி கண்டவர் கன்னையா.

இருபதாம் நூற்றாண்டில் எண்ணற்ற நாடக ஆசிரியர்களை யும், நாடகக் குழுக்களையும், நாடகங்களையும் காண முடிகின்றது. கு. சா. கிருஷ்ணமூர்த்தி தீட்டிய அந்தமான் கைதி, ப. நீலகண்டனின் முள்ளில் ரோஜா, என். எஸ். கே. நாடகக் குழுவின் நாம் இருவர், பைத்தியக்காரன், நாரண துரைக் கண்ணனின் உயிரோவியம், டாக்டர் மு. வ. வின் டாக்டர் அல்லி, அரு. இராமநாதனின் இராச ராச சோழன், பேரறிஞர் அண்ணா வின் வேலைக்காரி, ஓரிரவு, சந்திரோதயம், நீதிதேவன் மயக்கம் கலைஞர் கருணாநிதியின் மந்திரி குமாரி போன்ற நாடகங்கள் மக்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பைப் பெற்றிருந்தன. வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள் போன்ற வரலாற்று நாடகங்களும் புகழ்மிக்கவை. அவ்வை டி. கே. சண்முகமும் டி. கே. பகவதியும் நாடகக் கலைக்குப் பெருமை தேடித்தந்தார்கள். ஆர். எஸ். மனோகரின் இலங்கேசுவரன், துரோணன் போன்ற நாடகங்கள் மக்களால் மிகவும் போற்றப் படுகின்றன. சகஸ்ரநாமம், என். எஸ். கிருஷ்ணன், கே. ஆர். இராமசாமி, எஸ். எஸ் இராசேந்திரன், எம். ஜி. இராமச்சந்திரன், சிவாஜி கணேசன் போன்ற திரைக்கலைஞர்களும் நாடக மன்றங்களை அமைத்து இக்கலைக்குப் பெருந் தொண்டாற்றி யுள்ளனர். இன்று சோ இராமசாமி, மௌலி, பூர்ணம் விசுவநாதன், மெரினா போன்ற பலர் புதிய நாடக உத்திகளைப் பயன்படுத்தி நாடகம் நடத்திவருகின்றனர். ஓரங்க நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், வானொலி நாடகங்கள், கவிதை நாடகங்கள் என்ற பல்வகையில் நாடகக் கலை வளர்ந்து வருகிறது.

## 5.2. தொல்காப்பியக் கால வாழ்க்கை நெறி

### தொல்காப்பியம்

தமிழில் இன்றுள்ள நூல்களில் இதுவே பழமையானது, முதன்மையானது, காலத்தால் முற்பட்டது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட அரிய நூல். நம் முன்னோர் பாதுகாப்பாக விட்டுச் சென்ற ஒரு பழந்தமிழ்ப் பெரும் செல்வம் 'தொல்காப்பியம்'.

பண்டைத் தமிழர் பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் அறிந்து கொள்வதற்குத் தொல்காப்பியமே துணைபுரிகிறது.

தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல். பல இலக்கண நூல்களுக்கு இதுவே தாய்.

**தொல்காப்பியர் :** இவர் தமிழ்நாட்டிலே தமிழ்ப் பழங் குடியிலே தோன்றிய ஒரு சிறந்த தமிழர். பழமையான காப்பியக் குடி என்னும் தமிழ்ப் பழங்குடியிலே பிறந்தவர். இதனால் தொல்காப்பியனார் என்று பெயர்பெற்றார். இவரால் இயற்றப்பட்ட அரிய தமிழ் இலக்கண நூலே தொல்காப்பியம்.

**தொல்காப்பியர் காலம்:** தொல்காப்பியர் காலத்தைக் குறித் துப் பல்வேறு கருத்துகள் நிலவி வருகின்றன. எந்த வகையில் பார்த்தாலும், தொல்காப்பியம் கி மு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும். தொல்காப்பியர் காலக் கணக்கீடுபற்றிய இக்கருத்தே பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவு.

**தொல்காப்பியம் முதல் நூலா? :** தொல்காப்பியர் தமக்கு முன் பிருந்த இலக்கண, இலக்கிய ஆசிரியர்களின் கொள்கைகளைத் தமது நூலில் தொகுத்தெழுதி இருக்கிறார் என்பதைப் பல சான்று கள் மூலம் அறிய முடிகின்றது குறிப்பாக, 'என்மனார் புலவர்'; 'என்ப வாய் மொழிப்புலவர்' என்ற பல்வேறு சொற்றொடர்கள் 'முன்னைய நூலாசிரியர்கள் இவ்வாறு கூறுவார்கள்' என்ற பொருளை உணர்த்துகின்றன. ஆகவே, தொல்காப்பியம் முதல் நூல் அன்று; வழிநூல்தான். இதற்கு முதல் நூல் அகத்தியம்.

**தொல்காப்பிய அமைப்பு:** தொல்காப்பியர், தொல்காப்பி யத்தை எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் என முப்பிரிவுகளாகப் பிரித்தார்.

எழுத்துகளைப் பற்றி எடுத்தியம்புவது எழுத்திலக்கணம். அந்த எழுத்துகளால் ஆகிய சொற்களைப் பற்றிக் கூறுவது சொல்லிலக்கணம், அந்தச் சொற்களில் அடங்கிய பொருள்களைப் பற்றிக் கூறுவது பொருளிலக்கணம்.

## தொல்காப்பியக் கால வாழ்க்கைநெறி

**மக்கள் வாழ்வும் ஒழுக்கமும்:** மக்களின் வாழ்வு அகவாழ்வு, புறவாழ்வு என இருவகையாகத் தொல்காப்பியரால் பிரித்துக் கூறப்படுகிறது. இத் தலைப்பின்கீழ்க் கூறப்படவேண்டிய செய்திகள் அனைத்தையும் பின்வரும் 'அகத்தின் மையக் கோட்

பாடு, புறத்தின் மையக் கோட்பாடு' என்ற இரு தலைப்பின் கீழ் வரும் செய்திகள் சுருக்கமாக எடுத்துக் கூறும்.

மணவாழ்க்கை

களவும் — கற்பும் : பண்டைத் தமிழர் திருமண முறை களவு, கற்பு என்று இருவகைப்படும்.

களவு மணமாவது, பெற்றோர் உற்றோர் உறவினர் அறியாமல், ஓர் ஆணும் பெண்ணும் மறைவிலே மணமக்களாக வாழ்க்கை நடத்துவது.

களவு என்பது காதலனும் காதலியும் மறைவாக மணமக்களாகி மகிழ்தல்; கற்பு என்பது எல்லோரும் அறிய வெளிப்படையாக இல்லறம் நடத்துதல்.

களவு நிகழ்ந்த பிறகுதான் கற்பு நிகழும். களவு மணம் நடக்காமல் கற்பு மணம் நடப்பதில்லை. இதனால் தமிழரின் மண வாழ்வு காதல் மண வாழ்வே எனலாம்.

திருமணச் சடங்கு: களவு மணத் தம்பதிகளிடம் பொய்யும் தவறுகளும் ஏற்பட்ட பிறகுதான் சமுதாயத் தலைவர்கள் கற்பு மணத்திலே சில சடங்குகளை ஏற்படுத்தினர். தலைவர்களால் உண்டாக்கப்பட்ட இத்தகைய சடங்குகளுடன் நடைபெறுவது தான் கற்புத் திருமணம் என்று தொல்காப்பியனார் கூறுகின்றார். திருமணத்திலேயே சில சடங்குகள் செய்யப்பட வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து. தொல்காப்பியத் தமிழர்கள் சில திருமணச் சடங்குகளைச் செய்து வந்தார்கள். அவர் காலத் திருமணமுறை ஒரு தனி முறையாகும். இன்றுள்ள சடங்கு முறையையும் புரோகித முறையையும் பண்டைத் தமிழர் கொண்டவரல்லர்.

பொருந்தா மணம் : பெருந்திணை என்பது பொருந்தாக் காதல். பிறர் கண்டு எள்ளி நகையாடும் வகையிலே ஆண் பெண்களிடம் ஏற்படும் காமவெறியே பெருந்திணை. இதைத் தொல்காப்பியர் நான்கு வகையாக வகுத்துக் கூறுகிறார். 1. ஒருவன் தன்னை விரும்பாத பெண்ணின்மேல் தாங்கமுடியாத காதல் கொண்டு மடலேறுதல் பெருந்திணை, 2. வயதேறிய ஒருத்தியை வாலிபன் கூடிவாழ்வதும், கிழவனைக் குமரி மணந்து கொள்வதும் பெருந்திணை, 3. தம்மைத்தாம் அடக்கிக் கொள்ள முடியாத காம வெறியுடன் ஆண் பெண்கள் அணைந்து வாழ்வதும் பெருந்திணை. 4. காமவெறி தலைக்கேறி ஆணைப் பெண்

பலவந்தப்படுத்துவதும், பெண்ணை ஆண் பலவந்தப்படுத்துவதும் பெருந்திணையின் கீழ் வரும்.

வடநூலார் எண்வகை மணமுறைகளைக் கூறுவர். அவற்றுள் தமிழரின் களவு மணம் வடநூலாரின் கந்தர்வ மணத்தைப் போன்றது என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

ஆண்—பெண் உரிமை : தொல்காப்பியர் காலத்திலும் பெண்ணுக்குச் சம உரிமை இல்லை. ஆண் உயர்ந்தவன், பெண் தாழ்ந்தவள், ஆளப் பிறந்தவன் ஆண்மகன், அவனுக்கு அடங்கி வாழப் பிறந்தவள் பெண்பிள்ளை என்ற கொள்கைதான் அக்காலத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தது. கற்பென்று சொல்லப்படுவது, பெண்களுக்கு உரிய தனி உடைமை என்று தொல்காப்பியர் காலத்தில் கருதப்பட்டது.

பலதாரமணம் தமிழர்களிடம் குடி கொண்டிருந்ததைத் தொல்காப்பியர் காலத்தில் காண்கின்றோம். அதற்கு முன்பும் அது இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. பல பரத்தையர்களுடன் கூடிக்களித்த நிகழ்ச்சியும் அக்காலத்தில் காண்கின்றோம்.

சாதிப் பிரிவு: தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழ்நாட்டில், தமிழ் மக்களிடையில் வகுப்புப் பிரிவுகள் ஏற்பட்டிருந்தன.

அந்தணர், அரசர், வணிகர் ஆகியவர்கள் செய்யும் தொழில்கள் இவை இவையெனத் தொல்காப்பியம் கூறுகின்றது.

அரசருக்கு ஆலோசனை கூறுவது, நாட்டு மக்களுக்கு நல்லறிவு நல்குவது, மக்களின் நல்வாழ்வுக்காகக் கடவுளரை வேண்டித் தவம் கிடப்பது இவை அனைத்தும் அந்தணர் கடமை.

வேட்டையாடுவதிலே வல்லமை, பகைவர்களை எதிர்த்துப் போர்புரிந்து வெற்றிபெறும் வீரத்தன்மை, பொது மக்களின் நல்வாழ்வைக் கருதி உழைக்கும் பண்பு, நல்லொழுக்கம், நீதி வழங்கும் நேர்மைக் குணம் இவை அனைத்தும் பெற்றவர்களையே பண்டைத் தமிழர்கள் அரசர்களாகத் தேர்ந்தெடுத்தனர்.

வாணிகம் செய்யும் வாழ்க்கையை உடையவன் 'வைசியன்' எனக் கருதப்பட்டான். வாணிகத்தோடு தானியங்களை விளைவிக்கும் தொழிலும் வைசிகனுக்கு உண்டு. வேளாளர்களுக்கு உழுது உண்பதைத் தவிர வேறு தொழில்கள் இல்லை என்று தொல்காப்பியம் பகர்கின்றது. அவர்கள் படைக்கலப் பயிற்சி பெற்றுப்

போர் வீரர்களாவது அரசர்களின் விருப்பத்தைப் பொருத்ததாகும்.

அந்தணருக்கு அறுவகைத் தொழில், அரசருக்கு ஐவகைத் தொழில், வணிகருக்கும் வேளாளருக்கும் தனித்தனியே ஆறு வகைத் தொழிலுண்டு.

அடிமைகள் தொழிலிலே வல்லவர்கள். நடனமாடுவோர், யாழ் வாசிப்போர், நாடகமாடுவோர் ஆகிய வகுப்பினரும் தமிழ் நாட்டில் இருந்தனர்.

தொல்லாப்பியர் காலத்தில் இருந்த இத்தகைய வகுப்புப் பிரிவுகள் பிறப்பால் ஏற்பட்டவை அல்ல. தொழில் ஒழுக்கம், கல்வி அறிவு, திறமை காரணமாகவே மக்களுள் பல பிரிவுகள் ஏற்பட்டிருந்தன.

நிலத்தலைவர்கள் : தொல்காப்பியர் காலத்தில் நிலமுள்ளோர், நிலமற்றோர் என்ற வர்க்கப்பிரிவும் வேறாக இருந்தது. நிலத்தலைவர்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டார்கள். நிலமற்ற ஏழைகள் தாழ்ந்தவர்களாகவும் ஏவல் செய்வோராகவும், அடிமைகளாகவும் வாழ்ந்தனர்.

நிலத்தலைவர்களின் முயற்சியினால் ஏராளமான உணவுப் பொருள்கள் உற்பத்தியாயின. இதன் பின்புதான் நிலக்கிழவன், உழவன் என்ற முறைகள் ஏற்பட்டன. இதன் பின்னர் பண்டமாற்று முறையும் வளர்ச்சி அடைந்தது.

உழவுக்கும் வாணிகத்திற்குமிடையிலே பல வகையான கைத் தொழில்களும் வளர்ச்சியடைந்தன. நெசவுத் தொழில், தச்சுத் தொழில், இரும்புத் தொழில், ஓவியத் தொழில், சிற்பத் தொழில் போன்ற பலவகைத் தொழில்களும் தோன்றின. எத்தொழில்களிலும் ஈடுபடாத சோம்பேறிகளும் அக்காலத்தில் இருந்தனர். நாடகம், இசை போன்ற கலைகளெல்லாம் நிலத்தலைவர்களின் ஆதரிப்பிலேயேதான் வளர்ந்தன.

உலகத் தோற்றம் : 'உலகம் கடவுள் படைப்பு அன்று ; தானே தோன்றியது. மண், நெருப்பு, நீர், காற்று, வானம் ஆகிய ஐந்து இயற்கைப் பொருள்களும் கலந்து உருவாகி இருப்பதே இவ்வுலகம்'. இதுவே தொல்காப்பியர் கூறுவது.

> 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும்
> கலந்த மயக்கம் உலகம்' (தொ. பொ. மர. 86)

**9. தெய்வங்கள் :** தொல்காப்பியர் காலத்தில் தமிழர்களிடம் தெய்வ நம்பிக்கை குடிகொண்டிருந்தது. தமிழர்கள் பல தெய்வங்களை வணங்கினர். தெய்வ நம்பிக்கையையும், தெய்வ வழிபாட்டையும் பண்டைத் தமிழர் நாகரிகமாகத்தான் கொள்ள வேண்டும். முல்லை நிலத்தின் தெய்வம் மாயோன், குறிஞ்சி நிலத்தின் தெய்வம் சேயோன், மருத நிலத்தின் தெய்வம் வேந்தன் (இந்திரன்), நெய்தல் நிலத்தின் தெய்வம் வருணன் என்பதை அறிகின்றோம்.

போரிலே வெற்றியைப் பெற்றபின் போர்வீரர்கள் கொற்றவைக்குப் பலியிட்டு வணங்குவார்கள். கொற்றவை போரிலே வெற்றி அடைவதற்குத் துணை செய்யும் தெய்வம் எனக் கருதப் பட்டது.

தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டிலே சூரியனையும், சந்திரனையும், அக்கினியையும் தெய்வமாக வணங்கிவந்தனர். இதனைக் கொடிநிலை எனத் தொடங்கும் சூத்திரம் உணர்த்தும்.

> கொடிநிலை கந்தழி, வள்ளி, என்ற
> வடுநீங்கு சிறப்பின் மன்னிய மூன்றும்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே
> (தொ. பொ. மர. 27)

> கொடிநிலை — உச்சியில் நிற்பது—சூரியன்.
> கந்தழி — பற்றுக்கோட்டை அழிப்பது; நெருப்பு.
> வள்ளி — குளிர்ச்சியைத் தருவது; சந்திரன்.

தொல்காப்பியர் காலத்தில் கடவுள் என்ற சொல் தேவர்கள் என்ற பொருளில்தான் வழங்கப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் திருமால், சேயோன், வருணன், வேந்தன், கொற்றவை, சூரியன், சந்திரன், அக்கினி முதலியவர்கள் தெய்வங்களாக வணங்கப் பட்டனர். இன்னும் கூற்றுவன், தேவர்கள், பேய்—பிசாசுகளும் இருப்பதாகவும் தமிழர்கள் நம்பினர். வீரர்களுக்குக் கல் நட்டு அவர்களைத் தெய்வம்போல் எண்ணி வணங்கும் வழக்கமும் தமிழ்நாட்டில் இருந்தது.

**10. உருவ வழிபாடு :** அக்காலத்தில் உருவம் செதுக்கப் படாத வெறும் கற்கள் கடவுளர்களின் பிரதிநிதிகளாகக் காட்சி யளிப்பதைக் காணலாம். நடுகல் வணக்கம், அந்தக் கல்லிலே இறந்த வீரனுடைய ஆவி குடி கொண்டிருப்பதாக எண்ணி வாழ்த்தி வணங்கும் முறையாகும்.

**11. உடலும் உயிரும்:** உயிர் வேறு உடல் வேறு என்ற நம்பிக்கை தொல்காப்பியர் காலத் தமிழர்களிடம் குடிகொண்டிருந்தது. தொல்காப்பியத்தில் பல சூத்திரங்கள் இக் கருத்தினை உணர்த்துகின்றன.

வாழ்வின் நம்பிக்கையும் தொல்காப்பியருக்கு உண்டு. ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதற்குக் காரணம் ஊழ்வினைதான் என்பது தொல்காப்பியர் கருத்து.

**12. கலை வளர்ச்சி:** தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் நாடகம், இசை, நடனம் போன்ற கலைகள் சிறப்புற்று விளங்கின. இவற்றையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர் ஒரு பிரிவினர். கூத்தர் என்பவர் ஒரு பிரிவினர். இவர்களுடைய தொழில் கூத்தாடுதல். கதை தழுவிய கூத்து, கதை தழுவாமல் பாட்டின் பொருளுக்கேற்ப அபிநயம் பிடித்தாடும் நாட்டியம் ஆகிய இரு வகைக் கூத்துகளையும் நடத்திக் காட்டும் வல்லவர்களே கூத்தர்கள். பண் வாசிப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் பாணர்கள்; யாழின்மூலம் இசை விருந்தளிப்பதில் இவர்கள் வல்லவர்கள். மற்றும் பொருநர், விறலியர் ஆகிய கலைஞர்களும் அக்காலத்தில் வாழ்ந்தனர்.

அக்காலத்தில் சிற்பக்கலை, கட்டடக்கலை போன்றவைகளும் சிறப்புற்றிருந்ததைக் காண்கிறோம். ஆறுகளுக்குக் கல்லணை கட்டித் தண்ணீரைத் தேக்கி அந்நீரை வயல்களுக்குப் பாய்ச்சிப் பயிர் செய்யும் பழக்கமும் அக் காலத்தில் இருந்தது.

இரும்பு, பொன் முதலிய உலோகங்களால் ஆயுதங்களும் அணிகலன்களும் அக்கால மக்கள் செய்தனர். நெய்யும் தொழிலும் அக்காலத்தில் நிலைத்திருந்தது. ஆகவே, தொல்காப்பியத் தமிழர் பல கலைகளிலும் புலமை பெற்று விளங்கினர் என்பதில் ஐயமில்லை.

**13. நால்வகைப் படைகள்:** போர்ப் படைகளிலே தேர்ப் படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்ற நால்வகைப் படைகளும் இருந்ததோடு அவை சிறப்பான நிலையில் விளங்கின என்பதை அறிகின்றோம். பொருள் தேடுவதற்காக அவர்கள் கால்நடையாகவும் கலத்திலும் சென்றனர். அதாவது, கப்பலேறிக் கடல்கடந்து சென்றனர்.

**14. போர் முறை:** தொல்காப்பிய காலப் போர் முறையைப் புறத்திணையில் காணலாம். தற்காப்புக்காகவே பண்டைத்

தமிழர்கள் போர் புரிந்து வந்தனர். அமைதி காண விரும்பினர் அக்கால மக்கள். பண்டைத் தமிழர் பிறநாட்டை ஆக்கிரமிப்பதை விரும்பவில்லை. போரினால் பொதுமக்கள்தாம் துன்புறுவார்கள் என்பதை உணர்ந்தவர்கள் தொல்காப்பியக் காலத் தமிழர்கள். ஆகவே, போரை வெறுத்தார்கள். இவர்கள் போர் நேராமல் இருப்பதற்கு முயன்றனர். அப்படிப் போர் நேர்ந்தாலும் அதனால் பொதுமக்கள் தொல்லைப்படக்கூடாது என்பதற்காக அவர்களுக்கு முன்னறிவிப்புச் செய்தனர்; பாதுகாப்பு அளித்தனர்.

**15. மொழி வளர்ச்சி :** தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு முன்னும் இலக்கியங்கள் நால்வகைப் பாடல்களிலே இயற்றப் பட்டன. அந்த நால்வகைப் பாடல்கள் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா என்பன. அக்கால மக்கள் இலக்கியத்தை வளர்க்க மொழிபெயர்ப்பு நூல்களும் இன்றியமையாதவை எனக் கருதினர். அக்காலத்தில் மொழி வெறுப்பு சிறிதும் இல்லை.

**16. பழக்கவழக்கங்கள் :** நிலத் தலைமை காரணமாகவே உயர்வு தாழ்வுகள், ஆண்டான்—அடிமை முறைகள் தோன்றின. பார்ப்பார் என்பவர்கள் வேறு; அந்தணர்கள் என்பவர்கள் வேறு; இரு பிரிவினரும் தமிழர்களேதாம். தொல்காப்பியர் காலத்திலே வடமொழி வேதங்களைத் தமிழர் படித்திருந்தனர்.

பண்டங்களை அளப்பதற்கான மரக்கால், படி, நாழி போன்ற அளவுக் கருவிகள் பண்டைத் தமிழர்களிடம் இருந்தன. இது அவர்களின் நாகரிகத்தைக் காட்டுகிறது.

தொல்காப்பிய கால மக்களுக்கு மந்திரத்தில் நம்பிக்கை உண்டு. நாள் பார்ப்பதோடு, சகுனம் பார்க்கும் வழக்கமும் தமிழரிடம் உண்டு. நல்லநாள், கெட்டநாள் பார்க்கும் வழக்கம் தமிழரிடம் இருந்தது. மாண்ட கணவனுடன் மனைவி உடன் கட்டை ஏறும் வழக்கம் பழந்தமிழரிடம் உண்டு. இதனைப் ‘பாலை நிலை’ என்று கூறுகிறார் தொல்காப்பியர்.

இல்லறம் நடத்துவோருக்குப் பல கடமைகளுண்டு. இல்லறத்தை நடத்தும் பெரும் பொறுப்பை இல்லாள் தலையிற் சுமத்தினர் பழந்தமிழர்.

மனைவி மக்களைப் பிரிந்து துறவறம் மேற்கொண்ட நிகழ்ச்சிகள் இருந்ததாகத் தெரியவில்லை. யோக நெறியினைப் பயின்று பின்பற்றிய யோகிகளையும் அக் காலத்தில் காண முடிகின்றது.

தமிழர்கள் புகழுடனும் மானத்துடனும் வாழ்வதையே சிறந்த வாழ்க்கை எனக் கொண்டனர். "தான் நினைக்கும் காரியம் நிறைவேறினால் உனக்கு இன்னது செய்வேன்" என்று தெய்வத்தை வேண்டிக்கொள்ளும் பழக்கம் பழந்தமிழரிடம் இருந்தது.

முடிவு: இதுகாறும் கூறியவற்றால் தொல்காப்பியர் காலத் தமிழர் வாழ்வு மிகச் சிறந்த நிலையில் இருந்தது என்பதை அறிகிறோம். இவர்கள் வகுப்பு வெறி, மொழி வெறி அற்றவர்கள். எல்லோரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர் என்பதையும் அறிகிறோம்.

## 5.3. அகத்தின் மையக் கோட்பாடு

**வாழ்வு**

மக்கள் வாழ்வு அகவாழ்வு, புறவாழ்வு என இருவகைப்படும். சொல்லால் உணரப்படும் பொருளை அகப்பொருள், புறப்பொருள் என இரண்டாக வகுத்துக் கூறுதல் தொல்காப்பியர் கண்ட முறையாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நால்வகை உறுதிப் பொருள்களை வடநூலாரைத் தழுவிப் பின்பு நாம் பின்பற்றினோம், ஏற்றுக்கொண்டோம். இவற்றுள் இன்பம் அகப்பொருளாகவும், அறம், பொருள், வீடு என்ற மூன்றும் புறப்பொருளாகவும் அடங்கும். அகவாழ்வைப்பற்றிக் கூறுவதே அகத்திணை அல்லது அகப்பொருள்; புறவாழ்வைப்பற்றிப் புகல்வதே புறத்திணை அல்லது புறப்பொருள்.

**இருவகை நூல்கள்**

தமிழிலே உள்ள நூல்கள் எல்லாம் அகப்பொருள் நூல்கள், புறப்பொருள் நூல்கள் என இருவகைப்படும். காதல் வாழ்வைப் பற்றிக் கூறும் நூல்கள் அகப்பொருள் நூல்கள். அரசியல், பொருளியல், நிலவியல், அறிவியல், தத்துவம், மருத்துவம், கலைகள் போன்றவற்றைப்பற்றிக் கூறும் நூல்கள் புறப்பொருள் நூல்கள்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணை இலக்கணத்தையும், புறத்திணை இலக்கணத்தையும் விரித்துரைக்கின்றது.

## அகப்பொருள் இலக்கணம்

ஒரு தலைவனும் தலைவியும் தம்முள் காதல்கொண்டு நிகழ்த்தும் வாழ்க்கை அகவாழ்க்கை எனப்படும். அவர்கள் துய்க்கும் இன்பம் பிறருக்குக் கூறக்கூடியதன்று, அத்துடன் பிறரால் உணரக்கூடியதுமன்று. அது அவர்கள் அகத்தே அடங்கி உள்ளத்து உணர்வாய் நிலைபெறும் பொருளாதலின், அஃது அகப் பொருள் அல்லது அகத்திணை எனப்பட்டது.

தலைவனும் தலைவியும் திருமணம் நிகழுமுன் ஒருவரை யொருவர் காதலித்து வாழும் வாழ்க்கை களவு வாழ்க்கை எனவும், பின்னர்த் திருமணம் புரிந்து வாழும் வாழ்க்கை கற்பு வாழ்க்கை எனவும் பெயர்பெறும். இவ்வாறான வாழ்க்கை பல்வேறு திணைகளாகவும், திணை ஒவ்வொன்றும் பல்வேறு துறைகளாகவும் வகுக்கப்பட்டுள்ளன. திணை என்பது ஒழுக்கத் தைப்பற்றிய பெரும்பிரிவு. துறை என்பது அகத்திணையின் உட்பிரிவு.

### ஏழு திணைகள்

கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என மூன்று வகைப் படும் அகப்பொருள்பற்றிய திணைகள். அவற்றுள் ஐந்திணை எனப்படும் பிரிவு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனத் தனக்குள் ஐந்திணைகளாக விரியும். ஆக அகத்திணை ஏழு வகைப்படும். இந்த ஏழுவகைத் திணைகளில் தமிழரின் காதல் வாழ்வு—குடும்ப வாழ்வு அடங்கும்.

**கைக்கிளை:** இது ஒருதலைக் காமம். அதாவது ஆண் பெண் இருவருள் ஒருவரிடம் மட்டும் காதல் உணர்வு தோன்றுவது.

**ஐந்திணை:** இது அன்புடைக் காமம். குலத்தாலும், நலத் தாலும், குணத்தாலும், வயதாலும், கல்வியாலும் ஒத்த தலை வனும் தலைவியும் ஒருவரையொருவர் ஒப்பக் காதலித்து ஒழுகும் ஒழுக்கம். இது ஒழுக்க வகையாற் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளாக வகுக்கப்பட்டுள்ளது.

**பெருந்திணை:** இது பொருந்தாக் காமம். வயது முதலியவற் றால் பொருத்தமற்றவர் பெற்றோர் முதலியோர் ஏவலால் மணம் புரிந்து வாழ்தலும் விருப்பமற்றோரை வலிந்து கூடுதலும் முதலிய அன்பிற் கொவ்வாதன எல்லாம் இதன்கண் அடங்கும்.

கைக்கிளையும் பெருந்திணையும் தொல்காப்பிய காலத் தமிழர்களால் அவ்வளவாகப் பாராட்டப்படவில்லை.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஒழுக்கங்கள் அவ்வவற்றிற்குரிய நிலங்களில் நிகழ்ந்தன. இவைகளைப் போலக் கைக்கிளைத் திணைக்கும், பெருந்திணைக்கும் தனித் தனி நிலங்கள் குறிப்பிடப்படவில்லை. இதுவும் குறிப்பிடத் தக்கதாகும்.

கருப்பொருள்கள்: ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வம், உயர்ந்தோர் (தலைமக்கள்), இழிந்தோர் (நிலமக்கள்), பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் என்ற பதினான்கும் கருப்பொருள் எனப்படும்.

## குறிஞ்சித் திணை

இது குறிஞ்சி நிலத்திலே நடைபெறும் ஒழுக்கத்தை விளக்குவது. மக்கள் வாழும் மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலம். குறிஞ்சி நிலத் தெய்வம் சேயோன். அவனை முருகன் என்பர்.

கண்ணுக்கினிய இயற்கைக் காட்சிகள் நிறையப்பெற்ற மலையிலோ, மலைச் சாரலிலோதான் முதலில் தலைவன் தலைவி சந்திப்பு நிகழும்; இருவரும் ஒருமனப்பட்டுக் கணவன் மனைவியாய் இணைந்து வாழ்வார்கள். இவ்விருவருக்கிடையே நிகழும் சந்திப்பு, இதற்குரிய காரணங்களை எடுத்துரைப்பதே குறிஞ்சித் திணை. 'தம்பதிகளாதல்' குறிஞ்சியொழுக்கமாகும்.

## பாலைத் திணை

பாலை நிலத்திலே நிகழும் ஒழுக்கத்தைப்பற்றிக் கூறுவது பாலைத் திணை. நீரில்லாது வறண்டுபோன நிலப்பகுதியே பாலை நிலம். இதற்குத் தொல்காப்பியர் தனிநிலம் குறிப்பிடவில்லை. வானம் பொய்த்து வறண்டுபோனால் குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் போன்ற எந்த நிலத்திலும் பாலை தோன்றலாம். இதற்குத் தெய்வம் கொற்றவை (துர்க்கை.)

தலைவன் தன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லுவதைப் பற்றிச் சொல்லுவதும், பிரிவதற்கான காரணங்களைக் கூறுவதும் பாலைத் திணை. இத்திணையின் ஒழுக்கம் 'பிரிவா'கும்.

## முல்லைத் திணை

காடும், காடு சார்ந்த நிலமும் முல்லை நிலம். இதன் தெய்வம் மாயோன் (திருமால்). முல்லை நிலத்திலே நிகழும் ஒழுக்கம் 'முல்லைத் திணை'.

பிரிந்து சென்ற தலைவன் திரும்பும்வரை காதலி தன் கற்பின் வலிமையால் தன் துயரத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பது முல்லையொழுக்கம். அவள் ஆறுதல் பெறுதற்குரிய காரணங் களைக் கூறுவதும் முல்லைத் திணையே. இத்திணையின் ஒழுக்கத்தை இருத்தல் எனக் கூறுவர்.

## மருதத் திணை

மருத நிலத்தில் நிகழும் ஒழுக்கம் மருதத் திணையாகும். நீர்வளம், நிலவளம் அமைந்த நிலப்பகுதிகளும், ஊர்களும் மருத நிலமாகும். இதன் தெய்வம் இந்திரன் (வேந்தன்). நல்ல அரசும், நாகரிகமும் அமையப்பெற்ற இடம் மருதம்.

தலைவன், தலைவி இருவரிடையே தோன்றும் ஊடல், இது நிகழ்வதற்குரிய காரணங்கள் பற்றிக் கூறும் இத்திணை. மேலும் பாணன், கூத்தன், பாங்கன், தோழி, விறலி, பார்ப்பனர் முதலி யோர் தூதர்களாயிருந்து இவர்கள் ஊடலை நீக்கிக் கூடிவாழச் செய்யும் நிகழ்ச்சிகள்பற்றியும் மருதத் திணை கூறும். இத்திணை யின் ஒழுக்கம் 'ஊடல்'.

## நெய்தல் திணை

கடற்கரையும் அதைச்சேர்ந்த இடங்களும் நெய்தல் நிலமாகும். இந்நிலத்திலே நடைபெறும் ஒழுக்கத்தைக் கூறுவது நெய்தல் திணை. இந்நிலத்திற்குத் தெய்வம் வருணன்.

தலைவன் பிரிவை எண்ணித் தலைவி மனம் வருந்துதலும், தன் மனத்துயரை வாய்விட்டுக் கூறுவதும் நெய்தல் ஒழுக்கம். இதற்குரிய காரணங்களை எடுத்துரைப்பதுவும் நெய்தல் திணையே. 'இரங்கல்' என்னும் செய்தியே நெய்தல் ஒழுக்கம்.

## முடிவு

ஒத்த பருவமும், உருவமும், குணமும், அறிவும், நிலையு முடைய ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்தலே காதல் மணமாகும். இவ்விருவருள் பெண்ணைக் காட்டிலும் ஆணின் தரம் உயர்ந்ததாகவும் இருக்கலாம். மனமொத்த இருவரிடையே

இதுபோன்று நிகழும் காதல் நிகழ்ச்சிகளைப்பற்றியே ஐந்து திணைகளும் விளக்கிக் கூறுகின்றன.

பண்டைத் தமிழரின் திருமணம் களவு, கற்பு என இருவகைப் படும். காதல் மணத்திற்குரிய சிறந்த நெறிமுறைகளை எடுத்துக் கூறுவதே அகத்தின் மையக் கோட்பாடு.

## 5.4. புறத்தின் மையக் கோட்பாடு

**புறப்பொருள் விளக்கம்**

அறம், பொருள், வீடு என்ற மூன்றையும் பற்றிய செய்திகள் இங்குக் கூறப்படுகின்றன. தலைவன், தலைவியரிடையே நிகழும் அகவாழ்க்கையைப்பற்றிக் கூறாமல், புறத்தார் யாவருக்கும் புலப் படும் ஒழுக்கத்தைப்பற்றிக் கூறுவதால் 'புறப்பொருள்' எனப் பட்டது.

அகத்திணையை ஏழாக வகுத்ததுபோன்று புறத்திணை யையும் தொல்காப்பியர் ஏழாக வகுத்துக் கூறியுள்ளார். ஏழு வகைப் புறத்திணை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பனவே. இத்திணைகளிலே பண்டைக் காலத்தில் நடைபெற்ற போர்முறைகள், வீரச்செயல்கள், தமிழரின் அரசியல், கொடை, புகழ் இவைபற்றி அறியலாம். உலக நிலை யாமை மற்றும் அறவுரைகளும் இங்கே காணப்படுகின்றன.

**வெட்சித் திணை**

பகைவர் நாட்டின்மீது படையெடுக்கும் அரசன் முதற்கண் பாதுகாக்கவேண்டிய அந்தணர் முதலியோர் தமக்குப் பாதுகாவ லான இடத்திற்கு அகலுமாறு அந்நாட்டிற்குப் பறையறைந்து தெரிவிப்பான். பின்பு தாமாகப் பாதுகாப்புத் தேடிக்கொள்ள இயல்பில்லாத பசுநிரைகளைக் கவரத் தன் வீரர்களை ஏவுவான். மேலே கூறிய அனைத்தும் வெட்சித் திணையுள் அடங்கும். வெட்சி வீரர் வெட்சிப்பூவைச் சூடிச்செல்வர். போர் புரியக் கருதிய வேந்தன் எதிரியின் பசுமந்தையைக் கவருவதும், கவர்ந்த பசுமந்தையை எதிரி மீட்டுக்கொள்வதும் வெட்சித் திணையில் அடங்கும்.

**வஞ்சித் திணை**

பகைவர் நாட்டைக் கொள்ளக்கருதி வஞ்சி சூடி நிகழ்த்தும் போர் வஞ்சித் திணை எனப்படும்.

பகைவர் நாட்டிற் படையெடுக்க நாள் குறித்துச் செல்லுதல்; அந்நாளிற் செல்லத் தடைநேரின் குடையையும் வாளையும் குறித்த நேரத்தில் மதிலுக்கு வெளியே புறப்படவிட்டு, அதன் பின்னர் வாய்த்த நாளிற் பகைவர் நாட்டை அடைந்து, கொள்ளையிட்டும் தீக்கொளுத்தியும் அழிவுசெய்து, பகைவர்பால் திறைபெற்று வஞ்சி வீரர் திரும்புவர். பகைவேந்தன் அவனை எதிர்ப்பதும் வஞ்சித் திணை.

### உழிஞைத் திணை

ஒருவன் ஒரு நாட்டின்மீது படையெடுத்துச் சென்றால், எதிர் நிற்கலாகாத அந்நாட்டு வேந்தன் கோட்டைக் கதவுகளை அடைத்து, அதனுள் பாதுகாப்பாக இருந்துகொள்வான். படை எடுத்துச் சென்ற வேந்தன், அம்மதிலை — கோட்டையை முற்றுகை இடுவான். மதிலை வளைத்தலும் காத்தலும் உழிஞை எனப்படும்.

### தும்பைத் திணை

தனது வலிமையினை உலகம் புகழ்தலே தான்பெறவேண்டிய பொருளாக எண்ணிவந்த அரசனை, மாற்று வேந்தனும் அவ்வாறே எண்ணி எதிர்த்துப் பொருவது தும்பைத் திணை எனப்படும். தும்பை என்றால் போர் என்று பொருள். படை எடுத்துவந்த வேந்தனை எதிர்த்துப் போர்செய்து அவனுடைய வலிமையை அழிப்பது தும்பை எனப்படும். இப்போரில் இரு புறத்து வீரரும் தும்பைப்பூச் சூடியிருப்பர். தமக்குள் வேற்றுமை தெரியுமாறு தம் வேந்தனின் அடையாளப் பூவினையும் உடன் சூடியிருப்பர். இருபுறத்துத் தும்பை வீரரும் தம் ஆற்றலை எல்லாம் கூட்டி நால்வகைப் படையோடு எதிர்த்துப் போரிடுவர். இறுதியில் ஒருபக்கம் வெற்றிபெறும். இருபுறத்து வீரரும் வேந்தரும் ஒருங்கு மடிந்து அழிதலும் உண்டு.

### வாகைத் திணை

குறையாத முயற்சியுடைய ஒவ்வொருவரும் தத்தம் பொருளையும் ஒழுக்கத்தையும் பலவாறாகச் சிறப்பித்துக் கூறுதல் வாகை எனப்படும். வாகை என்றால் வெற்றி என்று பொருள். ஒவ்வொருவரும் தத்தம் தொழில் முதலியவற்றில் பெறும் வெற்றியைச் சிறப்பித்துக் கூறுதல். இதனுள் போர் வெற்றியும் அடங்கும். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் அறிவர், தாபதர், அறக்களச் சான்றோர், சோதிடர், மறவர், மறக்குடி மகளிர் ஆகிய இன்னாரது இயல்பு மேம்பாடுகளைச் சிறப்பித்துக் கூறுதலும் வாகைத் திணையில் அடங்கும்.

**காஞ்சித் திணை**

காஞ்சி என்பது நிலையாமை எனப் பொருள்படும். செல்வம், இளமை, யாக்கை என்ற மூன்றும் நிலையா என்பதை இத்திணை எடுத்துக்கூறும். உலகியற் பொருளான அறம், பொருள் இன்பங்களை நுகரமுடியாமல் செய்வன இந்நிலையாமைகளே ஆகும். இந்நிலையாமையை உணர்ந்தால்தான் அறம், பொருள், இன்பங்களின் பயனைச் சரியானபடி அடையமுடியும். நிலையாமையினை உணராதார் அறம், பொருள், இன்பங்களை சரியானபடி நுகர முடியாது. அறம், பொருள், இன்பங்களை அளவறிந்து நுகரும்பொருட்டு அந்நிலையாமையினைச் சான்றோர் கூறுவது காஞ்சித்திணையாகும்.

அதை ஆண்பாற் காஞ்சி—ஆடவரின் நிலையாமை, பெண்பாற் காஞ்சி—பெண்டிரின் நிலையாமை என இருவகைப்படுத்திக் கூறுதலும் உண்டு.

**பாடாண் திணை**

பாடாண் திணையாவது கொடையாளர்களின் கொடையைப் புலவர்கள் புகழ்ந்து பாடுவது. பாடு + ஆண் + திணை —பாடப்படும் ஆண் மகனின் ஒழுக்கம். அதாவது, பாட்டுடைத் தலைவனின் வீரம், கொடை, புகழ் முதலிய ஒழுக்கத்தைச் சிறப்பித்துப் பாடுதல் பாடாண்திணை எனப்படும். பாடுதலையும் பாடப்படுதலையும் ஒரு திணையாக அமைத்த நம் முன்னையோரது மதிநுட்பம் மிகப் பாராட்டிற்குரியது. அரசனது புகழ்பாடுதல், பரிசில் வேண்டுதல், பரிசில் பெறுதல், பாணர் முதலோரை ஆற்றுப்படுத்தல் முதலிய செய்திகள் இத்திணையில் விரிவாக இடம்பெறும். பாடத்தக்கன ஒருவனது பெயர், புகழ், வலி, கொடை, தண்ணளி முதலியன. இது தேவர் பாடாண், மக்கட் பாடாண் என இருவகைப்படும்.

**முடிவு**

புறப்பொருளில் தமிழர்கள் அறம், பொருள், வீடு குறித்த செய்திகளைக் கூறினும் அதன் மையக் கருத்தாகத் திகழ்வன போர் முறைகளைப்பற்றிய செய்திகளாகும். வீரத்தைப் பின்னணியாகக் கொண்டு இங்கு அனைத்து நிகழ்ச்சிகளும் பேசப்படுகின்றன. தமிழரின் அரசியல் அறிவு, கொடைவளம், சீரிய அறக்கருத்துகள், உலக நிலையாமை என்ற தத்துவக் கருத்துகள் புறத்தில் பேசப்படுவதுடன், கடவுளைப் பற்றியும் மக்களுடைய ஒழுக்கத்தைப்பற்றியும் குறிப்புகள் கிடைக்கின்றன.

## 5.5. சங்க இலக்கிய சமயக் கோட்பாடு

**முன்னுரை**

சங்க காலத் தமிழரிடையே அவர்களுக்கேயுரிய சமயம் இருந்தது. இச் சமயத்தின் செல்வாக்கைத் தனி மனிதனிடமும் காண முடிந்தது. சமுதாயச் சிந்தனை, நம்பிக்கைகள் போன்ற வற்றில் அவற்றின் தாக்கத்தைக் காணமுடிகின்றது. ஆனால் அஃது அவர்களுடைய உலக வாழ்வில் குறுக்கிடவில்லை. சமயத்தின் துணைகொண்டு மனித உறவையும், காண முடியாக் கடவுளுடன் வைத்துக்கொள்ளும் பிணைப்பையும் பெறவிரும்பினர். சிற்சில சடங்குகள் இருந்தன. ஆனால் சடங்குகளே வாழ்வாக அமைந்து விடவில்லை. இறப்பிற்குப் பின்னால் நிகழவிருப்பதைச் சிந்திக்கத் தலைப்பட்டனர். நுட்பமான சமய சிந்தனைகள் அன்று இருந்தன. நிலத் தெய்வ வழிபாட்டோடு, வைதிக சமய வழிபாட்டு முறையும் இருந்தது. சொர்க்கம், நரகம், வீடுபேறு, மறுபிறப்பு, வினைப்பயன் பற்றிய நம்பிக்கைகளும் இருந்தன. வீரவணக்கமும், முன்னோர் வணக்கமும் இருந்தன. மரம், கல், விலங்குகள் போன்றவைகளும் வணங்கப்பட்டுள்ளன. சமயத்தை அவர்கள் கலையாக வளர்க்கவில்லை. இதன் விளைவாகச் சமய நூல்கள் தோன்றவில்லை.

**கடவுள், இயவுள், இறை :** தனி முதற்பொருள் இயவுள் எனப்பட்டது. அதைக் கடவுள் என்றும் அழைத்தனர். உயிர்க் குயிராய் நின்று இயக்குவோன், இயவுள் என அழைக்கப்பட்டான். மனம், மொழி, மெய்களைக் கடந்து நிற்பவன் கடவுள். அனைத்திலும் நீக்கமற நிறைந்து ஒளிர்பவன் இறையாகும்.

**தென்புலத்தார் :** இறந்துபட்ட முன்னோர்கள் இடையுலகம் என்னும் ஒருவகை உலகில் வாழ்வதாக எண்ணினர். அவர் வாழும் உலகம் தென்புலம் எனப்பட்டது.

**நடுகல் வணக்கம் :** வீரர்களின் பெயரையும், அவர்களது சிறப்பியல்புகளையும் எழுதி 'நடுகல்' நட்டு, அக்கற்களை மனிதர் வணங்கினர்.

**பத்தினி வணக்கம் :** சிலப்பதிகாரம் வாயிலாகப் பத்தினி வழிபாடு இருந்ததை அறிகிறோம். பூசையும் விழாவும் பத்தினிக் கோட்டத்தில் நடத்த செங்குட்டுவன் ஏற்பாடு செய்திருந்தான்.

**பேய், பிசாசு, பூதம் :** பேய், பூதம், அணங்குகள் இருப்ப தாகவும், அவை மக்களை அச்சுறுத்துவதாகவும் கருதி

அவைகளைக் கண்டு அஞ்சினர். மலை, குளம், கடல் போன்ற இடங்களில் அணங்குகள் உறைவதாக நம்பினர். பேய்கள் சுடுகாட்டில் பிணத்தைத் தின்று ஆடுவதாகவும் நம்பினர். பல்வேறு பூதங்களைப் பற்றிச் சிலம்பு பேசுகிறது.

அந்தணர் செல்வாக்கு : இக்காலத்திலேயே வேத சமய நெறியாளர்கள் பெருஞ் சிறப்புடன் இருந்ததை அறிகிறோம். புலமை நிறைந்த அந்தணர்கள் வாழ்ந்தனர். அவர்கள் அந்தணர், இரு பிறப்பாளர், அறு தொழிலந்தணர், பார்ப்பார், மறைகாப்பாளர், மறை நவில் அந்தணர் என்று பெருமையோடு பேசப்பட்டனர். அவர்கள் வீடுகள் ஏனையோர் வீடுகட்கு அப்பால் தனியே இருந்தன.

போரின்போது காக்கப்பட வேண்டியோரில் பார்ப்பாரும் அடங்குவர். 'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்'— என வரும் புறம். 9ஆம் பாடல் சான்று. மன்னர் அவர்களைப் பணிவதனைக் கடமையாகக் கொண்டனர். சில அரசர்கள் வேள்விகள் செய்து பெருமை பெற்றோராவர். அரசர்கள் அவர்கட்குப் பொன்னும் பொருளும் அள்ளி வீசினர். அந்தணப் பிறப்பைவிட நல்ல பிறப்பில்லை எனக் கருதினர்.

### தொல்காப்பிய காலக் கடவுள் கோட்பாடு

மாயோன், சேயோன், வருணன், வேந்தன் என்னும் நிலத் தெய்வங்களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. கொடிநிலை (ஞாயிறு), கந்தழி (தீ), வள்ளி (சந்திரன்) ஆகியவையும் வணங்கப்பட்டதாகவும் தொல்காப்பியம் கூறும். உயிர் வேறு, உடல் வேறு என அறிந்திருந்தனர் அக்கால மக்கள். உயிர் தனித்தியங்கும் இயல்புடையது என்ற எண்ணம் அன்றைய தமிழரிடம் இருந்ததையும் காண்கிறோம். (மேலும் இது தொடர்பான குறிப்புகட்குத் 'தொல்காப்பிய காலத் தமிழகம்' என்ற கட்டுரையை நோக்குக.)

### சங்க இலக்கியங்களில் வழிபாடு

முருக வழிபாடு : முருகன் குறிஞ்சி நிலக் கடவுள். முருகு என்னும் சொல் அழகு, இனிமை, இளமை என்னும் பொருள் களுடையது. மலையிடையே தோன்றிய கதிரின் செம்மையையே முருகன் என வழிபட்டதாகவும் கூறுவர். கடற்பரப்பில் தோன்றும் இளங்கதிரே முருகன் என்றும், நீலக் கடலே அவனது மயிலூர்தி என்றும், நண்பகலில் மிகச் சிவந்து தோன்றும் ஞாயிறே சிவன் என்றும் கா. சு. பிள்ளையவர்கள் கூறுவார்கள்.

திருமுருகாற்றுப்படையில் பழைய வழிபாட்டு நெறியும், வைதிக நெறியையொட்டிய வழிபாட்டு முறையும் கூறப் பட்டுள்ளன. திருவாவினன்குடி, பழமுதிர்ச் சோலை, திருச்செந் தூர், திருப்பரங்குன்றம் முதலிய தலங்கள் முருகற்குரியனவாம்.

**வைதிக வழிபாடு:** வயது முதிர்ந்த பிராமணன் முந் நூலணிந்து, குளிர்ந்த நீரில் ஆடி, ஈரம் புலராத ஆடையுடன் நின்று, இரு கைகளையும் தலைக்குமேல் தூக்கி ஆறெழுத்து மந்திரங்களோடு பிற மந்திரங்களையும் ஓதுவான்.

**வெறியாட்டு:** முருகன், ஆவேசம் ஏறி ஆடியவன் வேலன் எனப்பட்டான். அவன் வேலைக் கையிலேந்தி ஆடுவான். அது வெறியாட்டம் எனப்பட்டது. இவனும் மறியறுத்துப் பூசை செய்து வணங்குவான்.

**மால் வழிபாடு:** முல்லை நிலத்து ஆயர்கள் வணங்கிய தெய்வமே மால் என்னும் மாயோன்; மாயோன்—கரிய நிற முடையவன்; மாயக் கிருஷ்ணனுக்கும், மாயோனுக்கும் தொடர் பில்லை. பரிபாடலில் பலராமனும் கண்ணனும் ஒருவராகக் கூறப்படுவது ஆரிய நாகரிகக் கலப்பைக் காட்டுகிறது. விண்டு—முகில், வானம், திருமால். விண்டு என்பதன் திரிபே விஷ்ணு என்பது. ஆயர்கள் குழலூதியும், குரவையாடியும், பாற் சோறிட்டும் வணங்கினர்.

**வருண வழிபாடு:** வாரணம்—கடல். கடல் தெய்வம் வாரணன். அவனே பின்னர் வருணன் ஆனான். ஆரியர் மழைத் தெய்வத்தையே வருணன் என்றனர்.

**வேந்தன் வணக்கம்:** அரசனை வணங்கிய வழக்கத்தி லிருந்து தோன்றியது வேந்தன் வணக்கம் என்பர். மருத நிலத்திலேயே அரசு உருவாயிற்று. எனவே, தம்மைக் காக்கும் வேந்தனை வணங்கினர். நாளடைவில் அது தேவர் தலைவன் (இந்திரன்) வணக்கமாக மாறிற்று. நீண்ட காலமாக இந்திர விழா கொண்டாடப்பட்டது.

**கொற்றவை வணக்கம்:** கொற்றம்—வெற்றி; அவ்வை—அம்மை. எனவே இவள் வெற்றித் திருவாவாள். வீரர்கள் குருதிப் பலியிட்டு வணங்கினர். தொல்காப்பியம் 'கொற்றவை நிலை' என்று குறிப்பிட்டுள்ளது. சிலப்பதிகாரம் கொற்றவையை கவுரி, சமரி, சூலி, நீலி, மாலின் தங்கை என்று புகழ்ந்து கூறுகிறது.

**நாற்பொருள் தெய்வங்கள்:** சிவன், திருமால், முருகன், வாலியோன் என்னும் நால்வரும் தலைமையான தெய்வங்களாக வணங்கப்பட்டுள்ளனர். புறநானூறு, சிலப்பதிகாரம், மணி மேகலை ஆகியவற்றில் இந் நான்கு தெய்வங்களும் ஒருசேரப் புகழப்பட்டுள்ளன.

**முத்தீ வணக்கமும் பிறை தொழலும்:** ஞாயிறு (சூரியன்), திங்கள் (சந்திரன்), தீ என்னும் மூன்றும் வணங்கப்பட்டன; அதனோடு மூன்றாம் பிறையை எருவிட்டு வணங்குதலும் இருந் துள்ளது. கன்னிப் பெண்கள் பிறை தொழுதல் மரபாகவிருந்தது.

**பல்வேறு கோயில்கள்:** கோயில், கோட்டம், நகர், இல் முதலிய சொற்கள் தெய்வத்தின் உறைவிடத்தைக் குறிக்கின்றன. இவையனைத்தும் அழியத்தக்க மரத்தாலும், சுதையாலும் கட்டப்பட்டன. ஞாயிறு, சிவன், ஐயனார், அருகன் இவர்களின் கோட்டங்களைப் பற்றிச் சிலம்பு கூறுகின்றது.

**பூசைகளும் விழாக்களும்:** இந்திர விழா பற்றி மணிமேகலை யிலும், சிலப்பதிகாரத்திலும் பேசப்படுகின்றது. விழா நாளன்று தெருக்கள் தோரணங்களாலும், விளக்குகளாலும் மற்றும் பல்வேறு பொருள்களாலும் அழகுபடுத்தப்பட்டன. சிவன் கோயிலிலும் மற்றும் பல கோயில்களிலும் பூசனை முறையறிந்தோர் பூசனை செய்தனர். விழாவின் தொடக்க, முடிவு காலங்களில் பல மன்றங் களில் பலி கொடுத்ததைக் காண்கின்றோம்.

**வினைப்பயன்:** மனிதன் தான் செய்யும் நல்வினை, தீவினை களுக்கேற்பப் பயனை நுகர்தல் வேண்டும். நல்வினை செய்தோர் அடையுமுலகம் துறக்கம். தீவினை செய்தோர் அடையும் உலகம் நரகம். அது இருளுலகம், தீயுழி, அளறு என்று பலவாறு கூறப்படும். அறம் செய்யும்பொழுது பலனை எதிர்பார்க்கலாகாது என்ற கருத்தையும் காண்கிறோம்.

**ஊழ்வினை:** உலகில், மாற்றமுடியாமல் நின்று உலகை இயக்கும் நியதியே ஊழ் எனப்படுவது. அது தெய்வம், பால், நியதி, அறம் என்று அழைக்கப்பட்டது. ஆகூழ், போகூழ் என அஃது இருவகைப்படும். ஆகூழ் வரும்பொழுது செல்வத்திற்குக் காரணமான முயற்சி தோன்றும்; போகூழ் வந்தபொழுது வறுமைக்குக் காரணமான மடி தோன்றும். ஊழால் ஒவ்வொரு வரின் இன்பமும் துன்பமும் வரையறுக்கப்பட்டுள்ளன. நல்லூழ் வந்தபொழுது அறிவு விரிவடையும். தீயூழ் வலிவுற்றபொழுது இருக்கும் அறிவும் குன்றும்.

**நிலையாமையும் அறமும் :** செல்வம், இளமை போன்றவை நிலையாத இயல்புடையன. ஆகவே வீடுபேறு அடைதலே வாழ்வின் நோக்கமெனத் தமிழர் உணர்ந்தனர்.

**தவம் :** தவம் அன்று போற்றப்பட்டது. உலகத்தையும் தவத்தையும் எடை போட்டால் உலகம் சிறுகடுகினும் சிறிய தாகும்.

**சமயநோக்கு :** எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே சமயத்தின் அடிப்படை நோக்கு. மனிதர் யாவரும் சமம் என்னும் உணர்வு வேண்டும். பகுத்துண்டு வாழ்வதே உயர்ந்த நெறி. பிறர் துயர்கண்டு கண்ணீர் வடிக்கும் உயர் பண்பே அருள் என்பது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கருதி வாழ அறிவுறுத்தினர்.

**முடிவு**

தீயதும் நல்லதும் பிறர் தருவதாக எண்ணல் தவறு. அவை நம்மாலேயே வருகின்றன. இவ்வுலகம் நிலையில்லாதது என்றாலும் பண்புடையார் இருப்பதனால்தான் வாழ்கிறது. 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்'—குறள். மனிதன் செயற்கரிய செய்யவே எண்ண வேண்டும். ஒருவர் செய்த நன்றியை மறத்தலாகாது.

## 5.6. குறள் கூறும் அறம்

**திருவள்ளுவர் பெருமை**

'பாலெல்லாம் நல்ஆவின் பாலாமோ? பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ?'

தெய்வப் புலமை பெற்ற திருவள்ளுவரின் பிறந்த இடமும், வளர்ந்த முறையும், அவர் பெற்றோரது குலமும், நலமும், அவர் கற்ற கல்வியும் மற்றெல்லாம் தெளிவாகத் தெரியவொண்ணாத புதை பொருள்களாயிருக்கின்றன. அவரது வரலாறு பலவாறு பகரப்படுகின்றது. திருவள்ளுவர் தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்தவர் என்பதும், இல்வாழ்க்கையில் நின்று ஒழுகினவர் என்பதும், மக்களை ஈன்றவர் என்பதும், தெய்வப் புலவர் என்பதும், அறவோர் என்பதும், அவர் அருளிய நூலால் இனிது விளங்குகின்றன. திருக்குறள் தமிழ்நாட்டுக்கு மட்டும் பயன் படுவதாய் அமையவில்லை. உலகுக்கு என்று ஒரு நூல் அளித்த

ஒருவரை ஈன்ற பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. 'உலகுக்கென்று ஒரு நூலை அளித்த ஒருவரை உலகவர் என்று கோடலே சிறப்பு' என டாக்டர் மு. வரதராசன் கூறுகிறார். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து—வான் புகழ்கொண்ட தமிழ்நாடு" என்று பாரதியார் பாடியதும் ஈண்டுக் கருதற்பாலது.

## திருக்குறள்

திருவள்ளுவரது நூல் அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பாலால் ஆக்கப்பட்டது.

திருக்குறளின் உட்கிடக்கையைப் பலபடக் கூறலாம். அவற்றுள் உயிர்ப்பாய் ஒளிர்வது ஒன்று. அஃது 'உலகம் ஒரு குலம்' என்பது. உலகப் பொதுமறையான திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 1330 குறட் பாக்களைக் கொண்ட இந்நூல் 133 அதிகாரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அறத்துப்பாலின் கீழ் 38 அதிகாரங்களும் பொருட் பாலின் கீழ் 70 அதிகாரங்களும் காமத்துப் பாலின்கீழ் 25 அதிகாரங்களும் உள. வள்ளுவரின் குறள் என்றும் அணையாத கலங்கரை விளக்கம் ஆகும். உலக இலக்கியங்களிலேயே வாழும் கலைக்கு வழிகாட்டக்கூடிய நூல்களில் ஒருசிலவே இதற்கு இணையாக உள்ளன. குறள், எளிய இனிய அமைதி யான வாழ்வு வாழ்வதற்கு வழிமுறைகளை வகுத்துக் கொடுத் துள்ள கவிதைப்பெட்டகம். இதன் தத்துவம் வற்றாத அருவி. இதன் கருத்துகள் பிரபஞ்சத்தைத் தழுவியவை. இதன் புலமை ஆழமானது. இதில் கண்டுள்ள மனிதாபிமான உணர்வு உலகம் தழுவியது. இரத்தினச் சுருக்கமாகக் கருத்துகளைச் சொல்வதில் இதற்கு இணையான நூலே இல்லை. கருத்துகளை முறைப் படுத்தியிருக்கும் பாணி வியப்பிற்குரியது. கவிதை அமைப்பு மிகச் சிறப்பு வாய்ந்தது. இந்நூலைப் பயன் தரத்தக்கது எனக் கருதித் திறக்கின்றோம். அதை மூடும்பொழுது மகிழ்ச்சியுடனும் பலனுடனும் மூடுகின்றோம். கடந்த 20 நூற்றாண்டுகளாகப் பல இனங்களை, சமயங்களை, மொழிகளைச் சார்ந்தோர் இந்நூலைப் படித்து இதனைப் பாராட்டியுள்ளனர். திருவள்ளுவரின் உள்ளம் மிக உயர்ந்தது. மனித வாழ்வை அவருடைய நோக்கில் பார்த்து வியப்புறுவதுடன், நன்றி செலுத்தவும் கடமைப்பட்டுள் ளோம். இங்கே எடுத்துக்கொள்ளப்படுவது அறத்துப்பாலில் கூறப்படும் அறக்கோட்பாடுகளாகும். வாழ்க்கையின் உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு, எனக் கூறப்படுகின்ற நான்காயினும், வள்ளுவர் முதல் மூன்றையே முப்பாலாக

வகுத்துக் கொடுத்துள்ளார். இதுகொண்டு அவர் வீடுபேற்றினைப் புறக்கணித்துவிட்டார் என்று பொருளன்று. அறவழியிலே ஒழுகி, அறவழியிலே பொருளை ஈட்டி, அறவழியிலே ஈட்டிய பொருளைக் கொண்டு தூய இன்பத்தை நுகர்வோன் இறுதியில் இயல்பாகவே வீடுபேற்றினை அடைவான் என்பது சொல்லாமலேயே புலனாகக்கூடிய ஒன்று.

**அறத்துப்பால்**

இப்பாலில் 38 அதிகாரங்கள் உள. இவை 1. முதலியல் (4 அதிகாரங்கள்) 2. இல்லறவியல் (20 அதிகாரங்கள்) 3. துறவறவியல் (13 அதிகாரங்கள்) 4. ஊழியல் (1 அதிகாரம்) என நான்கு இயல்களாகப் பிரிக்கப்படுகின்றன.

அறமாவது — செய்வனவும் தவிர்வனவுமாகிய நடக்கை முறைகள். அறம்—செய்வன தவிர்வனவற்றை அறுதி செய்யப் பட்டது, வரையறை செய்யப்பட்டது என்னும் பொருளது. அறு + அம்—அறம்; தொழிற்பெயர். பால்—பிரிவு. இலக்கியத் துறையில் அறமும் பொருளும் புறப்பொருள் எனவும், இன்பம் அகப்பொருள் எனவும் வழங்கப்பெறும்.

அந்நடத்தை முறைகள் இல்லறம், துறவறம் என இருவகைப் படும். இல்லறமாவது—ஆணும் பெண்ணுமாகிய வாழ்க்கைத் துணைவர்கள் மக்கள், தமருடன் கூடித் தமது முயற்சியால் பொருளீட்டிப் பகுத்துண்டு வாழும் இல்வாழ்க்கை நிலை. துறவறமாவது—இல்லறத்தே இன்புற்று வாழ்ந்து, பருவமுதிர்ந்த விடத்துக் குடும்பத்தைத் தம் மக்களிடம் ஒப்படைத்துவிட்டுப் பொருட்பற்றின்றி, அதாவது தன்னலமின்றிப் பொதுநலஞ் செய்து வாழும் துறவு வாழ்க்கை நிலை. இயல்—இலக்கணம்.

**குறள் கூறும் அறம்**

அறம் : ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை; அறத்தைப் போற்றாமல் மறப்பதைவிடக் கெடுதியானதும் இல்லை.

> 'அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
> மறத்தலின் ஊங்கில்லை கேடு'.

நன்னெறியும் தீநெறியும் : உலகில் நன்னெறி, தீயநெறி என இருநெறிகள் உண்டு. நன்னெறியைப் போற்றி, தீமைகளை அகற்றி மக்கள் வாழவேண்டும் என்பது வள்ளுவரின் அடிப்படை

யான கருத்தாகும். நன்னெறி, தீநெறி இவை இரண்டின தன்மையினைப் பகுத்தறிந்து, மக்களை எது நல்வழிப்படுத்து கின்றதோ, அதுவே அறிவென்றார்,

'சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு'.

மனம் போன போக்கெல்லாம் போகாது, தீநெறியை விலக்கி, நன்னெறியிற் செலுத்துவதே அறிவின் செயலாகும்.

**வினையின் பயன் :** தீச்செயல்கள் தீமை தருவதனால், அத் தீச்செயல்களைத் தீயைவிட மிகுதியாக அஞ்ச வேண்டும்.

'தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்'.

வினை செய்தார் தம் வினையின் பயனினின்றும் எக்காலத்தும் தப்பிப்பிழைப்பது இயலாது. ஒரு பொருளை எப்பொழுதும் பிரியாது தொடர்ந்து செல்லும் அதன் நிழலைப் போன்று தீவினை செய்தானை விட்டு அவ்வினை விலகாது. பின்சென்று சுடும் என்பது உண்மையாகும். இக்கருத்தினை வள்ளுவர் கீழ்வரும் குறளால் உணர்த்துகிறார்.

'தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று'.

**தீவினையை நீக்கும் வழி :** தீவினையை மனம், மொழி, மெய் என்னும் மூன்று கரணங்களாலும் நீக்குதல் வேண்டும். அதாவது, தீய எண்ணங்களை மனம் சிந்தித்தல், தீய சொற்களை வாய் புகலுதல், தீயதொழில்களை உடல் செய்தல் ஆகிய மூன்றினையும் நீக்க வேண்டும். தீய சொல்லுக்கும் தீய செயலுக்கும் தீய எண்ணமே காரணமாக இருப்பதால், அத்தீய எண்ணம் தோன்று வதற்கு நிலைக்களமாயிருக்கும் மனம் எப்பொழுதும் மாசற்றதாய், தூயதாய் விளங்க வேண்டும். இதுபற்றியே வள்ளுவர்,

'மனத்துக்கண் மாசில னாதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற'.

என்று அருளிச் செய்தார். ஒருவன் தன் மனத்தில் குற்றமில்லாத வனாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே; மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத்தன்மை உடையவை.

**அழுக்காறு:** ஒருவன் மனத்தின்கண் நிகழுகின்ற தீய கருத்துகள் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என நால்

வகைப்படும். இவற்றுள் பிறர் ஆக்கங்கண்டு மனம் பொறாமையாகிய அழுக்காறு மனத்தில் நிகழுமாயின், அஃது இம்மையில் செல்வத்தை ஒழித்து, மறுமையிலும் தீயுழி உய்த்துவிடும். அழுக்காறு உடையவனிடம் ஆக்கம் இல்லை என்பதும், அதை உடையவன் கெடுதல் ஒருதலை என்பதும் வள்ளுவரின் முடிந்த முடிவாகும்.

**அவா :** அவா என்பது பிறரை வஞ்சித்து அவர் பொருளை மறைத்துக் கைப்பற்றக் கருதும் மன நிகழ்ச்சியாம். பிறர் பொருள்களாகிய உடைமையையும், மனையாளையும் இச்சித்துக் கைப்பற்ற வழிதேடும் ஒருவன் கெடுதல் ஒருதலையாம்.

> 'அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
> பொல்லாத சூழக் கெடும்'

என்னும் குறளால் பிறர் பொருளைக் கவர, வஞ்சிக்கக் கருதும் ஒருவன் கெடுவது திண்ணம் என்பது உணர்த்தப்படுகிறது. இனிப் பிறன் பொருளாகிய இல்லாளை விரும்புதலும் பெரும் பேதைமை எனக் கருதப்படுகின்றது.

**வெகுளி :** மனத்திலே நிகழும் மற்றொரு நிகழ்ச்சி வெகுளி எனப்படும் சினம். அது கேடு பயப்பதால், அதனை வேரோடு அழிக்க வேண்டும்.

> 'தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
> தன்னையே கொல்லும் சினம்'.

**தீய சொற்கள் :** தீயசொல் என்பது குறளில் பயனில் சொல்லென்றும், பிறரைப் பழிக்கும் சொல் என்றும், இன்னாச்சொல் என்றும், பொய்ச் சொல் என்றும் நான்காக வகுத்துக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய பயனற்ற சொற்களைப் பாராட்டிப் பேசும் இயல்புடையவர் மக்கள் அல்லர்; மக்கட் பதர் என வள்ளுவர் கூறுகின்றார். ஆகவே ஒருவன் பயனுடைய சொற்களையே சொல்லவேண்டும் என்பதும் பயனற்ற சொற்களை நீக்கவேண்டுமென்பதும் வள்ளுவர் கருத்தாகும்.

பிறரைப் பழிக்கும் சொல் என்பது அவர் இல்லாதபோது அவரை இகழ்ந்துரைக்கும் புறங்கூறுதலாகும். இவ்வாறு புறங்கூறி வாழ்வதைவிடச் சாதல், அறம் கூறுகின்ற ஆக்கத்தைத் தரும் என்பதைப்

> 'புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
> அறங்கூறும் ஆக்கம் தரும்'

எனக் குறள் கூறுகின்றது.

**இன்னாச்சொல் :** கேட்பவர்கட்குத் துன்பத்தைப் பயக்கும் சொல் இன்னாச்சொல் ஆகும். இனிய சொற்கள் இருக்கும்பொழுது இன்னாச்சொற்களைச் சொல்வது கனி இருக்கும்பொழுது காயை விரும்புவதற்கு ஒப்பாகும் என வள்ளுவர் கூறுவதைச் சிந்திப்பது சிறப்புடைத்து.

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.'

**வாய்மை :** உண்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்றால், பிறருக்குத் தீங்கு சிறிதும் உண்டாக்காத சொற்களைச் சொல்லுதல் என வள்ளுவர் கூறுகின்றார். கீழ்வரும் குறள் இதை உணர்த்தும்.

'வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.'

குற்றம் நீங்கிய நன்மையைத் தருமாயின் பொய்ம்மைச் சொற்களும் உண்மைச் சொற்களாகும். எடுத்துக்காட்டு, கந்தனை மாறன் உதைக்க முயற்சி செய்கிறான். கந்தன் நம்மிடம் அடைக்கலம் புகுகிறான். நாம் அவனை அறைக்குள் மறைத்து வைக்கிறோம். கந்தனைத் தேடிவந்த மாறன் நம்மைப் பார்த்து 'கந்தன் இங்கு வந்தானா? கண்டீர்களா?' என்று வினவுகிறான். நாம் 'அவன் இங்கு வரவில்லை. நாங்கள் காணவில்லை' என்று பொய் பேசுகிறோம். மாறன் திரும்பிப் போய்விடுகிறான். கந்தன் உதையில்லாமல் தப்புகிறான். இப்பொய் கந்தனுக்கு நன்மை பயந்ததல்லவா? உண்மையைச் சொல்லியிருந்தால் கந்தன் உதைபட்டிருப்பானல்லவா? இதுபற்றியே வள்ளுவர்,

'பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்'

எனக் கூறினார்.

**இன்னா செய்யாமை :** இப்போதுள்ள துன்பமெல்லாம் முன்பு பிறருக்குத் துன்பம் செய்தார் மீதே உள்ளன. ஆதலால் பின்பு துனபப்படாமையை விரும்புகின்றவர்கள் இப்போது பிறர்க்குத் துன்பம் செய்யமாட்டார். முன்பு பிறர்க்குத் துன்பம் செய்தவர் இப்போது துன்புறுகின்றனர்.

'நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்'.

'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்'.

கொலை செய்யாமை: ஓர் உயிர்க்கு இன்னா செய்தலினும், அதனைக் கொல்லுதல் பன்மடங்கு தீமை பயக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ? நல்லவழி என்று சொல்லப்படுவது எது என்றால், எவ்வகை உயிரையும் கொல்லாமையைக் கருதும் நெறியே.

'நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழும் நெறி'.

ஊன் உண்ணாமை: பெரும்பாலும் கொலை நிகழ்வது ஊனைத் தின்று ஊனைப் பெருக்கும் பொருட்டே ஆகும். இதுபற்றியே வள்ளுவர் அவ்வழக்கத்தைக் கண்டித்துத் தனது உடம்பை வளர்த்தற்குத் தான் வேறோர் உயிரின் உடம்பை உண்பவன், அருளை எவ்வாறு ஆள்வான்? தன் உடம்பை வளர்க்கப் பிறிதோர் உடம்பை உண்பது அருளாகாது எனக் கூறினார். இதைக் கீழ்வரும் குறள் உணர்த்தும்.

'தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்'.

தவம்: உலகிலுள்ள ஓர் உயிர்க்கும் தீங்கு செய்யாதிருத்தலே உயரிய தவமென வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். ஆகவே தீய எண்ணங்களும், தீய சொற்களும், தீய செயல்களும், தீமையே பயக்குமாதலால், மனம்,மொழி, மெய்யாகிய மூன்றாலும் தீமையை விலக்கவேண்டும் என்பது பெறப்படுகின்றது. தமக்கு உற்ற நோயைப் பொறுத்துக்கொள்ளலும் பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையும் ஆகிய அவ்வளவே தவத்தின் வடிவம். இதை வள்ளுவர் இவ்வாறு உணர்த்துவார்.

'உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு'.

அன்பு: தீவினை அழியுமாயின் நல்வினை ஓங்கி வளரும் என்பது ஓர் உண்மையாகும். தீமை பயக்கின்ற மறம் தளர்ந்து

அறம் வளர்ந்தோங்க வேண்டுமாயின் அன்பெனும் அருங்குணம் போற்றி வளர்க்கப்படவேண்டும். அன்பில்லாதவர் எப்பொருளையும் தமக்கே உரியதாக எடுத்துக் கொள்வர். அன்புடையவர் தம் பொருள்களையே அன்றி உடம்பினையும் பிறர்க்கு உரியதாக ஆக்குவர். இதனைக் கீழ்வரும் குறளால் உய்த்துணரலாம்.

'அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு'.

**தீமை செய்தார்க்கும் நன்மை செய்தல்:** பிறர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்வது நன்றெனக் கருதப்பட்டாலும், அத் தீமையை மறத்தல் அதனினும் நன்று. இத்துடன் நின்றுவிடாமல் தீமை செய்வார்க்கு அவர் நாணும்படி நன்மையும் செய்தலே சான்றாண்மைக்கு அழகாகும்.

'இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'

என வள்ளுவர் கூறுகிறார். தீமை செய்தவனுக்கு நன்மையே ஒருவன் செய்யுங்கால், அவன் நெஞ்சே அவனைச் சுட்டுணர்த்தி நல்வழிப்படுத்தும். இதையே வள்ளுவர்

'இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு'

என்று கூறுகிறார்.

**துறவற நெறி:** துறவறம் என்னும் உயரிய நெறியில் நிற்கும் பெரியார், இவ்வுலகின் நிலையாமையை உணர்ந்து உடலோடு உயிர் ஒன்றி நிற்கின்ற காலத்தே மறுமைப்பயனை அளிக்கவல்ல முறையினைத் தேர்ந்து ஒழுகி இருவகைப் பற்றையும் அறவே ஒழித்த ஆன்றோர் ஆவர். புறமாகிய செல்வத்தின்கண்ணும், அகமாகிய உடம்பின் கண்ணும் உள்ள பற்றை அறவே விடுதலே துறவறமெனப்படும். அகத்தில் அன்பில்லாதார் செய்யும் பூசனையும், பூவும் நீரும் பயன்படாதவாறுபோல அகத்துறவில்லாத போலியர் புறத்தே துறவியர்க்குரிய உடைஉடுத்தலாற் போந்த பயன் யாதுமில்லை. துறவறத்திற்குரிய உயரிய நெறியிற் செல்லாது அதற்குரிய வெளிவேடம் போடுவோனை உலகம் பழித்து ஒழித்துவிடும் என்பதை அழகுபட வள்ளுவர்

'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்'

எனக் கூறுகிறார்.

**இல்லறமும் துறவறமும் :** இவ்விரு நெறிகளுக்குள் எந்நெறி சிறந்தது என்ற ஒரு சிக்கல் தோன்றுவது இயல்பு. திருவள்ளுவர் இவ்விரு நெறிகளையும் இரு கண்ணெனவே போற்றுகின்றார். 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று இல்லறத்தைச் சிறப்பித்த வள்ளுவர், 'தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்' என்று துறவறத்தின் சிறப்பையும் கூறினார்.

> 'அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றில்
> போஒய்ப் பெறுவ தெவன்'

என்று இல்லறத்தை வியந்து கூறிய நாயனார்

> 'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
> மற்றை யவர்கள் தவம்'

என்று துறவறத்தைப் பாராட்டினார். ஆகவே இவ்விரு பெரு நெறியில் எந்நெறியில் நின்றாலும், அறத்தைப் போற்றி வளர்க்கும் பெரியார் அழியாத வீடுபேற்றை அடைவர் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

## 5.7. இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழகத்தின் பங்கு

**தொடக்கம்**

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன்பே தோன்றிய மூத்த குடிமக்களான தமிழர்கள், மிகச் சிறந்த பண்பாட்டையும், நாகரிகத்தையும் உடையவர்கள் என்பதை உலக வரலாற்று ஆசிரியர்கள் ஒருமனதாக ஏற்றுக் கொள்கின்றனர். இவர்கள் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு வழங்கியுள்ள கொடை அளவிடற்கரியது.

இந்தியப் பண்பாட்டில், திராவிடப் பண்பாட்டுக் கூறுகள் முதன்மையானவையாகவும் முக்கியமானவையாகவும் உள. இதில் திராவிடப் பண்பாட்டின் கூறுகள் ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை என வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

**மொழி :** மொகஞ்சதாரோ, ஆரப்பா போன்ற இடங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திராவிடர்கள் மிக உயர்ந்த நாகரிகத்துடன் வாழ்ந்ததை அறிகிறோம். வடநாட்டு மொழிகள் பலவற்றிலும், தென்னாட்டு மொழிகள் அனைத்திலும், தமிழ்ச்

சொற்களை இன்றும் காணமுடிகின்றது. குறிப்பாக, மலையாள மொழியில் தமிழ்ச் சொற்கள் சொல்ல இயலா அளவிற்கு எடுத்தாளப்பட்டுள்ளன. இந்தியாவிற்கு வெளியே கடல் கடந்த நாடுகளிலெல்லாம், இந்திய நாகரிகத்தோடு சென்று பரவியுள்ள இந்திய மொழி தமிழ் மொழியே என்பது உலகறிந்த உண்மை. எடுத்துக்காட்டிற்குச் சில சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. வேத காலத்திலேயே, சமஸ்கிருதம் எனப்படும் வடமொழியில் கலந்த சொற்கள் பல. அவற்றில் சில கீழே வருகின்றன.

| தமிழ் | வடமொழி |
|---|---|
| 1. பழம் | 1. புலா (phala) |
| 2. மயில் | 2. மயூர |
| 3. கலம் | 3. கல (khala) |
| 4. ஏலம் | 4. ஏலா |
| 5. பல்லி | 5. பல்லீ |
| 6. புற்று | 6. புத்திகா |

வடமொழியில் பிற்காலத்தில் நுழைந்த தமிழ்ச் சொற்கள்.

| தமிழ் | வடமொழி |
|---|---|
| 1. விரல் | 1. விரல |
| 2. முத்து | 2. முக்தா |
| 3. எருமை | 3. ஹெரம்வா |
| 4. குண்டு | 4. குண்டா |
| 5. குயில் | 5. கோகில |
| 6. மருந்து | 6. மருத்த |
| 7. பூசை | 7. பூஜை |
| 8. ஆன்மந்தி | 8. ஹனுமந்து (அனுமந்து) |

தமிழில் நீர் என்று சொல்லப்படுவது கன்னட மொழியில் நீரு, தெலுங்கில் நீளு எனப்படுவதையும், தமிழில் வண்டி என்பது தெலுங்கில் பண்டி எனக் கூறப்படுவதையும் காண்கிறோம். பல தூய தமிழ்ச் சொற்கள் மலையாள மொழியில் இன்றும் வழக்கிலிருப்பதைக் காணலாம். சோறு, அஞ்சல் போன்ற சொற்கள் அதே பொருளில் இன்றும் வழங்கிவருகின்றன.

### சமயமும் சமய இலக்கியமும்

சிறப்பு வாய்ந்த பாலி மொழிக்கு முதன் முதலில் இலக்கணத்தை வகுத்துக் கொடுத்த கச்சாயனர் காஞ்சிமா நகரைச் சேர்ந்தவர். பௌத்த சமயத்தை 150-க்கும் மேற்பட்ட

மொழிகளில் விளக்கினாலும் அதற்கென ஒரு காப்பியத்தைத் தமிழைத் தவிர வேறு எந்த மொழியும் அளிக்கவில்லை. 'மணி மேகலை' என்ற சிறப்பு வாய்ந்த காப்பியத்தைத் தமிழ்மொழி அச் சமயத்திற்கு வழங்கிச் சிறப்புச் செய்கின்றது.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'. சங்கரர், இராமானுசர், இராமானந்தர், இராமகிருஷ்ணர், விவேகாநந்தர், காந்திபடிகள் ஆகியவர்களின் கருத்து வளமும், பண்புகளும் திருவள்ளுவருடைய திருக்குறளின் மரபில் வந்தவை என்பது டாக்டர் சுவைட்சரின் முடிவாகும்.

இந்தியப் பெருநாட்டிற்குச் சமயத்துறையில் எண்ணற்ற பக்தி இலக்கியங்களை வாரிவழங்கிய பெருமை தமிழகத்தைச்சார்ந்தது. விசிட்டாத்துவைத நெறியை வழங்கிய இராமானுசரும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் எனும் அரிய வைணவக் கருவூலத்தை அளித்த ஆழ்வார்களும் தோன்றியது தமிழகமே. சிறந்த சைவ நெறியை எடுத்துரைக்கும் 'சைவ சித்தாந்தம்' தோன்றியதும் தமிழ் மண்ணிலே. இதற்கு விளக்கமாக அமைந்தது சிவஞான போதம். இதை இயற்றிய மெய்கண்டாரும் ஒரு தமிழ்ச் சான்றோர். இஃது ஒரு சிறந்த தத்துவப் பெட்டகம். நம்மாழ்வாரின் திருவாய் மொழியை, திராவிட உபநிடதம் என வேதாந்த தேசிகர் அழைப்பார். உலகத்தின் தலைசிறந்த மொழிகள் அனைத்திலும் மொழியாக்கம் செய்யப்பட்டு, அதனுடைய அறிவியல், பொருளியல், இன்பவியல் கருத்துக்களுக்காகப் பெரிதும் போற்றிப் பாராட்டும் நிலையைப் பெற்றிருக்கும் நூல் திருக்குறள். இது வடஇந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதே போன்று திருமூலர் என்ற சித்தருடைய திருமந்திரம் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந் நாட்டுச் சித்தர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், இராமலிங்க அடிகள், இரமண மகரிஷி, தாயுமானவர் போன்ற அரிய ஞானிகள் இந்தியா விற்கு மட்டுமன்றி உலகிற்கே அரிய சமய, தத்துவ, அறநெறிகளை வழங்கி வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

தமிழ்மொழி ஒன்றில்தான் கிறித்துவ, இசுலாமிய இலக்கியங் களும், வழிபாட்டுப் பாடல்களும் காணப்படுகின்றன. வேறு எந்த இந்திய மொழியிலும் எல்லாச் சமய நூல்களும் இவ்வாறு முதல் நூல்களாக அமைந்திருக்கவில்லை. கிறித்துவ சமயத்து விவிலியத்தின் ஒரு பகுதியான புதிய ஏற்பாட்டைக் காவியமாக்கி, முதன் முதலில் கொடுத்திருக்கும் பெருமை தமிழகத்தைச் சாரும். இச் சீரிய பணியைச் செய்து கொடுத்திருப்பவர் இந்துவாக

இருக்கும் கவியரசு கண்ணதாசனாவார். பக்தி நெறியின் பழங்காலச் சுவடிகளைத் தமிழ் அல்லாத பிற இந்திய மொழிகளில் காண்பது அரிது. பக்தி நெறியில், இந்தியாவிலேயே சீரிய இடத்தைப் பெற்றிருப்பது தமிழகம். பக்தி நெறிக்குத் தாயகமே தமிழ்நாடு. மொகஞ்சதாரோ நாகரிகத்தில் இடம் பெற்றுள்ள அன்னை வழிபாடு ஆரியர்கட்குத் தமிழரின் கொடை. அத்துவிதம் என்னும் வேதாந்த நெறியை உணர்த்திய ஆதிசங்கரர் பண்டைத் தமிழகத்தில் தோன்றியவர் என்பது நாடறிந்த உண்மை. இன்றைக்கு, இந்தியச் சிந்தனையில் அத்துவித வேதாந்தம் அறிவின் ஒளிவிளக்காய் விளங்கக் காரணமாக இருப்பவர் சங்கரரே ஆவார்.

**ஒருமைப்பாடு**

இன்று இந்தியாவிலும், ஏன் உலகெங்கும் வானளாவப் பேசப்படும் ஒருமைப்பாட்டுக் கோட்பாடு, உலகத்திலேயே முதன் முதலில் தோன்றியது தமிழகத்தில் என்பதை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற நயம் மிக்க இச்சொற்றொடர் ஒருலக ஒருமைப்பாடு என்னும் உணர்வினை உணர்த்தவில்லையா? தமிழ் இலக்கியத்தின் உயிரோட்டமான பகுதி இதுவல்லவா? சங்க காலம் முதல் இன்றுவரை இந்த ஒருமைப்பாட்டு உணர்வை நம் இலக்கியங்கள், இந்தியப் பெரு நாட்டிற்கு உணர்த்தி வந்துள்ளன. குறிப்பாக வள்ளலாரும், பாரதியும் 'ஆன்ம நேய ஒருமைப் பாட்டை' மிகவும் வலியுறுத்துகின்றனர்.

**கல்வெட்டுகள்**

இந்நாட்டில் அதிகமான கல்வெட்டுகள் வெளியிட்டோரே தமிழர். இதில் சிறப்பான இடத்தைப் பெறுவோர் சோழ மன்னர்கள். கல்வெட்டுகள் மூலமாக இந்நாட்டின் நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளை அறிந்துகொள்ள முடிகின்றது.

**சைவ உணவு**

பழம்பெரும் பாரத நாட்டிற்கு 'ஊன் உண்ணாமை' என்னும் உயரிய சைவ உணவு நெறியை வழங்கியவன் தமிழன். வேத காலம் முதற்கொண்டு ஆரியர்கள் ஊன் உண்டதைக் காண்கின்றோம்.

**அணை கட்டுதல்**

தமிழன் காடுதிருத்தி அதைக் கழனியாக்க முற்பட்டபோது நீர்ப்பாசன முறையைப்பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டான்.

ஆற்றுநீரை அதற்குப் பயன்படுத்தத் தமிழன் எண்ணலானான். ஆற்றிற்குக் குறுக்கே அணையைக் கட்டி, கால்வாய்கள் அமைத்து வாய்க்கால் வழியாக வயல்களுக்கு நீரைக்கொணர்ந்து வேளாண்மை செய்தவன் தமிழன். கல்லணை, தமிழனின் பொறியியல் ஆற்றலை எடுத்தியம்பும் ஏற்றமிகு சின்னம். இம் முறையும் தமிழகத்திலிருந்து இந்தியாவிற்குப் பரவியது.

### கடல் வாணிபமும் கப்பல் கட்டுதலும்

இந்தியாவிலேயே முதன் முதலில் கப்பல்கட்டும் கலையைக் கற்றிருந்தவன் தமிழன். இவனிடமிருந்தே பிற இந்திய நாடுகள், இக்கலையைக் கற்றுக்கொண்டன. தமிழ்மொழியில் கப்பலைக் குறிக்கப் பயன்படும் ஒரு சொல் **நாவாய்;** இதுவே ஆங்கிலத்தில் **நேவி** (Navy) என மாறியது.

பிற நாடுகளுடன் கடல் வாணிபத்தை முதன் முதலில் கொண்டிருந்தவன் தமிழன். இந்திய வரலாற்றில் வேறெந்தப் பேரரசும் காணமுடியாத அளவிற்குக் கடல்கடந்த பேரரசினைப் பிற்காலச் சோழப் பேரரசர்கள் நிறுவினர். இந்தியப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் கீழை நாடுகளான பருமா, சயாம், அந்தமான், சீனம், சாவா, சுமத்திரா, மலேயா போன்ற நாடுகளுக்குச் சுமந்து சென்றவர்கள் தமிழர்கள்.

### மருத்துவ முறை

தமிழர் இந்தியாவிற்கு அளித்துள்ள செல்வங்களுள் சித்த மருத்துவமும் ஒன்றாகும். வாழ்க்கை முறையை ஒட்டியும், தத்துவ அறிவியல் முறைகளுக்கு ஏற்பவும் என்றும் அழியாதிருப்பது தமிழ் மருத்துவம் எனும் சித்த மருத்துவமே ஆகும். உலகிலேயே முதன் முதலில் தோன்றிய மருத்துவ முறை சித்தமருத்துவ முறை என இன்றைய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவையன்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வள்ளுவர் தமது குறளில் மருத்துவத்திற்குத் தனியாக ஓர் அதிகாரம் வகுத்துள்ளார். அதில் சித்த மருத்துவத் தத்துவத்தில் குறிப்பிடப்படும் வாதம் (வளி), பித்தம் (அழல்), கபம் (ஐயம்) இவற்றை ஒரு குறட்பாவில் கீழே கண்டவாறு குறிப்பிடுவார்.

> 'மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
> வளிமுதலா வெண்ணிய மூன்று'

—(குறள் 941).

இக்குறட்பாவினின்று சித்த மருத்துவம் அக்காலத்திலேயே சிறப்புற்றிருந்ததை அறியலாம்.

**உழவுத் தொழில்**

ஆரியர் வருகைக்கு முன்பே திராவிடர் உழவு, வாணிபம் முதலிய தொழில்களைச் செய்து வளர்ச்சி பெற்றிருந்தனர் என்றும் அறிகின்றோம். ஆகவே இந்தியாவிற்கு, வேளாண்மைத் தொழிலையும், வாணிபத்தையும் நல்லமுறையில் செய்வதற்குரிய நெறிமுறைகளைத் தமிழகம்தான் கற்பித்திருக்கவேண்டும் என்பது புலனாகிறது.

**ஊராட்சி முறை**

சங்ககாலம் முதற்கொண்டே தமிழக வரலாறு சிற்றூர், பேரூர், மாநிலம் ஆகியவற்றில் நிலவியிருந்த சிறந்த தன்னாட்சி முறையைப் பற்றிப் பேசுகின்றது. சோழர் ஆட்சி முறையில், ஊராட்சி முறையே சிறந்து விளங்கிற்று. இம்முறை தமிழகம் இந்தியாவிற்கு வழங்கியுள்ள பரிசாகும்.

**திருக்கோயில்கள்**

வானுயர்ந்து நின்று இந்நாட்டின் சமயப்பண்பாட்டு வளர்ச்சி களை எடுத்துக்காட்டும் அழகிய சின்னங்கள் தமிழகத்தின் திருக் கோயில்களாகும். இக்கோயில்கள் பண்பாட்டு மையங்களாகத் திகழ்ந்தன. இவை உயர்ந்த கட்டட, சிற்ப, ஓவியக் கலைகள் நிறையப் பெற்றனவாக விளங்கின. பல்லவ, சோழ, பாண்டிய மன்னர்கள் காலத்தில் இக்கலைகள் பெரிதும் போற்றப்பட்டு எண்ணற்ற கோயில்கள் எழுந்தன. இவை அனைத்தும் தமிழகம், இந்தியாவிற்கு வழங்கியுள்ள மிகச் சிறந்த கொடை யாகும். இதே பாணியில் வடஇந்தியாவில் பல கோயில்கள் எழுந்துள்ளதைக் காணலாம். திராவிடக் கலைப்பாணி உலகமே உவந்து வியக்கும் வண்ணம் அமையப் பெற்றுள்ளது. சமண, பௌத்த சமயங்களைச் சார்ந்த கோயில்களையும், குடைவரைக் கோயில்களையும் தமிழகமெங்கும் காணமுடிகின்றது. திருச்சி, தஞ்சை, சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர், மகாபலிபுரம், சுசீந்திரம், திருவரங்கம், திருக்கழுக்குன்றம், கன்னியாகுமரி, இராமேஸ்வரம் போன்ற இடங்களில் மிகச் சிறப்புவாய்ந்த இந்து சமயத் திருக்கோயில்களைக் காணலாம்.

**இசைக் கலை**

உலகிற்கே பல அழகுக் கலைகளை அள்ளி வழங்கிய தமிழகம் இசைக்கலையிலும் முதலிடம் பெற்றுள்ளது. சங்ககாலம் முதற் கொண்டே இசைத் தமிழ் மிகச்சிறப்பான வளர்ச்சியைப் பெற்றிருந் ததை நாம் காண்கின்றோம். பண், திறம் என்னும் இரு பிரிவுகளை

உடையது பண்டைத்தமிழ் இசை. 'மனிதனுடைய வரலாற்றில் ஆயிரத்து இருநூறு வருடங்களுக்குமுன் எவ்விதமான சாஸ்திரிய சங்கீதமும் இதர தேசங்களில்இருந்தது என்று கூறுவதற்குப் போது மான சான்றுகள் இல்லை' என்று இசைக்கலைப் பேராசிரியர் திரு. சாம்பமூர்த்தி கூறுகிறார். பழந்தமிழ் இசை ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் தோன்றியிருக்க வேண்டும் என்பது இவரது கூற்று. கருநாடக சங்கீதம் என்று வழங்கும் தென்னாட்டு இசைக்கலை தமிழ் மக்களின் பரம்பரைச் சொத்து. சிலப்பதிகார காலத்திற்கு முன்னாலிருந்த தமிழ் நாட்டில் இந்த இசைக்கலை உருவம் பெற்று வளர்ந்தது' என்று அறிஞர் இரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) தெளிவுறுத்தியுள்ளார். காலப்போக்கில் பழந்தமிழிசையில் திரிபுகளும், மாற்றங்களும் உண்டாயின. அதுவே 'கருநாடக இசை' என்னும் புதிய பெயரால் அழைக்கப்பட்டது. எனவே கருநாடக சங்கீதம் என்பது தமிழிசைக்குப் பிற மொழியார் வைத்த பெயர் என்பது புலனா கிறது.

இசைத் துறையில் மும்மூர்த்திகள் என அழைக்கப்படும் தியாகராஜர், சியாமா சாஸ்திரி, முத்துசுவாமி தீட்சிதர் மூவரும் தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் என்னும் திருத்தலத்தில் தோன்றிக் கருநாடக இசையை வளர்த்து இந்தியாவிற்குப் பெருமைதேடித் தந்துள்ளனர். வடநாட்டு இந்துஸ்தானி இசையிலும், கருநாடக இசையின் தாக்கத்தைப் பெருமளவிற்குக் காணமுடிகின்றது.

**நாட்டியக் கலை**

இந்நாட்டின் மற்றொரு சிறப்புமிக்க கலை பரதநாட்டியம். இவ் வரிய கலை தோன்றி வளர்ந்தது தமிழ்நாட்டில். தமிழ்நாட்டைச் சேர்ந்த பரத முனிவர், இக்கலையின் நுட்பத்தை அறிவியல் முறைப்படி ஆராய்ந்து காலச் சூழலுக்கேற்ப வடமொழியில் நாடறியப் பரதநாட்டியம் பற்றிய நூலை எழுதியதாக வடமொழி நாடக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இக்கருத்தும் தமிழ கத்திற்குப் பெருமையைச் சேர்க்கின்றது.

**வான நூற்கலை**

தமிழ் ஆண்டுத் தொகுப்பு முறை, வானநூல் ஆராய்ச்சிக்கு நல்ல தூண்டுகோலாக அமைந்துள்ளது. இந்தியாவில் நீண்ட நெடுநாள்களுக்கு முன்பே வானநூல் துறையில் ஆய்வுகளை நடத்தி வியத்தகு செய்திகளை இந்தியாவிற்கு முன்னோடியாக வழங்கிய பெருமை தமிழகத்தைச் சாரும்.

**நடுகல்**

அக்காலத்தில் தமிழகத்தில் போரில் எதிரிகளைக் கண்டு ஓடாமல், எதிர்த்து வீரத்துடன் போரிட்டு உயிர் நீத்தவர்கள் நினைவாக நடப்படும் கல், நடுகல் (Heroic stone) எனப்பட்டது. இவ்வழக்கத்தை முதலில் இந்தியாவில், தமிழகத்தில்தான் காண்கின்றோம். பின்பு இதைத் தமிழகம் இந்தியாவிற்கு வழங்கியுள்ளது.

**முடிவு**

தமிழகம் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அளித்துள்ள பங்கு அளவிடற்கரியது. மேலே கூறப்பட்டுள்ளவை அவற்றுள் மிகச் சிலவே.

# இயல் 6

## 6.1. இந்து சமயம்

**இந்து சமயம்—விளக்கம்**

இந்துக்களின் சமயமே இந்து சமயம். இன்றுள்ள சமயங்களில் இதுவே மிகப் பழமையானது. இஃது ஒரு தனிமனிதனால் நிறுவப்பெற்றது அன்று. இந்து சமயம், ஒரு குறிப்பிட்ட சமயச் சான்றோர்கள் போதித்த கொள்கைகளையுடையதுமன்று. கிறித்தவ சமயம், பௌத்த சமயம், இஸ்லாம் முதலிய சமயங்களைப்போல், இந்துசமயம் எந்த ஒரு தீர்க்கதரிசியாலும் ஏற்படுத்தப்படவில்லை. மேலே கூறிய மூன்று சமயங்களுக்கும் தீர்க்கதரிசிகள் உண்டு, அவை தோன்றியதற்கு வரலாறு உண்டு. ஆனால் இந்து சமயம் என்று தோன்றியதெனக் கூற முடியாது.

ஆரியர்கள் சிந்து நதிக் கரையில் வாழ்ந்தபொழுது அவர்களைச் சிந்துக்கள் அல்லது இந்துக்கள் எனப் பாரசிகரும் கிரேக்கரும் அழைத்து வந்தனர் என்றும், அதுபற்றி அந்த சிந்துக்களுடைய சமயமே இந்து சமயம் என ஆயிற்று என்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்திய நாட்டினரின் சமயமே இந்து சமயம் எனப் பொருள் கூறுவாரும் உளர். இவ்விளக்கம் அவ்வளவு ஏற்புடையதாக இல்லை. இந்து சமயம் எனும் பெயர் அதன் கொள்கையின் அடிப்படையில் எழுந்ததாகும். இந்து அல்லது ‘ஹிந்து’ என்ற சொல்லை ஹிம் + து எனப் பிரிக்கலாம். (ஹிம் = ஹிம்சையில் து = துக்கிப்பவன்)

ஓர் உயிர் எக்காரணத்தினால் வருந்துவதாயிருந்தாலும் அதற்காக வருந்தி அத்துன்பம் தனக்கு வந்ததாய்க் கருதி அதை அகற்ற எவன் ஒருவன் பணிபுரிகின்றானோ அவனே இந்து ஆவான்.

இந்து சமயத்தைச் சநாதன தருமம் எனவும் கூறுவர். இதன் பொருள் அழிவிலா அறம் என்பதாகும். இவ்வழிவிலா அறம் கடவுளால் காப்பாற்றப்படுவது என்பதோடு அதனால் நம்மையும் நித்தியராக்கமுடியும் என்பதையும் உணரவேண்டும். இதை

வைதிக தருமம் என்றும் அழைப்பர், இந்து சமயம் வேதங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதையும் அறிந்து கொள்வது நலம் பயக்கும். அன்றியும் திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்ந்நெறி, சன்மார்க்கம் என்பன போன்ற பல பெயர்களை இட்டு வழங்குவாரும் உளர்.

**இந்து சமயத்தின் பெருமைகள்**

1. உலகம் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையானது. அஃது ஒரு காலத்தில் உலகெங்கும் பரவியிருந்தது என்பதைத் தற்காலத் தொல்பொருள் ஆராய்ச்சி முதலியவற்றால் அறியலாம்.

2. பிறசமயங்களில் நாம் காணும் கொள்கைகள் பல இந்து சமயத்தில் அநாதியாகவே இடம்பெற்றுள்ளன. ஆகவே, உலகிலுள்ள அனைத்துச் சமயங்களுக்கும், தாய்ச் சமயம் இந்து சமயம் எனக் கொள்ளலாம்.

3. இந்து சமயம், பிற சமயங்களை இழித்துரைப்பதில்லை, அனைத்தையும் சகித்து அரவணைத்துச் செல்லுகின்றது.

4. இந்து சமயம் வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்ததன்று; ஒவ்வொரு கோட்பாட்டினையும் ஆராய்ந்து, ஐயங்களை அகற்றி அறிவினைப் புகட்டுவது.

5. மக்களைக் கட்டுப்பாடுகட்கு உட்படுத்தாது, உரிமை உணர்வோடு வாழச்செய்வது இந்து சமயம்.

6. இல்லற, துறவற இருநெறிகளின் வழி செல்வோரும் முக்திபெறலாம் எனக் கூறுவது இச்சமயம்.

7. சமய வாழ்வை உலக வாழ்வோடு இணைத்து மேற்செல்ல வழிவகுப்பது இந்து சமயம்.

8. அனைவரும் உயர்வு தாழ்வின்றி முக்திபெறத் துணை புரிவது இச்சமயம்.

9. அவரவர் தகுதிக்கேற்ப வீடுபேறு அடைவதற்குரிய வழிகளை வகுத்துக் காட்டியுள்ளது.

10. அவரவர்களின் வினைக்கேற்ப மறுபிறவி என்பது உண்டு என்பதோடு, இன்ப துன்ப வாழ்வுக்குக் காரணம் வினையே என்பதையும் எடுத்துக் கூறுகிறது.

11. அறிவியலாலும் உணர முடியாதவற்றை, இந்து சமயம் தனது மெய்ஞ்ஞானத்தால் இனிது எடுத்து விளக்குகிறது.

12. இந்து சமயத்தில் தத்துவம் பிரிக்க முடியாதவகையில் அமைந்துள்ளது.

13. கலைகளும் பண்பாடும் இந்து சமயத்தோடு இணைந்தே செல்லுகின்றன.

14. ஆன்ம விடுதலையை அடித்தளமாகக் கொண்டு இந்து சமயம் இயங்குகின்றது.

**இந்து சமய நூல்கள்**

1. **வேதங்கள்:** அவை நான்கு: இருக்கு, யஜுர், சாமம், அதர்வம் அல்லது அதர்வணம். வேதம் என்றால் அறிவு என்று பொருள்.

2. **ஆகமங்கள்:** இவை மொத்தம் இருபத்தெட்டு. ஆகமம் என்றால் ஆன்மாக்களின் பாசங்களை நீக்கி வீடுபேற்றை அருளுவது எனக் கொள்ளலாம்.

3. **சுருதிகளும் ஸ்மிருதிகளும்:** வேதங்கள், உபநிடதங்கள் இவை இரண்டும் சுருதிகள். இதிகாசங்கள், புராணங்கள், பகவத் கீதை போன்றவை ஸ்மிருதிகள்.

4. **ஆறு தரிசனங்கள்:** நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம்.

5. **வைணவாகமங்கள்:** இவை 108 என்பர்.

6. **சாக்தாகமங்கள்:** சக்தியை முழுமுதலாகக் கொள்வது சாக்தம். இக்கோட்பாடு எழுபத்து மூன்று ஆகமங்களைக் கூறும்.

7. **தமிழ் நூல்கள்:** பன்னிரு திருமுறைகள். திருமுறை என்பதற்குத் தமமை அடைந்தவர்களைச் சிவமேயாக்குகின்ற முறையெனப் பொருள் கூறலாம். சைவத் திருமுறைகள் பன்னிரண்டு.

பன்னிரு ஆழ்வார்கள் எழுதிய அருட்பாடல்கள்—திவ்வியப் பிரபந்தம் என வழங்கப்படுகின்றன.

இவை தவிரச் சைவசித்தாந்த சாத்திரங்கள் 14 ஆகும்.

**மூன்று முக்கிய வேதாந்த நெறிகள்**

1. **அத்துவைதம்:** இதைச் சமயமாகவும் தத்துவமாகவும் கொள்ளலாம். இந்நெறியைப் பரப்பிய சங்கரர் கேரளாவில்,

காலடியில் பிறந்தவர். அத்துவைதம் என்னும் சொல்லை அ+துவைதம் எனப்பிரிக்கலாம். அ = இல்லை, துவைதம் = இரண்டு. அத்துவைதம் என்றால் இரண்டற்ற ஒன்று என்பர்.

பிரமம் என்ற ஒரு பொருளே உண்மை, நிலையானது. சீவன்கள் பிரமமே ஆவர். நாம் காணும் உலகம், கயிற்றில் காணும் பாம்பைப்போல் பொய்த் தோற்றப் பொருளாகும்; ஒரு சூரியன் பல இடங்களிலுள்ள நீரில் பலவாகத் தோன்றுவதுபோல, ஒரு பிரமமே யாவற்றிலும் விளங்கி நிற்கிறது. நாம் பாசத்தின் பிணைப்பால் பேரின்பத்தை உணர இயலாது இருக்கிறோம். அஞ்ஞானத்தால் தோன்றிய கட்டுகள் அனைத்தும், ஞானம் தோன்றும்பொழுது விலகும், உண்மை இன்பம் கிட்டும். இந்நிலையில் பிரம மயமாகி வீடுபேறு அடையலாம்.

2. விசிட்டாத்துவைதம் : இச்சமயத்தை அல்லது தத்துவத்தைப் பரப்பியவர் இராமானுசர். இவர் செங்கற்பட்டிற்கு அருகே உள்ள ஸ்ரீபெரும்புதூரில் கி. பி. 1017-ல் தோன்றினார்.

விசிட்ட + அத்துவைதம் = விசிட்டாத்துவைதம். அத்துவைதம் = இரண்டற்றது, ஒன்றாக உள்ளது. விசிட்டம் = விசேடம். சித்து, அசித்து இவைகளை உடம்பாகக் கொண்டிருக்கிற விசேடத்தை உடையது. ஆகவே சித்து (சீவன்), அசித்துச் (சடம்) சேர்க்கையால் விளங்கும் இரண்டற்ற ஒன்றான பிரமம் உண்டென்று கூறுவதே விசிட்டாத்துவைதமாகும்.

பிரமம் ஒருவரே. அவர் சத்து என்றும் பிரமம் என்றும் ஈசுவரர் என்றும் விஷ்ணு என்றும் பெயர் பெறுகிறார். அவர் சித்து என்னும் ஆத்மாவோடும், அசித்து என்னும் சடத்தோடும் (அநாத்மா) எப்பொழுதும் சேர்ந்து இருக்கிறார். பரமாத்மா ஒருவரே நிலையானவர், சுதந்திரம் உடையவர். சித்தும், அசித்தும் அவரைச் சார்ந்திருப்பவை. வீடுபேறடையத் தூய்மையான பக்தியே சிறந்த வழி.

3. துவைதம் : இந்நெறியை அல்லது சமயத்தைப் பரப்பியவர் மத்துவர். இவர் துளுவ நாட்டில் உடுப்பிக்கு அருகிலுள்ள அனந்தேசுவர கிராமத்தில் பிறந்தவர்.

துவி என்றால் இரண்டு. பிரபஞ்சமும், பரமாத்மாவும் வேறு வேறானவை. பரமாத்மா தனி, மற்றவை அதில் சேராதவை என்பதாம்.

பரமாத்மா, சீவாத்மா, சடஉலகம் இவை எவராலும் உண்டாக்கப்படாத நித்தியப் பொருள்கள். உலகம் ஒரு தோற்ற மன்று. சுதந்திரம் இறைவன் ஒருவனுக்கே உண்டு. கருமநீக்கத் தால் வீடுபேறு அடையலாம்.

### அறுவகைச் சமயங்கள்

1. வைணவம் : விஷ்ணுவை முழுமுதலாகக்கொள்ளும் சமயம் வைணவம். இதை நிறுவியவர் இராமானுசர்.

2. சைவம் : சிவனை வழிபடு கடவுளாக ஏற்றுக்கொண்ட சமயம் சைவம். இங்குப் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை கூறப்படுகிறது. இவற்றை இறைவன், உயிர், தளை எனவுங் கூறுவர். பசு, இதனை உயிர் எனவும் ஆன்மா எனவும் கூறுவர். எண்ணிலா உயிர்கள் உள. பசுவாகிய உயிர் பாசத்தை விட்டு நீங்கினால் வீடுபேறு அடையும்.

3. கௌமாரம் : முருகனை அல்லது குமரனை வழிபடு கடவுளாகக் கொண்ட சமயம் இதுவாகும்.

4. சாக்தம் : சக்தியை வழிபடு கடவுளாகக் கொள்வது சாக்த சமயம்.

5. காணாபத்தியம் அல்லது கணாபத்தியம் : கணபதியை அல்லது விநாயகரை வழிபடுகடவுளாகக் கொள்வது இச்சமய மாகும்.

6. சௌரம் : சூரியனை வழிபடு கடவுளாகக் கொள்வது சௌர சமயமாகும்.

### உறுதிப் பொருள்கள்

இந்துக்கள் அனைவரும் நான்கு உறுதிப் பொருள்களைக் கூறுவர். 1. அறம் (தருமம்) 2. பொருள் (அர்த்தம்) 3. இன்பம் (காமம்) 4. வீடு (மோட்சம்). இவற்றைப் புருஷார்த்தங்கள் எனவும் கூறுவர்.

### வருணாசிரம தருமம்

வருண + ஆசிரம + தருமம் = வருணாசிரம தருமம் எனப் பட்டது. சமுதாயக் கடன்களை நிறைவேற்ற நான்கு வகை சாதிப் பாகுபாடுகள் தோன்றின. அவ்வவற்றிற்குரிய கடமை களைச் செய்யக் கூறுவது வருணதருமம். அந்தணனுக்கு— ஆன்மிகக் கடன், அரசனுக்கு—அரசியல் கடன் (சமுதாயப் பாது

காப்பு), வணிகனுக்கு—பொருளியல் கடன், வேளாண்மை, வாணிகம். வேளாளனுக்கு—தொழிலியல் (உழைப்பு) கடன்.

இச்செயல்களோடு குணங்களையும் வருணப்பாகுபாட்டிற்குக் காரணமாகக் கூறுவதுமுண்டு. இதையே பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர சாதிப் பாகுபாடு எனவும் கூறுவர்.

அந்தணர்களிடம் சத்துவ குணமும், அரசர்களிடம் இராஜச குணமும், வணிகரிடம் தாமச குணமும் மேலோங்கி நிற்கும் எனவும், வேளாளர்களிடம் எதுவும் வளர்ச்சியடையாத நிலையில் இருக்கும் எனவும் கூறுவர்.

எந்த வருணத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் தெய்விக வாழ்க்கை வாழ்ந்து வீடுபேறடைய முடியும் என்பதே இந்து சமயத்தின் தலையாய கோட்பாடு.

ஆசிரமம் : தனி ஒருவர் வாழ்வுக் காலத்தை நான்காகப் பாகுபாடு செய்கின்றனர்.

1. பிரமசரியம்: மாணவ நிலை அல்லது தன்டைக்க நிலை—கல்வி பயிலல், நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தல். வயது 25 வரை உள்ள நிலை.

2. கிருகஸ்தம்: இல்லறநிலை—குடும்பக் கடன்களை நிறைவேற்றல். 25 முதல் 50 வயது வரை உள்ள நிலை.

3. வானப் பிரஸ்தம் அல்லது வனப் பிரஸ்தம் : குடும்பப் பொறுப்பினை விட்டுக் காடுறை நிலை—தெய்விக சிந்தனையில் ஈடுபடல்.

4. சந்நியாசம் : துறவு நிலை.

நான்கு நெறிகள்

1. பக்தி நெறி : இறைவன்பால் செலுத்துகின்ற அன்பினைப் பக்தி என்கிறோம். இதிலே பல்வேறு பிரிவுகள் உண்டு. எந்த நெறிப்பட்ட பக்தியைக் கடைப்பிடித்தாலும் இறைவனின் திருவடிகளை அடையலாம்.

2. கரும நெறி : வருண ஆசிரம நிலைகட்கு ஏற்பவும், சமுதாயத்தில் ஓர் உறுப்பினன் என்ற நிலைக்கு ஏற்பவும் பலன் கருதாது ஒருவன் தன் கடமைகளைச் செய்வதன் மூலமும் வீடுபேறு அடையலாம்.

3. இராஜயோகம் : இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு

நிலைகளைக் கொண்டதே இராஜயோகம் எனக் கூறப் படுகின்றது.

4. ஞான நெறி : தூய அறிவால் பரம்பொருளோடு கலக்க முயல்வதே ஞான நெறி.

**சில சீரிய கோட்பாடுகள்**

1. நம்முடைய சமயக் கருத்துகள் ஓர் உயரிய தத்துவ அடிப் படையில் அமைந்தவை. ஆகவே எதையும் பொருளற்றது எனப் புறக்கணித்துவிடக் கூடாது.

2. உருவ வழிபாடு, ஆலய வழிபாடு இவை இரண்டும் பக்குவப்படாத ஆன்மாக்கள் நலங்கருதியே ஏற்படுத்தப் பட்டவை.

3. நம்முடைய சடங்குகள், பழக்க வழக்கங்கள் பொருள் பொதிந்தவை.

4. நாம் கொண்டாடும் விழாக்களுக்குக் காரண காரியம் உண்டு.

5. ஊழ் என ஒன்றிருந்தாலும் மனிதன் சுயமுயற்சியாலும், தனக்கு அளிக்கப்பட்டுள்ள சுதந்திரத்தாலும் வாழ்வை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

6. இந்து சமயம் வெறும் தத்துவக் கோவை அன்று. வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் உயர்ந்த நெறிகளை உணர்த்திடும் வாழ்க்கைச் சாதனம் அது.

**முடிவுரை**

இந்து சமயம் இணையற்றது. அது எக்காலத்திற்கும் எச்சூழலுக்கும் ஏற்ப அமைந்துளளது. அனைவரும் ஆன்மிகக் கடைத்தேற்றம் காண எளிய வழிமுறைகளை எடுத்தியம்புவது. ஆன்மிகத் துறையில் கடைநிலையில் இருப்பவனும் கடைத் தேற முடியும் எனும் ஒளிமயமான எதிர்காலத்தைச் சுட்டிக்காட்டும் சிறந்த சமயம்.

## 6.2. இந்தியப் பண்பாட்டிற்கு இந்து சமயத்தின் பங்கு

1. இந்து சமயம் துறவறத்தை மட்டும் அல்லது இல்லறத்தை மட்டும் அல்லது பலகடவுள் கோட்பாட்டை மட்டும் வலியுறுத்தும் சமயம் அன்று, இது பல்வகைப்பட்ட அனுபவப் புதையல். வாழ்வை முழுமையாகப் பார்க்கும் ஒன்று. இஃது ஓர் அற்புதக் கொடை.

2. ஆழ்ந்த மனிதாபிமான உணர்வு, பரந்துபட்ட சகிப்புத் தன்மை, உயரிய ஆன்மிகக் கோட்பாடு கூடிய இந்து சமயம், இந்தியப் பண்பாட்டைச் சிறப்புச் செய்கிறது.

3. வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் போன்ற பல்வேறு சமய நூல்கள் இந்தியாவிற்கு மட்டுமன்று உலகிற்கே பெரும் கொடை.

4. வாழ்வோடு ஒட்டிய, வாழ்க்கையில் காணும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணும் சிறந்த இந்து சமய தத்துவக் கோட்பாடுகள் இந்தியப் பண்பாட்டிற்குக் கிடைத்துள்ள பெரிய கருவூலம்.

5. செல்வச் செழிப்பால் மனிதன் வாழ இயலாது அல்லலுறும் போது அமைதி பெற்று வாழ்வதற்குரிய யோக நெறியை உலகிற்கே இந்து சமயம் வழங்கியுள்ளது.

6. அவரவர் மனப்பக்குவத்திற்கும் அறிவாற்றலுக்கும் சூழலுக்கும் காலத்திற்கும் ஏற்பப் பல்வேறு வீடு பேறடையும் நெறிகளை இந்து சமயம் இந்தியப் பண்பாட்டிற்கு அளித்துள்ளது.

7. இந்து சமயம் ஒரு பண்பாட்டுக் கருவூலம். இதை இந்து திருக்கோயில்கள் மூலம் உணரலாம். ஆலயங்கள் பண்பாட்டின் மையங்கள்.

8. கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக் கலை, நாட்டியக்கலை போன்ற சீரிய உலகம் போற்றும் மிகச் சிறந்த கலைகள் தோன்றுவதற்கு இந்து சமயத் திருக்கோயில்கள் அடித்தளங்களாக அமைந்துள்ளன. இக்கலைகள் அனைத்தும் அனைத்து நாட்டினரும் போற்றும் வண்ணம் வியத்தகு முறையில் அமைந்துள்ளன.

9. இந்து சமய உளவியல், மனித உள்ளத்தை நன்கு படம் பிடித்துக் காட்டி அதைச் செம்மைப்படுத்தும் சீரிய முறைகளைப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே உலகிற்கு எடுத்துவழங்கியுள்ளது.

10. உலகம் போற்றும் உயரிய நூலான பகவத்கீதையை அளித்துள்ளது. இதிலுள்ள கருத்துகள் எச்சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளன.

11. உருவ வழிபாடு என்பது இந்து சமயம் ஏற்றுக்கொண்ட உயர்ந்த வழிபாட்டு முறை. வெறும் எண்ணங்களை இதயத்தில் தேக்கி அழிப்பதைவிடத் தெளிவான வடிவங்களில் நெஞ்சினை நிறுத்தி ஒன்றிக் கலப்பது சிறப்பானது என இந்துக்கள் நம்பினார்கள்; நம்புகிறார்கள். எனவேதான் உயர்ந்த கோபுரங்களோடு கலையழகு மிக்க ஆலயங்களைக் கட்டி வழங்கியுள்ளனர்.

12. வாழ்வினை வாழ்வாங்கு வாழ்ந்து வீடுபேறு அடைவதற்குரிய அரிய பல அறக்கோட்பாடுகளையும், ஆன்மிக நெறிகளையும் இந்து சமயம் இந்தியப் பண்பாட்டிற்கு அளித்துள்ளது.

13. அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம், சைவ சித்தாந்த நெறிகள் இந்து சமயம் இந்தியப் பண்பாட்டிற்கு அளித்துள்ள அரிய செல்வமாகும்.

14. இந்து சமயம் எண்ணற்கரிய இருடிகளை, ஞானிகளை, யோகிகளை, சித்தர்களை, சமயச் சான்றோர்களை, தத்துவ ஞானிகளை, தீர்க்கதரிசிகளை அளித்துள்ளது. இதுபோன்று உலகில் எந்தச் சமயத்திலும் காணமுடியாது. இவர்கள் சமயத்தையும், தத்துவத்தையும் வாழ்ந்து காட்டியவர்கள். இவர்கள் நெறியில் சென்றால் செம்பொருளை அடையலாம்.

15. நம் சடங்குகள் குறிப்பாக ஹோமம், யக்ஞம், யாகம் போன்றவை, மனிதனுக்கு வேண்டிய தியாக உணர்வினை உணர்த்துகின்றன. இஃது ஓர் உயரிய கொடை.

16. புலனாற்றலையும் கடந்த முடிவுகளை உலகிற்கு முதலில் அறிவித்துள்ளது இந்து சமய உளவியல்.

முடிவு

இவ்வாறாக இந்து சமயம், இந்தியாவிற்கு மட்டுமன்றி உலகிற்கே அளித்துள்ள கொடை அளவிடற்கரியது. உடல்,

உள்ளம், உயிர் வளர்ச்சிக்கு எளிய எல்லோரும் பின்பற்றக்கூடிய வழிமுறைகளை வகுத்துக் கொடுத்துள்ளது. வாழ்க்கையில் நம்பிக்கையையூட்டி, போட்டியும், பூசலும், பொறாமையும் இல்லாமல் இன்றைய உலகிற்கு அமைதி தரும் அருமருந்தாய் விளங்குவது இந்து சமயம்.

## 6.3. பௌத்த சமயம்

உலக வரலாற்றில் சிந்தனைப் புரட்சி தோன்றிய காலம் கி. மு. ஆறாம் நூற்றாண்டு. உலகெங்கும் சமுதாய, பொருளாதார, அரசியல், சமயத் துறைகளில் பெரும் மாற்றங்கள் இந்த நூற்றாண்டிலே நிகழ்ந்ததை வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. அக்காலத்தில் தோன்றிய தலைவர்கள் சமுதாயத்திற்குப் பயன் படாத அனைத்தையும் அறவே ஒழித்துவிட்டு, புதியதோர் உலகு செய்ய முற்பட்டனர். குறிப்பாக இந்தியாவில் சமயத் துறையில் பெரும் மாற்றத்தை விரும்பினர் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய புத்தரும், மகாவீரரும். இந்து சமயத்தில் மூடப் பழக்கவழக்கங்களின் முடை நாற்றமும், சாதியின் பேரால் இழைக்கப்படும் அநீதியும் பெருகியதே இரு புதிய சமயங்கள் தோன்றக் காரணங்களாகும்.

### புத்தரின் வாழ்வு

உலகம் கண்டிராத உத்தமர் கௌதம புத்தர். இவருடைய அறக் கோட்பாடுகள் சமய வரலாற்றில் அழியாத அடிச்சுவடுகளை விட்டுள்ளன. தன்னைத்தானே அழித்துவரும் உலகிற்குத் தன்னிகரில்லா அறிவுரைகளை இவர் அளித்துள்ளார்.

இவரது இயற்பெயர் சித்தார்த்தர். கௌதமர் என்ற பெயரும் உண்டு. பௌத்த சமயத்தைத் தோற்றுவித்த புத்தர், சாக்கிய நாட்டு இளவரசனாக இருந்தவர். அவருடைய தந்தை சுத்தோதனர் கபிலவஸ்து என்ற நாட்டின் அரசர். அவர் அன்னை மாயாதேவி. புத்தர் கி. மு. 567ஆம் ஆண்டு பிறந்தார். அவர் சாக்கிய வகுப்பைச் சேர்ந்தமையால் 'சாக்கிய முனி' என்றும் அழைக்கப்பட்டார். ஆன்மிகத் துறையில் அவரை 'புத்தர்' என அழைத்தனர். அவர் பிறந்த ஏழாம் நாளில் அவர் தாய் காலமானார். பின்பு அவர் கௌதமி என்ற செவிலித் தாயால் மிகவும் பேணி வளர்க்கப்பட்டார்.

சோதிடர்கள் அவர் உலகையே வென்று ஒரு குடையின்கீழ் ஆள்வார் அல்லது பெருந் துறவியாவார் எனக் கூறினர். ஆகவே,

அவரை மிகவும் ஆடம்பரமாக அனைத்து வசதிகளுடன் அவர் தந்தை வளர்த்துவந்தார். துன்பமே துளியளவும் தெரியாமல் வளர்த்து வரப்பட்டார் சித்தார்த்தர். இவருக்கு இளவயதிலேயே யசோதரை என்னும் மங்கையை மணமுடித்து வைத்தனர். இவருக்கு இராகுலன் என்று ஒரு மைந்தன் பிறந்தான். ஆனால் இவை அனைத்தும் இவர் மனத்திற்கு ஆறுதலோ அமைதியோ அளிக்கவில்லை. ஒரு நாள் அரண்மனையைவிட்டு வெளியே சென்றபொழுது கண்ட காட்சிகள் இவருக்கு மிகுந்த வேதனையை அளித்தன. இவர் அப்பொழுது வயது முதிர்ந்தோனையும், நோயாளியையும், பிணத்தையும், துறவியையும் கண்டார். இதற்கு முன்பு இதுபோன்ற காட்சிகளை இவர் கண்டதில்லை. இவ்வுலகப் பிரச்சினைகளையும், இவற்றைத் தீர்க்கும் முறைகளையும் சிந்திக்கத் தலைப்பட்டார். விளைவு? இல்வாழ்க்கை எட்டிக்காயெனக் கசந்தது. ஆகவே ஒரு நாள் தனது 29 ஆவது வயதில் அரச சுகங்களை அறவே ஒதுக்கித் தள்ளிவிட்டு நள்ளிரவில் வீட்டைவிட்டு வெளியேறினார். குடிமக்களின் பிரச்சினைகளைவிடக் குவலயம் தழுவிய தீராத தொல்லைகட்குத் தெளிவான நெறியொன்றைக் காண்பதே தமது தலையாய பணியெனக் கருதினார்.

துறவிக் கோலத்துடன் கௌதமர் வாழ்க்கையின் உண்மைகளை அறியப் பல்வேறு ஆசிரியர்களை நாடினார். அம்முயற்சி பயனளிக்கவில்லை. பின்பு உடலை வருத்திக் கொண்டு கடுந்தவம் பூண்டார், அதனாலும் பலன் கிட்டவில்லை.

கடுந்தவத்தினால் ஞானத்தை அடைய முடியாது என உணர்ந்த கௌதமர், உருவேலாவிலுள்ள போதிமரத்தடியில் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டார். இறுதியாக ஒருநாள் கடுமையாகத் தியானம் செய்துகொண்டிருக்கும்போது புதிய ஒளி தோன்றியது. முப்பத்தாறாவது வயதில் ஞானோதயம் பெற்று நிர்வாண நிலையை அடைந்தார். அன்றுமுதல் அவர் புத்தர் என அழைக்கப்பட்டார்.

இவர் 80ஆவது வயதில் குசி நகரத்தில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## புத்தருடைய போதனைகள்

இவரது கொள்கைகள் கற்றோரும் கல்லாதோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எளிமையாக இருப்பவை. அனைத்துச்

சாதி மக்களும் உயர்வு தாழ்வின்றி இச்சமயத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்து சமயம் பின்பற்றக்கூறிய எண்ணற்ற சடங்குகளைப் புத்தர் வலியுறுத்தவில்லை. கரடு முரடான தத்துவக் கோட்பாடுகளை இவர் பௌத்த சமயத்தில் புகுத்த வில்லை. இவரது போதனைகள் நடைமுறை வாழ்விற்குப் பயன் தருவனவாகவும் தெளிவாகவும் அமைந்துள்ளன. [இதனால் பௌத்த சமயம் தோன்றிய காலத்தில் இந்நாட்டிலும் வெளி நாடுகளிலும் வேகமாகப் பரவிற்று. பின்பு வீழ்ச்சியடைந் தமைக்குப் பல காரணங்கள் உண்டு.]

நான்கு சீரிய உண்மைகள்

இவற்றை ஆரிய சத்தியங்கள் என்றும் கூறுவர். அவை யாவன :

(1) இவ்வுலகம் துன்பமயமானது. பிறப்பு, பிணி, சாக்காடு, பிரிவு அனைத்தும் நமக்குத் துன்பத்தையும் தொல்லையையும் கொடுக்கின்றன.

(2) எல்லாத் துன்பங்களுக்கும் தொல்லைகட்கும் காரணம் ஆசையே.

(3) ஆசையை அழித்துவிட்டால் துன்பங்கள் அறவே அகன்றுவிடும்.

(4) துன்ப நீக்கத்திற்கு நான்காவது உண்மையில் புத்தர் எண்வகை வழிகளை மேற்கொள்ளக் கூறுகிறார். இந்நெறியைக் கடைப்பிடித்தால் ஆசைகளை ஒழித்து, துன்பங்களினின்று விடுபட்டு, நிர்வாண நிலையை அனைவரும் அடையலாம்.

எண்வகை வழிகள்

(1) நன்னம்பிக்கை : புத்தரிடத்திலும் அவரது கொள்கை களிலும் நம்பிக்கை வைத்தல்.

(2) நல்லெண்ணம் : உலகில் நல்லவை, தீயவை இவை களைப் பாகுபடுத்திப் பார்த்து இல்லற வாழ்க்கையைக் கைவிடத் துணைபுரிகிறது.

(3) நன்மொழி : இது பிறரது உள்ளங்களை உறுத்தும் சொற்களைத் தவிர்த்து இனிய சொற்களைப் பேசுவதும், உண்மை

பேசுவதும், புத்தருடைய கொள்கைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதுமாகும்.

(4) நற்பணி: நற்செயல்களைச் செய்தல் என்றும் துறவியாகப் பணியாற்றுதல் என்றும் கொள்ளலாம்.

(5) நல்வாழ்க்கை: நல்ல நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்வு நடத்துதல் எனவும், பிச்சையெடுத்து வாழ்தல் எனவும் கூறப்படுகின்றது.

(6) நன்முயற்சி: சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சி என்றும் தன்னலத்தை அடக்குவது என்றும் விளக்கங்கள் தரப்படுகின்றன.

(7) நற்சிந்தனை: மனித உடல் அசுத்தமானது, நிலையற்றது என்பனவற்றை மனத்தில் கொள்ளுதல். நல்ல கருத்துகளை மீண்டும் நினைவுகூர்தல் எனவும் பொருள்படும்.

(8) நல்தியானம்: மனத்தை நல்லனவற்றில் ஒருநிலைப் படுத்தல் எனவும் பேசாதிருந்து மன அமைதியைப் பெறுதல் எனவும் கூறலாம்.

இவை நடைமுறையில் கைக்கொள்ளவேண்டிய நல்லொழுக்கங்களாகும். இவற்றைச் செயல்படுத்தத் தன்னடக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## இடை வழி

புத்தர் தன்னை இடைவழியில் செல்வோனெனக் கூறிக்கொண்டார். அவர் கூற்றுப்படி, ஒரு துறவி இரு உச்சநிலைகளைத் தவிர்க்கவேண்டும். அதிகம் உண்போனும், உண்ணாமல் பட்டினி கிடப்போனும், அதிகம் உறங்குவோனும், உறங்காமலே நாளைக் கழிப்போனும் ஞானியாக முடியாது என்ற கோட்பாடுடையவர். உலக இன்பங்களில் முற்றிலும் திளைத்திருக்கக்கூடாது; கடுமையாக உடலை வருத்திக் கடுந்தவம் புரிதலும் கூடாது என்னும் கருத்துடையவர் புத்தர்.

## அகிம்சை

மகாவீரரைப் போன்று, புத்தரும் அகிம்சையை அல்லது உயிர்வாழ்வனவற்றிற்கு ஊறு செய்யாமையை வலியுறுத்தினார்.

உயிர் வாழ்வன அனைத்தும் புனிதமானவை எனக் கருதினார். அவர் விலங்குகளைக் கொல்வதை அல்லது வேதனைப் படுத்துவதை விரும்பவில்லை. அவர் கூற்றுப்படி மனித இனம் மட்டுமன்று விலங்குகளும் பறவைகளும் நம் அன்பிற்குப் பாத்திரமானவை.

### கடவுள்

இக்கோட்பாட்டைப் பொறுத்தவரை அவர் அமைதியாக இருந்துவிட்டார். இந்த நம்பிக்கை, சர்ச்சைக்குரியதாகிவிடக் கூடாதெனக் கருதினார். அவர் கடவுள் இருப்பதை மறுக்க வில்லை. அதே நேரத்தில் நிர்வாண நிலை அடைய அதன் துணை தேவையெனவும் கருதவில்லை.

### சடங்குகள்

விலங்குகளைப் பலியிட்டுச் செய்யும் செலவினம் மிக்க வேள்வி களில் புத்தருக்கு நம்பிக்கையில்லை. அவைகளை அறவே வெறுத்தார்.

### சாதிப் பாகுபாடு

இஃது இந்து சமுதாயத்தின் மேலுள்ள சாபக்கேடென்று புத்தர் கருதினார். மனிதனுக்குப் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கலாகாது; செயலை வைத்தே அவனது நிலையை மதிப்பிட வேண்டுமென்றார். கொடிய பிராமணனைக் காட்டிலும் உயர்ந்த சூத்திரன் மேலானவன் என்பது அவரது கருத்து.

### நிர்வாணம்

வாழ்வின் முக்கியக் குறிக்கோள் நிர்வாண நிலை அல்லது உயர்ந்த ஆனந்த நிலையை அடைதல். இந்நிலையில் பிறப்பு—இறப்பு என்னும் சுழற்சியினின்று மனிதன் விடுபடுகிறான். இதை அனைவரும் சாதி, சமயப் பாகுபாடின்றி அடையலாம். இதற்குத் தேவைப்படுவன தூயவாழ்வும், எண்வகை வழிகளைப் பின்பற்று தலுமாம்.

### கருமவினை

புத்தருக்குக் கருமவினையிலும் மறுபிறப்பிலும் நம்பிக்கை யிருந்தது. 'வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்ற கருத்து அவருக்கு உடன் பாடுடையது. சென்ற வாழ்வில் ஈட்டிய வினையின் பயனே இந்த வாழ்வும், இதில் பெற்றுள்ள உடலுமாகும் எனக் கருதினார்.

வினையின் விளைவினின்று எவரும் தப்பமுடியாதெனவும் கூறினார். இந்து சமயத்தின் கர்மவினைக் கோட்பாட்டினைப் புத்தரும் ஏற்றுக்கொண்டார்.

**வேதங்கள்**

வேள்விகளை வெறுத்த புத்தர், அவற்றினைப் பரிந்துரைக்கும் வேதங்களையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

**ஒழுக்கம்**

ஒவ்வொருவரும் ஒழுக்கமான வாழ்வினை நடத்துவதை மிகவும் வலியுறுத்தினார். சிந்தனை, சொல், செயல் மூன்றினும் தூய்மை வேண்டுமென்றார். கீழ்க்கண்ட பத்து ஒழுக்க நெறி முறைகளைக் கொடுத்துள்ளார். அவற்றுள் முதல் ஐந்து இல்லறத்தாருக்கும், அனைத்தும் மடத்துத்துறவிகட்கும் என வரையறுத்துள்ளார்.

(1) வெஃகாமை அல்லது பிறர் பொருள் விரும்பாமை, (2) பொய்யாமை, (3) கொல்லாமை, (4) பிறன்மனை விழையாமை, (5) கள்ளுண்ணாமை, (6) ஆடல் பாடல்களில் பங்கு கொள்ளாமை, (7) மலர், நறுமணப் பொருள்கள் போன்ற ஆடம்பரப் பொருள்களைப் பயன்படுத்தாமை, (8) அகாலத்தில் உண்ணாமை, (9) மகிழ்ச்சியளிக்கும் படுக்கைகளில் உறங்காமை, (10) பணத்தை வைத்துக்கொள்ளாமை.

**சமய இலக்கியம்**

பௌத்த சமயத்திற்கென உள்ள சமய இலக்கியத்தைத் திரிபிடகம் என்பர். இதைப் பௌத்த வேதம் என்றும் கூறுவர். திரிபிடகம் என்றால் மூன்று கூடைகள் என்பது பொருள். சுத்தபிடகம், விநயபிடகம், அபிதம்ம அல்லது தம்மபிடகம் என்ற மூன்றும் சேர்ந்ததே திரிபிடகம் எனப்படுகின்றது.

## 6.4. இந்தியப் பண்பாட்டிற்குப் பௌத்த சமயத்தின் பங்கு

**எளிய, எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய சமயம்**

எல்லோரும் அறிந்து, புரிந்து பின்பற்றக்கூடிய எளிய சமயத்தைப் புத்தர் வழங்கியுள்ளார். அச் சமயத்தில் மக்களின் உணர்வினைத் தொட்டக்கூடிய கூறுகளும் எளிய அறக்கோட்பாடு

களும் நிறைந்திருந்தன. இவையனைத்தும் அனைவரும் அறிந்திருந்த மொழியில் வழிகளில் நீதிக்கதைகள் மூலமாகக் கூட்டு வழிபாட்டிலும் பிரார்த்தனைகளிலும் கற்பிக்கப்பட்டன. புத்தர் 'மனிதகுல மீட்பர்' என்ற கருத்து பௌத்த சமயத்தில் புகுத்தப்பட்டது.

## உயர்ந்த அறக் கோட்பாடுகள்

நடைமுறை வாழ்விற்குகந்த எளிய அறக்கோட்பாடுகளை அளித்தார். அறம், தூய்மை, தியாகம், உண்மை, தன்னடக்கம், அன்பு, இரக்கம் என்ற உயரிய பண்புகளை வலியுறுத்தினார். சிந்தனை, சொல், செயல் இம்மூன்றாலும் உயிர்வாழ்வனவற்றிற்கு ஊறு செய்தலாகாது என்பதை எடுத்தியம்பினார். மனித நலங்கருதிக் குறிக்கோளுடன் பணிபுரிதல் வேண்டுமென்பது அவரது கருத்து. அவா, பாவம், வேட்கை, வெறுப்பு இவைகளினின்று விடுதலை பெறவேண்டுமென்றும் கூறினார்.

## இந்து சமயத்தில் பௌத்த சமயத் தாக்கம்

பௌத்த சமயம் அகிம்சையைப் பெரிதும் வலியுறுத்தியதால் இந்து சமயச் சடங்குகளும் வேள்விகளும் அதிக அளவில் மறைந்தொழிந்தன. அனைத்து உயிர்வாழ்வனவிடத்தும் அன்பைச் செலுத்த வேண்டும், அரிய பண்பு அகிம்சையின் விளைவென உணர்ந்து இந்து சமயத்தினரும் அகிம்சையினை ஒரு சிறந்த கோட்பாடென ஏற்றுக் கொண்டனர். இது மறைமுகமாக அகிம்சையை முழுக்க முழுக்க ஏற்றுக் கொண்ட பாகவத சமயம் தோன்றக் காரணமாக இருந்தது.

## உருவ வழிபாடு

மஹாயான பௌத்த சமயத்தினரைப் பின்பற்றி இந்து சமயத்தினரும் மனித உருவில் தெய்வங்களை வணங்கத் தலைப்பட்டனர். அவைகளைப் பெருமைப்படுத்த ஆலயங்களையும் படிமங்களையும் அவர்களைப் போன்று அமைத்தனர்.

## துறவற வாழ்வு முறை

சமயத் துறவிகள் அனைவரும் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட சமய அமைப்பின் கீழ்க்கொண்டு வரப்பட்டனர். தங்களுக்கென ஒரு பொதுத் தலைவரையும், பொதுவான ஒழுக்க நெறிகளையும் வகுத்துக்கொண்டு ஒரே கூரையின் கீழ் வாழத் தலைப்பட்டனர்.

இந்நிலை பௌத்தசமயம் தோன்றுமுன் இந்தியாவில் இல்லை. இதை இந்து சமயமும் பின்பற்ற முற்பட்டது.

**சங்க அமைப்பு**

ஈடு இணையில்லாப் புதிய சங்க அமைப்பினைப் புத்தர் முதன் முதலில் இந்தியாவில் புகுத்தினார். இந்தப் பௌத்த சங்கங்கள் தன் சமயப் பரப்புப் பணியை இப்புதிய அமைப்பின் கீழ் மிகச் சிறப்பாக முறைப்படுத்திச் செய்ததைப் பார்த்து இந்து சமயமும் பின்பற்றத் தலைப்பட்டது. பௌத்த பிக்குகளின் ஒழுக்கம் ஓர் உயர் குறிக்கோளாக மக்களால் கருதப்பட்டது.

**பேச்சு மொழியில் இலக்கிய வளர்ச்சி**

பௌத்த சமயத்தைப் பாமரர்களுக்குரியதாக ஆக்க விரும்பியமையால், அது பேச்சு மொழியைக் கைக்கொண்டது. புத்தரைப் பின்பற்றிப் பௌத்த பிக்குகளும் பெண் துறவிகளும் மக்கள் மொழியில் சமயத்தைப் பரப்பினர். விஹாரங்கள் என அழைக்கப்படும் பௌத்த மடாலயங்கள், பொது மக்களின் பேச்சுமொழியாகிய பிராகிருதத்தில் இலக்கிய வளர்ச்சியைக் கண்டன. பாலி மொழியில் திரிபிடகம் எழுதப்பட்டது. நாகார்ஜுனன் என்பவர் ஆயுர்வேதம் குறித்து ஒரு நூல் எழுதினார். இவை தவிர அசுவகோசர், ஹர்ஷர் என்பவர்கள் சமயத் தொடர்பான உரைநடை நூல்களையும், நாடகங்களையும் எழுதினர். இவ்வாறாகப் பௌத்த சமயம் பேச்சுமொழியில் பல்வேறு துறைகளில் இலக்கிய வளர்ச்சியை உருவாக்கியது.

**சம உரிமையும் சகிப்புத் தன்மையும்**

இந்து சமயத்தில் நிலவிவரும் சாதிப் பாகுபாட்டு முறையைப் பலரறியப் பௌத்தசமயம் கண்டித்ததுடன், சமுதாயத்தில் சமத்துவம் நிலைத்து நிற்கப் பெரிதும் உழைத்தது. சாதி, இன, பால் சமுதாயநிலை எதுவாக இருப்பினும் அனைவரும் பௌத்த சமயத்தைத் தழுவிப் புத்தரின் கோட்டுபாடுகளைப் பின்பற்றிப் பயனுறும் வாய்ப்பை இச்சமயம் அளித்தது. இதனால் சாதிப் பாகுபாடு துகள் துகளாகத் தலைப்பட்டது. மக்களிடையே சகிப்புணர்வு தோன்றலாயிற்று. அமைதி, அன்பு, வாஞ்சை, பொறுமை, சகிப்புத் தன்மை என்ற அரிய பண்புகளை இச்சமயம் கற்பித்தது. இதன் விளைவாக மன்னர்களின் மனமும் மாறலாயிற்று.

**அறிவுச் சுதந்திரம்**

வேதங்களின் கட்டளைகளும், வேதியர்களின் ஆதிக்கமும், விரிந்த சிக்கலான சடங்குகளும் மக்களின் அறிவுச் சுதந்திரத்தை

அடியோடு அழித்துவிட்டன. புத்தர் இதற்கு எதிராகத் தன் குரலை எழுப்பினார். அவர் சுதந்திரமாகச் சிந்திக்கும் ஆற்றலை ஊக்குவித்தார்; சமயத்துறையிலும் இந்நிலை நிலவ அனைத்து முயற்சிகளையும் எடுத்துக்கொண்டார். தம்முடைய சீடர்கள் பகுத்தறிவுப் பாதையில் நடைபோடவேண்டுமென்பது புத்தரின் அவா. குருட்டுத் தனமாகக் கொள்கைகளைப் பின்பற்றாமல், பகுத்தறிவின் துணைகொண்டு அவைகளை ஆராய்ந்து பின்பு ஏற்றுக் கொள்வதையே அவர் விரும்பினார். இதன் விளைவாகப் புகழ்மிக்க பௌத்த தத்துவ ஞானிகளான நாகார்ஜுனர், அசங்கர், வசுபந்து, தருமகிருத்தி போன்றோர் தோன்றலாயினர்.

### இந்திய வரலாற்றில் பௌத்த சமயத்தின் செல்வாக்கு

போரிலே ஓடும் பெரும் குருதி வெள்ளத்தையும், அச்சமுறும் விளைவுகளையும் எடுத்துக் காட்டி அகிம்சை நெறியைப் பின்பற்றும்படி பௌத்த சமயம் போதித்தமையால் அசோகர் போரை நிறுத்திப் பெரும் அமைதியை நாடினார். அசோகர் பௌத்த சமயத்தைப் பின்பற்றியது, மகத மன்னர்களின் பேரரசு நிறுவும் உணர்வினைப் பெயர்த்து எறிந்தது. அசோகருடைய அரசு கொடையுள்ளம் கொண்டதாக மாறியது. சமூக நலப் பணிகளில் பெரிதும் நாட்டம் கொண்டு மக்களுக்கும் விலங்குகளுக்கும் மருத்துவமனைகளை அசோகர் நிறுவினார். இச்சமயத்தின் அகிம்சைக் கோட்பாட்டின் விளைவாக வடக்கே போரிடும் உணர்வு குறைந்ததுடன், வீர விளையாட்டுகளும் விலக்கி வைக்கப்பட்டன.

### அரசியல் ஒற்றுமையும் நாட்டுப்பற்றும்

மக்களின் பேச்சு மொழிகளில் பௌத்த சமயத்தைப் பரப்பியதால் அது நேரிடையாக மக்களின் உணர்வினைத் தொட்டது. அதன் எளிமையை அனைவரும் போற்றி, அதை நாட்டின் சமயமெனக் கொண்டனர். இவ்வாறாக அரசியல் வழியில் ஒற்றுமையும் நாட்டுப்பற்றும் மக்களிடையே தோன்றலாயின.

### பௌத்த சமயக் கலை

இந்தியக் கலைத்துறைக்குக் குறிப்பாகக் கட்டட, சிற்பக் கலைகளுக்குப் பௌத்த சமயம் அளித்துள்ள கொடை அளவிடற்கரியது பௌத்த சமயம் தோன்றுவதற்கு முன்பு கலை என்பது சமயத்தின் ஏவற்பெண்ணாக இருந்தது. இதன் விளைவாக வேத காலத்தில் இது முன்னேறவில்லை. அக்காலத்தில் கட்டடக் கலை, மண்டபங்கள் அல்லது யக்ஞசாலைகள், தூண்கள்,

பணிபீடங்கள் போன்ற வேள்வித் தொடர்பானவற்றைக் கட்டவே பயன்படுத்தப்பட்டன. பௌத்த சமயம் சமயக் கட்டடக்கலைக்குப் புதுத் தெம்பினையும் ஆற்றலையும் அளித்தது. இன்று உலகின் எல்லா அருங்காட்சியகங்களிலும் பௌத்த சமயக் கலையின் சின்னங்களைக் காணமுடிகின்றது. பௌத்த சமயத்தின் ஆதரவின்கீழ் அழகுக் கலைகளான கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை முன்னேறின. பௌத்த பிக்குகள் நிலையாகத் தங்குவதற்கென நாடு முழுவதும் விஹாரங்கள் கட்டப்பட்டன. பௌத்த சமயத்தைப் பயபக்தியுடன் பின்பற்றுவோரால் தங்கள் சமய ஞானிகளையும், ஆசிரியர்களையும் பெருமைப்படுத்தும் வகையில் சமயச் சின்னங்கள் தாங்கிய ஸ்தம்பங்கள் அல்லது தூண்கள் நிறுவப்பட்டன. புத்தர், போதிசத்துவர்கள் போன்றோரின் நினைவுச் சின்னங்களின்மீது கல்லாலான பெரிய ஸ்தூபிகளை நிறுவினார்கள். புத்தரின் வாழ்க்கை வரலாறு முழுமையும் கல்லில் அழகுபடச் செதுக்கப்பட்டது. முதன் முதலில் குகைக்கோயில்களை உருவாக்கியவர்களும் இவர்களே. இப்புதிய கட்டட அமைப்புகளான விஹாரங்கள், ஆலயங்கள், நினைவுச்சின்னங்கள் அனைத்தும் அழகிய வேலைப்பாடமைந்தவைகளாய்ச் செதுக்கப்பெற்றன. காலப்போக்கில் புதிய கட்டட, சிற்பப்பாணிகள் தோன்றின. உலகக் கலையரங்கில் பௌத்த சமயச் சிற்பக்கலையின் சில கூறுகள் வியத்தகு கலைச் சின்னங்களாகக் கருதப்படுகின்றன. சாஞ்சி, பஹர்ஹட், அமராவதி போன்ற இடங்களிலுள்ள ஸ்தூபிகளும், அசோகரின் கல்தூண்களும், கன்ஹேரி, கார்லே போன்ற இடங்களிலுள்ள குகைக்கோயில்களும் பௌத்த சமயத்தின் மிகச் சிறந்த கலைச் சின்னங்கள். காந்தாரக் கலைப்பாணியும் பௌத்த சமய ஆதரவால் வந்த ஒன்றாகும். பௌத்த சமயத்தினர் குகைக்கோயில்களை அமைத்து மக்களுக்கு ஒப்படைப்பதைக் கண்டு, இந்து, சமண சமயத்தினரும் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றினர். இந்த அழியாத கலைச்சின்னங்கள் அஜந்தா, பாஹ், சிக்ரியா (இலங்கை) போன்ற இடங்களில் இன்றும் நிலைத்து நிற்கின்றன. இவர்களுடைய சிற்ப, ஓவியக்கலைகளில் மக்களும், மாக்களும், மரமும், மலரும், தெய்வங்களும் தேவதைகளும் இடம்பெற்றன. வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் அழகாகச் சித்திரித்துக் காட்டினர்.

**வெளிநாடுகளில் இந்தியப் பண்பாடு பரவுதல்**

அண்டைநாடுகளில் இந்தியப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் பரப்பும் பணியில் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பது

பௌத்த சமயம். இந்தியா தனித்து வாழ்ந்த நிலையை மாற்றி, வெளிநாடுகளுடன் நெருங்கிய உறவை இச்சமயம் ஏற்படுத்தியது. வெளிநாட்டினருக்கு இந்தியப் பிக்குகளும் அறிஞர்களும் பௌத்த சமயத்தை நேரடியாகவும், இந்தியப் பண்பாட்டை மறைமுகமாகவும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சுமந்து சென்றனர். பௌத்தசமயக் குழுக்கள் சீனா, மங்கோலியா, மஞ்சூரியா, கொரியா, ஜப்பான், பர்மா, சாவகம், சுமத்ரா, இந்தோசீனா போன்ற நாடுகளுக்கு அசோகர் காலம் முதற்கொண்டே சென்று நமது பண்பாட்டையும் நாகரிகத்தையும் பரப்பின. இதன் விளைவாகப் பௌத்த சமயத்தைத் தழுவியோர் இந்தியாவைப் 'புனித பூமி'யெனவும், 'சமய நம்பிக்கையின் தொட்டில்' எனவும் கொண்டு இந்தியாவிற்குப் புனிதப் பயணம் மேற்கொள்வது தங்கள் வாழ்வின் குறிக்கோளெனக் கொண்டனர். உலக மக்களினத்தில் அரைப்பகுதியினர் ஒன்று பௌத்த சமயத்தை அல்லது இந்து சமயத்தைத் தழுவியோராக இருக்கின்றனர்.

இவ்வாறாகப் பௌத்த சமயம் இந்தியப் பண்பாட்டிற்குப் பல்வேறு துறைகளில் பெருங்கொடையினை வழங்கியுள்ளது.

## 6.5. சமணம்

**சமணத்தின் தோற்றம்**

இஃது ஒரு பழம் பெரும் சமயமாகும். இருப்பினும் இதனது தோற்றம் ஒரு புதிராகவுள்ளது. இருக்குவேத மந்திரங்களில் இரிசபதேவர், அரிஷ்டமேனி என்ற இரு சமண தீர்த்தங்கரர்களைப்பற்றித் தெளிவான குறிப்புகள் உள. இருவருள், இரிசபதேவர் சமணத்தை நிறுவியவர் எனக் கருதப்படுபவர். பல சான்றுகள் மூலம், இச்சமயம் வைதிக சமயத்தைப் போன்று பழமையான சமயம் என அறிய வருகிறோம். இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் போதனைகள் அடங்கியதே சமணம் எனச் சமணர்கள் கருதுகின்றனர். முதல் 22 தீர்த்தங்கரர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் கிடைக்காமையால் கடைசி இருவர்களாகிய பார்சவநாதரையும், மகாவீரரையுமே வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். பார்சவநாதர், மகாவீரருக்கு 250 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது.

பார்சவநாதர் உயிர்க் கொலை செய்தல் கூடாது, பொய் புகலக்கூடாது, திருடுதல் கூடாது, சொத்துகள் பெற்றிருத்தல்

கூடாது என்ற நான்கு உண்மைகளைப் புகட்டினார். பக்தர்கள், வெண்ணிற ஆடை அணிய அனுமதிக்கப்பட்டனர். மகாவீரரின் பெற்றோரும் பார்சவநாதருடைய போதனைகளைப் பின் பற்றினர்.

**சமணம்—சொல் விளக்கம்**

ஜீனரின் வழி செல்லுபவர்கள் ஜெயினர் (சமணர்) எனப் படுவர். ஜின் என்பது ஜீ என்ற பகுதியின் அடியாகப் பிறந்த சொல். 'ஜி' என்பதற்கு ஜெயித்தல், வெற்றி பெறுதல் என்று பொருள். ஆகவே ஜினன் என்றால் வெற்றி கண்டவன்—அதாவது தன் மனத்தையும் பொறிகளையும் அடக்கி வெற்றி கண்டவன் ஆவான். அத்தகைய ஜீனர்களைக் கடவுளாகக் கொண்ட சமயம் சமணமாகும்.

**தீர்த்தங்கரர்**

தீர்த்தம் என்பது ஆறு—குளத்தின் துறை என்று பொருள் படும். கரையில், துறையில் மக்களை ஏற்றியவர்கள் தீர்த்தங்கரர் எனப்படுவார். தான் கண்ட நல்ல நெறியைப் பிறருக்குப் பயன்பட அமைத்தவர் என இச்சொல்லுக்கு மற்றொரு பொருளும் உண்டு.

**சமணரில் இரு பிரிவுகள்**

இவர்களிடையே திகம்பரர்கள், சுவேதாம்பரர்கள் என்ற இரு பிரிவினர் உண்டு. திகம்பரர் என்றால் ஆடை அணியாதோர் எனப் பொருள்படும். திக் என்றால் திசை; அம்பரம் என்றால் ஆடை என்று பொருள். எவன் திசைகளை ஆடையாகக் கொண்டு வாழ்கிறானோ அவன் திகம்பரன். வெள்ளை ஆடை புனைவோர், சுவேதாம்பரர் என அழைக்கப்படுகின்றனர்.

**மகாவீரர்**

இவரது இயற்பெயர் வர்த்தமானர். இவர் சமணத்தின் கடைசித் தீர்த்தங்கரர். இவருடைய தந்தையின் பெயர் சித்தார்த்தர், தாயின் பெயர் திரிசலா எனக் கூறப்படுகின்றது. அவர் வைசாலிக் கருகிலுள்ள குண்டகிராமம் என்னுமிடத்தில் கி. மு. 546-ல் பிறந்ததாக டாக்டர் இராதா குமுத் முகர்ஜி கூறுகிறார். அவர் மறைந்தது கி.மு. 468-ல் என்பதை வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

இவர் யசோதை என்ற மங்கையை மணந்து இல்வாழ்வை நடத்திவந்தார். அவர்களுக்குப் பிரியதர்சனா என்ற பெண்மகவு

பிறந்தது. பின்பு வர்த்தமானர் உடன்பிறந்தவர் அனுமதியுடன் துறவு மேற்கொண்டார். பன்னிரண்டு ஆண்டுகள் சுற்றி அலைந்து தவவாழ்வினை மேற்கொண்டார் என்றும் கூறப் படுகின்றது. பதின்மூன்றாம் ஆண்டில் இரிஜுபாலிகா என்னு மிடத்தில் சால் மரத்தினடியில் நிர்வாணம் எனப்படும் உயர் நிலையை அடைந்தார் எனக் கூறப்படுகிறார். அதுமுதல் அவருக்கு 'மகாவீரர்' என்ற சிறப்புப் பெயர் வழங்கியது. பின்னர் மகதம், கோசலம் முதலிய நாடுகளிலும், பிற அண்மைப் பகுதி களிலும் சமண சமயக் கருத்துகளை மக்களுக்கு விளக்கும் பணியில் ஈடுபட்டார். இறுதியாகத் தமது 72ஆவது வயதில் பாவா என்னுமிடத்தில் உயிர்நீத்தார்.

### மகாவீரர் போதித்த உண்மைகள்

சமணக் கொள்கைகளை முறைப்படுத்தி, செம்மைப்படுத்தி எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கொடுத்த பெருமை மகாவீரரைச் சாரும். பார்சவநாதர் கொடுத்த கருத்துகளுடன் இவர் மேலும் பல பயனுள்ள போதனைகளை அளித்துள்ளார். குறிப்பாக அவர் கற்பித்த நான்கு போதனைகளுடன், இவர் ஐந்தாவது போதனையாக 'பிரமசரியம்' அல்லது 'தன்னடக்கம்' கைக்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டார். இவர், இறைவன் உண்டு என்பதையும், வேள்விகள் செய்வதால் வேண்டிய பலன்கிட்டும் என்பதையும் நம்பவேண்டாமெனக் கூறினார்.

### சமணக் கோட்பாடுகள்

1. **மூன்று இரத்தினங்கள் — நன்னம்பிக்கை :** இது உண்மையான கொள்கைகளைக் கண்டு, அவற்றை ஏற்று, ஜீனர் போதிக்கும் ஏழு தத்துவங்களில் நம்பிக்கை கொள்வ தாகும். இதைச் சம்யக் தரிசனம் என்றும் கூறுவர்.

2. **நல்லறிவு :** இது முழுமையான ஞானம் அல்லது சம்யக் ஞானம் எனப்படுகின்றது. இதன் துணைகொண்டு பொருள்களை நன்கு புரிந்து கொள்ளமுடியும்.

3. **நல்லொழுக்கம் :** இது நல்ல முறையில் நடந்து கொள்ளுதல். இதைச் சம்யக் சாரித்திரம் என்பர்.

*வினைப்பயன்களினின்று விடுபட இம்மூன்று இரத்தினங்கள் பயன்படுகின்றன.*

### ஆன்மா

இந்து சமயத்தைப் போன்றே சமணமும் ஆன்மா உண்டு, அது அழியாதது எனக் கூறுகிறது. அஃது உலகோடு தொடர்பு கொண்டுள்ளவரை, கட்டுண்டு கிடக்கிறது; இக் கட்டிலிருந்து விடுவிக்க அதனை வினையினின்று விடுவிக்கவேண்டுமென்பது இச்சமயத்தின் கருத்து. உயிரை ஜீவன் என்றழைப்பர்.

உயிர்கள் பலவாகும். அவை இறைவனால் படைக்கப் பட்டவையல்ல; ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நான் கறிவுயிர், ஐயறிவுயிர் என ஐவகையாகப் பகுப்பர். வீடுபேறு துறவிகட்குமட்டும் கிட்டும், இல்லறத்தாருக்குக் கிட்டாது என்பது சமணக் கருத்து.

உயிரற்றது அஜீவன் என அழைக்கப்படும்.

### இறைவன்

இறைவனை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் கடவுள் உலகைப் படைத்தார், அவருடைய கட்டுப்பாடு அதன் மேலுண்டு என்பவை அவர்கட்கு உடன்பாடுடையவல்ல. இறை வணக்கம் இவர்களிடம் இல்லை. கட்டுகளினின்று விடுபட்ட, அனைத்து ஆற்றலும் அறிவும் நிரம்பப்பெற்ற தீர்த்தங்கரர் களையே சமணர்கள் வழிபடுகின்றனர். இவர்கள் கூற்றுப்படி என்றும் உலகு அழியாது.

### வினையும் மறுபிறவியும்

சமண சமயம் கர்மவினையை மிகவும் வலியுறுத்துகின்றது. சென்ற வாழ்வில் ஈட்டிய வினைக்கேற்ப இவ்வாழ்வின் அமைப்பு அமைகின்றது எனக் கருதுவர் சமணர். இவ்வாழ்வில் ஈட்டும் வினையின் விளைவை அடுத்த பிறவியில் காணலாம். ஜீவன், இறுதியாக வீடுபேறு அடையும்வரை கர்மவினைக் கட்டு என்ற சுழற்சியினின்று விடுபட முடியாது.

### வீடுபேறு

பல பிறப்புகளில் ஜீவன் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளால் வினைகளின்று விடுபட்டு வீடுபேறு அடையமுடியும். ஆனால் இதே ஜீவன், தன்னையே வருத்திக்கொள்ளும் தவமுயற்சியில் ஈடுபட்டால் இவ்வாழ்விலேயே வீடுபேறு அடையமுடியும். இதற்கு உடலின் செயல்முறைகளையும் ஒழுங்குபடுத்தவேண்டும்.

தவம், புதிய கர்மவினைகள் கூடுவதைத் தவிர்க்கும். மேலும் இவ்வாழ்வில் ஈட்டிய வினைகளையும், கடந்துபோன வாழ்வில் ஈட்டியவற்றையும் அறவே அழிக்கும் ஆற்றல் தவத்திற்கு உண்டு. இவ்வாறாக ஜீவன் நிர்வாண நிலையை அடையும்.

சமணக் கோட்பாட்டின் சித்தஜீவன்கள் ஐவகைப்படும். (1) சமணத்தை, உடலோடு கூடிய சீவன்களாகப் போதிப் போர் தீர்த்தங்கரர்கள் என அழைக்கப்படுவார்கள். (2) வினையால் வந்த உடலை உதறிவிட்டு நிர்வாண நிலையை அடையக் காத்திருக்கும் கறைபடியாத ஆன்மாக்களை அருகதர்கள் என்பர். (3) துறவிக் குழுக்களின் தலைவர்களை ஆசாரியர்கள் என அழைப்பர். (4) சமணக் கொள்கைகளைக் கற்பிக்கும் ஞானிகள் உபாத்தியாயர்கள் எனக் கருதப்படுவர். (5) எஞ்சியுள்ள வகுப்பினராகிய துறவிகள் இதில் அடங்குவர். அவர்களைச் சாதுக்கள் என்பர்.

### அகிம்சை

இஃது இவர்களின் அடிப்படைக் கோட்பாடு. இன்னா செய்யாமை, அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகிய நான்கும் ஒன்றுசேர்ந்ததே அகிம்சை எனப்படும். இதுவே சமணம் என்ற கப்பலின் நங்கூரமாகக் கருதப்படுவது.

### ஐந்து பெரு நோன்புகள்

(1) அகிம்சை அல்லது இன்னா செய்யாமை. (2) வாய்மை அல்லது பொய் புகலாதிருத்தல். (3) கள்ளாமை அல்லது பிறருடைய பொருளைக் கவராமை. (4) பற்றின்மை அல்லது உயிர் வாழ்வன, உயிரற்றவைபால் பற்று, பாசம் கொள்ளாமை; அல்லது அவாவறுத்தல் என்றும் கொள்ளலாம். (5) தன்னடக்கம் அல்லது பிரம்மசரியம். அதாவது சிந்தனை, சொல், செயல் இவற்றால் சிற்றின்பம் விழையாமை.

இவற்றினைச் சமணத் துறவிகள் பின்பற்றவேண்டும் என வற்புறுத்தப்பட்டனர்.

### மகளிருக்கு விடுதலை

மகளிருக்கு விடுதலை வேண்டும், அவர்களுக்கும் நிர்வாண நிலை அடையும் உரிமையுண்டு எனக் கூறினார். பெண்கள் சமணசங்கத்தில் சேர அனுமதிக்கப்பட்டனர்.

**வைதிக சமயத்திற்கு எதிர்ப்பு**

சமணம் வேதங்களில், சாதிப் பாகுபாட்டினில், வேள்வி களில், பிராமணர்களின் ஆதிக்கத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை. வேத அடிப்படையில் அமைந்த சமயமே வைதிக சமயம் என்பது. இக்கோட்பாடுகளைப் புறக்கணித்ததோடு எதிர்க்கவும் செய்தது சமணம்.

**ஆடையின்மை**

பார்சவநாதர் தம் சீடர்களை ஆடை அணிய அனுமதித்தார். ஆனால் மகாவீரர் அதை எதிர்த்தார். ஆன்மத் தூய்மைக்கு ஆடையில்லாதிருக்க வேண்டுமென மகாவீரர் கருதினார். ஆடையால் வைத்திருக்கும் பற்றையும் அகற்ற வேண்டும். மேலும் ஆடையில்லாதிருப்பது தன்னை மிகவும் வருத்திக் கொள்ளத் துணைபுரியும் என்பது அவரது கூற்று.

**சம உரிமை**

உயிர்வாழ்வன அனைத்தையும் சமமாகக் கருத வேண்டு மென்பது சமணத்தின் கொள்கை. துறவியாயினும், சாதாரண மனிதனாயினும் சரி 'ஓ! பிரபுவே! நான் அனைத்து உயிரினத் தையும் சமமாகக் கருதுவேன்' என உறுதிமொழி எடுத்துக் கொள்ளவேண்டும். மேலும், 'என் சக்திக்கு இயன்றமட்டும் இன்னாசெய்வதிலிருந்து என்னை விலக்கிக் கொள்வேன்' எனவும் உறுதிகொள்ளவேண்டும்.

**தவமும் நோன்பும்**

ஒரு சமணன் இறக்கும்வரை எதுவும் உண்ணாதிருந்து, வீடுபேறு அடையலாம் என்பது அச்சமயக் கருத்து. அதைச் சல்லேக்கானா என்பர். சென்றவாழ்வில் ஈட்டிய வினைகளையும் நோன்பினால் அழித்துவிடலாம் என்பது மகாவீரர் கருத்து. உடலை வருத்திச் செய்யும் கடுந்தவத்தால் எல்லாக் கட்டு களினின்றும் கர்மவினைகளினின்றும் மனிதன் விடுபடலாம் என்று சமணம் கருதுகின்றது.

**நவபதார்த்தம்**

சமணத்தில் ஒன்பது பொருள்கள் கூறப்படுகின்றன. இவற்றை நவபதார்த்தம் என்று சொல்லுவர். இவற்றை ஜீவன் (உயிர்), அஜீவன் (உயிரல்லது), புண்ணியம் (நல்வினை), பாவம் (தீவினை), ஆஸ்ரவம் (ஊற்று), ஸம்வரை (செறிப்பு), நிர்ஜரை (உதிர்ப்பு), பந்தம் (கட்டு), மோட்சம் (வீடு) என்பர்.

**சியாத்வாதம் அல்லது அநேகாந்தவாதம்**

சமண தத்துவத்தின் மிக உயர்ந்த கொள்கை **சியாத்வாதம்** அல்லது **அநேகாந்தவாதம்** என்பதாகும். ஒரே பொருள் அநேக தருமங்கள் (இயல்புகள்) பொருந்தியதாய் இருப்பதே அநேகாந்தம். பல்வேறு கோணங்களில் பார்க்கையில் ஒரே பொருள் அநேக இயல்புகள் உள்ளதாய்க் காணப்படுகின்றது. அநேகாந்த தத்துவத்தில் எல்லா முரண்பாடுகளுமே தீர்ந்துபோய், ஓர் இணக்கம் அமைந்துவிடுகிறது. எப்பொருளைக் குறித்தும் திட்டவட்டமான தெளிவான கருத்தினை வெளியிட முடியாதென்பதே இக்கொள்கையின் விளக்கம்.

எடுத்துக்காட்டாக, இராமன் என்பவன் ஒருவனுக்கு மகன் என்றால் இன்னொருவனுக்குத் தந்தையாகவும், மூன்றாமவனுக்கு அண்ணன் அல்லது தம்பியாகவும், நான்காமவனுக்கு மாமனாகவும் இருக்கலாம். இன்னும் பார்க்கப்போனால் அவன் ஒருவனுடைய நண்பனாகவும் இன்னொருவனுடைய பகைவனாகவும் இருக்கலாம். ஆகவே, ஒரே இராமன் இவ்வாறு பல்வேறு உருவில் காட்சியளிக்கிறான். ஆகையால் அவனது இந்த உருவமே சரி; அது சரியன்று என்பது பொருந்தாது. ஒவ்வொரு பொருளையும் அநேக கோணங்களிலிருந்து பார்ப்பது **அநேகாந்தவாதம்**. ஒவ்வொரு கோணத்தினின்று நோக்குவதும் ஓரளவுக்கு உண்மை, முழுக்க முழுக்க உண்மையன்று. ஒரு பொருள் ஏழு வகையாக இருக்கலாம் என வாதிடுவது **சியாத்வாதம்**.

**சமண இலக்கியம்**

சமணத்தின் இரு பிரிவினரான சுவேதாம்பரர்களும் திகம்பரர்களும் தங்களுடைய சமய இலக்கியத்தை **ஆகம சித்தாந்தம்** என அழைத்தனர். பன்னிரண்டு அங்கங்களை முதன்மையான, முக்கியமான திருமுறைகள் என இரு சாராரும் ஏற்றுக் கொள்கின்றனர். சித்தாந்தம் என்பது 45-லிருந்து 50 நூல்கள் அடங்கியவை. பருவங்களில் மூலக் கோட்பாடுகள் உள. அவை 14 நூல்கள். சுவேதாம்பரர்களின் சித்தாந்தங்கள் 12 அங்கங்களுடையவை. இவை திருமுறைகளில் தனிப்பட்டவர்களால் எழுதப்பட்டவை. இவை தவிர, வேறு பல நூல்களும் உண்டு. இவை அனைத்தும் சூத்திரப் பாணியில் எழுதப்பட்டுள்ளன. இவை உரைநடையும் செய்யுள் நடையும் கலந்தவை.

# 6.6. இந்தியப் பண்பாட்டிற்குச் சமணத்தின் பங்கு

### சமண இலக்கியமும், பேச்சு, மொழி, இலக்கிய வளர்ச்சியும்

இந்நாட்டு மொழி வளர்ச்சியில், சமணர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் சீரியபணியினைச் செய்துள்ளனர். நாட்டின் பல்வேறு இடங்களில் பல்வேறு காலங்களில் நிலவிவந்த பேச்சு மொழிகளைத் தங்கள் சமயப் பிரசாரத்திற்கும், புனித நூல்களை எழுதிப் பத்திரப்படுத்துதற்கும் பயன்படுத்தினர். பிராகிருத மொழியில் நிறைய சமய நூல்களை எழுதி, அம்மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர். அவர்கள் பல பேச்சு மொழிகட்கு இலக்கிய வடிவங் கொடுத்தனர். மகாவீரர் மகதி, செளரசேனி என்ற இரு மொழிகள் பேசுவோரும் அறிந்து கொள்வதற்கான இரண்டின் கலப்பால் விளைந்த அருத்த-மகதி என்ற மொழியில் சமணத்தைப் போதித்தார். சுருத்தங்கள் என அழைக்கப்படும் 12 நூல்கள் மகாவீரரால் அருத்த-மகதி மொழியில் எழுதப்பட்டன. இந்தி, குஜராத்தி, மராத்தி மொழிகளில் தோன்றுவதற்கு முன்பு எழுதப் பட்ட சமண இலக்கியங்கள் (அபப்பிரம்சா என்ற மொழியில்) தற்போது கிடைத்துள்ளன. தொடக்கக்காலக் கன்னட இலக்கியத்திலும் சமணத்தின் செல்வாக்கைக் காணமுடிகின்றது. அவர்கள் சமஸ்கிருத மொழியில் சமய இலக்கியங்களையும், தத்துவ நூல்களையும், ஏனைய துறைகள் பற்றிய நூல்களையும் அளித்துள்ளனர்.

### சமணர்களின் அறக்கோட்பாடுகள்

மனிதனின் அறவாழ்வை உயர்த்தவும் அவனிடம் அரிய பண்புகளை வளர்க்கவும் சமணம் பெருந்தொண்டாற்றியுள்ளது. ஆன்மாவினுள் அளவிடற்கரிய தீமைகளும் கர்மவினைகளும் நுழையவொட்டாதபடி தடுத்து நிறுத்தக் கடுமையான நெறி முறைகளைக் கூறுகின்றது. இவை அக, புறத் தூய்மைகட்குச் சொல்லப்படுபவை. உடலை வருத்திச் செய்யும் செயல்களாவன பிச்சையெடுத்தல், உண்ணாநோன்பு போன்றவை. அகத் தூய்மைக்கெனப் பின்பற்ற வேண்டியவை பணிவு, பணி, கல்வி, தியானம், உடலை வெறுத்துப் பாவத்திற்குப் பரிகாரம் தேடல், உண்மையை உரைத்தல், தவம் போன்றவையாகும்.

உலகில் ஒவ்வொரு மனிதனும் ஆன்ம ஈடேற்றம் பெற நல்ல நம்பிக்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் என்ற மூன்று இரத்தினங்

களைச் சமண சமயம் அளித்துள்ளது. சமண சமயத்தில் மூன்றையும் ஒன்றாகவே பின்பற்ற வேண்டும். நிர்வாணம் அடைய மூன்று இரத்தினங்கள் மட்டுமன்றி, தீர்த்தங்கரர் களிடமும், அவர்களுடைய கோட்பாடுகளிடமும், அற நடத்தை யிடமும் நம்பிக்கை வேண்டும். இவை அனைத்தும் உய்வு பெறுவதற்குரிய உயரிய வழியைச் சமைத்துக் காட்டுகின்றன.

சமணம், இல்லற வாழ்வு நடத்துபவர்கட்கு எளிய அறக் கோட்பாடுகளை அளித்துள்ளது. அவன் அகிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மசரியம், அபரிகிரஹம் என்ற ஐந்து கொள்கை களைப் பின்பற்றவேண்டும். அவன் கொடுமை, பொய்மை, திருடு, கற்பின்மை, காமவெறி, அவா போன்ற தீயவைகளினின்று விடுபட்டிருத்தல் வேண்டும். இந்த எளிய நோன்பு முறை சமணத்தில் அநுவிரதம் என்ற சொற்றொடரால் அழைக்கப்படு கின்றது. இவற்றினையும் மேலும் கூறப்பட்டுள்ள முக்கிய ஒழுங்கு நெறிகளையும் சமணத் துறவிகள் பின்பற்றும்பொழுது அவை மகாவிரதங்கள் என அழைக்கப்படுகின்றன. ஒரு துறவியின் முக்கியக் குறிக்கோளாக அமைய வேண்டியது தன்னடக்கம், அறிவு இவை இரண்டையும் பெறுதல். ஏனெனில் இவற்றின் மூலம் தன்னையும் கட்டுப்படுத்தி அறிவைப் பெறுவதுடன், மற்றவர்களை நெறிப்படுத்தவும், அவர்கட்கு அறிவு புகட்டவும் முடியும். இவர்களுடைய அறவாழ்வு முறை பௌத்த சமயத்தைவிட மிகவும் கடுமையானது.

## அகிம்சை

இக் கோட்பாடு சமணத்தில் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இக் கோட்பாடு உயிரினங்கள் அனைத்தின் பாலும் அன்பையும் கருணையையும் காட்டும் இயல்பினை உருவாக்குகின்றது. எந்தப் பூச்சி புழுவும் விலங்கும் சிந்தனை யாலோ, சொல்லாலோ, செயலாலோ துன்புறுத்தப்படாதிருக்க வேண்டும். மறைமுகமாகவும் இன்னா செய்வதை ஒவ்வொரு வரும் தவிர்க்க வேண்டும். பலரறிய ஒருவரை இழித்துரைப்பது, புனைந்துரைப்பது, எள்ளி நகையாடுவது போன்றவை இம்சையின்கீழ் வருபவையாகக் கருதப்படுகின்றன. இத்தகைய செயல்களைத் தவிர்ப்பதும் அகிம்சையாகும். இவர்கள் இக் கோட்பாட்டினை வலியுறுத்திக் கூறியுள்ள அளவிற்கு வேறு யாரும் உலக வரலாற்றில் கூறியிருக்க முடியாது.

## சமண தத்துவம்

எல்லா உயிருள்ளனவும், உயிரற்றனவும் மிகவும் நெருங்கிய உறவுடையவை. இவற்றின் வினையால் பிறப்பு, இறப்பு போன்ற

வாழ்வின் பல்வேறு அனுபவங்கள் விளைகின்றன. இந்த நீண்ட பயணத்திலிருந்து விடுபட விரும்பினால் ஒவ்வொருவரும் நிர்வாண நிலைக்கு அழைத்துச் செல்லும் கடுமையான அறக் கோட்பாடுகளையும் ஒழுக்க நெறிகளையும் பின்பற்ற வேண்டும். சமண சமயம் சியாத்வாதம் (இருக்கலாம் கொள்கை), ஜீவ பன்மை வாதம், கடவுளை ஏற்றுக் கொள்ளாமை போன்றனவற்றைப் பற்றிக் கூறுகின்றது.

### சமண ஸ்தூபிகள்

கிறித்தவ காலத் தொடக்கத்தின்போது சமணர்களும், புத்தர்களைப் போன்று தங்கள் ஞானிகளைப் பெருமைப் படுத்தும் வகையில் ஸ்தூபிகளை எழுப்பினார்கள். அவைகளைச் சுற்றிக் கல்வேலிகள், அழகிய நுழைவாயில்கள், கற்குடைகள், மிகுந்த வேலைப்பாடமைந்த தூண்கள், நிறைய சிலைகள் போன்றவை அமைந்திருந்தன. இவற்றில் பல மதுரா என்ற இடத்தில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. சமண ஆலயங்களின் அழிபாடுகளும் (ruins) படிமங்களில் பொறித்துவைத்த எழுத்து களுடன் கூடிய அழிபாடுகளும் இங்கு உள்ளன.

### சிலைகள்

சமணர்கள் தீர்த்தங்கரர்களையும் பிற தெய்வத்தன்மை வாய்ந்தோர்களையும் வழிபடுகிறார்கள். இதுதொடர்பாக எண்ணற்ற சிலைகளை அழகுபடக் கற்களில் செதுக்கி வைத்துள்ளனர்.

### கட்டடக்கலையும் பிற கலைகளும்

சமண சமயத்தைப் பின்பற்றியோர் பல அழகிய கற் குகைகளை வடித்தனர். உதயகிரியிலுள்ள புலிக் குகையும், எல்லோராவிலுள்ள இந்திர சபையும் குறிப்பிடத்தக்கவை. குவாலியர் கோயில்களும், சிரவணபெளகொளாவிலுள்ள 59 அடி உயரமுள்ள கோமதீஸ்வரர் சிலையும், அபு, கஜுரஹோ போன்ற இடங்களிலுள்ள ஆலயங்களும் சமணக் கலையின் சிறப்புக்குச் சான்றாக அமைகின்றன.

## இயல் 7

# 7.1. மௌரிய காலப் பண்பாடு

**தொடக்கம்**

மௌரியர்கள் வருகையோடு இந்திய வரலாற்றில் அரசியல் பண்பாட்டுத் துறைகளில் ஒரு புதிய அத்தியாயம் தோன்றுகின்றது. இம்மரபினரின் ஆட்சியின்கீழ் முதன் முறையாக இந்தியாவில் அரசியல் வழியில் ஒற்றுமையைக் காண்கின்றோம். இவ்வரச மரபு சந்திரகுப்த மௌரியரால் நிறுவப்பெற்றது. மௌரியர்கள் ஒரே சீரான நிருவாக முறையை நடத்தி வந்தனர். இஃது இன்றைய அறிஞர் பெருமக்களாலும் பாராட்டப்படுகின்றது. இவர்களது ஆட்சிக் காலத்தில் அரசியல் ஒற்றுமை, சமுதாயத்தில் அமைதி, பொருளாதார வளர்ச்சி, சமய சகிப்புத் தன்மை இவை அனைத்தும் சிறப்பான நிலையில் இருப்பதையும் காணலாம். கட்டடக்கலை, இலக்கியம், அறிவியல் போன்றவை உன்னத நிலையில் இருந்ததையும் காண்கின்றோம்.

சந்திரகுப்த மௌரியன் கி. மு. 322-லிருந்து 298 வரையும் பிந்துசாரன் கி. மு. 298-லிருந்து 273 வரையும், அசோகன் கி. மு. 273-லிருந்து 232 வரையும், அசோகனுக்குப் பின்வந்த அரசர்கள் 232-லிருந்து கி. மு. 182 வரையும் ஆண்டுவந்தனர்.

மௌரியர்களுடைய ஆட்சியைப் பற்றி அறிந்துகொள்ள நமக்குத் துணை புரிபவை (1) மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா என்ற நூல், (2) கௌடில்யர் அல்லது சாணக்கியர் எழுதிய அர்த்த சாஸ்திரம், (சாணக்கியர், சந்திரகுப்த மௌரியனுக்கு அமைச்சராக இருந்தவர்.) (3) விஷாகதத்தர் எழுதிய முத்திரா இராட்சஸம் என்ற அரசியல் நாடகம், (4) சமண, பௌத்த சமயநூல்கள், (5) புராணங்கள், (6) கலைவேறுபாடுகள், (7) கல்வெட்டுகள்.

மெகஸ்தனிஸ் மௌரிய கால நிருவாகத்தையும் இந்திய சமுதாய அமைப்பையும்பற்றி நிறைய கூறுகிறார். கௌடில்யர் தமது அர்த்த சாஸ்திரத்தில் அரசன், அவனுடைய குறிக்

கோள்கள், அவனுடைய அமைச்சர்கள், மாநில நிருவாகமுறை, நகர நிருவாக முறை, கடல் வாணிபம், மக்களின் பொருளாதார நிலை போன்றவற்றை மிகச் சிறப்பாக விளக்குகின்றார். முத்திரா இராட்சஸம் என்ற நூல் சந்திரகுப்த மௌரியன் கௌடில்யரின் துணைகொண்டு நந்த அரச மரபை வீழ்த்தியதைச் சித்திரிக்கின்றது. சமண, பௌத்த சமய நூல்கள் சந்திரகுப்த மௌரியன் சமண சமயத்தைத் தழுவியதையும் அசோகன் பௌத்த சமயத்தைப் பரப்பியதையும் கூறுகின்றன. புராணங்கள் மூலம் மௌரியர்களைப்பற்றிச் சில பயனுள்ள செய்திகளை அறிகின்றோம். கலை வேலைப்பாடுகள் மூலமாக மௌரியர் காலத்துக் கலை வளர்ச்சியைப்பற்றி அறிந்து கொள்ளலாம். கல்வெட்டுகள் மூலமாக அசோகருடைய தரும நெறி, நிருவாகம், பண்பு, கல்வியின் தரம், மக்களின் பொது மொழி போன்றவற்றைப்பற்றி அறிந்து கொள்ளலாம்.

### அரசியல் அமைப்புமுறை

மத்திய அரசு: மௌரிய ஆட்சிமுறையில் அரசன் சிறந்த இடத்தைப் பெற்றிருப்பதுடன் அவனுக்கு அனைத்து அதிகாரங்களும் இருந்தன. அவனுடைய அனுமதியின்றி எச்செயலையும் செய்யமுடியாது. அவன் நிருவாக நுணுக்கங் களையும், அமைச்சர்களின் பணிகளையும், இராணுவச் செயல் திறனையும், நாட்டில் நடைபெறும் ஏனைய நிகழ்ச்சிகளையும், ஒற்றர்களின் பணியையும் செவ்வனே பராமரிக்க வேண்டும். அரசன் ஆற்றலும் உற்சாகமும் நிறைந்தவனாகஇருந்தால், அவன் ஆட்சியின்கீழ் உள்ள மக்களும் அதேபோன்று இருப்பர் எனக் கௌடில்யருடைய அர்த்த சாஸ்திரம் கூறுகிறது. அரசன் நீதி, சட்டம், படைத்துறைகட்குத் தலைவனாக விளங்கினான். எத்துறையிலும் அவனுடைய முடிவே முடிந்த முடிவாக இருந்தது.

அமைச்சர்கள்: அரசன் ஒருவனே அனைத்து நிரு வாகப் பணிகளையும் செய்ய இயலாத நிலை இருந்ததால், அவனுக்குத் துணைபுரிய மந்திரிகள் என அழைக்கப்பட்ட அமைச்சர்கள் இருந்தனர். அமைச்சர்களைத் தவிர, பரிஷத் என அழைக்கப்படும் ஆலோசகர்களும் இருந்தார்கள். அவர்கள் அவசரக் காலத்தில் ஆலோசனை நல்கினர்.

செயலகம்: அரசு அலுவல்களைக் கவனிக்கப் பல் வேறு துறைகளை உள்ளடக்கிய செயலகம் நிறுவப்பட்டது.

ஒவ்வொரு துறையும் ஒரு கண்காணிப்பாளரின்கீழ் இயங்கி வந்தது. இவரை அத்யக்ஷர் என அழைத்தனர்.

அமைதிக்கால அரசுப் பணிகள் : அரசு நன்முறையில் இயங்கச் சிறந்த அமைதிக்கால அரசு ஊழியர்கள் நியமிக்கப் பட்டார்கள். இவர்களில் பல்வேறு பிரிவினர்கள் இருந்தனர். நீதித்துறையைச் சார்ந்தோரும் அன்றாடச் செயல்முறைகளைக் கவனிப்போரும் அடங்கியிருந்தனர். இதற்கென இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியாளர்கள் அக்ரநாமி எனவும், நகர ஆணையாளர்கள் அஸ்திநாமாய் எனவும் அழைக்கப் பட்டனர். அவர்கள் மக்களின் பொதுநலனைக் கவனித்து வந்தனர். நகர நிருவாகத்தைக் கவனிப்பதற்கு மகாமாத்திரர்கள் என்ற உயர்ந்த அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். எழுத்தர்கள் யுதா எனவும் செய்தி நிருபர்கள் பதிவேடகர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். உயர்ந்த பூசாரியைப் புரோகிதர் என்றும், இளவரசரை யுவராஜர் என்றும், சேனைத் தலைவரைச் சேனா பதி என்றும் குறிப்பிட்டனர். அசோகர் தரும மகாமாத்திரர்கள் என்ற மற்றொரு வகை அலுவலர்களையும் வைத்திருந்தார். இவர்கள் பௌத்த சமய தருமத்தை மக்களுக்குப் பிரகடனப்படுத்தி அவர்களுடைய நலனிலும் மகிழ்ச்சியிலும் செயல்படுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தார்கள். சாதி, சமயம், நாடு போன்ற வேற்றுமைகளின்றி அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநில அரசுகள் : மௌரியப் பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இது நிருவாகத்தைச் சிறப்பாக நடத்துவதற்காக உருவாக்கிய முறையாகும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசர்கள் அல்லது குமாரர்கள் எனப் பெயரிட்டு முடிசூடப்பட்டவர்கள் தலைமையேற்று ஆட்சிப் பொறுப்பை நடத்தி வந்தனர். அவர் ஓர் ஆளுநர் போன்ற நிலையில் இருந்து வந்தார். மாநிலங்கள் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றைத் தலைமையேற்று நடத்துவோரை ஸ்தானிகர் என அழைத்தனர். கிராமம்தான் நிருவாகத்தில் ஒரு சிறு தொகுதியாக இருந்தது. அதன் பொறுப்பை ஏற்ற அலுவலரைக் கிராமிகள் எனவும் பத்து கிராமங்களுக்குப் பொறுப் பாயிருக்கும் அலுவலரைக் கோபன் எனவும் அழைத்தனர்.

ஒற்றாடல் : மௌரிய அரசு ஓர் அமைதிகாக்கும் அரசு. அதில் சிறந்த ஒற்றர்முறை இருந்தது. அரசு அலுவலர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க இவர்களைப் பணிக்கு அமர்த்தி யிருந்தது. இவர்கள் இரகசிய செய்திகளைத் துப்பறிந்து

அரசுக்கு அறிவித்தனர். இவர்கள் பல்வேறு செய்திகளையும் சேகரித்தனர். இவர்களைக் கௌடில்யர் குதபுருஷர்கள் என்று அழைத்தார்.

நீதி நிருவாகம் : நீதி வழங்குவதற்கு அரசனே தலைவன். நகரங்களிலும் நாட்டிலும் சிறப்புத் தீர்ப்பு மன்றங்கள் இருந்தன. அவைகட்கு மகாமாத்திரர்கள், இராஜுக்கள் தலைமையேற்றனர். தருமஸ்தேயம், கண்டக்க சோதனம் என்ற இருவகை நீதி மன்றங்கள் இருந்தன.

இராணுவ நிருவாகம் : மௌரிய இராணுவம் திறமையாக அமைக்கப்பட்டிருந்தது; போர்க்கருவிகள் நிரம்பப்பெற்று நல்ல ஒழுக்கத்துடன் செயல்பட்டுவந்தது. இதில் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, இரதங்கள் போன்றவை அடங்கி இருந்தன. போர் வீரர்கட்குரிய பயிற்சி மிகச் சிறந்த முறையில் அளிக்கப்பட்டது.

அரசின் வருவாய்த்துறை : நாணயமாகவும் பொருளாகவும் வரிவிதிக்கப்பட்டது. அதற்குரிய அலுவலர்கள் அதை வசூலித்தனர். நிலவரிதான் அதிக வருவாய் அளித்தது. விளைச்சலில் நான்கில் ஒரு பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது. நிலவரியை அக்ரநாமி என்பவர் வசூலித்தார். மதுவின் மேலும் வரி வசூலிக்கப்பட்டது. இன்று இருப்பதுபோன்று பல்வேறு வரி விதிப்பு பல்வேறு பொருள்களின்மேல் விதிக்கப்பட்டது.

நீர்ப்பாசனம் : நீர்ப்பாசனப் பணிகளைக் கவனிக்க அதற்கென ஒரு துறை நிறுவப்பட்டு, அது கால்வாய் வழியாக, வயல்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்க வேண்டிய வழிமுறைகளைச் செய்தது. நீர்த்தேக்கங்களைக் கட்டிக் கால்வாய்களை அமைத்து நீர் வேளாண்மைக்குக் கிடைக்க அனைத்துச் சிறந்த முறைகளையும் கையாண்டது. ஏரியிலிருந்தும் நீரைக் கால்வாய்கள் மூலமாக எடுத்துச்செல்ல நல்ல அமைப்பு முறைகள் இருந்தன.

பொதுப்பணிகள் : சாலை அமைப்பு முறைகளைக் கவனிக்க ஒரு துறை செயல்பட்டது. சாலைகளை அமைத்து அவைகளை நன்முறையில் பழுதுபார்த்தது இத்துறை. பயணிகளுக்குத் தங்கும் விடுதிகள் கட்டப்பட்டன. அவைகள் தருமசாலைகள் என அழைக்கப்பட்டன. நதிகளின்மேல் பாலங்கள் கட்டப்பட்டன. சாலையில் வாகனங்கள் செல்வதற்கெனவும் நடப்பதற்கெனவும் வழிவகைகள் அன்றே செய்யப்பட்டிருந்தன. பரந்த, அகன்ற

அழகிய சாலைகள் அமைக்கப்பட்டன. மருத்துவமனைகள் மக்களுக்கும் விலங்குகளுக்கும் ஏற்படுத்தப்பட்டன. நிழல்தரும் மரங்கள் சாலையின் இருமருங்கும் வளர்க்கப்பட்டன.

**நகராட்சி நிருவாகம்:** தட்சசீலம், உஜ்ஜயினி போன்ற நகரங்களில் பாடலிபுத்திரத்தைப் போன்று நகர நிருவாகத்தை நடத்த ஏற்பாடு இருந்தது. ஒவ்வொரு நகரத்தையும் கண்காணிக்க ஓர் அலுவலர் இருந்தார். அவரை நகரகர் என்றும் நகரத்தைச் சிறப்பாக வைத்துக் கொள்பவர் என்றும் அழைத்தனர். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் இவை செயல்படும் விதத்தை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது.

**மக்கள் தொகைக் கணக்கெடுப்பு :** மௌரிய அரசில் நிரந்தரமாக மக்கள் தொகையைக் கணக்கெடுக்க ஒரு நிலையான துறை செயல்பட்டு வந்தது. இது வரி விதிப்பதற்கும் பிறப்பு இறப்பு எண்ணிக்கைகளைக் கண்டறிவதற்கும் சிறப்பாகப் பணியாற்றியது.

**பொது ஆரோக்கியம் :** மௌரிய அரசு மக்களின் உடல் நலனைக் கவனிப்பதில் பெரும் கவனம் செலுத்தியது. வெளி நாட்டவர்கள்கூட மிக நல்ல முறையில் மருத்துவமனைகளில் பேணிக் காக்கப்பட்டனர். இறப்போர் முழுமரியாதையோடு அடக்கம் செய்யப்பட்டனர். நோயாளிகளும், விலங்குகளும் நல்ல முறையில் பேணப்பட்டனர். மருந்துகளுக்காக மூலிகைகள் உற்பத்தி செய்யப்பட்டன. அறுவைச் சிகிச்சை செய்வோரும், அதற்குரிய கருவிகளும், தாதிகளும், மருத்துவச்சிகளும் அக்காலத்தில் இருந்து வந்ததாக அறிகின்றோம். இன்று நாம் காணும் அனைத்து முறைகளும் அன்றே உடல்நலனையும், ஆரோக்கியச் சூழலையும் ஏற்படுத்த இருந்ததை அறிகின்றபொழுது பெரும் வியப்பு ஏற்படுகின்றது.

## சமுதாய அமைப்பு

**உயர்ந்த ஒழுக்கம் :** அன்றைய சமுதாயம் உயர்ந்த ஒழுக்கம் நிறைந்ததாய் அமைந்திருந்தது. மக்கள் சிக்கனமாக வாழ்ந்து எளிமையாக விளங்கினர். அவர்களிடம் உண்மை, நேர்மை, நாணயம், தைரியம், அறிவாற்றல் அனைத்தும் நிறைந்திருந்தன. அசோகருடைய அறக்கோட்பாடுகள் அவர்களுடைய வாழ்க்கையை மாற்றி அமைத்தன. பாவம், புண்ணியம், இம்மை, மறுமை இவைபற்றிய நம்பிக்கைகளும் மக்களிடம் இருந்தன.

திருடு என்பதையே சிறிதும் காணமுடியா நிலை இருந்தது. வேள்விக் காலம் தவிரப் பிறகாலங்களில் மக்கள் மது அருந்திய தாகத் தெரியவில்லை. அரிசி அவர்களுடைய நிலையான உணவு. அவர்கள் பெரும்பாலும் நோயினின்று விடுபட்டிருந்தனர். மௌரியப் பேரரசு வள்ளுவர் கூறுவதுபோன்று,

> 'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
> சேரா தியல்வது நாடு'

என்ற இலக்கணத்திற்கு ஏற்ப அமைந்திருந்தது.

**சமுதாயப் பழக்க வழக்கங்கள்:** அடிமைகள் அன்று இருந்தனர். சதி என்ற உடன்கட்டை ஏறும் வழக்கம் அன்று பரவலாக இருந்ததாகத் தெரியவில்லை. இப்பழக்கம் பஞ்சாபில் ஒருசில பகுதிகளில் இருந்தது.

**கேளிக்கைகள்:** மக்கள் அநேக விழாக்களைக் கொண்டாடி மகிழ்ச்சி அடைந்தனர். வசந்தகால விழாவான வசந் தோற்சவம், தீபாவளி, கிரிபூஜை முதலிய பல்வேறு விழாக்களைக் கொண்டாடினர். மலர் விழாக்களும் பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப கேளிக்கைகளும் இருந்துவந்தன. பெண்கள் பந்து விளையாடினர். வேட்டையாடுவதும், படகோட்டுவதும், நீந்து வதும் அவர்களுடைய முக்கியப் பொழுதுபோக்கு. வில் வித்தை பயிலுதல், விலங்குகளுடன் போரிடல், தேரோட்டும் பந்தயம் போன்றவைகளும் பிரசித்தமானவை. சதுரங்க விளையாட்டு இருந்து வந்ததாகத் தெரிகின்றது.

இவை தவிரப் பாடல், ஆடல், இசைக்கருவியில் இசைத்தல் அன்று பெருமளவில் பழக்கத்தில் இருந்ததாக அறிகின்றோம். வீணையை மீட்டியதையும் அறிகின்றோம். பெரும்பாலும் மக்கள் நாட்டியம், இசை போன்றவற்றைக் கற்றிருந்தனர்.

**சமுதாயப் பாகுபாடு:** வருண ஆசிரம முறை அன்று இருந்ததாகத் தெரியவருகின்றது. நான்கு சாதிகளுக்கு ஏற்ற கடமைகளும் வாழ்வின் நான்கு நிலைகளுக்கு ஏற்ற கடமைகளும் செவ்வனே நெறிதவறாது பின்பற்றப்படவேண்டுமென வலியுறுத் தப்பட்டது. மெகஸ்தனிஸ் மக்கள்தொகை தத்துவ ஞானிகள், உழவர்கள், இடையர்கள், வேட்டைக்காரர்கள், வணிகர்கள், கைவினைஞர்கள், போர்வீரர்கள், இரகசிய ஆய்வாளர்கள் என எட்டு வகையாகப் பிரிக்கப்பட்டது என்கிறார்.

**மகளிர் :** பெண்களில் சிலர் தத்துவக் கல்வி பயின்று, தன்னடக்கம் நிறைந்தவர்களாக வாழ்ந்தனர். திருமணமான பெண்டிர் புனித நூல்களால் பெறும் அறிவைப் பெறுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. பெண்களுக்கு அதிக அளவில் சுதந்தரம் அளிக்கப்பட்டிருந்தது. பிரபுக்களும் அரசர்களும் பலதார மணம் செய்துகொண்டனர். குடும்பப் பெண்கள் தங்கள் துணைவருடன் சமயச் சடங்குகளில் ஈடுபட்டனர். ஒரு பெண்ணைக் கொலை செய்வது ஒரு பிராமணனைக் கொலை செய்வதற்குச் சமமாகக் கருதப்பட்டுக் கடுந்தண்டனை விதிக்கப்பட்டது.

**கல்வி :** கல்வி, மௌரியப் பேரரசின் பெரும் பகுதியில் பரவலாகப் பரவி இருந்தது. பள்ளிகளும் உயர் கல்வி நிறுவனங் களும் அரசாலும் பொது அற நிலையங்களாலும் நடத்தப்பட்டு வந்தன. கற்பிக்க வேண்டியது பிராமணர்களின் தலையான கடமை. புத்தருடைய காலத்திற்குப்பின் இப்பெரும் பொறுப்பைப் பௌத்தத் துறவிகள் மேற்கொண்டிருந்தனர். தட்சசீலம், உஜ்ஜயினி, காசி போன்ற இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. அங்குச் சிறப்பாக இலக்கியமும், சமயக் கல்வியும் கற்பிக்கப்பட்டன. பாடத் திட்டத்தில் தரும சாத்திரங்கள், இலக்கணம், பேச்சுக்கலை, அரசியல், பொருளாதாரம் இவையும் சேர்க்கப்பட்டிருந்தன. இவை அதிக அளவில் மக்களால் விரும்பிக் கற்கப்பட்டன. தொழிற் கல்வியும் கற்பிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. பெண்களுக்குக் கல்வி பெண் மடாலயங் களால் புகட்டப்பட்டு வந்தது.

**பொருளாதார நிலை**

**உழவர் நிலை :** பொதுமக்கள் மௌரியர்களின் காலத்தில் மூவகையாகப் பிரிக்கப்பட்டனர். அவையாவன : (1) உழ வர்கள், இடையர்கள், வேட்டைக்காரர்கள்; (2) வாணி கர்கள்; (3) கைவினைஞர்கள். உழவுத் தொழில் செய்வோர் மக்கள்தொகையில் பெரும் எண்ணிக்கையில் இருந்தனர். அவர்கள் செழிப்பாகவும், மகிழ்ச்சியாகவும், மனநிறைவுடனும் வாழ்ந்ததாக அறிகின்றோம். அவர்கள் சமுதாயத்தில் உயர்ந் தோராகக் கருதப்பட்டனர். கிரிஸ்தா (பயிரிடப்பட்ட நிலம்), அக்கிரிஸ்தா (தரிசு நிலம்), ஸ்தல் (உயரமான காய்ந்த நிலம்), ஷந்தா (வாழை முதலியவை விளையும் நிலம்), ஆராமா (தோட்டம்), மூலவாபா (கிழங்குப் பயிர்), வதா (கரும்பு விளையும் நிலம்), வனம் (கட்டைகள் கிடைக்கும் காடு), விவிதம் (மேய்ச்சல் நிலம்), பாதை (சாலைகள்) எனப் பல்வேறு நில அமைப்புகளைக் காண்கின்றோம்.

கொத்ரவா எனப்படும் தானியம், மிளகு, குங்குமப்பூ, கோதுமை, அரிசி, எண்ணெய் வித்துகள், கடுகு, மூலா எனப் படும் காய்கறிகள், வாழை, திராட்சைப் பழங்கள் முதலியன பயிரிடப்பட்டன. பசு, எருமை, ஆடு, கழுதை, ஒட்டகம், பன்றி, நாய் முதலிய விலங்குகள் வேளாண்மைக்கு உறுதுணையாக இருந்தன. வேளாண்மைக்கு உதவியவர்களில் கோபாலகர் எனப்படும் மாடு மேய்ப்பவர், தோக்ககா எனப்படும் பால் கறப்பவர், இடையர்கள், மேய்ச்சல் மாடுகளைப் பார்த்துக் கொண்டவர்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

தச்சர், குயவர், கொல்லர், நாவிதர், சலவைத் தொழிலாளி, கயிறு திரிப்பவர், யானைப்பாகர் (இராவுத்தர்), குதிரைப்பாகர் (அஸ்வத மகர்), மேலாளர், கணக்கர், கோபர்கள், மருத்துவர்கள் ஆகியோர் சமுதாயத்தில் இடம் பெற்றனர்.

சமுதாயத்தில் ஏழை எளியவர்கள், முதியோர், உடல் ஊன முற்றோர் அரசு உதவி பெற்றனர்.

வாணிபமும் தொழிலும்: பல்வேறு தொழில்கள் அன்றிருந்தன. கம்பளி, பட்டு, பருத்தி ஆடைகள் தயாரிக்கப்பட்டன. பல்வேறு போர்க் கருவிகளைச் செய்ய தொழிற்சாலைகள் இருந்தன. தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களைத் தோண்டி யெடுத்து அவற்றால் பல பொருள்கள் செய்தனர். தெருக்களின் பெயர்கள் தொழில் செய்பவர்களின் பெயரோடு இணைந்து காணப்பட்டன. தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் காண முடிந்தது. இத்தொழில்களால் நாடு மிகுந்த முன்னேற்றம் அடைந்திருந்தது.

போக்குவரத்து வசதிகள் காரணமாகத் தொழில்களும் வாணிபமும் உயர்ந்த அளவிற்கு வளர்ச்சியடைந்திருந்தன. துணிகள், ஆடம்பரப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. வெள்ளிப் பாத்திரங்கள், மது, அடிமைகள், அழகிய பெண்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

தொழில், வாணிபம் இவை இரண்டிலும் அரசின் கட்டுப்பாடு இருந்தது. சில ஒழுக்க நியதிகள் பின்பற்றப்பட்டன. வாணிபம் செய்வோரும் கைவினைஞர்களும் ஒன்றுசேர்ந்து தங்கள் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள சிரனிஸ் என்ற அமைப்பை ஏற்படுத்திக்கொண்டனர்.

சமயம்

வேதகாலச் சமயத்துடன், பௌத்த சமயமும், சமணமும் மக்களிடையே பிரசித்தி பெற்றிருந்தன. அசோகர் காலந் தவிர, பிறகாலங்களில் வேதகால தெய்வங்கள் வழிபடப்பட்டன; வேள்விகள் இயற்றப்பட்டன. அசோகர் மறைவுக்குப்பின் வேதங் களிலும் வேள்விகளிலும் மீண்டும் நம்பிக்கை புதுப்பிக்கப்பட்டது.

விஷ்ணு, சிவன், ஸ்கந்தன் போன்றோர் மக்களிடையே முக்கியத் தெய்வங்களாகக் கருதப்பட்டனர். பாவம், புண்ணியம், சொர்க்கம் போன்ற கோட்பாடுகளில் நம்பிக்கை வைத்திருந்தனர். சைவ, வைணவ வடிவில் பக்திநெறி பரவிற்று. பாகவதர்களும், பாசுபதர்களும் மக்கள் கவனத்தைக் கவர்ந்தனர். வாசுதேவ நெறிக்கு மதுராபுரி மையமாக விளங்கிற்று.

அசோகர் காலத்தில் பௌத்த சமயம் அரசின் சமயமாயிற்று, வெளிநாடுகளிலும் இச்சமயம் பரவிற்று.

இலக்கிய வளர்ச்சி

கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், பத்ரபாகுவின் கல்ப சூத்திரம், மற்றும் பௌத்தசமய கதவத்து என்ற நூல்கள் மௌரியரின் காலத்தில் எழுதப்பட்டன. மௌரிய ஆட்சிக் காலத்தில் பாலி, சமஸ்கிருதம் என்ற இரு மொழிகள் நிலவி வந்தன. இலக்கியத்திற்குச் சமஸ்கிருதமும், பேச்சிற்குப் பாலியும் கைக்கொள்ளப்பட்டன. கிருஹ்ய சூத்திரம், தரும சூத்திரங்கள், வேதாந்த நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன. வியாதி எழுதிய வியாகரணம் (இலக்கணம்), திரிபிடகங்கள் என்ற பௌத்த சமயநூல், இராமாயணம், மகாபாரதம் போன்ற இரு காப்பியங்களின் பெரும்பகுதி மௌரிய ஆட்சிக் காலத்தில் எழுதப் பட்டன. பௌத்த சமய அறிஞர் நாகசேனரும் இக்காலத்தைச் சேர்ந்தவர். பாணினியின் அஸ்டத்யாயியும் இவ்வாட்சிக் காலத்தில் எழுதப்பட்டது. காம சூத்திரத்தை எழுதிய வாத்ஸ் யாயனர் இக்காலத்தவரே.

கலை

கட்டடக்கலையில் பெரும் வளர்ச்சியை மௌரியர்கள் காலத்தில் காண்கிறோம். இவர்கள் காலத்துக் கட்டடங் களில் அழகு, உருவ அமைப்பு முறை, செயல்முறை இம் மூன்றும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன. இக்கட்டடங்கள்

பெரும்பாலும் மரத்தால் ஆனவை. மௌரியர்கள் கட்டிய அரண்மனைகள் உலகத்திலேயே மிக அழகு வாய்ந்தவை; மிகச் சிறப்பு வாய்ந்தவை எனக் கருதப்படுகின்றன. பாகியான் என்ற சீன யாத்திரிகன் 'இக்கட்டடங்கள் கடவுளின் படைப்புகள்போன்று காட்சி அளிக்கின்றன' எனக் கூறு கின்றான். அசோகன் எண்ணற்ற ஸ்தூபிகளைத் தன்னுடைய நாடு முழுமையும் நிறுவினான். இவற்றில் மிகச் சிறப்பு வாய்ந்தது சாஞ்சியிலும், பருகட் என்ற இடத்திலும் நிறுவப்பட்டவையாகும். சாஞ்சி ஸ்தூபி 77½ அடி உயரமும் 12½ அடி குறுக்களவும் உள்ளது. அசோகன் மேலும் பல குகை உறைவிடங்களையும் மடாலயங் களையும் பௌத்த பிக்ஷுக்களுக்காகக் கட்டியிருப்பதை அறிகின்றோம். குகைகள் கடினமான பாறைகளில் செதுக்கப் பட்டவை. ஆனால் அவற்றின் சுவர்கள் வழவழப்பாகக் கண்ணாடி போன்று மெருகிடப்பட்டுள்ளன.

அசோகன் காலத்தில் சிற்பக் கலையும் மிகச் சிறப்பான நிலை எய்தி இருந்தது. தூண்களில் விலங்குகள் பறவைகளின் உருவங்கள், கடினமான பாறைகளிலிருந்து வெட்டப்பட்ட சிலைகள் வியத்தகு அழகைப் பெற்றுக் கலையுலகம் போற்றும் வண்ணம் இன்றும் திகழ்கின்றன. இத்தூண்கள் ஐம்பதிலிருந்து அறுபது அடி உயரமும் 50 டன் எடையும் உள்ளவை. இது போன்ற பெரிய தூண்கள் அனைத்தும் ஒரே பாறையிலிருந்து செதுக்கப்பட்டவை என அறிகின்றபொழுது நமக்கு மிக விந்தை யாகவே தோன்றுகின்றது. திட்டமிட்டு உருவத்திற்கு ஒரு வரைவிடம் வரைந்து அதில் அழகிய வேலைப்பாடுகளை அமைத்துள்ள பாணி அக்காலச் சிற்பங்களின் நுண்ணிய அறிவுத் திறனைக் காட்டுகின்றது. ஏழு பாறைகளை வெட்டி அமைத்த குகைகள் மௌரிய காலத்தைச் சேர்ந்தவையாகும். கயா அருகில் உள்ள பார்பாரா குன்றில் நான்கும், நாகார்ஜுன குன்றில் மூன்றும் உள்ளன. மௌரியக்கலையில் மிகச் சிறப்பாகக் கருதப்படுவது மெருகு ஏற்றும் கலையாகும். இவர்கள் மிக அற்புதமாகக் கல்லாலான ஸ்தூபிகளுக்கும், குகைக் கோயில்களுக்கும், கட்டடங் களுக்கும் மெருகு ஏற்றிப் பளபளப்பாக இன்றும் கண்ணாடிபோல் மின்னும் வகையில் செய்துள்ளனர். பொறியியல் கலையில் இவர்கள் மிகப் போற்றக்கூடிய நிலையில் இருக்கின்றனர். ஏனெனில் பெரிய பாறைப்பகுதியை வெட்டி அதைக் கொணர்ந்து அதைச் செதுக்கி ஒற்றைக் கல்லாலான தூண்களாகவோ, ஸ்தூபிகளாகவோ அமைத்த இவர்களுடைய பொறியியல் ஆற்றலைக் கண்டு உலகமே வியக்கின்றது.

அணிமணி செய்யும் கலை மௌரியர் காலத்தில் நல்ல வளர்ச்சி அடைந்திருந்தது. தட்சசீலத்தில் உள்ள அழிபாடுகளில் அசோகன் காலத்து அணிகலன்களின் அற்புதமான எடுத்துக் காட்டு மாதிரிகள் கிடைத்துள்ளன. இவை கலையழகின் உயர்ந்த நிலையைக் காட்டுகின்றன.

மௌரியர் காலத்தில் பல்வேறு துறைகளில் அவர்கள் அடைந்துள்ள வளர்ச்சி நமக்கு அன்று நிலவிய உயர்ந்த பண்பாட்டையும் நாகரிகத்தையும் காட்டுகின்றது.

## 7. 2. குப்தர் காலப் பண்பாடு

### தொடக்கம்

குப்தப் பேரரசு, இந்தியப் பண்பாட்டிற்கு வழங்கியுள்ள கொடை அளவிடற்கரியது. இந்தியப் பண்பாட்டு வரலாற்றில் இக்காலம் பொற்காலம் என அழைக்கப்படுகின்றது. இவர்களின் காலம் ஏறத்தாழ கி. பி. 600 வரையுள்ள காலமெனக் கொள்ளலாம்.

### நிருவாகம்

திறமை மிக்க நிருவாக அமைப்பு குப்தர்களின் காலத்தில் நிறுவப் பெற்றிருந்தது; அவர்கள் தமக்கு முன்பு ஆண்டவர்கள் விட்டுச் சென்ற அடிச்சுவட்டில், தங்கள் ஆட்சி முறையைச் சீர்திருத்தி அமைத்தனர். மக்கள் நலனில் நிருவாகம் மிகுந்த கவனம் செலுத்தியது. அக்கால மக்கள் வாழ், வாழவிடு என்ற கொள்கையைப் பின்பற்றினர்.

நிருவாகப் பிரிவுகள்: நான்கு பிரிவின்கீழ் நிருவாக இயந்திரம் இயங்கியது. அவையாவன.

(1) மத்திய நிருவாகம்.

(2) மாநில நிருவாகம்.

(3) மாவட்ட நிருவாகம்.

(4) கிராம நிருவாகம்.

### மத்திய நிருவாகம்

அரசன் : முடியாட்சி அமைப்பின்கீழ் நிருவாகம் அமையப் பெற்றிருந்தது. அரசனே நிருவாகத் தலைவன், அவனே

அனைத்துப் பிரச்சினைகட்கும் தீர்வு காணும் பொறுப்பைப் பெற்றிருந்தான். அவர்கள் மகாராஜதிராஜன், பரமேசுவரன், சக்கரவர்த்தி என்ற பட்டங்களைப் பெற்றிருந்தனர். 'அரசன் தெய்விக இயல்பு படைத்தவன்' என்ற கொள்கை அன்று நிலவியது. குப்த அரசன் அரசியல், நிருவாக, இராணுவ, நீதித் தொடர்பானவற்றில் அளவிலா அதிகாரம் பெற்றிருந்தான். உயர் அலுவலர்களை நாடு முழுமைக்கும் நியமிக்கும் பொறுப்பு அவனிடமே இருந்தது. அவன்மேல் கட்டுப்பாடுகள் சுமத்தப்படவில்லை. ஆனால் அவன் தன்னிச்சையாகச் செயல்படவில்லை.

அமைச்சர் குழு : நிருவாகம் நன்முறையில் செயல்பட அரசன் மந்திரி பரிஷத்து என்ற அமைச்சர் குழுவின் ஆலோசனையை அவ்வப்போது நாடினான். அமைச்சர்கள் அரசனால் நியமிக்கப்பட்டனர்.

மத்திய நிருவாகத் துறைகள்

இத்துறையின்கீழ் செயல்பட்ட துறைகளாவன:

1. மகாசேனாபதி: இராணுவ நிருவாகம் இவன் பொறுப்பில் இருந்தது.

2. மகா தண்டநாயகன் : மகா சேனாபதியின்கீழ் இவன் செயல்பட்டதுடன், நீதித்துறைப் பணிகளையும் கவனித்து வந்தான்.

3. இரணா—படகாரிகன் : இராணுவத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சேகரிப்பது இவனது பணி; போர்க்கருவிகளுக்கு ஏற்பாடு செய்வதும் இத்துறையின் மற்றொரு பணி.

4. மகாபலாதிகாரன் : இராணுவம், இராணுவம் தங்குமிடம், போர்த்தந்திர முறைகள் இவனால் திறனுடன் செயல்படுத்தப்பட்டன.

5. தண்டாபிஷேகன் : காவல் துறையின் உயர் அலுவலன்.

6. மகாசந்துவி கிரிகன்: அனைத்து நாட்டுப் பணிகளையும் கண்காணிப்பது அவனது பணி. அண்டை நாட்டுடன் அமைதியுடன் வாழ்தல், போர் புரிதல் இத்துறையின் நிருவாகத்தின்கீழ் வருபவை.

7. பண்டாரகாதிகாரன் : கருவூல அலுவலர்.

8. வினியாசித ஸ்தாபிகன்: சமயத் துறையின் தலைவன். புரோகிதன் இடத்தில் இப்பெயரும் பயன்படுத்தப்பட்டது.

9. மகாபக்சபாலிதன் : அரசியல் நிருவாகக் கோப்புகளையும் குறிப்புகளையும் வைத்திருப்பவன். செலவினங்களையும் கவனித்து வந்தான் இவன்.

10. சர்வதியாக்சசன் : மத்திய நிருவாகத்தின் தலைமைச் செயல் அலுவலன்.

**மாநில நிருவாகம்**

குப்த அரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. மாநிலத்தை புக்தி அல்லது தேசம் என அழைத்தனர். இதன் தலைவன் உபாக மகராஜன் என அழைக்கப்பட்டான். அரசனே இவர்களை நியமித்தான். பெரும்பாலும் இளவரசர்களே இப்பொறுப்பில் நியமிக்கப்பட்டனர்.

உள் நாட்டுக் குழப்பங்களினின்றும், அந்நியப் படையெடுப்பினின்றும் மாநிலங்கள் பாதுகாக்கப்பட்டன. மாநிலத் தலைவன். சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலைநாட்ட வேண்டும் பொதுப்பணித் துறையையும் அவன் கவனிக்கவேண்டும். மாநில ஆட்சியிலும் பல்வேறு துறைகட்கும் பல்வேறு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

**மாவட்ட நிருவாகம்**

புக்தி எனப்படும் மாநிலம் மேலும் பல மாவட்டங்களாகப் (விசுகயங்கள்) பிரிக்கப்பட்டது. இதன் தலைவன் விசுகயபதி என அழைக்கப்பட்டான். இவனையும் அரசனே நியமித்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இவனுக்குத் தக்க அறிவுரை கூற ஒரு குழு இருந்தது. இந்த அமைப்பின்கீழும் பல்வேறு துறைகட்குப் பல்வேறு அலுவலர்கள் இருந்தனர்.

**நகர நிருவாகம்**

விசுகயம் எனப்படும் மாவட்டம் பல நகரங்களாகப் பிரிக்கப்பட்டது. நகர நிருவாகத்தைக் கவனிப்போனைப் புரபாலன் அல்லது நகர இரட்சகன் என அழைத்தனர்.

**கிராம நிருவாகம்**

நிருவாகத்தின் மிகச் சிறு அலகு கிராமம். கிராமத் தலைவன் 'கிராமிகன்' என அழைக்கப்பட்டான். அவன் கிராமத்தின் அமைதி, ஒழுங்கு, பாதுகாப்பு இவைகட்குப் பொறுப்பாயிருந்தான். கிராமப் பஞ்சாயத்தின் பணிகளாவன:

(1) வரி வசூலித்தல், (2) வயது வராதோரின் நலனைப் பாதுகாத்தல், (3) அமைதி, ஒழுங்கு இவற்றை நிலைநிறுத்தல், (4) குழப்பங்களுக்குத் தீர்வு காணல்.

**நீதித்துறை**

இந்த நீதி நிருவாகத்துறை மிக நன்முறையில் குப்தர் காலத்தில் செயல்பட்டது. இதன் தலைவன் அரசன். மத்திய, மாநில நீதிமன்றங்கள் இருந்தன. கிராமத்திற்கு கிராமப் பஞ்சாயத்து முறை இருந்தது.

அக்காலத்தில் குற்றங்கள் மிகக் குறைவு. குற்றவாளிகள், குற்றத்தின் தன்மைக்கேற்ப தண்டிக்கப்பட்டனர்.

**இராணுவ அமைப்பு**

குப்த அரசர்கள் வலிமை, வீரம், தந்திரம், ஆற்றல் மிக்கவர்களாக இருந்தனர். பெரிய போர்ப்படை இருந்தது. யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை, ஒட்டகப்படை போன்ற நான்கு படைகள் இருந்தன.

**வருமானம்**

அரசு 18 வகையான வரிகளை விதித்ததாகக் கூறப்படுகிறது. விளைச்சலில் 16 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதம் வரை வரி வசூலிக்கப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்மீதும் வரி விதிக்கப்பட்டது.

**உள்நாட்டுப் பாதுகாப்பு**

அவர்கள் தங்கள் பேரரசைப் பரப்ப விரும்பியபோதிலும், அமைதி காக்கவே விரும்பினர். ஒற்றர்கள் நியமிக்கப்பட்டு, உளவு பார்க்கும் வேலையும் நடந்துவந்தது.

**சமுதாய நலன்**

மக்கள் நல்வாழ்விற்காகக் குப்த அரசர்கள், பல பயனுள்ள பணிகளைச் செய்தனர். சாலை அமைப்பு, நீர்ப்பாசன வசதி

போன்றவைகளும் கவனிக்கப்பட்டன. மருத்துவமனைகள் கட்டப் பட்டன. பல அறநிறுவனங்கள் நிறுவப்பட்டன.

**சமுதாய நிலை**

1. குடும்பம் : சமூகம் பல குடும்பங்கங்களாகப் பிரிக்கப் பட்டது. கூட்டுக் குடும்பமுறை குப்தர்கள் காலத்தில் இருந்து வந்தது.

2. ஆடை : இந்திய நாட்டுப் பாணி ஆடையை அணிந் தனர். அரசர்கள் ஆடம்பரமான ஆடைகளைப் பயன்படுத் தினர்.

3. அணிகலன்கள் : இருபாலரும் அணிகலன்களைப் பயன் படுத்தினர்.

4. உணவு : சைவ, அசைவ உணவுப் பொருள்களை உண்டனர். பெரும் பகுதியான மக்கள் சைவ உணவையே உண்டதாகத் தெரிகின்றது.

5. பொழுதுபோக்கு: மக்கள் மகிழ்வாகப் பொழுதுபோக்கினர். வேட்டையாடல் முக்கியப் பொழுதுபோக்கு. ஆடு, எருமை, யானை, மான் இவைகளுடன் சண்டை போடுவதும் முக்கியப் பொழுதுபோக்கு. விழாக் காலங்களில் ஆடிப்பாடிக் களித்தனர்.

6. மகளிர் நிலை : பெண்கள் சமூகத்தில் உயர்ந்த நிலை யைப் பெற்றிருந்தனர். ஆண்களைப்போல அவர்களுக்கும் கல்வி பயில உரிமை இருந்தது. மகளிர், நிருவாகத்திலும் பங்கு பெற்றனர். கற்றறிந்த மகளிர், சமூகத்தால் போற்றப்பட்டனர். ஆனால் சுயம்வரத்தில், வரனைப் பொறுக்கியெடுக்கும் வாய்ப்பு மகளிருக்கு இல்லை.

7. வருண தருமம்: பண்டைய சாதிப்பாகுபாடு முறை நிலவி வந்தது. சண்டாளர், தீண்டப்படாதோர் இவர்களின் நிலைமை மிகச் சீர்கேடு அடைந்திருந்தது.

8. திருமண முறை : கலப்பு மணமும் அக்காலத்தில் நிலவியது. விதவை மணமும் இருந்ததாக அறிகிறோம்.

9. அடிமைகள் : அடிமைகளை வைத்துக்கொள்ளும் பழக்கம் அன்றிருந்தது. போர்க் கைதிகள், கடனாளிகள், சூதாட் டத்தில் தோற்றவர்கள் அடிமைப்படுத்தப்பட்டனர்.

**10. ஒழுக்கம் :** அன்று மக்கள் ஒழுக்கத்துடன் வாழ்ந்தனர். அவர்களுடைய வாழ்வு அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்கள்வழி நன்முறைப்படுத்தப் பட்டது.

**பொருளாதார நிலை**

குப்தர்களின் பரந்த மனப்பான்மையால் நாடு நன்னிலை நோக்கி நடைபோட்டது. நல்ல பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது.

**1. வேளாண்மை :** இதுவே முக்கியத் தொழில். நிலம் மக்களிடம் இருந்தது. அவர்கள் கோதுமை, பார்லி, மக்காச் சோளம், பருப்பு வகைகள், பல்வேறு நறுமணப் பொருள்கள் போன்றவற்றைப் பயிரிட்டனர்.

**2. வாணியம்:** உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபம் குப்தர்கள் காலத்தில் சிறப்பாக நடைபெற்றது. பொருள்கள் சாலை வழியாகவும், ஆற்று வழியாகவும் கொண்டுசெல்லப்பட்டன. அகன்ற சாலைகள் அமைக்கப்பட்டன. உரோமானிய தங்கம் முதன்முறையாக இந்தியா வந்தது. முத்து, பவளம், செப்பு, தகரம், ஈயம், திராட்சை, குதிரைகள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன.

**3. தொழில் :** பருத்தி தொடர்பான தொழில் பெருகிப் பருத்தி, பட்டு ஆடைகள் நெய்யப்பட்டன. இவை தவிர மர, உலோக வேலைகளும் இருந்தன; அழகிய கல்பதித்த அணிகலன்கள் செய்யப்பட்டன.

**4. வணிக மன்றங்கள் :** வணிகர்களும் கைவினைக் கலைஞர்களும் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள மன்றங்கள் நிறுவி இருந்தனர்.

**சமய நிலை**

இக்காலத்தில் வேதசமயம் புத்துயிர் பெற்றது. இதைக் குப்தர்கள் ஆதரித்தனர்.

**1. சமய சகிப்புத் தன்மையும் சுதந்தரமும் :** குப்தர்கள் பெரும்பாலும் இந்துக்களாக இருந்து, அச்சமயத்தை ஆதரித்த போதிலும் சமண, பௌத்த சமயங்களின் வளர்ச்சியைத் தடைப் படுத்தவில்லை. இவ்வரசர்கள் வைணவர்களாக இருந்தபோதிலும் சைவத்தினை வெறுக்கவில்லை.

2. பிற தெய்வங்கள்: விஷ்ணு, சிவன் இவர்களைத் தவிரப் பல தெய்வங்களையும் வழிபட்டனர். தாந்திரிக (Tantric) மரபு அல்லது சக்தி வழிபாடும் வளரத் தொடங்கியது. சூரிய, சந்திர வழிபாட்டு முறைகளும் நிலவிவந்தன. நாக (பாம்பு) வழிபாடும் இருந்தது. யக்ஞங்களையும் செய்து வந்தனர்.

3. அவதாரக் கோட்பாடு : விஷ்ணுவின் பத்து அவதாரக் கோட்பாட்டினை நம்பினர்.

4. பிற சமயக் கருத்துகள் : எண்ணற்ற கோயில்கள் இவர்கள் காலத்தில் கட்டப்பட்டன. உருவ வழிபாட்டை மக்கள் நம்பினர். ஆலயங்கள் பண்பாட்டு மையங்களாகத் திகழ்ந்தன. அவை உயர்ந்த கட்டட, சிற்பக் கலைகளின் பெட்டகங்களாக விளங்கின. புனித இடங்களுக்கு யாத்திரை செல்லும் பழக்கமும் மக்களிடம் அன்றிருந்தது. சமண, பௌத்த சமயத்தில் பல தலைசிறந்த அறிஞர்கள் இருந்தனர்.

**கல்வி**

குப்தர் காலக் கல்வி முறை திறமை வாய்ந்ததாகவும் மனநிறைவு அளிப்பதாகவும் இருந்தது. கல்வி குருகுல முறையில், தனியாக ஆசிரியர்களை வைத்துப் புகட்டப்பட்டது. வேதங்களுடன் புராணங்கள், ஸ்மிருதிகள், அளவை இயல் (logic), தத்துவம், நியாயம் (சட்டம்), இலக்கணம் போன்ற இன்னபிற போதிக்கப்பட்டன.

**இலக்கியம்**

சமஸ்கிருத இலக்கியமும், மொழியும் பெரிதும் வளர்ச்சியடைந்தன. காரணம்? இவைகளுக்கு அரச ஆதரவு பெரிதும் இருந்தது.

அரிசேனர், வீரசேனர், வாட்டிசபட்டி என்ற புகழ்மிக்க கவிஞர்கள் இருந்தனர். அரசியலையும் தத்துவத்தையும் கூறும் வியாகரணம் என்னும் நூலை எழுதியவர் வீரசேனர்.

அடுத்து புகழ்வாய்ந்த காளிதாசன், மாத்திர குப்தன், பாரவி, பட்டி என்ற கவிஞர்களைக் காண்கின்றோம். குப்தரின் ஆட்சிக் கால நவமணிகளில் ஒருவன் காளிதாசன் ஆவான். அவன் இயற்றிய சிறந்த நூல்கள் இரகுவம்சம், இருது சம்ஹாரம், மேக தூதம் என்பவை. இவை கவிதை நூல்கள், அவனுடைய புகழ்

மிக்க நாடக நூல்கள் மாளவிகாக்கினி மித்திரம், விக்கிரமோர் வசியம், அபிநய சாவந்தலம் எனப்படுவை.

கீதோபதேசம், பஞ்சதந்திரச் சுருக்கம் போன்ற உரைநடை நூல்களும் வெளிவந்தன.

சந்திர வியாகரணம் என்ற இலக்கண நூல் சந்திர கோமினி என்பவரால் எழுதப்பட்டது.

பல ஸ்மிருதிகள் இக்காலத்தில் வெளிவந்தன. யக்ஞவல்க்யர், நாரதர், காத்யாயனர் என்பவர்களால் ஸ்மிருதிகள் எழுதப் பட்டன. நீதிசாஸ்திரம் என்ற நூலைக் கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திர' அடிப்படையில் சாமண்டகன் எழுதினான். பல பௌத்த, சமண அறிஞர்கள் தத்தம் சமய தத்துவ நூல்களை எழுதினர்

**பிற துறைகள்**

இந்திய அறிவியல் வளர்ச்சியுற்றது. ஆரியபட்டர் என்பவர், தமது 23ஆம் வயதில் ஆரியபட்டம் என்ற நூலை எழுதினார். இதுவான, சோதிடத் தொடர்பான நூல். சோதிடமும் வான ஆராய்ச்சியும் வளர்ச்சியடைந்திருந்தன. வராகமிகிரர் என்ற சோதிடரும் கணித மேதையும் இக்காலத்தவர். கணிதத்துறையில் நல்ல வளர்ச்சியைக் காண்கின்றோம்.

**ஆயுர்வேதம்**

ஆயுர்வேத மருத்துவ முறையும் மிகச் சிறப்பான நிலையை அடைந்திருந்தது. சரகர், சுசுருத்தர் என்பவர்கள் அக்காலச் சிறந்த மருத்துவர்கள். பல மருத்துவத் தொடர்பான அஷ்டாங்க—சங்கிரகம், சுசுருத்த சம்கிதம், சரக சம்கிதம் என்ற நூல்கள் வெளிவந்தன.

**குப்தர் காலக் கலை**

குப்தர்கள், கலைத்துறையில் ஆற்றியுள்ள தொண்டு அளவிடற்கரியது. குப்த அரசர்கள் அனைவரும் கலையுள்ளம் படைத்தவர்கள். அவர்கள் காலத்துக் கலைச்சின்னங்கள் தூய இந்தியக் கலையின் எடுத்துக்காட்டுகள்.

1. கட்டடக் கலை : குப்தர் காலத்தில் கோயில் கட்டட அமைப்பு ஒரு சிறப்பினைப் பெற்றிருந்தது. இதுவரையிலும் கட்டடங்கள் கட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட அழிந்து

போகும் பொருள்களான மரம், மூங்கில் என்பனவற்றைக்கைவிட்டு, காலவெள்ளத்தால் அழியாத பொருள்களான கருங்கல், செங்கல் ஆகியவற்றால் கட்டடங்கள் எழுப்பும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது.

கட்டடக்கலையில் இரு வேறுபட்ட வகைகளைக் காணலாம். (1) குகைக் கோயில், (2) சாதாரணக் கோயில். மொத்தம் 28 குகைக் கோயில்கள் அஜந்தாவில் உள்ளன. இவற்றுள் 23 குகைக் கோயில்கள் குப்தர் காலத்தில் தோன்றியவைகளாகும். அவுரங்காபாத் என்னும் இடத்திற்கு அருகில் கல்லில் குடைந்த மூன்று வகைப்பட்ட பன்னிரண்டு குகைகள் காணப்படுகின்றன. பௌத்த, இந்து சமண சமயங்களின் சார்புடைய குகைகள் எல்லோரா என்னுமிடத்தில் மூன்று வரிசைகளில் காணப்படு கின்றன.

கான்பூர் மாவட்டத்திலுள்ள செங்கல்லால் கட்டப்பட்ட பித்தர்கான் கோயில், ஜான்சி மாவட்டத்திலுள்ள தியோகார் கோயில், சாரநாத் பெரியகோயில், மத்திய பிரதேசத்தில் பூமரா என்ற இடத்திலுள்ள சிவன்கோயில், ஜபல்பூர் மாவட்டத்தில் திகாவா என்னுமிடத்திலுள்ள சிவன் கோயில், நாச்னா குத்தானா என்னுமிடத்திலுள்ள பார்வதிகோயில் குப்தர்களின் கட்டடக்கலையின் சிறப்பினை எடுத்தியம்புகின்றன.

சமயச் சார்பற்ற பல மாடிகளையுடைய கட்டடங்கள் அமராவதி, நாகார்ச்சுன கொண்டா ஆகிய இடங்களில் எழுப்பப் பட்டுள்ளன. சாராநாத்திலுள்ள சமுக ஸ்தூபி, உதயகிரி குகைக் கோயில்கள் சிறப்பானவை. பௌத்த மடங்களும் ஸ்தூபிகளும் பல கட்டப்பட்டன. செங்கல்லால் கட்டப்பட்ட விஹாரங்கள் அழகுடன் காட்சிதருகின்றன. பல அழகிய தூண்களையும் அவர்கள் எழுப்பி யுள்ளனர்.

2. **சிற்பக் கலை:** பிற கலைகளைவிடச் சிற்பக்கலை உயர்ந்த நிலையை எய்தியிருந்தது. புத்தரது எண்ணற்ற சிலைகள் சாரநாத்திலும் மதுராவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்துமதச் சார்பான சிவன், விஷ்ணு சிலைகளும் அழகுறச் செதுக்கப்பெற்றன. தியோகார், பித்தர்கான் கோயிற் சிலைகள் இதற்குத் தக்க எடுத்துக்காட்டு. இச்சிலைகள் தெய்விகம், கலையழகு, கவர்ச்சி, அழகிய தோற்றம் அனைத்தும் பெற்று விளங்குகின்றன. சிற்பங்கள் யாவும் இந்தியக்கலைப் பண்பு

களோடு உருவாக்கப்பட்டன. உலோகத்தால் செய்யப்பட்ட சிற்பங்கள் பாடலிபுத்திரத்தில் சிறப்புடன் மிளிர்கின்றன.

குப்தரின் சிற்பக்கலை, அன்னிய செல்வாக்கினின்று விடுபட்டுள்ளது. ஆன்மிகக் கருத்துகளை உணர்த்துகின்றது. நுண்ணிய உடற்கூறுகளைக்கூட அழகுபட இச்சிற்பக்கலை வெளிக்காட்டுகின்றது. சட்டில்கஞ்சு, சாரநாத் போன்ற இடங்களில் உள்ள புத்தரின் சிலைகள், தியோகாரிலுள்ள விஷ்ணு சிலை, உதயகிரியிலுள்ள வராக அவதாரச் சிலை, மதுராவிலுள்ள விஷ்ணு சிலை, காசியிலுள்ள கார்த்திகேயன் சிலை, கௌசாம்பியிலுள்ள சூரிய சிலை, மற்றும் பல்வேறு இடங்களில் காணப்படும் சிவன் சிலைகள், சிவலிங்கங்கள், சமண சிலைகள், பிற சிலைகள் குப்தர் காலச் சிற்பக்கலையின் சிறப்பைப் பறைசாற்றுகின்றன.

3. ஓவியக் கலை : அஜந்தா, எல்லோரா, பாக் (Bagh) போன்ற இடங்களிலுள்ள ஓவியங்கள் மிக அற்புதமான ஓவியங்கள். இக்கலையிலும் இவர்கள் ஓர் உச்சத்தை எட்டியிருந்தனர்.

4. நாணயமும் உலோகக் கலையும் : குப்தர் கால நாணயங்கள் உயர்ந்த முறையில் வெளியிடப்பட்டுள்ளன. குப்தர் காலத்துக் கலைஞர்கள் உலோகத்தை வார்த்துக் கலைச் சின்னங்களைச் செய்வதிலும் வல்லவர்களாயிருந்தனர். கண்கவரும் சித்திரங்களுடன் குப்தர்கள் வெளியிட்ட பலவகைப்பட்ட தங்க நாணயங்கள் வேறு அவர்களின் சீரிய கலையுணர்வை வெளிப்படுத்துகின்றன.

5. இசையும் நடனமும் : குப்தர்கள் இசை ரசிகர்கள். சமுத்திர குப்தனே நல்ல பாடகன். பொதுவாக வீணையும் மிருதங்கமும் பயன்படுத்தப்பட்டன. வசதி படைத்தோர் பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர். நடனத்திலுள்ள ஈடுபாட்டைக் காளிதாசனுடைய இரகு வம்சம், சாகுந்தலம் போன்ற நாடகங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

6. நடிப்புக் கலை : இதில் அக்காலத்தவர்கள் தேர்ச்சி பெற்றிருந்ததற்கு அன்று தோன்றிய காளிதாசரின் நாடகங்களே எடுத்துக்காட்டு ஆகின்றன.

நவரத்தினங்கள்

குப்தர் அவையை அலங்கரித்த நவரத்தினங்கள் பல கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினார்கள். நாடக எழுத்

தாளரும் புலவருமான காளிதாசர், பெரும்புலவரான அரிசேனர், இலக்கண நூலாசிரியரான வரருசி, சொல்லிலக்கணத்தில் தேர்ச்சி பெற்றவரான அமரசிம்மர், கணித வல்லுநரான ஆரிய பட்டர், வானநூல் வல்லுநர்களான பிரம்மகுப்தர், வராகமித்திரர், மருத்துவரான தன்வந்திரி, கட்டடக்கலை நிபுணரான சங்கு ஆகியோர் அணையா விளக்கென ஒளிதந்த நவரத்தினங்கள்.

### இந்தியப் பண்பாடு வெளிநாட்டில் பரவுதல்

குப்தர் காலத்தில் இந்தியா உரோமப் பேரரசு, அரேபியா, பாரசிகம், சீனா ஆகிய நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தது. தென்கிழக்கு ஆசிய நாடுகளான பருமா, மலேயா, சயாம், கம்போடியா, சுமத்திரா, சாவகம் (ஜாவா), போர்னியோ, பாலி, பார்மோசா ஆகிய நாடுகளுடன் இந்தியா வாணிபத்தொடர்பு வைத்திருந்தது. வாணிபத்திற்குச் சென்றவர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் குடியேறி அங்கு இந்தியப் பண்பாட்டைப் பரப்பினர். தமிழ் மொழி, இலக்கியங்கள், கலை, சமயம், தத்துவம் அங்குப் பரவின. உரோம், அரேபியா, பாரசிகம், சீனா ஆகிய நாடுகளில் இந்திய இலக்கியம், கலை, விஞ்ஞானம், மருத்துவம், கணிதம் முக்கிய இடம்பெற்றன.

மேலே கூறியவற்றால் ஐயப்பாட்டிற்கு இடமின்றிக் குப்தர்களின் காலத்தைப் பொற்காலமெனக் கூறலாம்.

## 7.3. பல்லவர் காலப் பண்பாடு

### முன்னுரை

பல்லவர் காலம் தமிழக வரலாற்றில் மிகச் சிறப்பு வாய்ந்த காலமாகும். தமிழகம் தமிழகமாக உருவான காலம் அது. கி. பி. 225-ல் சாதவாகன அல்லது ஆந்திர அரசு வீழ்ச்சியுற்றது. இதைத் தொடர்ந்து தமிழகத்தின் வடக்கில் பல்லவர்கள் எழுச்சியுற்றனர். கி. பி. 4ஆம் நூற்றாண்டு முதல் 8ஆம் நூற்றாண்டு வரையிலும் தொண்டை மண்டலத்தில் பல்லவர்கள் அரசியல் இறைமை பெற்றிருந்தனர். இவர்கள் தெற்கில் தமிழ் மன்னர்களையும் வடக்கில் சாளுக்கியர்களையும் பணிபவைத்தனர். பல்லவர்களைப்பற்றிய வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. இவர்கள் அயல்நாட்டைச் சார்ந்தவர்கள் என்று சிலரும் தமிழ் நாட்டைச் சார்ந்தவர்கள் என்று சிலரும் கூறுகின்றனர்.

பாரசிகத்தைச் சேர்ந்த பகலவர்களே பல்லவர்கள் என்று வெங்கையா கூறுகிறார். வட இந்தியாவைச் சேர்ந்த பிராமணர்கள் வழிவந்தவர்களே பல்லவர்கள் என கி. பி. ஜெயஸ்வால் கூறுகின்றார். நாகர்களின் வழிவந்தவர்களே பல்லவர்கள்; இவர்களுக்கும் இலங்கை நாக மரபினருக்கும் தொடர்பு உண்டு என இலங்கையைச் சார்ந்த சி. இராசநாயகம் கருதுகின்றார். சத்தியநாத ஐயர், இவர்கள் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த குரும்பர் வழிவந்தவர்கள் எனக் கருதுகின்றார். இரானின்சன் என்பவர், சோழமண்டலத்தைச் சார்ந்தவர்களே பல்லவர்கள் என்றும், அங்குக் குரும்பர், கள்ளர், மறவர் ஆகியோரின் கலப்பில் தோன்றிய ஓர் இனமே பல்லவர்கள் என்றும் கூறுகிறார். எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் சாதவாகன சிற்றரசர்கள் வழிவந்தவர்களே பல்லவர்கள் என்று கூறுகின்றார். இவர்கள் சாதவாகன அரசின்கீழ்ச் சிற்றரசர்களாகவும், அரசு அலுவலர்களாகவும் பணியாற்றிய ஓர் இனத்தவர் எனக் கருது கிறார். மசூலிப்பட்டணத்தை ஆட்சி செய்ததாகத் தாலமி குறிப்பிடும் சாலங்காயனர்களே பல்லவர்கள் என உறுதிப்படுத்து கிறார் டி. வி. மகாலிங்கம்.

### பல்லவர் வரலாற்றுச் சான்றுகள்

பல்லவர்களைப்பற்றி அறிய லோக விபாகம், அவந்தி சுந்தரி கதை; மகேந்திரவர்மன் எழுதிய மத்தவிலாசப் பிரகசனம், அப்பர் சுந்தரர் பாடிய தேவாரம், நந்திக்கலம்பகம், பாரதவெண்பா, சேக்கிழாரின் பெரிய புராணம் ஆகிய நூல்கள் இலக்கியச் சான்றுகள்.

சீனப் பயணியான யுவான்-சுவாங் எழுதியுள்ளவற்றில் பல்லவர் ஆட்சிபற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. பல்லவ மன்னர்கள் எழுப்பிய கற்கோயில்களும் குடைந்த குகைக் கோயில்களும் இவர்களது வரலாற்றை எடுத்தியம்பும் அழியாச் சின்னங்கள். மேலும் இவர்கள் விட்டுச்சென்ற செப்புப்பட்டயங்கள் இவர்களது வரலாற்றை அறியப் பெரிதும் துணை புரிகின்றன.

### பல்லவர்கள் காலம்

பல்லவர்களை முற்காலப் பல்லவர்கள் (கி. பி. 250-350), இடைக்காலப் பல்லவர்கள் (கி. பி. 350-600), பிற்காலப் பல்லவர்கள் (கி. பி. 600-900) என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

எவ்வாறிருப்பினும் சிம்ம விஷ்ணுவின் காலம்வரை உள்ள பல்லவர் வரலாறு தெளிவற்றுக் காணப்படுகிறது.

பப்பதேவன், சிம்மவர்மன் சிவஸ்கந்தவர்மன், விசயஸ்கந்த வர்மன், புத்தவர்மன் முதலியோர் முற்காலப் பல்லவர்கள் ஆவர். குமாரவிஷ்ணு, ஸ்கந்தவர்மன் வீரவர்மன், இரண்டாம் ஸ்கந்த வர்மன், சிம்மவர்மன், சிம்மவிஷ்ணு முதலியோர் இடைக்காலத் தைச் சேர்ந்த பல்லவர்கள். பிற்காலப் பல்லவர்கள் முறையே இரண்டாம் நந்திவர்மன், பல்லவ மல்லன், தந்திவர்மன், மூன்றாம் நந்திவர்மன் ஆகியோர் ஆவர்.

## அரசியலமைப்பு

நிருவாக முறை : பல்லவப் பேரரசின் தலைவராக அரசர் விளங்கினார். அரசர் பதவி பரம்பரையாகச் சென்றது. அரசர் இறைவனுக்குச் சமமாகக் கருதப்பட்டார். அவர் நெறிமுறைகளுக்கும் மரபுகளுக்கும் கட்டுப்பட்டு வாழ்தல் வேண்டும். நிருவாகம், இராணுவம் இரண்டிற்கும் அவரே தலைவர். நீதியின் உறைவிடமும் அவரே. அன்னியப் படையெடுப்பிலிருந்து நாட்டைக்காத்தல், பஞ்சம், கொள்ளை ஏற்பட்ட காலங்களில் மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், சட்டத்தை நிலைநாட்டல் அவருடைய பணிகள் ஆகும். அவர் ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். பல பட்டங்களைச் சூட்டிக்கொண்டார்.

அமைச்சர்கள் : இவர்கள் அரசருக்கு அறிவுரை வழங்கி, அவரது ஆணையைச் செயல்படுத்தி நாட்டு நலனைப் பேணிக் காத்தனர். அயல்நாட்டுக் கொள்கையை வகுப்பதும் அவர்களது பணி.

உயர் அலுவலர்கள் : இரகசிய கர்த்தன் என்ற உயர் அலுவலன் பல்லவ அரசருக்கு அந்தரங்கச் செயலாளனாக விளங்கினான். வருவாய்த்துறை, நிலவரித்துறை, நில அளவைத் துறை, கால்நடைத்துறை, வனத்துறை, இராணுவத்துறை எனப் பல்வேறு துறைகள் நிறுவப்பெற்று ஒவ்வொரு துறைக்கும், ஒரு துறைத் தலைவர், செயலாளர் இருந்து செயலாற்றி வந்தனர்.

நிருவாகப் பிரிவுகள்: பேரரசு பல மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டு, மண்டலங்கள் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. கோட்டங்கள் நாடுகளாகவும். நாடுகள் ஊர்களாகவும் பிரிக்கப் பட்டன. மண்டலங்கள் ஆளுநர்கள் தலைமையில் இயங்கிவந்தன.

**உள்ளாட்சி முறை :** பயன்மிக்க ஊராட்சிமுறை நிலவி வந்தது. ஊராட்சி மன்றங்களும் அவற்றின் உள்கழகங்களும் தத்தம் ஊராட்சிப் பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செயல் புரிந்தன.

சிற்றூர்களும் இவ்வாறே ஆளப்பட்டன. இவர்கள் காலத்தில் நாடுகளிலும் ஊர்களிலும் சபை அல்லது அவை என்ற அமைப்புகள் இருந்தன. மக்கள் பிரதிநிதிகள் கொண்ட உறுப்பினர் இருந் தனர். செல்வம், கல்விஅறிவு, ஒழுக்கம் நிரம்பப்பெற்றவர்கள் உறுப்பினர்களாக இருந்தனர்.

**வரி :** இக்காலத்தில் 18 வகை வரிகளை வசூலித்ததைப் பட்டயங்கள் செப்புகின்றன. நீர்ப்பாசனத்தின்மூலம் வேளாண்மை செய்யப்பட்ட நிலத்திலிருந்து கூடுதல் வரி வசூலிக்கப் பட்டது. பல்வேறு தொழில்களைச் செய்தோரிடமிருந்தும் அரசு தொழில் வரி வசூலித்தது.

**நீதித்துறை:** பேரரசின் தலைவன் நீதித்துறைத் தலைவ னாகவும் விளங்கினான். கோட்டங்களிலும் கிராமங்களிலும் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருந்தன. பெருநகரங்களில் நிலவிய நீதிமன்றங்கள் அதிகரணங்கள் என்றும், சிற்றூர் நீதிமன்றங்கள் கரணங்கள் என்றும் வழங்கப்பெற்றன.

**படை :** காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை, கப்பற்படை ஆகிய நால்வகைப் படைகளும் பல்லவர் காலத்தில் இருந்தன. நான்கு படைகட்கும் அரசனே தலைவன். வீரமும் போர் ஆற்றலும் மிக்க சேனைத் தளபதிகளும் இருந்தனர். குதிரைகள் மகாபலிபுரம் எனப்படும் மாமல்லபுரம் வழியாக இறக்குமதி செய்யப்பட்டன. மகாபலிபுரம், காவிரிப்பூம்பட்டினம், நாகை ஆகிய துறைமுகங்கள் கப்பற்படையை இயக்குவதற்கு உதவின.

**சமுதாய நிலை**

வட இந்தியச் சமுதாயத்தைப் போன்று வருணாசிரம தருமத்தின் அடிப்படையில் சமுதாயத்தை அமைக்க முயன்றனர்.

**பிராமணர்கள் :** இவர்கள் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தனர்; மண்ணுலகத் தெய்வங்கள் எனக்

கருதப்பட்டனர். அறப்பணி செய்வதிலும் அரசப் பதவி வகிப்ப திலும் தனி உரிமை அவர்களுக்கு இருந்தது. கல்விச் சலுகைகள் வழங்கப்பட்டன. வேதங்களைக் கற்பதிலும் சமய வாழ்விலும் ஈடு பட்டிருந்தனர்.

க்ஷத்திரியர்கள்: அந்தணர்களுக்கு அடுத்த இடத்தை இவர்கள் பெற்றிருந்தனர். நாட்டைப் பாதுகாத்ததால் இவர் களுக்கு மக்களிடையே நன்மதிப்பு இருந்தது.

பிற சாதியினர்: தாழ்த்தப்பட்டவர்களான பறையர், புலையர், பாணர், ஈழவர்—தீண்டப்படாதவராகக் கருதப்பட்டுக் கோயில்களுக்குள் அனுமதிக்கப்படவில்லை. பல்வேறு தொழில் களைச் செய்து உழைக்கும் குடிமக்களுக்கும் சமுதாயத்தில் மதிப்பு இல்லை. செய்யும் தொழிலைப் பொறுத்தும் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் நிலவிவந்தன. கள் இறக்கிய ஈழவர்கள் பிராமணர்கள் குடியிருப்புக்குச் செல்லுதல் கூடாது.

வரியில் பாகுபாடு: அரசு மக்களை உயர்ந்தவர், தாழ்ந்தவர் என இரண்டாகப் பிரித்து உயர்சாதி மக்களுக்குக் குறைந்த வரி யையும், கீழ்ச்சாதி மக்களுக்கு அதிக வரியையும் விதித்தது.

பொருளாதார நிலை

வேளாண்மை: நிலங்கள் அளக்கப்பட்டுப் பிரிக்கப்பட்டன. நிலச்சுவான்தார் பெற்றிருந்த நிலம் பயல் என்றும், அரசரது நிலம் அடை என்றும் வழங்கப்பட்டன.

நீர்ப்பாசனத்திற்கென ஏரிகள், கால்வாய்கள், கிணறுகள் உண்டாக்கப்பட்டன. பாலாறு, காவிரி முதலிய ஆறுகளிலிருந்து நீரைக் கால்வாய்மூலம் நிலங்கட்கு எடுத்துச் சென்றனர். ஊர்ச் சபையின் ஏரிவாரியம், நீர்நிலைகளையும் நீரோடைகளையும் கண்காணித்து வந்தது.

நெல், பருத்தி, வாழை, எண்ணெய் விதைகள், மருக் கொழுந்து, பருத்தி, பிற தானியங்கள் பயிரிடப்பட்டன. ஒவ்வோர் ஊரிலும் பொதுக்களமும், களஞ்சியமும் இருந்தன. பல்லவநாடு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்தது.

வாணிபம்: பொருள்களை விற்க, வாங்கக் கிராமங்களில் சந்தைகள் இருந்தன. செம்பு, வெள்ளி நாணயங்கள் புழக்கத்தில்

இருந்தன. ஊர் வணிகர்கள் கிராமத்தில் உற்பத்தியான பொருள்களை வாங்கி விற்றுப் பொருள் ஈட்டினர்.

அயல்நாட்டு வாணிபம் : மாமல்லபுரம், காவிரிப்பூம்பட்டினம், நாகைத் துறைமுகங்கள் வழியாக அயல்நாட்டு வாணிபம் நடந்தேறியது. சயாம், சீனம் முதலிய நாடுகளுடன் வாணிபத் தொடர்பிருந்தது. இலாபத்தில் ஒரு பங்கை வணிகர்கள் அரசிற்குச் செலுத்தவேண்டும். இதனால் சீன மன்னர்களும் பல்லவ மன்னர்களும் ஒருவருக்கொருவர் தூதுவர்களை அனுப்பி நல்லுறவை நிலைநாட்டிக் கொண்டனர்.

தொழில்: மண்பாண்டம் செய்தல், ஆபரணம் செய்தல், தந்த வேலை, மரவேலை, உலோக வேலை, கால்நடை வளர்த்தல், கப்பல் கட்டுதல், மீன் பிடித்தல், எண்ணெய் எடுத்தல், ஆடை நெய்தல் போன்ற பல்வேறு தொழில்கள் சிறப்புற்றிருந்தன. பிராமணர்கள் தவிரப் பிற சாதியினர் இத்தொழில்களில் ஈடுபட்டிருந்தனர்.

**கலைப்பணி**

**கட்டடக் கலை:** பல்லவர்களின் கலைத்தொண்டால் பல்லவ நாடு சிறந்த கலைக்கூடமாக விளங்கியது. இவர்கள் (1) குடைவரைக் கோயில்கள் (2) ஒற்றைக் கற்கோயில்கள் (3) கட்டுமானக் கோயில்கள் என்னும் மூன்றுவகைக் கோயில்கள் அமைத்தனர்.

மகேந்திரவர்மன் சமணத்திலிருந்து சைவசமயத்திற்கு மாறிய பின்னர், தீராப் பற்றுக்கொண்டு பல அருங்கலைப் பணிகளில் ஈடுபட்டான். மலைகளின் நடுப்பகுதியைக் குடைந்து குடைவரை (குகை)க் கோயில்களை அமைத்தான். மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கேசுவரம், நாமக்கல் போன்ற இடங்களில் உள்ள குடைவரைக் கோயில்கள் பெருமாளுக்காக எழுப்பப்பட்டன. சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் குடைந்தவை சிவன் கோயில்கள். மண்டபப்பட்டில் மும்மூர்த்தி கோயிலும், சித்தன்னவாசலில் சமணர் கோயிலும் மகேந்திரவர்மன் காலத்தில் குடையப்பட்டன. இவன் மைந்தன் நரசிம்மவர்மனும் குடுமியான்மலையில், திருமய்யத்தில் குகைக் கோயில்கள் அமைத்தான். மகாபலிபுரம் அல்லது மாமல்லபுரத்தில் காணப்படும் மகிடாசுர மண்டபம், வராக மண்டபம், திரிமூர்த்தி மண்டபம் மகேந்திரவர்மன் உருவாக்கியவை.

ஒற்றைக்கல்லாலான கோயில்களை அமைத்தவன் முதலாம் நரசிம்மவர்மன். மகாபலிபுரத்திலுள்ள பல்வகைத் தேர்கள் இதற்குச் சான்றாகும்.

இராசசிம்மன் எழுப்பிய காஞ்சி கைலாசநாதர் கோயில், மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில், பனமலை சிவன் கோயில் கட்டுமானக் கோயில் வகையைச் சார்ந்தவை. காஞ்சியிலுள்ள வைகுந்தப்பெருமாள் கோயில், முத்தீச்சுவரர் கோயில், மதங்கேசுவரர் கோயில் நந்திவர்மன் காலத்தில் எழுப்பப்பெற்ற மிகச் சிறந்த கட்டுமானக் கோயில்களாகும்.

**சிற்பக் கலை :** வல்லம், தளவானூர், சீயமங்கலம், மண்டபப்பட்டு, மாமண்டூர், மகேந்திரவாடி, திருச்சி மலைக்கோயில் போன்ற இடங்களிலுள்ள கோயில்களில் செதுக்கப்பெற்றுள்ள சிற்பங்கள் அற்புதமான வேலைப்பாடு அமைந்தவை. நரசிம்மவர்மன் காலத்தில் எழுப்பப்பட்ட குகைக்கோயில்களில் வியத்தகு சிற்ப வேலைகள் நிறைந்துள்ளன. மகாபலிபுரக் கற்பாறைகளில் புராணக்கதை விளக்கும் சிற்ப வேலைப்பாடுகள் உள.

**ஓவியக் கலை :** பல்லவர்கள் கட்டிய கோயிற்கூரைகளிலும் தூண்களிலும் அழகிய ஓவியங்களை இன்றும் காணலாம். சித்தன்னவாசலிலும், ஆதிவராகர் ஆலயத்திலும், குடுமியான் மலைக்குகைக் கோயிலிலும், காஞ்சி கைலாசநாதர் ஆலயத்திலும் இன்னும் பல்வேறு ஆலயங்களிலும் மிகச் சிறந்த ஓவியங்களைக் காணலாம்.

**இசையும் நடனமும் :** மகேந்திரவர்மனுக்கு சங்கீரண சாதி எனப் பட்டமுண்டு. இது அவனது இசை ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றது. அவனது மத்த விலாசம் என்ற நூலில் இசை, நடனம்பற்றிய குறிப்புகள் உள. இராசசிம்மனும் இசைப் புலமையுடையவன். கோயில்களில் இசைவாணர் தங்கியிருந்தனர். சிவனடியார்கள் இசையால் இறைவனை வழிபட்டனர். கணிகையர் ஆடல் பாடல்களில் வல்லவராக விளங்கினர். ஆழ்வார்களின் அருட்பாடல்கள் ஆலயங்களில் பாடப்பட்டன.

**சமய நிலை**

**சமணம் :** பல்லவர் காலத்தில் சமணம் வளர்ச்சி பெற்றிருந்தது. காஞ்சி, பொன்னூர், திருக்காட்டுப்பள்ளி, நாகமலை, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் சமணர் இருக்கைகளும்

பள்ளிகளும் இருந்தன. சில பல்லவ மன்னர்களின் ஆதரவும் சமணத்திற்குக் கிட்டியது. இந்து சமயம் ஏழாம் நூற்றாண்டில் மறுமலர்ச்சியடைந்தது. இதன் விளைவாகச் சமணத்தின் செல்வாக்குக் குறைந்தது.

பௌத்தம்: தமிழகத்தின் வடபகுதியில் பௌத்த சமயம் வளம் பெற்றிருந்தது. காஞ்சி, பௌத்த சமயத்தின் மையமாக இருந்து செயல்பட்டது. பௌத்த சமயக் கோட்பாடுகளும் பாலி மொழியும் ஆராயப்பட்டன. ஏழாம் நூற்றாண்டில் பௌத்த சமயம் வீழ்ச்சியடைந்து, இறுதியில் தமிழகத்தில் இச்சமயம் மறைந்தே போயிற்று.

சமணர்கள் துன்புறுத்தப்பட்டுச் சமணப்பள்ளி இடிக்கப் பட்டது. சமணத் துறவிகள் கழுவேற்றப்பட்டனர். பௌத்த ஆலயங்களும் கொள்ளையடிக்கப்பட்டு, அத்துறவிகளும் கழுவேற் றப்பட்டனர்.

இந்து சமயம்: மங்கிக்கிடந்த இந்து சமயம் பல்லவர்களின் அரிய முயற்சியால் வெகு வேகமாகப் பரவியது. பல்லவ அரசர்கள் இந்து சமயத்தைத் தழுவி, ஆலயங்களை எழுப்பினர். வடமொழிக் கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன.

சைவமும் வைணவமும் தழைத்தோங்கின. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரமூர்த்தி நாயனார் இக்காலத்தில் வாழ்ந்தனர். சீகாழியில் அந்தணர் மரபில் தோன் றியவர் திருஞானசம்பந்தர். இவர் சைவ சமயம் தழைக்கப் பெரிதும் பாடுபட்டார். சமணம் மறைய இவரும் காரணமாக இருந்தார். இவர் 384 பதிகங்களைப் பாடியுள்ளார். இவரது காலம் ஏழாம் நூற்றாண்டு. அப்பர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாரூரில் பிறந்தார்; சமண சமயத்தில் புகுந்து தருமசேனர் என்ற பட்டம் பெற்றார்; சைவசமயத்தில் அவரது தமக்கை திலகவதியாரால் சேர்க்கப்பட்டார்; சாதி சமயப் பாகுபாடு கருதாதவர்; சமூக சேவையில் ஆர்வம் உடையவர்; 311 பதிகங் கள் பாடியுள்ளார். இவரது காலமும் ஏழாம் நூற்றாண்டு. சுந்தர மூர்த்தி நாயனார் திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில் பிராமண குலத்தில் பிறந்தார். பரவைநாச்சியாரைக் காதலித்து மணம் புரிந்தார். பின்பு சங்கிலி நாச்சியாரைக் கடிமணம் புரிந்துகொண்டார். இவர் 100 பதிகங்கள் பாடியுள்ளார். நம்பி யாரூரர் (சுந்தரர்) கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும்

எட்டாம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர் ஆவர். இம்மூவரும் மக்களிடம் சமய உணர்வைப் பரப்பி, சைவ சமயத்தைத் தழைக்கச் செய்யத் தேவாரம் பாடினர். நம்பியாண்டார் நம்பி இதனைத் தொகுத்தார். மாணிக்கவாசகர் திருவாதவூரில் பிறந்தார். திருவாசகம் என்னும் அரிய நூலை உருவாக்கியவர் இவரே.

இக்காலத்தில் சைவத்தைப் போன்றே வைணவமும் சிறப்புற்றிருந்தது. கி. பி. 6ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை 12 ஆழ்வார்கள் வாழ்ந்ததாகக் கூறுகிறார்கள். இவர்கள் நாலாயிர திவ்விய பிரபந்தம் என்று அழைக்கப்படும் அரிய சமயக் கருவூலத்தை அளித்துள்ளனர்.

### கல்வி

சமணர்கள், பள்ளிகளை நடத்தினர். பௌத்தர்களின் விகாரங்களும் கல்வி நிலையங்களாக விளங்கின. இங்குச் சமய இலக்கியங்கள், தத்துவம், யோகம் ஆகியவைகளும் கற்பிக்கப்பட்டன. பல்லவர்கள் வடமொழிக்கு ஆதரவுகாட்டி, வடமொழிக் கல்லூரிகளை நிறுவினர். வடமொழிக்கு இது பொற்காலம். இங்குப் பயிலும் மாணவர்கட்கு உண்டியும் உறையுளும் இலவசமாக அளிக்கப்பட்டன. இங்கு வேதம், மீமாம்சம், நியாயம், தருமசாத்திரங்கள், புராணம், ஆயுர்வேத மருத்துவம், செய்யுள், இசை, நாடகம், ஓவியம் போன்றவை கற்பிக்கப்பட்டன. வடமொழி, தமிழில் கலந்து மணிப்பிரவாள நடை தோன்றியது. லோக விபாகம், கிராதார்ச்சுனீயம், அவந்திசுந்தரி கதை, மத்த விலாசப் பிரகசனம், காவ்யாதர்சம் முதலிய வடமொழி நூல்கள் தமிழகத்தில் இக்காலத்தில் தோன்றியவை.

### இலக்கியம்

இக்காலத்தில் நமக்குக் கிடைத்துள்ள சைவ, வைணவ இலக்கியம் அளவிடற்கரியவை. மூவர் பாடிய தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்கள் கிடைத்தன. சமண இலக்கிய நூல்களாகிய சீவக சிந்தாமணியும் வளையாபதியும் தோன்றின. இச்சமணர்கள் நிகண்டு என்ற நூலை நல்கித் தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றியுள்ளனர். மேரு மந்திரபுராணம், சாந்திபுராணம், ஸ்ரீபுராணம் என்னும் புராணங்கள் சமணர்களால் தமிழில் எழுதப்பட்டன. பௌத்த சமயத்தவர்களும் மணிமேகலை, குண்டலகேசி என்ற இரு காப்பியங்களைத் தமிழில் கொடுத்தனர். புத்ததத்தர் அபிதருமாவதாரம் என்னும் நூலை இயற்றினார். கொங்குவேள் என்பவர் பெருங்கதை என்னும்

நூலை எழுதினார். முத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம், பாரத வெண்பா, கல்லாடம் போன்ற நூல்களும் இக்காலத்தவை எனக் கூறப்படுகின்றன. திவாகரனார் எழுதிய திவாகர நிகண்டு, பிங்கலந்தையார் எழுதிய பிங்கல நிகண்டு என்பன இக்காலத்துப் படைப்புகளாகும்.

பல்லவர் காலத்தில் தமிழ் இலக்கியம் எல்லையிலா அளவிற்கு வளர்ச்சியடைந்து தமிழர் சமுதாயத்தை நன்னெறிப் படுத்தியது.

## 7.4. பாண்டியர் காலப் பண்பாடு

### தொடக்கம்

உலகிலேயே ஆளும் அரச குடும்ப மரபில் மிகப் பழமை வாய்ந்த சிறப்புமிக்கவர்களுள் பாண்டியர்களும் ஒருவராவர். இவர்கள் மதுரையையடக்கிய தென்பகுதியை ஆயிரம் ஆண்டுக் காலம் ஏறத்தாழச் சிறிது இடைவெளிகட்கிடையே ஆண்டவர் கள். இவர்கள் கட்டட, சிற்பக்கலைகளில் புதிய பாணிகளைக் கொடுத்துள்ளார்கள். பேரரசை நிறுவியர்கள் என்பதில் தனி இடத்தையும் பெற்றுள்ள இவர்கள், கலையை வளர்த்த புரவலர்கள்.

கல்வெட்டுகள் மூலமாக இவர்களது ஆட்சியைப்பற்றி அறிவதுடன், வெளிநாட்டினின்று வந்த மார்க்கோபோலோ என்பவரின் குறிப்புகள் மூலமாகவும் பல செய்திகளை அறியலாம். பல செப்புப் பட்டயங்களும் இவர்களது ஆட்சிமுறையினை எடுத்துக் கூறுகின்றன. புராணங்கள், தலபுராணத்தில் அடங்கியுள்ள வரலாற்றுக் குறிப்புகள், மற்றும் அக்கால இலக்கிய நூல்கள், காசியல் (numismatics) மற்றும் சமய நூல்கள் போன்றவை அரசியல், பொருளாதார நிலைகளை எடுத்துக் கூறுகின்றன. மதுரைத்தல வரலாறு, கங்காதேவியின் மதுரை-விஜயம் என்ற நூல்களும் பாண்டியரின் ஆட்சியைப்பற்றிப் பல செய்திகள் தருகின்றன. வாசவ், அமீர்குசுரு, இபின் பட்டுடா, பரனி போன்றோரின் குறிப்புகளும், சீனர்களின் குறிப்புகளும் இவர்களின் ஆட்சியை அறியப் பெரிதும் துணைபுரிகின்றன. இக்கால வரலாற்று ஆசிரியர்களான வில்சன், நெல்சன், சூவெல், வெங்கையா, டி. ஏ. கோபிநாத்ராவ், கே. கே. பிள்ளை,

கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, டி. வி. சதாசிவ பண்டாரத்தார் பாண்டியர் வரலாற்றைப் படைக்கப் பெருந்தொண்டாற்றி யுள்ளனர்.

ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பதினான்காம் நூற்றாண்டின் தொடக்க காலம்வரை பாண்டியர்கள் ஆட்சி இருந்ததைக் காண்கிறோம். இதில் முதல் பாண்டிய அரசு ஏறத்தாழ 575-லிருந்து 920 வரையும், இரண்டாவது பாண்டிய அரசு ஏறத்தாழ 1190-லிருந்து 1311 வரையும் இருந்ததாக அறிகிறோம். பாண்டிய அரசருள் கடுங்கோன், அரிகேசரிவர்மன், வரகுண பாண்டியர்கள், நெடுஞ்செழியன், சுந்தரபாண்டியன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அரசியல் நிலை

நிருவாக அமைப்பு : பாண்டியருடைய ஆட்சிக்காலமான கி. பி. 600-லிருந்து 1300 வரை பல்லவ, சாளுக்கிய, சோழ, இராட்டிரகூட, யாதவ, ஹொய்சால, காகதீய ஆட்சிகளும் நிலவி இருந்தமையால், அவைகளின் தாக்கம், பாண்டிய ஆட்சியில் இருப்பதைக் காண்கிறோம். ஆகவே, ஒரே சீரான ஆட்சி முறையைக் காணமுடிவதில்லை. எல்லோரும் விரும்பும் வண்ணம் ஆட்சி முறை அமைந்து, மக்களுக்கு நலன்கூட்டுவதாக இருந்தது.

மத்திய அரசிற்கும் உள்ளாட்சிக்கும் நல்ல தொடர்பும், இயைந்து செல்லும் நிலையும் இருந்தமையால் நிருவாகம் வெற்றி கரமாகவும் திண்மையாகவும் செயல்பட்டது. நலம் பயக்கும் முடியாட்சி நல்ல குறிக்கோள்களுடன் செயல்பட்டது.

அரசுரிமை, தமிழகத்தில் இறைவனின் இசைவாணையைப் பின்புலமாகக் கொண்டு அமைந்திருந்தது. பாண்டிய அரசவை (court) ஆரவாரக் கண்காட்சியும், பகட்டாரவாரமும் நிறைந்த தாகவிருந்தது.

அரசனும் அரசவையும் : பல பிரபுக்களும், பணியாட்களும் அரசவையில் இருந்தனர். அரசவையின் ஆடம்பரமான அமைப்பைக் கண்டு அயல்நாட்டினரே வியப்படைந்தனர். அரசன் பட்டுப் பீதாம்பரங்களுடனும் விலையுயர்ந்த அழகிய அணிகலன் களுடனும் காட்சியளித்தான். நூற்றுக்கணக்கான போர்வீரர் களும், நடனமாதரும் இருந்தனர். ஆயிரக்கணக்கான அரசவை யணங்குகள் (courtesan), அரசனைக் கவனிக்க அமர்த்தப்

பட்டிருந்தனர். மன்னனின் படுக்கையை அலங்கரிக்க அழகிய மகளிர் பொறுக்கியெடுக்கப்பட்டனர். அவர்கட்கு நல்ல உறை விடமும், மானியமும் அளிக்கப்பட்டன. தூயவனாக அரசன் இருந்தான். அவனுக்குப் பல மெய்காப்பாளர்கள் (bodyguards) இருந்தனர். வேட்டையாடல், மற்போர், சதுரங்க விளையாட்டு, இசை, நடனம், நாடகம் போன்றவை அரசனின் கேளிக் கைகள்.

**ஆளும் வகுப்பினர் :** அரசன், நிருவாகத்தில் ஓர் அறிவுரை புகலும் குழுவால் நெறிப்படுத்தப்பட்டான். அமைச்சரை மந்திரி என அழைத்தனர். சேனாபதி படைகட்குத் தலைவனாக இருந்தான். இவர்களைத் தவிர, இரண்டாம் நிலையிலுள்ள அலுவவர்களும் மூன்றாம் வரிசையைச் சேர்ந்த அலுவலர்களும் கூட இருந்தனர். அரசுச் செயலகம் எழுத்து மண்டபத்தில் இயங்கியது. படைத்தலைவர், நாடுவகை செய்வோர் (நிலத்தை அளப்போர்), வரியாளர், திருமுகம் எழுதுபவர் அல்லது ஓலை நாயகம், திருமந்திர ஓலை (அரசு ஆணைகளைப் பதிவு செய்வோர்) போன்ற பல்வேறு அலுவலர்களும் இருந்ததாகக் கல்வெட்டுகள் மூலமாக அறிகின்றோம். நாட்டை ஆபத்துக் காலங்களில் காப்பது அல்லது அரச குடும்பத்தாருடன் அழிந்து போவது என்ற முடிவுடன் இருந்த பாதுகாவலர்களையும் காண்கிறோம்.

**மத்திய நிருவாகம்:** பாண்டிய நாடு அல்லது பாண்டி மண்டலம் என்பது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி என்ற மாவட்டங்களைத் தன்னுள் அடக்கி யிருந்தது. இப்பாண்டி நாடு, நிருவாகத்திற்கென மண்டலங் களாகவும், அவை நாடுகளாகவும், கூற்றங்களாகவும் பிரிக்கப் பட்டிருந்தன. மாநிலங்களை அல்லது மண்டலங்களை அரச குடும்பத்தினர் நிருவகித்து வந்தனர். மாநில ஆளுநர்கள் தம் முன்னுரிமையுடன் இயங்கும் தன்மை பெற்றிருந்தனர்.

**உள்ளாட்சி அமைப்பு :** பாண்டியர்களுடைய ஆதரவோடு உள்ளாட்சி அமைப்புகள் முளைத்தெழுந்தன. மகாசபைகள், அதன் உறுப்பினர்களுக்குரிய தகுதிகள் மற்றும் வாரியங்கள் போன்றவை இருந்ததை மானூர்க் கல்வெட்டுக் கூறுகின்றது. குடஓலை முறையில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கல்வி, ஒழுக்கம், செல்வம் மூன்றும் நிறைய பெற்றவர்களே தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றிருந்தனர். கிராமம்

அல்லது ஊர் என்பது உள்ளாட்சியின் அடிப்படைத் தொகுதியாகும். சபை என்பது மக்கள் சபை எனப் பெயர் பெற்றிருந்தது. இச்சபை கூடுவது முரசொலியால் அறிவிக்கப்பட்டது. பொது இடத்தில் இச்சபை கூடிப் பிரச்சினைகளை விவாதித்தது.

படை : அன்றைய போர்ப்படையில் யானைப்படை, குதிரைப்படை, இரதப்படை, காலாட்படை போன்ற நான்கு பிரிவுகளும் இருந்தன. படைத்தலைவர் அல்லது சேனாபதி இராணுவத்தின் உயர்ந்த அலுவலர். இவர்களைப் பயிற்றுவிப்பதற்கென இராணுவப் பள்ளிகள் இருந்திருக்கலாமென அறிய முடிகின்றது. நாட்டின் முக்கியப் பகுதிகளில் இராணுவம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. போரில் வீரமரணம் அடைந்தோருக்கு நடுகல் எழுப்பப்பட்டது.

வரி விதிப்பு : வரிவிதிப்புத் துறை புரவு-வரி-திணைக்களம், இறை பட்டம், கடமை, இடை-வரி, இனவரி போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது. அரசுக்கு உரிய வரி உள்நாட்டு அலுவலர்களால் வசூலிக்கப்பட்டு அரசுக் கருவூலத்தில் செலுத்தப் பட்டது. அனைத்துத் தொழில் செய்வோர்களுக்கும் வாணிபம் செய்வோருக்கும் வரி விதிக்கப்பட்டது. நிலவரியே அரசுக்கு முக்கிய வருமானமாக அமைந்தது. முத்துக்குளிப்பு அரசுரிமையாக இருந்தது. துறைமுக வரியும் வசூலிக்கப்பட்டது. நிலங்கள் குழி, மா, வேலி என்ற பல்வேறு அளவுகளைப் பெற்றிருந்தன. சிவ, விஷ்ணு ஆலயங்களுக்கு வரியின்றி நிலங்கள் அளிக்கப்பட்டன.

நீதி நிருவாகம் : முறையான நீதி நிருவாக அமைப்பு இக்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. மக்களின் தனிப்பட்ட வழக்குகள் கிராம அமைப்புகளால் விசாரணை செய்யப்பட்டு நீதி வழங்கப்பட்டது. இவ்வாறு நீதி வழங்குவோரை நியாயத்தார் என அழைத்தனர். எம்முடிவுக்கும் வராத நீண்டகாலமாக இருக்கின்ற வழக்குகள் அரசவைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

### சமுதாய நிலை

சாதிப் பாகுபாடு : பல்வேறு வகைப்பட்ட இனத்தைச் சார்ந்த மக்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் வாழ்ந்ததாக அறிகின்றோம். பிராமணர்களும் வைசியர்களும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் வாழ வற்புறுத்தப்பட்டனர். அக்கிரகாரங்கள் நிறுவப்பட்டன. சாதி உரிமைக்காகவும், சமுதாய உரிமைக்காகவும் மக்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டதை அறிகின்றோம். சாதிப் பாகுபாடு மிகக் கடுமையாக இருந்ததுடன்

அதன் விளைவாக எண்ணற்ற தீமைகள் பெருகின. தீண்டப் படாதோர், உறவுகொள்ள முடியாதோர் சமுதாயத்திற்குச் சாபக் கேடெனக் கருதப்பட்டனர். பறையர்கள், பள்ளர்கள், சக்கிலி யர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். ஆழ்வார்களிலிருந்து இராமானுஜர்வரை இருந்தோர் இவர்கட்கு அனுதாபம் காட்டிய போதிலும் இவர்களின் நிலை உயரவில்லை.

**மகளிர் நிலை :** சமுதாயத்திற்கு அணிகலனாகப் பெண்டிர் விளங்கினர். அவர்கட்கு ஓர் உயரிய இடம் அளிக்கப்பட்டது. பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் நியாயத்தார் மன்றத்தில் மகளிர் இடம்பெற்றனர். அரசவட்டத்தில் சதிப் பழக்கம் இருந்தது. இடைக்காலத்தில் விலைமாதர் இழிவாக நடத்தப் பட்டனர். இறைவனுக்குப் பணிபுரிய, அவன்முன் பாட, ஆட தேவரடியார்கள் (தேவதாசிகள்) ஆலயங்களில் அமர்த்தப் பட்டனர். நாளடைவில் தேவரடியார்கள் விலைமாதர்களாயினர். அவர்களிடம் வரி வசூலிக்கப்பட்டது.

**இன்ப இயல் :** உறுதிப் பொருளில் மூன்றாவது பொருளாகிய இன்பத்தைப்பற்றிச் சங்க காலத்திலிருந்து புலவர்களும், ஞானி களும், துறவிகளும் பேசியவண்ணமே இருக்கின்றனர். இளங்கோ வடிகள், திருத்தக்கத்தேவர், அருணகிரிநாதர், பட்டினத்தார் போன்றோர் சிற்றின்பத்தைப்பற்றி எழுதியிருப்பதைக் காண்கின் றோம். நம்முடைய கலைகளிலும் குறிப்பாகக் கட்டட, சிற்ப, ஓவியக் கலைகளில் இன்ப உணர்வினை எடுத்தியம்பும் காட்சிகள் நிறைய உள்ளன. இவை பல்வேறு உயர்ந்த கருத்துகளையும் குறியீட்டு மூலமாக உணர்த்துகின்றன. அதிவீரராமபாண்டியன் என்பவன் இன்ப இயலைப்பற்றிக் **கொக்கோகம்** என்ற நூல் எழுதியிருப்பதாகத் தெரியவருகின்றது.

**பொருளாதார நிலை**

சோழர்களைத் தொடர்ந்து, பாண்டியர்களும் கடல் கடந்த வாணிபத்தை நடத்தி வந்தனர். தமிழரசர்கள் அராபிய நாட்டி லிருந்து பல்லாயிரக்கணக்கான குதிரைகளை வாங்கினர்; அளவிடற்கரிய பொருளைச் செலவிட்டனர். ஆனால் அக் குதிரைகள் உணவின்றி, உரிய பயிற்சியின்றி, கவனிப்பாரின்றி இறுதியில் இறந்தேபோயின. காயல் என்னும் துறைமுகம் முத்து, குதிரை வணிகத்திற்கு மையமாக விளங்கியது. நாளடை வில் வெளிநாட்டு வணிகக் தொடர்பு மறைந்தே போயிற்று.

**நாணயங்கள் :** வாணிபக் குழுக்கள் உள்நாட்டு வாணிபத்தை முறைப்படுத்தி நடத்தின. எல்லா வணிகச் செயல்களிலும் தங்கம் பயன்படுத்தப்பட்டது. கழஞ்சு என்பது தங்க அளவுத் தொகுதி. மற்றும் துலாம், பலம் போன்ற தொகுதிகளும் இருந்தன. பாண்டியகால நாணயங்கள் பல கிடைத்துள்ளன. காசு, செம்பொன் காசு, பணம் போன்ற பல்வேறு நாணயங்கள் இருந்தன.

**சமயம்**

இக்காலத்தில் ஆன்மாவை நெகிழச்செய்து அமைதி தரும் பக்திப் பாடல்களைக் கேட்கின்றோம். ஆழ்வார்களும், நாயன்மார்களும் தெற்கே தோன்றித் தமிழுக்கும் சமயத்திற்கும் பெருந் தொண்டாற்றினர். நாயன்மார்களுக்குள் அரிகேசரி மாறவர்மன், குலச்சிறை (அரிகேசரியின் அமைச்சர்), மங்கையர்க்கரசி போன்றோர் அரசகுடும்பத்தைச் சார்ந்தோர் என்பது குறிப்பிடத்தக்கது. கூன்பாண்டியன் பல்லாயிரக்கணக்கான சமணர்களைத் துன்புறுத்தியதாக அறிகின்றோம். திருவாசகத்தை எழுதிய மாணிக்க வாசகர் இக்காலத்தைச் சேர்ந்த சைவசமயச் சான்றோர். ஆழ்வார்களில் மதுரகவி, நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் போன்றோர் பாண்டிய நாட்டில் தோன்றியவர்கள். ஆண்டாளின் திருப்பாவை அரிய ஆன்மிகக் கருவூலம்; அழகிய இலக்கிய ஓவியம். பல மடங்கள் கலைகளையும் கல்வியையும் போற்றி வளர்த்தன. திருப்பத்தூர், திருப்பரங்குன்றம், திருநெல்வேலி, மதுரை, காஞ்சி போன்ற இடங்களில் இந்து சமய மடங்கள் இருந்தன.

**கலை**

பாண்டிய அரசர்கள் கலையின் காவலர்களாக விளங்கினர். அவர்களது கலைத் தொண்டினை விளக்கத் தமிழகத்தில் வானுயர்ந்த கோபுரங்களும் அழகிய மண்டபங்களும் அழியாச் சின்னங்களாக நிற்கின்றன.

பாண்டியர்களுடைய தொடக்க காலக் குடைவரைக் கோயில்கள் ஆனைமலை, ஐவர்மலை, பிள்ளையார்பட்டி போன்ற இடங்களில் உள்ளன. இவை பல்லவர் காலத்தை ஒத்த முறையில் உள்ளன. மற்றும் திருமய்யம், திருச்செந்தூர், திருமலைபுரம், சித்தன்னவாசல், கழுகுமலை போன்ற பல இடங்களில் குகைகள் உள்ளன. சித்தன்னவாசல் ஓவியங்கள் பாண்டிய காலத்தைச் சேர்ந்தவை என்றும், பல்லவர்கள் காலத்தைச் சேர்ந்தவை என்றும் இருவேறு கருத்துகள் உள்ளன. கழுகுமலையில் உள்ள குகைக்கோயில் பல்லவ இரதத்தைப்

போன்று பாண்டிய சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. திருப்பரங்குன்றத்திலுள்ள குகைக்கோயிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் நார்த்தாமலையில் உள்ள குகைக்கோயில் சிற்பங்களும் அற்புத அழகுக் கருவூலங்கள்.

கட்டடக் கலை: பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் பாண்டியர்களின் மிகச் சிறந்த கட்டடக் கலையைக் காண முடிகின்றது. சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட கோபுரங்கள், இக்காலத்தில் மிகச் சிறப்பான உருவ அமைப்பைப் பெற்றுத் திகழ்கின்றன. இக்கோயில் கட்டடக்கலை மிகச் சிறந்த பொறியியல் ஆற்றலை எடுத்தியம்புகின்றது. மதுரை, சிதம்பரம், கும்பகோணம், ஸ்ரீவைகுண்டம், திருவரங்கம் போன்ற இடங்களில் உள்ள சிறப்புமிக்க ஆலயங்களில் பாண்டிய நாட்டுக் கோபுரங்களைப் பார்த்து வியப்புறமுடிகின்றது. பிரகாரங்கள், மண்டபங்கள், தூண்கள் போன்றவை அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளன. மதுரை மீனாட்சியம்மன் கோயில் இதற்கு ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. கட்டடக்கலை உச்சநிலையை இவர்கள் காலத்தில் அடைந்தது.

### கல்வி

கல்வி, மன்னராலும் மக்களாலும் பெரிதும் போற்றப்பட்டது. பண்டைய குருகுல அமைப்பில் கல்லூரிகள் அமைந்திருந்தன. வேதம், இலக்கணம், சைவசித்தாந்தம் கற்பிக்கப்பட்டன. ஆலயங்களில் சமய ஆராய்ச்சி நடைபெற்றது. உயர்நிலைப் பள்ளியும் இயங்கிவந்தது. ஓர் ஆசிரியருக்கு உயர்ந்த சம்பளம் எட்டுக் கழஞ்சு பொன். தருமப் பள்ளிகள் பல இருந்தன.

### மருத்துவம்

மருத்துவமனைகள் பதினைந்து படுக்கைகளுடன் இருந்துள்ளன. சிறந்த மருத்துவர் இம்மனைகளை நடத்திவந்தனர். இவற்றை ஆதுலர் சாலை அல்லது வீரசோழன் என அழைத்தனர். உணவு அளித்து மருத்துவம் செய்யப்பட்டு நோயாளிகள் பேணப்பட்டனர்.

### நெடுஞ்சாலைகள்

பல நெடுஞ்சாலைகள் அக்காலத்தில் அமைக்கப்பெற்று உயரிய முறையில் பாதுகாக்கப்பட்டன. அவ்வப்போது புதிய நெடுஞ்சாலைகளும் உருவாக்கப்பட்டன. பாண்டிய நாட்டினின்று

அவ்வெல்லைகளைக் கடந்து நீண்ட தூரத்திற்கு இருமருங்கும் மரங்கள் நடப்பட்டுப் பல்வேறு நாடுகளுக்குப் பெருஞ்சாலைகள் சிறப்பாக அமைக்கப்பட்டன.

முடிவு

பாண்டிய அரசர்களுடைய ஆட்சிக் காலத்தில் சமயத்துறையிலும் கலைத்துறையிலும் மிகச் சிறந்த வளர்ச்சியைக் கண்ணுறுகிறோம்.

## 7.5. சோழர் காலப் பண்பாடு

### தொடக்கம்

சோழர்கள் ஒன்பது, அதற்குப் பின்வந்த நூற்றாண்டுகளில், தமிழகத்தில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றனர். முதலாம் ஆதித்தியன் (871-907), முதலாம் பராந்தகன் (907-953), முதலாம் இராஜ இராஜன் (985-1014), முதலாம் இராஜேந்திர சோழன் (1012-1044), முதலாம் இராஜாதிராஜன் (1018-1052), முதலாம் குலோத்துங்கன் (1070-1120) போன்ற அரசர்கள் சோழர் காலத்தில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சோழர் காலம் ஒரு சிறப்புமிக்க நிருவாக அமைப்பையும் இலக்கிய வளர்ச்சியையும் கண்டிருந்தது. இக்காலத்தில் கோயில்கள் நாடு முழுவதும் கட்டப்பட்டிருந்தன. சோழர்காலக் கலையைத் திராவிடக் கட்டடக்கலை எனக் கூறுவர்.

### சோழர்களின் ஆட்சிமுறை

சோழர்களுடைய தலைநகரங்களான தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், முடிகொண்டான், காஞ்சி போன்ற இடங்களில் மிக ஆடம்பரமான நீதிமன்றங்கள் இருந்தன. சோழர்கள் கோயில்களுக்கென நிறைந்த அளவில் பரிசுப் பொருள்களை வழங்கிப் புகழைத் தேடிக்கொண்டனர். பல கோயில்களில் அவர்கள் சிலைகள் நிறுவப்பட்டு வழிபடப்பட்டன. அரசுரிமை மூத்த புதல்வனுக்கே என்பது ஒரேநிலையாகப் பின்பற்றப்படவில்லை. இளவரசர்கள் நாட்டு நிருவாகத்திலும், படைகளைத் தலைமைதாங்கிச் செல்வதிலும் இடம் பெற்றிருந்தனர். அரசன், அமைச்சர் பேரவையையும் நிருவாக அலுவலர்களையும் அவ்வப்போது கலந்து கொண்டான். வாரிசு இல்லாதபோது மன்னர் குடும்பத்தைச் சாராத ஒருவர் வேந்தராக நியமிக்கப்பட்டார்.

அரண்மனையில் பலவகைப்பட்ட பணியாட்கள் இருந்தனர். இராஜகுரு என்ற அதிகாரி சமய நிறுவனங்களை நிருவகிக்கும் பணியில் அரசனுக்கு ஆலோசனை வழங்கினார். சோழர்கள் ஆட்சியில் கிராம சபைகள் கொண்டுவந்த தீர்மானங்களை மத்திய அரசு செயல்படுத்தக் கடமைப்பட்டிருந்தது. வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பது கிராம சபையின் பொறுப்பாகும். இச்சபையால் நீதி வழங்க இயலாநிலை ஏற்படின், மத்திய அரசாங்கத்திடம் வழக்குகள் எடுத்துச் செல்லப்பட்டன. இராணுவத் துறையையும் நிருவாகத் துறையையும் சார்ந்த அரசின் உயர்தர அலுவலர்கள் அதிகாரிகள் என அழைக்கப் பட்டனர். உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் நற்பண்புடைய வர்களும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.

நாட்டுப் பிரிவுகள்: சோழப் பேரரசை மத்திய அரசின் துணை கொண்டு மட்டும் நிருவகிப்பது எளிதன்று. இதன்பொருட்டு இப் பேரரசு பல மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. இளவரசர்கள் அல்லது உறவினர்கள் அவைகளின் ஆளுநர்களாக நியமிக்கப் பட்டனர். மாநிலத்தில் அமைதி காப்பது, பிரச்சினைகளை மத்திய அரசிற்கு எடுத்துரைப்பது, மத்திய அரசின் ஆணை களைச் செயல்படுத்துவது ஆகியவை அவர்களுடைய பணி களாகும். இவையன்றித் திறை செலுத்தும் நாடுகள், சோழ வேந்தர்கட்கு இராணுவ உதவி நல்கின. மண்டலம் வளநாடு களாகவும், வளநாடு நாடுகளாகவும், நாடு கூற்றங்கள் அல்லது கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கோட் டமும் தன்னாட்சி பெற்ற பல கிராமங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது.

ஊராட்சி: ஊராட்சிமுறை உலகம் வியக்கும் வண்ணம் சிறப்புற்றிருந்தது. மத்திய அரசு பாதுகாப்பு, உள்நாட்டு அமைதி, குடிமக்கள் முன்னேற்றம், பண்பாட்டு வளர்ச்சி இவற்றில் கவனம் செலுத்தியது. கிராம மன்றங்களின் பொறுப்பில் பிற திருவாகங்கள் விடப்பட்டிருந்தன.

ஊர், சபை, நகரசபை என மன்றங்கள் மூவகையாகப் பிரிக்கப் பட்டிருந்தன. இவற்றில் அப்பகுதியில் வாழ்ந்தோர் உறுப்பினர் களாக இருந்தனர். சபை என்பதில் பிராமணர்கள் உறுப்பினர் களாக இருந்தனர். ஊர் என்பதில் பிராமணர் அல்லாதார் இடம் பெற்றிருந்தனர். மகா சபை மக்களின் எல்லா திருவாகக் காரியங்

களையும் நடத்தும் தன்னுரிமை பெற்றிருந்தது. மகாசபை பொது இடத்தில் கூடியது. இதில் ஊர்மக்கள் அனைவரும் பங்கு கொண்டனர். இச்சபை வரி வசூல் செய்து வரிப்பணத்தை மத்திய அரசிற்குச் செலுத்தியது. எஞ்சிய பணம் கிராம நலனுக்குச் செலவிடப்பட்டது. வரி செலுத்தத் தவறியவர்களின் நிலங்கள் ஏலத்திற்கு விடப்பட்டன. காடுகள், தரிசு நிலங்கள் திருத்தி விளைச்சல் நிலமாக்கப்பட்டன. பாசனத்திற்காகக் குளங்கள் வெட்டுதல், சாலைகள் அமைத்தல், அறப்பணிகள் செய்தல், கோயில்களைப் பழுதுபார்த்தல், விழாக்களை நடத்தல், பள்ளிகளைக் கட்டி நிருவகித்தல், மருத்துவமனைகளை அமைத்தல் போன்ற பல பணிகளை மகாசபை செய்து வந்தது.

ஊரில் நிருவாகக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. மகாசபையில் தேர்தலில் போட்டி இடுவதற்கான தகுதிகள், தேர்தல்முறை, ஒவ்வொரு கழகத்திற்கும் அளிக்கப்பட்ட பணிகள் முதலியவை வரையறுக்கப்பட்டிருந்தன.

ஒரு குடும்புவில் தேர்தலில் போட்டியிடுபவர்களது பெயர்களைப் பனையோலைத் துண்டுகளில் எழுதிக் குடம் ஒன்றில் போடுவார்கள். நன்றாகக் குலுக்கிய பின்னர், சிறுவன் ஒருவன் அக்குடத்திலிருந்து ஓர் ஓலைத் துண்டை எடுப்பான். இவ்வாறு முப்பது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இதைக் 'குடவோலை முறை' எனக் கூறுவர்.

**வாரியங்கள்:** அறநிலையங்களைக் கண்காணிப்பதும், நீதி விசாரணை நடத்துவதும் சம்வத்சர வாரியத்தின் பணிகளாகும். இதுபோன்று ஏரி வாரியம், தோட்ட வாரியம், பொன் வாரியம், வரி வசூலிக்கப் பஞ்ச வாரியம் போன்ற பல வாரியங்கள் அமைக்கப் பட்டிருந்தன.

கிராம சபையைப்போல் நாடுகள் ஒவ்வொன்றிலும் நிருவாகக் காரியங்களைக் கவனிக்க நாட்டு சபை அமைக்கப்பட்டிருந்தது. நாட்டில் நிலவிய கிராம சபை உறுப்பினர்களும், நகர சபை உறுப்பினர்களும், நாட்டு சபையில் உறுப்பினர்களாக அமர்ந்தனர்.

**வருவாய் :** சோழப்பேரரசின் வருவாயின் பெரும்பகுதி நிலவரி மூலமாகக் கிடைத்தது. மற்றும் சுங்கவரி, சுரங்கவரி போன்ற பிற வரிகள் மூலமாகவும் வருமானம் அரசாங்கத்திற்குக் கிடைத்தது. காடுகள், உப்பளங்கள் மூலமும் வருவாய் கிட்டியது.

வருவாய்க்கு ஏற்ப அரசின் செலவும் அமைந்திருந்தது. இராணுவம், கப்பற்படை, நிருவாகம், சாலைகள் அமைத்தல், நீர்ப்பாசன வசதி, கல்வி வளர்ச்சி, மருத்துவ வசதி போன்றவற்றிற்கு அரசு இவ்வருவாயைப் பயன்படுத்தியது.

படை: சோழ அரசின் இராணுவம் யானைப்படை, குதிரைப் படை, காலாட்படை போன்றவை அமைந்த அமைப்பாகும். போர்வீரர்களைப் பயிற்றுவிக்க, நெறிப்படுத்த முக்கியக் கவனம் செலுத்தப்பட்டது. அரசனுக்கு மெய்காப்பாளன் இருந்தான். குதிரைப்படையில் அராபிய நாட்டுக் குதிரைகள் இடம் பெற்றிருந்தது மிகச் சிறப்பாக இருந்தது. சோழப் போரில் கடுமையான வழிமுறைகள் கையாளப்பட்டன. இதனால் பொதுமக்களும் மகளிரும் பாதிக்கப்பட்டனர். அண்டை நாட்டாரை அல்லற்படுத்தி ஈட்டிய செல்வத்தைக் கொண்டு ஆலயங்கள் எழுப்பப்பட்டதுடன், அரசர்கள் ஆடம்பர வாழ்வையும் நடத்தினர். சோழக் கடற்படை முதலாம் ராஜராஜன், ராஜேந்திரன் காலங்களில் சிறப்பான நிலையைப் பெற்றிருந்தது. வங்காள விரிகுடா சோழர்களின் 'ஏரி' எனக் கருதப்பட்டது. வலிமை பொருந்திய கப்பற்படை ஈழம், கடாரம், தென்கிழக்கு ஆசிய தீவுகள் முதலிய பகுதிகளில் சென்று அரசியல் ஆதிக்கம் செலுத்தத் துணை நின்றது.

**நீதி நிருவாகம்:** ஸ்தல நிறுவனங்கள் எனக் கூறப்படும் கிராம சபைகளும் பிற கழகங்களும் நீதி விசாரணை செய்தன. நாட்டு மன்றங்களும் இவ்வதிகாரத்தைப் பெற்றிருந்தன. அரசனது நீதி மன்றம் பெரிய வழக்குகளை விசாரித்தது. சட்ட நிபுணர்களான பிராமணர்கள் அதில் நீதிபதிகளாகச் செயலாற்றினர். இராஜ துரோகக் குற்றங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. கொடிய குற்றங்களுக்கு யானையால் மிதித்துக் கொல்லப்படுதல், சொத்துகளைப் பறிமுதல் செய்தல், சவுக்கடி கொடுத்தல் போன்ற பிற தண்டனைகள் விதிக்கப்பட்டன.

### சமுதாய நிலை

சோழர்கள் காலத்தில் சமுதாய அமைப்பில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. வேதியர், சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தனர். இவர்கட்குக் கோயில்கள், மடங்கள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் தனிச்சலுகைகள் அளிக்கப்பட்டன. பிற சாதி மக்கள் இவர்களுக்கு உண்டியும் உறையுளும் அளித்தனர். அரசர்களும் மக்களும் வேதியர்களுக்குத் தானங்களை வழங்கினர்; நிலவரி விதிப்பதிலிருந்து விலக்குப் பெற்றிருந்தனர்.

தாழ்த்தப்பட்டவர்கள் ஒதுக்கப்பட்ட இடங்களில் வாழ்ந்தனர். பறையர்களும், புலையர்களும் தீண்டப்படாதவர்கள் எனக் கருதப்பட்டு அவர்களுக்குத் தனிக்கல்லறைகளும், சுடுகாடுகளும் இருந்தன. கிணறுகள் தனியாக வெட்டப்பட்டிருந்தன. உழவுத்தொழிலும் முரசு அறைதலும் அவர்களுடைய தொழில்களாகும்.

**திருமணம்:** கலப்புமணம் அதிகமாக வரவேற்கப்படவில்லை. மகளிர் இளம் வயதிலேயே மணம் செய்விக்கப்பட்டனர். விதவை மறுமணம் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் உடன்கட்டை ஏற வற்புறுத்தப்பட்டனர். அரச குடும்பங்களில் விதவைகள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எரிக்கப்பட்டனர். சோழர் காலத்தில் அனுலோமர்கள், பிரதிலோமர்கள், மாக்கியர்கள், காரணியர்கள், இரதகாரர்கள், பிரம்மசத்திரியர்கள், பிரம்ம வைசியர்கள் என்ற பல்வேறு இனத்தவர்கள் இருந்தனர்.

**அடிமைத் தொழில் :** உழவுத் தொழில் செய்தோர் அடிமைகள் நிலைமையில் இருந்தனர். ஆண்களும் பெண்களும் தங்களைத் தாங்களே கோயில்களுக்கு விற்றுக் கொள்ளும் வழக்கம் இருந்தது.

**தேவரடியார்கள் :** சோழர்காலத்தில் கோயில்களில் பணி புரிவதற்கெனப் பெண்கள் அமர்த்தப்பட்டனர். இவர்கள் தேவரடியார்கள் என அழைக்கப்பட்டனர். கல்வி அறிவும் கலை ஞானமும் நிரம்பப்பெற்றவர்கள் இவர்கள். விழாக் காலங்களில் ஆடல் பாடல் இவற்றில் பங்கு பெற்றனர். சில தேவரடியார்கள் மணம் செய்து கொள்வதுமுண்டு.

**உணவு** உணவுப் பழக்கவழக்கங்களில் பெரும் மாற்றமில்லை. சைவ, அசைவ உணவுகள் வழக்கம்போல் இருந்துவந்தன. மகளிர் மது அருந்தியதாகத் தெரிய வருகிறது. வெளிநாட்டுப் பயணிகள்மூலம் சோழர்கள் மது அருந்தவில்லை, ஆனால் பலவகை இறைச்சிகளை உண்டனர் என அறியவருகின்றது.

**சாதிப் பூசல்கள் :** சமுதாயத்தில் அடிமட்டத்திலிருந்த இடங்கைக் குலத்தவர்களும், பாதிக்கப்பட்ட பிறரும், வேதியர்களையும் நிலப்பிரபுக்களையும் எதிர்த்தனர். உழைக்கும் மக்களின் தாய்க்குலம் புடைவையின் முன்றானையை இடப்பக்கத் தோளில் போட்டுக் கொண்டதால் அக்குலத்தவர்களுக்கு இடங்கையினர் எனப் பெயர் வந்தது.

**பழக்கவழக்கங்கள் :** ஆண்கள் வேட்டியையும் மகளிர் புடைவைகளையும் மற்றும் காப்பு, வளை, கொலுசு, கழுத்தணி போன்ற பல்வேறு அணிகலன்களையும் அணிந்து வந்தனர். அரச குடும்பங்களில் பணிப்பெண்கள் அரசனுக்குப் பணிபுரிவதற் காகவே அமர்த்தப்பட்டனர்.

**பொருளாதார நிலை**

**வேளாண்மை:** இது முக்கியத் தொழிலாக இருந்தது. ஏரி, குளங்கள், கால்வாய்கள் வெட்டப்பட்டுக் காடு திருத்திக் கழனி யாக்கப்பட்டு வேளாண் தொழில் சிறப்புப் பெற்றிருந்தது.

முதன்முதலில் காவிரி நதிக்குக் குறுக்கே அணையைக் கட்டி யவர்கள் சோழர்கள். திருவரங்கத் தீவில் சிறப்பு வாய்ந்த பெரிய அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது.

**தொழில்கள் :** நெசவுத் தொழிலும், சாயமேற்றலும், கல்லை வெட்டுதலும், தங்க உலோக வேலைகளும் அன்று சிறப்பாக நடை பெற்று வந்தன. பல்வகை உலோகங்களாலான பாத்திரங்கள், சிலைகள் மிகத் திறம்படச் செய்யப்பட்டன. பொருள்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் பண்டமாற்று முறையும் நாணயங் களும் பயன்படுத்தப்பட்டன. அராபியர்களுடன் குதிரை வாணிகம் நடத்தினர். இங்கிருந்து துணிகள், வாசனைப் பொருள்கள், அணிகலன்கள், சூடம், தந்தம், சந்தனக்கட்டை போன்ற பல்வேறு பொருள்கள் பாரசீகம், சீனம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

**வாணிபம் :** உள்நாட்டு வணிகக்குழு ஒவ்வொரு நகரிலும் தனது கிளையை நிறுவித் திறம்பட உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத்தை நடத்தி வந்தது. இதற்கு அரசின் உதவியும் கிட்டியது. இது மிகவும் செல்வம் படைத்ததாக இருந்தது.

**அயல்நாட்டுத் தொடர்பு :** இக்காலத்தில் சீனா, அரேபியா, கிழக்கு இந்தியத் தீவுகள் முதலியவற்றுடன் தமிழகத்திற்குத் தொடர்பு இருந்தது. சோழவேந்தர்கள் சீனாவுக்குத் தூதுவர்களை அனுப்பினர். வாணிப உறவு இந்நாடுகளுடன் அதிக அளவில் வைத்துக்கொள்ளப்பட்டது. இந்துக் கோயில்கள் சீனாவில் எழுப்பப்பட்டன. தமிழ்ப் பண்பாடு சீனா, பார்மோசா, கடாரம், சயாம், இலங்கை ஆகிய நாடுகளில் பரவியது.

**சமயம்**

இந்து சமயத்தின் இருபெரும் பிரிவுகளான சைவமும் வைணவமும் இக்காலத்தில் தழைத்தோங்கின.

**வைணவம்:** நாலாயிர திவ்விய பிரபந்தம் என்னும் வைணவ சமய நூலைத் தொகுத்துக் கொடுத்த நாதமுனி சோழர்காலத்தில் வாழ்ந்தவர். அவர் உருவாக்கிய வைணவப் பிரிவை ஸ்ரீவைணவம் என அழைப்பர்.

இக்காலத்தில் யமுனாசாரியார் என்ற சிறந்த வைணவர், ஆளவந்தார் என்ற பட்டத்தைப் பெற்று விசிட்டாத்துவிதக் கொள்கையை வகுத்தார்.

யமுனாசாரியாரை அடுத்து இராமானுஜர் வைணவத்தில் சிறப்புற்று விளங்கினார். இவர் திருவரங்கத்தில் வாழ்ந்து சமயத் தொண்டு புரிந்தார். இவரைப்பற்றிய வேறு குறிப்புகள் பக்தி இயக்கத்தில் தரப்பட்டுள்ளன.

**சைவம் :** சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவ சமயம். சோழர் காலத்தில் சைவ சமயம் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது.

சிவலிங்கத்தை வழிபட்ட வீர சைவ மரபினரும் இக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். சோழ மன்னர்கள் சைவ சமயத்தைப் பின்பற்றி அதனை ஆதரித்து வந்தனர். நம்பியாண்டார் நம்பி பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தார். சைவசித்தாந்தத்தை மெய்கண்டார், அருள்நந்தி, மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய சந்தானாசாரியர்கள் முறைப்படுத்தி வழங்கினர். சைவ சமய குரவர்களான அப்பர் (திருநாவுக்கரசர்), சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற பெரியார்கள் துவக்கிய வழியில் சமயப் பெரியார்கள் சைவசித்தாந்தத்தை உருவாக்கினார்கள். சித்தாந்த சைவம் நீங்கலாகக் கபாலிகர்கள், களாமுகர்கள் போன்ற சிவ பக்தர்களும் இருந்தனர்.

சைவ, வைணவப் பூசல்களும் இருந்து வந்தன. ஆயினும் பொதுவாகச் சமயங்களுக்கிடையில் ஒற்றுமை நிலவிவந்தது.

**வழிபாடு :** சைவ, வைணவக் கோயில்களில் தேவருக்குத் தனியிடம் ஒதுக்கி அம்மன் வழிபாடு நடத்தப்பட்டு வந்தது. அம்மனுக்குக் கோயில்களும் கட்டப்பட்டன. வினாயக, நவக்கிரக, சூரிய வழிபாடுகளும் இருந்ததுடன் சூரிய பகவானுக்கும் கோயில் கள் எழுப்பப்பட்டன.

**கோயில்களும் விழாக்களும் :** இக்காலத்தில் எண்ணற்ற கோயில்கள் எழுப்பப்பட்டன. வேதியர்கள் வேதம் ஓதுவதிலும்,

வேள்விகள் நடத்துவதிலும் ஈடுபட்டிருந்தனர். ஓதுவார்கள் ஆலயங்களில் தேவார, திருவாசகப் பாடல்களை ஓதினர். மடங்கள் கட்டப்பட்டன. ஆலயங்கட்குப் பொற்கூரைகள் வேயப் பட்டன. துறவிகள் மதிக்கப்பெற்றனர். சைவ மடங்கள் நாடெங்கும் தோன்றித் தமிழ் இலக்கணம், சமயம், தத்துவம், இலக்கியம் இவற்றைப் போதித்து வந்தன.

சமணமும் பௌத்தமும் : இவ்விரு சமயங்களும் இக்காலத்தில் செல்வாக்கை இழந்தன. ஆயினும் நாகை, பௌத்த சமயத்தின் இருக்கையாக நீடித்தது. பௌத்தம் விரைந்து அழிந்தது. சமணம் இக்காலத்தில் தனது செல்வாக்கை ஓரளவு பெற்றிருந் தது. இவர்கள் சமயத் தொண்டுடன் தமிழுக்குந் தொண்டாற் றினர்.

**கல்வியும் இலக்கியமும்**

கல்வியளித்தல் கல்வி நிலையங்கள் வழியாகவும், பொது நிகழ்ச்சிகள் வழியாகவும் நடைபெற்றது. வைதிகர்கள் மட்டும் வேதக்கல்வி நிலையங்கள்மூலம் கல்வி புகட்டினர். வேதங்கள், புராணங்கள், வேதாந்தங்கள், சூத்திரங்கள், சமயதத்துவங்கள், மருத்துவம், இலக்கணம் போன்ற பிற பாடங்கள் சமஸ்கிருதத்தில் கற்பிக்கப்பட்டன.

ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் நூற்றுக்கணக்கான மாண வர்களும், ஆசிரியர்களும் இருந்தனர். வேதம் பயிலும் மாணவர் களுக்கு இலவசக் கல்வி, உண்டி, உறையுள் மூன்றும் அளிக்கப் பட்டன.

இளைஞர்களும், முதியோர்களும் கல்வி பயின்றனர். கல்விக் கூடங்களில் நல்ல ஒழுக்க முறை நிலவியது. ஆசிரியர், மாண வரிடையே நல்லுறவு இருந்து வந்தது. ஆசிரியர்களின் தகுதிக் கேற்ப ஊதியம் அளிக்கப்பட்டது.

**இலக்கிய வளர்ச்சி:** இக்காலத்திய இலக்கியப் பூஞ்சோலை யில் பரணிகள், பிள்ளைத்தமிழ்கள், கோவைகள், உலாக்கள் போன்ற எண்ணற்ற மலர்கள் பூத்திருந்தன. இலக்கணங்களும் நிகண்டுகளும் எழுந்தன. உரைநடை இலக்கியமும் தோன்றியது. சீவகசிந்தாமணியைப் பாடிய திருத்தக்கதேவர், பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார், இராமாயணத்தை இயற்றிய கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி போன்றோர் இக்காலத்தில் வாழ்ந்து தமிழுக்குப் பெருந் தொண்டாற்றினர். புகழேந்தியின்

ளவெண்பா, கல்லாடனார் தீட்டிய கல்லாடம் போன்ற நூல்கள் மிகச் சிறப்புடையன. ஆத்திசூடி பாடிய ஔவையார், கலிங் கத்துப்பரணி பாடிய ஜெயங்கொண்டார் போன்றோரும் இக் காலத்தில் வாழ்ந்து சிறப்புச் செய்தனர். சைவத் திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையில் சில பாடல்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டன. வளையாபதி, குண்டலகேசி, நீலகேசி, உமாபதி சிவாசாரியாருடைய சிவப்பிரகாசம், திருவருட்பயன் போன்ற நூல்களும் இக்காலத்தில் இயற்றப்பட்டன. தொல் காப்பியத்துக்கு உரை எழுதிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் போன்றோரும் சிலப்பதிகாரத்துக்கு உரைகண்ட அடியார்க்கு நல்லாரும் திருக்குறளுக்கும் பரிபாடலுக்கும் உரை கண்ட பரிமேலழகரும் இக்காலத்தவர்களே. குலோத்துங்கன் கோவை, தஞ்சைவாணன் கோவை ஆகிய நூல்களும் இக் காலத்தில் படைக்கப்பட்டவைகளே.

## அறிவியல்

வானவியல், மருத்துவம் ஆகிய அறிவியல் துறைகளில் சோழர்கால மக்கள் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர். விண்மீன்களைக் கொண்டு நாள்களுக்குப் பெயரிட்டனர். இருபத்து நான்கு விண்மீன்களை வகுத்து அளித்தனர். சூரிய—சந்திர கிரகணங்களைப்பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர். நாடெங்கும் இலவச மருத்துவமனைகள் அமைந்திருந்தன. நாடித்துடிப்பைக் கொண்டு நோய்களை அறியும் திறனும் தமிழ் மருத்துவர் பெற்றிருந்தனர். மூலிகைகளால் மருந்துகளைத் தயாரித்தனர்.

## கலை வளர்ச்சி

கட்டடக்கலை: இக்காலக் கோயில்களை அவற்றின் அமைப் பினைக் கொண்டு முற்காலத்தவை, இடைக்காலத்தவை, பிற் காலத்தவை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முற்காலத்துக் கோயில்கள் அளவில் சிறியவை. இவை பல்லவபாணியில் அமைந்தவை. நார்த்தா மலையின் அருகில் உள்ள விசயாலயக் கோயில் இவ்வகையைச் சார்ந்தது. இக் கோயில்கள் எளிமையும் அழகும் நிறைந்தவை. சதுரவடிவக் கருவறை முன் பக்கம் ஒரு கோபுரமும், கோயிலைச் சுற்றித் திருமதிலும் உள்ளன. இக்காலத்தின் இறுதிப் பகுதியில் தோன்றியவற்றுள் கும்பகோணத்திலுள்ள நாகேஸ்வரர் ஆலயம், திண்டிவனத்திலுள்ள திருத்திண்டீஸ்வரர் ஆலயம் முக்கிய மானவை ஆகும். இடைக்காலத்தில் (கி.பி.985—1070) எழுப்பப் பட்ட கோயில்களில் இராஜராஜேஸ்வரர் ஆலயமும் (தஞ்சைப்

பெரிய கோவில்) கங்கை கொண்ட சோழபுர ஆலயமும் மிகச் சிறந்தவை.

இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிப் பெருமை அடைந்தான். இதை ஏழாண்டுகளில் கட்டி முடித்தான். இது ஐந்நூறடி நீளமும், இருநூறடி அகலமும் உடையது. தாய்க் கோயிலைச் சுற்றிப் பல கோயில்கள் உள்ளன. இக்கோயிலின் உச்சியில் 25 அடி சதுரத்தில் 80 டன் எடையுடைய ஒற்றைக் கல் அக்காலத்தில் அமைக்கப்பட்டது. இதுபோன்றே கங்கை கொண்ட சோழபுரத்திலும் ஒரு கோயில் எழுப்பப்பெற்றுள்ளது. இவை இரண்டும் சோழர்களின் பொறியியல் ஆற்றலை மிகவும் புலப்படுத்துகின்றன.

**அரண்மனைகள் :** ஆடம்பர வாழ்வுக்கு எடுத்துக்காட்டாகத் தஞ்சை, சிதம்பரம், காஞ்சி போன்ற இடங்களில் அரண்மனைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றைச் சுற்றி மதிற்சுவர்களும், அகழிகளும், மன்னர் கொலுவீற்றிருக்கச் சித்திரக் கூடங்களும், அரசியருக்கு அந்தப்புரங்களும், விளையாட்டு அரங்கங்களும் அமைந்திருந்தன.

**சிற்பக்கலை:** சோழர்காலச் சிற்பக்கலைச் சின்னங்கள் இலண்டன், பாரிசு பொருட்காட்சிச்சாலைகளில் இடம் பெற்றுத் தமிழகச் சிற்பக்கலையின் சிறப்பினைப் பறை சாற்றுகின்றன. வெண்கலம், செம்பு, தங்கம், வெள்ளி, கருங்கல் ஆகியவற்றில் சிற்பிகள் தங்களது திறனை வெளிப்படுத்தி, மிகச் சிறந்த சிற்பங்களைச் சமைத்தனர். சிதம்பரத்தில் காணப்படும் நடராஜ சிற்பம், கோரக்கநாதர் ஆலயத்திலுள்ள தட்சிணாமூர்த்தி படிமம், மற்றும் திருமாலின் திருவுருவங்கள் வியத்தகு சிற்பக் கலை நயத்தை வெளிப்படுத்துகின்றன.

**ஓவியக்கலை :** தஞ்சை, திருமய்யம், மாமண்டூர், காஞ்சி, நார்த்தாமலை, மலையடிப்பட்டி, சித்தன்னவாசல் ஆகிய இடங்களிலும் தஞ்சைப் பெரிய கோயிலிலும் அற்புதமான ஓவியங்களை இன்றும் நாம் காணலாம். சோழர்காலத்து நடையுடை பாவனைகள், அணிகலன்கள், தலை அலங்காரம், சமயம், வாழ்க்கை முறை இவற்றை இவ் வோவியங்கள் பறை சாற்றுகின்றன.

**இசை :** நாடகங்கள், கூத்துகள் நடைபெறும்போது இசை இசைக்கப்பட்டது. தோற்கருவிகள், துளைக்கருவிகள் நரம்புக் கருவிகள் போன்றவை பயன்படுத்தப்பட்டன. யாழும்

வீணையும் வழக்கில் இருந்தன. 23 பண்கள் வகுக்கப்பட்டிருந்தன.

நடனம் : தேவதாசிகள் கோயில்களில் நடனமாதர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் திருவிழாக்களில் திருமேனி ஊர்லவத்தின்போது நடனமாடினர். மற்றும் ஆலய மண்டபத்திலும் ஆடினர்.

நாடகம் : நாடக அரங்கம் இருந்ததாகத் திருவிடைமருதூர்க் கல்வெட்டு தெளிவுபடுத்துகின்றது. இந்நாடக அரங்குகள் பலவகை அமைப்புகளைப் பெற்றிருந்தன. திருவிழாக் காலங்களில் இராஜ ராஜேஸ்வரன், இராஜ இராஜ விஜயம் முதலிய நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன. குறிப்பிட்ட தகுதிகளைப் பெற்றிருந்தோர் மட்டுமே நடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

முடிவு

தமிழக வரலாற்றில் சோழர் காலத்தில் இந்து சமயம், கட்டடச் சிற்பக்கலைகள், இலக்கிய வளர்ச்சி இவை பெற்றிருந்த ஏற்றத்தை வேறு காலத்தில் நாம் காணமுடியாது.

## இயல் 8

# 8.1. இந்தியப் பண்பாட்டில் இஸ்லாத்தின் தாக்கம்

### இஸ்லாம்

'இஸ்லாம்' என்பது அடைமொழியாகக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு. 'இப்பண்பினைப் பெற்றிருப்போன் எந்த இனத்தை, சமூகத்தை, நாட்டை, குலமரபைச் சார்ந்திருந்தாலும் அவன் ஒரு முஸ்லிம்' என அபுல் அலா-மௌடுடி கூறுகிறார். குரான் கூற்றுப்படி மக்களிடையே எல்லாக் காலங்களிலும் நல்ல, நேர்மையான மக்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களிடம் 'இஸ்லாம்' என்பதற்குரிய பண்புகள் இருந்திருக்கின்றன. அவ்வாறு வாழ்ந்தவர்களும் வாழ்பவர்களும் முஸ்லிம்கள்.

ஆக இஸ்லாம் என்பது யாது? என்ற வினா தோன்றுகிறது. இஸ்லாம் என்பது ஓர் அராபியச் சொல். அது பணிதல், சரணடைதல், கீழ்ப்படிதல் என்ற மூலக்கூறுகளை உய்த்துணர வைக்கின்றது. 'இஸ்லாம்' என்ற சொல்லின் நேர்ப்பொருள் 'அமைதி' என்பதாகும். ஒருவன் உடலையும் உள்ளத்தையும் அல்லாவிடம் பணிவாக ஒப்படைக்கும்போழ்து அமைதியைப் பெறுகிறான் எனப் பொருள்படும். பிரபஞ்சத் தலைவனான அல்லாவின் விதிமுறைக்கேற்பப் பணிந்து செயல்படுபவர்கள் முஸ்லிம்கள்.

முகலாயர்களின் ஆட்சிக் காலத்தில் இஸ்லாம் இந்தியாவில் நுழைந்தது. அவர்களும் தங்களுடைய சமயத்தை இம்மண்ணில் பரப்ப எடுத்த முயற்சிகள் வீண்போகவில்லை. இன்று இஸ்லாத்தைத் தழுவி வாழ்வோர் நாடெங்கும் காணப்படுகின்றனர். இச்சமயத்தின் தாக்கம் இந்திய மண்ணில் சில விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியப் பண்பாடு, பிற பண்பாட்டுக் கூறுகளிலுள்ள நல்லனவற்றை எடுத்துத் தன்வயமாக்கிக் கொண்டதை முன்னரே கண்டுள்ளோம். இந்து சமயம், இஸ்லாத்தின் கோட்பாடுகளை

முழுமையாக ஈர்த்துக் கொள்ளவில்லை. இஸ்லாமும் இந்து சமயத்தை முழுமையாகத் தன்பக்கம் ஈர்த்துக்கொள்ள முடிய வில்லை. ஏனெனில் இவை ஒன்றிற் கொன்று மாறுபட்ட கருத்து களை உடையவை.

இந்நாட்டின்மேல் படையெடுத்து வந்து இங்குத் தங்கிய கிரேக்கர்கள், மங்கோலியர்கள், பார்த்தியர்கள், சித்தியக்குடியினர் அனைவரும் இந்துக்களாக மாறிவிட்டனர். ஆனால் முஸ்லிம் களைப் பொறுத்தவரை அது நடைபெறவில்லை. அதற்குக் காரணங்கள் பலப்பல.

(1) இஸ்லாம் கடுமையாக ஒரு கடவுள் கோட்பாட்டைப் பின்பற்றுவது. ஆனால் இந்து சமயம் பல கடவுள் கோட்பாட்டை யுடையது.

(2) இஸ்லாம், கடவுளின் அவதாரக் கோட்பாட்டை ஏற்ப தில்லை. அவர்கள் கூற்றுப்படி கடவுள் முற்றிலும் தூய்மையும் நேர்மையும் வாய்ந்தவர். அவர் தூய்மையற்ற, நேர்மையற்ற, பாவம் நிறைந்த இவ்வுலகில் அவதாரமாகத் தோன்றமாட்டார்.

(3) முஸ்லிம்கள், தங்களுடைய கோட்பாடுகளையும் கொள் கைகளையும் இந்துக்களின் கோட்பாடுகளுடன் கலக்காதபடி மிகவும் கவனமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

(4) முஸ்லிம்கள் மெக்காவின் பக்கமின்றி, வேறு பக்கம் திரும்பவில்லை.

(5) குரானின் கோட்பாடுகளைக் கடுமையாகப் பின் பற்றினர். ‘பல கடவுள் கோட்பாட்டினர் தூய்மையற்றவர்கள், ஆகவே அவர்களை நெருங்க விடாதே’ எனக் கூறினர்.

(6) அக்பர் காலத்திற்கு நாம் வரும்வரை, அவர்கள் இராணுவ முகாமிட்டு வாழ்வதுபோன்று வாழ்ந்ததால் எளிதில் எவராலும் ஈர்க்கப்படவில்லை.

### அராபிய, ஆப்கானிய, முகலாயப் படையெடுப்புகள்

இவர்கள் தென்னிந்திய, வடஇந்திய வணிகத் தொடர்பைக் கட்டுப்படுத்தினர். இவ்வணிகத்தை நட்புறவுடனும் அமைதி யுடனும் செய்தனர், ‘இஸ்லாமியச் செல்வாக்கின் விளைவாக,

இந்தியாவில் பக்தி இயக்கம் தோன்றத் தலைப்பட்டது ' என பேசட் கூறுகிறார்.

கி. பி. 771-ல் இந்துக் குழு ஒன்று பாக்தாத்திற்குச் சென்றது. அதில் ஒருவர் 'சித்தாந்தத்தின்' ஒரு படிவத்தை மான்சூர் இஸ்லாமிய சமயத்துறை அதிகாரியிடம் கொடுத்தார். அராபிய அறிஞர்கள், இந்துக்கள் பெற்றிருந்த வானநூல், கணித அறிவைக் கண்டு பெரிதும் பாராட்டினர். பின்னர் ஏற்பட்ட நெருங்கிய தொடர்புகளால் பல சமஸ்கிருத நூல்கள் அராபிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

முகமது கஜினிக்கு உருவத்திருமேனிகளை உடைக்கும் இயல்பிருந்தாலும், தமது தலைநகரில் இலக்கியக் கழகம் ஒன்றை நிறுவி இருந்தார். அவரைப் பின்தொடர்ந்து இந்தியா வந்த அல்பரூனி இந்திய மக்களின் வாழ்வை, பண்பாட்டைப் பற்றிக் கொடுத்துள்ள குறிப்புகள் இந்தியாவை ஆப்கானிஸ்தானம், பாரசீகம் இவைகளுக்கு அப்பாலும் அறிமுகப்படுத்தியது. மத்திய கிழக்குப் பகுதிக்கும் இந்தியாவிற்கும் தொடர்பு ஏற்பட்டது. முகமது கஜினி, தமது தலைநகரில் கட்டடங்களை எழுப்ப, இந்தியாவிலிருந்து பொறியியல் வல்லுநர்களையும், கொற்றர்களையும் அழைத்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது. கஜினியின் நகரம், இந்திய நகரம் போன்று காட்சியளித்ததாகத் தெரியவருகிறது.

டில்லி சுல்தான்களில் பிரோஸ் ஷா குறிப்பிடத்தக்கவர். அவருக்கு அராபிய, பாரசீக மொழிகளிலும் இலக்கியங்களிலும் இருந்த நாட்டம் சமஸ்கிருத மொழியிலும் இலக்கியத்திலும்கூட இருந்தது. அவர், பல சமஸ்கிருத நூல்களைப் பாரசீகத்தில் மொழிபெயர்க்க உத்திரவிட்டார். இந்துக்களும் இஸ்லாத்திலுள்ள சிறந்தனவற்றை எடுத்துக்கொள்ள முன்வந்தனர்.

துருக்கிய முஸ்லிம்கள் இந்தியாவைத் தங்கள் நாடெனவே கருதினர். அமிர்குசுரு, டில்லியைப் பண்பாட்டின் மையமென்றும் இரண்டாவது சொர்க்கம் என்றும் புகழ்ந்தான். இந்துக்கள், துருக்கியப் பண்பாட்டின் சீரிய கூறுகளையும் சிறந்த பொது வாழ்வு முறையையும் எடுத்துக் கொண்டனர்; முஸ்லிம்கள், இந்துக்களின் வாழ்வு நெறியையும், வழக்கங்களையும் பின்பற்றினர். இவை அனைத்தையும் மராத்திய, இராஜபுதன, சீக்கிய இனத்தவரிடையே காணமுடிந்தது.

அராபியர்கள் சிந்துக்கு அப்பால் செல்ல விரும்பவில்லை. அவர்கள், இந்துக்களுடன் சகிப்புத் தன்மையோடு வாழ்ந்தனர். இந்துக்கள் ஜெசியா என்ற வரியைச் செலுத்திவிட்டுச் சுதந்திர மாக வழிபடலாம். இந்துக்கள் பெருமளவில் நிருவாகப் பணிகட்கு நியமிக்கப்பட்டனர். அராபிய நாகரிகத்தின்மேல் இந்து சமயத் தாக்கமே அதிகமாக இருந்தது. அராபியப் படையெடுப்பு, இந்துப் பண்பாடு அராபியப் பேரரசில் பரவ வழிவகுத்தது. இந்துக் களின் எண்குறியீட்டு முறை, வானநூல், மருத்துவம், கணிதம், குறிக்கணக்கியல் (algebra) போன்றவை அராபியர் மூலமாக ஐரோப்பா சென்றது. சரக்க சம்ஹிதை, பஞ்சதந்திரம் போன்றவை முதலில் அராபிய மொழியாக்கம் செய்யப்பட்டு, பின்னர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன.

முகமது கஜினி (ஆப்கானியர்) இந்தியாவின்மீது 17 முறைகள் படையெடுத்தார். இதனால் பல கோயில்கள் அழிக்கப்பட்டன. குறிப்பாக சோமநாதபுரத்திலும் மதுராவிலு முள்ள ஆலயங்களிலிருந்து பொன்னையும், வெள்ளியையும், மாணிக்கத்தையும், மரகதத்தையும் எடுத்துச் சென்றார்.

ஆப்கானியர்கள் ஆட்சி முகலாயர்களால் 1526-ல் தூக்கி யெறியப்பட்டது. முகலாயர்கள், துருக்கிய முஸ்லிம்கள், இம்மரபில், அக்பரைத் தவிர அனைவரும் இந்துக்களைச் சரியாக நடத்த வில்லை. இதன் விளைவாக அவர்கட்கு இராஜபுத்திர, மகாராஷ்டிர, சீக்கிய இனத்தவர்களின் எதிர்ப்புத் தோன்றியது. முகலாயப் பேரரசு இறுதியில் பலவீனப்பட்டது.

### முஸ்லிம் ஆட்சியாளர்களின்கீழ் அரசு

முஸ்லிம் அரசு ஒரு சமயக் கோட்பாட்டினை அடிப்படை யாகக் கொண்டு இயங்கி வந்தது. அரசன் குரானில் கூறப்பட்ட கருத்துகளுக்கு ஏற்ப ஆட்சி புரிந்து வந்தான். அத்துடன் நில்லாமல், குரானின் பொன் மொழிகளையும் இஸ்லாமிய சமயத் தினையும் பரப்பினான். அரசனே நீதிக்குத் தலைவன். குரான் விதிகட்குக் கட்டுண்டு, அரசனே சமயப் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கும் தகுதி பெற்றிருந்தான். நிருவாகத்தின் அச்சாணியாக அரசன் அமைந்திருந்தான். அவன், தனது இராணுவத்தால் பலமும் மேலாண்மைத் திறனும் உடை யோனாகத் திகழ்ந்தான். அரசர்கள் அதிகாலையில் எழுந்து,

இறைவழிபாடு செய்த பின்னரேதான், அரசு அலுவல்களைக் கவனிப்பார்கள். ஒரு பொதுச் சபையில்தான் ஆட்சிபற்றிய விவாதம் நடந்தது. அவனுக்கு ஓய்வில்லை. மக்களின் விண்ணப்பங்களையும் முறையீடுகளையும் கேட்டு அரசனே நீதி வழங்கினான்.

முகலாய அரசவை பொலிவோடும், ஆடம்பரத்துடனும் அற்புதக் கட்டட, சிற்ப, ஓவிய வேலைப்பாடுகளுடன் அமையப் பெற்றிருந்தது.

**அமைச்சர்களும் அலுவலர்களும்**

முஸ்லிம் அரசன், முடியரசனாக முழுமையாக விளங்கினாலும், அவனால் அமைச்சர்கள், அலுவலர்களின் உதவியும் ஆலோசனையுமின்றி ஆட்சியை நடத்த முடியவில்லை. முகலாயர் ஆட்சிக் காலத்தில் வக்கீல் என்பவர் முதலமைச்சர்; நிருவாக அமைப்பின் தலைவன், எவரையும் நீக்கவும் நியமிக்கவும் அவருக்கு அதிகாரமுண்டு. வசீர் அல்லது திவான் எனப்படுபவர் நிதியமைச்சர். மீர்-பக்ஸி என்பவர் இராணுவ ஊதிய. கணக்கு அலுவலர். சத்ரி-சுதார் என்பவர் சமயத் தொடர்பான தலைமை அலுவலர். காவல் துறைத் தலைமை அலுவலர் கொத்தவால் என அழைக்கப்பட்டார்.

**மாநில உள்ளாட்சி முறைகள்**

நிருவாகத்தின் அலகு (unit) கிராமமாகும். அங்கு இந்துக்களே அதிக அளவில் வாழ்ந்துவந்தனர். பழைய பஞ்சாயத்து முறை இருந்தது. கிராமத்தலைவனும் கணக்கனும் இருந்தனர்; இதில் மாற்றம் ஏதுமில்லை. பல கிராமங்களை உள்ளடக்கிய தொகுதி பர்கானா என அழைக்கப்பட்டது. பல பர்கானாக்களடங்கிய ஒன்று சர்க்கார் அல்லது மாவட்டம் எனப்பட்டது. மாநிலம் சுபா எனப்பட்டது. அதன் ஆளுநர் சுபேதார் என அழைக்கப் பட்டார். அவர், மத்திய அரசைப் போன்று சிறிய அளவில் மாநில அரசை அமைத்தார்.

வருவாய்த் துறை: வரிவிதிப்பு முறையில் முஸ்லிம்களும் இந்துக்களும் வெவ்வேறு முறையில் நடத்தப்பட்டனர். முஸ்லிம்கள் சகத் என்ற சமய வரியினையும் இந்துக்கள் ஜெசியா என்ற வரியினையும் செலுத்த வேண்டும். இது தவிர, இந்துக்கள்மேல் வீட்டுவரி, நீர்வரி, கால்நடை மேய்ச்சல் வரி எனப் பல்வேறு வரிகள் சுமத்தப்பட்டன. நிலவரி, விளைச்சலில் மூன்றிலொரு

பங்கிலிருந்து அரைப்பங்குவரை பல்வேறு முறைகளில் வசூலிக்கப் பட்டது. நிலவரியை வசூலிக்க, வரிவசூலிப்புக் குத்தகை தாரர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களை 'ஜாகிர்தார்கள்' என அழைத்தனர். சட்டப்படி வசூலிப்பதற்குமேல், வசூலிக்கத் தலைப்பட்டமையால், இது பெருங்கொடுமையாகக் கருதப்பட்டு, இம்முறை இறுதியாக நீக்கப்பட்டது. அக்பர் காலத்தில் அரசு, நேரடியாக உழுது பயிரிடுவோருடன் உறவு வைத்துக் கொண்டது. நிலங்கள் முறையாக அளக்கப்பட்டு, விளைச்சல் தொடர்பாக வருவதன் அடிப்படையிலோ நிலவளத்தைப் பொறுத்தோ வரி விதிக்கப்பட்டது. இச்சிறந்த முறையில் மக்கள் குடியானவர்கள் செலுத்தும் வரியை அறிந்திருந்தனர். முறை கேடான வரிவிதிப்பு இல்லை.

**நீதி நிருவாகம் :** சட்டம் என்பது பொதுவாக இஸ்லாமியச் சட்டமாக இருந்தது. குற்றத்திற்குரிய சட்டம், இந்து, முஸ்லிம் களுக்கு ஒன்றே; ஆனால் குற்றஇயல்சாராத வழக்குகட்கு தருமசாஸ்திர விதிகளின்படி இந்துக்களுக்குத் தீர்ப்பு வழங்கப் பட்டது. காசி - உல் - கசத் எனப்படும் தலைமை நீதிபதிக்கு, குரான் சட்ட நிபுணர்களின் உதவி கிட்டியது. அபராதம் விதித்தல், உடலுறுப்பைத் துண்டித்தல், சவுக்கடி கொடுத்தல் போன்ற தண்டனைகளைக் கொத்தவால், சுபேதார் போன்றோர் கொடுக்க உரிமையிருந்தது. ஆனால் மரணதண்டனை விதிக்க அரசனின் இசைவு தேவை.

**இராணுவம் :** டில்லி சுல்தான்களும், முகலாயப் பேரரசர் களும் நிலையான இராணுவத்தைத் தலைநகரிலே வைத் திருந்தனர். தேவைப்படும் காலத்தில் அது பலப்படுத்தப் பட்டது. அக்பர் காலத்தில் அரசு அலுவலர் எவராக இருப்பினும் குதிரைப்படையில் ஒரு தகுதி கொடுக்கப்பட்டு, அவர் போரில் கலந்து கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டார். இதை 'மன்சப்தாரி முறை' என அழைத்தனர். முகலாயர் காலத்தில் துப்பாக்கிகளும், பீரங்கிகளும் பயன்படுத்தப்பட்டன. இராணு வத்தில் ஆடம்பர வாழ்க்கையும் கட்டுப்பாடற்ற தன்மையும் வளர்ந்தன. போர் வீரர்களுக்கு முறையான பயிற்சியோ, சீருடையோ கொடுக்கப்படவில்லை.

## பொருளாதார நிலை

**வேளாண்மை :** வேளாண்மை சிறப்புற்றிருந்தது. உணவுத் தானியங்கள் அதிக அளவில் பயிரிடப்பட்டன. பொருளீட்டித்

தரும் சணல், பருத்தி, கரும்பு இவற்றை வாணிபம் செய்யும் அளவிற்குப் பயிரிடவில்லை. முகலாயர்கள் காலத்தில். போர்ச்சுகீசியர்களால் புகையிலையும் மிளகாயும் பயிரிடுவது முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. வெளிநாட்டில் பட்டிற்கு மிக்க தேவை இருப்பதை அறிந்து, இங்கு உழவர்கள் சில பகுதிகளில் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டனர்.

**தொழிற்சாலைகள், கைவினைகள், வாணிபம் :** பெரிய தொழில் நிறுவனங்கள் எனப்படுபவை அரசுக்குரிய தொழிற்பேட்டைகளாகும். இவைகளில் நூற்றுக்கணக்கான நெசவாளர்களும் கலைஞர்களும் ஈடுபட்டிருந்தனர். தனியார் தொழில்கள் குடிசைத் தொழில்களாக இருந்தன. கலைஞர்கள், குடும்ப மரபையொட்டி அல்லது சாதிக்கேற்ற—பருத்தி, கம்பளி, பட்டு நெய்தல், சீட்டித்துணி அச்சிடுதல், உலோக வேலை, கல்வெட்டல், பாத அணி தயாரித்தல், நறுமணப் பொருள்கள், சாராயங்கள், மதுவகைகள், மரத்தாலான தட்டுமுட்டுச் சாமான்கள், வெடியுப்பு போன்றவற்றைத் தயாரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு வேண்டிய கச்சாப்பொருள்களும் கருவிகளும், தரகர்களாலும் பிரபுக்களாலும் வழங்கப்பட்டன. தங்கள் முன்னோர்களைப்போன்று ஒரு தொழிற்சங்க அமைப்பை அவர்கள் பெற்றிருக்கவில்லை. அவர்கள் பெரும்பாலும் குறைந்த ஊதியத்திற்கே உழைத்தனர். அவர்கள் பல்வேறு வரிகளைக் கட்டவேண்டும். வருவாய்த்துறை அதிகாரிகள் சட்டத்திற்குப் புறம்பான வரிகளை வேறு வசூலித்தனர். முகலாயர்கள் ஆட்சிக் காலத்தில், பருத்தித் துணிகள்(Cotton textiles) உற்பத்தி செய்வது முக்கியத் தொழிலாக இருந்தது. படான், பருஹான்பூர், ஜென்பூர், காசி போன்ற இடங்கள் இத்தொழிலில் சிறப்புற்றுவிளங்கின. டாக்கா மாவட்டம் மெல்லிய மஸ்லின் துணிகட்குப் பெயர் பெற்றிருந்தது. காஷ்மீரத்திலும், பஞ்சாபிலும் கம்பளியிலிருந்தும் உரோமத்திலிருந்தும் சமுக்காளங்களும் போர்வைகளும் தயாரிக்கப்பட்டன. இப்பொருள்கட்கு உள்நாட்டுச் சந்தை இல்லை. கோதுமை, நெய்பொருள்கள், அபின், சணல், சுக்கு, சர்க்கரை, வெடியுப்பு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. நெய்பொருள்கள் அரேபியா, கிழக்கு ஆப்பிரிக்கா, எகிப்து, ஐரோப்பா, பர்மா, இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இதற்குப் பதிலாக வணிகர்கள் பொற்கட்டி, வெள்ளிக்கட்டி, மதுவகைகள், வெல்வெட் துணிகள், சித்திரவேலைப்பாடமைந்த துணிவகைகள், பாரசீகக்

கம்பளங்கள்; அராபியக் குதிரைகள், சீனப் பீங்கான் பொருள்கள், ஆப்பிரிக்க அடிமைகள் இவற்றைப் பெற்றனர். முக்கியத் துறை முகங்கள் சூரத், கோவா, கள்ளிக்கோட்டை, கொச்சின், மசூலிப் பட்டினம், நாகப்பட்டினம் போன்றவைகளாகும்.

**இந்து - முஸ்லிம் பண்பாடுகளின் கூட்டிணைப்பு**

இரண்டு பண்பாடுகளுக்குள் பின்னிய செயல் விளைவுகள் ஏற்பட்டன.

1. முஸ்லிம்கள், திறமையான, நிலையான ஓர் அரசை இப் பரந்த பாரதத்தில் நிறுவ முடியவில்லை. அரசு அவர்களிடம் இருந்தபோதிலும், இந்நாட்டின் பொருளாதாரம் இந்துக் களிடமே இருந்தது. ஆகவே, முஸ்லிம்கள், இந்துக்களின் நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் பெற்று அமைதியை நிலைநாட்ட விரும்பினர். முஸ்லிம்களிடையே, திறமைவாய்ந்த நிருவாகிகள், இராஜ தந்திரிகள் இல்லை; மேலும் அவர்கள் குடியானவர்களாகவோ, வணிக ஆற்றல் நிரம்பியவர்களாகவோ இல்லை. இந்துக்களிடமே தொழில்களும் வேளாண்மையும் இருந்தன. பல்வேறு துறைகளில் எழுத்தர்களும், வரி வசூலிப் போரும் இந்துக்களாக இருந்தனர். இந்துக்கள், அவர்களுக்கு மாடமாளிகைகளையும், மசூதிகளையும் கட்டிக் கொடுத்தனர். நீதி நிருவாகம் செம்மையாக விளங்க, முஸ்லிம் நீதிபதிகளுக்கு, இந்துக்கள் நல்ல ஆலோசகர்களாக விளங்கினார்கள். ஆகவே இந்துக்களின் நல்லுறவு அவர்களுக்கு இன்றியமையாததாகக் கருதப்பட்டது.

2. குருதியாற்றை ஓடச்செய்து, கொடுமைகள் நிகழ்த்திய பின்னர் சுல்தான்கள் அவற்றினை நிறுத்தி அமைதி காக்க நாட்டம் செலுத்தினர். அன்றைய சூழல் அந்நிலையை அவர் களிடம் உருவாக்கியது.

3. மத்திய அரசின் பலவீனத்தால், மாநிலங்களில் பல சுதந்தர அரசுகள் தோன்றின. முஸ்லிம் இனத்தவர் தங்களுக்குள் போரிட்டுக்கொண்டனர்.

4. இஸ்லாத்தைத் தழுவிய இந்துக்கள், தங்களுடைய பழக்க வழக்கங்களை விட்டுவிடாது உறுதியாகக் கடைப்பிடித்தனர். இதன்மூலம் இந்துப் பண்பாடு முஸ்லிம் சமுதாயத்தில் பரவியது.

5. இந்துக்களும், தங்களுடைய முஸ்லிம் எஜமானர்களை எதிர்த்துப் போரிடுவதில் பயனில்லையெனக் கருதி, அவர்களுடைய ஆட்சியை ஒப்புக்கொண்டனர். இந்துக்கள், முஸ்லிம்களுடன் சமரச நோக்குடனும் சகிப்புத் தன்மையுடனும் பழகினர்.

6. இந்து-முஸ்லிம் இருபிரிவினரிடையே இருந்த அறிஞர்கள், ஒருவரையொருவர் புரிந்துகொள்வதன் பயனை உணர்ந்திருந்தனர். முஸ்லிம் அறிஞர்களும், ஞானிகளும் இந்து சமய இலக்கியங்களைக் கற்றனர், முன்பைவிட இந்துக்களுடன் நன்முறையில் பழகத் தலைப்பட்டனர். இந்துக்களும் குரானைப் படிக்க முனைந்தனர். இரு சாராருக்கும் ஏற்புடைய நிலை உள்ளது என்பதைப் பின்னர் உணர்ந்தனர்.

7. ஒருசில முஸ்லிம் அரசர்களைத் தவிர, பெரும்பாலானோர் இந்து சமயத்தைச் சகித்துக் கொண்டனர்; இரு சமூகங்களைச் சார்ந்தோரின் கலைகளை, இலக்கியங்களை ஊக்குவித்தனர்; இந்து சமயப் பழக்கங்களைக் கைக்கொண்டனர்.

8. காலப்போக்கில் இரு சாராரிடையே இசைவாகச் செயல்படும் இயல்பு, சமரச நோக்கு, ஒத்துழைப்பு, சகிப்புத் தன்மை போன்ற உயர்ந்த பண்புகள் தோன்றி, இரு பண்பாடுகளுக்கிடையே கூட்டிணைப்பு ஏற்பட்டது.

### இஸ்லாத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட விளைவுகள்

**இந்து சமயம் :** பிராமணர்களின் ஆதிக்கத்தை ஒழித்து, இந்து சமயம் அனுபவித்துவந்த அரச ஆதரவையும் இழக்கச் செய்தது. இந்து வளர்ச்சி தடைப்பட்டதுடன், இஸ்லாம் நாடு முழுவதும் பரவியது. இந்தியாவில், இஸ்லாத்தை அறிமுகப் படுத்தி அச்சமயக் கோட்பாடுகளைப் பரப்பியது. அதன் விளைவாக இஸ்லாத்தின் சமத்துவம், அவரவர் சமயத்தில் பெருமை, சட்டமுறை போன்ற அரிய கொள்கைகள் இந்து மக்களை அந்நெறியில் செல்லத் தூண்டின. இராஜஸ்தானத்தின் இந்து அரசர்களும், விஜய நகரப் பேரரசர்களும் இந்து சமயக் காவலர்களாக விளங்கியதுடன் இந்து சமய சீலத்தையும் தருமத்தையும் நிலைநிறுத்தினர். இஸ்லாம் பரவத் தலைப்பட்டவுடன், இந்துக்களும் தங்கள் சமயத்தைப் பாதுகாக்க முனைந்தனர்.

இந்துக்கள், அந்நாளில் பெண் மகவு பிறப்பது பாவமெனக் கருதி, பிறந்தவுடன் அவற்றை அழித்தனர். இஸ்லாம் பரவ ஆரம்பித்தவுடன் இதனைக் கடுமையாகப் பின்பற்றினர். காரணம்? இந்துப் பெண்கள் முஸ்லிம் படையெடுப்பாளர்கட்கு இரையாகி விடக் கூடாதென்பதற்காகவே ஆகும். உயர் சாதி இந்து மகளிர் உடலைத் திரையிட்டு மூடிக்கொண்டு வெளியே சென்றனர். பெண்களை முஸ்லிம்கள் கடத்திச் சென்றுவிடக் கூடாதென்று, அவர்களுக்கு இந்துக்கள் சிறுவயதிலேயே மணமுடித்தனர். கணவன்பால் மனைவிக்குள்ள ஈடுபாட்டையும் அன்புறுதியையும் பறைசாற்றுவதற்காகச் சதியை ஊக்குவித்தனர்.

இந்துக்கள், முஸ்லிம்களிடமிருந்து அடிமைகளை வைத்துக் கொள்ளும் பழக்கத்தைப் பின்பற்றினர். இராஜஸ்தானத்து இந்து அரச குடும்பங்கள் பல அடிமைகளை, ஏன் பெண் அடிமைகளைக் கூடப் பணிபுரிய வைத்திருந்தனர். சூதாட்டத்தையும் குடிப்பழக்கத்தையும் அவர்களிடமிருந்து இந்துக்கள் கற்றுக்கொண்டனர். முஸ்லிம்களைப் போன்ற நடை, உடை, பாவனைகளையும் சடங்கு செய்முறைகளையும் இந்துக்கள் தழுவினர்.

இரு சாராரும் பிரிந்து நின்றதன் விளைவாக இரு நாடுகள் கொள்கை உருவாகி, பாகிஸ்தானம் தோன்றியது. இந்திய வரலாறு முழுமையும் நோக்கினால், இவ்விரு சமய மக்களும் வாழ்வின் எல்லாக் கூறுகளிலும் வேறுபட்டு நிற்பதைக் காணலாம்.

இந்து சமயச் சான்றோர் கட்டுப்பாடாக இயங்க நினைத்து இந்துக்கள்மீது கடுமையான சாதிவிதிகளையும் சமயக் கோட்பாடுகளையும் சுமத்தினர். இதன் விளைவாகக் கீழ்ச்சாதி மக்கள் இஸ்லாத்தைத் தழுவ முற்பட்டனர். இதையறிந்த சில இந்து சமயத் தலைவர்கள், இம்முறையைக் கண்டித்துச் சமத்துவ, சகோதரத்துவ முறைகட்கு ஆதரவளித்து மதம் மாறியோரைத் தங்கள் பக்கம் ஈர்த்தனர். முஸ்லிம்களின் சில ஜனநாயகக் கொள்கைகளை ஏற்று, பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்தனர்.

**சூபி இயக்கம்:** அல்பரூனி என்ற முஸ்லிம் அறிஞர்தான் முதன்முதலில் இந்து சமயத்தையும், தத்துவத்தையும் முஸ்லிம் உலகிற்கு விளக்க முயன்றார். முஸ்லிம் அநுபூதி நெறி தோன்ற இருந்த முக்கியக் காரணங்களில் ஒன்று அவர்கள் இந்து சமயத்

துடன் கொண்டிருந்த தொடர்பாகும். இந்தியாவிலேயே வாழ்ந்து போதித்துவந்த சூபி நெறியைச் சார்ந்த ஞானிகள், தத்துவஞானிகள், கவிஞர்கள் முக்கியக் கொள்கைகளில் இந்து சமயத்திற்கும் இஸ்லாத்திற்கும் வேறுபாடில்லையென அறிந்திருந்தனர். அதேபோன்று பரந்த நோக்குடைய இந்து சமய நெறியைச் சார்ந்த ஞானிகளும் பிரசாரகர்களும், பக்தி இயக்கத்தை வலியுறுத்தி 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' எனக் கூறினர்.

நாளடைவில் சமஸ்கிருத மொழியிலிருந்த தத்துவ, சோதிட, மருத்துவ, இசை தொடர்பான நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு, முஸ்லிம் அறிஞர்களால் கற்கப்பட்டன. இந்துக்கள், தங்கள் பங்கிற்கு முஸ்லிம்களுடைய நூல்களிலுள்ள கலைச்சொற்களை, வானநூலில் கண்ட கணக்கீட்டு முறையினைச் சோதிடத்தில் ஒரு வகை ஜாதகக் கணிதத்தை, மருத்துவத்தில் சில கூறுகளைத் தழுவிக் கொண்டனர். இந்துக்களும் முஸ்லிம்களும் நெருங்கி உறவாடியதன் விளைவாக உருது மொழி தோன்றியது. இது பாரசீக, இந்தி மொழியின் கலப்பாகும். இந்து சமய நூல்களில் ஒரு கடவுட் கோட்பாடு இருப்பினும், இஸ்லாம் இக்கோட்பாட்டினை மிக வலியுறுத்தியதால், இந்து சமயத் தலைவர்களும் இதே கருத்தை மக்கள்முன் வைத்தனர்.

இந்து சமயத்தில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகள் காரணமாகவும், இஸ்லாமிய சமயத்தின் தாக்கத்தின் விளைவாகவும் பக்தி இயக்கம் தோன்றிற்று. இராமானந்தர், வல்லபர், சைதன்யர், கபீர், இராமானுசர், நானக் போன்ற பலர் பக்தி இயக்கத்திற்கு மாபெருந் தொண்டாற்றியுள்ளனர். சாதியை ஒழித்து, சமத்துவத்தை நுழைத்து, தீய பழக்கவழக்கங்களைத் தீர்த்துக்கட்டி, மூடநம்பிக்கைகட்கு முடிவுகட்டி, சீர்திருந்திய சமுதாயத்தை அமைக்க அரும்பாடுபட்டனர். இவ்வியக்கம் பற்றியும், இதற்குப் பணிபுரிந்த சான்றோர்கள் குறித்தும் பக்தி இயக்கத்தின்கீழ் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

## இலக்கியம்

துருக்கிய-ஆப்கானிய அரசர்களில் சிலர் உயர்ந்த இலக்கிய வளர்ச்சிக்கு ஆதரவளித்தனர். டில்லி சுல்தான்களின் அரசவையை எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், தத்துவஞானிகள், சமய போதகர்கள், வழக்குரைஞர்கள் போன்றோர் அலங்கரித்தனர். அமிர்குசுரு, மிர் ஹஸன் டெஹ்ல்வி, பத்ருத்தீன்,

அஹமத் தானேஸரி, அமில்-உல்-முல்க், முல்டானி போன்ற சிறப்பு மிக்க இவர்களே டில்லி சுல்தான் காலத்தவர்கள். முகமது துக்ளக் காலத்திலும் இச்சிறந்த நிலையைக் காண்கின்றோம். இலக்கிய, தத்துவ நூல்கள் பல தொகுக்கப்பட்டன. பல புதிய நூல்கள் பாரசீக மொழியில் வந்தன. பல சமஸ்கிருத நூல்கள் பாரசீக மொழிக்குக் கொணரப்பட்டன. சிக்கந்தர் லோடி காலத்தில் சமஸ்கிருத மொழியிலிருந்த மருத்துவநூல், பாரசீக மொழியில் பெயர்க்கப்பட்டது. டில்லி சுல்தான்கள் இஸ்லாமிய இலக்கியங்கள் வளர மிகுந்த பொருளுதவி அளித்தனர். ஆனால் இலக்கிய, பண்பாட்டுச் செயல்முறைகள் அரசவைகளுடன் நின்றுவிட்டன.

## வட்டார மொழிகளில் இலக்கிய வளர்ச்சி

சமயச் சான்றோர்களும் சீர்திருத்த வாதிகளும் வட்டார மொழிகளில் பேசி, எழுதி போதித்தனர். இதன் விளைவாக இந்தி, மராத்தி, வங்காளி, மைதிலி, பஞ்சாபி, குருமுகி மொழிகளில் இலக்கியம் வளரத் தொடங்கியது.

**இந்தி இலக்கியம் :** கவி சாந்து பர்தாய், வித்யாதர், சாரங்கதர், நல்ஹசிங், நர்பதி நாத் போன்ற பலர் இந்தி மொழியில் பல்வேறு நூல்களை அளித்துள்ளனர்.

கோரக் நாதரும், நாமதேவரும் பஜனைப் பாடல்களையும் செய்யுள்களையும் முதன்முதலில் யாத்துக் கொடுத்தனர். ஆனால் கபீர், நானக் இவர்களின் பாடல்கள் சிறப்பு வாய்ந்தவை. இந்து-முஸ்லிம் ஒற்றுமையுணர்வு தலையோங்கி நின்றது. கபீர், நானக், தாது தயால், சுந்தர் தாசர், மாலுக் தாசர், சுந்தர் விலாசர், தரும தாசர் போன்றோர் சமய நூல்களை அளித்தனர். மீராபாயின் பக்திப்பாடல்கள் நாடெங்கும் பரவியுள்ளன. சூபி அநுபூதிமான்கள் இந்தி இலக்கியத்தை வளப்படுத்தியுள்ளனர். அவர்களுக்குள் முல்லா தௌத், மாலிக் முகமது ஜெயசி சிறப்பு வாய்ந்தவர்கள். சிறப்புவாய்ந்த 'பத்மாவதி' என்ற காதல் கதை எழுதியவர் மாலிக் முகமது ஜெயசி. அமிர் குசுருவைப்பற்றிக் குறிப்பிடாவிடின், இப்பகுதி முடிவுறாததாகப் போய்விடும். அவர் சிறந்த கவிஞர், அவர் நூல்கள், அவரது சிந்தனை வளத்தை உணர்த்துவன. அவர் பல்துறை அறிஞர்; பல துறைகள் பற்றி எளிய இனிய நூல்களைக் கொடுத்துள்ளார்.

**மராத்தி இலக்கியம் :** இடைக்காலத்தில்தான் சிறந்த மராத்தி இலக்கிய நூல்கள் தோன்றின. சக்கரதர், பாஸ்கர், பட், நரேந்திரர், முகுந்தராயர் போன்றோர் தொடக்ககால

மராத்திக் கவிஞர்கள், எழுத்தாளர்கள். நாமதேவர் மராத்தியில் பாடல்கள் புனைந்தார். ஞானஸ்வேரர், ஏகநாதர் இருவரும் இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றினர். ஏகநாதரின், மராத்தி 'பாகவதமும்' 'உருக்குமணி சுயம்வரமும்' புகழ்பெற்றவை. துகாராமின் அப்ஹங்கங்கள் மராத்திய மொழியில் மிகச் சிறப்பு வாய்ந்தவை.

**குஜராத்தி இலக்கியம் :** இதற்குச் சமணத்துறவிகள் அளித்துள்ள இலக்கிய நூல்கள் அளவிடற்கரியன. அவர்களது கவிதை இலக்கியம் இராஸ் என அழைக்கப்பட்டது. பல்வகை இராஸ் என்ற நூல்களை அளித்துள்ளனர். மீராவும் நரசிங்க மேத்தாவும் பக்தி இலக்கியத்தை வளர்த்தவர்கள். அவருடைய சிறப்பு வாய்ந்த நூல்கள் பல. அவற்றுள் இரண்டு தனலீலை, கோவிந்த கமனம் என்பவை. அவரைத் தொடர்ந்து பாலன், பீம் என்ற இரு கவிஞர்கள் சமஸ்கிருத நூல்களை, குஜராத்தியில் மொழி பெயர்த்ததுடன், சுயமாகவும் பாடல்கள் இயற்றினர். பதினாறாம் நூற்றாண்டில் துளசி, குஸல் லப் வசக் போன்ற கவிஞர்கள் சிறப்புவாய்ந்த நூல்களை குஜராத்தி மொழியில் கொடுத்துள்ளனர். குஜராத்தி உரைநடையும் இக்காலத்தில் பஞ்சதந்திரம், இராமாயணம், கீதை போன்ற நூல்களின் மொழிபெயர்ப்பால் வளம் பெற்றது.

**வங்காளி இலக்கியம் :** வித்யாபதி, சண்டிதாசர் போன்ற கவிஞர்கள், வங்காளி இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். இராமாயணமும் மகாபாரதமும் சமஸ்கிருதத்தினின்று வங்காளி மொழியில் பெயர்க்கப்பட்டன. மாலாதர் வசு என்பவர் கீதையை மொழிபெயர்த்தார். சைதன்யர் தமது பாடல்களாலும், பஜனைப் பாடல்களாலும் வங்காள இலக்கியத்திற்கு உயிரூட்டினார்.

**தென்னிந்திய மொழி இலக்கியம் :** பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் புதிய சைவ சமய இலக்கியம் சைவ சமயச் சான்றோர்களால் தமிழில் உருவானது. இதேபோன்று விஜயநகர அரசர்களின் ஆதரவுடன் தெலுங்கு, கன்னட இலக்கியங்கள் வளர்ச்சியுற்றன. விஜய நகரத்தின் சிறப்புமிக்க அரசன் கிருஷ்ண தேவராயனே அமுக்த மால்யாதை என்ற கவிதை நூலை யாத்தான். மேலும் பல நூல்களை அவன் எழுதியுள்ளான். நந்தி திம்மன் என்பவன் மற்றொரு சிறந்த தெலுங்குக் கவிஞன்.

இக்காலத்தில் சமணர்களும் கன்னட, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பல அரிய நூல்களை வழங்கிச் சிறப்புச் செய்தனர்.

**சமஸ்கிருத இலக்கியம் :** கி. பி. 1800-ல் பார்த்தசாரதி என்பவர், கரும மீமாம்சம் என்பதுபற்றி சமஸ்கிருத மொழியில் ஒரு நூலை எழுதினார். பின்பு யோகம், வைசேடிகம், நியாயம் போன்ற தத்துவக் கோட்பாடுகளை விளக்கப் பல சமஸ்கிருத நூல்கள் தோன்றின. மத்துவரும், சாயனரும் வேதங்களுக்கும், இந்து தத்துவத்திற்கும் சமஸ்கிருத மொழியில் உரைகள் வழங்கினர். அவர்கள் இருவரின் சிறப்புவாய்ந்த நூல் சர்வ தரிசனம் என்பதாகும். சாயனர், இருக்கு வேதத்திற்கு விளக்கம் அளித்தார். ஜெயசிங், இரவிவர்மன், வித்தியநாதர், வாமன பட்ட பாணர், கங்காதரர், இருப கோசுவாமி போன்றோர் பல்வேறு சிறப்புவாய்ந்த நூல்களைச் சமஸ்கிருத மொழியில் தீட்டித் தந்தனர். இருப கோசுவாமி ஏறத்தாழ 25 சமஸ்கிருத நூல்களை அளித்துள்ளார்.

ஆனால் வட்டார மொழி நூல்களுடன், சமஸ்கிருத நூல்களை ஒப்பிட்டால், சமஸ்கிருத நூல்கள் இயல்பானவையாக அமையவில்லை. அவற்றில் அழகும் நுணுக்கங்களும் இருந்தன. ஆனால் சமுதாய, ஆன்மிக வாழ்வோடும், அன்றாட வாழ்வோடும் தொடர்பில்லாதவைகளாக இருந்தன. ஆனால் இச்சமஸ்கிருத மொழி குமரி முதல் காஷ்மீரம் வரை வாழும் மக்களை இணைக்கும் முக்கியக் கருவிகளில் ஒன்றாக அமைந்தது.

**உருதுமொழி வளர்ச்சி :** அராபிய, பாரசீக, துருக்கிய, மேற்கத்திய மொழிச் சொற்களும், டில்லி மாநிலப் பேச்சு வழக்குச் சொற்களும் கலந்த கலவையில் தோன்றியது உருது எனக் கூறப் படுகின்றது. இதன் இலக்கண அமைப்பு, இந்துக்களின் மொழி இலக்கண அமைப்பைப் போன்றது. 18ஆம் நூற்றாண்டில் உருது ஒரு நல்ல இலக்கிய வளம்பெற்ற மொழியாயிற்று.

மேலும் பல வரலாற்று நூல்களும் இக்காலத்தில் தோன்றின.

**இலக்கிய வளர்ச்சியில் காணும் சீரிய கூறுகள்**

1. சமஸ்கிருத மொழியிலும், வட்டார மொழிகளிலும் அளவு கடந்து எழுந்த இந்து இலக்கிய நூல்கள், இந்துக்களின் மனவளம் பெருகியிருந்ததைக் காட்டுகின்றன.

2. இக்காலத்தில் எழுந்த இலக்கியம் உயர்ந்த தரம் படைத்ததாக இருந்தது.

3. இந்துப் பண்பாட்டை முஸ்லிம்கள் அறிந்துகொள்வதைத் தூண்ட சமஸ்கிருத நூல்கள் பாரசீக மொழியில் கொணரப் பட்டன.

4. பல முஸ்லிம் கவிஞர்கள் தங்கள் தத்துவத்தை, போதனையை, சிந்தனையை அனைவருக்கும் புகட்டப் பேச்சு மொழியைப் பயன்படுத்தினர்.

5. மக்களைத் தம்மருகில் ஈர்க்கப் பல ஞானிகள் வட்டார மொழிகளில் சமயக் கருத்துகளைப் பரப்பிப் பக்தி இயக்கத்தையும் இலக்கியத்தையும் வளர்த்தனர்.

6. உருது, இந்து-முஸ்லிம்களின் பொது மொழியாகி, இலக்கிய வளர்ச்சியிலும் ஏற்றம் பெற்றது.

7. பல வரலாற்று நூல்கள், வாழ்க்கை வரலாறுகள் பிறநூல்கள் பாரசீக மொழியில் எழுதப்பட்டன. அவை வரலாற்றுப் பெட்டகமாகி, இந்தியாவில் வரலாற்று இலக்கியத்தை அறிமுகப்படுத்த வழிகோலின.

8. இந்துஸ்தானி என்ற அலுவலக மொழியும் தோன்றியது.

**கல்வி**

இஸ்லாத்தைப் பின்பற்றுவோர், கல்விக்குப் பொருந்தொண்டாற்றிவிடவில்லை. இருப்பினும் அவர்கள் அறிஞர்களையும் புலமையையும் ஊக்குவித்தனர். ஆசிரியர்கள், சமுதாயத்தில் நன்னிலையில் வைத்துப் போற்றப்பட்டனர். மகளிர் கல்வி புறக்கணிக்கப்பட்டது. கல்வித்துறையென ஒன்றில்லாதிருந்தாலும், முஸ்லிம் அரசர்கள் பல பள்ளிகளைத் திறந்தனர், நூலகங்களை நிறுவினர்; இலக்கிய நூல்கள் வெளிவர ஆதரவு நல்கினர். அவர்கள் அரசவையைக் கவிஞர்கள், எழுத்தாளர்கள், தத்துவ ஞானிகள் அலங்கரித்தனர். உயர் கல்விக் கூடங்கள் அரசாலும் வசதிபடைத்தோராலும் நிறுவப்பட்டன. இவை அரசு மானியத்தாலும், தனியார் நிதி உதவியாலும் பேணிக் காக்கப்பட்டன. அச்சுப்பொறி இல்லாமையால் நூல்கள் எழுதச் சிலர் பணிக்கப்பட்டனர். கல்வி, சமயச் சார்புடையதாகஇருந்தபோதிலும், பாடத்திட்டத்தில் இலக்கணம், பேச்சுக்கலை, அளவையியல், இறையியல், அறஇயல் அடிப்படைத் தத்துவம், இலக்கியம், அடிப்படை அறிவியல், சட்டஇயல் சேர்க்கப்பட்டிருந்தன. பயிற்றுமொழி பாரசீகம். அராபிய மொழி முஸ்லிம்களுக்குக் கட்டாய பாடம். முறையான பட்டங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவில்லை. பால்பன், அலாவுதீன், முகமது துக்ளக் போன்றோர் கல்வியை ஊக்குவித்தனர்.

கட்டடக்கலை

**இந்திய - இஸ்லாமியக் கட்டடப்பாணி :** இந்துக்களைப் போன்று கல்லினை நம்பாமல், செங்கல், காரை, திண்காரை இவற்றைக் கட்டடங்களை எழுப்பப் பயன்படுத்தினர். அவர்கள் உயரமான ஒடுங்கிய தூபிகளையும் பள்ளிவாயில் தூபிகளையும் (minarets) மசூதிகள், கல்லறைகள் (tombs) இவற்றைச் சுற்றி எழுப்பினர். மேலும் அழகுபடுத்த வண்ணக்கற்கள், ஓடுகள், சல்லைக்கல் துண்டுகள் பயன்படுத்தப்பட்டன. திறந்த முற்றம், சம இடைவெளிகளில் நிறுத்தப்பட்ட தூண்களின் வரிசைகள், மூடப்பட்ட அறைகள், அழகிய வேலைப்பாடமைந்த சிற்ப வேலைகள் போன்ற இந்தியக் கட்டடக்கலைக் கூறுகளும் இருந்தன. ஏனெனில் முதலில் இந்து ஆலயங்களே தேவையான மாற்றங்களோடு மசூதிகளாக மாற்றப்பட்டன. இரண்டாவதாக, புதிய மசூதிகள் கட்டும்பொழுது இந்துக் கட்டடக் கலைஞர் களும் சிற்பிகளும் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அவர்கள் இயல்பாகவே பழைய மரபினைத் தொடர்ந்தனர். 'ஆனால் அவை முழுக்க முழுக்க இந்திய உடலையும், உயிரையும் பெற் றிருக்கவில்லையென' ஹேவல் கூறுகிறார். அது அராபிய, பாரசீக, துருக்கியப் பாணிகளை இந்தியப் பாணியுடன் இணைத்த தால் தோன்றியது.

**டில்லி சுல்தான்களின் கட்டடங்கள் :** பால்பனின் கல்லறை இஸ்லாமிய அமைப்புடையது. அதில் வளைவும், மாடமும் (dome) அப்பாணியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குத்துப்புதீன் கட்டிய மசூதி குவ்வத்-உல்-இஸ்லாம் என்பது, இந்து ஆலயப் பொருள்களால் எழுந்தவை. குதுப்மினார் அருகில் அலாவுதீன் கில்ஜி எழுப்பியுள்ள முக்கியச் சின்னங்களாவன: ஜமா அத் கானா மஸ்ஜித், அலாய்-தர்-வாஜா என்பவைகளாகும். இவை இரண்டும் தூய்மையான கலப்படமில்லா இஸ்லாமியக் கலைக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

**முகலாயக் கட்டடக்கலை :** மாடங்கள் அவற்றுள் மத்தியி லிருப்பவை, ஏஞ்சியவற்றைவிடப் பெரியதாக இருக்கும், ஒடுங்கிய பள்ளிவாயில் தூபிகள், மூலைகளில் சிறு தூபிகள், தூண்கள் துணையுடன் எழுப்பப்பட்ட பெரிய மன்றங்கள், சிற்ப வண்ண வேலைப்பாடமைந்த வளைவுகள், வளைவின் கீழே யுள்ள நுழைமுகம், சிறிய செங்கோணப் பாணி அமைப்புகள் அனைத்தும் முஸ்லிம் கட்டடக் கலையின் கூறுகள். இவை யனைத்துக்கும் எடுத்துக்காட்டாய் அமைபவை தாஜ்மஹால்,

'புலந்து தர்வாஜா' என்பன. அக்பரின் 'ஜஹாங்கிரி மஹால்' இந்த அழகு வேலைப்பாட்டுக் கலைக்கு எடுத்துக்காட்டு. இதை இந்துக் கட்டடக்கலை அமைப்பெனத் தவறாகக் கருதுவோரும் உண்டு.

ஷெர்ஷாவின் கட்டடங்களில் பீஹாரில் சசாராம் என்ற இடத்தில் எழுப்பப்பட்ட அவனது கல்லறை சிறப்புமிக்கதாகும். பதேபூர் சிக்கிரியில் அக்பர் எழுப்பியுள்ள மிகச் சிறந்த கட்டடங்கள் ஜோத்பாய், பிர்லா இவர்களின் அரண்மனைகள் (இராணி அரண்மனைகள்), திவானி-ஐ-ஆம் அல்லது பேரரசரின் அலுவலகம், திவானி ஐ சாஸ் அல்லது தனியார் பார்வை மன்றம்; இவற்றுள் கடைசி இரண்டும் முற்றிலும் இந்து கட்டட அமைப்பு, அலங்காரம், திட்டம் இவற்றில் அமைந்தவை. மற்றொன்று ஜும்மா மசூதி எனப்படுவதாகும்.

அக்பர், பல கட்டட அமைப்புகளில் இந்துக்களைப் பின் பற்றியதுபோன்று, இந்துக்களும் சமயப் பொதுக் கட்டடங்களை முஸ்லிம் பாணியைப் பின்பற்றி அமைத்தனர். மதுராபுரியில் பிருந்தாவனத்தில் முடிவுபெறாமல் உள்ள கோவிந்த தேவர் ஆலயம் இந்து – முஸ்லிம் கட்டடக்கலை இணைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ஆம்பர், பிக்கானீர், ஜோத்பூர் போன்ற இடங்களிலுள்ள இராஜபுத்திரர்களின் அரண்மனைக் கட்டடங்கள் முஸ்லிம் கட்டடக் கலையின் தாக்கத்திற்குத் தக்க எடுத்துக் காட்டுகள்.

மேலும் ஜஹாங்கீரின் 'சொர்க்கங்கள்' என அழைக்கப்படும் இனிய பூந்தோட்டங்கள் பாரசீகக் கம்பளப்பாணியில் அமைக்கப் பட்டன. அவருடைய இலாகூர், உதயபுரி, ஸ்ரீநகர், பதேபூர் சிக்கிரி பூந்தோட்டங்கள் சிறப்பு வாய்ந்தவை. மோதி மசூதியும் ஜஹாங்கீரின் கல்லறையும் சிறப்பு மிக்கவை.

ஷாஜஹான் கோட்டைகள், அரண்மனைகள், பூந்தோட் டங்கள், கல்லறைகள், மசூதிகள் போன்றவற்றை டில்லி, ஆக்ரா, இலாகூர், காபூல், காந்தகார், காஷ்மீர், ஆஜ்மீர், அஹமதாபாத் போன்ற இடங்களில் எழுப்பினான். இவன் மணற்பாறையால் (sand stone) முகலாயக் கட்டடங்களை எழுப்பி, பின்பு சலவைக் கற்களைப் பதித்தான். இராட்சதர்கள் போன்று திட்டமிட்டுக் கட்டிய கட்டடக்கலைஞர்கள், பொற்கொல்லர்கள் போன்று இக் கட்டடங்களை அழகுற முடித்தனர்.

ஷாஜஹான் தன் துணைவி மும்தாஜ் மஹால் நினைவாக ஆக்ராவில் சலவைக் கல்லால் எழுப்பிய 'தாஜ்மஹால்' உலக அதிசயங்களில் ஒன்று. இதைக் கட்ட ஆறு ஆண்டுகளும், ஆறுகோடி ரூபாயும் செலவாயின. இந்திய - இஸ்லாமியக் கலைக்குச் சிறிதும் ஐயப்பாடின்றி எழுப்பப்பட்டுள்ள மிகப் பிரம்மாண்டமான எடுத்துக்காட்டு இது.

இவ்வாறு முஸ்லிம்கள் கட்டடக் கலைக்குச் செய்துள்ள பணி எடுத்தியம்ப முடியாத ஒன்றாகும்.

## 8.2. இந்தியப் பண்பாட்டில் கிறித்தவ சமயத் தாக்கம்

இந்தியாவில் கிறித்தவ சமயம் பரவியதன் விளைவாக, இந் நாட்டு மக்களின் குறிப்பாக இந்துக்கள் வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் பல மாற்றங்களைக் காணமுடிகின்றது. கிறித்தவ சமயத் தாக்கத்தால் பெற்ற நலன்களே அதிகம், தீமைகள் குறைவு.

**சமயக் கருத்துகள் :** பல கடவுட் கோட்பாடு வலியுறுத்தப் படாமல், ஒரு கடவுட் கோட்பாடு இந்துக்களின் உள்ளங்களில் ஒளிவிட்டுத் திகழ்ந்தது. இந்து சமயப் பழக்க வழக்கங்களிலுள்ள நல்லனவற்றை எடுத்துக்கொண்டு, அல்லாதனவற்றைப் புறக் கணித்தனர். ஒவ்வொரு சமயக் கருத்திற்கும் பின்னாலுள்ள உயரிய தத்துவக் கோட்பாட்டை இந்துக்கள் விளக்கத் தலைப் பட்டனர். கிறித்தவர்களைப் போன்று எளிய வட்டார மொழிகளில் இந்து சமயத்தைப் பரப்பத் தொடங்கினர். அவர்களைப் போன்று இந்துக்கள் துண்டுப் பிரசுரங்கள், நூல்கள் இவற்றை எளிய, இனிய வட்டார மொழிகளில் அச்சிட்டு வழங்கியதுடன் பிரசாரமும் செய்தனர்.

கிறித்தவர்களைப் போன்று சில இந்து சமயச் சீர்திருத்த இயக்கங்கள் கூட்டு வழிபாட்டு முறையைப் பின்பற்றின.

இந்து சமயத்தைக் கிறித்தவ சமயக் குழுக்கள் இழிவுபடுத்தி நையாண்டி செய்தன. இதன் விளைவு இந்துசமயம் தீவிரமாகப் பரவத் தலைப்பட்டது. கிறித்தவ சமயக் குழுக்கள் பல இலட்சக் கணக்கானவர்களை மதம் மாற்றம் செய்துள்ளன. இன்று இதே முறையைப் பின்பற்றி இந்து மடாலயங்களும், சமயச் சான்றோரும்

கிறித்தவர்களை தீக்கை அளித்து இந்து சமயத்தின்பால் ஈர்க்கின்றனர்.

இந்து சமயத்தினரும் ஏனைய பிற சமயத்தவர்களும் தங்கள் சமயங்களிலுள்ள மூடப்பழக்க வழக்கங்களை, தேவையற்ற சடங்குகளை நீக்க முற்பட்டனர்.

**சமயப் பரப்புக் குழுக்கள்**

கிறித்தவ சமயத்தைப் போன்று, குறிப்பாக இந்து, இஸ்லாமிய சமயத்தவர்கள் தங்களின் சமயப் பரப்புக் குழுக்களை நிறுவி, சமயப் பணியும், சமுதாய நல்வாழ்விற்கான பணிகளும் செய்து வருகின்றனர்.

கிறித்தவ சமயத்தினர் நிறுவியதைப் போன்று, இந்து முஸ்லிம் சமூகத்தினர் ஆரம்பப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், தொழிற் கல்விக் கூடங்கள் நிறுவிக் கல்விக்குத் தொண்டாற்றி வருகின்றனர். குறிப்பாக இராமகிருஷ்ண இயக்கம் கல்வித் தொண்டுடன், வெள்ள, பஞ்ச நிவாரண வேலைகள், மருத்துவப் பணிகள் செய்து வருகின்றது. ஆங்கிலத்திலும், வட்டார மொழிகளிலும் இந்து சமயத்தை எளிமையாக விளக்கக் கூடிய நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டு வருகின்றன.

**பிற விளைவுகள்**

கிறித்தவ சமயம், ஆங்கிலக் கல்வியின்பால் மோகத்தை ஏற்படுத்தியது. மேலைநாட்டுப் பழக்க வழக்கங்களைக் கிறித்தவர்கள் இந்தியாவில் பின்பற்றத் தலைப்பட்டனர். இதைப் பிற சமயத்தினரும் குருட்டுத் தனமாகப் பின்பற்றினர் சிறிதுகாலம். மேலைநாட்டுப் பாணியில் உடையுடுத்துவது, உணவுப் பழக்க வழக்கங்களை வைத்துக் கொள்வது பெருமைப்படத்தக்கன என்று கருதிய தவறான மனப்போக்கு நீண்டகாலம் இருந்தது.

கிறித்தவக் கல்விக்கூடங்களில் நிலவிய ஒழுக்கநெறி, இந்து இஸ்லாமியக் கல்விக்கூடங்களிலும் பின்பற்றப்பட்டது. கூட்டு வழிபாட்டு முறையை இந்துக்களும் கைக்கொள்ள முயன்றனர். கிறித்தவர்கள், கலைநிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடாத்திவந்தனர். இவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பிறசமயத்தவரும் தங்கள் கலைநிகழ்ச்சிகளை நடத்தினர்.

கிறித்தவ சமயம் கலப்பு மணத்திற்கு வழிகோலியது. அதே நெறியில் இந்து சமயம் செல்ல முன்வந்தது. ஆனால் இன்றும் கிறித்தவ சமயத்தில் சாதிப்பாகுபாடுகள் உள. காரணம்? இந்து சமயத் தாக்கம்.

இவ்வாறாக இந்தியப் பண்பாட்டின் பல்வேறு கூறுகளில் கிறித்தவ சமயத்தின் தாக்கத்தைக் காணமுடிகின்றது.

## 8.3. பிரிட்டானியர்களின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் விட்டுச்சென்ற மரபுரிமைச் செல்வம்

**தொடக்கம்**

பிரிட்டானியர், கிழக்கிந்தியக் கம்பெனியை 1600ஆம் ஆண்டின் கடைசி நாள்களில் இந்தியாவில் தொடங்கினர். முதலில் வாணிபத்தைப் பெருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நுழைந்தவர்கள் இறுதியாக இந்தியா முழுமையையும் ஒரு குடையின்கீழ் ஆட்சிபுரிந்தனர். இவர்கள் இந்தியாவில் ஆட்சி புரியத் தொடங்கியவுடன் அமைதி, ஒழுங்கு, பாதுகாப்பு என்ற மூன்றும் நிலையாகத் தோன்றத் தலைப்பட்டன. இந்நிலை தோன்ற அவர்கள் பெரிதும் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது. மொகலாயருடைய வீழ்ச்சிக்குப் பின்பு, பிளவுபட்ட இந்தியாவின் சமுதாய, பொருளாதார, அரசியல், சமயச் சிக்கல்களையும் பலவீனங்களையும் பல்வேறு நிலைகளையும் நன்றாக ஆராய்ந்து ஒரு நிலையான ஆற்றல்மிக்க ஆட்சியை இவர்கள் நிறுவினர்.

இந்தியாவிற்கு மேலைநாட்டிலிருந்து போர்ச்சுகீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர்கள் போன்ற பலர் வந்து போயிருப்பினும், ஆங்கிலேயர்கள்தாம் இந்த நாட்டை ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்குத் தங்களது ஏகாதிபத்தியத்தின்கீழ் வைத்திருந்தனர். அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் அவர்கள் இந்தியாவில் விட்டுச்சென்ற மரபுரிமைச் செல்வம் குறிப்பிடத்தக்கது. அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் இந்தியா அடைந்துள்ள பலன்கள் சொல்ல முடியாதவை.

**நல்ல அரசியலமைப்பு**

இந்நாட்டில் பல்வேறு இனத்தை, சமயத்தைச் சார்ந்தவர்கள் இருந்தபோதிலும் அனைவரையும் ஒருகுடையின்கீழ்க் கொண்டு

வந்த பெருமை இவர்களையே சாரும். பல குறுநில மன்னர்கள், ஜமீன்தார்கள் அனைவரும் ஆங்கிலேயரின் ஆட்சியை ஏற்றுக் கொண்டனர். இந்த ஆட்சியைத் திறமையாக நடத்துவதற்குக் கல்வித் தகுதியும், நல்ல குடும்பச்சூழலும் உள்ள திறமைவாய்ந்த அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

நீதி நிருவாகத் துறையும், காவல் துறையும், வருவாய்த் துறையும் மிகத் திறம்பட இயங்கின. அந்த முறைகளே இன்றும் விடுதலைபெற்ற இந்தியாவில் தொடர்ந்து இருந்து வருகின்றன.

### பஞ்ச நிவாரணம்

பஞ்சம், ப்ளேக், காலரா, பூகம்பம், புயல், வெள்ளம், வெட்டுக்கிளிகளின் தொல்லை இவைகள் ஏற்பட்ட காலங்களில் அவைகளால் பாதிக்கப்பட்டோருக்கு மறுவாழ்வுத் திட்டமும், நோய் நிவாரணமும் நன்முறையில் அளிக்கப்பட்டன.

### காடுகளும் நீர்ப்பாசனமும்

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்க ஆங்கிலேய அரசாங்கம் பொதுமக்களிடமிருந்து கடனாகப் பணத்தைப் பெற்றது. இதன் விளைவாக அரசாங்கம், ஆக்ரா கால்வாய் போன்ற பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தியது. மழைபொழிவதற்கு, அடர்ந்த காடுகள் இன்றியமையாதன எனக் கருதி இவ்வரசாங்கம் காடுகளை நன்முறையில் பேணிக் காத்தது.

### இருப்புப்பாதைகளும் தொழில் துறைச் சட்டங்களும்

முதன் முறையாக 1853-க்கும் 56-க்கும் இடையில் ஜெனரல் டல்ஹௌசி இருப்புப்பாதையை பம்பாய்க்கும் தானாவுக்கும், கல்கத்தாவுக்கும் இராணிகஞ்சிற்கும், சென்னைக்கும் அரக்கோணத்திற்கும் இடையில் அமைத்தார். இவை தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டன. பின்பு பல்வேறு இருப்புப்பாதைகள் இந்தியா முழுவதும் போடப்பட்டன. இதன் விளைவாக மக்கள் பல்வேறு இடங்களுக்குச் சென்று அவ்விடத்து மக்களுடன் தொடர்புகொண்டு அவர்களுடைய பண்பாட்டை, நாகரிகத்தை, பழக்கவழக்கங்களை, மொழிகளைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

தொழிற்சாலைகளிலும், நூற்பு ஆலைகளிலும், நெசவாலைகளிலும் வேலைசெய்யும் தொழிலாளர்களின் நலன் கருதித் தொழிற் சட்டங்களைப் பிரிட்டானியர்கள் உருவாக்கினர்.

1889-லும் 1891-லும் இயற்றப்பட்ட சட்டங்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் இவர்களுக்குரிய வேலை நேரத்தையும் ஏனைய வசதிகளையும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன.

**இந்தியப் பிரபுக்களும் ஆங்கிலேயர்களும்**

இந்தியப் பிரபுக்களும் அரசர்களும், ஆங்கிலேய மருத்துவர்களையும் கலைஞர்களையும் பெரிதும் விரும்பி அவர்களுடைய உதவியை நாடினர். ஆங்கில நூல்களை அதிகமாக இவர்கள் படித்தனர். தங்கள் நூலகங்களிலும் ஆங்கில நூல்களை வைத்திருந்தனர். தஞ்சையைச் சேர்ந்த சரபோஜ மகாராஜா முறையாக ஆங்கிலத்தைக் கற்றுத் திறமையாக எழுதவும் பேசவும் தெரிந்திருந்தார். அவர் நிறுவிய சரஸ்வதி மஹால் நூலகத்தில் மிகப் பயனுள்ள நூல்களும், ஓவியங்களும், கீழைநாட்டுக் கையெழுத்துப் பிரதிகளும் இருக்கின்றன.

**மத்தியதர வர்க்கத்தினரின் போக்கு**

பொதுமக்கள் ஆங்கிலேயரை வெறுப்புடன் நோக்கினர். இனவேற்றுமை காரணமாகவும் நம்மை ஆளுகின்ற அயல் நாட்டார் என்கின்ற காரணமாகவும் வெறுக்கத் தலைப்பட்டனர். மேலை நாட்டினரைக் குடிகாரர்கள் என நினைத்தார்கள். ஆங்கிலக் கல்வி கற்றோரைத் தவிர ஏனைய இந்தியர் பிரிட்டானியரை அறவே வெறுத்தனர்.

**ஆங்கிலேயர்கள் இந்தியர்களின்பாலும், இந்திய வாழ்வின்பாலும் கொண்டிருந்த போக்கு**

முதலில் ஆங்கிலேயர்கள் இந்தியர்களைச் சமமாகப் பாவித்து நெருக்கமாக உறவாடினர். நாளடைவில் இந்தியாவிலிருந்த மேலைநாட்டினர் தாங்கள் திருமணங்கள் செய்யத் தம் இனப் பெண்கள் கிடைக்காததால் இந்தியப் பெண்களை மணம் செய்து கொண்டார்கள். இதன் விளைவாக 'ஆங்கிலோ இந்தியர்' என்ற புதுவகுப்பினர் தோன்றினார்கள். ஆங்கிலேயர்கள் இந்தியக் கேளிக்கைகளிலும், யானைப் போரிலும், குக்கா என்ற ஒருவகைப் புகைப்பிடித்தலிலும் மிக்க நாட்டம் செலுத்தினர். ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தோன்றியவுடன் இவர்கள், முஸ்லிம்களையும் இந்துக்களையும் வெறுத்ததுடன் தங்களை மிகவும் உயர்வாக எண்ணிக்கொண்டனர்.

**சீர்திருத்த இயக்கங்கள்**

ஆங்கிலக் கல்வி மேலைநாட்டு அறிவியல் வளர்ச்சி, தொழிற் பெருக்கம், கிறித்தவ சமயப் பிரசாரம் இவைகளின் காரண

மாகவும் இந்தியாவில் நிலவிய தீண்டாமைக் கோட்பாடு, சமுதாய ஏற்றத்தாழ்வுகள், சாதிப்பாகுபாடுகள், சமயக் கொடுமைகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பஞ்சம், ஏழ்மை போன்ற புற காரணமாகவும் பல புதிய சமுதாயச் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. இச்சீர்திருத்த இயக்கங்களுள் குறிப்பிடத்தக்கவை ராஜாராம் மோகன்ராய் தோற்றுவித்த பிரம சமாஜமும், சுவாமி தயானந்தர் தோற்றுவித்த ஆரிய சமாஜமும், பிரம்மஞான சபையும், இராமகிருஷ்ண இயக்கமும், பிரார்த்தனை சமாஜமும் ஆகும்.

இச்சீர்திருத்த இயக்கங்கள் கீழ்க்கண்ட நெறிமுறைகளை வலியுறுத்தின.

(1) இந்து சமயத்திலுள்ள மூடநம்பிக்கைகளையும் தேவையற்ற சடங்குகளையும் சாடின. (2) உருவ வழிபாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. (3) பெண்களுக்குச் சம உரிமையையும் கல்வியையும் அளிப்பதை வற்புறுத்தின. (4) சாதிப்பாகுபாட்டினையும் தீண்டாமையையும் அறவே ஒழிக்க முயன்றன. (5) விதவை மணம், கலப்பு மணம் இவை இரண்டையும் ஆதரித்தன. (6) பால்ய மணத்தையும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தையும் வன்மையாகக் கண்டித்தன. (7) மக்களின் நல்வாழ்வுக்காகப் பல கல்விக் கூடங்களையும், மருத்துவ மனைகளையும், அனாதை இல்லங்களையும் நிறுவின.

(இச்சீர்திருத்த இயக்கங்களைப் பற்றி விரிவாகப் பல கட்டுரைகள் பின்னர் வருகின்றன.)

### ஆங்கிலக் கல்வி

இந்திய வரலாற்றையே 19 ஆம் நூற்றாண்டில் மாற்றி அமைத்தது இக்கல்வி முறையாகும். இதன் விளைவாக மேலை நாட்டுக் கருத்துகள் தோன்றி மக்களின் மனநிலையை மாற்றின. இதன்மூலம் ஒரு நாட்டின் பண்பாட்டினையும் அம்மக்களின் உள்ளத்தையும் அறிய முற்பட்டனர். மேலை நாட்டு அறிவியல், தொழிலியல் அறிவால் இந்நாட்டில் பல்வேறு தொழில்கள் தோன்றின. பிரிட்டானியர்கள் பல உயர்நிலைப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நடெங்கும் நிறுவினர். ஆங்கிலக் கல்வி எழுத்தர்களை அதிகமாக உருவாக்கிற்று. மாணவர்களிடையே ஒழுக்கமும், சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலும், நாட்டுப்பற்றும் தோன்றத் தலைப்பட்டன. கல்வித் துறையில் இவர்கள் ஆற்றியுள்ள தொண்டு அளவிடற்கரியது.

இக்காலத்தில் மூன்று சாராரைக் காண்கின்றோம். பழமையில் மிகுந்த பிடிப்புக் கொண்ட வைதிக மரபைச் சார்ந்தோர் ஒருபுறம், ஆங்கில மொழியிலும் நாகரிகத்திலும் மிகப் பற்றுள்ள பகுத்தறிவுள்ள தீவிரவாதிகள் மற்றொருபுறம், இத்தீவிரவாதிகள் மேலை நாட்டுக்கல்வி, நாகரிகம், பழக்கவழக்கங்கள், மொழி இவை அனைத்துமே உயர்ந்தவை எனக் கருதுபவர். இந்த இருசாராருக்கிடையே ஆங்கிலம் பயின்று நமது பண்டைய இலக்கியங்களையும் பயின்று இரண்டிலுமுள்ள நல்லனவற்றை எடுத்துக் கொள்ளும் மிதவாதிகள் ஒருபுறம்.

**தாகூரும் காந்தியும்**

இக்காலத்தில் குறிப்பிடத்தக்க இருபெருந் தலைவர்கள் இரவீந்திரநாத் தாகூரும், மகாத்மா காந்தியும் ஆவார்கள். வங்காளக் கவிஞரான தாகூர் 'கீதாஞ்சலி' என்ற நூலை எழுதி நோபல் பரிசைப் பெற்றவர். அவர் ஒரு பகுத்தறிவுவாதி; மனிதாபிமானி; உலக நோக்குடையவர். மகாத்மா காந்தி இந்நாட்டிற்கு விடுதலை பெற்றுத்தந்த மாபெரும் அஹிம்சையின் சின்னம். இவரைக் குறித்துப் பிறிதோரிடத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

**சமுதாய மாற்றங்கள்**

ஆங்கிலேயரின் வருகையால் சமுதாயத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. தனிமனித உணர்வின் காரணமாகக் கூட்டுக் குடும்ப வாழ்க்கை மறைந்தது. பெண்களின் திருமண வயது 14 ஆகவும், ஆண்களின் திருமண வயது 18 ஆகவும் 1929-ல் அமுலான 'சாரதா சட்டம்' கூறுகின்றது. தீண்டாமை புதிய அரசியல் சாசனத்தால் முற்றிலும் ஒழிக்கப்பட்டது. சாதிக்கும் தொழிலுக்குமிடையில் உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டது. கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் போக்குவரத்து வசதி ஏற்பட்டது. செய்தித்தாள், சினிமா, வானொலி, தொலைபேசி, விமானப்போக்குவரத்து, தந்தி முதலியன மக்களின் எண்ணங்களைப் பெரிதும் மாற்றின. இதன் விளைவாக ஏற்றத் தாழ்வுகளும் சமுதாயச் சிக்கல்களும் தகர்த்தெறியப்பட்டன.

**பெண் கல்வி**

அன்றைய இந்து சமுதாயத்தில் பெண் கல்வி வெறுக்கப் பட்டது. பெண் கல்விக்காக பிரம சமாஜத்தைச் சேர்ந்த ஈசுவர சந்திர வித்தியாசாகர் 48 மகளிர் பள்ளிகளை நிறுவினார். கார்வே

என்பவர் 1806-ல் பூனா நகரில் விதவை இல்லத்தை நிறுவி இறுதியில் பெண்களுக்காக ஒரு பல்கலைக்கழகத்தையே தோற்றுவித்தார்.

**வரலாறு, கலை, கட்டடக்கலை**

இந்திய வரலாற்றினை ஆங்கிலேயர்கள் மிகச் சிறப்பாக எழுதியுள்ளனர். கலைக்கு அவர்கள் பெருந்தொண்டாற்றிட வில்லை.

**செய்தித்தாள்கள்**

முதன் முதலாக ஆங்கிலத்தில் கங்காதர பட்டாசாரியர் என்பவர் 'வங்காள கெஜட்' என்ற செய்தித்தாளை ஆங்கிலத்தில் தொடங்கினார். அரசாங்கத்தை இவர் வன்மையாகக் கண்டித்ததால் 1782-ல் சிறைப்படுத்தப்பட்டார். 1790-லிருந்து இந்திய மொழிகளில் பல செய்தித்தாள்கள் தோன்றலாயின. ஆங்கில மொழியிலும் பல செய்தித்தாள்கள் தோன்றலாயின.

**மொழியும் இலக்கியமும்**

ஆங்கிலக் கல்வியின் விளைவாக இந்திய மொழியில் உரை நடை நூல்கள் பெருகலாயின. இவர்கள் வருகைக்கு முன்பு இந்தியாவில் நூல்கள் கவிதை வடிவிலே பெரும்பாலும் அமைந் திருந்தன. அச்சுப் பொறிகள், காகித உற்பத்தி இவைகள் தோன்றியதன் விளைவாக ஆங்கிலப் பாணியில் பல உரைநடை நூல்களும், சிறுகதைகளும், தொடர்கதைகளும், புதினங்களும், கட்டுரை நூல்களும், ஓரங்க நாடக நூல்களும், பயண நூல்களும், திறனாய்வுத் துறை நூல்களும், சுயசரிதைகளும், வாழ்க்கை வரலாற்று நூல்களும் இந்திய மொழிகளில் பெருகலாயின.

வடஇந்திய இலக்கியம்: வட இந்தியாவில் வங்காளி மொழியில் இராஜாராம் மோஹன்ராய், ஈசுவர சந்திர வித்யா சாகர், பக்கிம் சங்கர் சட்டர்ஜீ, இரவீந்திரநாத தாகூர் போன்றவர்கள் இலக்கியத்தின் பல்வேறு துறைகளில் மிகச் சிறப்பு வாய்ந்த நூல்களை ஆங்கிலப் பாணியில் அற்புதமாக வடித்துக் கொடுத் துள்ளனர். இந்தி மொழிக்குப் பெரும் தொண்டாற்றியவர்கள் சுவாமி தயானந்த சரஸ்வதி, இராகூல்ஜி என அழைக்கப்படும் இராகுல சாஸ்கிருத்தியாயன், மைதிலி சரண்குப்தா, பிரேம் சந்த் போன்றோர் ஆவர். இவர்கள் இந்தி மொழி வளர்ச்சிக்குப் பல புதிய சொற்களை உருவாக்கிக் கொடுத்துள்ளனர்.

உருதுமொழி வளர்ச்சிக்கு டில்லி, காலிப், சர் சையத்கான், நஜீர் அஹமத், மௌல்வி அபுல் ஹலீம், பிரேம் சந்த் போன்றோர் பெருந்தொண்டாற்றியுள்ளனர். காளிதாஸ் என்பவர் பஞ்சாபி மொழிக்கும், காண்டேகர் என்பவர் மராத்தி மொழிக்கும், நர்மத சங்கர், லால் சங்கர் என்பவர்கள் குஜராத் மொழிக்கும் சிறப்பான முறையில் பல இலக்கியங்களை நல்கி அம்மொழிகள் வளர்ச்சியுறப் பெரிதும் பாடுபட்டனர்.

**தென்னிந்திய இலக்கியம்:** தமிழில் பல ஆங்கில நாடகங்கள், கதைகள், புதினங்கள் மொழிபெயர்க்கப்பட்டதுடன் தமிழ் மொழியிலேயே முதன்முதலாகப் பல புதினங்களும், நாடகங்களும், சிறுகதைகளும் தோன்றத் தலைப்பட்டன. சுந்தரம்பிள்ளை, டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர், வேதநாயகம் பிள்ளை, இராஜம் ஐயர் போன்றோர்கள் இம்முயற்சியில் முதன்முதலில் ஈடுபட்டவர்கள். இவர்களைத் தொடர்ந்து சுப்ரமணிய பாரதியார், திரு. வி.க., பாரதிதாசன், கண்ணதாசன், மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், மு. இராகவையங்கார், வையாபுரிப்பிள்ளை, சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வ., டாக்டர் தெ. பொ. மீ., உ. வே. சாமிநாத சர்மா, ஜெயகாந்தன், அகிலன், சாண்டில்யன், புதுமைப் பித்தன் போன்ற எண்ணற்றோர் தமிழ் மொழியில் சிறந்த இலக்கியங்களைப் பல்வேறு துறைகளில் படைத்துத் தந்துள்ளனர்.

மலையாள மொழியில் மிகச் சிறந்த புதினங்களையும், சிறு கதைகளையும், கவிதை நூல்களையும் இன்னபிறவற்றையும் வள்ளத்தோல், தகழி சிவசங்கரன், பொன்குன்னம் வர்க்கி, இரவிவர்மன் தம்பி, கே. எம். பணிக்கர், பத்மநாபபிள்ளை, கிருஷ்ணன் தம்பி, கொங்கு குட்டத்தம்பிரான் போன்றோர் கொடுத்துள்ளனர். கிருஷ்ணராஜ உடையார், ஸ்ரீகண்டய்யா, மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் போன்றோர் கன்னடத்தில் பல சிறந்த நூல்களைப் பல்வேறு துறைகளில் வடித்துக் கொடுத்துள்ளனர். தெலுங்கு மொழி நன்முறையில் வளர, பல புதிய படைப்புகளை வீரேசலிங்கம் பந்துலு, சிலக்க மூர்த்தி, லட்சுமி நரசிம்மன், இராமலிங்க ரெட்டி போன்றோர் அளித்துள்ளனர்.

**சாலைகளும் போக்குவரத்து வசதிகளும்**

பிரிட்டானியருடைய ஆட்சிக் காலத்தில் அகன்ற சாலைகள் இந்தியாவின் பெருநகரங்களை இணைக்கக்கூடிய முறையில் அமைக்கப்பட்டன. இதன் விளைவாக உள்நாட்டு வாணிபமும்,

தொழில் வளர்ச்சியும் மக்களின் பயண உணர்வும் வளர்ந்தன. முக்கிய நதிகள் வழியாகவும், போக்குவரத்து நடைபெற்றது. இந்தியாவின் முக்கியத் துறைமுகங்களான பம்பாய், கல்கத்தா, கொச்சி, சென்னை, விசாகப்பட்டினம் இவைகளின் மூலமாக வெளி நாட்டு வாணிபமும் உள்நாட்டு வாணிபமும் நடைபெற்றன.

முப்படை

கடற்படை, விமானப்படை, தரைப்படை போன்ற முப்படைகளும் பிரிட்டானியர்களுடைய அமைப்பில் இந்தியாவில் புதுப்பிக்கப்பட்டு, அவற்றில் பணியாற்றியவர்களுக்கு நல்ல பயிற்சியும் அளிக்கப்பட்டது,

முடிவு

இவ்வாறாகக் கல்வி, அரசு, நீதி நிருவாகம், போக்குவரத்து, இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளில் அவர்கள் விட்டுச் சென்ற மரபுரிமைச் செல்வம் எக்காலத்திலும் இந்தியர்களால் பாராட்டப்படவேண்டிய ஒன்று.

## 8.4. இந்தியப் பண்பாட்டிற்குச் சிறப்பாகக் கிறித்தவ சமயப் பரப்புக் குழுக்களின் பங்கு

**கிறித்தவ சமயம்—விளக்கம்**

கிறித்தவ சமயம் என்பது, கிறிஸ்து அதாவது ஏசுகிறிஸ்துவின் பெயரிலிருந்து பெறப்பெற்ற சொல். இச்சமயத்தை நிறுவியவர் ஏசுகிறிஸ்து. அவர் அறக்கோட்பாடுகளை நல்கி, மனிதன் நேர்மையாக வாழ வழிகாட்டியுள்ளார்.

கிறித்தவ சமயம் கிறிஸ்து தோன்றிய முதல் நூற்றாண்டிலேயே இந்தியாவிற்கு வந்துவிட்டதெனக் கருதுகின்றனர். கேரளத்தில் சிரியன் கிறித்தவ மாதாகோயில்கள் நிறைந்த நகரங்கள் பல உண்டு. இக்கிறித்தவர்கள் சிரியன் கிறித்தவர்கள் என அழைக்கப்பட்டாலும், சிரிய நாட்டவர்களின் கிறித்தவரைப் போலில்லாமல், முழுக்க முழுக்கக் கேரள மரபை ஒட்டியே வாழ்கின்றனர்.

**கிறித்தவ சமயப் பரப்புக் குழுக்களின் கல்விப்பணி**

அரசு ஆங்கிலக் கல்வியைப் புகட்டப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் தொடங்கிற்று. ஆனால் பிரிட்டனிலிருந்தும்

மேலைநாடுகளிலிருந்தும் வந்த கிறித்தவ சமயப் பரப்புக் குழுக்கள் பெரிய அளவில் இக்கல்விப் பணியைச் செய்தன. 1818வரை கிழக்கிந்தியக் கம்பெனி சமயப் பரப்புக்குழுப் பணியை ஊக்குவிக்கவில்லை. காரணம், கம்பெனி இலாபம் ஈட்டுவதில் கவனம் செலுத்தியது. அத்துடன் இக்குழு இந்தியரிடையே அமைதியின்மையையும் வெறுப்புணர்வையும் வளர்த்துவிடக் கூடுமென அஞ்சியது. 1813-க்குப் பின்பு பிரிட்டானிய அரசே அறிவையும், கல்வியையும் பரப்ப விரும்புவோருக்கு அனுமதி யளித்தது.

முதன் முதலில் இந்தியாவுக்கு வந்தோரில் குறிப்பிடத் தக்கவர் அலெக்சாண்டர் டஃப். தற்காலக் கல்வியுடன் கிறித்தவ சமயத்தை போதிக்கும் நிறுவனங்களை நிறுவி, இந்திய சமுதாயத்தில் உயர்வட்டத்தைச் சார்ந்தோரைக் கிறித்தவ சமயச் செல்வாக்கின்கீழ்க் கொண்டுவர விரும்பினார். கல்கத்தாவில் 1830-ல் ஒரு பள்ளியை நிறுவ, இவருக்கு இராஜாராம் மோகன் ராயின் ஒத்துழைப்பு கிட்டியது. மோகன்ராயின் ஆர்வம் தற்காலக் கல்வியைப் பரப்ப வேண்டுமென்பதே, சமயப் பிரசாரத்தை வளர்க்க அன்று. அலெக்சாண்டர் டஃப்பை அடுத்துக் கிறித்தவ சமயப் பரப்புக் குழுக்கள் பல்வேறு கல்வி நிறுவனங்களைத் தொடங்கின. அவற்றுள் மிகப் பழமையானவை வில்சன் கல்லூரி—பம்பாய் (1832), கிறித்தவக் கல்லூரி—சென்னை (1937), நோபிலி கல்லூரி—மசூலிப்பட்டணம் (1841), ஹிஸ்லப் கல்லூரி—நாகபுரி (1844), தூய யோவான் கல்லூரி—ஆக்ரா (1853).

கிறித்தவ சமயக் குழுக்கள் பட்டிதொட்டிகளிலும் பள்ளிகளை நிறுவின. அச்சமயத்தைத் தழுவிக் கொண்டோருக்கு இலவச உணவு, உறையுள், கல்வி போன்ற வசதிகளையும் கொடுத்தன. பல கிறித்தவப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் கிறித்தவ இறையியலும் கற்பிக்கப்பட்டது. செல்வம் படைத்த இந்துக்களும், இந்துசமய மடாதிபதிகளும் இருந்தும் கல்விப் பணி சிறக்க அவர்கள் கல்வி நிறுவனங்களை நிறுவ முன்வரவில்லை. இச்சீரிய பணியை இன்றளவும் செம்மையாகச் செய்து வருபவர்கள் கிறித்தவ சமயக் குழுக்களைச் சார்ந்தவர்களே. இக்கல்வி நிறுவனங்களில் ஒழுக்கம், கட்டுப்பாடு போன்ற உயரிய நெறிகள் சிறந்து விளங்குகின்றன. கல்வி புகட்டுதலே அனைத்து அறங்களிலும் சிறந்ததெனக் கருதப்படுகின்றது. அப்பெருமையை ஈட்டிக்கொண்டவர்கள் கிறித்தவ சமயப்பரப்புக் குழுவினரே.

**சமுதாய நல்வாழ்வுப் பணிகள்**

சமூகத்தில் மக்களிடையே நிலவிய பொருளாதார, சமுதாய, சமய, இன, வகுப்பு, சாதி வேறுபாடுகளைக் களைந்தெறிய இச்சமயக் குழுக்கள் பெருந்தொண்டாற்றியுள்ளன. அனாதை விடுதிகளும், முதியோர் காப்பகங்களும் நிறுவி, வெள்ள, பஞ்ச நிவாரணப் பணிகளை மிகச் சிறப்பாக இன்றும் செய்துவருகின்றன. கலப்புத் திருமணங்கள் நடந்தன. தீண்டப் படாதோர் நிலை மாறியது. மிகச் சிறந்த மருத்துவமனைகளை இக்குழுக்கள் நாடெங்கும் முக்கிய நகரங்களில் நிறுவி, மிகச் சிறந்த பணியினைச் செய்து வருகின்றன.

இந்து சமயத்திலுள்ள குறைபாடுகளைக் கிறித்தவ சமயம் தன் துண்டுப் பிரசுரங்கள், பிரசாரங்கள், நூல்கள் இவை மூலம் சுட்டிக்காட்டிய பின்னர், இந்துக்கள் தங்கள் குறைகளை உணர்ந்து, அவைகளைக் களையத் தலைப்பட்டனர்.

கிறித்தவ சமயம், இந்து சமுதாயத்தில் அன்று தலைவிரித் தாடிய சாதி, சமயக் கொடுமைகளைச் சுட்டிக்காட்டிய பின்னரே, இந்து சமயத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுச் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றலாயின.

**இலக்கியப் பணி**

இந்தியாவில் கிறித்தவ சமயத்தைப் பரப்ப வந்த சமயக் குழுக்கள் இந்நாட்டு முக்கிய மொழிகட்கு அரிய பணி செய்துள்ளன. இந்தியராக வாழ்ந்து இந்நாட்டு மொழிகளையும், சமய தத்துவ நூல்களையும் கசடறக் கற்றுப் பல அரிய நூல்களை வட்டார மொழிகளில் வழங்கியுள்ளன. ஆங்கில மொழியில் பெரும்பாலும் தங்கள் சமயத்தைப் பரப்பவில்லை. குறிப்பாக வீரமாமுனிவர், கால்டுவெல், ஜி. யு. போப் போன்ற கிறித்தவர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டு அளவிட்டுச் சொல்ல முடியாது. இதேபோன்று ஏனைய இந்திய மொழிகட்கும் அக் குழுவினர் தங்கள் பங்கினை நல்கியுள்ளனர்.

**சமயப் பரப்புக் குழுவின் அமைப்பு முறை**

இந்தியாவிலேயே பௌத்த சங்க அமைப்பிற்குப் பின்னர் கிறித்தவ சமயப் பரப்புக்குழு அமைப்பு முறையே சிறப்பான தாக இயங்கிற்று. இன்றும் இந்தியாவில் பல்வேறு சமயப் பரப்புக் குழுக்கள் இருப்பினும், கிறித்தவ சமயப் பரப்புக்

குழுவினைப் போன்ற நடைமுறைச் சட்டதிட்டங்கள், அமைப்பு முறை, செயல்படும்முறை, செய்யும் பணிகள் இவைகளால் சிறந்து விளங்குவதில் எக்குழுவும் அவைகளுடன் போட்டியிட முடியாது. குறிப்பாக உரோமானிய கத்தோலிக்கர்களின் சமயப் பரப்புக் குழுக்கள் அனைத்து வகையிலும் ஏனைய கிறித்தவக் குழுக்களைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்றன. தன்னலங் கருதாது, மனித நலனுக்காக மாபெரும் பணிகளைக் கிறித்தவ சமயப் பரப்புக் குழுக்கள் ஆற்றி வருகின்றன.

இவ்வாறாக, கிறித்தவ சமயப் பரப்புக் குழுக்கள் இந் நாட்டுக் கல்வி வளர்ச்சிக்கும் சமூக நல்வாழ்விற்கும் பல அரிய பணிகளைச் செய்துள்ளன.

## இயல் 9

# 9.1. பக்தி நெறி

### முன்னுரை

இந்து சமயத்தில் வீடுபேறு அடைவதற்கு எடுத்தியம்பப் பட்டுள்ள நெறிகள் மிகப்பல. மனித உளநிலை, சிந்தனை, செயல்திறன் இவைகட்கு ஏற்ப அவைகள் அமைந்துள்ளன. அவரவருக்கு எந்த நெறி எளியது எனத் தோன்றுகிறதோ, அந்த நெறியினைக் கடைப்பிடித்து உய்வு பெறலாம். இவ்வாறு பல நெறிகள் இருப்பினும் மிகச் சிறப்பாகக் கருதப்படுபவை மூன்று நெறிகள். அவையாவன: பக்திநெறி, கருமநெறி, ஞான நெறி.

### பக்திநெறி—விளக்கம்

இறைவன்பால் செலுத்தும் ஆழ்ந்த அன்பினைப் பக்தியெனக் கொள்ளலாம். எனவே (பக்தி என்ற சொல் பஜ் என்ற சொல்லி னின்று பெறப்பெற்றது. 'பஜ்' என்பதன் பொருள் 'வழிபாடு'. ஆகவே, பக்தியென்பது ஆழ்ந்த அன்பொடு இறைவனை வழி படுவது எனப் பொருள்படும்) மனித இனத்தின் பெரும் பகுதிக்கு ஏற்புடைய நெறியாக இது இருப்பதில் வியப்பொன்றுமில்லை. அனைவரும் அமைதியுடன் வாழ, ஒருவர்பால் ஒருவரும், ஒரு நாடு மற்ற நாடுகளின்பாலும் அன்பு செலுத்த வேண்டுமென்று சொல்லவேண்டுமா ? இதுபற்றியே 'அன்பே சிவம்' என இந்து சமயம் கூறுகிறது. 'அன்பு அன்பிற்காகவே' என்பதே குறிக் கோள். இறைவனின் ஆற்றலை அறிந்து, விரும்பி, உணர்ந்து செலுத்துகின்ற அன்பினையே பக்தியெனக் கூறுவர் சான்றோர். இங்கே இதயம் இறைவனுடன் நேரடித் தொடர்பு கொள்ளு கின்றது.

எங்கும், எந்தச் சூழலிலும், எல்லோராலும் நடைமுறைப் படுத்தப் பயன்படும் நல்லநெறி பக்திநெறி. கல்வி, கடுமையான தவநோன்பு போன்றவை தேவையில்லை.

பக்தி இரு வகைப்படும். அவை அபரபக்தி, பரபக்தி என அழைக்கப்படும். அபரபக்தி முதல்நிலை. இந் நிலையில் நல்ல தெளிவில்லாமல் பக்தன் சடங்குகளைச் செய்து வருவதையும், பரந்த இதயம் இல்லாமல் இருப்பதையும் காணலாம். இவன் ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்று ஒரு குறிப்பிட்ட தெய்வத்தையே வழிபட வேண்டும் என்று கருது கிறான். பிற தெய்வங்களை வழிபடும் பக்தர்களை வெறுக்கிறான்.

பரபக்தியில் ஈடுபடும் பக்தன், அனைத்துத் தெய்வங்களையும் வழிபடுவதுடன், பக்தியில் உயர்ந்த இறுதிநிலையில் நிற்கிறான். உலகம் தழுவிய உயர்ந்த அன்புநெறி பரபக்தியாகும்.

பக்திநெறி தொன்றுதொட்டு வந்தது; புதிய சமயமன்று.

**பக்திநெறி தோன்றக் காரணங்கள்**

(1) இடைக்காலத்தில் இந்து சமயம் சீரழியத் தொடங்கியது. (2) அது தன்னுடைய பண்டைய தூய்மையையும் கவர்ச்சி யையும் இழந்தது. (3) மூட நம்பிக்கைகள், சாதிப்பாகுபாடுகள், தவறான பழக்கவழக்கங்கள் தலைவிரித்தாடின. (4) பிராமணர் கள், பிற சாதியினரைக் கொடுமைப்படுத்தினர். (5) சமண, பௌத்த சமயங்கள் இந்து சமயத்தின் இப்போக்கினை வன்மை யாகக் கண்டித்து, எல்லோரும் பின்பற்றக்கூடிய எளிய சமய நெறிகளை எடுத்துரைத்தன. (6) இந்து சமயக் கோட்பாடுகள் எல்லோரும் அறிந்து பின்பற்றும் வண்ணம் அமையவில்லை. (7) இந்தியாவில் நுழைந்த இஸ்லாமிய சமயத்தினர் மிக வேக மாக இந்துக்களைச் சமயமாற்றம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். இது மிகுந்த வெறியுடன் செயல்படுத்தப்பட்டது. (8) இஸ்லா மியரின் ஒரு கடவுட் கோட்பாடும், உலகில் பிறந்த அனைவரும் உடன் பிறந்தோரே என்ற கொள்கையும் மக்களைக் கவர்ந்தன. (9) சமணம், பௌத்த சமயம், இஸ்லாம் மூன்றும் எடுத்துக்கூறிய எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஒரு நிறை, எல்லோரும் இந் நாட்டு மன்னர் என்ற சமத்துவக் கோட்பாடு தீண்டப்படா தோரை அச்சமயங்களின் அருகில் அழைத்தன. (10) இஸ் லாமிய சமயத்தைச் சார்ந்தோர், மிக வேகமாகத் தங்கள் சமயத்தைப் பரப்பத் தலைப்பட்டனர். இவை காரணமாக இந்து சமயத்தைப் பேணிக்காக்க வேண்டுமென்ற நன்னோக்கில் தோன்றியது பக்தி நெறியாகும்.

பக்தி இயக்கம் இந்து சமயத்தைச் சீர்திருத்தி, அதை இனிய சமயப் பூங்காவாக்கி, எல்லோரும் அங்கே சென்று தெய்விக

மணத்தை நுகர்ந்து பயன்பெறச் செய்தது. இக் காலத்தில் வட நாட்டிலும் தென்னாட்டிலும் பக்தி நெறியைப் பரப்பப் பலப்பல சமயச் சான்றோர்கள் தோன்றி இவ்வரிய பணியைச் சிறப்புறச் செய்து வருகின்றனர். வைணவ சமயப் பிரிவுகளையும், பிற இந்து சமயப் பிரிவுகளையும் சார்ந்தோர் நாடெங்கும், வட்டார மொழிகளில் பக்தி நெறியைப் பாமரனும் அறிந்து பின்பற்றும் வகையில் வழி செய்துள்ளனர்.

**பக்தி இயக்கத்தின் சீரிய பண்புகள்**

(1) பல்வேறு வடிவங்களில் பல்வேறு தெய்வங்களை வணங்கினாலும், அனைத்தும் ஒரே இறைவனின் பல தோற்றங்களே; ஆகவே 'ஒருவனே தேவன்'; அவனையே வணங்க வேண்டும். (2) முறையாகப் பக்தி நெறியில் சென்றால் வீடுபேறு அடையலாம். (3) நல்ல குருவின் துணை கொண்டு தான் நாம் இறைவனை அடைந்து பேரின்ப நிலை எய்த முடியும். (4) இராமனும் கிருஷ்ணனும் இறைவனின் அவதாரங்களெனக் கருதியதால், இராமனையும் கிருஷ்ணனையும் தொழும் நிலை அதிகமாக வடக்கே தோன்றியது. (5) மக்களுக்குள். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என எண்ணும் நிலை கூடாது. எல்லோரும் உடன் பிறந்தோரே என்பதை உணரவேண்டும். (6) உருவ வழிபாடும் சாதிப் பாகுபாடும் வெறுத்தொதுக்கப் பட்டன. (7) பயனற்ற சடங்குகள் வெறுக்கப்பட்டன. (8) மூடப் பழக்கவழக்கங்களின் முடை நாற்றம் நீக்கப்பட்டது. (9) கடினமான சமஸ்கிருத சமய நூல்களை, இதயத்தைத் தொடும் இனிய, எல்லோரும் அறிந்து பின்பற்றக்கூடிய எளிய நடையில் வட்டார மொழிகளில் மொழியாக்கம் செய்தனர். (10) இந்து-முஸ்லிம் ஒற்றுமையைக் கொணரக் கபீர் போன்றோர் பாடுபட்டனர். (11) பக்தி நெறியைப் பரப்ப வந்தோர் எல்லாச் சாதிகளையும் சார்ந்தோராக இருந்தனர். (12) அவர்கள் ஏழை பணக்காரர்கள், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடின்றி அனைவரும் அன்புடன் உண்டு, உறங்கி, உறவாடி அவர்களின் இன்ப துன்பங்களைத் துடைத்து, வாழ்ந்து எடுத்துக் காட்டாய் நின்றனர். (13) இறைவனிடம் தன்னை முற்றிலும் ஒப்படைத்து அவனைச் சரணடைய வேண்டுமென்னும் 'சரணாகதி நெறி' அல்லது பிரபத்தி நெறி சிறப்பான ஒன்றாகும். (14) ஞான, கரும நெறிகளைக்காட்டிலும் பக்தி நெறியே சிறந்ததெனப் புகழ்ந்து கூறப்பட்டது. (15) இறைவனின் திருநாமம் இடைவிடாது ஓதப்பட்டது. (16) துறவிகளால் பக்தி நிறுவனங்கள் அமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தன.

## 9.2. இடைக்காலப் பக்தி இயக்கம்

கி. பி. 1000-க்கும் 1707-க்கும் இடைப்பட்ட காலத்தில் பக்தி நெறி தோன்றி, வேர்விட்டு, வளர்ந்து, தனது பணியினைச் செய்துவந்ததை வரலாறு காட்டுகிறது. தெற்கே, குறிப்பாக கி. பி. 1000-க்கும் 1400-க்கும் இடைப்பட்ட காலத்தில் இராமானுசரின் விசிஷ்டாத்துவைத நெறி, மாத்துவரின் துவைத நெறி, மெய்கண்டாரின் சைவ சித்தாந்தம், பசவரின் வீரசைவம் போன்ற இறை நம்பிக்கை கொண்ட தத்துவ நெறிகள் தோன்றலாயின. வைணவத்தில், ஆழ்வார்களைத் தொடர்ந்து ஆசாரியர்களின் காலம் இடம் பெறுகிறது.

பின்பு கி. பி. 1400-க்கும் 1707-க்கும் உட்பட்ட காலத்தில் வடக்கே பக்தி இயக்கத்தைப் பரப்ப எண்ணற்ற சமயச் சான்றோர்கள் தோன்றினர். ஆனால் தெற்கே ஒருசிலரையே காண்கின்றோம். இந்திய வரலாற்றில் கி. பி. 1000-க்கும் 1707-க்கும் இடைப்பட்ட காலத்தில் பக்தி இயக்கத்தை வளர்த்தவர்களுள் குறிப்பிடத்தக்க சிலரது பணிகள் மட்டுமே கீழே ஆராயப்படுகிறது. பல சமயத்தைச் சார்ந்தோரும், பல சாதியிலிருந்து வந்தோரும் இதில் அடங்குவர். ஆதிசங்கரர் இடைக் காலத்தவரில்லை. ஆகவே அவரது அளவிடற்கரிய பணியை ஆராய வாய்ப்பில்லை. மேலும் அவர் ஞானநெறியையே மிகவும் வலியுறுத்தியவர்.

**இராமானுசர்**

இவர், பக்தி இயக்க வரலாற்றில் முதன் முதலில் தோன்றியவர். செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருப்பெரும்புதூரில் கி. பி. 1017-ல் பிராமண வகுப்பில் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் கேசவபட்டர். இவருக்கு இயல்பான தமிழ்ப் பெயர் இளையபெருமாள். இளமையில் தந்தையை இழந்த இவர், காஞ்சிக்கு வந்து யாதவப் பிரகாசர் என்பவரிடம் நான்மறைகளையும் அத்வைத நெறியையும் பயின்றார். ஆனால், தமது கருத்துக்கு மாறுபட்டதாய் அவர் கொள்கை தோன்றவே, பெரிய நம்பியின் சீடரானார். பின்பு திருமணம் செய்துகொண்டு சிலகாலம் வாழ்ந்தார். வைணவ மரபைச் சேர்ந்த இராமானுஜர் இல்லறவாழ்வை விடுத்துத் துறவறத்தை மேற்கொண்டு சமயப் பணிக்குத் தம்மை ஆளாக்கிக் கொண்டார்.

இவர் வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகம், வேதாந்த தீபம் ஆகிய மூன்று நூல்களை எழுதினார். பிரமசூத்திரத்திற்கு இவர்

எழுதிய உரை ஸ்ரீபாஷ்யம் எனப்படும். மேலும் பகவத் கீதைக்கு விளக்கவுரையும் எழுதினார். பக்திநெறியைப் பரப்ப இந்தியா முழுமையும் பயணம் செய்தார். பக்தி நெறிக்குப் பல்லாயிர மக்களை மாற்றினார். இவர் சலவைத் தொழிலாளியையும் தமது சமயக்கூட்டில் சேர்த்துக்கொண்டார். இவர் தமது நூற்றுப் பன்னிரண்டாம் ஆண்டில் பேரின்ப நிலையை அடைந்தார்.

இவரது கோட்பாடு விசிட்டாத்வைதமாகும். இவர் சங்கரரின் அத்துவைதக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. பேரின்பத்தை அடைய பக்தி ஓர் இன்றியமையாத நெறியென்பது இவரது கருத்து. இவர், சரணாகதி நெறியைப் பரிந்துரைத்ததுடன் சாதிவேறுபாடின்றி எல்லோரும் முக்தியடையத் தகுதியுடையவர் எனக் கூறினார். சூத்திரர்களை ஆலயவழிபாடு செய்ய அனுமதித்தார்.

அசித் (உலகம்), சித் (உயிர் அல்லது சீவன்), ஈசுவரன் (இறைவன்) ஆகிய முப்பொருள்களும் உண்மை என்பது இராமானுசர் கோட்பாடு. இறைவன் வேறு; சீவனும் வேறு. இவையிரண்டும் நிலையான இருபொருள்கள் என்பது இராமானுசர் கொள்கை. மேலும் இவர் உலகம், உயிர்கள், இறைவன் அனைத்தும் உண்மையென்பார். இவருடைய பிரமம் பண்புகளுள்ளது. நாராயணன் அல்லது பகவான் பரமாத்மா. இவர் காலத்திற்குப் பின்பு வடகலை, தென்கலை என்ற இரு பிரிவுகள் வைணவத்தில் தோன்றின.

**இராமாநந்தர்**

இராமரைச் சுற்றி எழுந்த பக்தி இயக்கத்தின் தலைவராக அவர் விளங்கினார். இவரது வாழ்க்கையைப்பற்றி அதிகம் அறிந்து கொள்ள முடியவில்லை. இவர் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தாரென்று நம்பப்படுகின்றது. இவரது முயற்சியால் வைணவம் வடக்கே பரவிற்று. இவர் பிரயாகை என்ற இடத்தில் பிறந்ததாகக் கருதப்படுகிறது. இராமர்-சீதை வழிபாட்டை மக்களிடையே பெரிதும் பரப்பத் தலைப்பட்டவர் இவர். சாதிப்பாகுபாட்டினை அறவே வெறுத்தார். தமது இயக்கத்தில் அனைவரையும் உடன் பிறந்தாராகக் கருதிச் சேர்த்துக் கொண்டார். இறைவன் முன் அனைவரும் ஒன்றே எனக் கூறினார். முதன்முதலில் தமது சமயக் கருத்துகளை இந்திமொழியில் பரப்பியவர் இவரே. இதனால் இவருக்கு

மக்களிடையே மிகுந்த செல்வாக்கு உண்டாயிற்று. வழிபாடு எளிமையாக இருத்தல் வேண்டும். மேலும் சாதிவேற்றுமைகளைக் களைவதே சமயச் சிக்கல்கள் தீர வழி எனக் கருதினார்.

ஒரு மரபுப்படி இவர் இராமானுசரின் நெறியைச் சார்ந்தவ ரென்றும் பின்பு காசியில் சென்று தங்கியதாகவும் கருதப்படு கின்றது. இவருக்குப் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த பன்னிரண்டு சீடர்கள் உண்டு. இஸ்லாமிய சமயத்தைச் சேர்ந்த கபீரும் பன்னிருவரில் ஒருவர். இவர் சமயச் சடங்குகளை, நோன்புகளை, புனிதப் பயணங்களை வலியுறுத்தவில்லை; பக்தி நெறியையே கடைப்பிடிக்க மக்களைத் தூண்டினார். சூத்திரர்களும், பிராமணர் களும் ஒன்றுகலந்து உறவாடும் நிலையை ஏற்படுத்திய பெருமை இவருக்குண்டு.

**மத்துவர்**

இவர் தென் கன்னடத்தில் உடுப்பிக்கருகிலுள்ள வெலாலி என்ற கிராமத்தில் கி.பி. 1199-ல் பிறந்தார். இவர் துளு பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். இவர் மத்திய கேகன் என்பவ ருக்கும் வேதவதி என்ற அம்மையாருக்கும் பிறந்தவர். தந்தை இவருக்கு இட்ட பெயர் வாசுதேவன்.

இவர் இளம் வயதிலேயே துறவறத்தை மேற்கொண்டார். அச்சுத பிரகாசாசாரியர் இவருக்குத் தீக்கை அளித்தார். அதன் பின்பு இவர் பூரண பிரக்ஞர் என அழைக்கப்பட்டார். இவரை ஆனந்த தீர்த்தர் எனவும் அழைப்பர். இவர் பக்தி நெறியைப் பரப்ப வடக்கேயும் தெற்கேயும் யாத்திரை மேற்கொண்டார்.

இவர் பகவத் கீதைக்கும், உபநிடதங்கட்கும், வேதாந்த சூத்திரங்கட்கும் உரை எழுதியுள்ளார். மகாபாரதச் சுருக்க மொன்றும், பாகவதத்திற்குப் பொழிப்புரையொன்றும் செய்துள் ளார். இவர் மொத்தம் 37 நூல்களை எழுதியுள்ளார்.

இவரது தத்துவம் துவைதம் எனப்படுவது. இவரது வைணவம் சத்-வைணவம் எனப்படும். இராமானுசரின் ஸ்ரீ வைஷ்ணவத்தினின்று வேறுபடுத்தவே இவ்வாறு அழைத்தார். விஷ்ணு அல்லது நாராயணனே முழுமுதற் கடவுள் என்பது இவரது கொள்கை. மத்துவருடைய நெறி ஐந்து வேறுபாடுகளைக் கூறுகின்றது. அவையாவன : (1) இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள வேறுபாடு. (2) உயிருக்கும் சடத்திற்கும் உள்ள வேறு

பாடு. (3) ஒரு சீவனுக் (உயிர்)கும் மற்றொரு சீவனுக்குமுள்ள வேறுபாடு. (4) சீவனுக்கும் சடத்திற்கும் உள்ள வேறுபாடு. (5) ஒரு சடப் பொருளுக்கும் மற்றொரு சடப் பொருளுக்குமுள்ள வேறுபாடு.

இவரது கருத்துப்படி நாம் காணும் உலகு உண்மையானது, நிலையானது. இவர் இராமானுசர், சங்கரர் என்பவர்களுடைய கோட்பாடுகளை எதிர்த்தார். இவரது தத்துவம் துவைதம்; இதன் பொருள் இரண்டு. ஆன்மா, இறைவன் என்பனவே இரு பொருள்கள். இவை இரண்டெனும் நிலை நீங்கி, ஒன்றெனும் நிலையை ஒருபோதும் அடையப் போவதில்லை என்பது இவரது கொள்கை.

கடுமையான நோன்புகளைப் பின்பற்றக் கூறினார். துறவு, பக்தி, தியானத்தின்மூலம் இறைவனை நேரில் அறிதல் வீடு பேறு அடைவதற்குரிய வழி எனக் கருதினார். இறைவனைக் காண விரும்பினால் வேதங்களைக் கற்று, புலனை அடக்கி, முழுமையாக அவனைச் சரணடைய வேண்டும் என்றார்.

**நிம்பார்க்கர்**

இவர் அருணமுனி, ஜெயந்திதேவி என்பவர்கட்குத் தென்னிந்தியாவில் கோதாவரி நதிக்கரையருகிலுள்ள வைத்தூரியபாட்டம் என்ற இடத்திற்கருகிலுள்ள கிராமத்தில் கி.பி. பதினோராம் நூற்றாண்டில் பிறந்தார். இவர் இராமானுசரின் சமகாலத்தவர். அதிக நாள்களை வடக்கே மதுராவிற்கருகிலுள்ள பிரஜா என்ற இடத்தில் கழித்தார். இவரது பக்தி நெறியைச் சேர்ந்தோர் இராதா-கிருஷ்ண வழிபாட்டில் நம்பிக்கையுடையவர்கள்.

பல நூல்களை இவர் எழுதியிருந்தாலும், பிரம்மசூத்திரத்திற்கும், வேதாந்த பாரிஜாத சௌரப்பத்திற்கும் எழுதியுள்ள உரைகளே பிரசித்தமானவை. பாகவதமே இவருக்கு முக்கியமான சமய இலக்கியம். இவருடைய தத்துவம் 'துவைதாத்வைதம்' எனப்படும். இவரும் சரணாகதி நெறியை வலியுறுத்தினார். இவரது கொள்கையை 'பேதா பேதம்' (Bhedabheda) எனவும் கூறுவர். இதன் பொருள்: சீவனுக்கும் இறைவனுக்கும் வேறுபாடு இருப்பினும், உண்மையாக வேறுபாடு இல்லை என்பதாகும். இறைவன், சீவன், உயிரற்ற உலகு அனைத்தும் ஒத்த தன்மையுடையவை; இருப்பினும் மாறுபட்டவை என்பது இவரது கோட்பாடு.

**கபீர்**

பக்தி நெறியில் சீர்திருத்தத்தைப் புகுத்தியவர் இவர். கி. பி. 1519-ல் கோரக்பூருக்கு அருகிலுள்ள மகர் என்ற இடத்தில் இறைவன் திருவடிநிழலை அடைந்தார் எனக் கூறப்படுகிறது.

காசிக்கருகிலுள்ள லகர்டலோ என்ற ஏரியில் தாமரை மலர் மேலிருந்த இக்குழந்தையை நிரு என்ற குழந்தையில்லா முஸ்லிம் நெசவாளர் கொணர்ந்து வளர்த்ததாகக் கூறப்படுகிறது. அவர் இவருக்குக் கபீர் எனப் பெயரிட்டார். இவர் ஒரு பிராமண இளம் விதவைக்குப் பிறந்தவர் எனக் கூறினும், கபீர் 'தான் எவர் கருவிலும் தோன்றவில்லை'யெனத் தம் கவிதைப் பெட்டகத்தில் கூறுகிறார். குருவில்லாமல் வளர்ந்த இவர், இராமானந்தரால் சீடராக ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

இவரை முகமதியர்களும் இந்துக்களும் விரும்பினர்; இந்து-முஸ்லிம் சமய ஒற்றுமைக்குப் பெரிதும் பாடுபட்டார்; எளிய சமயத்தைப் போதித்தார். கடவுள்பால் அன்பு செலுத்துவதே உய்வு பெற ஒரேவழி என்பது இவரது கருத்து. உலகமே இவரது வீடு, மனிதர்கள் அவருடைய உடன் பிறந்தோர். கடுமையான நோன்புகளைக் கடைப்பிடிக்கவும், தியானம் புரியவும் உலகைத் துறக்கவில்லை. நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், இவரது சிந்தனையெல்லாம் இறைவன் மீதே பதிந்திருந்தது. எல்லோர் உள்ளத்தையும் தொடும் வகையில் எளிய இனிய நடையில் இவரது சமயக் கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளது. இவர் இல்லறவாழ்வு நடத்தியதாக அறிய வருகிறது.

இவர் எழுதிய நூல்கள் எழுபத்தெட்டு. கபீர் பிஜக், சுகந்தன், சப்தாசு, சக்கிசு, இரக்தாச் மங்கல், வசந்து, ஹோலி ஆகமங்கள் இவற்றுள் குறிப்பிடத்தக்கவை. அழகிய நடையில் பழைய இந்தியில் பல்வேறு செய்யுள் வடிவில் இவற்றை எழுதியுள்ளார்.

'பக்தியை வலியுறுத்தாத சமயம் சமயமன்று' என்பது கபீரின் கருத்து. இறைவனுக்கு முன் இந்துவாயினும் இஸ்லாமிய சமயத்தவனாயினும் எல்லோரும் சமமே எனக் கூறினார். உண்மையே இயல்பானது அது இதயத்தில் உறைகின்றது. அன்பில் அது வெளிப்படுகின்றது. என்ற கருத்தினையுடையவர். உருவவழிபாட்டை வெறுத்தார். இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபட்ட முதல் முஸ்லிம் இவரே.

**நாமதேவர்**

மகாராஷ்டிரத்தில் பண்டரிபுரம் (Pandarpur) என்ற இடத்தைச் சார்ந்தவர் நாமதேவர் என்ற ஞானி. இவரது தொழில் தையல். இவர் கீழ்க்குலத்தில் கி.பி. 1426-ல் பிறந்ததாகக் கூறப்படுகிறது. இவர் சாதியை, உருவ வழிபாட்டை, சமயச் சடங்குகளை மகாராஷ்டிரப் பகுதியில் சாடிய முதல் சமயச் சான்றோர். இவர், உண்மையான பக்தியையும் கடவுள் வழிபாட்டையும் மிகவும் வலியுறுத்தினார். எல்லாச் சாதியினரும், இஸ்லாமிய சமயத்தினின்று இந்து சமயத்திற்குச் சமய மாற்றம் செய்யப்பட்டவர்களும் இவரைப் பின்பற்றினர். பூசாரிகளின் கொடுமையை வெறுத்தார். எண்பதாவது வயதில் இறைவன் இவரை அழைத்துக் கொண்டார்.

**குருநானக்**

இவர் ஒரு க்ஷத்திரிய அனுபூதிக் கவிஞர். சீக்கிய சமயத்தை நிறுவிய நானக், பஞ்சாப் மாநிலத்தில் இலாகூர் மாவட்டத்தில் டால்வந்தி என்ற கிராமத்தில் கி. பி. 1469-ல் தோன்றினார். இவர் தந்தை கலுச்சந்து, தாயார் திரிபதை. இவர் திருமணம் செய்துகொண்டு இரு புதல்வரைப் பெற்றிருந்தும் தனியே காடுகளில் சென்று தியானம் செய்வதை விட்டுவிடவில்லை. கடுமையான நோன்புகளையும் கடைப்பிடித்தார். உள்ளத்தை உருக்கும் இவர் பாடல்கள், சீக்கியர்களின் தூயநூல் தொகுப்பாகிய ஆதிகிரந்தத்தில் இடம் பெறுகின்றன. இவர் கி.பி. 1538-ல் கர்த்தாபூர் என்ற இடத்தில் காலமானார்.

ஒன்றே கடவுள் என்ற கருத்தைக் கூறி இந்து-முஸ்லிம் ஒற்றுமையை உருவாக்க முயன்றார். தம் வாழ்நாளில் இவர் ஒரு புதிய சமயத்தை நிறுவ முயலவில்லை. இவர் காலத்தில் சீக்கிய சமயம் தனிச் சமயமாக இல்லாமல், இந்து சமயத்தின் ஒரு கிளையாகவே இருந்தது.

இவருக்குக் குரானிலும் வேதத்திலும் நம்பிக்கை இல்லை. இந்துசமய பிராமண ஆதிக்கத்தையும், இஸ்லாமிய சமய முல்லாக்களின் ஆதிக்கத்தையும் வெறுத்தார். சமயச் சடங்குகளை, உருவ வழிபாட்டை, நோன்புகளை, புனிதப் பயணங்களை எதிர்த்தார். இந்துக்களையும், முகமதியர்களையும், எல்லாச் சாதியினரையும் தம் நெறிக்கு அழைத்துக் கொண்டார். உருவமில்லா ஓர் இறைவனில் நம்பிக்கை வைத்தார். கருமவினையிலும்,

மறுபிறவியிலும் இவருக்கு நம்பிக்கை உண்டு. ஒழுக்கம், பணிவு, நேர்மை, தருமம், உண்மை, கருணை போன்றவை இவர் போதனைகளில் முக்கிய இடம் பெற்றன. அரியின் (இறைவன்) பெயரை சதா சிந்தித்தல், உடலாலும் உள்ளத்தாலும் குருவிற்குக் கீழ்ப்படிந்து நடத்தல் சீக்கியர்களின் முக்கியக் கடமைகளாகும். இறைவனை அளவற்ற பக்தியுடன் வழிபடுவது இன்றியமை யாதது எனக் கூறினார். இறைவன் திருநாமங்களை இனிய பாடல்களால் இசையுடன் பாடி இதயத்தைத் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டுமென்பது இவரது கொள்கை.

### வல்லபாசாரியார்

வைணவத்தில், கிருஷ்ண வழிபாட்டு நெறியை மீண்டும் வலியுறுத்தும் மற்றொரு ஞானி வல்லபர். இவர் கி. பி. 1479-ல் காசியில் தெலுங்கு பிராமண குடும்பத்தில் பிறந்தார். பெற்றோர்கள் தெற்கே வாழ்ந்துவந்தமையால் அவர்களோடு தெற்கே குடிபெயர்ந்தார். தந்தை இலக்குமணபட்டர், அன்னை இல்லம் மாள். இவர் சைதன்ய மகாபிரபுவின் காலத்தவர். பன்னிரண்டு வயதிற்குள் வேதங்கள், ஆறு தரிசனங்கள், பதினெட்டுப் புராணங்கள் அனைத்தையும் கற்று முடித்துவிட்டார். பிருந்தா வனம் சென்றுவிட்டு அனைத்துப் புண்ணியத்தலங்கட்கும் சென்றுவந்தார். காசியில் மகாலட்சுமி என்ற பிராமணப் பெண்ணை மணந்து, அவள்மூலம் இரு புதல்வர்களைப் பெற்றார்.

இவருடைய நூல்களில் குறிப்பிடத்தக்கவை வியாச சூத்திர பாஷ்யம், ஜெய்முனி சூத்திர பாஷ்யம், பாகவத திக்க சுபோதினி, புஸ்தி பிரளவ மர்யாதை, சித்தாந்த இரகசியம். இவை அனைத்தும் வடமொழியில் எழுதப்பட்டவை. இவர் பல நூல்களை பிரிஜ்பாஷையிலும் எழுதியுள்ளார்.

இவர் சுத்த அத்துவைத தத்துவத்தை அளித்தவர். இதைத் தூய ஒரு பொருள் கோட்பாடு என்பர். இவரைப் பின்பற்றுவோர் பாலகிருஷ்ண வழிபாட்டில் நம்பிக்கையுடையவர்கள். இந்த பக்திநெறியை வாத்ஸல்ய பாவம் என்பர். கருணையையும் பக்தியையும் மிகவும் வலியுறுத்தினார். இறைவனின் பெருங் கருணையை மகாபுஷ்டி அல்லது அநுக்கிரகம் என்று கூறுவர். இதுவே இறைவனை அடைய இன்றியமையாதது என்பர். கிருஷ்ணனே உயர்ந்த பிரம்மம். அவர் புருஷோத்தமர். ஆத்மா விற்கும் பரமாத்மாவிற்கும் வேறுபாடில்லை. பக்தியின்மூலம் முக்தி

யடைந்து பரமாத்மாவுடன் ஆத்மா கலந்துகொள்ளலாம் என்பது அவரது கோட்பாடு.

**மீராபாய்**

இவர், இராசபுதனத்தில் மெர்தா மாவட்டத்திலுள்ள குடுக்கி என்ற கிராமத்தில் கி. பி. 1499-ல் அல்லது 1557-ல் பிறந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. அரச குடும்பத்தைச் சேர்ந்த இவர், வைணவ சமய மரபில் வளர்க்கப்பட்டார். இந்நெறி இவரிடம் கிருஷ்ணன்பால் மிகுந்த ஈடுபாட்டைக் குழந்தைப் பருவத்திலிருந்தே ஏற்படுத்திவிட்டது. தமது கருத்துகளை மக்களின் வட்டார மொழியாகிய 'பிரிஜ்பாஷையில்' பரப்பினார். பிறப்பு-இறப்பென்னும் சுழற்சியினின்று விடுபட்டுப் பேரின்பத்தைப் பெறக் கிருஷ்ண பக்தி இன்றியமையாதது எனக் கூறினார். இவர் பக்திப் பாடல்கள் மிக இனிமையானவை, இன்றும் மக்களால் பாடப்பட்டு வருகின்றன. பக்தி நெறியைச் சுவையான பாடல்கள் மூலம் மக்களிடையே பரப்பினார். புரோகிதர்களின் ஆதிக்கத்தை எதிர்த்தார். எளிய பக்தியையும், நம்பிக்கையையும் போதித்தார். அவை வீடுபேறு அடைவதற்குரிய எளிய நெறிமுறைகள் எனக் கருதினார். பிறப்பால் யாரும் உயர்வதில்லை ; உயர்விற்குக் காரணம் செயலே என்ற கருத்தை மீரா ஏற்றுக்கொள்கிறார்.

**சைதன்யர்**

இவரை 'ஸ்ரீ சைதன்ய மகா பிரபு' என்றும் அழைப்பர். வங்காளத்தில் பக்தி நெறியைப் பரப்பிய இவர், கி. பி. 1485-ல் நாடியா என்ற இடத்தில் பிராமண குடும்பத்தில் பிறந்தார். திருமணம் செய்து கொண்டார். ஆனால் 25 ஆவது வயதில் இல்லற வாழ்வைத் துறந்து, இறைவன் திருப்பணிக்குத் தம்மை ஆளாக்கிக் கொண்டார். நாடு முழுவதும் சென்று வந்தார். இவரது இயற்பெயர் விசுவாம்பரர்; தந்தை செகநாத மீசிரா. துறவறத்தை மேற்கொண்டவுடன் இவரைச் சைதன்யர் என்றழைத்தனர். பூரி என்ற இடத்தில் கி. பி. 1533-ல் மறைந்தார்.

கிருஷ்ணன் அல்லது அரி என அழைக்கப்படும் ஒரே புருடோத்தமன்மேல் ஆழ்ந்த நம்பிக்கையும், அன்பும் கொள்ள வேண்டுமென்பது இவரது சமயமாகும். இச்சமயம், சடங்கிலிருந்து விடுபட்டிருந்தது. பக்திப் பெருக்கால் ஆடிப்பாடி, உணர்வுப் பிழம்பாக இறைவனின் அருள் வெள்ளத்தில் திளைத்திருந்தனர் இந்நெறியைச் சார்ந்தோர். 'கண்ணனை வழிபட்டு, குருவிற்குப் பணிந்து பணிபுரிந்து வந்தால், மாயையின் சிக்கலி

னின்று விடுபட்டு, அவன் திருவடிகளை அடையலாம்' என்பது இவரது கோட்பாடு. சாதிப் பாகுபாட்டை வெறுத்தார். பெருமையை விடுத்து, பணிவை மேற்கொள்ளச் சொன்னார். இன்றும் வங்காளத்திலும் ஒரிஸ்ஸாவிலும் இவரைக் கண்ணனின் அவதாரமாக வழிபடுகின்றனர். மக்கள் அனைவரும் உடன் பிறந்தோர் என்ற உயரிய கருத்தை இவரும் ஏற்றுக் கொள்ளுகிறார்.

### துளசிதாசர்

பக்திமான், பண்பட்ட கவிஞர் என்ற இருவகையிலும் இவர் சூர்தாசரைவிட உயர்ந்தவர் எனக் கருதப்படுகிறார். கி. பி. 1532 அளவில் இவர் பிராமண குடும்பத்தில் பிறந்தார். இவர் தந்தை ஆத்மராம் டிடூபே, தாய் ஹல்ஸி. இரத்தினாவளி என்ற இவர் துணைவி இவரை இழித்துரைத்ததால், இல்லற வாழ்வை விடுத்துத் துறவறத்தை மேற்கொண்டார். இராம சரித மானசம் அல்லது இராமாயணம் என்ற இலக்கியப் பெரும் படைப்பைக் கி. பி. 1574-ல் தமது 42 ஆவது வயதில் தொடங்கி இரண்டாண்டு ஏழு திங்களுக்குள் முடித்தார். இச்சீரிய நூலைத் தவிர கீதாவலி, கவிதாவலி, விநய பத்திரிகை போன்ற பல நூல்களையும் எழுதியுள்ளார். இராம சரித மானசம் பெரிய இலக்கியப் படைப்பு மட்டுமன்று; உயர்ந்த தெய்விக பக்திக் காவியமும் ஆகும். இராமனை இறைவனின் அவதாரமெனக் கருதினார். அவரை, மனிதன் பக்தியால்தான் அணுகமுடியுமென்று கூறினார். இவர் கி. பி. 1623-ல் தமது 91 ஆவது வயதில் இறைவன் திருவடிகளை அடைந்தார். இன்றும் கோடிக் கணக்கான மக்கள் அவரைச் சிறந்த வைணவ பக்தராகவும் ஆசாரியராகவும் கருதுகின்றனர்.

### சூர்தாசர்

இவரைப்பற்றிக் கூறாமல் பக்தி இயக்கம் நிறைவுபெறாது. இவர் உயர்ந்த ஞானி; நல்ல சமயப்பரப்புநர்; சிறந்த சீர்திருத்தவாதி. இவர் கி. பி. 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இந்தியில் மிகச்சிறந்த நூல்கள் சிலவற்றிற்கு இவர் ஆசிரியர். இவையனைத்தும், தான் விரும்பும் தெய்வத்தின்பால் செலுத்தவேண்டிய அன்பையும் பக்தியையும் விளக்கும் சமய நூல்கள். கடந்த முந்நூறு ஆண்டுகளாக வடக்கேயுள்ளோரின் இதயங்கவர்ந்த இனிய நூல்கள் இவை. சூர் சரவலி சாகித்ய இரத்தினம், சூர் சாகர் என்ற மூன்று நூல்கள் இவர் எழுதியவற்றுள் மிகச் சிறப்பானவை. சூர் சாகர் என்ற நூலில் அன்பு, பக்தி இவற்றின் செறிவுநிலையைக் காண்பதுடன்,

கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துத் தீட்டியுள்ள அற்புத நிலையினையும். காண்கிறோம் இந்நூல், இவர் 'குழந்தை உளவியல் அறிவியலி'ல் ஒரு மேதை என்பதையும், இறைவனின் உண்மையான பக்தர் என்பதையும் காட்டுகிறது. இவர் பிரஜ்பாஷையைப் பயன்படுத்தினார். இவர் நூல்களில் இழைந் தோடும் செய்தியின் மையக்கருத்து 'வாழ்வே ஒரு கவிதை' என்ப தாகும். 'வாழ்வு ஒரு விளையாட்டு, வீரதீரச் செயல், ஆனால் அது போராட்டமன்று, ஏமாற்றம் செறிந்த கதையன்று' எனக் கூறுகிறார். இவர் கவிதைகள், மனித இனத்தின்பால் வியத்தகு விளைவை ஏற்படுத்தியதுடன், பக்தி நெறியின் வழிகாட்டி யாகவும் இருந்தன.

துக்காராம்

துக்காராம் ஒரு மஹாராஷ்டிர ஞானி; இந்திரயாளி நதிக் கரையில் இருந்த தியோ என்ற கிராமத்தில் வாழ்ந்தவர். இது புனாவுக்கருகில் உள்ளது. இவர் கி. பி. 1608ஆம் ஆண்டளவில் வைசிய குடும்பத்தில் பிறந்திருக்கலாமென வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். மராத்திய மக்களிடம் நாட்டுப்பற்றை வளர்க்க, சிவாஜி காலத்தில் வாழ்ந்த இவருடைய போதனைகள் பெரிதும் துணைபுரிந்தன. சாக்ரடீஸைப் போன்று இவருக்கும் ஒரு கொடூரமான மனைவி இருந்தாள். இதன் விளைவாக, குடும்ப வாழ்வைத் துறந்து பக்தனாகவும் சீர்திருத்தவாதியாகவும் மாறினார். இவர் கபீரைப் போன்ற கடவுள் கருத்துடையவர். 'கடவுளுக்குப் பெயரோ, உருவமோ, உறைவிடமோ இல்லை. அவர் நீக்கமற நிறைந்திருப்பவர், வரம்பிலா ஆற்றலுடையவர்' எனக் கருதுபவர். அக்கால ஞானிகளைப் போன்று இவரும் சமயச் சடங்குகளை, சாதிக் கொடுமைகளை, சமுதாய ஏற்றத்தாழ்வு களை எதிர்த்தார். இவரைப் பின்பற்றுவோர், மஹாராஷ்டிரத் திலும் இந்தியாவின் பல பகுதிகளிலும் இருந்தனர். பேரரசர் சிவாஜி இவருடைய முக்கிய சீடர்களில் ஒருவர். சைதன்யரைப் போன்று பக்திப் பாடல்களை இயற்றியுள்ளார்.

ஏகநாதர்

இவரும் மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர். சூரியநாராயணன், உருக்குமணி என்பவர்கட்குப் பைத்தான் என்ற ஊரில் கி. பி. 1533-ல் பிறந்தார். இவருக்குச் சிறுவயதிலேயே பக்தி, உள்ளத்தில் கனல் விட்டு எரிந்தது. பின்பு சனார்த்தனன் என்ற பண்டிதரிடம் எட்டு ஆண்டுக்காலம் சீடராக இருந்தார். பின்பு இவர் குருவின் கட்டளைப்படி கிரிஜாபாய் என்ற கற்பிற்கினியாளைக் கைப் பிடித்தார்.

இவருக்குத் தீண்டப்படாதோர்பால் தீராக்காதல் உண்டு. கண்ணனை அனைத்திலும் கண்டார். அவர்பால் கறைபடியா அன்புகொண்டவர்.

இவர் பாகவதம் என்ற நூலை எழுதினார். இதுவும் துளசி தாசருடைய இராமசரித மானசத்தைப் போன்று சிறந்த சமய இலக்கியமாகக் கருதப்படுகிறது. இஃது ஏகநாதர் பாகவதம் என அழைக்கப்படுகிறது.

இவர் 66 ஆவது வயதில் கி. பி. 1599-ல் இவ்வுலகை நீத்தார். ஏகநாதர் தீவிர பக்தர், பெரிய பாகவத புருஷர், சிறந்த இல்லற நெறியாளர், பெரிய ஞானி. இவர் இன்றும் மக்களுக்கு எடுத்துக் காட்டாக இலங்குகிறார்.

**பசவர்**

பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் ஒரு புதிய நெறி தோன்றியது. அந்நெறியை வீரசைவம் அல்லது இலிங்கா யதம் என அழைப்பர். அதை நிறுவியவர் பசவர். இவர் சாளுக்கிய மன்னன் பிஜ்ஜல் என்வனிடம் அமைச்சராகப் பணியாற்றியவர். இந்நெறி 'சிவனை' மட்டுமே கடவுளெனக் கருதியது. வழிபாட்டின் மூலம் வீடுபேறு அடையலாம் என்பது இவரது கருத்து. இவர் வேதங்களையோ, மறுபிறவியையோ நம்பவில்லை. சாதிப்பாகு பாட்டை, சடங்கியலை, உருவ வழிபாட்டைக் களைவதில் இவர் பெரும் வீரராகத் திகழ்ந்தார். தம்மைப் பின்பற்றுவோர் புலாலை யும், கள்ளையும் விட்டுவிட வேண்டுமென வலியுறுத்தினார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்; பால்ய விவாகத்தை வெறுத்தார். வசனங்கள் என்பதில் இவரது போதனைகள் அடங்கியுள்ளன. இவரைப் பின்பற்றுவோரை இலிங்காயத்துகள் என அழைப்பர். இவர்களைக் கர்நாடக மாநிலத்தில் காணலாம்.

**பக்தி இயக்கத்தால் ஏற்பட்ட விளைவுகள்**

நாடு முழுவதும் பரவிய பக்தி இயக்கத்தால் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டன.

(1) சமயத்துறையில், இஃது இந்து சமயத்தைச் சீர்திருத்த வழிகோலியது, வீணான சடங்குகள் ஒழிந்தன. மூட நம்பிக்கை களும் நீங்கிச் சமயம் தூய்மையடைந்தது.

(2) இஸ்லாமிய சமயத்தின் கடும்மோதலிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. இந்து சமயமும் ஒரு கடவுள் கோட் பாட்டையும், 'உலகில் அனைவரும் உடன்பிறந்தோரே' என்ற

கொள்கையையும் இஸ்லாமைப் போன்று வலியுறுத்தியது. ஆகவே இந்துக்கள் இஸ்லாத்தைத் தழுவ விரும்பவில்லை.

(3) பக்தி இயக்கம் பஞ்சாபில், சீக்கிய சமயம் நிறுவக் காரணமாக அமைந்தது.

(4) சமுதாயத் துறையில் சாதி வேற்றுமை கடுமையாகச் சாடப்பட்டது.

(5) இந்துக்களும் முஸ்லிம்களும் மிக நெருக்கமாகப் பழகத் தலைப்பட்டனர். ஏனெனில், முக்கியக் கோட்பாடுகளில் இரு சமயங்களிலும் வேறுபாடுகள் இல்லாதிருந்தன.

(6) இந்தியிலும் பிற வட்டார மொழிகளிலும் இலக்கியம் வளர ஆரம்பித்தது.

(7) பக்தி இயக்கத்தின் துணைகொண்டே பல டில்லி சுல்தான்கள் இந்து, முஸ்லிம் இருவரிடையே இணக்கத்தையும், கூட்டுறவையும் வளர்க்க முயன்றனர்.

(8) இந்து சமயப் பக்திநெறி அக்பரை, இந்துக்களையும் முஸ்லிம்களையும் தனது பேரரசின்கீழ் ஒருசீராக நடத்த வழி வகுத்தது.

## 9.3. ஆழ்வார்கள்

### முன்னுரை

சைவம், வைணவம் என்னும் இருபெருஞ் சமயங்களும் தமிழ் நாட்டில் இன்றும் மிகவும் சிறப்புடன் போற்றப்பட்டு வருவன ஆகும். மனித உடலுக்குத் தலை சிறப்பான உறுப்பு. அதில் இரு கண்கள் சிறப்பான இடத்தைப் பெறுவது போன்று, இரு சமயங்களும் வாழ்விற்கு இன்றியமையாத நெறிகளாகத் திகழ் கின்றன.

ஆழ்வார்கள் அருளிச்செய்த தெய்விக நலம்பொருந்திய நாலாயிர திவ்வியப் பிரபந்தம் அழியாத அரும்பெருஞ் சமயக் கலைக் களஞ்சியம். அத்தெய்விகப் பாடல்கள் வாயிலாக ஆழ்வார்களின் அருளனுபவங்களையும் அறிவுரைகளையும் நாம் அனைவரும் அறிந்துகொண்டு அளப்பரிய நலங்களை அடைய லாம்.

ஆழ்வார்கள் அருளிச்செய்த 'நாலாயிர திவ்வியப் பிரபந் தத்தை' நமக்குத் தமது பெருமுயற்சியால் சேகரித்து வகைப் படுத்திக் கொடுத்தவர் நாதமுனிகள். இவர் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள, காட்டுமன்னார் கோயிலில் தோன்றியவர். இவருடைய சீடர்களில் சிறந்து நிற்பவர் உய்யக்கொண்டார்.

### ஆழ்வார் விளக்கம்

இறைவனின் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து கிடப்பவர், இறைவனின் அன்பிலும், இன்பத்திலும் மூழ்கியிருப்பவர் ஆழ்வார் எனப்பட்டனர். திராவிட வேதமான திவ்வியப் பிரபந் தத்தை அருளியதால் இவர்களைத் திரமிடாசாரியர்கள் என்று அழைத்தனர். இவர்களுக்கு திவ்விய சூரியர்கள், மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள், இருந்தமிழ்ப் புலவர்கள், ஆதிபக்தர்கள் என்ற வேறு பல பெயர்களும் உண்டு. இவர்கள் பன்னிருவர்.

### காலம்

இவர்கள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்ததாக அறிகி றோம். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, இவர்கள் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடையில் வாழ்ந்திருக்க வேண்டுமெனக் கூறுகிறார். எப்படியும் இவர்கள் கி. பி. 900-க்கு முன்பு வாழ்ந்திருக்க வேண்டுமென்று கருதுவதில் தவறில்லை.

### ஆழ்வார்கள்—பிரிவு

கால அடிப்படையிலே இவர்களை (1) முற்காலத்தவர்கள், (2) இடைக் காலத்தவர்கள், (3) பிற்காலத்தவர்கள் எனப் பிரிக் கலாம்.

முற்காலத்தவர்கள் : பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார் அல்லது திருமழிசைப் பிரான் என்பவர்கள் முற்பட்டவர்கள்.

இடைக்காலத்தவர்கள் : நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பட்டர்பிரான் என்ற பெரியாழ்வார், கோதை நாச்சியார் என்ற ஆண்டாள் என்பவர்கள் இடைக்காலத்தவர்.

பிற்காலத்தவர்கள் : தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பா ணாழ்வார், கலியன் என்ற திருமங்கையாழ்வார் என்பவர்கள் பிற்காலத்தவர்.

**ஆழ்வார்கள் — சிறுகுறிப்பு — பாடல்கள்**

1. பொய்கை ஆழ்வார் : இவர் காஞ்சிபுரத்தில் திருவெஃகா என்னும் இடத்தில் தோன்றினார். இவரது அருளிச் செயல்: முதல் திருவாந்தாதி, 100 பாசுரங்கள்.

அரியும், அரனும் ஒன்று என்ற உண்மையை இவர் பாடல்கள் தெளிவாக எடுத்துக்காட்டும். 'இயற்கையே இறைவன், அருளே இறைவன், அன்பே இறைவன், அறிவே இறைவன்' என்ற உயர்ந்த கருத்துகளை இவர் பாடல்களில் காணலாம். முதலாழ்வார்கள் காலத்தில் சைவ வைணவ வேற்றுமை, வெறுப் புணர்ச்சி இரண்டும் இல்லை. தமிழின் இனிமை, பெருமை, சிறப்பு, இயற்கைக் காட்சி அனைத்தையும் இவர் பாடல்களில் காணலாம்.

நயவேன் பிறர்பொருளை; நள்ளேன் கீழாரோடு;
உயவேன் உயர்ந்தவரோடு அல்லால்; — வியவேன்
திருமாலை அல்லது தெய்வம் என்று ஏத்தேன்;
வருமாறு என் நம்மேல் வினை?

என்ற இவரது பாடல்,

'பிறர் பொருளை விரும்பமாட்டேன்; கீழான தன்மையுள்ளவர்களுடன் நட்புக்கொள்ளமாட்டேன். உயர்ந்தவரோடு சேர்ந்து வாழ்வேனே அல்லாமல் மற்றவர்களோடு சேரமாட்டேன். திருமாலைத் தவிர வேறு தெய்வத்தையும் தெய்வம் என்று புகழ மாட்டேன்; வணங்கமாட்டேன். ஆதலால் நம்மை நாடிப் பிறப்பு இறப்புத் துன்பத்தைத் தரும் வினை இனி வரமுடியாது' என்னும் உயர்ந்த அற, சமயக் கருத்துகளின் பெட்டகம்.

2. பூதத்தாழ்வார் : இவர் திருக்கடன்மல்லை என்ற மகாபலி புரத்தில் தோன்றியவர். இவரது அருளிச்செயல்: இரண்டாம் திருவந்தாதி, 100 பாசுரங்கள்.

தமிழ்மொழியை ஞானத்தமிழ் என்று அழைப்பதுடன், தன்னை தமிழன் என்று சொல்லிக்கொள்வதிலும் பெருமைப் படுகிறார். மேலும் சமய சமரச நோக்கும் உடையவர். அன்பு, சிந்தனை இவற்றால் ஞானத்தைப் பெற்ற நிலையைக் காட்டும் பாடல் இதோ :

அன்பே தகழியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை இடுதிரியா, — நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு;
ஞானத் தமிழ்புரிந்த நான்.

'ஞானத்தை — அறிவை — பெருக்கும், தமிழை விரும்பிய நான், அறிவாகிய சுடர்விளக்கு ஒன்றைக் கொளுத்தினேன். அந்தச் சுடர் விளக்கை எப்படி ஏற்றினேன் தெரியுமா? அன்பையே அகலாக—எண்ணெய், திரி முதலியவற்றைத் தாங்கும் கருவியாக அமைத்தேன்; அன்பின் முதிர்ச்சியான ஆசையையே நெய்யாகக் கொண்டேன்; எம்பெருமானை எண்ணி இன்பத்தால் உருகுகின்ற உள்ளத்தையே எண்ணெயில் இட்ட திரியாகக் கொண்டேன். இவ்வாறு தகழி, நெய், திரி முதலியவற்றைச் சேர்த்து, நன்றாக மனம் உருகி ஞான ஒளியாகிய விளக்கைத் திருமாலுக்காக ஏற்றினேன்' என்பது இதன் பொருள்.

பூதத்தாழ்வாரால் போற்றப்படும் நாராயணன், 'திருப்பதிகளிலெல்லாம் மேலான திருப்பதி அடியார்களுடைய இதயம் தான்!' என்று உகந்தருளுகிறானாம். பொய்கையாழ்வாருடைய ஞானபக்தியில் ஞானம் அதிகம்; பூதத்தாழ்வாருடைய ஞான பக்தியில் பக்தி அதிகம் என்று சொல்லலாம்.

3. பேயாழ்வார் : இவர் சென்னையில் மயிலையில் தோன்றினார். அருளிச் செயல்: மூன்றாம் திருவந்தாதி, 100 பாசுரங்கள்.

எந்தச் சமயத்தைப் பின்பற்றினாலும், எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் அந்தச் சமயத்திலே, அக்கொள்கைகளிலே நம்பிக்கைவேண்டும். எந்தத் தெய்வத்தை வணங்கினாலும், அந்த தெய்வத்தின்பால் உறுதியான நம்பிக்கை வேண்டும். இவ்வாறிருப்பவர்கள்தான் உண்மையான பக்தர்கள் ஆவார்கள். இந்த உண்மையைப் பேயாழ்வார் ஒரு வெண்பாவில் விளக்கிச் சொல்லுகின்றார்.

அது நன்று, இதுதீது என்று ஐயப்படாதே,
மது நின்ற தண்துழாய் மார்வன்—பொதுநின்ற
பொன் அம் கழலே தொழுமின்! முழுவினைகள்
முன்னம் கழலும் முடிந்து.

'உங்கள் உள்ளத்திலே ஐயம் கொள்ள வேண்டாம்; அது நல்லது; இது கெட்டது; ஆதலால் இதைவிட்டு அதைப் பற்றுவோம் என்று எண்ணவேண்டாம்; இந்த ஐயப்பாடுகள் வேண்டவே வேண்டாம்.

தேன்சிந்துகின்ற குளிர்ந்த அழகிய துளசி மாலையை அணிந்த மார்புடைய திருமால் எல்லார்க்கும் பொதுவாக

நின்றவன். அவனுடைய அழகிய திருவடிகளை வணங்குங்கள். இவ்வாறு அவனைத் தொழ நினைத்தீர்களானால் போதும்; உடனே உங்கள் வினைகள் எல்லாம் நீங்கள் தொழுவதற்கு முன்பே ஓடிப்போய்விடும்; மீண்டும் அவை உங்களைத் தீண்டா; முடிவாக விலகிப் போய்விடும்' என்பதே மேலே கண்ட பாவின் கருத்து.

பகுத்தறிவென்ற ஒளிவிளக்கைப் பயன்படுத்தி எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் நாம் நன்மையடையலாம் என அறிந்து கொள்ளுங்கள் எனக் கூறுகிறார். இவரும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் போன்று சமரச நோக்குடையவர்.

**4. திருமழிசையாழ்வார் :** இவர் சென்னை பெரும்பூதூர்ச் சாலையிலுள்ள திருமழிசை என்ற ஊரில் தோன்றினார். அருளிச் செயல்: (1) நான்முகன் திருவந்தாதி, 96 பாசுரங்கள் (2) திருச் சந்த விருத்தம், 120 பாசுரங்கள்.

திருமழிசை ஆழ்வார், ஆரம்பத்தில் நாத்திகராயிருந்தார். பின்னர் முறையே பௌத்த சமயம், சமண சமயம், வேதாந்த சமயம் அனைத்திற்கும் சென்று, இறுதியாக வைணவராக மாறினார். இவரது வரலாற்றைக் கொண்டு, இவர் காலத்தில் தமிழகத்திலே நாத்திகம், சமணம், பௌத்த சமயம், சைவம், வைணவம் போன்ற பல சமயங்கள் இருந்ததைக் காண்கிறோம்.

இவருடைய பாடல்கள் உலக நிலையாமையைத் தெளிவாக எடுத்தியம்புகின்றன. மேலும் இயற்கைக் காட்சிகளும், சமரசக் கருத்தும், அதே நேரத்தில் சிவனைத் தாழ்த்திக் கூறியிருக்கும் பகுதிகளும் உண்டு.

இறைவன் ஒருவனே என்ற உண்மை இவர் பாடல்களில் பொதிந்து கிடப்பதைக் காணலாம். இவர் எல்லாம் திருமால் மயம் என்று எண்ணுகிறார். சமரச நோக்குக் கொண்ட அனைவருமே 'கடவுள் ஒருவரே, உலகிலுள்ள அனைத்தும் இறைவனே; நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தும் இறைவனாலேயே நிகழ்த்தப்படுகின்றன; அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' எனக் கருதுகின்றனர்.

'இறைவனிடமிருந்தே எல்லாம் பிறக்கின்றன, அவனிடமே எல்லாம் அடங்குகின்றன' என்பதை அழகான உவமானத்தால் விளக்குகிறார்.

'கடல் தானாக அலைகளை உண்டாக்கிப் பொங்கியெழச் செய்து, தன்னுள்ளே அடங்கிவிடச் செய்கின்றது. இதுபோன்று இறைவனே! உன்னிடத்திலே பிறந்து, நிலையாக நிற்கின்ற தாவரங்களும், அலைந்து திரிகின்ற உயிரினங்களும், மீண்டும் நின்னிடத்தே மறைகின்றன. இத்தகைய சீரிய இயல்பு உன்னிடம் இருக்கின்றது'. இக் கருத்தினை உணர்த்தும் பாடல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தன்னுள்ளே திரைத்தெழும் தரங்கவெண் தடம் கடல்
தன்னுள்ளே திரைத்தெழுந்து அடங்குகின்ற தன்மைபோல்,
நின்னுள்ளே பிறந்து இறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுள்ளே அடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே.

5. நம்மாழ்வார்: இவர் கி. பி. 9ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர். இவருக்கு மாறன், சடகோபன், பராங்குசன், வகுளபூஷணன் என்ற பல பெயர்கள் உண்டு. மதுரகவி ஆழ்வார் இவருடைய மாணவர். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆழ்வார் திருநகரியில் தோன்றியவர். இவர் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி போன்ற பாசுரங்களை இயற்றியுள்ளார். மொத்தம் 1296 பாசுரங்கள். இதை நான்காவது ஆயிரம் என்பர்.

இவர் பாசுரங்கள் இருக்கு, யஜுர், சாம, அதர்வ வேதங்களின் சாரத்தை வெளியிடுவனவாகும். இதுவே வைணவர்களின் கொள்கை. நம்மாழ்வார் பாடல்கள் பெரும்பாலும் அகப்பொருள் துறையைத் தழுவியவை. இவர் தலைவியாக, நற்றாயாக, செவிலியாக, தோழியாக நின்று தலைவியின் காதலை வெளியிட்டுப் பாடியிருக்கின்றார். சிறந்த வேதாந்தக் கருத்துகள், உயர்ந்த அறிவுரைகள், இயற்கைக் காட்சிகள், நல்ல உவமை உருவகங்கள், சமரச சன்மார்க்க நெறி அனைத்தும் இவர் பாடல்களில் காணக்கிடக்கின்றன. இவை இலக்கியச் சுவை மிகுந்தவை. பழந்தமிழ்ப் பண்பாட்டை உணர்த்துபவை. அனைவரும் படித்து இன்புறத்தக்கவை. வைணவ தத்துவத்தைச் சிறப்பாக வெளியிடுபவை. இவரைப் போற்றாத வைணவர் இல்லை.

திருவாய் மொழிப் பாடல் ஒன்றில், 'உலகில் உள்ள பற்றுக்கள் அனைத்தையும் விட்டுவிடுங்கள். இவைகளை விட்டபின்பு, உமது ஆன்மாவை, முத்தி அளிப்பவனான பரம் பொருளிடம் ஒப்புவித்து விடுங்கள். பின்பு வீடுபேற்றையடையலாம்' என நம்மாழ்வார் கூறுகிறார். பேரின்பம் பெறத் தடையாய் இருப்பது உலகப் பற்று என்பதை உணர்த்துவதுடன்,

அவனைச் சரணடைந்தால் அனைத்தும் பெறலாம் என்ற கருத்தும் வெளிப்படுகிறது இப்பாடலில். மேலும் நமது உயிர்க் குயிராய் இருப்பவன் அவன் என்பதையும் அறிகிறோம். 'உமது ஆன்மா அவனுடைய வீடு. உரியவனிடம் அதை ஒப்புவித்து விடல் முறை' என்பதையும் இப்பாடல் தெளிவாகப் புலப்படுத்து கின்றது. 'யான்', 'எனது' என்னும் இருவகைப் பற்றுக் களையும் ஒழித்தல் வேண்டும் என்பதும் புலனாகின்றது.

வீடுமின் முற்றவும்
வீடுசெய்து உம்முயிர்
வீடுடை யானிடை
வீடு செய்தும்மினே.

6. மதுரகவியாழ்வார்: இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரிக்குப் பக்கத்திலுள்ள திருக்கோளூர் என்ற ஊரில் பிறந்தவர். கண்ணிநுண் சிறுத்தாம்பு எனப் பாசுரம் பாடி யுள்ளார். இவர் வேதம் செய்த நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்றிருந்தவர். ஆதலால் இவர் பாசுரங்கள் அனைத்தும் நம்மாழ்வாரைப் பற்றியனவே. இருப்பினும் நாத முனிகள் இவர் பிரபந்தத்தையும் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் சேர்த்தார்.

7. குலசேகராழ்வார்: இவரைக் கூடலர்கோன், கொல்லி காவலன், குலசேகரப் பெருமாள் என வேறு பெயர்களாலும் அழைப்பர். சேரநாட்டில் (கேரளம்) திருவஞ்சிக்களம் என்னு மிடத்தில் மன்னர் குலத்தில் பிறந்தவர். கி.பி. 8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் பாடியது 105 பாசுரங்கள் கொண்ட 'பெருமாள் திருமொழி'.

மண்ணாளும் செல்வத்தைவிட, மகாவிஷ்ணுவுக்குச் செய்யும் பணிகளும், காட்டும் பக்தியும் சிறந்தவை இன்பந் தருபவை என்ற கொள்கையுடையவர். இவர் பாடல்கள் அனைத்தும் தெவிட்டாத தேனாக, வற்றாத சுவைச் சுனையூற்றாக விளங்கு கின்றன.

இவர் இராமாவதாரத்தில் மிகவும் ஈடுபாடுடையவர். பத்துப் பாடல்களில் இராமகாதையின் சுருக்கத்தைக் கொடுத்துள்ளார். திருவரங்கம், திருவேங்கடம், வித்துவக்கோடு ஆகிய ஊர்களின் இறைவன், ஆய்ச்சியர் ஊடல், தேவகி புலம்பல், இராமரின் தாலாட்டு, தசரதன் புலம்பல் அனைத்தும் அடங்கியவை இவரது பாசுரங்கள்.

இயற்கை வருணனை, பல அறிவுரைகள், மக்கள் இன்புற்று வாழ அருள் மொழிகள், உயர்ந்த சரணாகதி நெறி போன்ற பலவற்றைத் தம்முள்ளே அடக்கியுள்ளன இப்பாசுரங்கள்.

ஒரு பொருளின்மேல் மாறாத நீங்காத அன்பு, ஆசை, காதல் உடையவர்கள் அப்பொருளைவிட்டுப் பிரிய விரும்பமாட்டார்கள். இது மனிதகுல நியதி. மக்களின் இயல்பு. இதுவே அன்பின் தன்மை. இதைப் பல பாடல்களில் உணர்த்துகிறார்.

'என்றும் அழியாத செல்வச் சிறப்போடு, தேவலோக மங்கையர்கள் என்னைச் சூழ்ந்திருக்கும்படி தேவலோகத்தை ஆளும் வாய்ப்பும், மண்ணுலக முழுவதும் ஆளும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தாலும், அவற்றை நான் விரும்பமாட்டேன். ஆனால் தேனைச் சொரியும் மலர்கள் நிறைந்த திருவேங்கட மலையில் உள்ள கோனேரி என்ற சுனையிலே ஒரு மீனாகப் பிறந்து நீ உறையும் திருவேங்கட மலையை விட்டுப் பிரியாமல் வாழ்கின்ற விதியைத்தான் பெற விரும்புகிறேன்' என இங்கு கூறுவதை நோக்குங்கள்.

ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே.

8. பெரியாழ்வார்: இவருக்குப் 'பட்டர்பிரான்', 'விஷ்ணு சித்தர்' என்ற பெயர்களுமுண்டு. இவர் பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தவர். திருப்பல்லாண்டுடன் பெரியாழ்வார் திருமொழி 473 பாசுரங்களை உடையது. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் முதலில் அமைந்திருக்கும் பாடல்கள் பெரியாழ்வார் பாடல்களே. இறைவனுக்குப் பல்லாண்டு பாடிய இவர் கி. பி. 8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்.

இவரது பாடல்கள் இனிய ஓசையுடையவை; கருத்துப் பெட்டகம், தெவிட்டாத கற்கண்டுச் சொற்கள். இவர் பாடல் களில் குழந்தைகளின் உள்ளம், குறும்பு மனம், விளையாட்டு இயல்பு, நடையுடை பாவனைகளை அற்புதமாகப் படம்பிடித் திருப்பதைக் காணலாம். தாய்க்குத் தன் பிள்ளைபாலுள்ள அன்பையும், தாயின் தியாகத்தையும் இவர் பாடல்களில் காண லாம். இயற்கை எழில், உலகப் போக்கு, பக்தியின் பெருமை, உய்வு பெறும் நெறி இவற்றினையும் இப்பாசுரங்கள் விளக்கு

கின்றன. இராமாயணக் கதைக் குறிப்புகளும் இவற்றில் அடங்கி யுள்ளன.

சூழ்நிலையால் மனிதன் உருவாக்கப்படுகிறான். தீய சூழலிலே வாழ்ந்தவன் நல்ல சூழலை நாடி வாழும்போது முன்பு அவனிடம் குடிகொண்டிருந்த தீய பழக்கவழக்கங்கள் நீங்கி விடுகின்றன. நல்ல சூழலிலே வாழ்ந்த பெரியாழ்வார் அதை விட்டு விலகித் தீய சூழலிலே அகப்பட்டுத் துயரப்பட விரும்புவாரா? இல்லவே இல்லை. இக் கருத்தினை உணர்த்தும் பாடல் இதோ.

உனக்குப் பணி செய்திருக்கும் தவம் உடையேன்
 இனிப்போய் ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயை
 அழிவு கண்டாய்!
புனத்தினை கிள்ளிப் புதுஅவி காட்டிஉன்
 பொன்அடி வாழ்கஎன்று
இனக்குறவர் புதியது உண்ணும் எழில்மால்
 இரும்சோலை எந்தாய்!

'தினைப்புனத்திலே விளைந்த தினைக் கதிர்களைக் கிள்ளி யெடுத்து, அவற்றைப் புது ஆவியிலே காட்டி வதக்கியெடுத்து, உன் பொன்போன்ற அடிகள் வாழ்க என்று கூறி வணங்கி அதன் பிறகே கூட்டமாக வாழும் குறவர்கள் அப்புதிய தினையை உண்பார்கள். இத்தகைய அழகிய பெரிய திருமாலிருஞ் சோலை யிலே வாழ்கின்ற எந்தையே! உனக்குத் தொண்டு செய்து வாழும் பேற்றைப் பெற்ற நான், இனிமேற் சென்று வேறு ஒருவனைத் தொழுது, அவன் கடைத் தலையிலே நிற்கமாட்டேன். அவ்வாறு நான் செய்யப் புகுந்தால், என்னிடம் சேர்ந்துள்ள நினது அருள் அழிந்து போவதற்கு இடமாகும். இதனை இருவரும் அறிவோம். ஆதலால் உன்னையன்றி இனி ஒருவரையும் நாடேன்' என்று கூறுகிறார். குறவர்களின் குணத்தையும் செயலையும் குறித் திருப்பது உலகப்போக்கின் உண்மையை ஆழ்வார் அறிவிக்கும் பாங்கினைப் புலப்படுத்துகிறது. சூழலைப் பொறுத்தே அதாவது, நண்பர்களைப் பொறுத்தே மக்கள் நல்லவர்களாகவோ, கெட்டவர் களாகவோ மாறுகின்றனர். இஃது இவர் அறிந்த உண்மை.

9. ஆண்டாள் : இவருக்குக் கோதை—சூடிக் கொடுத்தாள், சூடிக் கொடுத்த நாச்சியார், கோதாதேவி என்ற பல பெயர்கள் உண்டு. இவரும் பெரியாழ்வாரும் ஒரு காலத்தவர்கள். பெரியாழ்

வாரின் வளர்ப்புப் பெண்தான் ஆண்டாள். இவர் அருளிச் செய்த 173 பாசுரங்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரண்டு தலைப்புகளிலே அமைந்திருக்கின்றன.

இயற்கையின் எழில் வண்ணம், பக்திச் சுவை, உயரிய ஒழுக்க நெறி, உளவியல் கருத்துகள், மகளிர் மனப்பான்மை, காதலில் ஈடுபட்டுள்ள மகளிரின் உள்ளம், கற்புடை மகளின் பண்பு, பெண்களின் கடமை, அரிய தத்துவக் கருத்துகள் அனைத்தும் ஆண்டாளின் பாடல்களில் கொஞ்சும் தமிழில் கொடுக்கப் பட்டுள்ளன. பண்டைய தமிழ் மரபையொட்டிய அகப்பொருள் துறைக் கருத்துகள் ஆண்டாள் பாடல்களிலே அமைந்து கிடக்கின்றன. இப்பாடல்களிலே தமிழரின் பழக்க வழக்கங்களை அறியலாம். இனிமை, தெளிவு, எளிமை வாய்ந்தவை இவரது பாடல்கள். 'நாயக-நாயகி பாவத்தை' உணர்த்துகின்றன இப் பாடல்கள்.

திருப்பாவையின் இரண்டாவது பாடலில் பாவை நோன்பில் ஈடுபடுவோர் பின்பற்றவேண்டிய நெறி முறைகளை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். அறக்கோட்பாடுகள், அருளுணர்வு, நோன்புக்கு வேண்டிய உள நிலை, உடல் நிலை இவற்றை இப் பாடலில் அழகாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார்.

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ; பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலே நீராடி;
மையிட்டெழுதோம்; மலரிட்டு நாம் முடியோம்;
செய்யாதன செய்யோம், தீக்குறளை சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.

அதிகாலையில் எழுந்து நீராடி நெய், பால் உண்ணாது, மையிட்டு மலரிட்டு அழகு செய்து கொள்ளாமல் இருக்கவேண்டும் பாவைநோன்பில் ஈடுபடுவோர். மேலும் தீய செயல்களில் ஈடுபடாமல், தன்னாலியன்றவரை தகுதி கருதி தானமும், பிச்சையென யாசிப்போருக்கு தருமமும் செய்து அறவழியில் நிற்க வேண்டும். இப்பிறப்பினின்றும் உய்யும் வழியைக் கருதிப் பாவையை வணங்கவேண்டும் என்பது மேலே கண்ட பாடலின் கருத்து வளமாகும்.

**10. தொண்டரடிப் பொடியாழ்வார் :** இவர் வாழ்ந்தது கி. பி. 8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. இவர் கும்பகோணத்திற் கருகிலுள்ள திருமண்டங்குடியில் பிறந்தவர். இவரது இயற்பெயர் விப்பிரநாராயணர். 45 பாசுரங்கள் கொண்ட திருமாலையும் 10 பாசுரங்கள் அடங்கிய திருப்பள்ளியெழுச்சியும் இவர் இயற்றியவை.

இவர் திருமாலே முழுமுதற் கடவுள், வைணவமே உயர்ந்த சமயம் என்ற உறுதி உடையவர்.

இவருடைய பாடல்கள் பல நீதிகளையும், ஒழுக்கத்தின் சிறப்பையும், வாழ்வின் நிலையாமையையும் எடுத்துக் காட்டுகின்றன. காலைப்பொழுதின் கவினுறு காட்சிகள் கற்கண்டுத் தமிழில் இவர் பாடல்களில் மிளிருகின்றன. சாதிப் பாகுபாட்டை ஒழிக்கவும் இவர் முயலுகின்றார். கலப்பு மணத்தையும் சமபந்தி உணவையும் வலியுறுத்தும் பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

பழுதுஇலா ஒழுகல்ஆற்றுப் பலசதுப் பேதிமார்கள்;
இழிகுலத் தவர்களேனும், எம்அடி யார்கள்ஆகில்
தொழுமின் நீர்கொடுமின்! கொண்மின்! என்றுநின்னோடு
வழிபட அருளினாய்போல்; மதில்திரு அரங்கத்தானே.

ஒக்க

ஒரு தெய்வத்தைத் தொழுவோர் ஒரே இனத்தவர்! அவர்கள் தங்களுக்குள் கொள்வினை கொடுப்பினை செய்து கொள்ளும் வழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால் சாதிவேற்றுமை எளிதில் ஒழிந்துவிடும் என்ற உண்மையை உணர்த்துவதோடு, பன்னூறு ஆண்டுகட்கு முன்பே கலப்பு மணம் செய்துகொள்ளும்படி இவர் கூறியுள்ளதைக் காண்கின்றோம்.

**11. திருப்பாணாழ்வார்:** இவர் திருச்சியையடுத்துள்ள உறையூரில் தோன்றியவர். இவர் அமலனாதிபிரான் என்னும் 10 பாசுரங்கள் அருளிச் செய்துள்ளார்.

பறையரைப் போன்ற இழிந்த சாதியாகிய பாணர் குலத்திலே பிறந்தவர் திருப்பாணாழ்வார். அவரது அளவற்ற பக்திப் பெருக்கினை வியந்து திருமால் அவரை ஏற்றுக் கொள்வது திருமாலினது எளிமையைப் புலப்படுத்துகிறது. இறையனுபவம் சாதிசமய எல்லைகளைக் கடந்தது. எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஒரு நிலை. பிறப்பினால் பெருமை வருவதில்லை,

செய்கின்ற தொழிலின் சிறப்பால்தான் மேன்மை வருகிறது என்பதையும் இவ்வாழ்வாரின் வாழ்வு உணர்த்துகிறது. ஏழைகளின் மத்தியில் இறைவன் நடம்புரிகின்றான் என்ற இனிய கருத்தையும், இறைவனிடம் எவ்வித வேற்றுமையும் இல்லையென்பதையும் இவர் பாடல்கள் காட்டுகின்றன. சாதியால் கடையனுக்கும் ஆன்மிகக் கடைத்தேற்றம் கிட்டுகின்றது.

மேகவண்ணன், கோபாலன், வெண்ணெயைத் திருடி உண்ட வாயையுடையவன், என் உள்ளத்தை ஈர்த்தவன், வானவர்க்குத் தலைவன், அழகிய திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள அரங்கன் என்ற அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணா. இறைவனைக் காணவேண்டியது நமது கடமை என்பதைப் புலப்படுத்துகின்றது கீழே வரும் பாடல்.

கொண்டல் வண்ணனைக்
    கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன்என்
    உள்ளம் கவர்ந்தானை,
அண்டர் கோன்அணி
    அரங்கன் என்அமுதினைக்
கண்ட கண்கள்மற்
    றொன்றினைக் காணாவே!

**12. திருமங்கை ஆழ்வார் :** இவருக்குப் பரகாலன், மங்கை மன்னன், ஆலிநாடன், நாலுகவிப் பெருமாள் எனப் பல பெயர்கள் உண்டு. தஞ்சை மாவட்டத்தில் திருவாலி திருநகரியை அடுத்துள்ள திருக்குறையலூரில் இவர் தோன்றினார். இவர் பாடியவை பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் அடங்கிய 1137 பாசுரங்கள். இவருடைய பாடல்களில் தமிழகத்து வரலாற்றுக் குறிப்புகள் பலவற்றைக் காணலாம். பழந்தமிழ் நூற் கருத்துகள் இனிய, எளிய தமிழ் நடையில் கொடுக்கப்பட்டுள்ளன. செந்தமிழின் சிறப்பையும் சீரிய அறக் கருத்துகளையும் நம் உள்ளத்தைக் கவரும்வண்ணம் உயர்ந்த பாடல்களாக வடித்துக் கொடுத்துள்ளார்.

இவருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. திருவரங்கக் கோயிலின் சுற்றுச் சுவர் கட்டிக் கோயில் திருப்பணி செய்தவர். அடியார்களுக்கு அன்னமிடுவதை அரிய தொண்டாகக் கொண்டிருந்தார். திருமாலின் அழகிய பண்புகளை உள்ளத்தை ஈர்க்கும் இனிய

பாடல்களால் பாடி மனமுருகி அனுபூதி நிலையில் நின்று ஆனந்தம் பெற்றவர். பழந்தமிழர் பண்பாடு, அறநெறிகள் இவர் பாடல்களிலே மிளிர்வதைக் காணலாம். வைணவர்கள் அனைவரும் அறிந்து அன்புடன் பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடி மனமுருகும் இவர் பாடலொன்று கீழே வருகின்றது.

குலம் தரும்; செல்வம் தந்திடும்; அடியார் படுதுயர்
ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும்; நீள் விசும்பு அருளும், அருளொடு
பெருநிலம் அளிக்கும்
வலம்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற தாயினும்
ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்;
நாராயணா வென்னும் நாமம்.

இச்சிறந்த பாடலின் பொருள் எளிதில் விளங்கக்கூடியது. 'நாராயணனின் நாமத்தை நாள்தோறும் நவின்றால் இழிந்த குடியிலே பிறந்தாலும் தாம் பிறந்த குடியை உயர்ந்த குடியாக்கும். உலக வாழ்விற்குரிய செல்வத்தை நல்கும். மறுமைக்கு வழிகாட்டி அருட்செல்வத்தை அள்ளித்தரும். அடியவர்கள் அடைகின்ற துன்பங்கள் அனைத்தையும் அழித்துவிடும். அவை நிலைத்து நிற்காமல் தரைமட்டமாக்கிவிடும். பெரிய இன்பம் நிறைந்த வானுலகத்தை அளிக்கும். அவ்வுலக இன்பத்தை திரந்தரமாக்கும். எண்ணிய காரியங்கள் எல்லாவற்றிலும் வெற்றியை நல்கும். மற்றும் எத்தனையோ நன்மைகள் இன்பங்கள் என்ற பேறுகளை எல்லாம் தந்திடும். அன்னையைக் காட்டிலும் நமக்கு அளவற்ற நன்மைகளைச் செய்யும். ஆகவே, அத்தகைய நன்மை தரும் சொல்லை எப்பொழுதும் மறக்காமல் நாம் சொல்ல வேண்டும்' என்பது இதன் பொருள்.

ஆழ்வார்களின் அரிய தொண்டு

(1) வைணவ பக்தி இயக்கம் இந்து சமயத்திற்குப் புத்துயிரையும், புதிய ஆற்றலையும், பெருஞ் செல்வாக்கினையும் தந்தது. இதற்குக் காரணம் ஆழ்வார்களே.

(2) ஆழ்வார்களால் தமிழ் இலக்கியம் வளர்ந்தது என்று கூறுவதை எவராலும் மறுக்க முடியாது.

(3) வைணவ சமயக் கருத்துகளையும் விசிஷ்டாத்துவைதக் கருத்துகளையும், எல்லோரும் புரியும்வண்ணம் எளிய நடையில் தமிழில் கொடுத்த பெருமை இவர்களுக்கே உரித்தாகும்.

(4) இந்தியாவில் வட்டார மொழியில் சமய தத்துவக் கருத்துகளைப் பக்தி இயக்கத்தைச் சார்ந்தோர் பரப்பிய பெரும் பணியில் இவர்கட்கும் பெரும் பங்குண்டு.

(5) சாதி இனப் பாகுபாடுகளைக் கடந்த நிலையில் சமயப் பணியை ஆற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இவர்கள் விளங்கினார்கள். ஆழ்வார்கள் திருக்கூட்டத்தில் பல சாதி மக்கள் இருப்பதைக் காண்பதோடு கீழ்ச்சாதியைச் சேர்ந்த திருப்பாணாழ்வார் இருப்பதையும் காண்கின்றோம்.

(6) எளிய பிரபத்தி நெறி அல்லது சரணாகதி நெறியை இவர்கள் தங்கள் பாசுரங்களில் அனைவரும் அறிந்து பின்பற்றும் வண்ணம் விளக்கியுள்ளார்கள்.

(7) நாயக, நாயகி பாவத்தைத் திருப்பாவையில் ஆண்டாள் கூறியுள்ளதுபோல் வேறு எந்த சமய இலக்கியத்திலும் கூறப்பட வில்லை. அனுபூதி நெறியைப் பல்வேறு நிலைகளிலிருந்து இவர் கள் விளக்கிக் கூறியுள்ளார்கள். இறை அனுபவ போதையில் திளைத்துக் கிடந்த இவர்கள், தங்கள் அனுபவங்களை நாமும் உணர்ந்து அந்த அனுபவ நெறியில் நிற்கத் தூண்டும்வண்ணம் பாசுரங்களில் இக் கருத்துகளைப் பரவலாகக் கொடுத்துள் ளார்கள். வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், வீரகாவி யங்கள் அனைத்திலும் கண்டுள்ள உயர்ந்த நெறிகளையும் தத்து வங்களையும் இவர்களுடைய பாடல்கள் நமக்கு எடுத்துக் கூறி அவற்றின் வழி நம்மைச் செல்லத்தூண்டுகின்றன. ஆழ்வார்களுக்கு உருவவழிபாட்டில் மிகுந்த நம்பிக்கையும் ஈடுபாடும் உண்டு. இது பாமர மக்களை நெறிப்படுத்தவும் பயன்படுகிறது.

உலக இன்பங்கள் அனைத்தும் நிலையற்றவை. உத்தம புருஷனின் திருவடிகளைப் பற்றிக்கொள்வதே வாழ்வின் குறிக் கோளாக அமையவேண்டும் என்பது இவர்கள் பாடல்களின் மையக் கருத்து. பேரின்ப நிலையை அடைவது ஒரு சாராருக்கே உரிய தனிச் சொத்துரிமை அன்று. அஃது ஒரு பொது உடைமை என்பதையும் இவர்கள் உணர்த்துகின்றனர். ஆன்மிக வாழ்வில் கடைநிலையிலிருக்கும் கடையனுக்கும், ஆன்மிகக் கடைத் தேற்றம் அளிக்கவேண்டும் என்பது இவர்களது கோட்பாடு.

இரத்தினச் சுருக்கமாகக் கூறுவதானால் எல்லோரும் எல்லாம் பெற வேண்டும், இல்லாதவர் இல்லாத நிலை ஏற்படவேண்டும். மேலும் ஆலயத் திருப்பணிக்கும் சமூக நற்பணிகட்கும் இவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டது ஒரு முக்கியச் செயலாகும்.

## 9.4. நாயன்மார்கள்

### நாயன்மார்கள்

தமிழகத்தில் சைவ சமயத்தைப் பரப்பவந்த நாயன்மார்கள் எளிய இதயம் படைத்த பக்தர்கள். அவர்கள் தத்துவத்தையும் இறையியலையும் பிரசாரம் செய்யவந்த பண்டிதர்கள் அல்லர். தமிழ்ச் சைவ உலகம் அறுபத்து மூன்று நாயன்மார்களைக் கூறும். மற்றொரு நோக்கில் 64 தனியடியார்களையும், 9 தொகையடியார் களையும் நாயன்மார்கள் எனச் சைவ உலகம் ஏற்றுக்கொள்ளும். ஆனால் வழக்கில் 63 நாயன்மார்களையே குறிப்பிடுவர்.

### சமயாசாரியர்

சமயாசாரியர் என்பதற்குச் சமயத்தை வளர்த்து அதற்கெனத் தனியாக ஒரு மரபை ஏற்படுத்தியவர் எனப் பொருள். சம்பந்தர், அப்பர் (திருநாவுக்கரசர்), சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரே அச்சமயாசாரியர் ஆவர். சைவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், இச்சமயாசாரியர்களின் அன்பும் பக்தியும் கலந்த வாழ்க்கை முறையெனும் பக்திச் சுவை ததும்பும் பாடல்களாலும் நிறுவப்பட்டுள்ளன. தமிழ்ச் சைவத்தின் அடிப்படை இயல்பினை அறிந்துகொள்ள இவ்வடியார்களின் வாழ்க்கையையும், பாடல் களையும் பற்றி அறிந்துகொள்வது இன்றியமையாததாகும். எல்லா நாயன்மார்களுமே சிறந்தவர்களாகக் கருதப்பட்டாலும், நால்வரே தன்னிகரற்ற பெரியார்களாகக் கருதப்படுகிறார்கள். இச்சமயா சாரியர்களின் தளராத உழைப்பின் பயனால், தமிழகத்தில் சைவம் புத்துணர்வு பெற்றுத் தனக்கென ஒரு மரபை ஏற்படுத்திக் கொண்டது.

அறுபத்து மூவர் தனி அடியார். இவர்களுள் சிறுத்தொண்டர், மங்கையர்க்கரசியார், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர், குலச்சிறையார், திருமூலர், பூசலார், கண்ணப்பர், திருநீல கண்டர், அப்பூதி அடிகள், காரைக்கால் அம்மையார் போன்ற பன்னிருவர் குறிப்பிடத்தக்கவர். சைவ சமய பக்திப் பாடல்களைத் தொகுத்துக் கொடுத்தவர் நம்பி ஆண்டார் நம்பி. இவர் இவற்றைப் பன்னிரு திருமுறைகளாக வகைப்படுத்தினார். முதல் ஏழு திரு முறைகளும் ஒரு தொகுதியாகத் **தேவாரம்** என அழைக்கப் படுகிறது; அவற்றினுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் பாடியவை அடங்கும். மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவை யாரும் அடங்கிய தொகுதி எட்டாம் திருமுறையாகும். அடுத்துச் சேந்தனார் முதலான ஒன்பது பெரியார்கள், அளித்

துள்ள திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையில் அடங்கும். திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகும். திருவாலவாயுடையார் முதலாகப் பல பெரியார்கள் அருளிய திருமுகப்பாசுரம் முதலான பல பிரபந்தங்கள் பதினோராம் திருமுறையின்கீழ் வருகின்றன. சேக்கிழாரின் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரும் சைவ சமயக் குரவர் என்றும் அழைக்கப்படுவர்.

**1. திருஞான சம்பந்தர்**

இவர் சோழநாட்டுச் சீர்காழியில் தோன்றி மூன்று வயதில் உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்று, தமிழ் நாடெங்கும் சுற்றி, தலங்கள்தோறும் இசைப் பதிகங்கள் பாடி, மக்களைச் சிவ நெறியிலே ஆற்றுப்படுத்தினார். இவர் பார்ப்பனர் குலத்தைச் சேர்ந்தவர். வேத நெறியில் நின்றதோடு தமிழர் நெறியிலும் ஒழுகிச் சிவபெருமானைத் தமிழர் வழிபாட்டு முறையில் வழிபட்டு, தமிழர் சமயக் கோட்பாடுகளை மேற்கொண்டார்.

**சம்பந்தரின் சமயக் கருத்துகள்** : இவரது தேவாரம் முழுமையும் சிவபெருமான் ஒருவனையே கடவுளாகக் கூறுகிறது. தமிழர்களுடைய உருவ வழிபாட்டு முறைகளையும், சமயக் கோட்பாடுகளையும் காட்டுகிறது. சிவனுடைய பல வடிவங்களையும், பல பெயர்களையும், அவன் அடியார்களுக்குச் செய்த பல அருட் செயல்களையும், பல திருவிளையாடல்களையும், அவன் எழுந்தருளியிருக்கும் பல பதிகளையும், அவன் இயல்புகளையும் அவருடைய தேவாரப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. திருஞானசம்பந்தர் பாடல்கள், அவர் சிவபெருமானிடம் வைத்துள்ள அயராத அன்பினையும் எடுத்துக் காட்டுகின்றன. இவர் பாடல்களில் (1) சிவபெருமான் மக்களுக்குக் கடவுள். (2) பிறப்பிறப்பில்லாதவன். (3) உலகத்திடத்தும் உயிர்களிடத்தும் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் இருப்பான். (4) உயிர்களுடைய பிறவிகளை நீக்குவான். (5) தன்னை வந்தடையும் உயிர்களுடைய பாசங்களை நீக்குவான். (6) தான் இன்புற்றிருப்பதைப்போல தன்னை அடையும் உயிர்களையும், இன்புற்றிருக்கச் செய்கிறான். தன் அடியார்களுக்குப் பல வழிகளில் அருள் செய்து அவர்களை ஆட்கொள்கிறான் என்பனபோன்ற கடவுட் கோட்பாடுகளைக் காணலாம்.

அவர் பாடல்களில் உயிர்க் கோட்பாடுகளைப்பற்றியும் கூறுகிறார். உயிர்கள் பல. பிறவிகளால் வருவன கேடுகளாகும்.

யாக்கை நிலையாமையை உடையது. அஃது உள்ளபொழுதே சிவபெருமானைத் தொழுது மக்கள் உய்யவேண்டும் என்பன சம்பந்தர் கூறும் உயிர்க் கோட்பாடுகளாம். சிவபெருமானைத் தம் கடவுளாகவும், தம்மை அவன் அடி வணங்கும் அடியாராகவும், உள்ளத்தில் கொண்டு வணங்கும் மக்கள் (1) தமக்கு வரும் துன்பங்களினின்று நீங்குகின்றனர். (2) வினைகளினின்று நீங்குகின்றனர். (3) இன்பம் அடைகின்றனர். (4) மறுபிறப்பி னின்று நீங்குகின்றனர். (5) வீடு பேறு அடைகின்றனர் என்று சம்பந்தர் பற்பல பாடல்களில் எடுத்தியம்புகிறார்.

திருஞானசம்பந்தர் வாழ்க்கை இரு பெரும் தத்துவங்களை உணர்த்துகிறது. ஒன்று, அவருடைய வாழ்க்கை 'சற்புத்திர மார்க்கம்' என்று சொல்லுகின்ற 'கிரியா' மார்க்கத்தை உணர்த்து கின்றது. இறைவனுடைய புதல்வர் என்ற பெருந் தகுதியை இவர் பெற்றார். மற்றது, இவர் தமக்கென்று வாழவில்லை; உயிர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றே வாழ்ந்தார்.

இவர் சமய வழிபாட்டு முறைகளையும் கோட்பாடுகளையும் தாம் பாடிய தேவாரப் பதிகங்களுள் கூறியிருக்கிறார்.

சம்பந்தர் முக்தி அடைவதற்குரிய நெறிகளைப் பல்வேறு பாடல்களில் கூறுகிறார். எளிய முறையைக் கீழே வரும் பாடல் உணர்த்தும்.

சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரைப்
பக்தி மலர்தூவ, முக்தி ஆகுமே.
பிறவி அறுப்பீர்காள், அறவன் ஆரூரை
மறவா தேத்துமின், துறவி ஆகுமே.
துன்பம் துடைப்பீர்காள், அன்பன் அணிஆரூர்
நன்பொன் மலர்தூவ, இன்பம் ஆகுமே.
(1.91.13)

பொழிப்புரை: மனத் தெளிவு பெற விரும்புகின்றவர்களே! அத்தன் எழுந்தருளியுள்ள திருவாரூரை (திருவாரூரில் உள்ள பெருமானை)ப் பக்தியோடு மலர்களால் அருச்சித்தால் முக்தி உம்முடையதாகும். பிறப்பை அறுக்க விரும்புபவர்களே! தரும வடிவினனான பெருமானது திருவாரூரை மறவாமல் (நாள் தோறும்) துதித்து வழிபடுங்கள். (அதனால்) துறவு உம்முடைய தாகும். உலக பந்தங்களினின்றும் விடுபட்ட இடமாகிய முக்தியும் ஆம். (பிறப்பினால் வரும்) துன்பங்களைப் போக்கிக் கொள்ள விரும்புபவர்களே! (அடியார்க்கு) அன்பனான பெரு

மான்து அழகிய திருவாரூரை நல்ல பொன் நிறமான மலர்களால் அருச்சித்து வழிபட்டால் பேரின்பம் (சிவானந்தம்) உம்முடைய தாகும்.

## 2. அப்பர்

அப்பர் சுவாமிகள் என்று வழங்கப்படுபவர் திருநாவுக்கரசு சுவாமிகள்; அப்பரே என்று சம்பந்தரால் அழைக்கப் பெற்றார். இவர் நடு நாட்டில் திருவாமூரில் வேளாள மரபில் பிறந்தார். இவர் சைவ சமயத்தினின்று சமண சமயம் சென்று, மீண்டும் சைவ சமயம் புகுந்தார். சைவ மரபில் அப்பர் வாழ்க்கை 'தாச மார்க்கம்' என்று சொல்லுகின்ற 'சரியை'ப் பகுதியைப் புலப் படுத்துவது. உடல் உழைப்பின் பெருமையை என்றும் உணர்த்துவது. நாவினால் பாடினாலும், நெஞ்சினால் நினைத் தாலும் போதாது. மெய்யினால் பணி செய்ய வேண்டும் என்ற அடிமைத் திறத்தை—பேருண்மையைப் புலப்படுத்துவது.

**வழிபாட்டால் பெறும் பயன்கள் :** சிவபெருமானை வழிபடுவ தால் (1) துன்பத்தினின்று விடுபட்டு, இன்பம் அடைகின்றனர். (2) வினையினின்று விடுபடுகின்றனர். (3) பிறப்பு, மூப்பு, பெரும்பசி, பிணி, இறப்புகளினின்று நீங்குகின்றனர் என அப்பர் தம் பாடல்களில் கூறுகிறார்.

**அப்பரின் கடவுட் கோட்பாடுகள் :** (1) சிவன் பிறப் பிறப்பில்லாதவன். (2) செத்துப் பிறப்பவர் உயிர்களாவர்; கடவுளாகார். (3) உரையால் உணரப்படாதவன்.

**உயிர்க் கோட்பாடுகள் :** (1) பிரமரும், நாராயணர்களும், இந்திரர்களும் உயிரினத்தார். (2) மக்களுயிர் புழுவாய்ப் பிறக்கும், சிலந்தியும் மன்னனாகப் பிறக்கும். (3) உயிர்கள் இறைவன் ஆட்டுவிக்க ஆடும். (4) அவனருளே கண்ணாகக் காணின் உயிர்கள் அவனைக் காணும். உயிர்கள் சிவனை வழிபடு வதனால் சிவகதியடைகின்றன.

அப்பரின் பாடல்கள் பல பூசனை முறையினைப் பற்றிக் கூறினாலும், அற்புதமான தத்துவ பூசனை முறையொன்றை விளக்கும் பாடல் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

> காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
> வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
> நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
> பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே.
>
> (4.76.4)

**பொழிப்புரை :** உடம்பே கோயிலாகவும், (புலன் வழிப் படாது) காக்கப்படுகிற மனம் (கோவிலில் தொண்டு செய்யும்) அடிமையாகவும், வாய்மையே (கோயிலின்) பரிசுத்தமாகவும் (அப் பரிசுத்தம் பெற்ற) மனத்திலுள்ள ஒளியே அழகிய இலிங்க மாகவும் (கொண்டு), அன்பே (பக்தியே) நெய்யும் பாலுமாக நன்கு நிறைய அபிஷேகம் செய்து துதியை உணவாக்கி, ஈசனுக்குப் பூசனை செய்யும் முறையைக் காட்டினோம்.

### 3. சுந்தரர்

இவர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூரில் பிறந்தார். இவரும் வேத சமயத்துப் பார்ப்பனர் இனத்தவர்.

இவர் வாழ்க்கை சகமார்க்கம் என்னும் யோக மார்க்கத்தைப் புலப்படுத்துவது. இது தோழமை என்று சொல்லப்படுவது. அன்றியும் இறைவன் நீதி வடிவானவன், நீதியினின்று பிறழ்பவர் தண்டிக்கப்படுவர் என்பதை இவர் வாழ்க்கை நன்கு உணர்த்து கிறது. இவர் பாடல்கள், இவர் சிவபெருமானிடம் வைத்துள்ள அயரா அன்பைக் காட்டுகின்றன. தமிழர்கள் தாம் வாழ்ந்த ஊர்கள்தோறும் சிவபெருமானுக்குக் கோயிலெடுத்த செய்தியைத் தம் பாடல்களில் விளக்கமாகக் கூறுகிறார். சிவனை வணங்கு பவர் (1) மலமெலாம் அறுப்பர். (2) சிவலோகம் எய்துவர். (3) பசி, பிணி இவைகளினின்று விடுபடுவர். (4) பிறப்பினின்று நீங்குவர். (5) வினையை விட்டொழிப்பர் என விளக்குகின்றார்.

**சமயக் கோட்பாடுகள் :** (1) சிவன் பிறப்பில்லாதவன். (2) இன்ன தன்மையன் என்று உயிர்களால் அறியப்படாதவன். (3) ஓராயிரம் பேரும் உடையவன். (4) பெண் வடிவோ, ஆண் வடிவோ இல்லாதவன். (5) அடியார் செய்யும் பிழைக்குத் தண்டனை கொடுப்பவன். (6) அடியார் செய்யும் பிழைகளைப் பொறுப்பவன் என்ற கடவுட் கோட்பாடுகள் இவருடைய பாடல்கள் மூலம் அறியக் கிடக்கின்றன.

**உயிர்க் கோட்பாடு :** உயிர்கள் பல (1) உயிர்கள் மக்கள், தேவர், விலங்கு, புள், நீர்வாழ்வன, ஊர்வன, மரம் என்ற ஏழுவகைப் பிறப்பிலும் பிறக்கும். (2) சிலந்தி, மன்னனாகவும் பிறக்கும். தளைகள். உயிர்களை மலமும் வினைகளும் பற்றி நிற்பதால் அவைகள் பல உடம்புகளைப் பெற்றுப் பிறக்கின்றன. உயிர்கள் கடவுளை வழிபடுவதால் மலமும், வினைகளும், பிறப்பும் அவைகளினின்று நீங்குகின்றன.

சுந்தரர் தேவாரப் பாடல்களில் இறைவனுக்குத் தான் அடிமை என்பதை உணர்த்தும் பாடல்கள் பலப்பல உள. அவற்றுள் அவனை என்றும் மறக்காமல் அவனுக்கே அடிமையாய் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தும் பாடல் கீழே கொடுக்கப் பட்டுள்ளது. இப்பாடல் சைவ உலகம் நன்கு அறிந்த ஒன்றாகும்.

பித்தாபிறை சூடிபெரு மானே அரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருள்துறையுள்
அத்தாவுனக் காளாய் இனி அல்லேன் என லாமே

பொழிப்புரை : (அடியார்க்கு அருள்புரியும் வகையில் பெருங் கருணையால்) பித்தர் போனறவனே, (திருவடிகளைத் தஞ்சம் என்று அடைந்த) பிறைச் சந்திரனை (உன் இயல்பாகிய கருணையினாலே) முடியில் சூடிக்கொண்டவனே, (அன்பர் களுக்கு எளியவனாயினும்) எல்லா உயிர்களுக்கும் தலைவனே, அருளையே செல்வமாக உடையவனே, (இனி உன்னை நான்) எவ்வகையிலும் மறவாமல் (இடைவிடாது) தியானிப்பேன். (அவ்வாறு நினைக்கின்ற என்) மனத்திலே எழுந்தருளியுள்ள, பெண்ணையாற்றில் தென்கரையில் உள்ளதாகிய திருவெண் ணெய் நல்லூரிலே திருவருட்டுறை என்னும் ஆலயத்தில் அமர்ந்தருளிய என் அப்பனே! இனி நான் உனக்கு என்றென்றும் அடிமை என்று தெளிந்த பிறகும் அல்லேன் என்று கூறுதல் கூடுமோ?

### 4. மாணிக்கவாசகர்

இவரும் வேத சமயத்துப் பார்ப்பனர் இனத்தவர். இவர் தமிழர் சமயமாகிய சைவசமயம் புகுந்து சிவனை வழிபட்டு வீடு பேறு அடைந்தமையால், தமிழர் சமய குரவராகின்றார். இவர் பாண்டி நாட்டில் திருவாதவூரில் சிவவேதியர் குலத்தில் வாதவூரர் என்ற பெயரோடு பிறந்தவர். பாண்டிய மன்னனிடம் முதல் அமைச் சராகப் பணியாற்றியவர். இவர் சன்மார்க்க நெறியிலே நின்றவர். இவருடைய மார்க்கம் ஞானமார்க்கம் என்ற சன்மார்க்கத்தைப் புலப்படுத்தும். இவர் பாடல்கள் தமிழ் மக்கள் சிவபெருமானை வழிபட்ட செய்திகள் பலவற்றை நமக்குக் கூறுகின்றன. ஏனைய மூன்று சமய குரவர்களைப் போன்று, இவரும் சிவபெருமானை வழிபடுவதால் பெறும் பயன்களை அவர்களைப் போன்றே கூறியுள்ளார்.

**கடவுள் கோட்பாடு :** (1) சிவன் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருள். (2) பிறரால் இன்ன தன்மையன் என்று அறிய முடியாதவன். (3) பெண், ஆண், அலி என்ற வடிவில்லாதவன். ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற தொழில்களைச் செய்பவன். (4) உயிர்களுடைய பிறப்பை நீக்குபவன். (5) பிறப்பு இறப்பு இல்லாதவன்.

**உயிர்க் கோட்பாடுகள் :** (1) உயிர்கள் பல. அவை ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் விளைவாகப் பிறப்பை அடைகின்றன. (2) மரம், ஊர்வன, நீர் வாழ்வன, புள், விலங்கு, மக்கள், தேவர் என்ற ஏழுவகைப் பிறப்புகளையும் அடைகின்றன. (3) திருமாலும், பிரமனும், இந்திரனும் உயிரினத்தவர் ஆவர். (4) உயிர்கள் அவன் அருளாலேதான் அவன் தாள் வணங்கவேண்டும். (5) உயிர்கள் மலங்களினின்று விடுபடும் போழ்து சிவபெருமானை அடைகின்றன.

இறைவனின் இயல்பினை விளக்கிக் கூறும் பாடல்கள் பல திருவாசகத்தில் அழகுற அமைந்துள்ளதைக் காணலாம். எடுத்துக்காட்டாக ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி*
*ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்*
*கோனாகி யான்எனதுஎன்(று) அவர்அவரைக் கூத்தாட்டு*
*வான்ஆகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.*

— திருச்சதகம், 15

பொழிப்புரை: விண்ணாகிய பூதம், மண்ணாகிய பூதம், காற்று, ஒளியையுடைய நெருப்பு, உடம்பு, உடம்பிலுள்ள உயிர் முதலிய எல்லாவற்றோடுங் கலந்து அவையேயாகியும், (மெய்யர்க்கு) மெய்ப்பொருளாகியும் (பொய்யர்க்குப்) பொய்ப் பொருளாகியும், அல்லது தோன்று பொருளும் தோன்றாப் பொருளுமாகியும், (அப்பொருள்களின் வசப்படாது தம்வயமுடைய) முதல்வனாகியும், பல்வகைப்பட்ட உயிர்களையும், யான் செய்தேன், என்னுடையது, என்று பல்லறிவால் மயங்கிக் கூத்தாடும்படி, அவற்றை இயக்கியும், நின்ற நின்னை யான் யாது சொல்லிப் புகழமுடியும் ?

**சந்தானாசாரியர்கள்**

மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் எனும் நால்வரும் சந்தானாசாரியர்கள்

எனக் கூறப்படுவர். (சந்தானம்—பரம்பரை) சந்தானம் அகச் சந்தானம், புறச் சந்தானம் என இருவகைப்படும். கயிலை மலையில் வாழ்வோர் அகச் சந்தானத்தார். அப்பரம்பரையில் நிலவுலகத்தில் தோன்றிய மெய்கண்டதேவர் முதலியோர் புறச் சந்தானத்தார் ஆவர்.

அகச் சந்தானாசாரியர்கள் ஸ்ரீ கண்ட பரமசிவனிடம் சிவஞான உபதேசம் பெற்ற நந்திதேவர், சனற்குமாரர், சத்திய ஞானதரிசனிகள், பரஞ்சோதியார் முதலியோர் ஆவர். இவர்கள் கயிலையில் வாழ்வோர்.

பரஞ்சோதி முனிவரிடம் மெய்கண்ட தேவரும், அவரிடம் அருணந்தி சிவமும், அருணந்தி சிவத்திடம் மறைஞான சம்பந்தரும், மறைஞான சம்பந்தரிடம் உமாபதி சிவமும் உபதேசம் பெற்றனர். இதை மெய்கண்ட சந்தான பரம்பரை என்பர்.

மெய்கண்ட தேவர் அருளிச்செய்த சிவஞானபோதம் சிறந்த நூலாகும். அருணந்தி சிவாசாரியர் சிவஞான சித்தியார், இருபா இருபஃது எனும் நூல்களை இயற்றியருளினார். சித்தியார் சுபக்கம், பரபக்கம் எனும் இரு பிரிவுகளை உடையது. உமாபதி சிவம் சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த அஷ்டகம் என்னும் எட்டு நூல்களை இயற்றியுள்ளார்.

**சைவ நாயன்மார்களின் சமயத் தொண்டு**

சைவ சமய குரவர் நால்வரைத்தவிர, இறைவன்மீது பாடல்கள் புனைந்த வேறு நாயன்மார்கள் நான்கு பேர்கள்தாம். அவர்கள் திருமூலர், ஐயடிகள் காடவர்கோன், காரைக்கால் அம்மையார், சேரமான் ஆகிய நால்வராவர். ஆகவே, மற்ற நாயன்மார்களின் வாழ்க்கையைப் படிப்பதன்மூலம் தமிழ்ச் சைவத்தைப்பற்றி மேலும் அறிய முடியும். பெரிய புராணத்தின் மூலம் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் அறிந்து கொள்கிறோம். எல்லாச் சாதிகளிலிருந்தும், எல்லா வாழ்க்கை நிலைகளிலிருந்தும், எல்லாப் பொருளாதாரப் பிரிவுகளிலிருந்தும் வந்தவர்கள் நாயன்மார்கள் என்பது இங்கு மிகவும் குறிப்பிடத் தக்கது.

தமிழ்ச் சைவம் மரபையும் காப்பாற்றி, சீர்த்திருத்தங்களையும் ஏற்றது என்பது வியப்பிற்குரியது. நாயன்மார்கள் பல சாதிகளி லிருந்து வந்தபோதிலும், அவர்களிடையே எவ்வித வேற்றுமை உணர்ச்சியும் இல்லாதது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்குப்

பக்தி நெறியைப் பற்றியல்லாது வேறு நெறிபற்றிய சிந்தனை கிடையாது. மற்ற எல்லா நெறிகளும் பின்தள்ளப்பட்டன. ஒவ்வொரு நாயன்மாரும் இறைவன்மீது காட்டிய அன்பு தனித் தன்மை வாய்ந்தது. இருப்பினும் அனைவரும் பக்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டினராகக் கருதப்பட்டனர்.

சிலர் ஆலயப் பணிக்கே தங்களை ஆளாக்கிக் கொண்டனர். ஆழ்ந்த தியான நிலையில் சில நாயன்மார்கள் இறைவனைப் பற்றி எண்ணினர். நாயன்மார்களில் சிலர் இசை மூலமாகவே இறைவனைக் கண்டனர். சிலர், இறைவனின் மந்திர வடிவை ஜபம் செய்வதிலேயே இன்பம் கண்டவர்கள். இறைவனின் அடியார்களுக்குப் பணிவிடை செய்வதையே வாழ்க்கையின் குறிக் கோளாகக் கொண்டவர்கள் சிலர். சிலர் சமணர்களையும் பௌத்தர்களையும் எதிர்ப்பதே சைவபக்தி என்று நினைத்த வர்கள். ஆலயம் கட்டுவதே பணி எனக் கருதியோர் சிலர். சிலர் தலயாத்திரை புரிவதே பெரும் பணி என நினைந்தவர்கள். சைவ சின்னத்தின் பெருமையை நிலைநாட்டவே உயிர் துறந் தோர் சிலர். சிலர் எத்துணைத் துயர்வரினும் அவற்றைத் தாங்குவதன் மூலம் தங்கள் பக்தியை உணர்த்தியவர்கள். இறைவனின் இயல்பினையும் அருட்பேற்றையும் நிரூபித்தவர்கள் சிலர்.

நால்வர் பாடல்கள் மூலமும், ஏனைய நாயன்மார்கள் வரலாறு மூலமும் தமிழகத்தின் அன்றைய சமுதாய, பொருளாதார நிலைகளைத் தெரிந்து கொள்கிறோம். சைவ சமய தத்துவக் கோட்பாடுகளையும் சைவ சமயத்தைப் பின்பற்றுவோர் கைக் கொள்ள வேண்டிய நெறி முறைகளையும் நாயன்மார்கள் மிகச் சிறப்பாகத் தங்களுடைய வாழ்வில் வாழ்ந்து காட்டியுள்ளார்கள். பக்தி நெறியை ஆழ்வார்களைப்போன்று தமிழகத்தில் பரப்ப அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியன. அவர்கள் காலத்தில் கோயில் திருப்பணிகள் சிறப்பாக நடை பெற்றதுடன், புதிய கோயில்கள் பல கட்டி முடிக்கப்பட்டன. குடமுழுக்கு விழாக்களும் ஏனைய சைவ சமயத் தொடர்பான விழாக்களும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. தமிழ்ச் சைவ மரபில், நால்வர் காட்டிய நன்னெறியை அனைவரும் பின் பற்ற வேண்டும் என்பது விரும்பப்படுகின்ற ஒன்றாகும். ஏனெனில், நால்வர் காட்டிய பாதை அனைவருக்கும் ஏற்புடையது. நமக்கு நால்வர் காட்டிய பாதை தெளிவான பாதை. அதைத்தான் நாம் பின்பற்ற வேண்டும்.

## இயல் 10

# 10.1. இந்திய மறுமலர்ச்சி

### இந்திய மறுமலர்ச்சிக்கான காரணங்கள்

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இந்நாட்டில் அரசியல், சமுதாய, சமய, பொருளாதார, அறத் துறைகளில் ஒரு சீர்குலைவு ஏற்பட்டது. தொழில்களும் வியாபாரமும் நலிவுப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. அரசியல் ரீதியில் ஒற்றுமையில்லாத காரணத்தால் நாட்டில் குழப்பமும் அராஜகமும் தலைவிரித்தாடின. நாட்டில் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு இவைகள் இல்லாத நிலை இருந்துவந்தது. மக்கள் குறுகிய மனப்பான்மையும் மூட நம்பிக்கைகளும் நிறைந்து காணப்பட்டனர். குழந்தை மணங்கள், வரதட்சணை, குழந்தைக் கொலை போன்ற சமுதாயத் தீமைகள் சமூகத்தில் பரவியிருந்தன. சமயத்தின் பேரால் மக்கள் ஏமாற்றப்பட்டனர். நிலப்பண்ணை உரிமை முறை, அரசியல் சமூக அமைப்பில் ஒரு கூட்டுறுதியை ஏற்படுத்தியது.

### இந்தியாவில் மறுமலர்ச்சி

இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரசியல் பொருளாதார, சமய, சமுதாய, பண்பாட்டு, இலக்கியத் துறை களில் பல மாற்றங்கள் ஏற்பட்டதன் விளைவாக மறுமலர்ச்சி தோன்றிற்று. இந்நூற்றாண்டில் பிரிட்டானியப் பேரரசு இந்தியா முழுவதும் தனது ஆட்சியை நிறுவி ஆண்டது. இதன் விளை வாக என்றும் காணாத மாற்றங்கள் எல்லாத் துறைகளிலும் ஏற்பட்டன. மேலைநாட்டுப் பண்பாட்டின் தாக்கம் இந்நாட்டு மக்களினுடைய பொருளாதார, சமூக, அரசியல், அறவாழ்வுத் துறைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்த விழிப் புணர்வையே 'மறுமலர்ச்சி' என்று கூறுகிறோம். இந்த மறுமலர்ச்சி இந்திய நாட்டின் ஆன்மாவின் ஆழத்தைக் கலக்கியதுடன் பல் வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியது. 'உண்மையாகவே, இன்றைய இந்தியா தனது நிலைக்கு — மறு மலர்ச்சிக்கு — நன்றி செலுத்தக் கடப்பாடுடையது' என பி. என். லூனியா கூறுகிறார்.

**மறுமலர்ச்சி ஏற்படக் காரணங்கள்**

(1) பிரிட்டானிய ஆட்சி இந்நாட்டில் நிலவிவந்த அராஜகத்தையும் குழப்பத்தையும் அகற்றத் தன் பணியினைச் செய்தது. இதன் விளைவாக நாட்டிலே அமைதியும் பாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டன. இந்தியர்கள் தங்களுடைய உண்மை நிலையை அறிந்துகொள்ள வாய்ப்பும் நேரமும் கிட்டின.

(2) கி. பி. 1835ஆம் ஆண்டு மெக்காலே பிரபுவின் முயற்சியால் ஆங்கிலம் பயிற்று மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக மேற்கத்திய பண்பாட்டையும் நாகரிகத்தையும் இந்தியர்கள் எளிதிலே அறிந்துகொள்ள முடிந்தது. பல்வேறு துறைகளில் மேலைநாடு அடைந்திருந்த முன்னேற்றத்தை இந்தியா அறிந்துகொள்ள வாய்ப்புப் பெற்றிருந்தது. இந்தியர்களிடையே அறிவியல் அறிவு தோன்றத் தலைப்பட்டது.

(3) இந்நாட்டில் கிறித்தவச் சமயம் ஐரோப்பியர்களால் கொண்டுவரப்பட்டு, கிறித்தவ சமயக் குழுக்களால் பரப்பப்பட்டது. இக்குழுக்கள் கல்வியை ஒரு கருவியாகக் கொண்டு தமது சமயத்தைப் பரப்பின. பல கல்வி நிறுவனங்களை நிறுவின. இந்து சமய, சமுதாயத் துறைகளில் நிலவிவந்த குறைகளைச் சுட்டிக் காட்டின. இதன் விளைவாகச் சமய, சமுதாயத் துறைகளிலே சீர்திருத்தங்கள் தோன்றலாயின. ஆரிய சமாஜம், பிரம சமாஜம் போன்ற சீர்திருத்த இயக்கங்கள் உருவாக்கப்பட்டன.

(4) மேலைநாட்டுச் சமுதாய அமைப்பிலே எளிய போக்கும் செயற்கையான வாழ்வு அமைப்பும், இல்லாதிருந்ததைக் காண முடிந்தது இந்தியர்கட்கு. இதைக் கண்ட பல்வேறு இந்தியர்கள் தங்கள் நாட்டையும் இதேபோன்று எண்ணற்ற சமுதாய தீய பழக்க வழக்கங்களினின்று விடுவிக்க முயன்றனர். குறிப்பாக இராஜராம் மோகன்ராய் இங்கே நினைவுகூரத்தக்கவர்.

(5) பிரிட்டானிய ஆட்சியின் விளைவாக இந்தியா அறிவியல், தொழில் நுட்பத் துறைகளில் முன்னேறிய அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்புகொள்ள முடிந்தது. இதன் விளைவாக இந்தியர்களிடையே முற்போக்கு மனப்பான்மையும் பொருளாதார தொழில்துறைகளில் முன்னேற வேண்டும் என்ற போக்கும் தோன்றலாயின.

(6) இந்திய மறுமலர்ச்சி மேலைநாட்டு அறிஞர்கட்கும் செய்தித் தாள்களால் ஏற்பட்ட செல்வாக்கிற்கும் மிகக் கடப்

பாடுடையது. இதுமட்டுமன்று, இங்கிலாந்து ஜெர்மானிய நாட்டுப் பேரறிஞர்கள், இந்தியப் பண்பாட்டைக் கற்று அது தொடர்பாக நிறைய நூல்களை வெளியிட்டனர். தமது பெருமையை, உயரிய பாரம்பரியத்தை மறந்திருந்த இந்திய மக்களுக்கு வெளி நாட்டார் அதை உணர்த்தினர்.

**மறுமலர்ச்சியின் விளைவுகள்**

(1) முகலாயர் ஆட்சி சீர்குலைந்து போனபின்பு, இந்த நாட்டின் பாண்பாடும் சீர்குலையத் தலைப்பட்டது. இந்தியர்கள் தன்னம்பிக்கையிழந்தனர். மேலைநாட்டு அறிஞர்களான வில்லியம் ஜோன்ஸ், கோல்புருக் மோனியர், மாக்ஸ் முல்லர் போன்றோர் சமஸ்கிருத இலக்கியங்களைப் பயின்று இந்நாட்டு வேதங்களையும் உபநிடதங்களையும் மேலைநாட்டு மொழிகளில் மொழிபெயர்த்து அவைகட்கு உரைகளும் எழுதினர். இதன் விளைவாக இந்தியர்கட்குப் பண்டைய இந்தியாவின் சீரிய பண்பாட்டினை உணர, தன்னம்பிக்கை பெறமுடிந்தது.

(2) மேலைநாட்டார் வரலாற்றுத் துறையிலும் நமது இலக்கியங்களை, கையெழுத்துப் பிரதிகளை, கல்வெட்டுகளை, நாணயங்களை ஆராய்ந்தும் தொல்பொருள் ஆய்வு நடத்தியும் தக்க சான்றுகளுடன் கூடிய வரலாற்று நூல்களை எழுதினர். இது தொடர்பாக நம் பாராட்டுக்குரியவர்கள் பெர்ஸிப்ரவுன், மார்ஷல், ஹேவல், ப்ளீட் முதலியோர் ஆவர். இதன் விளைவாகவும் இந்தியர்கள் தங்களது பண்டைய பெருமையை உணர்ந்ததோடு தாங்களும் தக்க சான்றுகளுடன் இந்நாட்டு வரலாற்றை எழுதினர்.

(3) இந்துக்கள் கிறித்தவச் சமயத்திற்குச் செல்லாவண்ணம் இந்து சமயத்திலேயே சீர்திருத்தங்களைப் பல சீர்திருத்த வாதிகள் புகுத்தினர். பிரம சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ண இயக்கம் போன்ற இயக்கங்கள் தோன்றி இந்து சமயத்தைச் சீர்திருத்தி இந்து சமயச் சிறப்பை உலகிற்கு எடுத்துரைத்து இந்து சமயம் அழிவுப் பாதையில் செல்வதினின்று காப்பாற்றின. சுவாமி விவேகானந்தர் உலகச் சமயங்களின் மகா நாட்டில் சிகாகோவில் இந்து சமயச் சிறப்பைப் பற்றி ஆற்றிய உரையை எவரும் என்றும் மறக்கமுடியாது.

(4) இந்து சமயத்தில் நிலவியிருந்த பல்வேறு தீமைகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் இந்துக்கள், பிரிட்டானியர்களுடைய தொடர்பால் அறியலாயினர். சூத்திரர்

களுடைய இழிந்த நிலையைக் கண்டு, கிறித்தவ சமயக் குழுக்கள் அவர்களைப் பெரிய அளவில் மதமாற்றின. இதைக் கண்ட இந்து சமயச் சீர்திருத்தவாதிகள் கீழ்ச்சாதி மக்களின் நிலையை உயர்த்தப் பாடுபட்டனர். சதியென்ற உடன்கட்டை ஏறும் பழக்கத்தையும், குழந்தை மணத்தையும் இராசாராம் மோகன்ராய் வன்மையாகக் கண்டித்தார். சமுதாயத்தில் விழிப் புணர்வு தோன்ற ஆரிய சமாஜம், பிரம சமாஜம், இராமகிருஷ்ண இயக்கம் போன்றவை பெரும் தொண்டாற்றின. தீண்டாமையை ஒழிக்க மகாத்மாகாந்தி ஒரு பெரும் போரினை நிகழ்த்தியதை நாம் காண்கின்றோம். ஆங்கிலக் கல்வியின் விளைவாக இந்தியர்கள் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றனர். பகுத்தறிவுப் பட்டறையில் சரியெனக் கருதப்பட்டதே ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் விளைவாக இந்தியர்களிடம் பரந்த நோக்குத் தோன்றத் தலைப்பட்டது.

(5) பிரிட்டானியர்களுடைய தொடர்பால் இந்நாட்டுப் பெண்களின் நிலையும் உயர்ந்தது. ஆங்கிலேயர்கள் மகளிர் கல்வியில் மிகுந்த அக்கறை காட்டினர். நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடந்த நங்கையர் நல்ல கல்வி பெற்று, ஆண் களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழும் நிலையைப் பெற முயன்றனர். பர்தா முறையை ஆரிய சமாஜம் எதிர்த்தது. விதவை மணத்தைப் பல சீர்திருத்தவாதிகள் பரிந்துரைத்தனர். குழந்தை மணம் சட்ட ரீதியாகத் தவறு என எடுத்துரைக்கப் பட்டது. ஈஸ்வர சந்திர வித்யாசாகர் என்பவர் குறிப்பாக மகளிர் முன்னேற்றத்திற்கு மாபெரும் தொண்டாற்றியவர்.

(6) அறிவியற் கல்வி, மேலைநாட்டு அறிவியல் வளர்ச்சியை அறிந்து கொள்ளவும் அதன்மூலம் இந்நாட்டிலே முன்னேற் றத்தை உருவாக்கவும் துணைபுரிந்தது. இந்திய இளைஞர் களும் அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இராமானுஜம், சி. வி. இராமன், ஜெகதீஸ் சந்திர போஸ் போன்றோர் முறையே கணித, பௌதிக, தாவரத்துறைகளிலே உலகம் வியக்கத்தக்க ஆராய்ச்சிகளைக் கண்டுபிடித்தனர்.

இந்தியர்கள் அழகுக் கலைகளில் சிறந்த வளர்ச்சி பெறு வதற்கு மேலை நாட்டு அறிஞர்களே காரணமாக இருந்தார்கள். குறிப்பாக ஹேவல், சகோதரி நிவேதிதா, பெர்ஸிப்ரவுன், மார்ஷல் போன்றோர் நம் பண்டைய அழகுக் கலைகளை ஆராய்ந்து புகழ்ந்து நூல்கள் எழுதினர். இதன் விளைவாக ஓவியம், சிற்பம்,

கட்டடக்கலை, இசை, நாட்டியம் போன்றவற்றைக் கற்பிக்கப் பல கல்வி நிறுவனங்கள் தோன்றின.

இந்நாட்டுப் பொருளாதாரத் துறையிலும், பிரிட்டானியச் செல்வாக்கினால் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. பல தொழில்கள் பிரிட்டானியர் காலத்தில் வெகு வேகமாக முன்னேறின. பல வாணிப நிறுவனங்களும் முன்னேறின. வேளாண்துறையிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. இந்தியத் தொழில் அதிபர்கள் பல புதிய தொழில்களை ஆரம்பித்தனர். இந்தியாவிலேயே பல பொருள்கள் தயாரிக்கப்பட்டன. இக்காலத்தில் பல நூற்பு ஆலைகளும் நெசவு ஆலைகளும் தோன்றலாயின. தொழிற் பெருக்கமும் முதலாளித்துவமும் ஒரே நேரத்தில் தோன்றின.

பிரிட்டானியருடைய வருகையால் சமுதாய நிலையில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. எழுத்தர்களும் அலுவலகப் பணியாளர்களும், சமுதாயத்தில் மதிக்கப்பட்டனர். கல்விக்குச் சமுதாயத்தில் மரியாதை இருந்தது. ஆங்கிலம் தெரிந்தோர் பிறமொழிகளைத் தெரிந்தோரைவிட உயர்ந்தோர் எனத் தங்களைக் கருதிக்கொண்டனர்.

இந்திய மொழிகளிலும் ஒரு பெரிய முன்னேற்றத்தை இக்காலத்தில் காண்கின்றோம். ஆங்கில இலக்கியத்தில் இருக்கின்ற புதினம் (நாவல்), கவிதை, நாடகம் போன்ற பல்வேறு துறைகள் இந்திய இலக்கியத்திலேயும் தோன்றலாயின. ஆங்கில மொழியில் பின்பற்றப்பட்ட பாணிகளும் விமரிசன முறையும் இந்திய மொழிகளில் பயன்படுத்தப்பட்டன. இதன் விளைவாக இந்திய மொழிகள் பல்வேறு துறைகளில் பெரிய இலக்கிய விற்பன்னர்களை உருவாக்க முடிந்தது.

இந்திய மறுமலர்ச்சி இந்நாட்டின் பண்டைய பெருமையை மக்களுக்கு உணர்த்தியதோடு, மேலை நாட்டுப் பண்பாட்டில், நாகரிகத்தில், அறிவியலில் கண்ட நல்ல, தீய கூறுகளை மக்கள் பின்பற்றக்கூடிய ஒரு நிலையை உருவாக்கியது. இந்திய மறுமலர்ச்சி அதிக அளவில் நன்மை பயக்கத்தக்கதாக இருந்தது. இதன் விளைவாக எண்ணரிய நன்மைகள் பல சீர்திருத்த இயக்கங்கள் மூலம் இந்நாட்டிற்குக் கிடைத்தன.

# 10.2. பிரம சமாஜம்

**சீர்திருத்த இயக்கங்கள்**

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் பிரிட்டானியர்களுடைய ஆட்சி நிலையாக நிறுவப்பட்டது. இவர்களது அரசியல் ஆதிக்கத்தின் காரணமாக, இந்நாட்டில் மேலை நாட்டுப் பண்பாட்டு நாகரிகப் புயற்காற்று வெகு வேகமாக வீசத் தொடங்கியது. இதனுடைய விளைவுகளை இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சியில் காணலாம். மேலைநாட்டுக் கருத்துகளின் தாக்கம், பண்டைய சமயங்களின் சமுதாய நிறுவனங்களின் அமைப்புகளுக்கு ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பதினெட்டாம் நூற்றாண்டில், இந்நாட்டின் போக்கு ஈடு இணையற்ற மாற்றத்திற்கும் திறனாய்வுக்குமுரிய ஓர் ஏடாயிற்று. இதே நேரத்தில் பழைய கொள்கைகளிலும், கோட்பாடுகளிலும் உறுதிப்பாடுடைய மக்களையும் நாம் காண முடிகின்றது. ஒரு சாரார் வைதிகக் கோட்பாடுகளை நிலைநிறுத்தப் பாடுபட்டனர். மற்றொருபுறம் மேலைநாட்டுக் கல்வியாலும், எண்ணங்களின் தாக்கத்தினாலும், உருவான சீர்திருத்தவாதிகள் அதற்கு எதிராக ஒரு புதிய, சீர்திருந்திய சமூகத்தை அமைக்க விரும்பினர். இந்நாட்டுச் சமயத்திலும், சமுதாய அமைப்பிலும் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்பச் சீர்திருத்தவாதிகள் முயன்றனர். இச்சூழலில் கிறித்தவ சமயமும் மேலைநாட்டுப் பண்பாடும் இந்தியாவில் குறிப்பாக வங்காளத்தில் வேகமாகப் பரவத் தொடங்கின. பலர் கிறித்தவ சமயத்தைத் தழுவி மேலைநாட்டுப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் புகழ்ந்து பேசினர். பழமைக்கும் புதுமைக்குமிடையே நடுநிலையில் நின்று இரண்டிலுமுள்ள நல்ல கோட்பாடுகளையும் எடுத்தியம்ப ஒருசாரார் வந்தனர். இவர்கள், தங்களது பண்பாடும் சமயமும் எவ்வகையிலும் மேலைநாட்டினருடைய பண்பாட்டையும் சமயத்தையும்விடத் தரத்திலும், கருத்திலும், சிறப்பிலும் குறைந்தவையல்ல எனக் கருதினர். அன்று கண்ட தீமைகளை அவர்கள் சமுதாய சமயச் சீர்த்திருத்தங்கள் மூலம் போக்க வழிவகை கண்டனர். இராசாராம் மோகன் ராய் இதற்கு முன்னோடியாக விளங்கினார்; இதற்கென அவர் நிறுவிய அமைப்பை 'பிரம சமாஜம்' எனக் கூறினார். இவ்வியக்கங்களின் விளைவாகச் சமய சமுதாய அமைப்புகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்துக்களுடைய நம்பிக்கைகள், வழக்கங்கள், நிறுவனங்கள் இவற்றில் பொதுவாக மாற்றங்கள் ஏற்பட்டன.

பதினான்காம் நூற்றாண்டிலேயே சீர்திருத்த இயக்கங்களைக் காணமுடிந்தாலும் பதினெட்டாம் நூற்றாண்டுவரை பெரிய மாற்றங்களைச் சமய சமுதாயத் துறைகளில் காண முடியவில்லை.

**பிரம சமாஜமும் இராசாராம் மோகன்ராயும்**

பிரம சமாஜத்தை நிறுவிய இராசாராம் மோகன்ராயைப் புதிய இந்தியாவை நிறுவியவர் என்றும் புதிய இந்திய மறுமலர்ச்சியைத் தொடங்கி வைத்தவர் என்றும் குறிப்பிடலாம். இந்த சமாஜம் கி. பி. 1828-ல் நிறுவப்பட்டது. இதுவே முதல் சீர்திருத்த இயக்கம். இவர் வசதியுடைய வைதிக பிராமண குடும்பத்தில் வங்காளத்தில் கி. பி. 1772ஆம் ஆண்டில் பிறந்தார். ஆங்கிலம், பிரஞ்சு, இலத்தீன், ஹீப்ரு, கிரேக்கம், சமஸ்கிருதம், இந்தி போன்ற மொழிகளை இவர் கற்றிருந்தார். இந்து சமய தருமசாத்திரங்கள், வேதங்கள், உபநிடதங்கள் போன்ற பிறவற்றை ஆழ்ந்து பயின்றிருந்தார். ஆங்கில நாகரிகத்தில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டுப் பலமுறை இங்கிலாந்து சென்றுவந்தார். இவர் தமது வாழ்வை ஓர் எழுத்தராக ஆரம்பித்து, தமது நாற்பதாவது வயதில் வேலையை விட்டு விலகித் தமது எஞ்சிய வாழ்நாளைச் சமுதாயப் பணிக்காக அற்பணித்தார். இவர் இந்து சமுதாயத்திற்குள் இருந்துவந்த மூடநம்பிக்கைகட்கும் ஏனைய தீமைகட்கும் எதிராகக் குரல் எழுப்பினார். இந்த நிறுவனத்தின் மூலம் அவர் ஒரு புதிய சமயத்தைப் பரப்ப விரும்பவில்லை. இந்த அமைப்பில் அனைத்துச் சமயங்களின் அரிய கோட்பாடுகள் அமைந்திருந்தன. எல்லா மக்களும் சாதி, சமயப் பாகுபாடின்றிக் கலந்து ஒரே இறைவனை வழிபட இந் நிறுவனம் வழிவகுத்துக் கொடுத்தது.

கிழக்கிந்திய நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுது கிறித்தவப் பாதரியார்கள் தொடர்பு இவருக்கு ஏற்பட்டது. இதன் விளைவாக உடனடியாக இந்துசமயத்தைச் சீர்திருத்தி அமைக்க வேண்டுமெனக் கருதினார். கி. பி. 18.5-ல் கல்கத்தாவில் 'ஆத்மிக சபை' என்பதை நிறுவினார். இதில் நடுத்தர, கீழ்த்தர மக்கள் கலந்து கொண்டனர். 1819-ல் வேதாந்த சாத்திரங்களின் சாரத்தை ஆங்கிலத்திலும் வங்காள மொழியிலும் வெளியிட்டார். பின்பு நான்கு உபநிடதங்களை மொழிபெயர்த்தார். 1820-ல் ஏசுவின் போதனைகளைத் திறனாய்வு செய்து, 'ஏசுவின் கொள்கைகள்—அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் வழிகாட்டி' என்ற நூலை வெளியிட்டார்.

கிறித்தவ திருச்சபைக் குருக்கள் இதற்கு மறுப்புத் தெரிவித்தனர். இவற்றையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாது 'கிறித்தவ மக்களுக்கு ஒரு முறையீடு' என மூன்று கட்டுரைகள் வெளியிட்டு, ஏசு, இறைவனின் திருப்புதல்வன் அல்ல என நிருபிக்க முயன்றார்.

**பிரம சமாஜத்தின் கொள்கைகள்**

**1. சமயத்துறை :** ஒரு தெய்வ வழிபாட்டை இவ்வமைப்பைச் சார்ந்தோர் பின்பற்றவேண்டுமென பிரம சமாஜப் பொறுப்பாவணத்தில் இராசாராம் மோகன்ராய் தெளிவுபடுத்தியுள்ளார். இந்த உத்தமனை இரு கைகளால் மட்டுமன்றி இதயத்தாலும் வழிபடவேண்டும். தன் முனைப்பை அழித்துவிட்டுத் தனது ஆத்மாவை இறைவனுக்குத் திருப்படையல் செய்யவேண்டும். ஒரு தெய்வ வழிபாட்டையும், உலகிலுள்ள அனைவரும் உடன் பிறந்தோரே என்பதையும் இவர் மிகவும் வலியுறுத்தினார். எல்லாச் சமயங்களையும் அவற்றின் சமய இலக்கியங்களையும் நன்மதிப்புடன் போற்றினார். இவ்வியக்கத்தின் கதவுகள் எப்பாகுபாடுமின்றி எல்லாருக்கும் திறந்துவிடப்பட்டிருந்தன. இது இந்து சமயத்தைவிட்டு ஓடிவிட விரும்பவில்லை. ஆனால் மேலை நாட்டுத் தாக்கத்தின் விளைவாகத் தோன்றிய நல்ல கருத்துகளைத் தன்வயப்படுத்திக்கொண்டு விரிந்த பரந்த உணர்வுடன் செயல்பட விரும்பியது.

**2. சமுதாயத் தொண்டு :** சமுதாயத் துறையில் இவரது தொண்டு அளவிடற்கரியது. பயனற்ற சமுதாயப் பழக்க வழக்கங்களைச் சட்டத்திற்குப் புறம்பானதென அறிவிக்கப் பிரிட்டானியரின் துணையை நாடினார். சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் என்ற பழக்கம் அந்த நாள்களில் நிலவி வந்தது. வில்லியம் பெண்டிங்கை அது சட்டத்திற்குப் புறம்பானதென அறிவிக்கச் செய்தார். அவர் வாழ்ந்த காலத்தில் வங்காளத்தில் இளம் விதவைகட்கு எண்ணற்ற இன்னல்கள் இழைக்கப்பட்டன. பல இளம் விதவைகள் இதனால் இஸ்லாமிய சமயத்தைத் தழுவினர். மோகன்ராய் இவர்கள் மறுமணம் செய்துகொள்வதை ஆதரித்தார். இவர் பலதார மணத்தையும், குழந்தை மணத்தையும் வன்மையாகக் கண்டித்தார். இவர் பெண் குழந்தைகளைக் கொல்வதை எதிர்த்துக் குரல் எழுப்பினார். உருவ வழிபாட்டையும், வேள்விகளையும் கடுமையாகச் சாடினார். மகளிர் நலனுக்காகப் போராடினார். பெண்கள் சொத்துரிமையைப் பற்றியும் கலப்பு மணத்தைப்பற்றியும் சமுதாயத்திற்கு உணர்த்தினார்.

**3. எழுத்துரிமை:** செய்தித்தாள்கள் முழு உரிமையுடன் செயல்படவேண்டும்; மனிதன் எண்ண, எழுத எவ்விதக் கட்டுப் பாடும் இருத்தல் கூடாது என்பது இவரது கருத்து. செய்தித் தாள்கள்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை எதிர்த்தார்.

மேலும், ஏழை உழவர்களின் நிலை உயரப் பாடுபட்டார். சிறிதும் அச்சமின்றி அவர்களுக்காகப் போரிட்டார். ஜமீன் தார்கள் அவர்களுக்கு விதித்த நிலத்தீர்வையைக் குறைக்கக் கோரினார்.

**இராசாராம் மோகன்ராய் – ஒரு மதிப்பீடு**

இவர் ஒரு சமுதாயச் சிற்பி மட்டுமல்லர், சிறந்த நாட்டுப் பற்றுமுடையவர். மக்களிடையே அரசியல் விழிப்புணர்வைத் தோற்றுவிக்க முயன்றார். இவரை இந்தியாவின் புத்துலகச் சிற்பியெனக் கூறலாம். சமய, அரசியல், தத்துவ, சமுதாய, கல்வி, இலக்கிய, சட்டத்துறைகளில் பல சீர்திருத்தங்களைக் கொணரக் காரணமாக இருந்தவர் இராசாராம் மோகன்ராய். மகளிர் நலனுக்காக இதற்குமுன்பு இவரைப்போல் எவரும் பாடு பட்டதில்லை.

தீண்டாமையை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினார். அக்காலத்தில் நல்ல இலக்கியப் புலமை நிறைந்தவராகவும், இலக்கியப் படைப்புகளை அளித்தவராகவும் திகழ்ந்தார். இவர் உருது, வங்காளம், இந்தி, சமஸ்கிருதம், பாரசீகம், ஆங்கில மொழிகளில் பல நூல்களை எழுதியுள்ளார். சம்வத் கௌமதி என்ற வங்காள சஞ்சிகையை 1819-ல் நிறுவி ஆசிரியராக இருந்து பணியாற்றினார். இதற்கு மூன்று ஆண்டுகட்குப் பின்னர், பாரசீக மொழியில் மிராதுல் அக்பர் என்ற சஞ்சிகையையும் வெளி யிட்டார். சஞ்சிகை உலகில் முன்னோடியாக விளங்கி இளம் வங்காள எழுத்தாளர்கட்கு வழிகாட்டியாக விளங்கினார்.

அரசியல் வானில் இவர்தான் புதிய இந்தியாவின் தீர்க்க தரிசியாக (வருவதுரைப்போராக) இருந்தார். உரிமைபெற வேண்டும், அதைச் சட்டத்தின் மூலம் பெற வேண்டும் என்னும் கொள்கையுடையவர் இவர்.

மானியர் வில்லியம்ஸ் என்பவர் 'இராசாராம் மோகன்ராய்தான், முதன் முதலில், உலகிலேயே சமய ஒப்புமை ஆய்வை, அறிவியல் முறையில் அக்கறையுடன் செய்யத் தலைப்பட்டவர்' என்று

கூறுகிறார். இவர் உலகம் தழுவிய மனிதாபிமான உணர்வை வலியுறுத்திய எளிய தூய மனிதாபிமானி. பட்டுப் போகாத பழமைக்கும் புலரும் புதுமைக்கும் இணைப்புப் பாலமாக இராசாராம் மோகன்ராய் விளங்கினார். 'இவர், இந்தியாவில் புதிய காலத்தைத் தொடங்கிவைத்தவர்' என இரவீந்திரநாத தாகூர் கூறுகிறார்.

இராசாராம் மோகன்ராய் 1833-ல் பிரிஸ்டல் என்ற இடத்தில் அகால மரணமடைந்தார். இதன் விளைவாக இவ்வியக்கம் பெரும் அதிர்ச்சிக்குள்ளாயிற்று. நிருவாக அமைப்பு முறைகளும் சட்ட திட்டங்களும் முறையாக இல்லாததால் அதன் முன்னேற்றம் தடைப்பட்டது. 1843-ல் தேவந்திரநாத தாகூர் இவ்வியக்கத்தில் சேர்ந்து இதைப் புதுப்பித்தார். அவருடைய தலைமையில் பிரம சமாஜம் பீடுநடை போட்டது. அவர் மாதா கோவில் வழிபாட்டு முறை, நன்றி நவிலும் தொழுகை முறை, புகழஞ்சலி வழிபாடு போன்றவற்றை அறிமுகப்படுத்தினார். கேசவ சந்திரசென் 1862-ல் பிரம சமாஜத்தில் சேர்ந்தார். இவர் கிறித்தவ, வைணவ போதனைகளை வலியுறுத்தினார். இது மற்றவர்களால் வெறுக்கப்பட்டது; இதன் விளைவு சமாஜம் இரண்டாகப் பிளவுண்டது. கேசவ சந்திரசென் 1884-ல் மறைந்தார். பிரம சமாஜத்தில் பல உட்பிரிவுகள் இருந்தாலும் ஆரிய சமாஜத்தைப்போன்று செல்வாக்குடன் விளங்கவில்லை. இந்துக்களின் இதயங்களை மாற்றுவதிலும், மேலைநாட்டுக் கருத்துகளைச் சிந்திக்கத் தூண்டுவதிலும் பிரம சமாஜம் பெரும் பங்காற்றியது.

## 10.3. ஆரிய சமாஜம்

இந்த சமாஜம், இந்திய சமய சமுதாய சீர்திருத்த வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இது சுவாமி தயானந்தர் என்பவரால் 1875-ல் நிறுவப்பெற்றது. அவரது இயற்பெயர் மூல சங்கரன். இவர் குஜராத்தில் வசதியுள்ள பிராமண குடும்பத்தில் 1824-ல் பிறந்தார். தந்தை அம்பா சங்கரர், இவருக்கு இருபதாவது வயதில் திருமணம் முடிக்க விரும்பியபொழுது இவர் உண்மையை நாடி இல்லத்தினை விட்டு நீங்கி இந்தியா முழுமையும் சுற்றிப் பல்வேறு இடங்களில் கல்வி கற்றார். 15 ஆண்டுகள் அலைந்து திரிந்து இறுதியாக மதுராபுரிக்குச் சென்று சுவாமிஜி விரஜானந்தரின் சீடரானார். பின்பு சத்தியப் பிரகாசம் என்ற நூலை எழுதினார். இதில் இவருடைய சமயக்

கருத்துகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. தமது வாழ் நாளை வேத சமயத்தைப் பரப்புவதிலும், இந்து சமய, சமுதாயச் சீர்திருத்தப் பணிகளிலும் கழித்தார். இது சிறந்த சமய, சமூக, கல்வி இயக்கமாய் மாறியது எனலாம். ஐந்தாண்டுகளுக்குள் பல்லாயிரக் கணக்கானோர் அவரைப் பின்பற்றத் தலைப் பட்டனர்.

சுவாமி தயானந்தர் சிறந்த சீர்திருத்தவாதி. வேத சமயம், நாகரிகம், பண்பாடு இவை மூன்றும் உலகிலேயே மிகச் சிறந்தவை என்பது அவரது அசைக்க முடியா நம்பிக்கை. இவற்றிற்குப் புத்துயிர் அளித்தால்தான் இந்தியா மேம்பாடு அடைய முடியும் என்றும் கருதினார். இந்து சமயத்தில் இருந்துவரும் தீமை களைக் களைய வேத சமயத்திற்குப் புத்தூக்கம் அளிக்க வேண்டு மென்பதை வலியுறுத்தினார். வேதங்கள் மிகவும் நம்பத் தகுந்த செய்திகள் அடங்கியவை எனவும் கூறினார். சாதிப்பாகுபாட்டைச் சாடினார். மக்கள் அனைவரும் சமம் எனப் புகன்றார்.

இவர் ஒரு கடவுட் கோட்பாட்டை வலியுறுத்தியதுடன், எல்லா வகை மூட நம்பிக்கைகளையும், உருவ வழிபாட்டையும், பலதார மணத்தையும், குழந்தை மணத்தையும், பல கடவுட் கோட்பாட்டையும், அவதாரக் கொள்கையையும் வன்மையாகக் கண்டித்தார். அதே சமயம் ஒரு கடுமையான, சகிப்புத் தன்மையில்லாத சமயமாக இந்து சமயம் இருந்தது. இதனால் பிற சமயத்தவர் இதைத் தழுவிக்கொள்ள முடியவில்லை. வேறு சமயத்திற்குச் சென்ற இந்துக்கள் மீண்டும் இந்து சமயத்திற்கு வர இயலா நிலையும் இருந்தது. இந்நிலையை மாற்ற சுவாமி தூய்மைப்படுத்தும் சடங்குகளைப் பின்பற்றினார். இச் சடங்கின் மூலம் பிற சமயத்தைச் சார்ந்தோர்கூட இந்து சமயத்திற்கு வரலாம். இவ்வாறாக ஆரிய சமாஜம், இந்து சமயத்தில் புரட்சிகர மான மாற்றங்களைக் கொணர்ந்தது. தீண்டாமையை நீக்க, சாதிப்பாகுபாட்டு முறையைக் களைய விதவைகளை மறுமணம் செய்துகொள்ள இச்சமாஜம் பெருந் தொண்டாற்றியது, பெண் கல்வியை ஊக்குவித்தது. இந்துக்களிடம் நாட்டுப் பற்றை வளர்க்கப் பெரிதும் பாடுபட்டது. இவ்வியக்கம் லாலா லஜபதிராய், சுவாமி சிரத்தானந்தர் போன்ற பெருந் தலைவர்களை இந்தியா விற்கு அளித்தது. சுதேசி இயக்கத்திற்கு வித்திட்ட முதல் இந்தியர் சுவாமி தயானந்தர். ‘இந்தியா இந்தியருக்கே’ என்ற முழக்கத்தை எழுப்பியவரும் இவரே. எண்ணற்ற பள்ளிகளையும், கல்லூரிகளையும் இந்த சமாஜம் நிறுவியது.

இந்துக்களை விடுதலைப் போருக்கு சுவாமி தயானந்தர் ஆயத்தம் செய்தார். நம்மை நாமே ஆண்டுகொள்வதே நல்லாட்சி எனப் பொருள்படும் எனக் கூறினார். இந்நாட்டின் சிறப்புமிக்க தொல்மரபுகளைக் கூறி, அவற்றை மறக்காமல் தொல் வரவாகக் கொண்டு, நமது நாட்டின் சீரிய பாரம்பரியத்தைப் பேணிக் காக்க வேண்டியது நமது கடமை எனப் புகன்றார். இதன் விளைவாக மக்களிடையே புதிய விழிப்புணர்வு தோன்ற லாயிற்று.

உண்மையே வெல்லும், மீண்டும் வேதங்கட்குச் செல் என்பன அவருடைய பொன் மொழிகள். அவர் மறைந்த பின்பும் அவருடைய பின் தோன்றல்கள் அவர்தம் பணியினைத் தொடர்ந்து மேற்கொண்டனர். சுவாமி தயானந்தர் சமாஜத்தை நிறுவிய 8 ஆண்டுகளுக்குள் அகால மரணமடைந்தார். இதன் பின்னர், மகாத்மா ஹன்ஸ்ராஜ் என்பவர், தயானந்த ஆங்கில வேதக் கல்லூரியை நிறுவினார். 1902-ல் ஆரிய சமாஜத்தில் டி. ஏ. வி. கல்லூரிப் பிரிவு, குருகுலப் பிரிவு என இரு பிரிவுகள் தோன்றலாயின. குருகுலப் பிரிவு குருகுல கங்கேரி என்ற ஒரு நிறுவனத்தைத் தொடங்கியது. அது பின்னர் பல்கலைக் கழகமாக வளர்ந்தது. இந்தியத் திருநாட்டில் இளைஞர்களும் இளம்பெண் களும் ஏற்றம்பெறும் வகையில் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்திய பெருமை இவ்வியக்கத்தைச் சாரும். இந்து சமயத்தை மட்டுமன்றி, இந்து சமூகத்தையும் செம்மைப்படுத்தும் சீரிய பணியினை இன்றும் ஆரிய சமாஜம் தொடர்ந்து செய்து வருகிறது. இன்றும் இந்தியா முழுமையும் அதன் கிளைகள் உள்ளன. ஆரிய சமாஜம் இந்து சமயத்திற்குப் புத்துயிரும் புதிய தெம்பும் அளித்தது.

சுவாமி தயானந்தர் ஓர் உயந்த ஞானி. கடந்த காலத் தையும் நிகழ் காலத்தையும் இணைக்கும் பாலத்தின் முக்கியத் தூணாக அவர் விளங்கினார். அவர் தமது கோட்பாடுகளை ஆங்கிலத்திலோ அல்லது சமஸ்கிருதத்திலோ போதிக்கவில்லை; இந்தியில் போதித்து, நூல்களும் இந்தி மொழியில் எழுதினார். இவ்வாறாக இந்தியின் வளத்தைப் பெருக்கி, அதை இந்நாட்டின் பொது மொழியாக்கும் தகுதியை உருவாக்க முயன்றார். இவர் அடிக்கடி சுய ராஜ்யம் (நமது அரசு), சுய பாஷை (நமது மொழி), சுய தருமம் (நமது சமயம்) என்று கூறியது மக்க ளிடையே அரசியல் விடுதலை உணர்வைத் தூண்டியது. இன்றும் இவரது நெறியில் சென்றால் இந்து சமயமும் சமுதாயமும் பீடுநடை போடப் பெரும் வாய்ப்புள்ளது.

# 10.4. இராமகிருஷ்ண இயக்கம்

## இராமகிருஷ்ணரின் வாழ்வு

இந்தியாவில் குழப்பமும் அமைதியின்மையும் தலை விரித்தாடிக் கொண்டிருந்தபொழுது அமைதியையும் அறிவொளியையும் நல்க இந்திய வானில் தோன்றிய விடிவெள்ளி இராமகிருஷ்ண பரமஹம்ஸர். இவர் தமது மனமென்னும் ஆய்வுக் கூடத்தில் ஆன்மாபற்றிய ஆராய்ச்சியை நடத்திக் கொண்டிருந்தார். தூய கங்கை நதிக்கரையில் கல்கத்தாவிற் கருகிலுள்ள தக்ஷிணேஸ்வரம் என்ற இடத்தில் அமைந்திருந்த காளிகோயிலில் தமது காலத்தைக் கழித்த இவர், எல்லாச் சமயங்களின் சாரத்தையும் அறிந்து, உண்மைகளை உணர்ந்து, சுவைத்து வாழ்ந்துகாட்டிய ஞானி. 1875ஆம் ஆண்டு இறுதியில் அவருடைய ஆய்வுகள் முடிந்தன. பின்பு கேசவ சந்திரசென்னும் பிரம்ம சமாஜமும் காணவிரும்பிய மறுமலர்ச்சி எண்ண அலைகளோடு தொடர்பு கொண்டார். பின்பு 1886-ல் அவர் மகாசமாதி நிலையை அடையும் வரை 11 ஆண்டுகட்கு எளிய சொற்களில், இனிய நடையில் கதைகள், நீதிக்கதைகள், அன்றாட நிகழ்ச்சிகளை வைத்து அரிய சமய, தத்துவ கருத்துக்களை எவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் போதித்தார். படித்தோரும், பாமரரும், ஆடவரும், பெண்டிரும், இளைஞரும், முதியோரும் கேட்டு இன்புற்று அந்நெறியில் நிற்க முனைந்தனர். சாரதா தேவியார் இவருக்கு உற்ற துணையாக இருந்து, இவருடைய சமயப்பணிகள் சரிவர நடைபெறப் பல்லாற்றானும் துணை புரிந்தார்.

இவர் 1834ஆம் ஆண்டு வங்காளத்தில் ஹூக்ளி மாவட்டத்தில் காமர்புக்கூர் என்ற கிராமத்தில் பிராமண குடும்பத்தில் தோன்றினார். தமது குலதெய்வத்தை ஒன்பதாவது வயதிலே வழிபடத் தொடங்கி, பின்பு தக்ஷிணேஸ்வரக் காளிகோயிலின் தலைமைப் பூசாரியானார். இதன் விளைவாக இவருக்குக் காளியுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. காளியைக் காணவேண்டுமென்று பல மணிநேரம் இவர் ஆழ்ந்த தியானத்தில் இருந்துவிடுவார். நாளடைவில் காளியைக் கண்டு, கண்ட அந்தப் பேரின்ப நிலையிலே இருந்துவிடுவார். பின்பு பல்வேறு அநுபூதி நிலைகளில் கண்ணனையும் இராமனையும் கண்டு பேரானந்தம் எய்தினார். இவரை இளம்வயதில் கதாதர் என அழைப்பர்.

## இராமகிருஷ்ணரின் கொள்கைகள்

சமயநெறியில் நிற்பதெனின் இறைவனை உணருதல் என்பது இவரது கருத்து. சமயத்தைப் புறக்கணிப்பது என்பது சமயத்

திற்குப் பெரும் தீங்காகக் கருதப்படுகின்றது. இது சமயத்தைப் பின் பற்றாமல் இருப்பதைவிடக் கீழாகக் கருதப்படுகின்றது. தொண்ணூறு கோடி மக்கள் இரண்டாயிரம் ஆண்டு காலம் வாழ்ந்த ஆன்மிக வாழ்வின் முழுமைச்சின்னம் இராமகிருஷ்ணர். 'இவர், பல்லாயிர மக்களின் குரல்கள், மனித இன நம்பிக்கைகள் கூடி அமையப்பெற்ற இயைபுடைய சீரிய பல்லியமாக விளங்கினார்' என உரோமன் ரோலந்து கூறுகிறார். சமயம் ஓர் அனுபவம். விந்தை நிறைந்தது சமயம். இதை இலக்கணமும், அளவை இயலும் (Logic) விளக்கிவிட முடியாது. அனுபவத்தில் ஆண்டவனைக் கண்டோர் அதைக் குறித்து வாதிடுவதில்லை. கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர் என்பது இவரது கருத்து. வாழ்வின் சீரிய குறிக்கோள் இறையனுபவம். அடிப்படைத் தத்துவ நுணுக்கங்களையும், தத்துவ உரையாடல்களையும் தவிர்த்தார். இறைவனை அடைய வேண்டுமென்ற ஏக்கம், இறைவன்பால் அன்பு இவைகளே வேண்டப்படுபவை; ஆனால் இறைவனைப் பற்றிய அறிவன்று. உருவவழிபாடு சமயவாழ்விற்கு இன்றியமையாதது எனக் கருதினார். அனைத்துத் திருவுருச் சிலைகளிலும் ஆண்டவன் நிறைந்திருப்பதைக் காணலாம் என்பது இவரது கூற்று. இறைவனை அடைய உருவ வழிபாடு ஒரு வழி, அதுவே முடிந்த முடிபு அன்று. குறிக்கோள் இறையனுபவம். இவரது சமயம் நடைமுறை வாழ்விற்கு ஏற்ற ஒன்று. இவர், பண்டைய உண்மைகளை விளக்கவந்த ஓர் ஆன்மப் பெட்டகம், அழியாத சமயச்சின்னம். இவர், இறைவனும் மனிதனும் கலந்த வியத்தகு கலவை என விவேகானந்தர் கூறுகிறார்.

### சுவாமி விவேகானந்தர்

இராமகிருஷ்ணரின் மிகச் சிறந்த சீடர் விவேகானந்தர். இவர் 1863ஆம் ஆண்டில் சிம்லாவைச் சேர்ந்த தத்தா குடும்பத்தில் கல்கத்தாவில் பிறந்து, ஆங்கிலப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயின்று புலமை பெற்றார். இவரை இளம் வயதில் 'நரேந்திரர் அல்லது நரேந்திரநாதர்' என அழைப்பர். இவரது தந்தை விஸ்வநாத தத்தா, தாயார் புவனேஸ்வரி தேவி. மேலைநாட்டு அறிவியல் கல்வியும், பகுத்தறிவு மனப்பான்மையும், குழந்தைப் பருவத்திலேயே இறை நம்பிக்கையும், வைதிக நம்பிக்கையையும் சரியா என வினவத் தலைப்பட்டன. இவற்றின் விளைவாக இவரது அறிவென்னும் அடிவானம் அகன்ற நிலையை அடைந்தது. பின்பு பிரம சமாஜத்தின் உறுப்பினரானார். இங்கும் இவரது ஆன்ம திருப்திக்கு உணவு கிட்டவில்லை. உண்மையை உய்த்துணரப் பலரையும், பல இடங்

களையும் நாடிச் சென்றார். இறுதியில் எழுத்தறிவில்லா ஞானி இராமகிருஷ்ணரைத் தக்ஷிணேஸ்வரத்தில் நேருக்கு நேர் சந்தித்தார். பரமஹம்ஸர் இதுபோன்ற வீரம் செறிந்த ஆன்மாவை எதிர் நோக்கிக் கொண்டிருந்தார். அவர் இவரால்தான் தான் விரும்பிய தெய்விகப் பணி நிறைவேறும் என நம்பி இருந்தார். கல்வியாலும் பண்பாலும் இரு துருவங்களைப் போன்ற இரண்டு உள்ளங்கட்கு ஏற்பட்ட சந்திப்பு இறைவனின் திருக்கருணையால் ஏற்பட்ட ஒன்றாகும். நரேந்திரரின் சவாலை இராமகிருஷ்ணர் ஏற்று, இவருக்கு இறையுணர்வை உணர்த்தித் தம் சீடராக ஏற்றுக்கொண்டார். நரேந்திரரின் ஐயப்பாடுகள் அகன்றன. மனத்தில் அமைதி தோன்றியது. குழப்பங்கட்குத் தீர்வுகள் கிடைத்தன. இராமகிருஷ்ணரின் ஆன்மிகச் செய்தியை அனைத்துலகிற்கும் பரப்பத் தகுந்த அருட்செல்வராக உருவானார். பின்பு இவர் விவேகானந்தர் என அழைக்கப்பட்டார். இவரது ஆசானின் ஆன்மா இவருள் குடிகொண்டமையால் அயராது சமயப் பணிகளை ஆற்றத் தலைப்பட்டார். இராமகிருஷ்ணரின் இறுதி நாள்களில் அறிவாற்றல் நிறைந்த ஓர் இளைஞர் கூட்டம் அவரைச் சூழ்ந்திருந்தது. அன்னையின் பரிவோடும் பாசத்தோடும் அவர்களை வளர்த்துச் சமயப் பணிக்குத் தகுதிபெறச் செய்தார். அவர்களை விவேகானந்தரிடம் ஒப்படைத்தார். 'உனது பராமரிப்பில் அவர்களை விடுகிறேன். அவர்கள் ஆன்மிகப் பயிற்சியில் ஈடுபடுவதைக் கவனி. பின்பு இல்லம் திரும்பாமல் பார்த்துக்கொள்' என விவேகானந்தரிடம் பரமஹம்சர் கூறினார். இவர்கள் இராமகிருஷ்ணரிடம் தீக்கை பெற்றனர்; துறவற வாழ்வை மேற்கொண்டனர். எதிர்கால இராமகிருஷ்ண இயக்கத்தினைச் சார்ந்தோராக இவர்கள் மாறினர்.

### இராமகிருஷ்ண இயக்கம் நிறுவப்படல்

1896ஆம் ஆண்டு தமது குரு இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் நினைவாக, விவேகானந்தர் இராமகிருஷ்ண இயக்கத்தை நிறுவினார். இந்தியப் பண்பாட்டை உலகெங்கும் பரப்புவது இதன் முக்கியக் குறிக்கோள். விவேகானந்தர், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பரவலாகப் பயணம் செய்து வேதாந்த தத்துவத்தைப் பரப்ப முயன்றார். நடைமுறை வாழ்விற்குப் பயன் தரும் வகையில் நாகரிக உலகிற்கு இந்து சமயத்தை எடுத்துரைத்தவர் விவேகானந்தர். இந்தியப் பண்பாடு, நாகரிகம் இவைகளின் சீரிய நிலையை உலகுக்கு உரத்த குரலில் உணர்த்திய உத்தமர் இவர். உலக அரங்கில் இந்தியாவை உன்னத நாடாகக் கருதச் செய்தமையால் இவரை நாட்டுப்பற்று மிக்க ஞானியென

அழைத்தனர். இவர் ஏழ்மையை, மூட நம்பிக்கைகளை, தீமைகளை அறவே நீக்க முற்பட்டார். அனைவரும் கல்வி பெற வேண்டும், சமுதாயத்தின் அடிமட்டத்திலிருப்போருக்குப் பணி புரிய வேண்டும் என மக்களைத் தூண்டினார். இராமகிருஷ்ண இயக்கத்தின் கிளைகள் உலகெங்கும் உள்ளன. இந்த இயக்கம் ஆன்ம வளர்ச்சியில் நாட்டம் கொண்டோருக்குப் பயிற்சி அளித்து, அவர்களைக் கல்வி, சமய, சமுதாயப் பணிகளைச் செய்யவும், நன்கொடை திரட்டவும் அனுப்பி வைக்கின்றது. தூய வேதாந்தக் கருத்துகளை உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டுள்ளது. சமுதாயச் சீர்திருத்தப் பணியிலும் ஈடுபட்டுள்ளது. இந்தியாவில் பல்வேறு கிளைகளைக் கொண்டு மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள், நூலகங்கள், அனாதை இல்லங்கள் போன்றவற்றை நிறுவி மிகச் சீரிய பணிகளைச் செய்து வருகின்றது.

சிகாகோ உலக சமய மாநாட்டில் விவேகானந்தர் இந்து சமயத்தைப்பற்றி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உரை நிகழ்த்தி இந்தியாவிற்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தார். இவர் அளித்த வேதாந்த விளக்கத்தைக் கேட்டு அமெரிக்கர்களும் பிற நாட்டுச் சமயச் சார்பாளர்களும் பெரிதும் வியந்தனர். விவேகானந்தர் சமத்துவத்திலும் சமய ஒற்றுமையிலும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

### இராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும்

(1) இராமகிருஷ்ணர் எடுத்துரைத்த வண்ணம், வேதாந்தக் கொள்கைகள் அடங்கிய கல்வியைப் புகட்ட வேண்டும். இதைப் புகட்ட அவருடைய அன்றாட நடைமுறை வாழ்வில் கண்ட எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்த வேண்டும். பிற சமய இறையியலுடனும் ஒப்பிட்டுச் செம்மையாகச் செய்தல் வேண்டும்.

(2) கலைகள், அறிவியல்கள், தொழில்கள் பிறவற்றைப் புகட்டுவதும், மேம்பாடடையச் செய்வதுமாகும்.

(3) மேலே கூறிய துறைகள் அனைத்திலும் ஆசிரியர்களைப் பயிற்றுவித்து, அவர்கள் பொதுமக்களை அணுகும் வழிவகை செய்தல்.

(4) பொதுமக்களுக்குக் கல்வி புகட்டும் பணியினைத் தொடர்ந்து செய்துவரல்.

(5) பள்ளிகள், கல்லூரிகள், அனாதை இல்லங்கள், தொழிற் சாலைகள், ஆய்வுக் கூடங்கள், மருத்துவமனைகள், மருந்தகங் கள், உடலுறுப்பிழந்தோருக்கும் பிணியாளர்கட்கும் துயருறு வோருக்கும் உறைவிடங்கள், மற்றும் பிற கல்வி நிறுவனங்கள், அறப்பணிகள் போன்றவற்றை நிறுவிப் பேணி வளர்த்துத் தொடர்ந்து அப்பணிகளைச் செய்துவரல்.

(6) இவ்வியக்கம் தன் நோக்கங்களை நிறைவேற்ற, எவற்றை விரும்பத் தக்கதெனச் சிந்திக்கின்றதோ அதற் குரிய சஞ்சிகைகளை, பருவ இதழ்களை, நூல்களை, துண்டுப் பிரசுரங்களை அச்சடித்துப் பதிப்பித்து விற்றல் அல்லது இலவசமாக வழங்கல்.

(7) மேலே கண்ட நோக்கங்களைக் கணக்கிடப்பட்ட முறையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, நிறைவேற்றத் தொடர்புடைய பணிகளையும், பிறபணிகளையும் எவற்றையெல் லாம் இயக்கம் செய்யத் தகுதி வாய்ந்ததெனக் கருதுகிறதோ அவையனைத்தையும் செய்தல்.

இவ்வியக்கம் கீழ்க்கண்ட பணிகளையும் செய்தன.

(1) மருத்துவப் பணி. (2) கல்விப் பணி. (3) கிராமத்தில் உழைப்பாளிகட்கும், பிற்பட்டோர்க்கும் பணி புரிதல், கிராமிய முன்னேற்றத்திற்குப் பாடுபடல். (4) வெள்ளம், புயல், பெரு மழை, நில நடுக்கம் போன்ற காலங்களில் மீட்புப்பணி. (5) இந்நாட்டுப் பண்பாடு, நாகரிகம், தத்துவம், சமயம் இவற்றை வெளிநாடுகளில் பரப்புதல். (6) ஆன்ம, பண்பாட்டுத் துறை களில் பணிபுரிதல். (7) மகளிர் நலனுக்காகப் பல நிறுவனங்கள் நிறுவிப் பணிபுரிதல். இவ்வாறாக இராமகிருஷ்ண இயக்கம் இன்றும் உலகெங்கும் உயர்ந்த பணிகளை ஆற்றி வருகின்றது.

## 10.5. பிரமஞான சபை

சமுதாயச் சீர்திருத்தப் பிற இயக்கங்களைப் போன்று, பிரம ஞான சபையும் இந்திய மக்களின் வாழ்வைச் சீர்படுத்துவதில் பெருந் தொண்டாற்றியது. இச் சபை முதன்முதலில் 1875 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நியூயார்க் நகரில் நிறுவப்பட்டது. இதை அங்கே நிறுவியவர்கள் ஹெச். பி. பிளவாட்ஸ்கி என்ற ரஷ்ய மாதும், கர்னல் ஹெச். எஸ். ஆல்காட் என்ற அமெரிக்கரும் ஆவர்.

பின்பு அவர்கள் இந்தியாவிற்கு வந்து தங்கள் தலைமைச் செயலகத்தைச் சென்னையிலுள்ள அடையாற்றில் நிறுவினார்கள். இதனுடைய வெற்றிக்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் திருமதி அன்னிபெசன்ட் அம்மையார். இவர் இச்சபையின் தலைவராக இருந்தார். 1847ஆம் ஆண்டு ஆங்கில—அயர்லாந்து பெற்றோர் களுக்குப் பிறந்த இவர், இந்தியாவிற்கு 1897 ஆம் ஆண்டு வந்து 1898ஆம் ஆண்டு காசியில் மத்திய இந்துக் கல்லூரியைத் தொடங்கினார். இவ்ருடைய இயக்கம் ஆற்றல் மிகுந்ததாகச் செயல்பட்டதுடன் சுயமரியாதையும், பண்டைய கோட்பாடுகளில் நம்பிக்கையும், பெருமையும் கொண்டிருந்ததுடன் எதிர்காலத்தில் மிக்க நம்பிக்கை உடையதாக இருந்தது. இந்து மறுமலர்ச்சி இயக்கம் இந்த அம்மையாருக்கு மிகவும் கடப்பாடுடையதாக இருந்தது. காரணம்? இவர் உபநிடதங்களின் அறிவுச் சாரம், கீதை, வீரகாவியங்கள், புராணங்கள், தரும சாத்திரங்கள், ஸ்மிருதிகள், கதைகள், தொல்மரபுகள் இவற்றை இந்து, பௌத்த சமயங்களிலிருந்து எடுத்து அவற்றிற்கு மிக எளிய உயர்ந்த விளக்கத்தை அளித்தார். இந்துக் கோட்பாடுகளான கருமவினை, மறுபிறவி, ஆன்மாவின் அழியாத இயல்பு, பல்வேறு யோக நிலைகள், அவதாரங்கள் போன்றவற்றை மிக அற்புதமாக எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் விளக்கி இந்துக்களின் அகக் கண்களைத் திறந்தார். இந்து சமயச் சடங்குகட்கும் பழக்க வழக்கங்களுக்கும் அவர் முழு மனதுடன் ஆதரவு நல்கியதுடன் அறிவியல் வளர்ச்சியால் ஏற்பட்ட மேலைநாட்டுப் பொருளியல் கோட்பாட்டை மிகவும் வன்மையாகக் கண்டித்தார். இதன் விளைவாக இந்து சமயத்தில் ஒரு விழிப்புணர்ச்சி தோன்றிய துடன் மக்கள், அதை மிகுந்த ஊக்கத்துடன் பின்பற்றத் தலைப் பட்டனர். பல்லாயிரக் கணக்கான ஆங்கிலம் கற்ற நம் நாட்டு மக்களின் உள்ளத்தில் இந்து சமயத்தை மீண்டும் குடியேறச் செய்தார். இந்தியாவின் தீர்க்கப்பட வேண்டிய அவசரப் பிரச்சினைகளுக்குப் பண்டைய கோட்பாடுகளின் துணையை நாடித் தீர்த்து வைத்தார். 1898-ல் காசியில் மத்திய இந்துப் பள்ளியை நிறுவி, இந்து சமயத்தை ஈட்டிமுனையாக்கி அதற்கு ஓர் எதிர் காலத்தை உறுதிப்படுத்தி மக்கள் உள்ளத்தில் அதைப் படியச் செய்ய ஆவன செய்தார். இது நாளடைவில் கல்லூரியாக வளர்ந்து பின்பு இந்துப் பல்கலைக் கழகமாக மாறியது. இந்திய அரசியல் அரங்கில், இந்தியாவிற்குச் சுதந்தரம் பெறுவதற்கும், சமுதாயச் சீர்திருத்தங்களைப் புகுத்துவதற்கும் அவர் ஆற்றிய தொண்டு அவரை ஒரு பெருந் தலைவராக்கியதுடன் உலகத்தின் முக்கியத் தலைவர்களுள் ஒருவராகவும் கருதும்படி செய்தது.

பிரமஞான சபையின் கிளைகள் உலகெங்கும் உள்ளன. இவை மூலம் இந்தியாவின் ஆன்மிகச் சிறப்பு உலகெங்கும் பரவியது. கீழைநாட்டுச் சமயங்களான இந்து சமயம், பௌத்த சமயம் போன்றவற்றில் பொதிந்துள்ள அறிவுக் கருவூலங்களின் மதிப்பை வெளிக்கொணர இச்சபை பெருந் தொண்டாற்றியது. இச்சபையின் 'மறைவியல் கல்விப் பள்ளி' (Esoteric School) இந்திய மறைவியலை (occultism) இந்தியாவில் மட்டுமன்றி மேலைநாட்டிலும் மிகப் பிரசித்தமாக்கியது.

இச்சபை கீழை நாட்டுச் சமய இலக்கியங்களை மேலைநாடுகளில் பரப்பியது. தொழில் பொருட்காட்சிகளைச் சீராக அமைத்தது. சுதேசி இயக்கம், பால்யவிவாகத்தடை, மதுவிலக்கு, அறசமயக் கல்வியைப் பள்ளிகளில் போதித்தல், மகளிர் கல்வியைப் பரப்புதல், எழுத்தறிவின்மையை அகற்றல், பர்தா முறையை ஒழித்தல், கீழ்ச்சாதிமக்களின் வாழ்வை உயர்த்தல் போன்ற அரும் பணிகளை இவ்வியக்கம் செய்து வந்தது. இதனுடைய கல்வி நிறுவனங்கள் இந்தியப் பண்பாட்டையும் கலைகளையும் பரப்பும் மையங்களாகத் திகழ்ந்தன. நிற வேறுபாட்டால் சமுதாயத்தில் மக்களிடையே வெறுப்புணர்வு கீழைநாடுகளிலும் மேலைநாடுகளிலும் கொழுந்துவிட்டு எரிந்தபோது அதைத் தணித்து உலகில் எல்லோரும் உடன் பிறந்தோரே என்ற கோட்பாட்டை உணரச் செய்து சமத்துவத்தை நிலைநாட்ட முயன்றது.

இஃது ஒரு சமயமன்று, குறிப்பிட்ட சாதி இயக்கமன்று. இஃது ஒரு தனிப்பிரிவினரைச் சார்ந்ததும் அன்று. இதனுடைய முக்கியக் குறிக்கோள் எல்லாச் சமயங்களுக்குள்ளும் ஓர் ஒற்றுமையை உருவாக்கி ஆன்மிக வாழ்வின் சிறப்பினை விளக்குவதாகும். ஆன்மிகத் துறையில் தோன்றிய உலகப் போதகர்களை, அவதாரங்களெனக் கருதுகின்றது இச் சபை. இதனுடைய தத்துவம் இந்து உபநிடதங்கள், சாங்கிய, யோக, வேதாந்த நெறிகளின் உயிர்ப்பூட்டுதலால் தோன்றியதாகும். இந்தியர்கள் தன்னாட்சி செய்து கொள்ள வேண்டுமென்பது இச்சபையின் குறிப்பாக அன்னிபெசன்ட் அம்மையாரின் அசைக்க முடியா நம்பிக்கை.

இச்சபை எல்லாச் சமயங்களையும் ஒரே தன்மையாகக் கருதியது. எல்லாச் சமயங்களும் ஒரே உண்மையைப் போதிக்கின்றன என்பது இச்சபையின் கருத்து. பல்வேறு சமயங்களைச் சார்ந்தோர், இச்சபையின் உறுப்பினர்களானார்கள். இந்தியா ஒரு குழந்தையன்று, அதுபொறுப்புள்ள மனிதன், அதற்குச் சுதந்தரம்

வழங்க வேண்டும் என்பது அம்மையாரின் கூற்று. இவ்வாறாக இச்சபை பல்லாற்றானும் இந்திய விடுதலைக்கும், சமூக மறுமலர்ச்சிக்கும், நாட்டுயர்வுக்கும் பாடுபட்டது.

## 10.6. மகாத்மா காந்தி

**வாழ்க்கை வரலாறு**

வாழ்கநீ! எம்மான்,இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமைமிஞ்சி
விடுதலை தவறிக்கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாமோர்
பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்தகாந்தி
மஹாத்மா!நீ வாழ்க!வாழ்க!

என அமரகவி பாரதியோடு சேர்ந்து மகாத்மா காந்தியை வாழ்த்தி அவரை ஆறிய முற்படுவது சாலச் சிறந்ததாகும். அடிமைத் தளையில் அல்லலுற்று, அமைதியின்றி எந்த உரிமையுமின்றி ஏழைகளாய், கோழைகளாய் இருள் நிறைந்த வாழ்வில் மூழ்கிக் கிடந்த இந்நாட்டு மக்களுக்கு விடுதலை ஈட்டித்தந்த விந்தை மனிதர் காந்தி. இந் நாட்டின் தந்தையெனவும் இவரை அழைப்பர். உலக வரலாற்றில் உன்னத இடத்தைப் பெற்றுள்ள மிகச் சிறந்த தலைவர்களுள் ஒருவர் மகாத்மா காந்தி.

இவர் 1869ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 2ஆம் நாள் குஜராத்திலுள்ள போர்பந்தரில் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் கரம்சந்த் காந்தி, புத்திலிபாய் ஆவர். இவரை மோகன்தாஸ் எனப் பெற்றோர்கள் அழைப்பர். தமது பதின்மூன்றாம் வயதில் காந்தி, கஸ்தூரிபாயின் கரங்களைப் பிடித்தார். அதன் பின்பு தொடர்ந்து கல்வி பயின்றார். காந்தி உயர் கல்விக்காக இங்கிலாந்து செல்ல விரும்பினார். ஆனால் மிகவும் ஆசாரமுள்ள அவர் அன்னை அவரை அங்கு அனுப்ப விரும்பவில்லை. அங்குச் சென்றால் அவர் பாழ்பட்டு விடுவார் என்று கருதினார். ஆனால் காந்தி தான் இங்கிலாந்து சென்றால் மதுவையும், மாமிசத்தையும், மாதினையும் அறவே தொடாமலிருப்பதாக வாக்குறுதி

அளித்த பின்னர், இங்கிலாந்து செல்ல அனுமதிக்கப்பட்டார். தாம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி மாவழக்கறிஞர் Barrister) பட்டம் பெற்று இந்தியா திரும்பினார். பின்பு சில காலம் ராஜகோட்டிலும், பம்பாயிலும் வழக்குரைஞராகப் பணி யாற்றினார். பின்பு ஒரு முகமதிய நிறுவனத்தின் தொடர்பாகத் தென்னாப்பிரிக்கா சென்றார். அங்கு வெள்ளையர்கள் இந்தியர் களுக்கு அளிக்கும் அநீதியைக் கண்டு சத்தியாகிரக இயக்கத்தை ஆரம்பித்தார். இதன் விளைவாக நீதிக்குப் புறம்பான சட்டங்கள் அங்கே அகற்றப்பட்டன. அங்கு வாழ்ந்த இந்திய மக்களுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டினார். அவர்கள் அச்சத்தைத் தவிர்த்துத், தீமையை எதிர்த்து உண்மையை நாடும் நிலையை அவர்களிடையே உருவாக்கினார். தென்னாப்பிரிக்காவில் தாண்டவமாடிய நிறவெறிக் கொடுமையை அகற்ற மகாத்மா காந்தி ஆற்றிய தொண்டினை அளவிட்டுக் கூறமுடியாது. இதன் விளைவாக அங்கு வாழ்ந்த ஆசிய மக்கள் இறுதியாக நன்னிலை எய்தினர்.

1914ஆம் ஆண்டு காந்தி இந்தியாவிற்குத் திரும்பினார். அப்போது முதல் உலகப் போர் தொடங்கியது. பிரிட்டானியர்கள் மேல் நம்பிக்கை இருந்ததால் இந்தியர்களை இந்தப் போரில் ஈடுபட்டு ஒத்துழைக்கக் கேட்டுக்கொண்டார். பின்பு 1918ஆம் ஆண்டு பிரிட்டானிய அரசு இந்தியர்களுக்கு வேண்டிய அளவு எதையும் செய்யாது என உணர்ந்து தமது போக்கை மாற்றிக் கொண்டார். பின்பு அரசு ரவுலட் சட்டத்தை (Rowlatt Act) மக்களுடைய விருப்பத்திற்கு எதிராக நிறைவேற்றியது. இதைக் கண்டு மகாத்மா காந்தி வேதனையுற்று மக்களை வேலை நிறுத்தம் செய்யச் சொன்னார். பஞ்சாபில் நிலைமை மிகச் சீர்கேடு அடைந்தது. போர்க்காலச் சட்டத்தை அரசு பிரகடனப் படுத்தியது. ஜெனரல் டையர் அமிர்தசரசில் நிகழ்ந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குக் காரணமாக இருந்தான். இதை யெல்லாம் கண்ணுற்ற மகாத்மா காந்தி பிரிட்டானியரிடமிருந்து நீதியையும் நேர்மையையும் சிறிதும் எதிர்பார்க்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார். இந்து-முஸ்லிம் ஒற்றுமையை உருவாக்க ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார். இதனால் நல்ல பலன் கிட்டியது.

1920-ல் பாலகங்காதர திலகர் மறைவுக்குப் பின் மகாத்மா காந்தி காங்கிரஸின் தலைமையை ஏற்றார். இவர், பின்னர் பல முறை நாட்டு நலன் கருதிப் பல போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றார். இவர் இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில்

கலந்துகொள்ள இங்கிலாந்து சென்று பிரிட்டானிய அரசின் போக்காலும் ஜின்னாவின் போக்காலும் ஒரு பயனுமில்லாது இந்தியா திரும்பினார். இந் நாட்டிற்குக் கத்தியின்றி இரத்தமின்றி 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் விடுதலை பெற்றுத் தந்தார். விடுதலை பெற்றுத் தந்த இந்த உத்தமரை நாத்துராம் கோட்ஸே என்ற ஒரு வெறியன் அவர் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தபொழுது ஜனவரி 30ஆம் நாள் 1948-ல் சுட்டுக் கொன்றான்.

இவர் 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், சுதேசி இயக்கம், உப்புச் சத்தியாகிரக இயக்கம் போன்ற பல்வேறு இயக்கங்களை நடத்தினார். இவரது பணிகள் பல்வேறு துறைகளைத் தழுவியுள்ளதோடு ஒவ்வொரு துறைக்கும் புதிய கொள்கைகளையும் நடைமுறை நெறிகளையும் அளித்துள்ளன. சபர்மதியில் ஓர் ஆசிரமத்தை நிறுவித் தமது கொள்கைகளையும், கோட்பாடுகளையும் நடத்திக் காட்டி, அவை நடைமுறைக்கு ஒவ்வாத வெறும் வரட்டுத் தத்துவங்கள் அல்ல—நடைமுறை வாழ்வுக்கு உகந்தவைதாம் என நிரூபித்தார்.

### மானிட இனத்துள் ஒற்றுமை

எல்லா உயிர்களிடத்தும் இறைவன் நீக்கமற நிறைந்திருப்பதால் உலகிலுள்ள எல்லாரும் உடன்பிறந்தோரே என்ற கருத்தைப் பலமாக ஆதரித்தார். இதை அடிப்படையாகக் கொண்டே அகிம்சைக் கோட்பாட்டை வலியுறுத்தினார்.

### சுதேசி இயக்கம், சுயராஜ்யம்

எதற்கும் வெளிநாட்டை நாடாமல், நமக்கு வேண்டியவற்றை நாமே தயாரித்து நம் கால்களால் நிற்பதுடன், பிறநாட்டுப் பொருள்களைப் பெற்றுப் பயன்படுத்தாமல் இருத்தல், அவற்றைப் புறக்கணிக்கவும் செய்தல் என்பது சுதேசி இயக்கம். அரசியல், சமூக, பொருளாதார, சமயத் துறைகளில் மனிதன் விடுதலை பெற்றால்தான் ஆன்மிகத் துறையில் கட்டற்ற நிலையில் இறையனுபவத்தை அடைய முடியுமெனக் காந்தி கருதினார். இதற்கு முதல் நிலையாக அன்னிய ஆதிக்கத்தினின்று இந்நாடு விடுதலை பெறவேண்டும். நம்மை நாமே ஆண்டு கொள்வதே 'சுயராஜ்யம்' எனப்படுவது.

**சர்வோதயம்**

கடையனுக்கும் கடைத்தேற்றமே சர்வோதயம் எனப்படுவது. சமுதாயத்தின் கடைநிலையில் இருப்பவர்கள், அரசியல், பொருளாதார, சமூக, சமயத் துறைகளில் ஏற்றம்பெறுவதே இக்கோட்பாட்டின் நோக்கமாகும். 'எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும். இல்லாதார் இல்லாதநிலை பெறவேண்டும்' என்பதே இதன் சாரம். எல்லாத் துறைகளிலும் மனிதன் முறையான வளர்ச்சி பெறவேண்டுமெனச் சர்வோதயம் வலியுறுத்துகிறது.

**அறநெறி சமய இணைப்பு**

அறநெறி என்ற வித்திற்குச் சமயம் என்ற நீர் வார்க்கப்படாவிடின் அதிலிருந்து கன்று தோன்றாது. அறநெறி என்ற அடிப்படையில்லாத சமயம் அழிந்தேபோகும். ஆகவே, இரண்டும் இணைந்தே செல்லவேண்டும் என்பது காந்தியின் கருத்து.

**அறநெறியும் அரசியலும்**

அறநெறியை அரசியலில் புகுத்தி வெற்றி கண்டவர் காந்தி. அரசியலும், பொருளியலும் அறநெறியின் பாற்பட்டதாக அமைதல் வேண்டும்.

**அகிம்சையும் சத்தியாகிரகமும்**

சிந்தனை, சொல், செயல் இவற்றால் எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாமை அகிம்சையெனப்படும். சமணர்கட்குப் பின் இதை ஒரு பெரிய போர்க்கருவியாகப் பயன்படுத்தியவர் காந்தி. அரசியலில் அகிம்சை என்ற அற்புத சாதனத்தின் துணை கொண்டு அரிய பல செயல்களைச் செய்து வியத்தகு பலன்களை அடைந்தார். உண்மையும் அகிம்சையும் கையும் கையுறையும் போன்று நெருக்கமாக இணைந்திருப்பவை. அகிம்சையைப் பின்பற்றி நடப்பது சிறந்த கடமையாகக் கருதப்படுகின்றது. இது தன்னுள் அன்பு, இரக்கம், அனுதாபம், பரிவு, அச்சமின்மை போன்ற நற்பண்புகளை அடக்கியுள்ளது.

உண்மைக்காகச் சிறிதும் மனச்சலனமின்றி நிலையாக நின்று அறவழியில் போரிடல் சத்தியாகிரகம் எனப்படும்.

**இந்து-முஸ்லிம் ஒற்றுமை**

இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குப் பெரும்பாடுபட்டவர் காந்தி. பல்வேறு சமயத்தவர், இனத்தவர்களிடம் ஒற்றுமையை நிலைநாட்ட

வந்த திருத்தூதர். எல்லோரும் உடன்பிறந்தார் என்ற உணர்வுடன் வாழ வேண்டுமென விரும்பினார். பல்வேறு இடங்களில் இந்து-முஸ்லிம் போராட்டங்கள் ஏற்பட்டுப் பலர் உயிரிழந்தனர். மகாத்மா காந்தி இவ்விடங்கட்குச் சென்று அமைதியை நிலைநாட்டினார்.

**தாழ்த்தப்பட்டோர் தரம் உயர**

தாழ்த்தப்பட்டோர் வாழ்வின் தரம் உயர அயராது பாடுபட்டார். பல்லாயிர ஆண்டுக் காலமாகச் சாதிப்பாகுபாட்டில் ஊறித் திளைத்த இந்துக்கள் தாழ்த்தப்பட்டோரைத் தரக்குறைவாக நடத்தினர். ஆலயத்தினுள் நுழைய அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அவர்சள்பாலுள்ள தப்பெண்ணங்களைத் தவிர்த்து, அவர்களை ஆலயத்திற்குள் அனுமதிக்க வேண்டினார். தீண்டாமையை எதிர்த்து உரத்தகுரல் எழுப்பினார். தாழ்த்தப்பட்டோரை, அரிசனங்கள் எனப் பெயரிட்டு அழைத்தார். 'அரிசனம்' என்ற செய்தித்தாளைத் தொடங்கித் தாழ்த்தப்பட்டோரின் தரம் உயரவேண்டுமென்ற கருத்துகளடங்கிய கட்டுரைகளை எழுதினார்.

**மகளிர் நிலை**

பெண்ணுரிமை பெறவும், ஆண்களோடு சரிநிகர் சமானமாக அவர்களை நடத்தவும் பெரிதும் பாடுபட்டார். ஆண்கள் அனுபவித்த அனைத்து உரிமைகளையும் பெண்கள் பெறவேண்டுமென்பதற்காக அயராது உழைத்தார். பெண்கள் அனைவரும் கல்விபெற வேண்டுமென்பதை மிகவும் வலியுறுத்தினார். அவருடைய சமுதாய, அரசியல் பணிகளில் பல பெண்கள் ஈடுபட்டிருந்தனர்.

**மதுவிலக்கு**

மது மக்களின் உடல் நலனை, ஒழுக்கத்தை, பொருளாதாரத்தை, மனநலனைப் பெரிதும் பாதிப்பதால், இதில் பணத்தைச் செலவிடக் கூடாதெனக் காந்தி கருதினார். ஆகவே, மதுவிலக்குக் கோட்பாட்டைக் கடுமையாக அரசு வலியுறுத்த வேண்டுமென விரும்பினார்.

**கல்விமுறை**

இன்றைய கல்விமுறை பயனற்றது எனக் காந்தி கூறினார். மிகுந்த பொருட் செலவுள்ள கல்வி எல்லோருக்கும் கிடைக்கக்

கூடியதன்று, குழந்தைகளின் சூழலோடு ஒட்டிய கல்வி இதுவன்று எனக் கருதினார். அடிப்படைக் கல்வித் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தைக் காந்தி உருவாக்கிக் கொடுத்தார். தொழிற்கல்வியோடுகூடிய கல்விதான் நாட்டுக்கு நலம் பயக்கக் கூடிய கல்வி எனக் காந்தி கருதினார்.

**மேலைநாட்டுத் தொழில்மயம்**

காந்தி, மேலைநாட்டுப் பாணியில் இந்தியா தொழில் மயமாவதை விரும்பவில்லை. சிலர், பல்வேறு பொறிகளின் துணை கொண்டு பொருள்களை உற்பத்தி செய்வதால், பலர் வேலை இழக்கும்நிலை ஏற்படுகிறது. இதனால் இவர் தன்னிறைவுள்ள குடிசைத்தொழிலை ஆதரித்தார். இது பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. இவர் வேலை நிறுத்தத்தையும், கதவடைப் பையும் எதிர்த்தவர்.

**மகாத்மா காந்தியின் மணிமொழிகள்**

(1) எல்லாரும் உடன் பிறந்தோர். அனைவருடைய நலனே வாழ்வின் குறிக்கோளாக அமைதல் வேண்டும். (2) உலகம் ஒன்றே, அது மனித உள்ளங்களாலும் இதயங் களாலும் உண்மையாகவே ஒன்றாக வேண்டும். (3) எல்லாரும் மகிழ்ச்சியை அடையாவிடின், நம்மில் எவரும் மகிழ்ச்சியைப் பெறமுடியாது. (4) உலகம் ஒன்றுபடாவிடின், இவ்வுலகில் வாழ்ந்து நாம் எந்த இன்பத்தையும் அடையமுடியாது.

**ஏழு சமுதாயத் தீவினைகள்**

காந்தி, தமது மறைவுக்கு முன்னர் அக்காலத்தில் நிலவி வந்த ஏழு சமுதாயத் தீவினைகளைக் கூறி, அவற்றினை அகற்றப் பாடுபட்டார்.

(1) கொள்கையில்லா அரசியல், (2) உழைப்பில்லாச் செல்வம், (3) மனச்சான்றில்லா மகிழ்ச்சி, (4) பண்பில்லா அறிவு, (5) நாணயமில்லா வாணிபம், (6) மனித இயல்பில்லா அறிவியல், (7) தியாகமில்லா வழிபாடு.

**ஆரோக்கிய சூழ்நிலை அமைப்புகள்**

இந்நாட்டு மக்களின் ஏழ்மையை அகற்றாதவரை, ஆரோக்கிய வாழ்விற்கேற்ற சூழ்நிலைகளை மக்களுக்கு அமைத்துத் தருவதும், அவர்களே அவ்விதி முறைகளைப் பின்பற்றி அச்சூழலை

அமைத்துக்கொள்வதும் இயலாத ஒன்று எனக் கூறினார். இருப்பினும் அவர் தமது ஆசிரமத்தில் ஆரோக்கியச் சூழலை அமைக்க எளிய முறைகளைக் கையாண்டார். இந்நாட்டு மக்கள் தொகையின் பெரும் பகுதியான கிராம மக்கள் பின்பற்றக்கூடிய முறையில் காந்தியின் ஆரோக்கியச் சூழ்நிலை அமைப்புகள் உள்ளன.

### பிரச்சினைகட்குத் தீர்வு

ஏழ்மையையும் வேலையின்மையையும் போக்க அவர் கண்ட வழி கையால் நூற்றல், நெய்தல், குடிசைத் தொழில்கள் போன்ற கைத்தொழில்களைப் புதுப்பித்தல். மேலைநாட்டார் இம்முறையினை எள்ளிநகையாடினாலும், இந்தியர்கள் இதன் சிறப்பை உணர்ந்து கைத்தொழில்களைப் பேணி வளர்த்தனர். இந்தியத் தட்ப வெப்பநிலை இவைகட்கு ஏற்றதாக அமைந்திருந்தது. ஏழை உழவர்கள் ஆண்டில் குறிப்பிட்ட காலங்களில் பயிரிட முடியாமையால், அவர்கள் கைத்தொழில்களில் ஈடுபடலாம். இவை பொருளியல் ரீதியில் பயனுடையனவாக இருந்தன.

### இயற்கையோடியைந்த வாழ்வு

காந்தி எளிய ஆடம்பரமில்லா வாழ்வு நடத்தும்படி இந்தியர்களுக்கு அறிவுறுத்தினார். இயற்கையோடியைந்த எளிய, செயற்கை முறைகளைப் புகுத்தாத, வாழ்வே உடலுக்கும் உள்ளத்திற்கும் நலம் பயக்கக்கூடியது எனக் கூறினார். இயற்கை மருத்துவ முறையே உடலுக்கு ஊறு செய்யாத முறை. மேலைநாட்டு மருந்துகள் பயனற்றவை என்பது இவரது முடிந்த முடிபு. உடலுக்கு ஊட்டம் தரும் எளிய உணவு முறையைப் பின்பற்றச் சொன்னார்.

### கூட்டு வழிபாடு

அனைவரும் ஆன்ம ஈடேற்றம் பெறவேண்டுமென காந்தி விரும்பினார். கூட்டுவழிபாட்டு முறை இறையுணர்வை மட்டுமன்று, ஒற்றுமையுணர்வையும் மக்களிடையே தோற்றுவித்தது.

மகாத்மா காந்தியின் மகத்தான வாழ்விலும் பணிகளிலும் இந்திய மறுமலர்ச்சி எவரெஸ்டு சிகரம்போன்று உயர்ந்து நிற்பதைக் காணலாம். காந்தி, மக்களின் உள்ளங்களைத் தொட்ட அளவிற்கு இம்மண்ணில் பிறந்த எந்த ஞானியோ, அறிஞனோ, அரசியல்வாதியோ, அவர்போன்ற பிறரோ தொட்டதில்லை. இவரது வழியில் சென்று வெற்றி கண்டவர்களை, காண்பவர்களை இன்றும் காண்கிறோம்.

## இயல் 11

# 11.1. இந்நாட்டு இசை

### தொடக்கம்

உலகில் அறிவியல்களைத் தவிர, அனைத்தும் மானிட இயலின் கீழ் வருகின்றன. ஆன்றோர், கலைகளை அக்காலத்தில் 64 என வகைப்படுத்திக் கூறினர். அழகுக் கலைகளை லலித கலைகள் எனவும் அழைத்தனர். இக்கலைகள் எழில் உணர்வால் தோன்றியவை; ஈர்க்கப்படுபவை.




### அழகுக் கலைகள்

இவை மனிதப் பண்பாட்டை வளர்க்க இன்றியமையாதவை. இவை மனிதன் முழுமையான, மகிழ்ச்சியான வாழ்வு வாழப் பெரிதும் துணைபுரிகின்றன; அழகுணர்வை வளர்க்கப் பெரிதும்

பயன்படுகின்றன. அழகுக் கலைகளை வளர்ப்பதன் மூலம் நல்ல சமுதாயமும் நன்மக்களும் உருவாகின்றனர்.

**இசைக் கலை**

இந்த அழகுக் கலைகளில் சிறப்பு வாய்ந்தது இசைக் கலை. இசையானது ஒன்றும் அறியாத பச்சிளங் குழந்தைகள் முதல் முதியோர் ஈறாக உள்ள எல்லாரையும் தன்வயப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. கொடிய விலங்குகள்கூட இசைக்குக் கட்டுண்டிருந்ததை இலக்கியங்கள் வாயிலாகக் காண்கிறோம். இறைவனை 'ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய், என்னுடைய தோழனுமாய்' என நம்பியாரூரர், இசை வடிவாகவே கண்டுகளிக்கின்றார். திருநாவுக்கரசர், 'வேதத்தொலி கொண்டு வீணை கேட்பார் வெண்காடு மேவிய விகிர்தனாரே' என்றதனால் சிவபெருமான் வேதமாகிய பாடலைப் பாடிக்கொண்டு வீணைவாசித்து இன்புறுகிறார் என அறியலாம்.

'முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்' என்னும் அருள்வாக்கும் 'சங்கத் தமிழ் மூன்றுந் தா' என்னும் ஔவை பிராட்டியார் வேண்டுகோளும், இயல், இசை, நாடகம் என்னும் மூன்றையும் பிரிக்கமுடியாது என்ற கருத்தை வலியுறுத்துகின்றன.

இசை உணர்வின் மொழி, அழகுக் கலைகளில் சிறந்தது. ஒலியோடு தொடர்புடைய இது முறையாக, கணக்காக வெளிப்படும்பொழுது நம்முள் மகிழ்ச்சியை உருவாக்குகின்றது. ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, காவியம் இவைகட்கு இயற்கை எண்ணற்ற கருத்துகளை வழங்குகின்றது. அவற்றின் துணைகொண்டு அவை அரிய தலைக்கருவூலங்களைப் படைக்கின்றன. ஆனால், இசை, மனிதன் நுண்ணறிவின் திறத்தால் தோற்றுவிக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு இன்றடைந்துள்ள நிலைக்குக் கொணரப் பட்டுள்ளது. ஆகவே இசை, அழகுக் கலைகளிலேயே மிகச் சிறந்ததெனக் கருதப்படுகின்றது. படித்தோரும், பாமரரும், ஏழையும், செல்வரும், விலங்கும் அனைவரும் கேட்டு மகிழும் தன்மை உடையது இசை. இறைவனின் மொழி இசை. சிவன் முரசத்திலும், கண்ணன் புல்லாங்குழலிலும், கலைமகள் வீணையிலும், நாரதர் தம்பூரா என்ற இசைக் கருவியிலும் இசைத்ததாகக் கூறப்படுகின்றது.

கேட்கும் செல்வமே அனைத்துச் செல்வங்களிலும் சிறந்த செல்வமாக வள்ளுவரால் கருதப்படுகின்றது. இசையைக் கேட்

பதும் செவியால் கேட்கும் செல்வங்களுள் ஒன்றாக அமைகின்றது. இதுபற்றியே அவர்,

'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை'

எனக் குறிப்பிட்டுள்ளது நோக்கற்பாலது. இசையின் மூலம் நுண்ணிய சிந்தனைகளையும் செம்மையான கருத்துகளையும் வெளியிடலாம். அன்றுமுதல் இன்றுவரை இசையின் துணை கொண்டு இறைவனைப் பாடி அவன் திருவடிகளை அடைந்தோர் வரலாறு இந்தியாவில் பரந்து கிடக்கின்றது. பக்தி நெறியைப் பரப்பவந்த சான்றோர்கள் இசையின் துணையை நாடினர்.

இசையைக் கலையாகவும் அறிவியலாகவும் கருதலாம்.

**இசையின் பிரிவுகள் :** இந்நாட்டு இசை இருபெரும் பிரிவின் கீழ் வருகின்றது. அவையாவன: (1) கருநாடக இசை, (2) இந்துஸ்தானி இசை. பண்டைத் தமிழ் இசையே கால வெள்ளத்தில் மாற்றம் அடைந்து கருநாடக இசையாக மாறிற்று என்று இசைப் பேராசிரியர் சாம்பமூர்த்தியும், இரா. கிருஷ்ண மூர்த்தியும் (கல்கி) கூறுவார்கள்.

இந்திய இசை மிகவும் பழமையானது. கிறித்தவ சகாப்தத்திற்கு முன்பே இசைபற்றிய இலக்கியங்கள் தோன்றியுள்ளன. சங்க இலக்கியங்களிலும், வேதங்களிலும், உபநிடதங்களிலும், இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் மற்றும் புராணங்களிலும் இசைபற்றிய குறிப்புகள் வருகின்றன. ஒரு காலத்தில் இந்தியா முழுமையும் ஒரே இசை முறை இருந்துவந்ததாகத் தெரிகின்றது. வடஇந்திய (இந்துஸ்தானி), தென்னிந்திய (கருநாடக) இசைப் பிரிவு முறைகள் பின்னால் வந்தவை. குறிப்பாக டில்லியை ஆண்ட மொகலாயப் பேரரசர்கள் இவ்விரு முறைகளையும் குறிப்பிட்டுள்ளனர். அரிபாலன் என்பவர் கி. பி. 1309-க்கும் 1312-க்கும் இடையே எழுதிய சங்கீத சுதாகரம் என்ற நூலில் கருநாடக இசை, இந்துஸ்தானி இசை என்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

அடிப்படையில் இவ்விரு இசை நெறிகளும் ஒரே தன்மையுடையவை. ஒரே சுரங்களையும் சுருதிகளையும் பயன்படுத்துகின்றனர். அவைகள் இராகங்களைக் கருதும் தன்மையிலும், இசைக் குறியீடுகளைத் தமக்கென அமைந்த பாணியில் பாடும் முறையிலும் வேறுபட்டுத் தெரிகின்றன. ஒரே சுரங்களிலும், சுருதி

களிலும் அமைந்த இராகங்கள் பாடும் வகையில் மாறுபடுகின்றன. இன்றைய இந்திய இசை பல நூற்றாண்டு இசைப் பேரறிஞர்களின் அனுபவப் புதையல்.

**மார்க்க சங்கீதமும் தேசி சங்கீதமும்**

இன்று நிலைபெற்றுள்ள இந்திய சங்கீதத்தைத் தேசி சங்கீதம் எனக் கூறுவர். தேசி சங்கீதம் இந்துஸ்தானி, கருநாடகம் என இருவகைப்படும். கருநாடகம் என்பது இரு பொருளில் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது, 1 பழமையானது, 2. இந்தியத் தீபகற்பத்திற்குத் தெற்கே உள்ளது. தேசி சங்கீதம் பழைய மார்க்க சங்கீதத்தில் உள்ள நல்ல கூறுகள் அனைத்தையும் தன்வயப்படுத்திக்கொண்டது, தெற்கே உள்ள இசை இயல் வல்லுநர்கள் தங்களுடைய இசையை சங்கீதம் என்றே அழைக்கின்றனர். ஏனெனில், தங்கள் இசையைப் பண்டைய இசை எனக் கருதினர். ஆகவே, நீண்ட நெடுநாள் களாக அதைக் கருநாடக இசை என அழைக்கவில்லை. கி. பி. 1294-ல் மாலிக்காபூர் படையெடுப்பு நிகழ்ந்தபோது வட இந்திய இசை ஏறத்தாழப் பாரசீகமயமாயிற்று. இதையே அரிபால தேவர் இந்துஸ்தானி இசை என்றும், தென்னிந்தியப் பண்டைய இசையைக் கருநாடக இசை என்றும் அழைக் கின்றார். கருநாடகம் என்ற சொல் பாகவதத்திலும் பஜசம்பு விலும் வருகின்றது. சங்கீதம் என்பது இந்தியாவில் இசையைக் குறிக்கப் பயன்படும் சொல். இசை என்ற சொல் பண்டைய காலத்தில் வாய்பாட்டு, கருவிஇசை, நாட்டியம் இவை அனைத்தையும் ஒருசேரக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. நாதம் என்பது, இசை ஒலியைக் குறிப்பிடும் சொல். இசையின் முழுப் பொருளே நாதத்தோடு தொடர்புடையது. நாதம், சுருதிகள் தோன்ற வழிவகுக்கின்றது. சுருதிகள், சுரங்கள் தோன்ற வழிவகுக்கின்றன. தியாகராஜரை நாதயோகி என்றும் அழைப்பர். இறைவனை நாதபிரம்மம் என்றும் அழைப்பர். ‘நாத உபாசனை’ மூலம் இறைவனை அடைந்து பேரின்பத்தை அடைய முடியும் என்பது நமது சமயக் கருத்து.

இசை பல்வகைப்பட்டது, அதன் நோக்கத்திற்கு ஏற்பத் தனியான விதிமுறைகளைப் பின்பற்றி இசைப்பாணிகள் உருவாக் கப்பட்டுள்ளன. ஒலிகள் ஒரு குறிப்பிட்ட முறையில் ஒரு தொகுதியாக அமையும்பொழுது, உள்ளத்தை ஒருநிலைப் படுத்தவும், ஆன்ம வளர்ச்சியை நாடவும் துணைபுரிகின்றன. இம்முறை தூய்மையான இசையமைப்பில் பயன்படுத்தப்படு

கின்றது. குறிப்பாக, சாம வேதத்தில் இம்முறை கையாளப் பட்டுள்ளது. ஆனால், இசைபற்றிய நுணுக்கங்கள் அதிகமாக சாமவேதத்தில் கிடைக்கவில்லை. நீண்ட நெடுங்காலமாகச் சாம வேதத்தைச் செபிக்கும் தன்மையில் பாடும் முறையிலிருந்தே சில நுணுக்கங்களை அறிகின்றோம்.

பரதர் எழுதிய 'நாட்டிய சாஸ்திரம்' இசையைப் பற்றிச் சில பயனுள்ள குறிப்புகளைத் தருகின்றது. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜெயதேவர், தாம் எழுதிய நூற்றுக்கணக்கான பாடல் களில் ராக, தாள அமைப்புகளைப் பற்றிக் கூறுகின்றார். இந்திய இசை கலையாகவும், அறிவியலாகவும் விளங்குவதோடு, உலகிலேயே பல்வேறு மனித உணர்வுகளை வெளியிடும் இராக அமைப்புகளை உள்ளடக்கிய இயற்கையான ஓர் இசை அமைப் பாகும். இதற்குக் குறைந்தது 3000 ஆண்டுக் கால வரலாறு உள்ளது.

**இந்துஸ்தானி இசை வளர்ச்சி**

இந்துஸ்தானி இசையைப் பெரிதும் வளர்த்தவர்கள் முஸ்லிம் களாவர். வடஇந்திய இசையில் பெரும் மாற்றம் நிகழப் பொறுப் பாயிருந்தவர் அமிர்குசுரு எனக் கருதப்படுகிறது. அது பாரசீக, அராபிய கருத்துகளைத் தழுவிச் செழிப்படைந்தது. அரச மரபினைச் சார்ந்த இரசியா என்ற பெண்ணும், பால்பன், ஜலாலுதீன், அலாவுதீன், சிக்கந்தர் லோடி, ஜஹாங்கீர், பாபர், ஹுமாயூன், அக்பர், தான்சேன், ஷாஜஹான் போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்கள் இந்து மரபினைச்சார்ந்த சாந்துபார்தாய், சுவாமி இராமானந்தர், சந்தர்சகி, மீரா சிந்தாமணி, வில்வமங்கள், வித்யாபதி, சைதன்யர், இராமாய் பண்டிதர், சாந்துபீபி, இராஜா மான்சிங், சுவாகரிதாஸ், புண்டரிக விட்டல், சூர்தாஸ், துளசிதாஸ் போன்றோர் வடநாட்டில் இசை வளர அந்நாளில் பெருந்தொண்டாற்றியோராவார்.

**கருநாடக இசை வளர்ச்சி**

இசையை இந்துஸ்தானி, கருநாடகம் எனப் பிரிப்பதற்கு முன்பே கருநாடக இசை வழக்கில் இருந்துவந்தது. கருநாடக இசையை முறைப்படுத்தியவர் புரந்தர தாசர். அதைப் பல்வேறு பதங்களால் நிறைவுசெய்தவர் க்ஷேத்திரக்ஞர். தியாகராஜர் அதை மேலும் செம்மைப்படுத்தியவர். வேங்கடமாகி 72மேளக் கருத்தாக்களை உருவாக்கிக் கருநாடக இசையைச் சிறப்புச் செய்தவர். சோமநாதர், இராமமாத்தியர், இரகுநாத நாயக்கர்,

துளஜேந்திரர் போன்றோரும் கருநாடக இசை வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளனர். பின்பு இசை மும்மூர்த்திகளில் முத்துசாமி தீட்சிதரும், சியாமா சாஸ்திரியும் இவ்விசை வளர்ச்சிக்கு மேலும் தங்களது பங்கை நல்கியுள்ளனர். கேரள மாநிலத்தில் சுவாதித் திருநாள் என்ற அரசர் கருநாடக இசைக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளார்.

### பல்வகைப்பட்ட இசை நெறிகள்

இத்தலைப்பின்கீழ் இங்கே குறிப்பிடப்படுபவை 1. பழந் தமிழிசை, 2. நாட்டிய இசை, 3 கிராமிய இசை போன்றவையாகும். பழந்தமிழிசை உலக இசை வரலாற்றிலேயே மிகப் பழமையானது என்பதை முன்பே கூறியுள்ளோம். தொல்காப்பிய காலத்திற்கு முன்பே இசை வளர்ந்துள்ளது என்பதற்குப் போதிய சான்றுகள் உள. நிலங்கட்குரிய கருப்பொருள்களில் யாழையும், பறையையும், பண்ணையும் குறிப்பிடுவார் தொல்காப்பியர். இதனால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்தவரும் தமக்கே உரிய யாழினைப் பெற்றிருந்தது புலப்படும். செய்யுளியலில் நால்வகைப் பாக்களுக்கும் உரிய ஓசைகளாக அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் என்பனவற்றைக் குறிப்பிடுவர். இவை இசையோசைகளே. இசையோடு பாடப் பட்டதாலேயே செய்யுளுக்குப் பாட்டு என்னும் பெயரும் உளதாயிற்று. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தமிழிசையைப் பற்றிப் பல குறிப்புகளைத் தருகின்றன. முத்தமிழ் என்ற பாடத்தின்கீழ்த் தமிழிசையைப்பற்றி நிறைய செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

நாட்டியத்திற்கெனப் பழந்தமிழ் இசையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுப் பின்பற்றப்பட்டுவந்தன. அதுபோன்று கருநாடக இசையிலும் நாட்டியப் பாணிகளுக்கேற்ப இசை அமைப்புகளும் மாறின. குறிப்பாகச் சியாமா சாஸ்திரி தமது சுருதிகளை நாட்டியக் கலைக்கேற்ப அமைத்துள்ளார்.

நீர் இறைப்போரும், நடுவோரும், வண்டியோட்டுவோரும் தங்கள் வேலைப் பளுவை மறக்கத் தங்களுக்கேற்ப இசை அறிவுடன் பாடிவரும் பாடல்கள் இன்றும் நம் உள்ளத்தைத் தொடுகின்றன. இன்ப நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ச்சியுறும் போதும், துன்ப நிகழ்ச்சிகளைக் கண்டு துயருறும் போதும் தமிழர்கள் உணர்ச்சிவயப்பட்டு இனிமையாகப் பாடியுள்ளனர்.

தெம்மாங்கு, காவடிச்சிந்து, ஏற்றப்பாட்டு போன்ற பல்வகை நாடோடிப் பாடல்கள் நம் நாட்டிற்குப் பெருமை சேர்ப்பவை. ஆனால் இந்திய மண்ணிலே, கேரளக் கிராமியப் பாடல்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவை.

**பக்திநெறியும் இசையும்**

சைவ நாயன்மார்களும், வைணவ நெறியைச் சார்ந்த ஆழ்வார்களும் பக்திப் பரவசத்தில் உருகித் தமிழகமெங்கும் இன்னிசையால் இறைவன் புகழ்பாடி பக்திநெறியைப் பரப்பினர். இதேபோன்று வட இந்தியாவிலும் இராமானந்தர், மீராபாய், கபீர்தாஸ், சூர்தாஸ், சைதன்யர் போன்றோர் பக்திநெறியைப் பரப்ப இசையின் துணையை நாடி அதை வெற்றிகரமாகச் செய்து முடித்தனர்.

**இசையின் பயன்**

இசை உடலையும் உயிரையும் தொடுவதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை; அதன் ஆழமான விளைவுகள் ஆன்மாவின் மேலும் படிகின்றன. இதனால் கிடைக்கும் ஆன்மப் பயனை மறுக்கமுடியாது. உயர்ந்த இசை உடலையும் உள்ளத்தையும் நெகிழச் செய்து, கண்களில் நீர்பெருக்கெடுத்தோடச் செய்கிறது. இசை, அல்டஸ் ஹக்ஸ்லி கூறுவதுபோன்று ஆன்மா கீழ்நோக்கியும், மேல்நோக்கியும் கடந்து செல்லும் நிலையை உருவாக்குகின்றது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் நம் நாட்டில் இசை, மேலே கடந்து உயரியநிலை அடைய ஒரு கருவியாக உள்ளது. இசை இன்பத்தைச் செவிகளால் மட்டும் கேட்டு இன்புறுவதில்லை. அஃது ஆளுமை முழுமையால் உய்த்துணரப் படுகின்றது. இசையைச் சுவைக்க அச்சூழலில் தோய்ந்து வந்திருத்தல் வேண்டும்; பாடத் தெரியாவிடினும் அதைச் சுவைக்கும் கலையையாவது கற்றிருத்தல் வேண்டும்.

## 11.2. இந்திய இசையில், சிறப்பாகத் தென்னிந்திய இசையில் இந்தியப் பண்பாட்டின் பிரதிபலிப்பு

**தொடக்கம்**

மனித இயல்பை ஆராயும்பொழுது உடலியல், உணர்வியல், அறிவியல் கூறுகள் இருக்கின்றன என்பது

வெள்ளிடைமலை. ஆனால் இதற்கப்பாலும் ஆன்மிக இயல்பு என ஒன்று இருப்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இந்த நான்கு கூறுகளை மனத்திற்கொண்டு இந்திய இசையிலும், தென்னிந்திய இசையிலும் இந்தியப் பண்பாடு எவ்வாறு பிரதிபலிக்கின்றது என ஆராய்வது சாலச் சிறந்ததாகும். இந்நான்கு கூறுகளையும் நன்னெறிப்படுத்தி, மனிதனின் இறுதிக் குறிக்கோளை அடையத் துணைபுரிவதே நமது பண்பாட்டின் நோக்கமாகும்.

### இந்திய இசையும் பண்பாடும்

இந்திய இசை, நமது சீரிய பண்பாட்டினை வளர்க்க உறு துணையாக இருந்ததுடன், நம் பண்பாடும் இந்திய இசையைச் செம்மைப்படுத்த வழிகோலியது; ஆகவே, இசையும் பண்பாடும் ஒன்றையொன்று சார்ந்தேயுள்ளன.

இந்திய இசையெனக் கூறும்பொழுது அதில் கருநாடக இசையும், இந்துஸ்தானி இசையும், பண்டைய தமிழிசையும் அடங்கும்.

மூவகையான பண்பாட்டு மதிப்பீடுகளையும் எழிலியல் நலன் களையும் இந்திய இசை பெற்றுள்ளது. இவை தனிமனித வளர்ச் சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் துணைபுரிகின்றன. இவைமுறையே சாத்விக, இராஜச, தாமசஇயல்புகளை மனிதனிடத்தே உருவாக்கு கின்றன. இசையினால் அறிவு, தெளிவு சமநோக்கு, இசைவு, இரக்கஉணர்வு, நல்லெண்ணம், நட்புணர்வு, தன்னடக்கம், நெறிப் படுத்தப்பட்ட இசைவான செயல் தோன்றும்பொழுது சாத்விக உணர்வு வெளிப்படுகின்றது. இந்திய இசை சாத்விக நெறியில் சென்று இப்பயன்களைநல்குகின்றது. வன்முறையையும், உணர்ச்சி மேலீட்டையும் தடுத்தல், உள்ளத்தின் தனித்தன்மையை உறுதிப் படுத்தல், தனக்கு உடன்பாடுள்ள அனைத்தையும் ஏற்றுக் கொள்ளல், தன்னல அமைப்பிற்கு முரணானவற்றைக் கடுமை யாக எதிர்த்தல், அல்லது தனது அறிவாற்றலுக்கு உடன்பாடில் லாதவற்றை ஏற்றுக்கொள்ளாமை இராஜச அமைப்பில் காணலாம். எண்ணங்களால் ஆளப்பட்டு, அமைதியின்றி, புதியனவற்றில் ஆர்வம் காட்டுதலும் சாத்விக இயல்பின் கீழ் வருபவை. மூன்றாவதாகக் கூறப்படும் தாமச இயல்பு தன் இருக்கையைப் புறமனத்தின்மேல் வைத்துக் கொள்கின்றது. அது கருத்துகளை வாங்கிக்கொள்ளாமல் சோம்பல் நிலையில் இருக்கின்றது. தன்னையறியாமல் செயல்படா நிலையில், குருட்டுத்தனமாக வரும் எண்ணங்களை ஏற்றுக்கொள்ளும். விரிவடைய விழை

யாமல், ஏற்றுக்கொண்டுள்ள அறிவுக் கூறுகளை விடாமல் பிடித்துக் கொள்கின்றது. (1) எண்ணப் படிவங்களை உருவாக்குகின்ற நிலை—சாத்விக இயல்பு, (2) குறிக்கோள் நிலையை எய்த விரும்புவது—இராஜச இயல்பு, (3) உணர்வு பூர்வமான, இருப்பதை இருந்தபடியே ஏற்றுக்கொள்ளல்—தாமச இயல்பு. இவை மூன்றும் இசைக்குரிய பண்புகளாகும்.

சாத்விக நிலையில் இந்திய இசை, உலக ஒருமைப்பாட்டுணர்வுடன் காணுகின்றது. இது ஒரு குறியீட்டுமுறை. இசையில் மனித இனம் திளைத்திருக்கும்பொழுது சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து நிற்கின்றது, இது இந்திய இசைக்கும் ஏற்புடையதே. அங்கு 'உலகில் அனைவரும் உடன் பிறந்தோரே' என்ற உயரிய எண்ணம் தோன்றுகிறது. நல்லெண்ணம், சமநோக்கு, நல்லறிவு, இரக்க உணர்வு அனைத்தும் தோன்றுகின்றன. பக்திப் பாடல்களை அனைவரும் ஒருசேரப் பாடும் பொழுதும் பஜனைகளில் ஈடுபடும்பொழுதும் இந்நிலையை உணரலாம்.

தன்னை அர்ப்பணித்துக் கொள்ளாததும், உணர்ச்சி வயப்படாததுமான இசை இராஜச இயல்பின் கீழ்வரும். பொதுவாக, அரங்குகளில் பாடப்பட்டுப் பலரும் கேட்கும் பண்டைய இசை தனக்கு ஏற்புடையதை எடுத்துக்கொண்டு பிறவற்றை விட்டுவிடுகின்றது. சாத்விக நிலையில் உடல், உயிர், உள்ளம் மூன்றும் மெய்மறந்து இசைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நிலையினைக் காண்கின்றோம். அங்கு ஓர் அத்துவித நிலை தென்படுகின்றது. ஆனால், இராஜச நிலையில் இவை இல்லை. ஆய்வு மனப்பான்மையுடன் உள்ளம் துருதுருவெனப் பிரிந்து நின்று செயல்படுகின்றது. இதையும் நமது இசையில் காணலாம்.

இவ்விரண்டு நிலைகளைக் கடந்து சிறிது நேரம் உடல் உணர்விற்கு இன்பத்தை நல்கும் இசை தாமச இயல்பின்கீழ் வருகின்றது. மெல்லிசை, திரை இசை போன்ற சில இசைப் பாணிகள் இதனுள் அடங்கியவை. இதனால் பெரும்பயன் ஒன்றுமில்லை. கொடுத்ததைக் கொடுத்தவண்ணமே எடுத்துக் கொள்ளலாகும். ஆக சாத்விக, இராஜச, தாமச பண்பு நலங்களை இந்திய இசை வகைப்படுத்திப் புலப்படுத்துவது போன்று உலகில் வேறு எந்த இசையும் அறிவிப்பதில்லை. இதுவே இந்திய இசைத் தத்துவ ஞானமாகும். இதுவே இந்தியப் பண்பாட்டின் ஆன்ம, மன, உடற்கூறுகள் இந்திய இசையில் பிரதிபலிப்பதைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றன.

இந்திய இசை மனித மனத்தைத் தூய்மைப்படுத்தும் ஆற்றல் நிரம்பப் பெற்றதால் சிறுவயதிலிருந்தே சிறுவர்கட்கு இசைக் கல்வியைப் புகட்டவேண்டும். தனிமனித இயல்பை மட்டுமன்றிச் சமுதாயத்தையும் பரிசுத்த நிலைக்குக் கொணரும் ஆற்றல் இந்திய இசைக்கு உண்டு.

வேதங்களைக் குறிப்பாகச் சாமவேதத்தை இசையுடன் அன்றுமுதல் இன்றுவரை பாடிவருவதை இத்திருநாட்டில் காண்கின்றோம். பக்திநெறியில் இறைவன் புகழை இசையோடு பாடி, படித்தோரும் பாமரரும் திளைத்து நிற்பதை இன்றும் காண்கின்றோம். இதற்குச் சமய ஞானம், பெரும்புலமை தேவையில்லை. மீரா, சூர்தாஸ், புரந்தரதாசர், ஜெயதேவர், சைதன்யர், இராமானந்தர் தங்களின் பக்திப் பாடல்களை இசையோடு பாடி வடஇந்திய மக்களைப் பக்தி வெள்ளத்தில் ஆழ்த்தியதுடன் அவர்களைப் பண்பாட்டு நெறியில் வழிநடத்திச் சென்றனர். இசையைக் கேட்பதில் அனைத்துப் பாகுபாடும் அழிந்துபோகின்றது. இசை விற்பன்னர்களைப் பாராட்டும் போழ்தும் ஏற்றத் தாழ்வுகள் தோன்றுவதில்லை. இந்திய இசை இவ்வுயரிய பண்பினைப் பிரதிபலிக்கின்றது.

## தென்னிந்திய இசையில் இந்தியப் பண்பாட்டின் பிரதிபலிப்பு

நிலத்தின் பல்வேறு பிரிவுகட்கு ஏற்ப யாழையும் பண்ணையும் அமைத்துத் தமிழிசை, தனது உயரிய பண்பாட்டைத் தென்னாட்டு இசையில் வெளிப்படுத்துகின்றது. கல்நெஞ்சர்களையும், கொடிய மனம் படைத்தோரையும் தனது இசையால் கவர்ந்து அவர்களைப் பண்பாளர்களாக்கிய பெருமை தென்னாட்டு இசைக்கு உண்டு. பல்வேறு பருவகாலங்கட்கும், நாளில் பல்வேறு நேரங்கட்கேற்பவும் பல்வேறு இராகங்களையும், இசை அமைப்புகளையும் வழங்கித் தனது உயரிய பண்பாட்டைத் தென்னிந்திய இசை தெள்ளிதிற் புலனாக்குகின்றது.

இறைவனை 'நாதப்பிரம்மம்' என்ற கருத்தில் இசையால் வழிபட்ட பெருமை தென்னகத்தைச் சாரும். 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்ற பல்வேறு சொற்றொடர்கள் தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் வருவதன்மூலம் இறைவன் ஒலி வடிவானவன் என்பது அறியக்கிடக்கின்றது. நாத உபாசனை மூலம் ஆன்ம ஈடேற்றம் பெறும் அரிய உயர்ந்த சமய நெறியைத் தென்னக இசை எடுத்தியம்புகின்றது. இக் கருத்தின்மூலம் இந்தியப் பண்பாட்டின் சீர்மை இங்கே எதிரொலிப்பதைக் காண்கின்றோம்.

சைவ நாயன்மார்களும், ஆழ்வார்களும் இன்னிசையால் பக்திநெறியைப் பரப்பியது போன்ற வரலாற்றை உலகில் எங்கும் காணமுடியாது இப் பக்திநெறி இந்தியப் பண்பாட்டை விளக்கும் ஒரு முக்கியக் கூறாகும்.

சோதி இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா, அருணகிரி யாரின் திருப்புகழ், மாணிக்கவாசகரின் திருவாசகம் ஆகியவை தூய தமிழிசைப் பெட்டகங்களாகும். இவற்றில் இந்தியப் பண் பாட்டின் சாரம் பொலிந்திருப்பதைக் காணலாம்.

தென்னாட்டுத் திருக்கோயில்களில் உள்ள பல சிற்பங்களும் தூண்களும் இசைப்படிமங்களாக உள்ளன. கல்லும் கவிசொல்லு கின்றது. நமது இசை வளர்ச்சியை இப்படிமங்கள் எடுத்தியம்பு கின்றன. ஏழு இசை அமைப்புகளை, பல்வேறு ஒலிகளை இப்படிமங்களும் கற்றூண்களும் இசைத்துக் காட்டுகின்ற வியத்தகு காட்சிகளை உலகில் இங்குதான் காணமுடியும். கட்டடக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை இவை மூன்றிற்குமுள்ள தொடர்பினையும், இதுபற்றிய அன்றைய கலைஞர்கள் பெற்றிருந்த நுண்ணறிவையும் அறிகின்றோம். பல்வேறு சமுதாய நிலைக் கேற்பத் தென்னாட்டில் இசைப் பாணிகள் அமைக்கப் பெற்றுள்ளமை தனிச் சிறப்பாகும்.

தென்னாட்டுத் திருக்கோயில்கள் இந்தியப் பண்பாட்டின் மையங்களாக இன்றும் திகழ்கின்றன. அன்று ஆடலும் பாடலும் திகழ்ந்தன. இன்றும் பூசைகளும் பல்வகைச் சமயச் சடங்கு களும் ஆலயங்களில் நிகழும்போது இசையுடன் பாடல்கள் பாடப் பட்டுவருகின்றன. நாதஸ்வர இசை, முரசு இசை மற்றும் பிற கருவி இசை நடைபெற்று வருவதைக் காண்கின்றோம். இதற் கென ஓதுவார்கள் ஆலயங்கள் தோறும் நியமிக்கப்பட்டுப் பணி புரிந்து வருகின்றனர்.

சமயச் சான்றோர்களில் சிலர் பல்வேறு தெய்வங்களின்மேல் இசையுடன் பாடிய பாடல்கள் பாடப்பட்டுவருவது நாம் அறியாத தன்று.

ஆலய ஓவியங்கள் இசைக்கருவிகளையும், இசைநிகழ்ச்சி அமைப்புகளையும் எடுத்துக்காட்டுகின்றன.

கல்வெட்டுகள், ஆலயத்தில் இசைப்பணி செய்வதற்கென இசைவல்லாருக்கு வழங்கிய மானியத்தையும் குறிப்பிடுகின்றன. இதைக் குறிப்பாகக் குடுமியாமலைக் கல்வெட்டிலிருந்து காணலாம்.

தமிழகத் திருக்கோயில்களில் சில தங்கட்கெனச் சில இசைக் கருவிகளைப் பயன்படுத்துகின்றன. இவையெல்லாம் இந்தியப் பண்பாடு தென்னிந்திய இசையில் சிறப்பாக மிளிரும் நிலையை எடுத்துக்காட்டுகின்றன.

தமிழிசையும் தென்னாட்டு இசையும் பக்திக்கு மட்டுமன்றித், தமிழர் தென்னாட்டவர் பண்பாடு, வரலாறு, மாவீரர் கதை, வரலாற்று நிகழ்ச்சிகள், உலக நிகழ்ச்சிகள், புதிய எண்ணங்கள், புதிய உணர்ச்சிகள், எழுச்சிதரும் இயற்கைக் காட்சிகள் முதலியன குறித்தெல்லாம் வியத்தகு பாடல்களைக் கொண்டு மக்களை இணைக்கின்றன.

தாய்மொழியில் பாடல்கள் இசையுடன் பாடப்படும்பொழுது நாம் அவற்றைச் சுவைப்பதுடன், பொருள் பொதிந்த பாடல்களின் கருத்துகளை அறிந்து, உணர்ந்து செயல்பட்டுப் பண்பட்டவர் களாக மாற வாய்ப்புக் கிட்டுகிறது.

## 11.3. இந்திய நாட்டியக் கலை

### தொடக்கம்

அழகுக் கலைத்துறையில் பிற நாடுகளைவிட நம் நாடு முன்னணியில் நிற்பதை யாவரும் அறிவர். பன்னெடுங்காலமாகத் தென்னிந்தியா, இந்தியப் பண்பாட்டின் பெட்டகமாய் அமைந்து வந்துள்ளது. பரத நாட்டியக் கலைக்குத் தென்னிந்தியா ஒரு புரவலனாகத் திகழ்கின்றது. தமிழகத் திருக்கோயில்களில் பரத நாட்டிய அபிநயக்காட்சிகள் செதுக்கப் பெறாத கோயிலை நாம் காண இயலாது.

கூத்து, நட்டகம், நாடகம், நடனம், நாட்டியம் என்றெல் லாம் சொல்லப்படும் ஆடல் தமிழரின் தனிப்பெருங் கலைகளுள் ஒன்று. அதன் அடிப்படை பாவம், இராகம், தாளம். அந்த மூன்று சொற்களின் முதல் எழுத்து (ப-ர-த) முறைப்படி அமைய, மூன்று சொற்களின் இறுதி எழுத்து (ம்) இறுதியில் அமைய 'பரதம்' என்ற பொருள் சிறந்த சொல்லே இக்கலைக்குப் பெயரா யிற்று. இக்கலை உலகெல்லாம் புகழ்மிக்கதாக விளங்கினும் இது முழுக்க முழுக்கத் தமிழ்க்கலையே; தமிழ் நிலத்திலேதான் முளைத்து கிளைத்து, மலர்ந்து மணம் பரப்பிற்று.

### நாட்டிய வகைகள்

இந்திய மண்ணில் பல்வகைப்பட்ட நாட்டியப் பாணிகளைக் காண்கின்றோம். அவற்றுள் சிறப்பாகக் கருதப்படுபவை (1) பரத

நாட்டியம் அல்லது பரதம், (2) கதகளி, (3) மணிபுரி, (4) கதக் எனப்படுபவை. இவை தவிர வங்காளத்தில் பால்வா, கீவா நடனங்கள், நாட்டிய நிருத்யம், மயூர, சபேர, புஷ்ப, கோகில நிருத்யங்கள் என்பவை பயிலப்பட்டு வந்தன. பீஹாரில் பிரணே, பவன, சந்திர நிருத்ய வகைகளும்; கர்ப்பநிருத்யம் குஜராத்திலும்; காபாநிருத்யம் மகாராஷ்டிரத்திலும்; இராஸ் எனும் ஒருவகை ஆடல் உத்தரப் பிரதேசத்திலும்; 'கிட்டா' என்ற முறை பஞ்சாபிலும் இருந்துவருகின்றன.

தென்னிந்தியாவில் தேவதாசிகள் என அழைக்கப்படுவோர், ஆடற்கலையில் சிறந்து விளங்கி ஆலயங்களில் பணிபுரிந்தனர். இவர்களைத் தேவரடியார்கள் எனவும் அழைத்தனர்.

தமிழகத்தில் குறவஞ்சி என்ற நடனமுறையும் இருந்து வருகிறது. ஒடிசி என்ற நடனம் மகாரிகள் என்ற மகளிரால் ஆடப்பட்டுவந்தது. ஆந்திராவில் குச்சிப்புடி என்ற கிராமத்தில் வாழ்ந்த சித்தேந்திரர் என்ற யோகி வழிபாட்டிற்குப் பயன் படுத்திய நாட்டிய முறையே குச்சிபபுடி எனப் பெயர் பெற்று இன்று சிறப்படைந்துள்ளது. தேவதாசிகள், ஆந்திராவில் கோயில்களில் குறவஞ்சி நடனங்களை நிகழ்த்திக் காட்டினர். நடனத் தொழில்வல்லார் யக்ஷகானம் என்ற நடனத்தை ஆடிக் காட்டினர். தேவதாசிகளில் 'விஷ்ணுதாசிகள்' எனவும் 'சிவதாசிகள்' எனவும் இருந்தனர். விஷ்ணுதாசிகள், அழகுபட அமைதியாக ஆடினர். சிவதாசிகள் சிவதாண்டவ பாணியில் ஆடினர். பாகவதமேளம் தமிழ்நாட்டு ஆடல் வகை; இது குச்சுப்புடியை ஒத்தது. கேரளாவில் கதகளி தவிர சாக்கியர் கூத்து, கூடியாட்டம், கிருஷ்ணாட்டம், இராமனாட்டம் என்ற நடனப் பாணிகளும் இருந்துவருகின்றன.

நாட்டியம்—பொதுவான நோக்கு

இந்திய நடனத்தில் உடல் முழுமையாகச் செயல்படுகிறது. இவ்வாடற்கலையில், குறிப்பிடத்தக்க கூறு, ஐயப்பாட்டிற்கு இடமின்றிக் கையின் அபிநயமே. பண்டைய முதல்தரமான நடன வகைகள், பண்டைய நூல்களிலுள்ள விதிமுறைகளினின்று சிறிதும் பிறழாமல் பின்பற்றப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இசையைப் போன்றே, நாட்டியமும் பண்டைய நாள் தொட்டு இருந்துவருகிறது; உலகில் நிகழும் பல்வேறு விந்தையான நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தவும் பண்டைய நடனம் பயன் பட்டது. இது குறியீடு மூலம் செய்திகளை உணர்த்தும் கலை. இஃது இருவகைப்படும். இசைக்கும் கால அளவிற்கும் ஏற்ப

எளிய அசைவுகளையுடையது ஒருவகை. மற்றொன்று, தனக்குத் தானே ஆய்வுப் பொருளாய் அமைவது. வில்டூரன்ட் என்பவர் 'இந்துக்களுக்கு, இந்நடனங்கள் வெறும் உடலசைவுகள் மட்டுமல்ல, பிரபஞ்சத்தின் இசைவான போக்கினையும் செயல்களையும் பின்பற்றி நடித்துக் காட்டும் ஒரு நாடகம்' எனக் கூறுகிறார். சிவனே, நடனத்திற்குத் தெய்வமாகக் கருதப்படு கிறார். ஆகவே கூத்தையே உருவமாக்கி, அதை தெய்வ வடிவில் கூத்தப்பிரான், ஆடல்வல்லான், அம்பலத்தாடி, தாண்டவ மூர்த்தி, நடராசன் என்றெல்லாம் பற்பல பெயர்கள் சூட்டிக் கோயிலும் கட்டி, அதனுள் வைத்துப் போற்றி வாழ்த்தி வணங்கி வழிபட்டுக் கொண்டாடிவரும் நிலையைத் தென்னாடு தவிர வேறெங்குக் காணமுடியும் ?

ஆடல்கலை உயர்ந்த வகுப்பாரிடை நிலவிவந்ததைக் காண் கின்றோம். வசதி படைத்த மகளிர் ஆடல் பாடல் கலைகளை விரும்பிப் பயின்றனர்.

உருக்குமணிதேவி அவர்களின் கருத்துப்படி நடனங்கள் நிருத்த, நிருத்ய என இருவகைப்படும். அவர் கூற்றுப்படி நிருத்த என்பது சிக்கலான, எளிதிற் புலனாகாத நடனமுறை. இதில் கட்டுப்பாடான அசைவுகளும் நிலைகளும் அடங்கி யுள்ளன. இதில் நாடகப் பொருட் செறிவு இருக்காது. நிருத்ய என்பது விளக்கம் அடங்கியதாக, குறிப்பாக ஒன்றைத் தெரிவிக்கக் கூடியதாக அமைந்திருக்கும். இதில் ஒவ்வோர் அசைவும் அபிநயமும் பொருள் பொதிந்திருக்கும்.

### பரதநாட்டியம்

இதை அறியத் துணைபுரிவது பரதமுனிவர் வடமொழியில் எழுதிய 'நாட்டிய சாஸ்திரமாகும்'. இவர் தெற்கே வாழ்ந்தவர். இந்தியர்கள் அனைவரும் அறியக்கூடிய மொழி அன்று சமஸ் கிருதமாக இருந்ததால் அம்மொழியில் இந்நூலை எழுதியதாகக் கூறப்படுகிறது.

பரதத்தின் உயிர்நாடி பாவம். அபிநயத்தின் மூலமே பாவம் வெளிப்படும். அபிநயம் என்பது ஒருவகை மொழியே. ஆனால், ஒலியோ ஒலிக்கூட்டமான சொல்லோ இன்றி இயங்குவது அம் மொழி. என்றாலும் சொல் இல்லாமலேயே, பொருளை அல்லது கருத்தை உணர்த்தவல்லது அபிநயம். எல்லா மொழியினர்க்கும் அது பொது. எனவே, அதை மொழியா மொழி என்றோ, அல்லது பொருள்மொழி என்றோ கூறலாம் எனத் திரு. சா. கணேசன் கூறுகிறார்.

கூத்தியலை மூன்று வகையாகவும், ஐந்து வகையாகவும் கணிப்பர் நூலோர். பெரும்பாலோர் மூவகையாகவே கொள்வர். அவை நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்பனவாம்.

அபிநயத்திற்கு உடல் உறுப்புகளே உதவுபவை. உறுப்புகளை மூவகையாகப் பிரிப்பர் நூலோர். இதைத் தரையங்கம் அல்லது திரியாங்கம் என்பர் வடநூலார். அவையாவன :

(1) முதலுறுப்பு (அங்கம்)—அவை தலை, மார்பு, கை, விரல், இடை, பக்கம், பாதம் ஆகிய ஏழு உறுப்புகளாகும்.

(2) இணையுறுப்பு (பிரத்தியாங்கம்)—அவை தோள், முதுகு, கழுத்து, வயிறு, மணிக்கட்டு, தொடை, முழங்கால், கணுக்கால் ஆகிய எட்டு உறுப்புகளாகும்.

(3) துணையுறுப்பு (உபாங்கம்)—அவை விழி, இமை, புருவம்,கன்னம், மூக்கு, மூச்சு, பல், உதடு, நாக்கு, மோவாய், வாய், முகம் ஆகிய பன்னிரண்டு உறுப்புகளாகும்.

பரத நாட்டியத்தில் பாவம், இராகம், தாளம் ஒன்றாக இணைந்தே செல்லவேண்டும். இங்குக் கைகளின், முகத்தின், உடலின் பல்வேறு நிலைகளின் அபிநயம் கலைத்திறனுடன் ஒருசேர அமையவேண்டும். இத்தேசியக்கலை எல்லாப் பண்டைய சிற்பங்களிலும், ஓவியங்களிலும், படிமங்களிலும் தனது செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. தேவதாசி முறையைப் புகுத்தி ஆலய வழிபாட்டின்போது பரதநாட்டியம் நிகழ்த்தப்பெற்றது. 'முதலில் பரதநாட்டியம் பெண்களுக்கென இருந்தது, அவர்களாலேயே ஆடப்பட்டுவந்தது' என ஏ.கே. மஜூம்தார் குறிப்பிடுகிறார்.

**கதகளி**

நிருத்த (தூய நடனம்), நிருத்ய (விளக்க வகையான நடனம்), தாண்டவ (சுறுசுறுப்பான ஆண்மை நிறைந்த பாணி நடனம்) இலாசியம் (மென்மையான பெண்மை நிறைந்த பாணி நடனம்) என்ற நால்வகை நடனப்பாணிகளின் செழிப்புமிக்க ஒன்றிணைப்பே கதகளி நடனமாகும். இந்நடனம் பல நூற்றாண்டுகளாகக் கேரள மாநிலத்தில் செழிப்புற்ற நிலையில் இருந்து வருகிறது. இஃது ஒரு நாட்டிய நாடகம். பொம்மலாட்டத்தின் வளர்ச்சியுற்ற நிலையே கதகளியெனவும் கூறலாம். புராணங்களும் பல்வேறு கதைகளும் இம்முறையில் ஆடிக் காட்டப்படுகின்றன. 'கட்டாரக்கரை அரசர் இராமனாட்டம் என்ற ஒரு வகைக் கேளிக்கையை உருவாக்கினார்; அதுவே இன்று கதகளி அல்லது அட்டகதை என அழைக்கப்படுகிறது' என எம். எல்.

பாஹி கூறுகிறார். 'இந்நடனத்தில் வீர ரசமும், பயங்கர உணர்வும் வலியுறுத்தப்படுகின்றன. ஆகவே, இதில் பெண்கள் பங்கு கொள்வதில்லை. அவர்களுடைய பங்கினை ஆண்களே ஏற்று விரிவான அல்லது அழுத்தமான சாயம் பூசிக்கொண்டு நடிப்பார்கள்' என ஏ. கே. மஜூம்தார் கூறுகிறார்.

## மணிபுரி

இந்நடனம் இடைக்கால வங்காள இராதா-கிருஷ்ண பாடல்களையே முழுமையாக நம்பியுள்ளது. இதை மக்களின் பாராட்டிற்குரியதாக ஆக்கிய பெருமை சைதன்யரைச் சாரும். இந்நடனத்தில் ஆடுவோர் வட்டமாகவோ அல்லது அரை வட்டமாகவோ நின்று வட்டமாக உடலசைவுகளுடன் ஆடிவருவார்கள். அதில் சில மாற்றங்களையும் ஏற்படுத்திக் கொள்வர். மணிபுரியில் இராஸ் என அழைக்கப்படும் கிருஷ்ண இரஸ நடனத்தைப் பின்பற்றி ஆடப்படுவதே மணிபுரி நடனம். இரஸ நடனம் தொடர்ந்து பன்னிரண்டு மணிநேரம்கூட நடைபெறும். கீத கோவிந்த பாடல்கள் அல்லது வைணவப் பாடல்கள் அவ்வமயம் பாடப்படும். இரஸலீலா என்பது ஒரு முழுநீள இசை நாடகம். இதில் நடனக் கூறுகளும், பலர் கூடிப்பாடுதலும் முக்கியக் கூறுகள். அழகிய வேலைப்பாடு அமைந்த பல வண்ண ஆடைகளில் பளிச்சிடும் அணிகலன்களையும் பளபளப்பான சிறு கண்ணாடிகளையும் பொருத்தி அணிந்து கொள்வார்கள் ஆடுவோர். தொடக்கத்திலிருந்து கண்டு களிப்போரின் கவனத்தை ஈர்ப்பதற்காக இந்த அலங்காரத்தைச் செய்துகொள்கின்றனர்.

மணிபுரி நடனத்தில் மற்றொரு சிறப்பான பாணி இலாய்-ஹரௌபா என்பது. இஃது உலகப் படைப்பை உருவகித்துக் காட்டுவது. இதற்கெனச் சில மரபுகளும் ஆடற்கலை விதிமுறைகளும் உண்டு. இயல்பாக அமைபவை, சூழலைச் சித்திரிப்பவை இந்நடனங்கள். மணிபுரி நடனத்தில் உணர்ச்சிப் பாடலுடன் கூடிய மனித இனத்தைக் காணலாம். இதில் களை, அழகு, கட்டுப்பாடு உண்டு; எவையும் மிகைபடாமல் இருக்கும்.

## கதக்

'கதக் என்பது கதா என்ற சொல்லினின்று வந்தது. அதன் பொருள் கதை. கதகர்கள் என்போர் கதை கூறும் ஒரு சாதியினர் அல்லது வீர காவியங்களிலிருந்தும் புராணங்களிலிருந்தும் நிகழ்ச்சிகளை ஒப்புவிப்பவர்கள். இவர்கள் வடஇந்தியாவின் குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள ஆலயங்களோடு பிணைக்கப்பட்டிருப்பவர்கள்" என மோகன் சோக்கர் கூறுகிறார். இதில் அதிகமாகப் பெண்மை

யின் நளினக் கூறுகளை (இலாசியம்) காண்கிறோம்; ஆனால், சில நேரங்களில் சுறுசுறுப்பான ஆண்மை நிறைந்த (தாண்டவ) கூறுகளின் கலப்பினையும் காணலாம். இது எளிய தெய்விக-சமய மக்கள் நடனம். இஃது ஆலயங்களுக்குள் அடைபட்டுக்கிடந்தது. முகலாயர்கள் காலத்தில் இஃது அரசவைக்குக் கொணரப்பட்டது. பெண்களும் இதில் பங்கெடுத்தனர். அக்காலச் சுவைஞர்களைக் கருத்தில் கொண்டு இவ்வாடற்கலையின் நுணுக்கங்கள் மாற்றி யமைக்கப்பட்டன.

இந்நடனம் பாத அசைவுகட்குச் சிறப்பான இடத்தை அளிக்கின்றது. தபலா என்ற தாளக் கருவியின் இசைக்கேற்ப நடன மாடுவோரின் கணுக்காலில் கட்டியுள்ள சதங்கைகளின் ஒலி, இசைவுடன் அழகுமிளிர அதிரவேண்டும். இந்நடனம் தொழில் நுணுக்கங்களில் அதிகக் கவனம் செலுத்தி, உணர்வினைப் புறக் கணிப்பதால், இதை இன்றைய ஆய்வாளர்கள் குறைவாக எண்ணுகின்றனர். பானர்ஜி என்பவர் 'இதில் அழகுக் கலை யுணர்வும், தனிச்சுவைத் திறமும் இல்லை' எனக் கூறுகிறார்.

இலக்னௌவைச் சேர்ந்த கல்கா, பிந்தா என்பவர்கள் இதன் நுணுக்கங்களைச் செம்மைப்படுத்தினர். அவர்களுக்குப் பின்னால் வந்த அச்செக்கான் மகாராஜாவும், சம்பு மகாராஜாவும் இவ் வாடற்கலைக்கு மிகச் சிறந்த விளக்கம் அளித்தவர்கள் எனக் கருதப்படுகின்றனர்.

## பண்டைய தமிழரின் ஆடற்கலை

தொல்காப்பியத்தில் வள்ளிக் கூத்து, குரவைக் கூத்து, கழல் நிலைக்கூத்து என்பவை பேசப்படுகின்றன. வள்ளிக் கூத்து என்பது வள்ளி என்ற தெய்வத்தைச் சிறப்பிப்பதற்காக இருக்கலா மெனக் கருதப்படுகிறது. ஆனால், கழல்நிலைக் கூத்து மிக உயர்ந்தமுறையில் அமைந்த ஒன்று. வீரப்போர் புரிந்த இளம் போர் வீரர்களைச் சிறப்பிக்க, அவர்களின் நண்பர்கள், அவர் களின் கணுக்கால்களில் வீரக்கழல்களை அணிவித்து ஆடிய ஆட்டம் கழல்நிலைக் கூத்து. இவை தவிர 'ஆடல்' என்ற முறையும் இருந்தது.

பண்டைய தமிழகத்தில் நடனத்தைக் கூத்து, ஆட்டம், குனிப்பு எனக் குறிப்பிட்டனர்.

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் நடனத்தை அகக்கூத்து, புறக்கூத்து என ஒரு பாகுபாடும்; சாந்திக் கூத்து, விநோதக்கூத்து என மற்றொருவகைப் பாகுபாடும் செய்கிறார். அகக்கூத்தில் நடனமாடுபவர் பாத்திரத்தின்

உணர்ச்சிச் செயல்பாடுகளை வெளியிடுவார். புறக்கூத்து வீர நிகழ்ச்சிகளையும் களைக்கூத்தாடி செயல்களையும் சித்திரிக்கும்.

அகத்தியம், செயிற்றியம், சயந்தம், குணநூல், மதிவாணம் என்ற நூல்களினின்று அடியார்க்கு நல்லார் பல்வேறு வகைப்பட்ட நாடகப் பாணிகளையும், விதிமுறைகளையும், தொழில் நுணுக்கங்களையும், இயல்புகளையும் அழகுபட எடுத்துக் கூறியுள்ளார். மேலும் பரதருடைய நாட்டிய சாஸ்திரமும் ஆடற்கலைபற்றிய அரிய குறிப்புகளைத் தருகின்றது.

சிலப்பதிகாரத்தில் அல்லியம், கொட்டி, குடக்கூத்து, குடைக் கூத்து, மல்லாடல், பாண்டரங்கம், துடி, பேடு, மரக்கால் ஆடல், பாவை, கடையம் எனப் பதினொருவகைக் கூத்துகள் குறிப்பிடப் பட்டுள்ளன.

பிற்காலத்தில் தமிழகத்தில் பலவகை ஆடல் மரபுகளும் தோன்றின. நம் நடனங்கள் அனைத்தும் பல நூற்றாண்டுகளாகச் சமயத்தோடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.

## 11.4. இந்திய நாட்டியக் கலையில்— சிறப்பாகத் தென்னிந்திய நாட்டியக் கலையில் இந்தியப் பண்பாட்டின் பிரதிபலிப்பு

ஒரு நாட்டின் பண்பாட்டை அழகுபட படம் பிடித்துக் காட்டுவது, அந்நாட்டின் அழகுக் கலைகள். குறிப்பாக இந்தியாவின் சிறப்புமிக்க பண்பாடு, பன்னெடுங்காலமாக இந்நாட்டு மக்களால் பேணிப் போற்றி வளர்க்கப்பட்டு அழகுக் கலைகளில் அழகுறப் பிரதிபலிக்கின்றது. இந்திய நாட்டியக் கலையில் நம் பண்பாடும் நாகரிகமும் நயம்பட எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

(1) இந்திய நடனக் கலைக்கு தனக்கென எழிலியல் கொள்கை (aesthetic theory) உண்டு. அக்கொள்கையினை ஒரேசீராக நடனம், நாடகம், ஆக்க இலக்கியம், கவிதை உள்பட அனைத்திலும் காணலாம். அழகுக் கலையென்பது ஒரு கூட்டு முயற்சி. அதில் இரு பிரிவினர் உண்டு. ஒரு பக்கம் உணர்ச்சிகள் மூலமாகக் கலையை வெளிப்படுத்துவோர், மற்றொரு பக்கம் கண்டு சுவைத்து அழகுணர்வால் மகிழ்ச்சியுறுவோர். இதன் அடிப்படையில் கெய்த் என்பவர், பாவத்தை (Bhava) வெளியிடுவோரின் மனவெழுச்சி அல்லது உணர்ச்சி என்றும், ரசம் (Rasa) என்பதைக் காண்போரின் உணர்வுச் சுவை நயக்கூறு என்றும் பாகுபடுத்திக் காட்டினார்.

(2) இத்திருநாட்டின் ஆன்மாவினை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் நாட்டியக்கலை எடுத்துக்காட்டுகிறது. காலத்திற்

குட்பட்ட, அதே நேரத்தில் அநாதியுமான ஆன்ம இயல்பினை இந்திய நடனங்கள் எடுத்தியம்புகின்றன.

(3) இந்நாட்டியக்கலையைச் செம்மையாகப் பின்பற்றி நாள் தோறும் ஆடிவந்தால் வாழ்வின் பயன்மிக்க இறுதிக் குறிக்கோளை அடைய நிச்சயமாக வழிகாட்டும்.

(4) இந்திய நாட்டியக் கலை ஆன்மிக நோக்கமுடையது, வெளிப்பாட்டில் (expression) குறிக்கோளுடையது, விளக்கத்தில் சீரிய பொருள் பொதிந்தது எனக் கூறலாம்.

(5) இறைவனுடைய செயல்கள் அனைத்துமே திருவிளையாடல்கள் எனக் கூறப்படுகின்றன. அலகிலா விளையாட்டுடையான், தன் பல்வேறு செயல்களை, தன் தாண்டவங்கள் மூலமே வெளிப்படுத்துவதாக நமது சமய தத்துவ நூல்கள் கூறுகின்றன. இதற்குச் சான்றாக விளங்குவது சிதம்பர நடராசரின் திருக்கோலம். இதை ஊழிக்கூத்து (Cosmic dance) என்பர். ஆனந்த குமாரசுவாமி என்பவர், இதுபற்றி அரிய நூலொன்றை எழுதியுள்ளார்.

(6) தென்னிந்தியாவின் செல்வமெனக் கருதப்படும் பரதமே உயர்ந்த ஆன்மிக, சமய, அற, தத்துவ நெறிகளை உள்ளடக்கிய நாட்டியக்கலை. இதில் இந்தியப் பண்பாட்டின் பிரதிபலிப்பு அழகுற மிளிர்கின்றது.

(7) பரதக்கலையில் சிறந்த இசை, நடனநெறி, பாடல்கள், அபிநய முறைகள், ஒலி, ஒளி அமைப்புகள், பயிற்சி, ஒழுக்க விதிகள் அனைத்தும் அடங்கியுள்ளன. இது குரு-சிஷ்ய மரபில் கடினமான விதிமுறைகளைக் கற்க வேண்டிய ஒன்றாகும். இதனால் சிறந்த பண்புகளைப் பயில்வோரும் காண்போரும் பெறமுடிகின்றது.

(8) நடனத்தை யோகநிலைக்கு ஒப்பிடுவர். இது குறிப்பாகப் பரதக்கலைக்கு மிகப் பொருந்தும். யோகிகள் பின்பற்ற வேண்டிய உடல், உள்ள, ஆன்ம நெறிமுறைகளை இங்குக் கைக்கொள்ள வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும்.

9. சிவன், யோகிகட்கெல்லாம் யோகி எனக் கருதப்படுகிறான். அவனை அம்பலவாணன், கூத்தபிரான், நடராஜன் எனப் பல்வேறு பெயர்களால் அழைப்பதன்மூலம் இக்கருத்தினை உணரலாம். ஒருமைப்பாட்டுணர்வை நடனத்தின்மூலம் அடையலாம் என்பதை அவனது ஊழிக்கூத்து உணர்த்துகின்றது. உடலையும் உயிரையும் இணைப்பதால் இதை யோகம் எனக் கூறுகிறோம். இது கழைக்கூத்தாடி வேலையன்று. இவ்வுயர்ந்த

கருத்துகள் அனைத்தையும் வெளிப்படுத்துவது தென்னிந்திய நாட்டியக்கலையே யாகும்.

(10) பரமாத்மா கண்ணன் பிருந்தாவனத்தில் ஆடினான். கோபியர்கள் அவனைச் சூழ்ந்து மெய்ம்மறந்து ஆடினர். இந்த நடன லயத்தில் பரமாத்மா தன்னைப் பிரிந்து சென்ற சீவாத் மாக்களைத் தன்வசம் இழுத்துக் கொள்கிறார். கோபியர் ஒவ் வொருவரும் தங்களுக்குள் கண்ணனைக் காண்கின்றனர். இதுவே நடனத் தத்துவம். மேலெழுந்தவாரியாகக் காண்கின்றபோது கேலிக்கூத்தாக இந்நடனம் தோன்றும். இதுவே நடனத் தோற்றத்திற்கு விளக்கம். இது பரதர் என்ற ஞானிமூலம் நமக்குக் கிட்டியுள்ளது.

(11) 'நடராசரை முதன்மையான நாட்டியக்காரர் எனவும், அரங்கநாதர் என்றால் அரங்க மேலாளர் எனவும் கொள்ளலாம்' என்று திரு. ஆர். சீனிவாசன் அவர்கள் கூறுகிறார். இந்தியக் கலைகளில் எல்லா வெளிப்பாடுகளும் ஆன்மிகத்தைப் பின்னணி யாகக் கொண்டு திகழ்பவை.

(12) அக்கால இருடிகளும் தேவர்களும் பெருங்கலைஞர்கள். நம்முடைய பல கலை மரபுகளை உருவாக்கியவர்கள் அவர்களே. ஆகவே, இவ்வுயரிய கலையைக் கைக்கொண்டு ஒழுகி உய்வுபெற வேண்டியது நமது கடமை.

(13) பண்டைய இந்தியாவில் கலை, சமயத்துடன் இணைந்தே சென்றது. கலை அகநோக்குடையதாக அமையும்பொழுது சமய மாகின்றது. சமயம் புறநோக்குடையதாக அமையும்பொழுது கலையாகின்றது என்பதை நினைவுகூர்வது சிறப்புடைத்து. ஆலயங்கள் அன்று கலைகளின் இருப்பிடங்களாக அமைந்து இருந்தன. கலைக்கருவூலங்கள், திருக்கோயில்களில் நிரம்பி வழிந்தன. இது குறிப்பாகத் தென்னாட்டுத் திருக்கோயில்களுக்கே பொருந்தும். நாட்டியக்கலையை இதே நெறியில் சிந்தித்து நோக்க வேண்டப்படுகின்றது.

(14) மொழியா மொழியில் கருத்துகளை நடனத்தில் எடுத்துக்காட்டி மக்களை உணரவைத்தனர். இதில் குறிப்பாகப் பரதக்கலை சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. குறியீட்டு முறை பின்பற்றப்பட்டது.

(15) நமது நடனக் கலை, அன்றாட அல்லல் நிறைந்த வாழ்வை மறக்கச் செய்து வேறு ஆனந்த உலகிற்கு அழைத்துச் செல்கின்றது. இங்குப் பேசப்படுவது உயர்ந்த தெய்விக இயல்பு நிறைந்த நாட்டியக் கலை பற்றியேதான்.

(16) முகலாயர்களுடைய வருகைக்குப்பின் வட இந்திய நாட்டியக்கலை பல மாற்றங்கட்கு உள்ளாயிற்று. அரசர்களும்

செல்வர்களுமே கண்டுகளிக்கப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. ஆனால், அதில் அராபிய, பாரசீக நாடுகளின் தாக்கத்தைக் காண்கின்றோம். இது நம்முடைய சகிப்புத் தன்மையையும், பிற நாட்டு நல்ல கூறுகளைத் தன்வயப்படுத்திக் கொள்ளும் ஆற்றலையும் புலப்படுத்துகின்றது.

(17) உலகெலாம் இன்று பரதக்கலை பாராட்டப்பட்டு, பயிலப்பட்டு வருவது தென்னிந்தியாவிற்குப் பெருமை. கலை நாடு, இனம், சமயம், சாதிப் பாகுபாடுகளைக் கடந்து செல்லக் கூடிய ஒன்று என்பதும் உணரப்படுகின்றது.

(18) நமது உணர்வுகளை நெறிப்படுத்தி நம்மைப் பண்புடையோராக ஆக்கும் ஆற்றல் கலைகட்கு உண்டு. சிறப்பாக பரதநாட்டியக் கலைக்கு உண்டு.

(19) சிறுவயதிலிருந்தே இருபாலாரும் நடனம் பயின்று வந்தால் உடலைச் செம்மையாக நோயணுகாமல் வைத்துக் கொள்வதுடன் சீரிய உள்ள இயல்பினையும் பெறமுடியும்.

(20) கலையுணர்வு இல்லாதான் வாழ்வு வறண்ட பாலை வனமாகிவிடும். ஆகவே, உயர்ந்த ஆன்மீக நோக்குடைய பண்டைய இந்தியக் கலைகளைப் பயில இயலாவிடினும் சுவைக்கக் கற்றுக் கொள்ளல் வேண்டும். நாட்டியக்கலை, வாழ்வை வளப்படுத்தி வாழ்விற்குப் புதிய பொருளை உணர்த்துகின்றது; ஏன் ? குறிக்கோளையும் உணர்த்துகின்றது.

(21) பரதக்கலை ஒன்றினைமட்டும் சுவைக்கத் தெரிந்தால் இசை, காவியம், நடனம், அரங்க அமைப்பு, நாடகம், எழிலியல், ஆடை அணிகல அறிவு, ஒலி-ஒளி அமைப்பு போன்ற பல துறைகளைப்பற்றிய அறிவைப் பெறமுடியும்.

(22) கதகளி, கதக், மணிபுரி, குச்சிப்புடி போன்ற நாட்டியப் பாணிகளில் நம், இந்திய நாட்டுப் பண்பாடு பிரதிபலிப்பினும், தென்னிந்திய பரதக்கலையில் பிரதிபலிக்கும் சிறப்பினைப் போன்று அவற்றுள் காண்பதரிது.

மேலைநாட்டு மோகத்தால் இன்றைய இளைஞர்கள் சில கேலிக் கூத்தான உடலசைவுகளை நடனமெனக் கூறி ஆடித் திளைக்கின்றனர். இதனால் உடலும் உள்ளமும் பாழ்படும். சிற்றின்ப உணர்வினைத் தூண்டிச் சமுதாயத்தைச் சீர்கேடடையச் செய்யும். ஆகவே, இவற்றினின்று விலகிநின்று பழம் பெரும் பாரதநாட்டின் உயரிய பரதக்கலையைப் பயின்று பயன் பெறுவது அறிவுடைமையாகும். ஏனைய சிறப்புவாய்ந்த இந்திய நடனக்கலைகளையும் கற்று, அவை வழிநின்று சிறப்படைய வேண்டும் நம் நாடு.

இயல் 12

# 12.1. உலகப் பண்பாட்டிற்கு இந்தியாவின பங்கு

## அறிமுகம்

காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப்படாமல் இன்றும் சீரும் சிறப்புமாக நிலைபெற்றிருப்பது இந்தியப்பண்பாடு. பல அன்னியப் படையெடுப்புகளாலும், புரட்சிகளாலும், சமயப் பூசல்களாலும், இயற்கையின் பாதிப்புகளாலும், மேலை நாட்டுத் தாக்கத்தாலும், இஸ்லாமியத் தாக்கத்தாலும் அழிந்துபோகாமல் அதன் ஆன்மீக இயல்புடன் இன்றும் இளமை மாறா நிலையில் இருந்துவருகிறது இந்தியப் பண்பாடு.

## பிற நாடுகளில் இந்தியப் பண்பாடு

பௌத்த சமயமும் இந்து சமயமும் கீழைநாடுகளில் பல பகுதிகளில் கி. பி. 100-லிருந்து 1500 வரை பரவியிருந்ததை வரலாறு மூலம் அறிகின்றோம். இந்து சமயம் தென்னிந்தியா விலிருந்தும், பௌத்த சமயம் வட இந்தியாவிலிருந்தும் இப் பகுதிகளுக்குச் சென்றன. அசோகர் காலத்திலிருந்து பௌத்த சமயக் குழுக்கள் மத்திய ஆசியாவின் பல பகுதிகளுக்குச் சென்று பௌத்த மடாலயங்களைத் தோற்றுவித்து பௌத்த சமயத்தைப் பரப்பின. கிழக்குத் துருக்கிஸ்தானத்திலிருந்து (Turkestan) சீனா வரை பரவியிருந்தது. இப்பகுதிகளில் அகழ்வாராய்ச்சியில் மடாலயங்கள், ஸ்தூபிகள், ஓவிய வேலைப்பாடு அமைந்த குகைகள், கல்வெட்டுகள், கையெழுத்துப் பிரதிகள் போன்ற வைகளின் பௌத்த அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. திபெத்தில் ஏழாம் நூற்றாண்டில் பௌத்த சமயம் அறிமுகப் படுத்தப்பட்டது. ஒன்பதாம் நூற்றாண்டில் திபெத்திய அரசர்கள் பல இந்தியர்களையும் திபெத்திய அறிஞர்களையும் கூட்டிவைத்து சமஸ்கிருத மொழியிலிருந்த பௌத்த சமய நூல்களைத் திபெத்திய மொழியில் கொணர்ந்தனர்.

பௌத்த சமயம் கி. பி. முதலாம் நூற்றாண்டில் பர்மாவிற்குள் நுழைந்தது. பின்பு அங்கு நிலைபெற்றது. பர்மாவில் நூற்றுக் கணக்கான பௌத்த ஆலயங்களை இன்றும் காணமுடிகிறது. சீனாவில் நான்காம் நூற்றாண்டில் ஐம்பது பௌத்த சமஸ்கிருத நூல்கள் சீனமொழியில் கொணரப்பட்டன. சீனாவிலிருந்து பௌத்த சமயம் நான்காம் நூற்றாண்டில் கொரியாவிற்குச் சென்றது. பின்பு அங்கிருந்து அது ஜப்பானுக்கு வெகு வேக மாகப் பரவியது.

அசோகருடைய முயற்சியால் இலங்கையிலும் பௌத்த சமயம் வெகு வேகமாகப் பரவி நிலையான தன்மையைப் பெற்றது. இந்து சமயமும் சாவகம், பாலி, போர்னியோ, மலேயா, சயாம், கம்போடியா, சம்பா போன்ற கீழை நாடுகளில் பரவி அங்கு தனது ஆதிக்கத்தைச் செலுத்தியது. இவற்றையெல்லாம் பல வரலாற்றுச் சான்றுகளும், அகழ்வாராய்ச்சிகளும், கல்வெட்டுகளும், இலக்கியங்களும், அழகுக் கலைகளும் பழக்க வழக்கங்களும் நமக்கு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. சமய நூல்களும், அழகுக் கலைகளும், இந்தியாவின் சமய நூல்களான வேதங்கள், உபநிடதங்கள், வீர காவியங்கள், பகவத் கீதை, பௌத்த சமய நூல்கள் இவை அனைத்தும் மேலைநாட்டு, கீழை நாட்டு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு உலகெங்கும் பரவின. இந்தியக் கட்டடக்கலை, ஓவியக்கலை, இசை, நடனம், சிற்பக்கலை இவைகளை மேலைநாட்டார் பாராட்டியது டன் அப்பாணிகளை அங்குப் புகுத்தவும் தலைப்பட்டனர்.

### பௌத்த சமயம்

கீழைநாடுகளில் பெரும் செல்வாக்குடன் இன்றும் திகழ்ந்து வருவது பௌத்த சமயம். அது தோன்றிய நாட்டில் சிறப்பான நிலையைப் பெற்றிராவிடினும், இந்நாடுகளில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. இச்சமயம் வலியுறுத்தும் அஹிம்சைக் கோட்பாடு அனைவராலும் இன்றும் போற்றிப் புகழப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இச்சமயத்தைச் சுமந்துசென்ற பௌத்தத் துறவிகள் அந்நாடுகளுக்கு இந்நாட்டின் பண்பாட்டு நாகரிகக் கூறுகளையும் அழகுக் கலைப் பாணிகளையும், பழக்க வழக்கங் களையும் உடன்சுமந்து சென்றனர்.

இறைவனை அடைய இந்து சமயம் மூன்று முக்கிய நெறிகளைக் கூறுகின்றது. அவை முறையே: ஞான மார்க்கம் (அறிவு நெறி), கரும மார்க்கம் (கடமை நெறி), பக்தி மார்க்கம் (அன்பு நெறி) எனப்படுபவை. வாழ்வில் வளம்பெற்று இறைவன் திருவடிகளை அடைய இந்த மூன்று நெறிகளும் மிகச் சிறந்தவை எனக் கருதப்படுகின்றன. இந்நெறிகளை மேலைநாட்டுத் தத்துவ ஞானிகளும் சமயச் சான்றோர்களும் பாராட்டுகின்றனர்.

### சமஸ்கிருதமும் தமிழும்

சமஸ்கிருத மொழியில் உள்ள காளிதாசனின் நாடகங்கள், இராமாயணம், பாரதம் போன்ற வீர காவியங்கள், பகவத்கீதை, உபநிடதங்கள், வேதங்கள் போன்றவை மேலைநாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அவைகளில் பொதிந்துள்ள சமய, தத்துவக் கருத்துகளைப் போற்றிப் பாராட்டி உலகமே பின்பற்ற முயல்

கின்றது. காளிதாசனின் சாகுந்தல நாடகமும் இராமாயணமும் இன்றும் உலகெங்கும் நாடகங்களாக நடிக்கப்பட்டு வருகின்றன. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு திருக்குறள் உலகத்தின் முக்கிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது நமக்கு மிகுந்த பெருமையை அளிக்கக் கூடிய ஒன்று. ஜெர்மானியத் தத்துவ ஞானிகளாகிய கதே, ஸ்கோப்பனார், பிக்டே, ஹெகல் போன்றோர் சமஸ்கிருத மொழியின்பால் ஈர்க்கப்பட்டு இந்திய இலக்கியங்களைப் பயின்று அவற்றால் தாங்கள் பெற்ற அறிவுச்செல்வத்திற்காக இந்தியாவை மிகவும் பாராட்டியுள்ளார்கள். இம்மைக்கும் மறுமைக்கும் அமைதியையும் ஆனந்தத்தையும் தருபவை உபநிடதங்கள் என ஸ்கோப்பனார் கூறுகின்றார். இதேபோன்று எமர்சன், தோரோ, வால்ட்விட்மென் போன்ற அமெரிக்க அறிஞர்களும் இந்திய இலக்கியங்கட்கும் தத்துவ நூல்கட்கும் தாங்கள் கடப்பாடுடையவர்கள் எனக் கூறிக்கொள்கின்றார்கள்.

### இந்திய விடுதலையும் மகாத்மா காந்தியும்

குருதி கொட்டாமல், குழப்பம் விளைவிக்காமல் பிரிட்டானியரிடமிருந்து அஹிம்சை நெறியைக் கடைப்பிடித்து மகாத்மா காந்தி இந்நாட்டிற்கு விடுதலை பெற்றுத் தந்த இச்செயல் உலகெங்கும் பாராட்டும் நிலையை உருவாக்கியுள்ளது. இதே வழிமுறைகளை மார்ட்டின் லூதர்கிங் போன்றோர் தங்களின் செயல்களைச் சாதித்துக்கொள்ள கடைப்பிடித்தனர். இவர் கையாண்ட சத்தியாக்கிரக இயக்கத்தையும் அஹிம்சை நெறிமுறைகளையும் இவருக்கு முன்பு எவரும் உலக வரலாற்றில், அரசியல் அரங்கில் பெரிய அளவில் நடைமுறைப்படுத்தியதில்லை.

### தேர்தல்கள்

இக்குடியரசு நாட்டில் இந்தியர்கள் சுதந்தரம் பெற்ற பின்பு, பலமுறை தேர்தல்களை அமைதியாக, வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். இவை அனைத்தும் சட்டத்தின் அடிப்படையில் ஜனநாயக முறைப்படி மிக நல்ல முறையில் நடந்துள்ளன. இதை இன்றும் பல நாடுகள் பின்பற்றி வருகின்றன.

### அறக் கோட்பாடு

வாழ்வின் அடிப்படைக் கோட்பாடாக அமைந்திருப்பது அறமாகும். அறநெறியில் நின்று, பொருள் ஈட்டி, அறவழியில் இன்பத்தைத் துய்த்து வீடுபேறு அடைய வேண்டும் என்பதற்காக உறுதிப் பொருள்கள் நான்கில் அறத்தை அல்லது தருமத்தை முதன்மையாக நமது சமயம் வைத்துள்ளது. இந்திய நாட்டை

நம் முன்னோர் தரும பூமி என்றழைத்தனர். நமது சமயத்தையும் தருமம் என்ற சொல்லால் அழைத்தனர். இத்தரும பூமி ஆன்ம விடுதலையை மிகவும் வலியுறுத்துகின்ற நாடு. இதை மையமாகக் கொண்டே இந்த நாட்டின் பண்பாடு அமைந்துள்ளது. இக்கோட்பாடும் உலகெங்கும் உள்ள மக்களுக்கு உகந்த கோட்பாடாகும்.

**பஞ்சசீலம்**

பஞ்சசீலக் கோட்பாடும் இந்தியப் பண்பாட்டு உணர்வை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அல்லலுறும் உலகிற்கு அருமருந்தாகத் திகழ்வது இப்பஞ்சசீலக் கோட்பாடாகும் அவையாவன : (1) அமைதியான கூட்டு வாழ்வு, (2) பிறநாட்டு நடவடிக்கைகளில் தலையிடாதிருத்தல், (3) வலியப் போருக்குச் செல்லாமை, (4) நாட்டைக் கூறு போடாமை, (5) வாணிப ஒப்பந்தம்.

**வேறு சில இந்தியப் பரிசுகள்**

இந்தியா குறிப்பாக ஐரோப்பியர்கட்கு நறுமணப் பொருள்களைப் பயன்படுத்தும் வழிமுறைகளைக் கற்றுத் தந்தது. இறைச்சியுணவை உட்கொள்ளும் அவர்கள் இப்பொருள்களை இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொண்டு வருகிறார்கள். நெல், கரும்பு, பருத்தி போன்றவை இங்கிருந்து மேலை நாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு உலகின் பல பாகங்களிலும் இன்று பயிரிடப்பட்டு வருகின்றன. சதுரங்க விளையாட்டு, அனைத்து நாடுகளும் பின்பற்றும் எண்முறை, பதின் கூறான கணக்கீடு முறை (Decimal System) போன்றவை இந்தியா உலகுக்களித்துள்ள பரிசுகளாகும்.

**பல்வேறு இயக்கங்கள்**

இராமகிருஷ்ண இயக்கம், பிரமஞான சபை, பிரம சமாஜம், ஆரிய சமாஜம் போன்றவை உலகெங்கும் தங்கள் கிளைகளை நிறுவி இந்நாட்டின் வளமிக்க சமய தத்துவ சமுதாயச் சீர்திருத்தக் கோட்பாடுகளை உலகுக்கு உயர்ந்த கொடையாக வழங்கியுள்ளன.

**முடிவுரை :** இன்றும் ஐக்கிய நாட்டுச் சபையில் இந்தியா உலகெங்கும் அமைதியை நிலைநாட்டப் பெரும் பாடுபட்டு வருகிறது. அமைதியை நாடும் இந்நாட்டினர் பிறநாட்டு மக்களுடன் அமைதியுடன் வாழ விரும்புவதில் வியப்பொன்றுமில்லை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற